T. 2757

உ

# தரும தீபிகை

மூலமும்—உரையும்

## நான்காம் பாகம்

ஆசிரியர்

**செகவீர பாண்டியனார்**

மதுரை

மதராஸ் சி. வரதராஜுலு நாயுடு பிரஸில்
பதிப்பிக்கப் பெற்றன.

கர ௵ கார்த்திகை ௴

1951

All Rights Reserved.

## இதில் அடங்கியுள்ளவை.


| அதிகாரம் | | | பக்கம் |
|---|---|---|---|
| ருச. பண்பு. | .... | .... | 1161 |
| ருரு. விநயம். | .... | .... | 1181 |
| ருசு. கல்வி. | .... | .... | 1219 |
| ருஎ. செல்வம். | .... | .... | 1254 |
| ருஅ. பதவி. | .... | .... | 1292 |
| ருகூ. கல்விச் செருக்கு. | | .... | 1327 |
| சுய. செல்வத் திமிர். | .... | .... | 1361 |
| சுக. கள்ளின் களிப்பு. | | .... | 1393 |
| சுஉ. புன்மை. | .... | .... | 1425 |
| சுரு. பொறுமை. | .... | .... | 1449 |
| சுச. கோபம். | .... | .... | 1476 |
| சுரு. காமம். | .... | .... | 1504 |

# முகவுரை.

இது தரும தீபிகையின் நான்காவது பாகம். பண்பு விநயம் கல்வி முதலாகப் பன்னிரண்டு அதிகாரங்கள் இதில் அடங்கியிருக்கின்றன. புனிதமான இனிய நீர்மைகளை மருவி மனிதன் வாழ வேண்டிய நெறி முறைகளும் தரும நீதிகளும் இப் பகுதியில் உரிமையாய் வந்துள்ளன.

உள்ளத்தைப் பண்படுத்தி நல்ல பண்புகளோடு பழகி யாண்டும் நலம் புரிந்து வருக; அடக்கமும் அமைதியும் மருவி எவ்வழியும் விநயமாய் ஒழுகுக; அரிய பல கலைகளைப் பயின்று பெரிய கல்விமானுய் விளங்குக; பல்வகையிலும் செல்வத்தை ஈட்டி நல்வழியில் உதவுக; சிறந்த பதவிகளை அடைந்து உயர்ந்த நலங்களைச் செய்க; கல்விச் செருக்கு செல்வத்திமிர் முதலிய சிறுமைகள் நீங்கிப் பெருமைகளில் ஓங்குக; களி மயக்கின்றித் தெளிவுடன் இயங்குக; புன்மை புகாமல் நன்மையில் உயர்க; பொறாமையை ஒழித்துக் கோபத்தை அடக்கிக் காமத்தை வென்று கதிநலம் காணுக என்னும் இன்னவாறான உறுதி நலங்களை இதில் முறையே காணலாம்.

மானச மருமங்களும் மதிநலங்களும் பெருகி அதிசயமான கலைவளங்களோடு மருவியுள்ள இத் தரும நூலை உரிமையுடன் ஓதியுணர்ந்து நீதி நெறிகளைத் தெளிந்து நடந்து உயிரினங்கள் உயர்ந்து வர இறைவனை இறைஞ்சி நிற்கின்றேன்.

திருவள்ளுவர் நிலையம்
மதுரை.
16—11—51.

செகவீர பாண்டியன்

# சிறப்புப்பாயிரம்.

தண்பாண்டி நாடாண்டு தமிழ்ச்சங்கம்
இனிதமைத்துத் தாய்மை தோய்ந்து
பண்பாடு பலபடியப் பசுந்தமிழை
வளர்த்துவந்த பாண்டி வேந்தர்
நண்போடு செகவீர பாண்டியனென்
றிந்நாளில் நம்முன் தோன்றிப்
புண்பாடு புறம்ஒழியப் புனிதமுடன்
வளர்க்கின்ருர் புலமை யூர்ந்தே.

வேம் என உரைத்துள்ளமையால் இவருடைய உள்ளப்பண்பை யும் உறுதி நிலையையும் நாம் உணர்ந்து மகிழ்கின்றோம்.

பண்புடைமை எவ்வளவு மகிமையுடையது! என்பதை இத ஞல் தெரிந்து கொள்ளுகிறோம். மனிதன் எவ்வளவு செல்வங் களை யுடையனுயினும் இவ்வுடைமை ஒன்று இல்லையானல் அவன் கடையனு யிழிந்து படுகிறான்.

உயர்ந்த உறுதி நலங்களும், சிறந்த நடைமுறைகளும் பண் புடையாளனிடம் ஒருங்கே நிறைந்து நிற்றலால் அவன் யாண்டும் மேன்மையாய் விளங்கி நிற்கிறான்; ஆகவே எல்லாரும் அவனை வியந்து மகிழ்ந்து புகழ்ந்து வருகின்றனர்.

கல்லாது போகிய நாளும் பெரியவர்கண்
செல்லாது வைகிய வைகலும்—ஒல்வ
கொடாஅது ஒழிந்த பகலும் உரைப்பிற்
படாஅவாம் பண்புடையார் கண். (நாலடியார், 166)

நல்ல நூல்களை நாளும் பயின்று வருதல், பெரியோர்களி டம் போய் வணங்கியிருந்து அறிவுரைகளைக் கேட்டல், இயன்ற அளவு எவர்க்கும் உவந்து உதவுதல் என்னும் இவை பண்புடை யாரிடம் தினமும் நிகழும் செயல்களாம் என இது உணர்த்தி யுள்ளது. வாழ்வின் இனிய இயல்புகள் மனிதனைப் புனிதனுக வெளிப் படுத்துகின்றன.

கல்வியைக் கருத்தூன்றிக் கற்றலும், பெரியவர்களை மதித் துப் பேணுதலும், எளியவர்களுக்கு இரங்கிக் கொடுத்தலும் மனிதனை மகிமைப் படுத்தும் ஆதலால் அவை இனிய பண்பாடு களாய் இங்கே உவந்து பாராட்ட வந்தன.

ஆன்ம வளர்ச்சிக் குரிய நல்ல நீர்மைகள் எல்லாம் பண்பு டையவர்களிடம் இயல்பாக அமைந்திருக்கின்றன.

புனிதம், புண்ணியம் என்னும் அரிய நிலைகள் பண்பின் விளைவுகளாக இனிது விளைந்து வந்துள்ளன.

உள்ளம் பண்படின் உயிர் ஒளி வீசி உயர்கிறது; ஆகவே அந்த மனிதன் தேவனுய்த் திவ்விய மகிமைகளை எவ்வழியும் எய்தி மகிழ்கிறான்.

எண்ணம் உயரின் இறையாம் இழியினே
மண்ணுய் விழுவன் மடிந்து.
இதனை நாளும் உன்னி ஒழுகுக.

---

535. சின்ன நினைவுகள் சின்னவனுச் செய்துவிடும்
அன்ன நிலையை அறிந்துமே—என்னவகை
ஆனுலும் மேலான அவ்வழியி லேபழகி
வானேடு வாழ்க வரைந்து. (ரு)

இ—ள்

சின்ன எண்ணங்கள் மனிதனைச் சின்னவனுகச் செய்து விடும். ஆதலால் அப்புன்மைகளை ஒழித்து எவ்வழியும் நன்மைகளைப் பேணி யாண்டும் மேன்மையாக வாழுக என்பதாம்.

மனநினைவுகளால் மனிதவுலகம் இயங்கி வருகின்றது.

புறவுலக நிகழ்ச்சிகளுக்கு நிலையான மூல காரணங்கள் உள்ளே மறைந்திருக்கின்றன. செயல்களால் அயல் வருதலால் காரியங்கள் வெளியே தெரிகின்றன; காரணங்கள் கரந்து நிற்கின்றன. வளர்ந்து ஓங்கிய மரத்தை விழைந்து பார்க்கிறோம். அது எங்கிருந்து வந்தது என்பதை மறந்து விடுகிறோம். சிறிய விதையிலிருந்து கிளர்ந்து பெரிய மரம் வெளி வருதல் போல் நுணுகிய நினைவுகளிலிருந்து மனிதவுலகம் வெளிப் பட்டுள்ளது.

உள்ளே எண்ணிவருகிற எண்ணங்களின் படியே வெளியே மனிதர் வண்ணங்கள் படிந்து வளர்ந்து வருகின்றனர். புனிதமான இனிய எண்ணங்களையே எவ்வழியும் பழகி வருபவர் புண்ணிய சீலர்களாய்ப் பொலிந்து விளங்கித் திவ்விய கதிகளை எய்துகின்றனர். மனம் புனிதமானுல் மனிதன் தெய்வமாகிருன்.

தீய நினைவுகளை உடையவர் பாவிகளாய் இழிந்து பழிதுயரங்களை அடைகின்றனர். உயர்வும் இன்பமும், இழிவும் துன்பமும் வெளியிலிருந்து வருவன அல்ல. உள்ளத்திலிருந்து வருகின்றன. உள்ளம் நல்லதாயின் எல்லாம் நலமாகின்றன.

நல்ல எண்ணங்களிலிருந்து புகழ்களும் புண்ணியங்களும் இன்பங்களும் உளவாகின்றன. தீய எண்ணங்களிலிருந்து பழிகளும் பாவங்களும் துன்பங்களும் விளைகின்றன.

தருமாத்துமா, மகாத்துமா எனச் சிலரை உவந்து புகழ்ந்து உரிமை பாராட்டி வருகிறோம்; அந்த அரிய மகிமைகள் அவர்களுக்கு எதனால் அமைந்தன? செல்வத்தாலா? கல்வியாலா? அதிகாரத்தாலா? அரச பதவியாலா? இதனை இங்கே சிந்திக்க வேண்டும். எந்த வெளி வசதிகளாலும் அந்த ஒளி உயர்வுகளை அடைய முடியா; உள்ளப் பண்பினாலேயே அவை இனிது அமைகின்றன.

உள்ளத்தில் இனிய இயல்புகளைப் பழகி வருபவன் உலகத்தில் பெரிய மகானாய் நிலவி நிற்கிறான். சான்றோர், மேலோர், ஆன்றோர் எனத் தோன்றி மிளிர்பவர் எவரும் தருமம் கருணை சத்தியம் முதலிய உத்தம நீர்மைகளில் ஊன்றி விளைந்தவரேயாவர்.

நல்ல தன்மைகளை உடையவர் எல்லா நன்மைகளையும் எளிதே அடைந்து கொள்ளுகின்றனர். தன் எண்ணங்களைப் புனிதமாகப் பேணி வருபவர் பெரிய பாக்கியவான்கள் ஆகின்றனர்.

நெஞ்சு உயர நிலை உயரும் என்னும் பழமொழி விழுமிய நிலையை விழிதெரிய விளக்கியுளது. நாளும் இதுநினைந்து சிந்திக்க வுரியது. உள்ளம் கெடின் எல்லாம் கேடே.

சின்ன நினைவுகள் சின்னவனைச் செய்து விடும்.

என்றது எண்ணங்களின் அதிசய வலிமைகளை உன்னி யுணர வந்தது. இருதயத்தில் இழிந்த இயல்புகள் மலிந்திருந்தால் அந்த மனிதன் இழிமகன் என வெளி அறிய வருகிறான்.

அற்பன், ஈனன், தீயவன், கொடியவன், பாதகன், பாவி என இன்னவாறு இழி நிலைகளில் பழிபட்டிருப்பவர் யார்? கெட்ட எண்ணங்களையே விழைந்து பழகிக் கெட்டுப் போனவர்களே இப்படிப் பட்டங்கள் தாங்கிப் பாழ்பட்டுள்ளனர்.

நல்ல எண்ணம் இன்பத்தை ஊட்டி மனிதனை உயர்த்துகிறது.

கெட்ட எண்ணம் துன்பத்தில் ஆழ்த்தித் தாழ்த்தி விடுகிறது.

தன் நெஞ்சில் தீய சிந்தனைகளைச் செய்து வருகிறவன் தனக்கு என்றும் தீராத நரகதுன்பங்களைச் செய்தவனாகிறான்.

"The suicide of the soul is evil thought; In it is the poison."

"கெட்ட எண்ணம் உயிரின் படு கொலையாம்; அதில் கொடிய நஞ்சுள்ளது" என்னும் இது இங்கே அறிய வுரியது.

கேடான சிந்தனைகளால் நெஞ்சு பாழாகின்றது; ஆகவே அந்த மனிதன் இழிந்து அழி துயரங்களை அடைய நேர்கின்றான்.

தன்னெஞ்சம் தனக்குச் சான்றது வாகத் தத்துவம் நன்குணராதே
வன்னெஞ்சனகிக்கூடமேபுரிவோன்வஞ்சகக்கூற்றினும்கொடியோன்
பன்னுங்கால் அவன்றன் தெரிசனம் பரிசம் பழுதுற நிரய ஏதுவுமாம்
புன்னெஞ்சால் அவனும் போய்நரகெய்திப் பூமியுள் ளளவு மேறான்.
(பெருந்திரட்டு)

நெஞ்சு கெடின் அந்த மனிதன் நஞ்சாய் நாசமடைகின்றான் என இந்தப் பாசுரம் உணர்த்தி யுள்ளது.

தன்னைச் சின்னவனுக்கிச் சீரழிக்கின்ற தீய நினைவுகளை அறவே நீக்கித் தூய எண்ணங்களையே ஒருவன் பழகி வர வேண்டும். ஞான வாழ்வு நலம் பல தருகிறது.

வானோடு வாழ்க.

என்றது மேலான குண நலங்களோடே பழகி எவ்வழியும் உயர்ந்த குறிக்கோளுடன் ஒழுகி வருதலைக் கருதி வந்தது. வான் = பெருமை, மறுமை. இம்மையும் அம்மையும் இனிமை யுறும்படி தன்மை நழுவி நன்மையுடன் வாழ்ந்துவரின் அவ் வாழ்வு எம்மையும் இன்பமாம்.

536. உற்ற விருந்தை உபசரித் துள்நோக்கி
மற்றவரை ஆதரித்து மாண்புறுத்திக்—கற்ற
கலைநெறி நின்றொழுகும் காட்சி யுடையார்
தலைநெறி யாவர் தழைத்து. (சு)

இ—ள்

வந்த விருந்தினரை உபசரித்து ஊட்டி யாவரையும் ஆதரித்து எல்லாரையும் மேன்மைப் படுத்தி, நெறியோடு ஒழுகிவரின் அது உயர்ந்த பேரின்ப நிலையாய் ஒளிபெற்று வரும் என்பதாம்.

மனித சமுதாயத்துக்கு இனிது பயன் படுகிற அளவே உலகிலுள்ள பொருள்கள் மதிப்பும் மாண்பும் அடைகின்றன. சீவகோடிகளுக்கு இதமாகவே யாவும் படைக்கப் பட்டுள்ளன. அந்தப் படைப்புகளைக் கொண்டு மனிதன் அதிசய நலங்களை ஆற்றி விதி முறைகளைப் போற்றி வருகிறான்.

அறிவும் ஆற்றலும் நெறியும் நீர்மையும் மனித இனத்தில் பெருகியிருத்தலால் அரிய பல உரிமைகளை மருவித் தனி நிலையில் உயர்ந்து இந்த மரபு தழைத்து நிற்கிறது. அளவிடலரிய பிராணிகளுள் மனிதன் உயர்வாய்ச் சிறந்து திகழ்வது மனவுணர்வின் பண்பாடுகளாலேயாம்.

பகுத்து உணரும் அறிவு மனிதனை உயர்த்தும் ஆயினும் பண்போடு கலந்த போதுதான் அது இன்பாகமாய் எழில் சிறந்து ஒளி புரிந்தருளுகின்றது. பண்பு படிய வில்லை ஆயின் அந்த அறிவு இன்பரசம் இழந்து இழிந்து படுகின்றது.

பண்பு படிந்த பெருந்தகைமை யாண்டும் அன்பு சுரந்து ஆருயிர்களை ஆதரித்து வருகிறது. உள்ளம் கனிந்து விரிந்த பொழுது உலகம் அங்கே உவந்து குவிகிறது.

உற்ற விருந்தை உபசரித்து.

என்றது அதிதிகளை ஆதரித் தருளும் அமைதி தெரிய வந்தது. உயிர்களைப் பற்றியுள்ள துயர்கள் பல; அவற்றுள் பசித் துயரம் மிகக் கொடியது. சீவர்களை வருத்தி வருகிற இந்தத் துயரத்தை நீக்கியருளுவது உயர் பெரும் புண்ணியமாய் ஒளி சிறந்துள்ளது. கொடிய துயரை நீக்கி, அரிய உயிரை இனிது மகிழச் செய்தலால் அன்னம் இடுவது பெரிய தருமம் என இன்னவாறு பெரு மகிமை பெற்றது.

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. (குறள், 81)

விருந்தினரை விழைந்து பேணி அவரை உவந்து உபசரிப்பதே இல்லறத்தின் உயர்ந்த பயனும் எனத் தேவர் இங்ஙனம் உணர்த்தியுள்ளார். எவ்வழியும் சீவர்களுக்கு இதம் செய்வது திவ்விய வாழ்வாய்ச் சிறந்து திகழ்கிறது.

உற்ற விருந்தை விரும்பி உபசரிக்க வில்லையானால் அந்த மனை வாழ்க்கை குற்றமுடையதாய்க் குலைந்து படுகிறது.

உணவு அருந்தின் விருந்து உவந்து செல்லுகின்றது; அதனால் புண்ணியம் வருகிறது; அவ்வரவு மேலான பதவியை அருளுகிறது. அங்ஙனம் அருந்தாவிடின் வருந்தி அகலுகிறது; அகலவே பாவம் படிந்து கொள்ளுகிறது.

"வருந்தி ஒருவன்பால் மற்றொருவன் வந்தால்
பொருந்தி அகமலர்ந்து போற்றி---விருந்தேற்றுத்
தன்னால் இயன்றளவும் தானுதவான் ஆகினவற்கு
இன்னா நரகே இடம்." (பாரதம்)

பசித்து வந்தவர்க்கு இரங்கி உதவி புரியானாயின் அவன் பாவியாய் இழிந்து படரடைய நேர்கின்றான் என இது கூறியுள்ளது. இனியது ஒழியவே இன்னாமை எய்தியது.

விருந்தினரை ஆதரிப்பதைச் சிறந்த கடமையாக இந் நாடு கருதி வந்துள்ளமையை நூல்கள் காட்டி நிற்கின்றன.

ஒரு வீரன் போருக்கு எழுந்தான்; அவ்வாறு எழுந்த பொழுது தனது அடலாண்மையை அயலறியும்படி அவன் வீர சபதம் கூறினான். போராட நேர்ந்தவன் அன்று சொல்லாடி நின்றதை எல்லாரும் வியந்து கேட்டனர்.

"இல்லாளை அஞ்சி விருந்தின்முகம் கொன்ற நெஞ்சிற்
புல்லாளன் ஆக மறம் தோற்பின்." (சிந்தாமணி, 2319)

"போரில் இன்று எதிரியை நான் வெல்லேன் ஆயின் மனைவிக்குப் பயந்து விருந்தாளியைப் பேணாது கைவிட்ட பேடி போல் இழிந்து படுவேனாக" என அவன் இங்ஙனம் மொழிந்திருக்கிறான். ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன் பாடிய பாடல் இது. அதற்குப் பல நூறாண்டுகளுக்கு முன்னதாகவே கதை நிகழ்ந்துள்ளது.

விருந்தினரை உபசரித்தருளுவதை எவ்வளவு பெரிய தருமமாக அக் காலத்தவர் கருதி வந்துள்ளனர் என்பதை இதனால் அறிந்து கொள்கிறோம். நாட்டு மக்களுடைய வழக்கங்களைப் பழங்காலப் பாட்டுகள் நன்கு காட்டி வருகின்றன.

பண்பு நிறைந்த பெருந்தன்மைக்குச் சிறந்த அடையாளமாக விருந்து பேணுதல் அமைந்திருத்தலால் அது முதலில் வந்தது.

யாவர்க்கும் ஆதரவு புரிந்து எவ்வழியும் உபகாரங்கள் சுரந்துவரின் அம் மனித வாழ்வு புனிதமான உயர் பெருந்தகைமையாய் ஒளி சிறந்து விழுமிய மகிமைகளை அடைந்து கொள்கிறது.

537. ஏனிங்கு வந்தாய் எதற்காக வாழ்கின்றாய்
ஊனிங் கொழிய ஒழிகின்றாய்—போனவழி
ஒன்றும் தெரியா துழல்கின்றாய் உன்னைநீ
நின்று தெளிக நினைந்து. (எ)

இ—ள்

இவ் வுலகில் வந்து பிறந்துள்ளதும், வாழ்ந்து வருவதும், உடலை விட்டு ஒழிந்து போவதும், போனவழி யாதும் தெரியாமல் உழன்று திரிவதும் உன் நிலைமைகளாயுள்ளன; உண்மையை உணர்ந்து உறுதி தெளிக என்பதாம்.

இது, உன்னை உணர்க என்கிறது.

தனது நிலைமையை முன்னும் பின்னும் எண்ணி நோக்கின் அரிய பல உண்மைகளை மனிதன் அறிந்து கொள்ளுவான். அவ்வாறு அறியாமலிருப்பது பெரிய பரிதாபமாயுள்ளது. எதை எல்லாமோ அறிந்து கொள்ள அவாவி விரைந்து துடிக்கிறான்; தன்னை அறிவதில் பின்னமாய் மருண்டு நிற்கிறான். தான் வந்த வரவை அறிவதைவிட மனிதனுக்குப் பெரிய காரியம் யாதும் இல்லை. அவ்வாறு அறிந்தவன் அதிசய நிலையில் உயர்கின்றான். அறியாதவன் அவல நிலையில் இழிகின்றான்.

வானின் நீளத்தையும், கடலின் ஆழத்தையும், மலைகளின் நிலைகளையும், சூரிய சந்திரர்களுடைய கதி வேகங்களையும், உலக இயற்கைகளையும் துருவி நோக்கிப் பெரிய விஞ்ஞானியாய் அரிய பேர் பெற்றிருந்தாலும் தன்னை அறியாதவரையும் அவன் அஞ்ஞானியே ஆவான்.

தன் சொந்த உயிர் நிலையை உணராதவன் எந்த உயர் நிலையை அடைந்தாலும் அது அந்தகன் கை விளக்கைப் போல் பிறர்க்கு ஓரளவு பயன்படினும் தனக்குப் பேரிழவேயாம்.

ஏன் இங்கு வந்தாய்? எதற்காக வாழ்கின்றாய்?

இந்தக் கேள்விகளுக்கு ஒவ்வொரு மனிதனும் சிந்தனை செய்து பதில் சொல்ல வேண்டும். மனித வுருவில் இப்பொழுது இங்கே பிறந்து வந்திருக்கிற நாம் முன்னம் எங்கே இருந்தோம்? ஈண்டு எப்படி வந்தோம்? இப்படி வந்தது ஏன்? வந்த இப் பிற

வியில் நாம் அடைந்து வருகிற அனுபவங்கள் என்ன? இனிமேல் அடைய வுரியன எவை? இத்தகைய விசாரணைகளைச் சிறிதேனும் கருதிவரின் உறுதிநெறி காண வரும். அறிய வேண்டியதை அறியாமல், அடைய வேண்டியதை அடையாமல் வறிதே பாழாய் விளிந்து போவது கொடிய கேடாய்ப் பெருகியுளது.

தன்னைச் சோதனை செய்து காண்பவன் அரிய மகானாய் அதிசய நிலைகளை அடைகின்றான். உரிமையை உணர்ந்து கொண்டவன் இருமையும் பெருமையாய் இன்புற்று மிளிர்கிறான்.

இவ் வுலகில் எவ்வளவு உயர்ந்த பதவிகளை எய்தியிருந்தாலும் தன் உயிர்க்கு உய்தியை யுணர்ந்து கொள்ளாதவன் உணர்விலியா யிழிந்து ஒழிந்து போகிறான். உள்ளே உயிர் பாழாவதை உணராமையால் வெளியே வெறியனாய்க் களி மிகுந்து அலைகிறான்.

எல்லையில்லாத அல்லல்களை நாளும் அனுபவித்து வந்தும் ஒல்லையில் உய்தி காணமல் ஊனமடைந்து ஒழிவது ஈனமேயாம்.

இருட்டு வீட்டில் விளக்கு வரின் இருள் நீங்கி ஒளி ஓங்குகிறது; இருண்ட நெஞ்சில் உண்மை யுணர்வு புகின் மருண்ட புன்மைகள் யாவும் ஒழிந்து தெளிந்த சீவன் முத்தனாய் அவன் உயர்ந்து ஒளி பெறுகிறான்.

ஆன்ம விசாரணையில் அகில விசாரங்களும் அழிந்து போகின்றன; போகவே ஏக பராபரன் போல் அவன் யோக மெய்தி யுலாவுகிறான். உறுதி நலங்களை ஓர்ந்து உணர்ந்தவன் உயர்ந்த கதிகளில் ஓங்கி மிளிர்கிறான்.

> உலகுளது? நாம்ஆர்? என்ன உற்றுநின்று உணருமட்டும்
> கலகமார் பிறவி மோகம் கங்குல்போல் மூடி நிற்கும்;
> அலகறு முலகும் தாமும் அழிவில்சிற் சோதி என்றே
> சலனமில் கண்ணால்கண்டோர் தத்துவநிலைமைகண்டோர்."

புனிதமான ஆன்ம வுணர்வு பரமான்மவை இனிது காட்டி இன்புறுத்தும் என இது உணர்த்தியுள்ளது. தன்னை உண்மையாகக் கண்டவன் உரிமையான தலைவனையும் உடனே கண்டு கொள்ளுகிறான்.

தீய நினைவுகள் ஒழிந்து மனிதன் தூயன் ஆனபொழுது பரிசுத்த சோதியோடு கலந்து ஒருமித்து ஒளிர்கிறான். அடைய

வுரியதை அடையாதிருக்கும் வரையும் மடையனுகவே மறுகி அலேகிருன். நிலேமையை நினேந்து பாராமையால் நெடிது மருண்டு நீண்டு திரிகிருன்.

உன்னே நீ நினேந்து தெளிக.

தன்னே நினேந்து பார்ப்பதால் இன்னல்கள் பல நீங்கி விடுகின்றன. இன்பங்கள் ஓங்கி வருகின்றன. சரியான குறியோடு தன்னே மனிதன் பார்ப்பதில்லே. புறத்தே போர்த்துள்ள உருவம் பேர்களிலேயே கருவம் கொண்டு திரிகிருன். குலச்செருக்கு, அதிகாரமமதை முதலியன மனிதனேப் புலேப்படுத்தி விடுகின்றன.

உயிர் நோக்கு ஒழிந்து உடலேயே நோக்கி ஊனங்கள் புரிந்து வருதலால் ஈனங்கள் பல விளேந்து வந்தன. ஞானக்காட்சி நேர்ந்தபோது இந்த ஈனங்கள் எல்லாம் ஒழிந்து போகின்றன.

தன்னே உண்மையாக உணர்ந்த உடன் மனிதன் ஈசனேடு வாசி பேச நேர்கின்றுன். உறவு தெரிய உரிமை தெரிகிறது. உறுதி உண்மைகளே இறைவனிடம் பெற எதிர் வழக்காடுகிருன்.

“என்று நீயுளே மற்று அன்றே யான் உளேன்;
அன்றுதொட்டு இன்றுகாறு அலமரு பிறப்பிற்கு
வெருவரல் உற்றிலன் அன்றே ஒருதுயர்
உற்றுழி உற்றுழி உணர்வதை அல்லதை
முற்றும் நோக்க முதுக்குறை வின்மையின்
முந்நீர் நீந்திப் போந்தவன் பின்னர்ச்
சின்னீர்க் கழிநீத்து அஞ்சான்; இன்னும்
எத்துணைச் சனனம் எய்தினும் எய்துக
அத்த! மற்றதனுக்கு அஞ்சலன் யானே
இமையாது விழித்த அமரிற் சிலர்என்
பரிபாகம் இன்மை நோக்கார் கோலத்
திருநடம் கும்பிட்டு ஒருவன் உய்ந்திலனெல்
சுருதியும் உண்மை சொல்லா தொல்லென
வறிதே அஞ்சுவர் அஞ்சாது
சிறியேற்கு அருளுதி செல்கதிச் செலவே.”

தில்லேப் பரமனே நோக்கிக் குமர குருபரர் இவ்வாறு கூறியிருக்கிருர். “எம் பெருமானே! நீ என்று தோன்றினுயோ அன்றே நான் தோன்றியுள்ளேன், என் தீவினையால் உன்னேப்

பிரிந்து போய்ப் பல பிறவிகளை அடைந்து திரிந்தேன்; அறிவின்மையால் இன்றும் பிறவிக்கு அஞ்சாமல் நிற்கிறேன். ஆயினும் கனக சபையில் வந்து உன்னை ஒருநாள் கண்டு நான் கும்பிட்டேன்; கூத்துவனைக் கண்டார் பின் கூற்றுவனைக் காணார் காண் என்பது ஆத்த மொழி. நான் மீண்டும் பிறவியில் விழுந்தால் வேதமும் பொய் சொல்லுமோ? என்று தேவர் அஞ்சி விழிப்பர்; அவருடைய அச்சத்தை நீக்கும் பொருட்டாவது என்னைப் பிறவியிலிருந்து நீக்கியருள்'' என இறைவனை நோக்கி இவர் வேண்டியிருக்கும் வித்தகம் எவ்வளவு புத்துணர்வை நமக்குப் போதித்துள்ளது! உய்த்துணர்ந்து உண்மை தெளிய வேண்டும்.

வெய்ய துயரங்களை நீக்கிக் கொள்வதே எய்திய பிறவிக்கு இனிய பயனும். உள்ளத்தில் உயர்ந்த பண்புகளைப் பேணி எவ்வுயிர்க்கும் அன்பனாய் ஒழுகி எவ்வழியும் உறுதிநலங்களைக் காணுக.

---

538. அல்லல் கருதி அவமதிப்பே செய்துவரும்
பொல்லா ரிடமும் பொறுமையாய்—நல்ல
இதமே புரியும் இயல்புடையார் ஈசன்
பதமே யுறுவர் படிந்து. (அ)

இ—ள்

அவமதித்து அல்லலைச் செய்து வருகிற பொல்லாரிடத்தும் பொறுமையாய் நல்ல இதங்களைச் செய்து வரும் பண்புடையாளர் இறைவன் திருவருளை மருவி இன்பம் அடைகின்றார் என்க.

பொறுத்து அருளுகிற தன்மை பெருத்த நன்மைகளை விளைத்து வருகிறது. அந்த உண்மையை இது உணர்த்துகிறது.

ஒருவனுடைய பெருந்தகைமையைத் தெளிவாக அளந்து அறிதற்குப் பொறுமை அரிய ஒரு சோதனைக் கருவியாய் அமைந்திருக்கிறது.

சீவர்கள் பலவகையான வினைகளின் விளைவுகளால் இங்கே வந்து பிறந்திருக்கின்றனர். பழகி வந்துள்ள பழைய வாசனைகளின்படியே அவர்களுடைய எண்ணங்களும் மொழிகளும் செயல்களும் இயங்கி வருகின்றன. யாவரும் வாசனை வயத்தராய் அலைந்து வருதலால் வெவ்வேறான மாறுபாடுகள் மனிதரிடம் மருவி நிற்கின்றன.

நல்ல சுபாவங்களையுடையவர் எவ்வழியும் நல்லவராய் நலம் பல புரிகின்றனர். தீய இயல்பினர் தீவினையாளராய்ப் பாவ கருமங்களையே விழைந்து செய்கின்றனர். அறிஞர் மூடர் இனியவர் கொடியவர் என இன்னவாறு பல்வேறு நிலைகளில் பரவியிருந்தாலும் நல்லவர் தீயவர் என இரு பிரிவுகளுள் எல்லா மனிதர்களும் அடங்கி நிற்கின்றனர்.

நல்லவர் அமுதம் போல் இனியராய் உள்ளனர்.
தீயவர் நஞ்சு போல் கொடியராய் இருக்கின்றனர்.

பொல்லாத இயல்பினர் யாண்டும் அல்லல்களையே விளைத்து வருவர் ஆதலால் அவரால் நாட்டுக்கு எல்லையில்லாத இடர்கள் நேர்கின்றன. கெட்டவர்கள் கேடு செய்தாலும் நல்லவர்கள் அவரிடமும் நலமே நாடியருளுகின்றனர்.

முத்தநாதன் என்னும் தீயவன் வஞ்சமாய் வந்து தன்னை வாளால் வெட்டிய போதும் மெய்ப்பொருள் நாயனர் அவன்பாலும் அன்பு புரிந்து அவனை ஆதரித்து அருளினர். அதனல் அவர் பேரின்ப நிலையையே மருவினர். அவரது மனப் பண்பையும், பெருந்தகவையும் உலகம் இன்றும் உவந்து போற்றி வருகிறது

வழியிடையே கண்ட தூர்த்தர் இருவர் கோவலனையும், கண்ணகியையும் கேலியாய்ப் பரிகாசம் செய்தனர். உடனிருந்த கவுந்தி என்னும் தவமுதுமகள் அப் புல்லரைப் பொல்லாத நரிகள் ஆகச் சபித்தார்; அவ்வாறே அவர் ஒல்லையில் உருமாறி ஊளையிட்டு நின்றனர். அதனைக் கண்ட கண்ணகியும் கோவலனும் உள்ளம் இரங்கி அவர்க்கு உதவி புரிய வேண்டினர்.

"குறுநரி நெடுங்குரற் கூவிளி கேட்டு
நறுமலர்க் கோதையும் நம்பியும் நடுங்கி
நெறியின் நீங்கியோர் நீரல கூறினும்
அறியாமை என்று அறியல் வேண்டும்
செய்தவத் தீர்நும் திருமுன் பிழைத்தோர்க்கு
உய்திக் காலம் உரையீரோ!" (சிலப்பதிகாரம்)

என அவர் மறுகி வேண்டியிருத்தலால் அவருடைய பரிவும் பண்பும் அறிய வந்தன. தம்மை இகழ்ந்தவரிடத்தும் இரங்கி இதம் புரிவது உயர்ந்த பண்பாடாய்ச் சிறந்து நின்றது.

நண்பாற்றார் ஆகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்றார் ஆதல் கடை. (குறள், 998)

கொடுமையாய் இடர் செய்கின்ற பகைவரிடத்தும் இனிமையாய் இதம் செய்வதே உயர்ந்த பண்பாம் என இது உணர்த்தியுள்ளது. இனிய நீர்மைகள் தோய்ந்து எவ்வழியும் புனிதம் எய்தியிருத்தலால் பண்பாளர் யாண்டும் அன்பு சுரந்து யாரிடமும் இதமே புரிகின்றனர்.

அன்பு ஒப்புரவு கண்ணோட்டம் அழியா வாய்மை நாணுதி
இன்பம் பெருக்கு நற்குணங்கள் எல்லாம் நிறைந்த சான்றோர்கள்
துன்புற்றவர்க்கும் இனியனவே சூழ்வர் துணையின் வினைமுடிப்பர்
வன்பில் தள்ளார் நட்டார்க்கு மடங்கித் தோற்றல் நாணாரே.
(விநாயக புராணம்)

இன்புவந் துற்ற போதும் எதிர்மாறு யுற்றபோதும்
முன்புட லுறுமூழ் என்றே விருப்புறார்; முனிவும் செய்யார்;
அன்பு சிற்றுயிர் அகத்தும் அமைந்து வாழ்கின்ற நீரார்
வன்பு மும்மலமும் நீங்கத் திருவருள் முழுகு மாண்பார்.
(மாயூரப் புராணம்)

உயர்ந்த பண்புடைய சிறந்த பெரியோர்களின் செயல் நிலைகளை இவை தெளிவாக விளக்கியிருக்கின்றன. இனிய நீர்மைகள் சுரந்தபொழுது அரிய சீர்மைகள் நிறைந்து வருகின்றன.

துன்பத் தொடர்புகள் நீங்கி இன்ப நலங்களையே இயற்றி வருதலால் உள்ளப் பண்பாளர் பேரின்ப வெள்ளத்தை அடைந்து கொள்ளுகின்றனர்.

---

539. வித்து மடியின் விளைவுமிகும் தன்னதெனும்
வித்து மடியின் வியனுகி—எத்திறத்தும்
பேரின்ப மாகப் பெருகி நிலையான
ஓரின்ப மாகும் உணர். (கூ)

இ—ள்

வித்து மடிந்தால் விளைவு மிகுந்து வரும்; தனது என்னும் பற்று ஒழிந்தால் அரிய பேரின்பம் பெருகி எழும்; புனிதமான இந்த இனிய நிலையை நுணுகி யுணர்க என்பதாம்.

மனிதனிடம் உயர்ந்த அறிவுகள் மருவியிருக்கின்றன. இருந்தும் இழிந்த எண்ணங்களால் அவை பாழாய் அழிந்து போகின்றன. தன்னுடைய தாழ்வுக்கும் உயர்வுக்கும் தனது உள்ளமே காரணமாயுள்ளமையை அவன் உணர்ந்து கொள்ளாமையால் ஊனங்கள் பல விளைந்து ஈனங்கள் பெருகி நிற்கின்றன. துயரங்களையும் இழிவுகளையும் விளைத்துக் கொண்டு வழி வழியாகவே அவல நிலைகளில் சீவர்கள் அலமந்து வருகின்றனர்.

இழிந்த புன்மைகள் ஒழிந்த பொழுதுதான் உயர்ந்த நன்மைகள் உளவாகின்றன. இனிய கருமங்கள் மூலமாய் அரிய தருமங்கள் விளைகின்றன விளைத்த வினைப்போகங்களையே யாவரும் அனுபவித்து வருதலால் நுகர்ச்சிகளுக்கு முயற்சிகள் மூல காரணங்களாயின.

வித்து மடியின் விளைவு மிகும்.

என்றது விதை விளைவுகளின் நிலைகளை உய்த்துணர வந்தது.

நிலத்தில் விதைத்த வித்து அப்படியே கிடந்தால் அதிலிருந்து யாதொரு விளைவும் உண்டாகாது. அது உருமாறி மடிந்த போதுதான் அதிலிருந்து முளை கிளம்பி மிகுந்த விளைவுகள் தோன்றுகின்றன.

தான் என்கிற அகங்காரம் தடித்திருக்கும் வரையும் உண்மையான புனித போகங்கள் மனிதனுக்கு உளவாகா. பொல்லாத சீவ சுபாவங்கள் மாறிய பொழுதுதான் நல்ல தெய்வீக இன்பங்கள் மேலோங்கி வருகின்றன.

தன்னது எனும் வித்து என்றது அகங்காரத்தை. ஆணவ முனைப்பு நுணுகிய நிலையில் அணுகி யிருத்தலால் வித்து என வந்தது. உயிர்கள் அடைகிற துயரங்களுக்கெல்லாம் பூரணமான காரண பூதமாய் இது மாரணம் விளைத்துள்ளது.

"ஆங்கார மானகுல வேடவெம் பேய்பாழ்த்த
 ஆணவத்திலும் வலிது காண்!
அறிவினை மயக்கிடும்; நடுவறிய வொட்டாது;
 யாதொன்று தொடினும் அதுவாய்த்
தாங்காது மொழிபேசும்; அரிகரப் பிரமாதி
 தம்மொடு சமானம் என்னும்;

தடையற்ற தேரில்அம் சுருவாணி போலவே
தன்னில் அசையாது நிற்கும்;
ஈங்கார் எனக்குநிகர்? என்னப்பிர தாபித்து
இராவணா கார மாகி
இதயவெளி எங்கணும் தன்னரசு நாடுசெய்
திருக்கும்; இதனொடு எந்நேரமும்
வாங்காவிலா அடிமை போராட முடியுமோ?''

எனத் தாயுமானவர் இவ்வாறு பாடியிருக்கிறார். சீவ போதத்தோடு மாறாய் அவர் போராடியுள்ள நிலைகளை இது நேரே காட்டியுள்ளது. மானச தத்துவங்கள் ஞான போதமாய் வருதலால் அவை நன்கு உய்த்துணர வுரியன.

ஆங்காரம், ஆணவம் என்பன நான் என்னும் முனைப்புகளாய்த் தடித்து எழுகின்ற சீவத் திமிர்கள். முன்னது மனத்திலிருந்து மண்டி எழுவது; பின்னது உயிரோடு சார்ந்து உருமியுள்ளது. இவை இரண்டும் உண்மை நிலைகளை மறைத்துப் புன்மை புரிவது ஆதலால் பிறவித் துயரங்களுக்கு மூலங்களாயின. நான் செய்தேன்; எல்லாம் என்னால் ஆயின என இன்னவாறு அகத்திலிருந்து செருக்கி வருவது அகங்காரம் என வந்தது. அகம்=மனம். காரம்=உறைப்பு, முனைப்பு. இதுவே முதல் நீண்டு பின்பு ஆங்காரம் என நேர்ந்தது.

எல்லாம் இறைவன் செயல் என்று அமைதியாய் அடங்கி ஒழுகுவது உயர்ந்த ஞான சீலமாம்; அங்ஙனமின்றி அகங்காரமாய் அடங்கொண்டு நிற்பது மடம் கொண்ட படியாம். தெருண்டு தெளியாமல் மருண்டு மயங்கி நிற்றலால் இது மருள், இருள், மயக்கம் என வந்தது.

இழிந்த மாய மயக்கங்களே உலகை வளைந்து கொண்டு யாண்டும் ஓயாமல் வதைத்து வருகின்றன. இருண்ட மருள்களில் புரண்டு வருதலால் சீவர்களிடம் ஆங்காரங்கள் ஓங்கி நிற்கின்றன.

கருமையாம் அகங்கார மர்க்கடவா!
கடையனே! உனைக் கலந்ததனாலே
அருமை யாகநாம் பாடினோம்; கல்வி
அறவறிந்தனம்; அருளையும் அடைந்தோம்;

இருமை இன்பமும் பெற்றனம்; என்றே
எனைமதித்துநான் இழிவடைந்தனன் காண்
ஒருமை ஒற்றியூர்ச் சிவன்அருள் வாளால்
உன்னை வெட்டுவல் உண்மை என்றுணரே. (1)

அமைவ றிந்திடா ஆணவப் பயலே!
அகில கோடியும் ஆட்டுகின்றவன் காண்
எமை நடத்துவோன் ஈதுண ராமல்
இன்று நாம்பரன் இணையடி தொழுதோம்;
கமைவின் எத்தினேம்; அடியரும் ஆனேம்;
கனிகின் றேம்எனக் கருதிட மயக்கேல்
உமையன் ஒற்றியூர்ச் சிவன்அருள் வாளால்
உன்னை வெட்டுவல் உண்மை என்று உணரே. (2)

(அருட்பா)

அகங்காரத்தையும்; ஆணவத்தையும் நோக்கி இராமலிங்க சுவாமிகள் இவ்வாறு உரையாடி யிருக்கிருர். அவற்றின் செயல் இயல்களை இவற்றுள் ஊன்றி உணர்ந்து கொள்ளுகிறேம். "அகங்கார ஆணவங்களே! என்னை நீங்கள் கெடுத்து விட்டீர்கள்; மிகவும் கெட்டுப் போனேன்; இப்பொழுது தெளிந்து கொண்டேன்; இனிமேல் ஒழிந்து போய் விடுங்கள்; நின்றால் மாண்டு படுவீர்கள்; இறைவன் திருவருளை எய்தியுள்ளேன்; ஞான வாள் என் கையில் உள்ளது; வெட்டி விடுவேன்" என அவர் வெருட்டியிருக்கும் காட்சியை இதில் கருதிக் காண வேண்டும்.

தான் என்னும் செருக்கு ஈனப் படுத்தி விடுகிறது; எல்லாம் அவன் செயல் எனத் தெய்வ சிந்தனை செய்து ஒழுகிவரின் அது உய்தி நலனை உதவியருளுகிறது. தெளிந்த ஞானங்கள் விளைந்து வர இழிந்த ஈனங்கள் ஒழிந்து போகின்றன.

மனிதனுடைய சிறந்த அறிவுக்குப் பயன் உண்மையான உயர்ந்த பொருளை உணர்ந்து உய்தி பெறுவதேயாம். நித்திய நிலையைச் சிந்தனை செய்து வருபவர் உத்தம கதிகளை அடைந்து கொள்ளுகின்றனர்.

இன்ப மயமான ஈசனையே எண்ணினேன்
துன்பமெலாம் நீங்கிச் சுகமடைந்தேன்--முன்புநான்

எண்ணி இழிந்த இழிபிறவி யாவுமே
மண்ணு யழிந்த மடிந்து.

புனிதமான தெய்வ சிந்தனை அதிசய ஆனந்தத்தை அருளி வருதலால் அதனையுடையவர் பேரின்ப நிலையராய்ப் பெருகி நிற்கின்றனர்.

"வாக்கும் மனனும் யாக்கையும் ஒன்றுச்
சொற்றரு கரணம் மற்றிவை மூன்றும்
நின்புகழ் நவிற்றியும் நினைத்தும்நின் துணைத்தாள்
அன்புடன் இறைஞ்சியும் இன்பமுற் றனவால்
அவகர ணங்களே அல்லமற் றம்ம
சிவகர ணங்களாய்த் திரிந்தன அன்றே; அதனுல்
திரிகர ணங்கள்என்று உரைசெயும் அப்பெயர்
ஒருபொருட் கிளவி எல்லோர்க்கும்
இருபொருட் கிளவியாய் இருந்தது இன்றெனக்கே."
(பண்டார மும்மணிக்கோவை)

தம்முடைய மனம் மொழி மெய்கள் சிவபெருமானையே மருவியுள்ளமையால் சிவ கரணங்கள் ஆயின; அவகரணங்கள் என்னும் அவப் பெயர்கள் போயின எனக் குமர குருபர சுவாமிகள் இவ்வாறு கூறியுள்ளமையால் அவரது புனித வாழ்வு இனிது தெளிவாயது. உள்ளம் பரமனேடு தோய்ந்த அளவில் உவகை வெள்ளம் பாய்ந்து வருகிறது.

மூன்று என்னும் தொகையின் வகையாய்த் திரிகரணங்கள் எனப் பொதுவாய் இருந்தது; நம்மிடத்தில் அவை சிவகரணங் களாய்த் திரிந்து வந்தமையால் இரு பொருட் கிளவி ஆயது என உரைத்திருக்கும் அழகு உணர்வுக் காட்சியாயுள்ளது.

தன்னைக் கருதி வருகிற உள்ளத்தில் ஈசன் வாசமாயிருத்தலால் அந்த அன்பன் இன்ப நிலையமாய் இனிது நிலவுகிருன்.

"ஒருகணம் இருப்பன் தெய்வ வுருவினில் ஈசன்தான் மற்று
இருகணம் செங்கோல் ஓச்சும் இறையவர்பால் இருப்பன்;
அருமறை யவர் குழாத்துள் அம்புவீழ் அளவிருப்பன்;
துரிய யோகிகள் உளத்தில் தூங்குவன் இருந்து எப்போதும்."
(பதிபசு பாச விளக்கம்)

கடவுள் நிலையை இது காட்டியுள்ளது. உணர்வுக் காட்சிகளை ஊன்றி நோக்கி உறுதி நலங்களைக் காண வேண்டும்.

மனிதன் பிரியமாய்க் கருதி வருவதை உறுதியாய் அடைந்து கொள்ளுகிறான். தூய நாட்டம் தோய்ந்த போது தீய நாட்டம் ஓய்ந்து போகிறது. போகவே ஏக இன்பம் எய்துகிறது.

உள்ளத்தை உயர்வாகப் பண்படுத்தினால் உயர்ந்த இன்பப் பொருள் அதில் விளைந்து வருகிறது. அந்த ஆனந்த போகத்தை அடைந்து கொள்பவன் அதிசய பாக்கியவானாய் அமரரும் துதி செய்யப் பெறுகிறான்.

---

540. உண்பாடு நோக்கி உலாவி உழைத்துமே
கண்பாடு கண்டு கழிகின்றார்—பண்பாடு
காணா திருத்தல் கடையென் றுணராமல்
வீணே விளிகின்றார் வெந்து. (ய)

இ—ள்

உணவையே கருதி உழைத்து உண்டு உறங்கி மனிதர் உலாவிக் களிக்கின்றார்; உண்மையான குண நலங்களைக் கண்டு தெளியாமல் வீணே இழிந்து ஒழிந்து போகின்றார் என்பதாம்.

குண நீர்மைகள் உயிரின் உயர் மணங்களாய் ஒளி மிகுந்துள்ளன. அவற்றை மருவிய அளவு மக்கள் மகிமை யடைந்து வருகின்றனர். அவை யில்லையானால் சுவை யில்லாத பண்டம் போல் மனிதன் நவையுழந்து இழிகின்றான்.

உருவத் தோற்றத்தில் மனிதன் ஆயினும் உள்ளத்தில் நல்ல தன்மைகள் இல்லை எனின் அவனுடைய பிறப்பும் இருப்பும் எள்ளலடைந்து இழிவுறுகின்றன. உயர்ந்த இயல்புகள் குன்றிய அளவு இழிந்த மயல்கள் மனிதனைச் சூழ்ந்து கொள்ளுகின்றன.

உழைப்பது உண்பது உறங்குவது விழிப்பது களிப்பது என இந்த நிலையிலேயே வாழ்ந்து வந்தால் அந்த மனித வாழ்வு மிருக வாழ்வாகவே மருவி இருக்கும். உயர்ந்த சிந்தனைகளை இழந்த பொழுதுஇழிந்தவிலங்குகளாகவே மாந்தர் அலைந்துதிரிகின்றனர்.

உண்டு கழிப்பார் ஒருபலனும் கண்டிலார்
மண்டு களிப்பில் மயங்குவார்—கொண்ட
இருகால் விலங்கா யிழிந்து திரிவார்
ஒருகாலும் உண்டோ உயர்வு.

இவ்வாறு பரிதாப நிலையில் வாழ்ந்து வரும் அளவும் மக்கள் மாக்களாய்ப் பாழ்பட்டுள்ளனர். நீர்மைகள் குன்றவே, சீர்மைகள் குன்றின. தனக்கு நேர்கிற இழிவையும் அழிவையும் தெளிவாக உணர்ந்து கொள்ளாமையால் மனிதன் அவலமாய் அழிந்து வீழ்கிருன். வீழ்ச்சி தெரியாமல் உழல்வது வியப்பாயுள்ளது.

இனிய எண்ணங்கள் மனிதனை உயர்த்துகின்றன; அந்தச் சித்த விருத்தி பழுதாய்ச் சீரழிந்து போனால் மனிதன் பாழாய்ப் பேரழிந்து போகிருன். உள்ளத்தை இனிமையாக உரிமை செய்துகொண்டவன் பேரின்ப வெள்ளத்தில் வள்ளத்தை ஓட்டி உல்லாசமாய் உலாவி வருகிருன்.

உள்ளப் பண்பு உயர்ந்த மகிமைகளைக் காட்டி இன்பங்களை ஊட்டி வருகிறது. அந்த ஒன்றைப் பெற்றவன் எல்லா நலங்களையும் ஒருங்கே பெற்றவனுகிருன்.

ஒளி மிகுந்த உயர்ந்த மணியினும் அளி மிகுந்த குணம் அரிய மேன்மையுடையது. அதனை உரிமையாக வுடையவர் யாண்டும் அருமையாகப் போற்றப் படுகிருர்.

உயர்ந்தோர், மேலோர், பெரியோர், சான்ருேர் என ஆன்ற மதிப்போடு உலகம் யாரைப் போற்றி வருகிறது? சிறந்த அரசரும் உவந்து பணிந்து எவரை விழைந்து தொழுது வருகிருர்? இதனை நினைந்து பார்த்தால் குண சீலங்களின் மகிமைகளை உணர்ந்து கொள்ளலாம்.

குணநலம் சான்ருேர் நலனே; பிறநலம்
எந்நலத் துள்ளதூஉம் அன்று. (குறள், 982)

சான்ருேருடைய நிலைமையை இது உணர்த்தி யுள்ளது.

செல்வம் கல்வி அதிகாரம் முதலிய நலங்களை அவர் ஒரு பொருளாக மதியார்; குண நலங்களையே உயிர் நிலையாக எவ் வழியும் பேணி ஒழுகுவர் என்றதனுல் அவரது திவ்விய மகிமை தெளிவாகி நின்றது.

மலருக்கு மணம்போல் மனிதனுக்குக் குணம் மாண்புதருகிறது.

பண்பாடு காணுதிருத்தல் கடை.

தன்னை உயர்ந்த மகானுக்கிச் சிறந்த இன்பநலங்களை யூட்டி

யருளுகிற பண்புடைமையை மனிதன் உரிமையாகப் பேணிக் கொள்ளாமல் இருப்பது பெரிய பரிதாபமான பேரிழவாம். பண்பாடு காணுதவன் புண்பாடு காண்கின்முன்.

திருவுடையான், அறிவுடையான், திறலுடையான் என்பதை விடப் பண்புடையான் என்பது எவ்வளவோ மகிமையுடையது. பண்பின் அளவிற்கே மனிதன் உயர்ந்து மாட்சிமை பெறுகிருன்.

பொறுமை சாந்தம் அமைதி என்பன பெருமையின் உரிமைகளாய்ப் பெருகி நிற்கின்றன. அருமைப் பண்புகளான இவை மனிதனை அதிசய நிலையில் உயர்த்தி யருளுகின்றன.

வீட்டை விசாலப் படுத்திக் கோட்டை கட்டி வாழ்வதினும் உள்ளத்தை விசாலப்படுத்திப் பெருந்தன்மையோடு ஒழுகி வருபவன் விழுமிய பாக்கியவானுய் எழுமையும் இன்புறுகின்முன்.

உள்ளப் பண்பு குறையின் மனிதன் எள்ளப் படுகிருன். பண்பு படியாமல் பழகி வருதலால் துன்பமும் பழியும் தொடர்ந்து வருகின்றன. இனிய இயல்புகள் குன்றவே கொடிய மயல்களும் செயல்களும் குடி புகுந்து கொள்ளுகின்றன. கொள்ளவே, எள்ளல்களும் இழிவுகளும் எவ் வழியும் விளைந்து வெவ்விய துயரங்கள் விரிந்து வருகின்றன.

அரிய மனிதராய்ப் பிறந்தும் கொடிய மிருகங்களாகவே பலர் வாழ்ந்து வருகின்றனர். பொல்லாத அப் பழி வாழ்வுகளைக் காணுந்தோறும் நல்லோர்களுடைய விழிகள் கூசுகின்றன.

மானிடராய் வந்து மருவி இருந்தாலும்
கானிடையே வாழும் கடுவிலங்கா---ஈனம்
படிந்து பலபேர் பழிவாழ்வு கொண்டு
மடிந்து கழிகின்முர் மாய்ந்து.

என்றபடியே மனித சாதி தோய்ந்து வந்தால் இனிய கதி நலங்களை எவ்வாறு காண்பது? அரிய பிறவி அடைந்தும் கொடிய இழிவில் இழிந்துழலுவது நெடிய துயரமாய் நேர்ந்து நின்றது.

"மனிதர் சிலரைக் காணும் பொழுது மாடுகள் நல்லன என்று தோன்றுகிறது" என ஒரு பெரியவர் பரிதபித்திருக்கிருர். அவரது பச்சாத்தாபம் சனங்களுடைய இழி நிலைகளை உச்ச நிலையில் உலகறியச் செய்துள்ளது. உயர்ந்த பழக்கங்களையே பழகி

வந்துள்ளவர்களுக்கு இழிந்த மக்களுடைய செயல்கள் ஈனங்களாய்த் தோன்றலால் பரிதாபத்தோடு அவர் இகழ்ந்து சொல்ல நேர்கின்ருர். சொல்லில் அவர் உள்ள நிலை தெரிகிறது.

"The more I see of men, the more I love dogs."

"மனிதர்களை எவ்வளவுக்கு எவ்வளவு காண்கின்றேனே அவ்வளவுக்கு அவ்வளவு நாய்களை நான் விரும்புகிறேன்" என ஓர் ஆங்கில அறிஞர் இங்ஙனம் கூறி யிருக்கிருர்.

நன்றி யறிவுடைய நாயினும் கீழாக
ஒன்றி யுழலல் ஒழி. (1)

நாட்டுள் இருந்து நவைபுரியின் அன்னவரே
காட்டு மிருகங்கள் காண். (2)

இந்த அறிவுக் காட்சியைக் கருதிக் காணுக.

இழிந்த இயல்புகள் மக்களை இவ்வாறு இகழ்ந்து வெறுக்கும்படி செய்து விடுகின்றன. ஈனப் பழக்கங்கள் ஈனமாக்கி விடுமாதலால் மான மனிதர் அவற்றை ஒழித்து ஒழுக வேண்டும்.

நல்ல பண்புகளை வளர்த்து வருபவர் எல்லா மகிமைகளையும் எளிதே அடைந்து கொள்ளுகின்றனர். எவ்வழியும் இனிய நீர்மைகளைப் பேணி அரிய மேன்மைகளை அடைக.

## இவ் அதிகாரத்தின் தொகைக் குறிப்பு.

பண்பு அன்பு நலம் சுரந்தது.
அறிவு நலம் நிறைந்தது.
அரிய தகைமை அமைந்தது.
பெரிய மகிமை யுடையது.
சிறுமை நீக்கிச் சீர் பல தருவது.
பண்பாளர் பதம் அறிந்து ஒழுகுவர்.
உறுதி நலம் கருதி உண்மை தெளிவர்.
எல்லாரிடமும் இதமே புரிவர்.
அடங்கி ஒழுகி அமைதி யுறுவர்.
பண்பு படிந்து பரகதி பெறுக.

௬௪-வது பண்பு முற்றிற்று.

# ஐம்பத்து ஐந்தாம் அதிகாரம்

## வி ந ய ம்.

அஃதாவது பணிவும் அமைதியும் படிந்து இனிய நயமுடையனாய் மனிதன் ஒழுகி வருவது. உயர்ந்த பண்பின் பயனாய் விநயம் விளைந்து வரும் ஆதலால் அதன்பின் இது வைக்கப்பட்டது.

541. இன்சொல் இயம்பி எவர்பாலும் எவ்வழியும்
வன்சொல் வழங்காமல் வாய்காத்து—தன்சொல்லைப்
பேணி ஒழுகும் பெருந்தகையை ஞாலந்தன்
காணியாக் காணும் கனிந்து. (க)

இ—ள்

யாரிடமும் இனிய வார்த்தைகளைப் பேசி எவ்வழியும் அடக்கமாய்த் தன் சொல்லை நன்கு பேணி ஒழுகும் பெருந்தகையாளனை உலகம் உரிமையாக உவந்து கொண்டாடும் என்பதாம்.

பணிவும் பண்பும் வாய்மொழிகளால் அணிபெற்று வருதலால் அவை சுவையாகச் சொல்ல வந்தன. உண்மை நிலைகளை உரைகள் உணர்த்தி யருளுகின்றன.

இனிய குண நீர்மைகளினாலேதான் மனிதன் தனி நிலையில் உயர்கிறான். மனம் புனிதமாய் உயர மகான் ஆகின்றான். ஆகவே சனசமுதாயம் அவனை அதிசய ஆவலோடு கண்டு துதி செய்து தொழுகிறது. பண்பு நிறைந்த அந்தப் பெருந்தகையைப் பின்பு வருகிற சந்ததிகள் அருந்தவ முனிவன் என வழிபட்டு வழி வழியே வணங்கி வருகின்றன. உள்ளம் தூய்மையாய் உயர்ந்த போது மனிதன் ஒரு தெய்வ சோதியாய் விளங்கி நிற்கிறான்.

ஒருவனுடைய உள்ளத்தின் பண்பாடுகள் அவன் வாய் திறந்து பேசுகிற சொல்லுகளில் துலங்கி வருகின்றன.

நயமான வார்த்தைகளை இதமாகப் பேசுகின்றவன் உயர் குண நிலையில் ஒளி செய்துள்ளான் என்பதை உலகறியச் செய்கிறான். இனிய நயம் விநயம் ஆகிறது.

இனிமையை எவரும் விரும்புகின்றனர்.

கொடுமையை யாவரும் வெறுக்கின்றனர்.

சீவ சுபாவங்கள் இவ்வாறு அமைந்திருத்தலால் இதமான வசனங்கள் மனித சமுதாயத்தை யாண்டும் நன்கு வசப் படுத்திக் கொள்ளுகின்றன.

இன் சொல் என்றது சாரமான இனிய சொற்களை.

வன் சொல் என்றது பயன் அற்ற கொடிய வார்த்தைகளை.

பண்பு படிந்த இனிய சொல் பிறருக்கு இன்பம் பயந்து வருதலால் அது புண்ணிய விளைவாகிறது. ஆகவே இன் சொல் லாளர் புண்ணிய சீலர்கள் ஆகின்றனர்.

இன்சொல் அளாவல் இடமினிதூண் யாவர்க்கும்
வன்சொற் களைந்து வகுப்பானேல்---மென்சொல்
முருந்தேய்க்கு முட்போல் எயிற்றினாய் நாளும்
விருந்தேற்பர் விண்ணோர் விரைந்து. (ஏலாதி, 7)

இன்சொல் முதலிய இதநலங்களுடையவனைத் தேவர் உவந்து விருந்தினனாக ஏற்று உபசரிப்பர் என இது உணர்த்தி யுள்ளது. இனிய உரையாளன் இம்மையில் தருமவானாகிறான்; மறுமையில் தேவனாய்த் திவ்விய போகங்களை நுகர்கிறான் என்பதை இதனால் அறிந்து கொள்ளுகிறோம்.

"இனிய சொல்லினன் ஈகையன் எண்ணினன்
வினையன் தூயன் விழுமியன் வென்றியன்
நினையும் நீதி நெறி கடவான் எனில்
அனைய மன்னற்கு அழிவும் உண்டாங் கொலோ."

இராமனுக்கு அரச நீதிகளைப் போதித்து வரும்பொழுது வசிட்டர் இவ்வாறு கூறியிருக்கிறார். உரை செயல்களால் உயிரி னங்களுக்கு இதம் புரிந்து வருகிறவன் துயரம் யாதும் இன்றி உயர் புகழோடு நெடிது வாழ்ந்து வருவான் என்பதை முனிவர் மொழி நுணுகி யுணரச் செய்தது.

இனிய சொல்லை முதலில் குறித்தது அதன் தலைமை கருதி.

பேச்சு வழக்கு மனிதனுக்கு மாட்சிமை ஆனது. வேறு பிராணிகளுக்குக் கிடையாத பெருமையை மனிதன் தனியுரிமை யாகப் பெற்றிருக்கிறான். அருமையாக வாய்த்துள்ள வாய்த் திருவைத் தகுதியாக வழங்கி வருபவன் தக்கவனாய் விளங்கி நிற்கிறான். நா நயம் நாணயம் ஆகிறது.

தன் சொல்லைப் பேணி ஒழுகும் பெருந்தகை.

பேச்சைப் பாதுகாத்து வரும் மாட்சிமையை இது காட்சிப் படுத்தியது. ஒருவன் பெரிய மனிதன் என்பதை அவனுடைய உரையும் செயலும் உணரச் செய்கின்றன. அன்பு கனிந்து பண்பு சுரந்து அறிவு நிறைந்து எவனுடைய வாயிலிருந்து இனிய மொழிகள் வெளி வருகின்றனவோ அவன் அரிய ஒரு பெரிய மனிதன் என்பது அறிய நேர்கின்றது. உள்ளத்தின் உயர்வைச் சொல் உணர்த்துகிறது. அந்தச் சொல்லை நெறியோடு பேணி வருகிறவனை உலகம் உரிமையோடு போற்றி வருகிறது.

---

542. நல்ல நயமுடைய நாவுடையார் பூவுலகில்
எல்லா நலமும் எளிதெய்திச்—சொல்லும்
பெருமைக் கிடமாய்ப் பெருகி மிளிர்வர்
இருமைக் கினமாய் இவண். (உ)

இ—ள்

நாவில் நலமுடையவர் பூவுலகில் எல்லா நலங்களையும் எளிதின் எய்தி இருமையும் பெருமையாய் இசை மிகுந்து வாழ்வர்.

சொல்லின் நலனை முன்னம் அறிந்தோம்; அங்ஙனம் சொல்லாடவுரிய நாவின் நிலைமை இதில் அறிய வருகிறோம்.

மனிதனுக்கு வாய்த்துள்ள உபகரணங்களுள் நாவின் நயம் யாவினும் உயர்ந்தது. அதனாலேதான் வாழ்வு முழுதும் நடந்து வருகிறது. அஃது இல்லையானால் ஊமை வாழ்வாய் எல்லாம் ஊனமடைந்து போம்.

நல்ல நயம் உடைய நாவுடையார்.

என்றது நாக்கின் பயனை நோக்கியுணர வந்தது.

தனக்கு வேண்டிய நலங்களை எல்லாம் சொல்லால் மனிதன் வாங்கிக் கொள்ளுகிறான். தன் வாழ்வை ஆக்கி வருகிற நாவை நல்ல நயமுடையதாக ஒருவன் ஆக்கிக் கொள்வானாயின் எல்லா ஆக்கங்களையும் ஒருங்கே பெற்ற பெரிய பாக்கியவானாகின்றான்.

நாவின் நுனியில் நயமிருக்கில் பூமாதும்
நாவினிய நல்லோரும் நண்ணுவார்—நாவினுனி
ஆங்கடின மாகில் அத்திருவும் சேராள்முன்
ஆங்கே வருமரணம் ஆம். (நீதிசாரம்)

நாக்கு நுனியில் இனியசொல் இருந்தால் அரிய செல்வமும் பெரியோர் நட்பும் எளிதே கிடைக்கும்; அது கடினமானால் வறுமையும் மரணமும் வரும் என இது உணர்த்தியுள்ளது.

ஆக்கமும் கேடும் அதனால் வரும் எனச் சொல்லைக் குறித்து வள்ளுவப் பெருந்தகை சொல்லியுள்ளதும் இங்கே உள்ளியுணர வுரியது. வாய்க்கு வந்தபடி வீணே பேசலாகாது. எவ்வழியும் எச்சரிக்கையோடு செவ்வையாக அளந்து பேச வேண்டும். நாவை அடக்கினவன் யாவையும் அடக்கினன் என்னும் முதுமொழியால் நாவடக்கத்தின் நன்மை புலனும்.

புறங்கூறல், பொய் சொல்லல், பிறரை இகழ்ந்து பேசுதல் என்னும் இவை நாக்கை நீசப்படுத்தி விடும் ஆதலால் அந்த நீசங்களை யாதும் பேசலாகாது. இனிய நாவைப் புனிதமாகப் போற்றி வருகிறவன் மனிதருள் மகான் ஆகிறுன்.

தன்னை யுடையானுக்குப் புகழையும் புண்ணியத்தையும் எந்த நா ஈட்டிக் கொடுக்கிறதோ அதுவே நல்ல நா; நயமுடைய நா என்க. எவ்வழியும் யாதும் பிழை நேராதபடி பேசி வருகிறவன் தேசு மிகப் பெறுகிறுன்.

பிறருடைய குற்றங்களைக் குறித்துப் பேசாமல் இருப்பதே உயர்ந்த பெருந்தகைமைக்குச் சிறந்த அடையாளமாம்.

"பிறர் தீமை சொல்லா நலத்தது சால்பு." (குறள், 984)

இது எவ்வளவு பெரிய தரும மந்திரம்! தங்கள் நாக்கைச் சோதனை செய்து காண்பவர் இந்த வாக்கியத்தின் போதனையை உணர்ந்து சாதனையைத் தெளிந்து கொள்ளுவர். பிழைத்து வந்த பிழைகளை நினைந்து உள்ளமும் நாணுவர். அரிய சால்புக்கு உரிய உரைகல் இனிய உரையே என்பது தெரிய வந்தது.

பிறர் பிழை பேசாதிருப்பதே தங்கள் குல விரதமாகச் சான்றோர் பேணி வருவர் என்றதனால் அவரது காட்சியும் மாட்சியும் காண வந்தன. புனித வாயினர் புண்ணியராயினர்.

உண்மையான பெரிய மனிதனுடைய வாய் புன்மையான மொழிகளைப் பேசாது; யாண்டும் நன்மையே பேசி வரும்; வரவே எல்லா மேன்மைகளும் அவனிடம் உறவுரிமைகளாய் வந்து சேருகின்றன. தன்னுடைய நா நயமுடையதாயின் அந்த மனி

தன் சிறந்த பெருந் தகையாளனாய் உயர்ந்த பயன்களை ஒருங்கே அடைந்து கொள்ளுகிறான்.

தன்னை வழிபட்டு வந்த அன்பனுக்கு ஒரு பெரியவர் முடிவில் ஓர் உபதேசம் செய்தார். அவை அயலே வருகின்றன.

நாவைப் போல் இரு;
பூவைப் போல் இரு;
ஆவைப் போல் இரு.

என இவ்வாறு அவர் போதித்தருளினார். இந்தப் போதனைகளின் உண்மை நிலைகளை உணர்ந்து ஒழுகி அவன் நன்மைகள் பல அடைந்தான்.

வலிய பல்லுகளிடையே இருந்து கொண்டு அவை நன்றாக உழைத்து மென்று தர அதி சாதுரியமாய் நா உண்டு வருகிறது; அதுபோல் கொடியவர்கள் நடுவே இருந்தாலும் அவரால் யாதொரு இடையூறும் நேராமல் எல்லா இத நலங்களையும் அடைந்து வாழுக என்பார் நாவைப் போல் இரு என்றார்.

பகைசேரும் எண்ணான்கு பற்கொண்டே நன்னா
வகைசேர் சுவைஅருந்து மாபோல்---தொகைசேர்
பகைவரிடம் மெய்யன்பு பாவித்து அவரால்
சுகம்உறுதல் நல்லோர் தொழில். (நீதி சாரம்)

உலக வாழ்வு பலவகை அல்லல்கள் உடையது; பொறாமை, குரோதம், கோபம், பகைமை முதலிய கொடுமைகள் நிறைந்தது. இந்தத் தீமைகள் இடையே மனிதன் சுகமாய் வாழ்ந்து வருவது அரிது. அந்த அரிய நிலையில் நின்று அதி விநயமாய் மனிதன் குடி வாழ்க்கை நடத்தி வரும் படிப்பினையை இப்பாட்டு அழகாக எடுத்துக் காட்டியுள்ளது.

ஒரு கடியில் துணித்து எறிய வல்ல பல்லுகள் முப்பத்திரண்டுகளுக்கும் இடையே மெல்லிய நா ஒன்று மேவியிருந்து நல்ல வகையாய் வாழ்ந்து வருதல் போல் கொடியவர்கள் புடைசூழ்ந்திருப்பினும் மதி நலமுடையவன் இத நலங்களை அடைந்து இனிது வாழ்ந்து வருகிறான்.

விநயமுடையவன் எவ்வழியும் இடரின்றி யாவரிடையும் இதமுடன் ஒழுகி வருதற்கு நயமுடைய நா ஈண்டு உவமையாய் வந்தது. நாவில் நல்லவர் பூவில் வல்லவர் ஆகிறார்.

இவ்வகையில் வாழ்ந்து வருகிற நாக்குக்கும் பல்லுகளுக்கும் ஒரு முறை வாக்கு வாதம் நேர்ந்தது: "நாவே! நீ மிகவும் சமர்த்தி; உனது சாதுரிய சாகசங்கள் அதிசயமுடையன; அழகிய பருவமங்கை ஆண் மக்களை வசப் படுத்தி உலகில் மயக்கி வருதல் போல் நீ எங்களை இங்கே ஏமாற்றி வேலை வாங்கி இனிமையாய் உண்டு வருகிறாய்; ஜிஹ்வா என்று வட மொழியில் உன்னைப் பெண்பாலாக அழைத்து வருவது எங்கள்பால் நீ இழைத்து வருகிற மாயா சாலங்களை எண்ணியேயாம்; பெண் என்ற மயக்கில் நாங்கள் உனக்கு உழைத்து வருகிறோம்; இதற்கு எப்பொழுதாவது எங்களுக்கு நீ நன்றி பாராட்டியது உண்டா?" என்று இப்படிப் பல்லுகள் கேட்டன. இங்ஙனம் அவை துள்ளிக் கேட்கவே நாக்கு உடனே பதில் சொல்ல நேர்ந்தது.

### நாக்கின் பதில்.

"பல் வீரர்களே! நீங்கள் இன்று சொல் வீரர்களாகவும் தொடங்கினீர்கள். நான் ஒரு பேதை; நீவிர் எது செய்தாலும் பொறுத்துக் கொண்டே யிருக்கிறேன்; பொறுமை எங்கள் மரபின் உரிமை. சில சமையம் நீங்கள் என்னைக் கடித்திருக்கிறீர்கள்; கொடிய வேதனையான அதனையும் சகித்துள்ளேன். நான் உங்களுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்றது நகைப்பாய் வருகிறது; என்னாலேதான் நீங்கள் நிலை குலையாமல் நிலைத்து வாழுகிறீர்கள்; ஒரு துட்டனை நோக்கித் துடுக்காக நான் ஒரு சொல்லைச் சொன்னால் உங்கள் கதி என்னும்? போல்லாத சோல் ஒன்றால் பூண்டிருந்த என்னுடைய பல் எல்லாம் அந்தோ பறி போச்சே என்று பண்டு ஒருவன் பரிதபித்ததை நீவிர் கண்டறியீரோ? அறிந்தீராயின் எனக்கு நன்றி பாராட்டுவீர்" என இங்ஙனம் நா வுரைத்து நின்றது. அதனைக் கேட்டதும் பல்லுகள் நாணி அடங்கின. பாட்டு அயலே வருகிறது.

மெல்லியலின் நாவேநாம் மென்றுதர உண்டுவந்து
நல்லியல்பாய் வாழ்கின்றாய் நன்றியுண்டோ?---பல்லியலீர்
என்னாலே நீவிர் இனிதாக வாழ்கின்றீர்
சொன்னால் அழிவீர் தொடர்ந்து.

பல்லும் நாவும் சொல்லாடியுள்ள இதில் நாவின் நீர்மை நன்கு புலனாயது. நா நயமுடையதாயின் மனிதன் துயர் இலனாய் உயர் நலமடைகிறான்.

எளிய புல்லும் நீரும் அருந்தி இனிய பாலை ஆ அருளுகிறது. மெல்லிய நீர்மையும் மணமும் பொருந்தி எல்லாரும் மகிழ்ந்து கொள்ளப் பூ அமைந்துள்ளது. நாவும் பூவும் ஆவும் போல் மனிதன் விநயமும் நயமும் பயனும் படிந்து வாழ வேண்டும்.

அமைதியும் அடக்கமும் அறிவின் சாரங்களாய் மருவியுள்ளன; இனிய ஆன்ம நீர்மைகள் அரிய ஆனந்த நிலையங்களாய்ப் பெருகி ஒளிர்கின்றன. சீவ அமுதங்களைத் தோய்ந்து யாவரிடமும் இதமாய் ஒழுகித் திவ்விய நிலைகளை எய்துக.

---

543. எண்சாண் உடம்பாய் இனிய மனிதனென
மண்காண வந்து மகிழ்கின்றாய்—கண்காணும்
காட்சி பலவும் கருதி விநயமுறின்
மாட்சி மருவும் மதி. (௩)

இ—ள்

அரிய மனித உருவை மருவி இவ்வுலகில் வந்து உலாவி மகிழ்கின்றாய்; உன் கண் எதிரே காணுகின்ற பொருள்களைக் கருதி யுணர்ந்து உறுதி நலங்களை ஓர்ந்து விநயமாய் ஒழுகிவரின் மிகுதியான மகிமைகள் பெருகி வரும் என்பதாம்.

தன் கைக்கு எட்டுச் சாண் அளவே ஒவ்வொரு மனிதனுடைய உடல் உயரம் அமைந்திருக்கிறது. நாலு முழ மனிதன் என்பது உலக வழக்கு. இந்த உடம்பில் இணைந்துள்ள அற்புத நுட்பங்கள் அளவிடலரியன. அண்டத்தைப் போலவே பிண்டமும் அறிய அரிய அதிசய நிலையில் மருவி யுள்ளது.

தோல், எலும்பு, தசை, நரம்பு, இரத்தம் முதலிய தாதுக்களால் அமைந்ததாயினும் எண்ணிறந்த நுண்ணிய அணுக்கள் உடம்பில் இடங்கொண்டுள்ளன.

உடலின் கூறுகளைப் பகுத்து அறிந்த மருத்துவர் எலும்புகளின் எண்ணம், குடலின் நீளம், தசைகளின் கனம், ஈரல் மூளைகளின் நிறை முதலியவற்றை ஓரளவு உரைத்திருப்பினும் உணர முடியாத நுண்மைகள் பல இருத்தலை வியந்து நிற்கின்றனர். அற்புத யந்திரமாய் அதிசயம் நிறைந்துள்ளது.

அரிய உயிர்க்கு உரிய இடமாயுள்ளமையால் உடல் ஆன்ம ஆலயம் என மேன்மை மிகப் பெற்றது. சீவப் பறவை குடியிருப்பது ஆதலால் குடம்பை, குடில், வீடு என உடம்பை அழைத்து வருகின்றனர். சின்ன ஒரு கூறை வீடாகக் கவிகள் வருணித்துள்ளனர்.

கால்இரண்டு நிறுத்தி மேலிரு கைபிணைத்து ஒருபுற எலும்
பால்இணக்கி முகட்டு மேல்வளை யடர் நரம்புஎனும்ஆக்கையால்
கோலியிட்ட பழுக்கழிக்கு ஒரு குறைவுறாமல் வரிந்து மேல்
தோலிணக்கிய கற்றை வேய்ந்துயர் சுவர்புலால் கொடிபற்றியே

வந்து போக இரண்டு வாசல் வகுத்து மற்றெழு சாளரம்
தந்து சாக்கிர மாதி ஈரிரு தளம் எடுத்து அதன்மேல் மலர்க்
கொந்துலாவிய மாமுடிக்கன கும்பம் வைத்து அவிர்கூந்தலா
முந்து நீள்கொடி மாடநாலு முகக்கண் மாளிகை முற்றினன். (2)

(மெய்ஞ்ஞான விளக்கம்)

சீவன் குடியிருப்பாக மேவியுள்ள குடிலை இதில் கூர்ந்து பார்க்கிறோம். முன் வாசல், பின் வாசல், சன்னல்கள் முதலிய வசதிகளையெல்லாம் உருவகத்தில் கண்டு உவந்து கொள்கிறோம்.

இன்னவாறு அமைந்த இந்தச் சின்ன இன்னல் வீட்டில் குடி புகுந்த சீவன் அந்தப் பெரிய பேரின்ப வீட்டை அடைந்து கொள்ள மறந்து போனமையால் மாறி மாறிப் பிறந்து திரிந்து அலைந்து வருகிறான். மாயப் பிறவியில் சிக்கிக் காயச் சிறையில் அகப்பட்டுக் கிடக்கிற அவல நிலையைக் கருதியுணர்ந்தபோது மகான்கள் உருகி வருந்தி உய்தி நாட நேர்கின்றனர். அந்த ஞான நாட்டம் நோய்ந்தவுடன் இந்த ஊன வீட்டை வெறுத்து உயர்ந்த ஆனந்த வீட்டை விழைந்து நிற்கின்றனர்.

“தோல்எலும்பு சீநரம்பு பீளைதுன்று கோழைபொங்கு
சோரிபிண்ட மாயுருண்டு வடிவான
தூலபங்க காயம்வம்பி லேசுமந்து நான்மெலிந்து
சோரும்இந்த நோயகன்று துயர்ஆற
ஆலமுண்ட கோனகண்ட லோகமுண்ட மால்விரிஞ்சன்
ஆரணங்கள் ஆகமங்கள் புகழ்தாளும்
ஆனனங்கள் மூவிரண்டும் ஆறிரண்டு தோளும்அங்கை
ஆடல்வென்றி வேலும்என்று நினைவேனோ?”

(திருப்புகழ்)

அருணகிரிநாதர் இவ்வாறு இறைவனைக் கருதி உருகியிருக்கிறார்.

"காகமொடு கழுகு அலகை நாய்நரிகள்
சுற்று சோறிடு துருத்தியைக்
காலிரண்டு நவ வாசல் பெற்றுவளர்
காமவேள் நடன சாலையை
மோகஆசைமுறி இட்ட பெட்டியை
மூமலம் மிகுந்தொழுகு கேணியை
மொய்த்து வெங்கிருமி தத்து கும்பியை
முடங்க லார்கிடை சரக்கினை
மாக இந்திர தனு மின்னை ஒத்திலக
வேதம் ஓதிய குலாலனார்
வனைய வெய்யதடி காரனை யமன்
வந்தடிக்கும் ஒரு மட்கலத்
தேக மாய பொய்யை மெய்யெனக் கருதி
ஐய வையமிசை வாடவோ?
தெரிவதற் கரிய பிரமமே அமல
சிற்சு கோதய விலாசமே." (தாயுமானவர்)

தேகச்சிறையை நீங்கி இறைவனோடு ஏகநிலையை அடையத் தாயுமானவர் இப்படி இரங்கி ஏங்கியிருக்கிறார்.

"ஐவர் கலகமிட்டு அலைக்கும் கானகம்
சலமலப் பேழை இருவினைப் பெட்டகம்
வாத பித்தம் கோழை புகுங் குடி
ஊத்தைப் புன்தோல் உதிரக் கட்டளை
நாற்றப் பாண்டம் நான்முழத்து ஒன்பது
பீற்றல் துண்டம் பேய்ச்சுரைத் தோட்டம்
அடலைப் பெரிய சுடலைத் திடருள்
ஆசைக் கயிற்றில் ஆடும் பம்பரம்
ஓயா நோய்க்கிடம் ஓடு மரக்கலம்
மாயா விகார மரண பஞ்சரம்
சோற்றுத் துருத்தி தூற்றும் பத்தம்
காற்றில் பறக்கும் கானப் பட்டம்
விதிவழித் தருமன் வெட்டும் கட்டை
சதுர்முகப் பாணன் தைக்கும் சட்டை
ஈமக் கனலில் இடுசில விருந்து

காமக் கனலில் கருகும் சருகு
கிருமி கிண்டும் கிழங்கருஞ் சருமி
பவக்கொழுந் தேறும் கவைக்கொழுங் கொம்பு
மணமாய் நடக்கும் வடிவின் முடிவில்
பிணமாய்க் கிடக்கும் பிண்டம் பிணமேல்
ஊரில் கிடக்க ஒட்டா உபாதி
காலெதிர் குவித்த பூளை காலைக்
கதிரெதிர்ப் பட்ட கடும்பனிக் கூட்டம்
அந்தரத்து இயங்கும் இந்திர சாபம்
அதிரு மேகத்து உருவின் அருநிழல்
நீரில் குமிழி நீர்மேல் எழுத்து
கண்துயில் கனவில் கண்ட காட்சி
அதனிலும் பொல்லா மாயக் களங்கம்
அமையும் அமையும் பிரானே! அமையும்;
இமய வல்லி வாழி என்று ஏத்த
ஆனந்தத் தாண்டவம் காட்டி
ஆண்டுகொண் டருள்கை நின் அருளினுக்கு அழகே."

(பட்டினத்தார்)

உடம்பின் நிலையைப் பல வகையிலும் குறித்துக் காட்டிப் பிறவி நீங்கி உய்யப் பரமனை நோக்கிப் பட்டினத்தார் இவ்வாறு பரிந்திருக்கிருர்.

மனிதன் என மண் காண வந்து மகிழ்கின்ருய்.

என்றது தனது உண்மை நிலையை உணர்ந்து தெளிய வந்தது. உருவம் பெயர்களை மருவியுள்ளவன் அவற்றை ஒருவி உயிரின் உரிமையைத் தெளிந்து கொள்ளின் உயர் கதியை அடைகிருன். மெய் நிலை தெரிவது மெய்யறிவாய் உய்வு தருகிறது.

எண் சாண் உடம்பு என்று சுட்டிச் சொன்னது ஒட்டியிருக்கும் கூட்டின் பட்டிமை தெரிந்து உயிர்க்கு உய்தி காண வேண்டும் என்பது கருதி. உண்மை தெரியின் உள்ளச் செருக்கு ஒழிந்து யாண்டும் பணிவாய் மனிதன் நன்மை நாட நேர்கிருன்.

"கற்றதுகைம் மண்ணளவு; கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை ஓதுகிருள்---மெத்த
வெறும் பந்தயம்கூற வேண்டாம் புலவீர்!
எறும்பும் தன்கையால் எண்சாண்." (ஔவையார்)

மனிதன் கருவம் கொள்ளாமல் விநயமாய் அடங்கி இனிது ஒழுக வேண்டும் என ஔவையார் இவ்வாறு உணர்த்தி யிருக்கிறார். உண்மை யுணர நன்மை யுறுகிறது.

நயம் என்பது தருமம், நீதி, ஊதியம் முதலிய நலங்களை உணர்த்தி வரும். அந்த நன்மைகள் யாவும் பெருகி வரும்படி இனிய தன்மையுடைப் பணிவோடு ஒழுகி வருவது விநயம் என வந்தது. விசேடமான நயங்களையுடையது விநயம் என்க.

விநயம் ஒரு தெய்வ சம்பத்து; அதனை மருவி மகிமை பெறுக.

---

544. துளிநீர் மனிதனாய்த் தோன்றலால் அந்த
ஒளிநீர் அருமை யுணர்ந்து---தெளிநீர்மை
கொண்டுநீ பேணிவரின் கோடி தவமுன்பால்
மண்டி வருமே மகிழ்ந்து. (௪)

இ—ள்

ஒரு துளி நீர் உயர்ந்த மனிதனாய் உருவாகி வருகிறது. ஒளி நிறைந்த அந்த அதிசய நீர்மையை உணர்ந்து அதனை இனிது பேணிவரின் அரிய பெரிய தவங்களை அது அருளி வரும் என்க.

மனிதனுடைய உருவத்தோற்றம் அரிய அதிசயமுடையது. கண்ணுக்குத் தெரியாத நுணுகிய அணுக்களிலிருந்து விண்ணுற ஓங்கி நிற்கும் பெரிய காட்சிகளைக் காட்டியருளுவது இயற்கைச் சத்தியின் விசித்திர வேலையாய் இருக்கிறது.

எத்தகைய அறிவாலும் அளந்து காண முடியாத வித்தக விநோதங்கள் எங்கும் விரிந்து நிற்கின்றன. பழகி வருகிற பழக்கங்களினால் அந் நிலைகளை வியந்து காணாமல் எவரும் அயர்ந்து போகின்றனர். உலகில் காணுவதினும் உடலில் காண வுரிய அதிசயங்கள் பல உள.

துளி நீர் மனிதன் ஆய்த் தோன்றலால்.

என்றது மனிதன் தோன்றியுள்ள கருமூலத்தைக் கருதி யுணர வந்தது. அரசன் கவிஞன் ஞானி என உயர்ந்த கீர்த்தி களில் ஓங்கியுள்ளவர் எல்லாரும் பிறந்து வந்திருக்கும் மருமத் தை அறிந்து சிந்திப்பின் பரிந்து தெளிவர்.

துளி நீர் என்றது சுக்கிலத்தை. வெண்மை நிறமுடையது ஆதலின் இப்பெயர் வந்தது. விந்து, பிந்து, இந்திரியம் எனவும் வழங்கப்படும். துளி என அளவு கூறியது உளவினை ஓர்ந்து தெளிய.

இந்த ஒரு துளி வெள்ளைநீர் ஆணிடமிருந்து வெளிப்பட்டுப் பெண்ணிடம் பாய்ந்து அங்கே செந்நீரோடு தோய்ந்து பத்து மாதம் வயிற்றிலிருந்து வடிவம் திரண்டு முடிவில் பிள்ளையாய்ப் பிறந்து வெளி வருகிறது.

புள்ளிநீர் வீழ்ந்தது பெருகிப் புன்புலால்
உள்வளர்ந்து ஒருவழித் தோன்றிப் பேரறம்
உள்குமேல் முழுப்புலால் குரம்பை யுய்ந்துபோய்
வெள்ளநீர் இன்பமே விளைக்கும் என்பவே. (1)

பாற்றுளிப் பவளநீர் பெருகி ஊன்திரண்டு
ஊற்றுநீர்க் குறும்புழை உய்ந்து போந்தபின்
சேற்றுநீர்க் குழியுளே அழுந்திச் செல்கதிக்கு
ஆற்றுணப் பெருதழுது அலறி வீழுமே. (2)

(சீவக சிந்தாமணி)

துளி அளவு சுக்கிலத்தால் மனிதன் தோன்றுகிறான்; அங்ஙனம் தோன்றினவன் நெறியுடையனாய்த் தருமம் தழுவி ஒழுகின் மறு பிறவியின்றிப் பேரின்ப நிலையை அடைகிறான்; அவ்வாறு ஒழுகாமல் பழி வழியில் இழியின் நரக துன்பத்தில் வீழ்கிறான் என இவை உணர்த்தியுள்ளன. பால் துளி, பவள நீர் என்றது சுக்கில சுரோணிதங்களை. ஒருவழித் தோன்றி என்றது முன்பு போன வழியே பின்பு மீண்டு வந்து என மனிதன் ஈண்டு வந்திருக்கும் நிலையை எண்ணியறிய வந்தது.

கருவிலிருந்து பிறந்து வளர்ந்து வாழ்ந்து மனிதன் மாய்ந்து வருகிற நிலைகளைப் படம் வரைந்து காட்டியது போல் பட்டினத்தார் பாடியிருக்கிறார். உடல் வண்ணம் என்னும் பெயரால் வந்துள்ள அந்தப் பாசுரம் அயலே வருகிறது.

ஒரு மட மாதும் ஒருவனும் ஆகி
இன்ப சுகந்தரும் அன்பு பொருந்தி
உணர்வு கலங்கி ஒழுகிய விந்து
ஊறு சுரோணிதம் மீது கலந்து,
பனியில் ஓர் பாதி சிறு துளி மாது

பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதும அரும்பு கமடம் இதென்று
பார்வைமெய் வாய்செவி கால்கைகள் என்ற,
உருவமும் ஆகி உயிர்வளர் மாதம்
ஒன்பதும் ஒன்றும் நிறைந்து மடந்தை
உதரம் அகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமும் நாளும் அறிந்து
மகளிர்கள் சேனை தரஅணை யாடை
மண்பட உந்தி உதைந்து கவிழ்ந்து
மடமயில் கொங்கை அமுதம் அருந்தி
ஓரறிவு ஈரறிவு ஆகி வளர்ந்து
ஒளிநகை யூரல் இதழ்மட வாரும்
உவந்து முகந்திட வந்து தவழ்ந்து
மடியில் இருந்து மதலை மொழிந்து
வாஇரு போஎன நாமம் விளம்ப
உடைமணி ஆடை அரைவடம் ஆட
உண்பவர் தின்பவர் தங்களொடு உண்டு
தெருவி லிருந்து புழுதி அளைந்து
தேடிய பாலரொடு ஓடி நடந்து
அஞ்சுவய தாகி விளையாடியே; (வ)

உயர்தரு ஞான குருவுப தேச
முந்தமிழின் கலை யுங்கரை கண்டு
வளர்பிறை என்று பலரும் விளம்ப
வாழ்பதி னாறு பிராயமும் வந்து
மயிர்முடி கோதி அறுபத நீல
வண்டிமிர் தண்தொடை கொண்டை புனைந்து
மணிபொன் இலங்கு பணிகள் அணிந்து
மாகதர் போகதர் கூடி வணங்க
மதன சொரூபன் இவன்என மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரிவிழி கொண்டு சுழிய எறிந்து
மாமயில் போல்பவர் போர்வது கண்டு
மனது பொறாமல் அவர்பிறகு ஓடி
மங்கல செங்கல சந்திகள் கொங்கை

மருவ மயங்கி இதழமுது உண்டு
தேடிய மாமுதல் சேர வழங்கி
ஒருமுதல் ஆகி முதுபொரு ளாகி
இருந்த தனங்களும் வம்பில் இழந்து
மதன சுகந்த விதனம் இதென்று
வாலிப கோலமும் வேறு பிரிந்து
வளமையும் மாறி இளமையும் மாறி
வன்பல் விழுந்து இருகண்கள் இருண்டு
வயது முதிர்ந்து நரைதிரை வந்து
வாத விரோத குரோதம் அடைந்து
செங்கையினில் ஓர்தடியும் ஆகியே; (இ)

வருவது போவது ஒருமுது கூனு
மந்தி எனும்படி குந்தி நடந்து
மதியும் அழிந்து செவிதிமிர் வந்து
வாய் அறியாமல் விடாமல் மொழிந்து
துயில்வரு நேரம் இருமல் பொருது
தொண்டையும் நெஞ்சும் உலர்ந்து வறண்டு
துகிலும் இழந்து சுணையும் இழந்து
தோகையர் பாலர்கள் கோரணி கொண்டு
கலியுக மீதில் இவர்மரி யாதை
கண்டிடும் என்பவர் சஞ்சல மிஞ்ச
கலகல என்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சார நடந்து
தெளிவும் இராமல் உரைதடு மாறி
சிந்தையும் நெஞ்சும் உலைந்து மருண்டு
திடமும் உலைந்து மிகவும் மலைந்து
தேறிநல் ஆதர வேதர நொந்து
மறையவன் வேதன் எழுதிய வாறு
வந்தது கண்டமும் என்று தெளிந்து
இனிஎன பந்தம் இனிஎன தொந்தம்
மேதினி வாழ்வு நிலாது இனிநின்ற
கடன்முறை பேசும் எனவுரை நாவும்
இறங்கி விழுந்துகை கொண்டு மொழிந்து
கடைவழி கஞ்சி ஒழுகிட வந்து

பூதமும் நாலு சுவாசமும் நின்று
  நெஞ்சு தடுமாறி வரு நேரமே; (ரு)

வளர்பிறை போல எயிறும் உரோமமும்
வன்சடையும் சிறு குஞ்சியும் விஞ்ச
மனதும் இருண்ட வடிவும் இலங்க
மாமலைபோல் யம தூதர்கள் வந்து
வலைகொடு வீசி உயிர்கொடு போக
மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கின ரேயிவர் கால மறிந்து
பழையவர் காணும் எனும் அயலார்கள்
பஞ்சு பறந்திட நின்றவர் பந்தர்
இடுமென வந்து பறையிட முந்த
வேபிணம் வேக விசாரியும் என்று
பலரையும் ஏவி முதியவர் தாமே
இருந்த சவம்கழுவும் சிலர் என்று
மறுதுகில் தொங்கல் களபம் அணிந்து
பாவகமே செய்து நாறும் உடம்பை
வரிசை கெடாமல் எடுமென ஓடி
வந்திள மைந்தர் குனிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலை அடைந்து
மானிட வாழ்வுஎன வாழ்வு? என நொந்து
விறகிடை மூடி அழல்கொடு போட
வெந்து விழுந்து முறிந்து நிணங்கள்
உருகி எலும்பு கருகி அடங்கி
ஓர்பிடி நீறும் இலாத உடம்பை
  நம்பும் அடியேனை இனி ஆளுமே. (சு)

(பட்டினத்தார்)

மனித வாழ்வின் நிலைமையை வகையாக எடுத்துக் கூறித் தன்னைப் பிறவியிலிருந்து நீக்கி யருளும்படி இறைவனை நோக்கி பட்டினத்து அடிகள் இவ்வாறு உருகி வேண்டி யிருக்கிறார்.

ஒரு சிறு துளியிலிருந்து தோன்றிப் பெரிய மனிதன் என வாழ்ந்து முடிவில் ஒரு பிடி நீறும் இல்லாமல் ஒழிந்து போகின்ற

மாய வாழ்வைத் தெளிந்து கொண்டால் எவரும் உய்தி நிலையை விரைந்து கொள்வர்.

மனித வாழ்வைப் படம் பிடித்து அருணகிரி நாதரும் இவ்வகையில் காட்டியுள்ளார். மாயப் படங்களைக் கண்டு களித்துத் தீய பழக்கங்களைப் பெருக்கி வருகிற மக்கள் இந்தத் தூய படத்தைச் சிறிதேனும் கருதிக் காண வேண்டும். அறிவுக் கண்ணுடையவர் உரிமையோடு கருதிக் காணுவர் என்னும் உறுதியால் அதனையும் ஈண்டு வரைய நேர்ந்தேன். கொஞ்சம் நீண்டதாயினும் முழுதும் நெஞ்சில் பூண்டு கொள்ள வுரியது.

அறுகுநுனி பனிஅனைய சிறியதுளி பெரியதுஒரு
  ஆகம் ஆகிஓர் பாலரூபமாய்
அருமதலை குதலைமொழி தனிலுருகி அவருடைய
  ஆயி தாதைபார் மாய மோகமாய்
அருமையினில் அருமையிட மொளுமொளென உடல்வளர
  ஆளு மேளமாய் வாலரூபமாய் அவர்ஒருபெரியோராய்,
அழகுபெறு நடையடைய கிறுதுபடு மொழிபழகி
  ஆவி யாயஓர் தேவி மாருமாய்
விழிசுவறும் அரிவையர்கள் படுகுழியை நிலைமைஎன
  வீடு வாசலாய் மாட கூடமாய்
அணுவளவு தவிடுமிகள் பிதிரவிட மனம்இறுகி
  ஆசையாளராய் ஊசிவாசியாய் அவியுறு சுடர்போலே
வெறுமிடியன் ஒருதவசி அமுதுபடை எனுமளவில்
  மேலை வீடுகேள் கீழை வீடுகேள்
திடுதிடென நுழைவதன்முன் எதிர்முடுகி அவர்களொடு
  சீறி ஞாளிபோல் ஏறி வீழ்வதாய்
விரகினொடு வருபொருள்கள் சுவறியிட மொழியும்ஒரு
  வீணியார் சொலே மேலதாயிட விதிதனைநினையாதே
மினுகுமினு கெனும் உடலமறமுறுகி நெகிழ்வுறவும்
  வீணர் சேவையே பூணு பாவியாய்
மறுமையுள தெனுமவரை விடும்விழலை யதனின்வரு
  வார்கள் போகுவார் காணு மோவென
விடுதுறவு பெரியவரை மறையவரை வெடுவெடென
  மேளமே சொலாய் ஆளிவாயராய் மிடையுறவருநாளில்

வறுமைகளும் முடிவிவர உறுபொருளும் நழுவசில
வாதம் ஊதுகா மாலை சோகைநோய்
பெருவயிறு வயிறுவலி படுவன்வர இருவிழிகள்
பீளை சாறிடா ஈளை மேலிடா
வழவழென உமிழுமது கொழகொழென ஒழுகிவிழ
வாடியூனெலாம் நாடிபேதமாய் மனையவள் மனம்வேறாய்
மறுகமனை யுறுமவர்கள் நணுகுநணு கெனுமளவில்
மாதர் சீயெனா வாலர் சீயெனா
கனவுதனில் இரதமொடு குதிரைவர நெடியசுடு
காடு வாவெனா வீடுபோவெனா
வலதழிய விரகழிய உரைகுழறி விழிசொருகி
வாயுமேலிடா ஆவிபோகுநாள் மனிதர்கள் பலபேச
இறுதியதொ டறுதியென உறவின்முறை கதறியழ
ஏழை மாதராள் மோதி மேல் விழா
எனதுடைமை எனதடிமை எனுமறிவு சிறிதுமற
ஈமொ லேலெனா வாயை ஆவெனா
இடுகுபறை சிறுபறைகள் திமிலையொடு தவிலறைய
ஈமதேசமே பேய்கள்சூழ்வதாய் எரிதனில் இடும்வாழ்வே
இணையடிகள் பரவும்உனது அடியவர்கள் பெறுவதும்
ஏசிடார்களோ பாச நாசனே
இருவினையும் மலமுமற இறவியொடு பிறவியற
ஏக போகமாய் நீயும் நானுமாய்
இறுகும்வகை பரமசுக மதனையருள் இடைமருதில்
ஏக நாயகா! லோகநாயகா! இமையவர் பெருமாளே!

(திருப்புகழ் 107)

பிறவி நிலைகளை வரிசையாக விரித்து உரைத்து அந்தத் துயரங்கள் மருவாமல் தனக்கு அருள் புரியும்படி முருகப்பெருமானிடம் அருணகிரிநாதர் இங்ஙனம் உரிமையோடு வேண்டியுள்ளார். நீயும் நானுமாய் ஏகபோகமாய் இறுகும் வகை பரமசுகம் அருள் என்ற பரமான்ம அனுபவம் பரவச நிலையில் ஊன்றியுணர வுரியது. இறைவனோடு தோய்ந்து அதிசய ஆனந்தத்தை எவ்வழியும் நுகர்ந்து திளைத்திருக்கிற அந்தத் திவ்விய நிலையை இழந்து வெவ்விய பிறவித்துயரில் சீவர்கள் வீழ்ந்து தவித்து ஆழ்ந்து அலமந்து வருவது கொடிய பரிதாபமாய் நெடிது நீண்டுள்ளது.

உண்மை தெளிந்த ஞானிகள் உறுதி நலங்களை உலகம் நல முறப் போதித்துப் போகின்றனர். பெரியவர்களுடைய அனுபவ மொழிகள் விழுமிய சீவ ஒளிகளாய் அரியபயன்களை அருளி வருகின்றன.

ஈசனோடு எதிரே வாசி பேசவுரிய பரிபூரண மனிதனை ஒரு துளி விந்து தந்தருளுதலால் அந்த அதிசய கருவூலத்தை எவ்வளவு உரிமையோடு பாதுகாத்து வரவேண்டும் என்பதை யாவரும் செவ்வையாக அறிந்து கொள்ள வேண்டும்.

இருநூறு துளி இரத்தத்தின் சாரம் ஒரு துளி விந்துள் உறைந்திருக்கிறது. அதனை இனிது பாதுகாத்து வருபவன் புனித மேதையாய்ப் பொலிந்து திகழ்கிறான். பாதுகாவாமல் இழந்து விடுபவன் இழிந்து படுகிறான்.

“இரண்டு அடக்கோம்; ஒன்றை விடோம்.” என்றது ஆயுள் வேதம். மல சலங்களை உள்ளே அடக்கி வையாதே; இந்திரியத்தை வெளியே விடாதே என இது போதித்துள்ளது. ஒன்று என்று விந்தைச் சுட்டியிருப்பது உய்த்துணரவுரியது. எல்லா வன்மைகளுக்கும் மூல முதலாய், ஒப்பற்ற திருவாய் உறைந்திருப்பது என அதன் அற்புத நிலையை இங்ஙனம் அறிவித் தருளினர். அரிய திருவை இழந்து வறியனாயிழிந்து படுவது பரிதாபமாகிறது.

விந்து விட்டான் நொந்து கெட்டான் என்னும் பழமொழி மனிதனது சீவிய சத்தைத் தெளிவுறுத்தியுள்ளது.

“பெறுவது என்னைகொல் சுக்கிலம் கலித்தலால்
பெருந்தவ வலி குன்றும்;
உறுவது அவ்வளவோ பின்னை நீவிரும்பு
உடற்கும் ஆனியது உண்டால்.” (வைராக்கியசதகம்)

விந்து கழியின், தவம் அழியும்; நோய் விளையும் என்றதனால் அது கழியாதிருப்பின் உளவாம் உறுதி நலங்கள் தெளிவாய் நின்றன. அரிய தவசி, பெரிய துறவி, ஞான முனிவன் என உயர்ந்துள்ளவர் எவரும் இந்திரியத்தை அடக்கியே இசை பெற்றிருக்கின்றனர். பிரமச்சரிய விரதத்தையுடையவன் உலகத்தை எளிதாக வென்று விடுகிறான். அனுமானுடைய மகிமை முழுவதுக்கும் மூலகாரணம் இந்த விழுமிய விரதமேயாம்.

"நெறி நின்று பொறிகள் ஐந்தும் வென்றவன்." (இராமாயணம்)

என அந்த வீரன் பெற்றிருக்கிற வெற்றிப் பேர் எத்துணை மகிமையுடையது! ஜிதேந்திரியன் ஆன அவனை இந்திராதி தேவர்களும் வியந்து போற்றியிருக்கின்றனர். அதிசய பேதை என யாவராலும் துதி செய்யப் பெற்றுள்ளான்.

"He was perfect master of the senses and wonderfully sagacious." (Vivekananda)

"அவன் இந்திரியங்களை முற்றும் வென்றவன்; அதிசய மதியூகி" என அனுமானைக் குறித்து விவேகானந்தர் இவ்வாறு வியந்து கூறியிருக்கிறார். அவனது விரதசீலமும், விநயமும் விவேகமும் கருதியுணருந்தோறும் அரிய உறுதி நலங்களை உதவி வருகின்றன. இச்சையை அடக்கினவன் உச்ச நிலையில் ஒளி செய்து மிளிர்கிறான். அறிவும் ஆற்றலும் அவனிடம் பெருகி நிற்கின்றன.

கோடி தவம் உன்பால் மண்டி வரும்.

காம இச்சையை அடக்கி இந்திரியத்தைப் பேணி வருதலால் விளையும் பெரு மகிமையை இது காண வந்தது.

விந்து சீவதாது; அதனைப் பேணி வரும் அளவு ஆன்மசத்தி பெருகி அற்புத நிலைகள் விளைந்து அதிசயம் மருவி வரும் என்க.

துளியின் ஒளியை விழியூன்றித் தெளிக.

---

545. மூச்சு நிலையை முதலறிந்து மூலமாம்
பேச்சு நிலையைப் பெரிதுணர்ந்து—பூட்சிநிலை
ஓர்ந்து கருதி ஒழுகின் உயிர்க்குறுதி
சேர்ந்து பெருகும் சிறந்து. (ரு)

இ—ள்

உள்ளிருந்து வெளிவருகிற மூச்சையும் பேச்சையும் பெரிதும் போற்றி உடல் நிலையை ஓர்ந்து பாதுகாத்து ஒழுகி வருக; அதனால் உயிர்க்கு உயர்ந்த நலங்கள் உளவாம் என்பதாம்.

இது மூச்சும் பேச்சும் அறிக என்கின்றது.

உயிர் உடலில் வாழ்ந்து வரும் நிலையைக் கருதி புணரின் அது ஒரு பெரிய அதிசய வியப்பாம். ஆன்மா, சீவன், பிராணன் என இன்னவாறு பேசி வருவது எதை? அது என்ன உருவில் உள்ளது? எனின், இக் கேள்விகளுக்கு எளிதில் பதில் சொல் லுவது அரிது.

மூக்கிலிருந்து வெளி வருகிற மூச்சைக் கொண்டு உயிர் உள்ளது என்னும் பேச்சு வழங்கி வருகிறது. உயிர்ப்பு என்று மூச்சுக்கு ஒரு பெயர். உயிரை யுடையது, உயிர்க் காற்று என் னும் பொருள்களை அது உணர்த்தி யுள்ளது. உயிராதாரமாய் நின்று உடலில் உலாவி வருகிற அதன் நிலையை இதனல் உணர்ந்து கொள்ளலாம்.

தன்னை அறிய நேர்ந்த மகான்கள் முன்னதாக இந்த மூச்சு நிலையை அறிந்து கொள்ளுகின்றனர். **மூச்சை அறிந்தான் முடிவை அறிந்தான்** என்பது பழமொழி. அதன் அதிசய நிலைமை யையும் தலைமையையும் இம் முது மொழி மதி தெளியச் செய் துள்ளது.

தன் நாசியிலிருந்து வெளிவருகிற சுவாசத்தில் கருத்தைச் செலுத்தி அதனேடு பழகி வருபவன் நாளடைவில் விழுமிய ஆன்ம தரிசனம் செய்தவனுகிருன். ஆகவே அவன் ஈசனேடு வாசி பேச நேர்கின்ருன்.

சரநிலை, பிராணயாமம், இராசயோகம் என மேலான நிலை களில் பேசி வருவன எல்லாம் மூச்சை நோக்கிச் செய்யும் தவ ஒழுக்கங்களேயாம்.

மனம் ஓயாமல் அலையும் இயல்பினது. மூச்சை ஒழுங்காக வசப்படுத்தின் மனம் அங்கே எளிதாய் வசப்பட்டு நிற்கும். மனத்தை அடக்கி யருளுதலால் சுவாசத்தை மான வீரன் என ஞான தீரர் கூறி வருகின்றனர்.

கடிவாளத்தில் குதிரை அடங்கி நிற்றல்போல் சுவாசத்தில் மனம் அடங்கி நிற்கிறது. அந்நிலை **யோகம்** ஆகிறது; ஆகவே அதனை யுடையவர் யோகிகள் ஆகின்றனர்.

மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகளுக் கும் மூலமுதலாயுள்ள மனம் இனிமையாய் அடங்கவே அங்கே

மேலான இன்பம் தனியே விளைந்து வருகிறது. அந்த ஆனந்த போகம் பிராணயாமத்தால் அமைந்து வருதலால் இது ஞான யோகமாய் விளங்கி நிற்கின்றது.

"ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன்
உய்யக்கொண்டு ஏறும் குதிரைமற்று ஒன்றுண்டு
மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்கும் கொடாதுபோய்ப்
பொய்யரைத் துள்ளி விழுத்திடும் தானே. (1)

புள்ளினு மிக்க புரவியை மேற்கண்டால்
கள்ளுண்ண வேண்டாம் தானே களிதரும்;
துள்ளி நடப்பிக்கும் சோம்பு தவிர்ப்பிக்கும்
உள்ளது சொன்னோம் உணர்வுடை யோருக்கே. (2)

வளியினை வாங்கி வயத்தில் அடக்கில்
பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்;
தெளியக் குருவின் திருவருள் பெற்றால்
வளியினும் வேட்டு வளியனு மாமே. (3)

ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை;
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை உதைக்கும் குறியது வாமே. (4)

நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை; மனைக்கும் அழிவில்லை;
ஓட்டமும் இல்லை; உணர்வில்லை; தானில்லை;
தேட்டமும் இல்லை; சிவன்அவன் ஆமே." (5)

(திருமந்திரம்)

நாசியிலிருந்து வெளிவருகிற சுவாச நிலையைக் கருதி யுணர்ந்து அதனோடு மனத்தை இணைத்துப் பிணைத்து இனிது லயப்படுத்திப் புனிதமான ஆத்தும ஆனந்தத்தை அனுபவிக்கிற யோக நீர்மைகளைத் திருமூலர் இங்ஙனம் குறித்திருக்கிறார். குறிப்புகள் கூர்ந்து உணர்ந்து ஓர்ந்து அனுபவிக்க வுரியன.

உயிரின் உயிர்ப்பா யுள்ளமையால் மூச்சு பிராணவாயு என வந்தது. வலது நாசி வழியாயும், இடது நாசி வழியாயும் மாறி மாறி ஓயாமல் இது ஓடிக்கொண்டே யிருக்கிறது. ஒரு விநா

டிக்கு ஆறு மூச்சுகள் நேருகின்றன. ஒரு நாழிகைக்கு முந்நூற்று அறுபது சுவாசங்கள் நிகழ்தலால் ஒரு நாளைக்கு 21600 ஆகின்றன. மூக்கிலிருந்து வெளிவருகிற சுவாசம் பன்னிரண்டு அங்குலம் நீண்டு செல்லுகிறது; மீண்டு உள்ளே திரும்பும் பொழுது எட்டு அங்குலமே சேருகிறது. இந்தக் கழிவுதான் ஆயுள் அழிவாய் அமைகிறது. சீவ ஆவியாயுள்ள இதனை யோகிகள் நன்கு பேணி வருதலால் நலம்பல பெறுகின்றனர்.

நயந்து சமாதியில் இயங்கும் பன்னிரண்டு அங்குலிதான்
நடந்திடில் ஈரெட்டுவிரல் இயங்கியிடும்; நவையார்
துயங்கவிரைந்து ஓடிடில் ஐயாறுவிரல் இயங்கும்;
துயிலுறில் எண்ணைந்து விரற்கிடையுடல் விட்டு அகலும்;
தயங்கியவேல் விழியாரை முயங்கியிடும் பொழுதில்
தரியாது எண்ணெண்விரலின் அளவுயிர்விட் டியங்கும்;
பயங்கொளிடை பிங்கலைகள் ஒருவழிப் பட்டிடவே
பரிந்தநற் குண்டலியோகம் பொருந்திடுமங் குறவே.
(சிவஞானதீபம்)

இன்ன இன்ன வகையில் சுவாசங்கள் இவ்வளவு கழிவாம் என இது உணர்த்தியுள்ளது. உயிராதாரமான உயிர்ப்பை உரிமையோடு பேணி வருபவர் உயர்ந்த உறுதி நலங்களை அடைந்து மகிழ்கின்றனர்.

"வாயு நிற்ப மனம்நின்று, மனந்தான் நிற்பப் பொறிநின்று,
பாய பொறிகள் நிற்பஇடர் படுபுன் புலன்கள் நின்றனவால்
ஆய புலன்கள் நின்றமையால் அகிலம் தோன்றுது உள்ளத்தே
தூய பரமானந்த பரஞ் சோதி தோன்றக் கண்டிருந்தார்."
(பிரபுலிங்க லீலை)

வாசியைக் கைக்கொண்டு ஈசனைக் கண்டுள்ளவர்களை இது காட்டியிருக்கிறது. உயிர்ப்பின் வழியே சென்றவர் உயிரை உயர்த்தி உயர் பேரின்பம் எய்துகின்றனர். பந்தம் நீங்கிச் சொந்த ஆன்மாவை அடைந்து கொள்ளுதலால் பெரியோர் இதனைப் பிறவிப் பேறாகக் கருதுகின்றனர். இந்தப் பேற்றை இழந்திருப்பது பெரிய பேதைமையாக மறுகியுள்ளனர்.

"ஆணிலே பெண்ணிலே என்போல ஒருபேதை
அகிலத்தின் மிசை யுள்ளதோ?

ஆடிய கறங்குபோல் ஓடியுழல் சிந்தையை
அடக்கி ஒரு கணமேனும் யான்
காணிலேன் திருவருளை அல்லாது மௌனியாய்க்
கண்மூடி ஓடு மூச்சைக்
கட்டிக் கலாமதியை முட்டவே மூலவெங்
கனலினை எழுப்ப நினைவும்
பூணிலேன் இற்றைநாட் கற்றதும் கேட்டதும்
போக்கிலே போக விட்டுப்
பொய்யுலகன் ஆயினேன் நாயினும் கடையான
புன்மையேன் இன்னம் இன்னம்
வீணிலே அலையாமல் மலையிலக் காகநீர்
வெளிப்படத் தோற்றல் வேண்டும்
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே." (தாயுமானவர்)

மூச்சைக் கட்டி மூலக்கனலை எழுப்பிச் சந்திரமண்டலத்தை வெதுப்பி அங்கிருந்து பெருகிவருகிற அமிர்த தாரையைப் பருகி ஆனந்தமுறாமல் காலத்தை அவமே போக்கி விட்டேனே! என்று தாயுமானவர் பரிதபித்திருக்கும் நிலையை இதில் கருதிக் காணுக.

"கால்பிடித்து மூலக் கனலைமதி மண்டலத்தின்
மேல்எழுப்பில் தேகம் விழுமோ பராபரமே"

என அவர் உருகி யுள்ளதும் ஈண்டு அறிய வுரியது.

உடலில் உயிர் வாசம் செய்து வரும்படி மூச்சு இயங்கி வருதலால் அது சுவாசம் என வந்தது. உள்ளே தோய்வது உசுவாசம், வெளியே பாய்வது நிசுவாசம் என நேர்ந்தது. மூக்கின் வலப்புறம் இயங்குவது பிங்கலை, இடப்புறம் நடப்பது இடகலை. இந்தச் சுவாசங்களை ஒருமுகப் படுத்திப் புருவ மத்தியில் நிறுத்தின் அது சுழுமுனை எனப்படும். இரேசகம், பூரகம், கும்பகம் என்பன யோக வகையின் தொகை மொழிகள்.

உயிர் நிலையமான சுவாசத்தை இனிது கவனித்துத் தனது வாழ்வைப் புனிதமாகச் செய்யின் அந்த மனிதன் அதிசய நிலையை அடைகிறான். மூச்சொடு தோய்பவன் முனிவனாகிறான்.

மூக்கில் இயங்குகிற மூச்சை அறிதல் போலவே வாயி லிருந்து வருகின்ற பேச்சையும் பரிசுத்தமாகப் பேணி ஒழுக வேண்டும். மூச்சும் பேச்சும் உயிர் நிலையங்கள்; அவற்றைப் பழுது படுத்தாமல் விழுமிய நிலையில் ஒடுக்கி வருபவர் வியன் பயன் பெறுகின்றனர். மூக்கும் வாயும் நோக்கின் அது ஆக்க மாய் வருதலால் ஆனந்த போகமாகிறது.

"மூச்சற்றுச் சிந்தை முயற்சியற்று மூதறிவாப்
பேச்சற்றோர் பெற்ற ஒன்றைப் பெற்றிடுநாள் எந்நாளோ?"
(தாயுமானவர்)

வண்டு தேனை நுகரும் பொழுது ஒலி அடங்கி நிற்கிறது; சீவன் பரமானந்தத்தை அனுபவிக்கும்போது செயல்கள் ஒடுங்கி விடுகின்றன. உள்ளம் உயிருள் திரும்பின் பேரின்ப வெள்ளம் பெருகுகிறது. அந்த இன்பப் பெருக்கை எய்தி மகிழ்க.

---

546. நெஞ்சில் எழுந்த நினைவின் வழியோடி
அஞ்சு புலனும் அலையுமால்—நெஞ்சம்
இனிதாயின் எல்லாம் இனிதாம் இலதேல்
துனியாம் எவையும் துயர். (சு)

இ—ள்

உள்ளத்திலிருந்து எழுகிற நினைவின் வழியே ஐம்புலன் களும் புறத்தே அலைந்து திரிகின்றன: உள்ளம் இனிது ஆயின் எல்லாம் இன்பமாம்; அது துனியாயின் யாவும் துயரமாம் என்க.

உடல், புலன், மனம், அறிவு, ஆன்மா எனப் படிமுறைகள் அமைந்திருக்கும் உண்மை நுண்மையாக உணர வுரியன. முன் னுள்ள இரண்டும் பின்னுள்ள இரண்டும் நடுவில் நிற்கின்ற ஒன்றால் நெடிது அலைந்து வருகின்றன.

உள்ளம் அசைய உலகம் அசையும் என்னும் பழமொழி உயர்ந்த ஞான நோக்கில் விளைந்துள்ளது. மனத்தின் வழியே அனைத்துலகங்களும் சுழன்று வருகின்றன.

மன வுணர்வினாலேயே மனிதன் உயர் நிலையை அடைந் திருக்கிறான். அத்தகைய மனம் நல்ல வழியில் பழகிவரின் அந்த மனிதன் எல்லா இன்ப நலங்களையும் எய்தி இனியவனாகிறான்;

அது தீய நிலையில் திரிய நேரின் அவன் தீயவனாயிழிந்து கொடிய துன்பங்களை அடைந்து வருந்துகிறான்.

"மக்கள் மானிடர் என்று மனத்தினால்
மிக்க மேன்மை விளங்கினர்; இல்லெனின்
பொக்க மேவும் பொறிகள்ஓர் ஐந்தினால்
ஒக்கு மாவினை ஒத்துயர் வுற்றிடார். (1)

கெடுக்க வல்லதும் கெட்டவர் தங்களை
எடுக்க வல்லதும் இம்மனம் என்றுஅதை
அடக்க வல்லவன் ஐய பவக்கடல்
கடக்க வல்லவன் ஆவன் கடிதரோ." (2)

(பிரபுலிங்க லீலை)

மாக்களினும் மக்கள் மேலானது மனத்தினாலேயாம்; அது மனிதனைக் கெடுக்கவும் வல்லது; எடுக்கவும் வல்லது; அதன் நிலைமையை உணர்ந்து நலமாக அதனை வசப் படுத்தினவர் பிறவி நீங்கிப் பேரின்பம் பெறுவர் என இது உணர்த்தியுள்ளது.

மனத்தை இதமாக வசப்படுத்தாதவர் புலன்களுக்கு அடிமைகளாய் இழிந்து உழலுகின்றனர்; அதனை இனிமையாகப் பழகி வசம் செய்து கொண்டவர் அரிய பெரியோர்களாய் உயர்ந்து விளங்குகின்றனர்.

மனம் பொறி வழியே வெளியே ஓடின் மனிதன் சிறியனாய் இழிந்து சீரழிகின்றான்; அது அறிவின் வசமாய்த் திரும்பின் அவன் பெரிய மகானாய்ப் பேரின்பங்களைப் பெறுகிறான்.

மோக மயக்கங்களில் வீழ்த்தித் தேக போகங்களில் ஆழ்த்தி எவ்வழியும் மீளாதபடி மனித சமுதாயத்தை நீசப் படுத்தி மனம் நாசம் செய்து வருகிறது. நீசமான இந்த நாச நிலையை அறிந்து தெளிந்த போதுதான் மகான்கள் பரிந்து பதைத்து ஈசனை நோக்கி விரைந்து கதறுகின்றனர்.

"பொல்லாத என் நெஞ்சம் ஓரைந்து புலன்கள் தம்பால்
அல்லாது அரைமாத்திரையும் நின்அடிக்கண் அன்பாய்
நில்லாது இதற்கு என்னை செய்கேன்? இதை நின்றிடென்றே
சொல்லாய் திருத்தில்லையுள் மேவிய சோதி நீயே!"

(சாந்தலிங்கர்)

வாயிலோர் ஐந்திற் புலனெனும் வேடர்
வந்தெனை ஈர்த்து வெங் காமத்

தீயிலே வெதுப்பி உயிரொடும் தின்னச்
சிந்தைநைந் துருகிமெய்ம் மறந்து
தாயிலாச் சேய்போல் அலைந்தலைப் பட்டேன்
தாயினும் கருணையா மன்றுள்
நாயக மாகி ஒளிவிடு மணியே
நாதனே ஞான வாரிதியே. (தாயுமானவர்)

மாறிநின்று என்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்து அமுதே
ஊறிநின்று என்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்!
தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே என்னுடை அன்பே! (மாணிக்கவாசகர்)

புலன்களின் புன்மையும், அவற்றை அடக்கினவர் ஆன்ம நோக்கில் உயர்ந்து நலன் காணும் நன்மையும் இவற்றால் அறியலாகும். புலன்வழி இழிவது புலைவாழ்வாம்; அந்நிலை தெளிந்து திருந்துக.

நெஞ்சம் இனிதாயின் எல்லாம் இனிது ஆம்.

என்றது மனித வாழ்வின் இனிமை முழுவதும் மருவியுள்ள நிலை அறிய வந்தது. மனம் புனிதமாய் அமையின் அந்த மனிதன் அன்றே பேரின்ப வாழ்வை அடைந்தவனாகிறான். தீய நினைவுகள் ஒழிந்த பொழுது அந்த மனம் தூயதாய் உயர்கிறது; உயரவே தூயனான பரமனைத் தோய்கிறது; அத் தோய்வால் உயிர் பரமானந்தத்தை அனுபவிக்கிறது.

மனதை இனிய வழியில் திருப்பி இன்ப நிலையை எய்துக.

---

547. வாழ்வில் இனிமை வளர விரும்பினே
சூழ்வில் எளிமை துணைக்கொள்க—தாழ்வில்
உயர்நலங்கள் எல்லாம் ஒருங்கே உளவாம்
உயிர்நலம் காண்க வுணர்ந்து. (எ)

இ—ள்

வாழ்க்கையில் இன்பம் வளர்ந்துவர விரும்பின் எவ்வழியும்

எளிய நீர்மைகளை உரிமை செய்து கொள்க; இனிய பணியில் அரிய பல உயர் நலங்கள் பெருகியுள்ளன; உன் உயிர்க்கு உண்மையான உறுதி நலனை உணர்ந்து தெளிக என்பதாம்.

இது எளிய வாழ்வு இனிய சுகம் என்கின்றது.

அல்லல் யாதும் இல்லாமல் நல்ல சுகமாய் வாழவே எல்லாரும் விரும்பியுள்ளனர். வேண்டாத அல்லல்கள் மேல்வந்து வீழ்கின்றன; வேண்டுகிற இன்பங்கள் விலகிப் போகின்றன. மனித வாழ்க்கை யாண்டும் அதிசய விநோதங்களாயுள்ளன.

எல்லாம் நியமமாகவே நடைபெற்று வருதலால் நேருகிற நிலைகளுக்கெல்லாம் காரணங்கள் மறைந்திருக்கின்றன. நினைவு நல்ல வழிகளில் வளரின் நலங்கள் வருகின்றன; அல்லல் நிலைகளில் இழியின் அவலங்கள் பெருகுகின்றன.

மனதைப் புனிதமாக வைத்துக் கொண்டவன் வாழ்க்கை முழுவதையும் இனிமையாக வளர்த்துக் கொள்ளுகிறான்.

தன் குடி வாழ்க்கை என்றும் மேன்மையாக வளர்ந்து வர வேண்டின் அவன் எவ்வழியும் நல்ல சிந்தனைகளைப் பேணி வர வேண்டும். உள்ளத்தில் நல்லவன் உலகத்தில் எல்லா வழிகளிலும் நலங்களைக் கண்டு இனிய பலன்களை அனுபவிக்கிறான்.

செல்வச் செழிப்பினால் ஒரு வாழ்க்கையில் உண்மையான சுகம் காண முடியாது; பகட்டான ஆடம்பரங்கள் அதனால் வெளியே விளங்கி நின்றாலும் உள்ளே மெய்யான இனிமை சுரந்து நில்லாது. கடுந்தருக்கு, காமக் களிப்பு, மடமை, மயக்கம், மனத்திமிர் முதலிய மையல் மருள்களே அங்கு வெய்ய நிலைகளில் உலாவி நிற்கும்.

அருள் கனிந்த வாழ்வில் பொருள் பணிந்துள்ளது. எளிய வாழ்வுகளே பெரியோர்களுக்கு யாண்டும் உரியனவாயுள்ளன. அகத்தில் இனிய பண்புகள் சுரந்திருத்தலால் புறத்தில் அவரது வாழ்வு அறத்தோடு பொலிந்து விளங்குகிறது.

பொருள் நிறைந்த வாழ்வு மருள் மலிந்து நிற்றலால் அருள் சுரந்த இந்த வாழ்வின் எதிரே அது இருள்படிந்து இழிந்துளது.

எல்லாச் செல்வங்களும் வாய்ந்த அரசர் வாழ்வினும் யா

தும் இல்லாத தவசிகள் வாழ்வு எவ்வளவு சுவையுடையதாய் ஒளி பெற்று உயர்ந்து மிளிர்கிறது!

"Poverty is its ornament. It does not need plenty." (Emerson)

"வறுமை அதன் அணி; அதிகமான வசதிகளை அது விரும்பாது" என உண்மையான பெரியோர்களுடைய வாழ்க்கை நிலையைக் குறித்து எமர்சன் இவ்வாறு உரைத்திருக்கிறார்.

சூழ்வில் எளிமை துணைக் கொள்க!

என்றது வாழ்வில் சுகமும் தெளிவும் மருவி வருதற்கு வழியை விழிகாண இது விளக்கி நின்றது. சூழ்வு = சூழ்ந்துள்ள நிலை. தன்னைச் சுற்றியிருக்கும் சூழல்களைச் செவ்வையாக ஒழுங்கு செய்து கொள்ளின் அந்த மனிதனுடைய குடி வாழ்க்கை எவ்வழியும் இனிமை சுரந்து வரும்.

குடியிருப்பு உணவு உடை முதலிய தேக வசதிகளை வீணே பெருக்கி விரிக்காமல் வேண்டிய அளவு சுருக்கிப் பழக்கிக் கொள்ளின் யாண்டும் நன்மையாம்.' தேவைகளை வளர விடின் அவை கொடிய சுமைகளாய்க் குடி கேடு செய்யும்.

குடும்ப பாரம் என உலகில் வழங்கி வரும் சொல்லால் அதனைப் பாதுகாத்து வருவது எவ்வளவு கடினம் என்பது எளிது தெளிவாம்.

"குடும்ப பாரத்தை விவேகிகள் கடக்கும்
கொள்கைபோல் பாலையைக் கடந்து." (ஞானவாசிட்டம்)

ஒருஅரசன் குதிரையேறிப் பெரிய பாலைவனத்தைக் கடந்து போன நிலையை இவ்வாறு குறித்திருக்கிறார். குடும்பம் தாங்கும் இடும்பைகளை இதனால் அறிந்து கொள்ளலாம்.

இயல்பாகவே இவ்வாறு சுமையான குடும்ப வாழ்வை இதமாகவும் இனிமையாகவும் நடத்தி வருவது பெரிய கலையாம்; அரிய விநயமாம்.

ஆடம்பரமில்லாத எளிய வாழ்வு இனிய ஞான நீர்மையாய் மருவி வருகிறது. ஆன்ம சிந்தனை மேவிய உயர்ந்த குறிக்கோள்களோடு தோய்ந்து வருகிற வாழ்க்கை சிறந்த மகிமையாய்த் தேசு மிகுந்து திகழ்தலால் அதனை யாவரும் வியந்து புகழ்கின்றனர். அது அரிய மகான்கள் வாழ்க்கையாயுள்ளது.

"Plain living and high thinking are no more." (Wordsworth)

"எளிய வாழ்க்கையும் உயர்ந்த எண்ணமும் இல்லாமல் போயினவே" என்னும் இது இங்கே அறிய வுரியது.

இடம்ப வாழ்வும் இழிந்த எண்ணங்களுமே யாண்டும் மலிந்திருத்தலை நினைந்து வேட்ஸ்வொர்த் என்னும் ஆங்கிலக் கவி ஞர் இங்ஙனம் வருந்தி யிருக்கிறார்.

உயிர் நலம் காண்க என்றது உடலைப் பேணி வரும் பொழுதே உயிர்க்கு உறுதி நலங்களை உணர்ந்து கொள்க என இது உணர்த்தியருளியது. உடலளவில் அளவறிந்து வாழ்ந்து உயிரின் உயர்ந்த நிலையை விரைந்து அடைந்து கொள்ளுக.

---

548. கூர்ந்து கருதிக் குறிக்கோ ளுடன்எதையும்
ஓர்ந்து புரியின் உயர்வாகும்—தேர்ந்து
புரியாத வாழ்வு புலையாய் இழிந்து
பரிதாப மாகும் பரிந்து. (அ)

இ—ள்

எதையும் நுணுகி உணர்ந்து கருத்தோடு வாழ்வை நடத்தி வரின் அது உயர்ந்து சிறந்து ஒளி மிகுந்து விளங்கும்; கருதிச் செய்யாத வாழ்வு புலையாய் உலைந்து பரிதாபமாய் இழிந்து போம் என்பதாம்.

இது, வினைகளை விநயமாய்ச் செய் என்கின்றது.

அறிவு மனிதனைப் பெருமைப் படுத்துகிறது. அதனைச் சரியாக உரிமை செய்து கொண்டவன் பெரிய பாக்கியவானாய் அரிய மகிமைகளை அடைகிறான். எல்லாக் காரியங்களையும் சீர்மையாக நடத்துவதற்கு அது கூர்மையான கருவியாய் நீர்மை சுரந்துள்ளது. கருமங்களின் மருமங்கள் கருதி யுணர வுரியன.

எண்ணுதல் பேசுதல் செய்தல் என்னும் இவை மனிதனிடமிருந்து எப்பொழுதும் இயல்பாக நடந்து கொண்டிருக்கின்றன. நிகழுகின்ற செயல்கள் நல்ல அறிவோடு கலந்து வெளி வரின் அவை இனிய பயனுடையனவாய் நல்வினையாகின்றன.

அங்ஙனம் இல்லையாயின் பொல்லாதனவாய்ப் புலையுறுகின்

றன. இந்த இருவகையிலும் சேராமல் வெறு வினைகளாகவும் சில விளைந்து விளிகின்றன.

"மனம்மொழி மெய்யறி வாகிய நான்கன்
அசைவே ஆகியும் அவ்வசை வின்றியும்
நல்வினை தீவினை வெறுவினை என நடந்து
அறிந்து செய்வினை அறியாது செய்வினை
அசேதனம் செய்வினை எனவே அமர்ந்து
தீவினை நல்வினை சிலமுறை திறம்பிச்
செய்யா இருவினை செய்வினை ஆகிச்
செய்யிரு வினையே செய்யா வினையாய்
இன்னும் பலவாம் இலக்கணம் பெறுமே."
(இலக்கணக் கொத்து)

செயல்கள் விளைகின்ற நிலைகளையும் வகைகளையும் இது உணர்த்தியுள்ளது. இயல்பான இயக்கங்கள் எங்கும் இயங்கி நிற்கின்றன. நினைவின் அலைகள் நிலையாயலைகின்றன.

மனம் எப்பொழுதும் சலிக்கும் இயல்புடையது ஆதலால் அதிலிருந்து செயல்கள் கலித்தெழுகின்றன. பழகி வந்த வாசனைகளுக்குத் தகுந்தபடி அவை அமைந்து வருகின்றன.

தன்னுடைய இயல்புக்கும் தகுதிக்கும் தக்கபடியே மனிதன் காரியங்களைச் செய்து வருகிறான். ஒருவன் செய்துவரும் செயல்கள் அவனுடைய நிலைகளைத் தெரியச் செய்கின்றன.

கூர்ந்து கருதிக் குறிக்கோளுடன் ஓர்ந்து புரிக.

என்றது கருமங்களைத் திருத்தமாகச் செய்யும் திறங்களை யுணர்த்தியது. கருத்தை ஊன்றிச் செய்யின் அந்தக் காரியம் எவ் வழியும் செவ்வை ஆகின்றது. அங்ஙனம் செய்யாதது சிதைந்து படுகிறது. கருத்து வளைந்த அளவே திருத்தம் விளைந்து வருகிறது.

நாட்டு நலம் கருதி அரச காரியங்களை நடத்தும் அதிகாரிகள் சிறிது தவறினும் அது பெரிய கேடாகும் ஆதலால் அவர் கொடிய பழிகளை அடைய நேர்கின்றனர். காரியக்கேடு நேராமல் கருதிச் செய்பவரே சீரியராகின்றனர். அல்லாதவர் சீரழிகின்றனர்.

"The vices of authority are chiefly four: delays, corruption, roughness, and facility." (Bacon)

"அரசாங்க அதிகாரிகளின் முக்கிய குற்றங்கள் நான்கு: தாமதம், தவறு, தவளியாமை, முக தாட்சணியம்" என பேக்கன் என்னும் பேராசிரியர் இங்ஙனம் குறித்திருக்கிருர். காலம் கடத்தாமல், இலஞ்சம் வாங்காமல், கருத்தூன்றி யாண்டும் நேர்மையுடன் உறுதியாய் நின்று காரியங்களைச் செய்து வரின் அந்த அதிகார முறை மரியாதை பெறுகின்றது; அவ்வாறு செய்யாதது பரிதாபமாய் இழிகின்றது.

செய்துள்ள கருமங்களைக் கொண்டுதான் மனிதன் மதிக்கப் படுகின்றான். உருவத்தாலும் பேச்சுகளாலும் எவரையும் பெரிதாக மதிப்பதில்லை. கருமமே கட்டளைக் கல் என்ற தேவர் வாக்கு யாவரையும் நிறுத்து நிலை தெரிதற்கு நிலையான அளவு கோலாய் யாண்டும் நிலைத்து நிற்கிறது.

"A man of words and not of deeds
Is just like a garden full of weeds."

"நல்ல செயல்கள் இல்லாமல் வெறும் வார்த்தைகளுடைய மனிதன் களைகள் நிறைந்த தோட்டம் போல் உள்ளான்" என்னும் இது இங்கே உணர வுரியது. இந்த உவமை சிந்திக்கத்தக்கது. அரிய கருமங்களைச் செய்யாமல் வறிதே திரிந்து வருபவன் பெருமைகளை இழந்து பிழை மிகப்படுகிருன்.

உரிமையுடன் ஓர்ந்து ஊக்கிச் செய்கிற கருமங்கள் மனிதனுக்கு ஆக்கமும் ஆண்மையும் அருளி வருகின்றன. செயலின் அளவே உயர்வு ஆதலால் உன்னதமான காரியங்களைச் செய்து கொள்ள வேண்டும். கரும வீரனுடைய வாழ்வை யாவரும் அருமையாகப் புகழ்ந்து போற்றுகின்றனர்.

"A life spent worthily should be measured by a nobler line: by deeds, not years." (Sheridan)

"உயர்ந்த நிலையில் கழிந்த ஒரு மனித வாழ்வு சிறந்த அளவால் மதிக்கப்படுகிறது; அந்த அளவு வயசால் அன்று; செயல்களாலேயாம்" என ஷேரிடன் என்பவர் இங்ஙனம் உரைத்திருக்கிருர். அரிய காரியங்களைச் செய்து பெரிய மேன்மை பெறுக.

549. மானம் மரியாதை மாண்பு மகிமையெலாம்
ஞான நிலையின் நறுமணமாய்—வானம்
மருவி வரலால் மனித வுலகம்
பெருமை புரியும் பெரிது. (கூ)

இ—ள்

மானம் மரியாதை முதலிய அரிய நீர்மைகள் எல்லாம் ஞான நிலையின் இனிய மணங்களாய் மருவி வருகின்றன; அவை மனித உலகத்தை எவ்வழியும் பெருமை செய்து மிளிர்கின்றன.

இது, இனிய நீர்மைகள் இன்ப வெள்ளங்கள் என்கின்றது.

பல குண நலங்கள் ஒருங்கே சேர்ந்த பொழுதுதான் மனிதன் புனிதனாய் வெளியே ஒளி வீசி உலாவுகிறான். குண சமுதாயங்களே மனித சமுதாயத்தை யாண்டும் மகிமைப் படுத்தி வருகின்றன.

நாய் நன்றியறிவு வாய்ந்தது.
கழுதை அமைதி யானது.
எருமை பொறுமை யுடையது.
சேவல் வீரம் மிக்கது.
காக்கை இனம் தழுவி உண்பது.
கொக்கு கருமமே கண்ணானது.

இன்னவாறு மிருகங்களிடமும், பறவைகள்பாலும் சில தன்மைகள் இயல்பாகவே அமைந்திருந்தாலும் அவை உயர்வாக மதிக்கப் படாமல் இழிவாகவே எண்ணப் பட்டுள்ளன. அந் நிலைக்குக் காரணம் என்ன? பகுத்தறியும் திறனும் பான்மையினமும் மேன்மையாகப் பதியாமையேயாம்.

கூரிய மனவுணர்வும் சீரியகுண நீர்மைகளும் மனிதனிடம் ஒருசேர அமைந்து வருதலால் அவன் சிறந்தவனாய் உயர்ந்து விளங்குகிறான். சீவஒளியால் யாவும் தேவ ஒளிகளாய்ச் சிறந்து மிளிர்கின்றன. உயிர் ஒளி குறையின் உயர்வுகள் ஒழிகின்றன.

ஈன நிலைகளில் இழிந்து படாமல் மனிதனை இனிது பேணி வருவது மானம் என வந்தது. மனம் மழுங்காமல் இருப்பது என்னும் காரணக்குறியாய் இது பூரணம்அடைந்துள்ளமையால் மானத்தின் தலைமையும் நிலைமையும் நேரே தெரியலாகும்.

மானிகள் யாண்டும் நெறியுடையராய் எவ்வழியும் புனித நிலையில் வாழ்ந்து வருபவர் ஆதலால் ஏதேனும் இடையே ஓர் இழிவு நேரின் உடனே அவர் உயிர் அழிய நேர்கின்றனர்.

"இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு." (குறள், 970)

மானம் உடையார் இயல்பும் அவரது உயர்வும் இதனால் உணரலாகும். வையம் தொழ, வானம் புகழ வைத்தலால் மானத்தை உயிரினும் பெரிதாக உயர்ந்தோர் உவந்து பேணி வருகின்றனர். அருமையுடையது பெருமை அடைகிறது.

"Mine honour let me try;
In that I live and for that will I die." (Mowbray)

"என் மானம் என்னைச் சோதிக்கட்டும்; அதில் உயிர் வாழ்கிறேன்; அது நழுவின் நான் அழிவேன்" என்னும் இது இங்கே அறிய வுரியது.

உயர்ந்த மக்கள் எல்லாரும் மானத்தை உயிரினும் அருமையாகக் கருதிப் போற்றி வருகின்றனர். தம்மை எவ்வழியும் மேன்மைப் படுத்திப் புகழும் புண்ணியமும் அருளி வருதலால் மாந்தர் அதனை இவ்வாறு மருவி மகிழுகின்றனர். அரிய மகிமையுடையது பிரியமாய்ப் பேணப் படுகிறது.

மரியாதை என்பது மானத்தோடு தோய்ந்துள்ள இனிய நீர்மை. அது நிலை குலையாமல் நின்று திகழ்கிறது; இது நிலைமையைத் தலைமையாகச் செய்தருளுகிறது. உயர்ந்த உயிரின் இனிய வாசனைகளாய்க் குணங்கள் மலர்ந்து விளங்குகின்றன. மலருக்கு மணம் போல் சிலருக்கு இயல்பாகவே குணங்கள் அமைந்து வருகின்றன. இனிய நீர்மைகளோடு பழகிவரும் அளவு மனிதன் தனியே நிலவி மிளிர்கிறான்.

தனக்கு மரியாதையைத் தான் தேடிக் கொள்ள வேண்டும் என்பது பழமொழி வழக்காய் வழங்கப்படுகிறது. செல்வம் கல்விகளை ஈட்டுவதைக் காட்டிலும் குணங்களை யீட்டிக் கொள்வது உயர்ந்த நலங்களாய் ஒளி புரிந்தருளுகிறது.

"ஈட்டும் பொருள்முயற்சி எண்ணிறந்த வாயினும்ஊழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாம்---தேட்டம்
மரியாதை காணும் மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணும் தனம்." (நல்வழி)

மனிதன் உரிமையோடு விரைந்து தேடத்தக்க செல்வம் மரியாதையே என ஔவையார் இவ்வாறு அருளியுள்ளார். தேட்டம் மரியாதை காணும் என்றது அதன் காட்சியைக் கருதியுணர வந்தது.

மரியாதை விநயத்தின் இனிய துணையாயிருத்தலால் அதனையுடையவனை யாவரும் உவந்து பேணி வருகின்றனர். அவனது மேன்மையை இப் பான்மை உயர்த்திக் காட்டுகிறது.

"Thy modesty's a candle to thy merit." (H. Fielding)

"உன் தகுதிக்கு உனது மரியாதை ஒரு விளக்கு" என்று இது உரைத்துளது. உயர்ந்து விளங்கச் செய்வது உளந் தெளிய நின்றது.

யாண்டும் விநயமாய் நடந்து யாவரிடமும் மரியாதையாய் ஒழுகி வருபவன் அரிய ஒரு பெரிய மனிதன் ஆகிறான். தன்னைப் பெருமைப் படுத்தி இருமையும் இன்பம் தருகிற அருமை நீர்மைகளை உரிமையாக மருவி உயர்கதி பெறுக.

---

550. எல்லாம் புரியவல்ல ஈசன் ஒருவனெதிர்
எல்லாம் இனிதா இயங்குகின்ற—வல்லான்போல்
நீயும் புரிவதா நெஞ்சம் செருக்கினது
ஆயும் புதுமை அறி. (ல)

இ—ள்

எல்லாம் வல்ல இறைவனுடைய அருளால் யாவும் முறையே இயங்கி வருகின்றன. அவ்வரவு நிலையை உணராமல் நீயும் சில செய்வதாக நெஞ்சம் செருக்குதல் மாய மயக்கம் என்க.

இது, தெய்வச் செயலைத் தெரிக என்கின்றது.

இனிய பணிவு மனிதனுக்கு அரிய அணிகளாய் மருவியுள்ளன. பணிவும் அடக்கமும் உண்மையான உணர்வின் பலன்களாய் ஒளி வீசி வருகின்றன. அடக்கம் அமரருள் உய்க்கும் என்பது பொய்யாமொழி. தன்னைத் தெய்வம் ஆக்கி எவ்வழியும் இன்பம் தரவல்ல இனிய நீர்மையை மனிதன் இழந்து போவது கொடிய துயரமாய் முடிந்து வருகிறது.

இன்ப மூலங்களை இகழ்ந்து தள்ளி விடுவதும், துன்ப விளைவுகளை உவந்து தொடர்ந்து கொள்ளுவதும் மருண்ட மாய மயக்கங்களாய் இருண்டு நிற்கின்றன. துயரங்களுக்கெல்லாம் மூல காரணம் உண்மை நிலையை ஊன்றி உணராத புன்மையேயாம்.

உரிய உண்மை தெளியின் அரிய நன்மைகள் வெளியாகின்றன. மெய்யறிவான ஞானம் உதயமாகவே யான் எனது என்னும் செருக்கு அறுகின்றது. அது அற்றபோது மனிதன் தேவனாய் மேலான இன்ப நலங்களை மேவி மகிழ்கிறான்.

அகில உலகங்களும் ஓயாமல் இயங்கி வருகின்றன. முறையே அவற்றை அங்ஙனம் இயக்கி வருகிற ஓர் அற்புத சத்தி அதிசய நிலையில் உள்ளது. அந்த அற்புதப் பொருளைத் தான் கடவுள், ஈசன், பிரமம் எனப் பல பெயர்களால் வழங்கி வருகிறோம்.

அவன் அன்றி அணுவும் அசையாது என்னும் பழமொழி அவனால் யாவும் இயங்கி வரும் உண்மையை இனிது உணர்த்தி வருகிறது. இந்தத் தத்துவத்தை ஒருவன் உய்த்துணர்ந்தால் உள்ளச் செருக்கு ஒழிந்து உயர்கதியடைகிறான்.

நல்ல மெய்யுணர்வு இல்லாமையினாலேதான் எல்லாம் தன்னாலேயே ஆகின்றன என்று தருக்கி இன்னல் நிலைகளில் இழிந்து படுகிறான். சீவ முனைப்பு பாவ முளைப்பாய் வருதலால் பல துயரங்களை அவன் அடைய நேர்கிறான்.

தானலாது ஒன்று தன்னைத் தான் எனக் கருதிக் கொண்டே
யானெலாம் செய்தேன் என்னும் ஞானம் அஞ்ஞானம்; அத்தால்
இனமாம் வினையிரண்டாம்; இருவினை யால் உடம்பாம்;
ஊனமாம் உடம்பால் ஊழாம்; ஊழினால் ஆகாதுண்டோ?
(குறுந்திரட்டு)

உண்மையை உணர்ந்து கொள்ளாமல், எல்லாம் நான் செய்தேன் என்று உள்ளம் செருக்குதல் அஞ்ஞானம்; அந்த மடமையினாலேதான் வினைகள் விளைந்து பிறவித் துன்பங்கள் நேர்ந்தன என்று இது உணர்த்தியுள்ளது.

"ஒன்றும் நம்செயல் இல்லை நெஞ்சே! இவண்
ஓர் மயல் அதனாலே
சென்று சென்று வெம்பவக் கடல் மூழ்கினம்"
(வைராக்கிய சதகம்)

எல்லாம ஈசன் செயல் என்று தெளிந்து அடங்காமல் நான் என்ற அகங்காரம் நீண்டு நின்றமையினலேதான் நாம் பிறவிக் கடலில் வீழ்ந்துள்ளோம் என்னும் இது ஈண்டு ஓர்ந்து சிந்திக்க வுரியது.

ஆணவச் செருக்குகளாலே அல்லல்கள் விளைந்திருக்கின்றன; அந்தப் பொல்லாத புலேகளை ஒழித்து நல்ல தெய்வ சிந்தனைகளைச் செய்துவரின் எல்லா இன்ப நலங்களும் எளிதேவரும்.

"சிவன்செய லாலே யாதும் வரும் எனத் தேறேன்; நாளும்
அவந்தரு நினைவை எல்லாம் அகற்றிலேன்; ஆசை வெள்ளம்
கவர்ந்து கொண்டு இழுப்ப அந்தக் கட்டிலே அகப்பட்டு ஐயோ!
பவந்தனை ஈட்டி ஈட்டிப் பதைக்கின்றேன் பாவி யேனே."

உண்மை நிலையை மறந்து புன்மை நினைவுகளை நினைந்து புலைப் பிறவிகளையடைந்து தொலையாத துன்பங்களில் சுழன்று உழலுகின்றேனே! என்று தாயுமானவர் இங்ஙனம் பதைத்துப் பரிதபித்திருக்கிறார்.

"என்செயலாவது யாதொன்றும் இல்லை; இனித் தெய்வமே
உன்செயலே என்று உணரப் பெற்றேன்" (பட்டினத்தார்)

தமது மெய்யுணர்வின் நிலையைப் பட்டினத்தார் இவ் வண்ணம் விளக்கியிருக்கிறார். எல்லாம் அவன் செயல் என்று தெளிந்த வுடனே பொல்லாத அவலங்கள் யாவும் பொன்றி ஒழிகின்றன.

தான் என்னும் அகங்கார இருள் ஞான ஒளி முன் ஒழிந்து போகிறது; போகவே அங்கே அமைதியும் பணிவும் பெருகி வருகின்றன. உண்மையுணர்வு நன்மைகளை நல்கி யருளுகிறது.

நீயும் செருக்கின் அது ஆயும் புதுமை.

என்றது சீவனது நிலைமையை நினைந்து கொள்ள வந்தது.

செருக்கு மனிதனைச் சிறுமைப் படுத்துகிறது. அறிவு குறைந்த இடத்திலேதான் செருக்கு நிறைந்து நிற்கிறது.

தன்னைப் பெருமையாகக் கருதித் தருக்கி நிற்பவனை உலகம் சிறுமையாக எண்ணி இகழ்ந்து வருகிறது. நிலை தெரியாமல் புலையுறுகின்றான்.

எல்லாம் அறிய வல்லவன் இறைவன் ஒருவனே ஆதலால் அவன் முன்னிலையில் தன்னை நிறுத்தி உன்னி உணர வேண்டும்.

உணரின் பணிவும் பண்பும் படிந்து வரும். இனிய பணிவால் அரிய பல உயர்வுகள் பெருகி வருகின்றன.

"Be not wise in thine own eyes." (Bible)

"உன்னை நீ ஞானியாக எண்ணிக் கொள்ளாதே" என்று சாலமன் என்னும் நீதிமான் இவ்வாறு கூறியிருக்கிறார்.

தனது அறிவு நிலையைப் பிறர் உவந்து கூறின் அது பெருமையாம்; தானே புகழ்ந்து சொல்லின் சிறுமையாம் என்க. அந்தச் சிறுமையில் இழிந்து படாமல் உயர்ந்த பெருந்தன்மையுடன் ஒழுகி வருக.

"Be wiser than other people, if you can; but do not tell them so." (Lord Chesterfield)

"கூடுமானால் மற்றவர்களைக் காட்டிலும் நீ அறிவாளியாய் இரு; ஆனால் அவர்களிடம் அப்படிச் சொல்லாதே" என செஸ்டர்பீல்டு என்னும் பிரபு தன் மகனுக்கு இவ்வாறு புத்தி போதித்திருக்கிறார். உயர்ந்த போதனைகள் உய்த்துணர்வுகளுடையன.

தன்னைப் பெருமைப் படுத்தி ஒருவன் புகழ்ந்து பேசினால் அது பிறரைச் சிறுமைப் படுத்தி இகழ்ந்தது போலாகிறது; ஆகவே வெறுப்புக்கிடமாய் அது விபரீதங்களை விளைக்கிறது.

விநயமும் அடக்கமும் யாண்டும் மேன்மைகளை விளைத்து வருகின்றன; செருக்கும் துடுக்கும் எவ்வழியும் இழிவுகளையே வளர்த்து இன்னல்களை விரித்து நிற்கின்றன.

தன்னைப் பெருமையாக உயர்த்திப் பேசுகிறவன் சிறுமையாய்த் தாழ்த்தப் படுகிறான். அடக்கமாய்த் தாழ்ந்து நிற்பவன் யாவராலும் உயர்வாக மதித்துப் போற்றப் பெறுகிறான்.

உணர்வு பெருக உள்ளம் அடங்குகிறது; அந்த அடக்கத்தில் எல்லா மகிமைகளும் இடம் பெற்று நிற்கின்றன.

சாக்ரேட்டீஸ் என்பவர் பெரிய மேதை; கிரீஸ் தேசத்தில் பிறந்தவர்; இற்றைக்கு இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தவர். இவருடைய அறிவுரைகள் உயர்ந்த நெறிமுறைகளை உணர்த்தியுள்ளன. பெரிய அறிஞர் குழாத்தில் ஒரு நாள் இவர் சொன்ன மொழியை உலகம் முழுவதும் உவந்து கொண்டாடி வருகிறது. அன்று சொன்னது என்ன? அயலே காண்க.

"One thing only I know; and that is that I know nothing." (Socrates)

"ஒன்று மாத்திரம் எனக்கு நன்ருகத் தெரியும்; அதுதான் யாதும் தெரியாது என்பது" என சாக்ரேட்டீஸ் இவ்வாறு கூறி யிருக்கிருர். இது எவ்வளவு பெரிய விநயம்! எத்துணை அடக்கம்! உய்த்துணர வேண்டும். எல்லாக் கலைகளையும் நன்கு தெளிந்த பேரறிவாளி இங்ஙனம் பேசியிருப்பது அந்த உள்ளத்தின் பண்பையும் உயர் பெருந்தகைமையையும் உணர்த்தி நிற்கிறது.

சிறந்த அறிவு நிறைந்துள்ளமைக்கு அடையாளம் அங்கே செருக்கு இல்லாமல் இருத்தலேயாம் என்பதை இதனுல் அறிந்து கொள்ளுகிருேம். இழி புன்மைகள் ஒழிவதே உயர் பெருந்தன் மைகளாய் ஒளி பெறுகின்றன. பணிவும் பண்பும் அணிகளாய் நின்று மனிதனுக்கு அரிய பல நலங்களை அருளி வருகின்றன. அந்த இனிய நீர்மைகளை எய்தினவன் இன்பமூர்த்தியாகிருன்.

"வித்யா ததாதி விநயம் விநயாத்யாதி பாத்ரதாம்
பாத்ரத்வாத் தநமாப்நோதி தநாத்தர்மந் ததஸ்ஸுகம்."

"வித்தையால் விநயமும், விநயத்தால் மேன்மையும், மேன் மையால் திருவும், திருவால் தருமமும், தருமத்தால் இன்பமும் உண்டாகிறது" என்னும் இது இங்கே ஊன்றி உணர்ந்து கொள்ள வுரியது.

அகம் வளைந்து வரின் சுகம் விளைந்து வருகிறது.

என்றும் உள்ளவன்; எல்லாம் அறிபவன்; யாவும் வல்ல வன் இறைவனே என்று கருதி உருகி எவ்வழியும் விநயமாய் ஒழுகித் திவ்விய நலனை எய்தி மகிழுக.

### இவ் அதிகாரத்தின் தொகைக் குறிப்பு.

விநயம் இனிய இயல்பினது.
நாவடங்கி மொழிவது.
நலம் பல தெளிவது.
நயம் தெரிந்து நடப்பது.
பயன் உணர்ந்து கொள்வது.
புலன்களை அடக்குவது.
எளிமையாய் வாழ்வது.
இதம் அறிந்து சூழ்வது.
மரியாதை மானங்கள் உடையது.
இறைவன் அருளை அடைவது.

௫௫-வது விநயம் முற்றிற்று.

# ஐம்பத்தாறும் அதிகாரம்

## கல்வி.

அஃதாவது மேலோர்களுடைய எண்ணங்களையும் இயல்புகளையும் நூல்கள் வாயிலாகக் கற்றுத் தெளிந்து கொள்ளுதல். மனிதனைப் பண்படுத்தி இனிய குண நீர்மைகளையும் அரிய பல சீர்மைகளையும் கல்வி அருளி வருதலால் விநயத்தின் பின் இது வைக்கப்பட்டது. ஆன்ம அணிகள் அணுகி நின்றன.

551. காட்சி புரிந்தருளும் காமர் விழிபோல
மாட்சி புரிந்து மனுக்குலத்தை—ஆட்சியாப்
பல்வழியும் ஊக்கிப் பயன்காட்டி நிற்றலால்
கல்வியும் செல்வமும் கண். (க)

இ—ள்

காட்சிகளைக் கண்டருளுகிற அழகிய விழிகள் போல மாட்சி புரிந்து மனித சாதியைப் பல வழிகளிலும் உயர்த்திப் பயன் விளைத்து வருதலால் கல்வியும் செல்வமும் இரண்டு கண்களாம் என்க.

இது கல்வியின் மாட்சியை உணர்த்துகிறது.

அறிவு ஆன்ம நீர்மை. அது இயற்கை செயற்கை என இருவகையாயுள்ளது. மனிதனிடம் இயல்பாய் அமைந்திருப்பது இயற்கையறிவு; கற்றல் கேட்டல் முதலிய செயல்களால் வளர்ந்து வருவது செயற்கையறிவு. முன்னது நிலை அறிவு; பின்னது கலை அறிவு என்க.

பொதுவாகப் பிறப்புரிமையில் அமைந்த அந்த அறிவு கல்விப் பயிற்சியால் சிறந்து வருதலால் சிறப்பறிவு என உயர்ந்து தெளிவாய்த் தேசு மிகுந்துள்ளது.

கல்வி என்னும் பெயர் காரணக் குறியாய் அமைந்தது. கல்லுதல் என்பது கிளைத்தல், தோண்டுதல், துருவுதல் என்னும் தொழில்களை உணர்த்தி வரும். உள்ளத்தில் உறைந்துள்ள அறிவைக் கிளைத்துக் கொள்ளுதல், நூல்களைத் துருவிக் கற்றல் என்னும் வினைக்குறிப்புகளால் கல்வி என்னும் பேர் விளங்கி நின்றது.

"Education is the manifestation of the perfection already in man." (Vivekananda)

"மனிதனுள் முன்னதாகவே நிறைந்து உறைந்திருப்பதை வெளிப்படுத்திக் கொள்வதே கல்வி" என விவேகானந்தர் இவ்வாறு விளக்கியிருக்கிறார்.

"Wit and wisdom are born with a man." (Selden)

"அறிவும் ஞானமும் மனிதனோடு கூடவே பிறந்திருக்கின்றன" என்று ஜாண் செல்டேன் என்பவர் இங்ஙனம் குறித்திருக்கிறார். இயல்பாகவே அறிவுடைய மனிதன் பயிற்சியால் உயர்ச்சியடைந்து கொள்கிறான்.

ஊற்று நீரைத் தோண்டிக் கொள்வது போலவும், விளக்கைத் தூண்டி விடுவது போலவும் கல்வி ஈண்டு விளங்கியுள்ளமையை ஊன்றியுணர்ந்து கொள்ளுக.

அறிவைத் தெளிவாக்கி ஒளி செய்து வருதலால் மனிதனுக்குக் கல்வி விழி என வந்தது. நல்ல வழிகளைக் காட்டி நலம் பல ஊட்டி வாழ்வை வளம்படுத்தி வரும் தன்மை கல்விக்கு உண்மையால் அதனைக் கண் என்று முன்னோர் அருமையாகக் கருதியுரைத்துள்ளனர்.

காலங்களால் கரந்து, தேசங்களால் பிரிந்து நெடிது மறைந்துள்ள எல்லாப் பொருள்களையும் இருந்த இடத்தில் இருந்து கொண்டே தெளிவாகத் தெரிந்து கொள்ளும்படி செய்தலால் நேரே காணுகின்ற கண்ணினும் கல்வி அரிய காட்சியும் பெரிய மாட்சியும் உடையதாம்.

முகத்தில் உள்ளது ஊனக் கண்; அகத்தில் உள்ள கல்வி ஞானக் கண். எதிரே நேர்ந்த உருவப் பொருள்களை மாத்திரம் அது காணும்; இது எல்லாவற்றையும் எளிதே கண்டு கொள்ளும். அதன் காட்சியில் பட்டது மறைந்து போம்; இதன் காட்சியில் வந்தது என்றும் மறையாது நின்று நிலவும். இவ்வளவு மகிமையுடையதாயினும் எவரும் எளிதே தெளிய விழியுவமை வந்தது.

காமர் விழி என்றது காட்சி புரிந்து அருளாத குருட்டுக் கண்களும் உளவாதலால் அவற்றை விலக்கி யுணர. காமர் = அழகு. விழுமிய கல்வியை அழகிய கண் என்றது அருமை கருதி.

கல்வி உயிர்க்குக் கண்ணாயுள்ளமையால் உடலின் கண்ணோடு இணைத்துக் காட்டி உணர்த்த நேர்ந்தது.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு. (குறள், 392)

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும். (ஔவையார்)

நாயனாரும் ஔவையாரும் கல்வியை இங்ஙனம் குறித்துள்ளனர். குறிப்பும் கருத்தும் கூர்ந்து உணர வுரியன.

கற்றறி வாளர் கருதிய காலத்து
கற்றறி வாளர் கருத்தில் ஓர் கண் உண்டு
கற்றறி வாளர் கருதி யுரை செய்யும்
கற்றறி காட்டக் கயலுள வாக்குமே (திருமந்திரம்)

கல்வியைக் குறித்துத் திருமூலர் இவ்வாறு உரைத்திருக்கிறார்.

கல்வியும் செல்வமும் கண்.

மனித சமுதாயத்திற்கு இனிய கண்கள் இவை என இது சுவையாக உணர்த்தியுள்ளது. உயிர் வாழ்க்கை கண்களால் இதமாக இயங்கி வருகிறது; உலக வாழ்க்கை கல்வி செல்வங்களால் உயர்வாக நடந்து வருகிறது. ஒளி வழியே யாவும் வெளியாய் உலாவுகின்றன.

சூரியன் சந்திரன் என்னும் இரண்டு பெரிய ஒளிகளைத் தனக்கு இனிய விழிகளாக உலகம் மருவியிருத்தலால் எல்லாம் இனிது நிகழ்ந்து வருகின்றன. விழிப்புடையது விழி என வந்தது. எல்லாரும் விழிப்பாய் வேலை செய்ய விழிகள் ஒளி புரிந்து அருளுகின்றன.

உலக வாழ்வு அந்த ஒளிகளால் மேன்மையடைந்து வருதல் போல் மனித வாழ்வு கல்வி, செல்வம் என்னும் இந்த ஒளிகளால் மகிமையடைந்து வருகிறது.

மனுக் குலத்தை மாட்சி புரிந்து.

என்றது மனித இனத்துக்கு இவை செய்து வரும் காட்சியைக் கருதிக் காண வந்தது. அகம் புறம் என்னும் இருவகை நிலைகளில் நின்று முறையே இவை பெருமைகளை அருளி வருகின்றன. திருவும் அறிவும் உருவும் உயிரும் என மருவியுள்ளன.

மடமை இருளை நீக்கி மதி ஒளி ஆக்கி அதிசய நிலையில் கல்வி மனிதனை மகிமைப் படுத்துகிறது. வறுமைத் துயரை ஒழித்து வளம் பல பெருக்கிச் செல்வம் சிறப்புச் செய்கிறது.

கல்வி மாத்திரம் இருப்பின் அவர் ஒரு கண் உடையவரே. கல்வியோடு செல்வமும் சேரின் அவர் இரு கண்ணுளராய் எழில் மிகப் பெறுகின்றார். இரு பெருந்திருவும் ஒருவரிடம் ஒருங் கமைந்திருப்பது அரிய காட்சியாய்ப் பெரிய மாட்சி தருகிறது.

கல்வி யில்லாத செல்வர் ஒற்றைக் கண்ணராய் உறுகண் உறுகின்றார். கல்வியோடு கலவாத செல்வம் மணம் இழந்த மலராய் மாண்பிழந்து படுதலால் அதன் துணை நிலை புணரலாகும்.

கல்வி எல்லா மகிமைகளையும் தருகிறது; மனிதனைத் தெய்வ மாக்கி யருளுகிறது; ஆகவே அது சீவ அமுதமாய்த் தேசு மிகுந்துள்ளது.

இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுணராக் கேடின்றால்
எம்மை உலகத்தும் யாம்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து. (நாலடியார், 132)

அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்---உறுங்கவலொன்று
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லை
சிற்றுயிர்க்கு உற்ற துணை. (நீதி நெறி விளக்கம், 2)

கல்வியின் அருமை பெருமைகளையும், மாந்தருக்கு அது செய்து வருகிற உறுதி நலங்களையும் இவை உணர்த்தியுள்ளன.

நிலையினில் சலியா நிலைமை யானும்
பலவுலகு எடுத்த ஒருதிறத் தானும்
நிறையும் பொறையும் பெறுநிலை யானும்
தேவர் மூவரும் காவ லானும்
தமனியப் பராரைச் சைலம் ஆகியும்,
அளக்கவென்று அமையாப் பரப்பின தானும்
அமுதமும் திருவும் உதவுத லானும்
பலதுறை முகத்தொடு பயிலுத லானும்
முள்ளுடைக் கோட்டு முனைஎறி சுறவம்
அதிர்வளை தடியும் அளக்கர் ஆகியும்,

நிறையுளம் கருதி நிகழ்ந்தவை நிகழ்பவை
தருதலின் வானத் தருஐந்து ஆகியும்,
மறைவெளிப் படுத்தலின் கலைமகள் இருத்தலின்
அகமலர் வாழ்தலின் பிரமன் ஆகியும்,
உயிர்பரிந்து அளித்தலின் புலமிசை போக்கலின்
படிமுழுது அளந்த நெடியோன் ஆகியும்,
இறுதியில் சலியாது இருத்தலானும்
மறுமை தந்து உதவும் இருமையானும்
பெண்ணிடம் கலந்த புண்ணியன் ஆகியும்,
அருள்வழி காட்டலின் இருவிழி ஆகியும்,
கொள்ளுநர் கொள்ளக் குறையாது ஆதலின்
நிறையுளம் நீங்கா துறையருள் ஆகியும்,
அவைமுத லாகி இருவினை கெடுக்கும்
புண்ணியக் கல்வி. (கல்லாடம், 13)

மேருமலை, கடல், கற்பகதரு, பிரமன், திருமால், சிவபெருமான், கண், அருள் என்னும் இந்த அருமைப்பொருள்களோடு சிலேடையாக நேர்வைத்து ஒப்புரைத்து கல்வியின் பெருமையைக் கல்லாடர் இங்ஙனம் உரைத்திருக்கிறார். இதில் குறித்துள்ள பொருள் நிலைகளையும் அழகுகளையும் கூர்ந்து ஓர்ந்து கொள்ளவேண்டும். அறிவின்சுவைகள் இங்கே பெருகியுள்ளன.

கல்வி இங்ஙனம் அதிசய நலங்களை அருளி எழுமையும் இன்புறுத்தி வருதலால் உயிர்க்கு உறுதியாக நன்கு உரிமை செய்து கொள்ளுக.

---

552. செல்வம் வழிமுறையில் சேர்ந்துவரும் கல்வியோ
புல்லிப் பயின்றார்க்கே போதுமால்—ஒல்லையினில்
ஓதி உயர்க ஒழிந்தாயேல் நீஎன்றும்
பேதையாய் நிற்பாய் பிறழ்ந்து. (உ)

இ—ள்

செல்வம் வமிச பரம்பரையாக வந்து சேரும்; கல்வி அவ்வாறு வராது; அதனை விழைந்து பயின்றவர்க்கே அது விளைந்து வரும்; ஆதலால் விரைந்து படித்து உயர்ந்து கொள்க: அயர்ந்து

நின்றால் என்றும் மூடனாய் நீ இழிந்து உழலுவாய் என்பதாம்.

இது, இளமையில் கல் என்கின்றது.

கல்வியும் செல்வமும் கண் என முன்னர் எண்ணியறிந் தோம்; இதில் அவற்றின் இயற்கை நிலைகளை அறிய வந்துள்ளோம். இரண்டும் ஒரு முகமா இணைத்து எண்ணப்படினும் பல விசித்திர வேறுபாடுகளுடையன. ஒன்று ஈண்டு உணர வந்தது. உயிர் வழியே தொடர்ந்து வருகிற கல்விக்கும், உடல் வழியே ஒட்டி நிற்கிற செல்வத்துக்கும் உரிமை காண நேர்ந்தது அருமைக் காட்சியாய்ச் சேர்ந்தது.

வழிமுறை = பின் வருகிற சந்ததி வரிசை. அவன் மகன் அவனை வழியே தொடர்ந்து முறையாய் வருதலால் வமிசாவளி வழிமுறை என வந்தது. தலை முறை என்பது முன்சென்றதைக் குறித்து வரும். கொடிவழி, பரம்பரை, மரபுநிலை என வருவன எல்லாம் காரணக் குறிகளாய் இந்த உறவுரிமைகளை உணர்த்தி நிற்கின்றன.

செல்வம் வழிமுறையில் சேர்ந்து வரும்.

என்றது அதன் வரவு நிலையை ஓர்ந்து கொள்ள வந்தது.

தான் யாதும் முயன்று தேடாமல் சோம்பேறியாயிருந்தாலும் தந்தை ஈட்டிய பொருள் மைந்தனுக்கு வந்து சேருகிறது. கல்வி அவ்வாறு வருவது இல்லை; தான் சொந்தமாக வருந்தித் தேடிய பொழுதுதான் ஒருவன் அதனை அடைந்து கொள்ள முடியும். தேடினார்க்கு இன்பம் நல்கித் திருவருள் புரியும் கல்வி.

செல்வம் பிதிரார்ச்சிதமாய்ப் பெறலாம் ஆதலால் அது இழிந்த பேறாய் இசைந்து நின்றது. அயல்தர வருதலால் அது மயல் தந்து மரியாதையைப் பறித்துள்ளது.

கல்வி சுயார்ச்சிதமாய் வருதலால் அது புனிதமான இனிய பேறாய் அரிய நீர்மைகளை விளக்கிப் பெரிய மகிமைகளோடு பெருகி மிளிர்கிறது. ஞான சம்பத்து மான சம்பத்தாய் மருவியுள்ளமையால் வானமும் வையமும் அதனை வாழ்த்திவருகின்றன.

புல்லிப் பயின்றார்க்கே போதும்.

கல்வி ஈட்டத்தின் காட்சியை இது காட்டி நின்றது.

கருத்தை ஊன்றிப் பயின்ற அளவுதான் அது விருத்தியாய் விளைந்து வருகிறது. புல்லி=பொருந்தி. போதும்=வரும். மறு முகம் பாராமல் ஒருமுகமாய் ஆழ்ந்து அமர்ந்து பயின்றவரே தேர்ந்த கல்விமான்களாய்ச் சிறந்து திகழ்கின்றனர்.

உள்ளம் தோய்ந்த கல்வி பள்ளம் பாய்ந்த நீர்போல் வெள்ளமாய் விரைந்து நிறைகிறது. அங்ஙனம் தோயாதது• எள்ளலாய் இழிந்து மறைகிறது.

இளமையில் ஒருவன் கல்லாது கழிந்தான் ஆனல் பின்பு அவன் பொல்லாத மூடனாய் இழிந்துபட நேர்கின்முன். அந்த இழிவுநேராமல் விரைந்து பயின்று உயர்ந்து கொள்ளவேண்டும்.

ஒல்லே என்றது கல்விப் பயிற்சிக்குரிய கால எல்லையைக் கருதிக் காண. கல்வியோ என்பதில் ஒகாரம் அதன் உயர்வையும் உரிமையையும் உணர்த்தி நின்றது. உயிர்க்கு உறுதியான அரிய கல்வியைச் சிறிய பருவத்திலேயே பழகி உரிமை செய்து கொள்ளவில்லையாயின் அந்த மனித வாழ்வு பாழாய் இழிந்து பழியடைந்து படுகின்றது.

நீ என்றது மனிதனது தலைமையான நிலைமையை நினைந்து தெளிய வந்தது. மேதையாய் நின்று எவ்வளவோ மேன்மை அடைய வேண்டிய நீ பேதையாய் இழிந்து பிழைபடலாமா? இதனை விழி திறந்து நோக்கிக் கல்வியை விழைந்து கொள்ளுக.

பிதா தேடிவைத்த செல்வம் பிள்ளைக்கு வருதல்போல் கல்வி வராது; தனது சொந்த முயற்சியினலேயே அதனை எந்த மனிதனும் தேடிக்கொள்ள வேண்டும். இந்த உண்மையை உள்ளியுணர்ந்து ஒல்லையில் உயர்க.

"Learning by study must be won,
It was never entailed from son to son."

"கல்வியை வமிச பரம்பரையாக அடையமுடியாது; படிப்பினல் மாத்திரம் அதனைப் பெறமுடியும்" என்னும் இது இங்கே அறிய வுரியது. கல்வியின் வரவைக் கருதி யுணர்க.

தனது முயற்சியான பயிற்சியால் அடைய வுரிய இனிய கல்வியை மனிதன் அடையானாயின் அவன் நெடிய மடையனுகின்முன்; வறியனுயிருப்பதை விட மடையனுயிருப்பது கொடிய

இழிவாம்; அந்த ஈன இழிவில் மான மனிதன் இழிந்து படலாகாது. ஞானமுடையனாய் உயர்ந்து நலம் பல பெறுக.

கல்வியைக் கருத்தூன்றி இளமையிலேயே நன்கு கற்றுக்கொள்ள வேண்டும்; அங்ஙனம் கல்லாது நின்று விடின் எல்லா இழிவுகளும் சூழ்ந்து கொள்ளும் என்க. இழிபழிகள் நேராமல் விழுமிய கல்வியை நீ விரைந்து பெற்று உயர்ந்து கொள்ளுக.

---

553. வாய்பேசும் மாட்சியினால் மக்களுயர்ந் தார்விலங்கோ
வாய்பேச மாட்டா வகையிழிந்த—ஆய்வகையில்
கல்லாமல் சொல்லளவில் காணுமகன் பேசுகின்ற
பொல்லா மிருகம் புரை. (௩)

இ—ள்

வாய் பேசுகின்ற மாட்சிமையினால் மக்கள் உயர்ந்தனர்; வாய் பேச மாட்டாமையால் மிருகங்கள் இழிந்தன; ஆகவே நூல்களைக் கல்லாமல் சொல்லளவில் நின்ற மனிதன் பேசுகிற ஒரு பொல்லா மிருகமே ஆவன் என்பதாம்.

கல்லாமையால் நேரும் இழிவை இது உணர்த்துகின்றது.

மனிதர்கள் மேலானவர்களாய் உயர்ந்து நிற்கின்றனர்; மிருகங்கள் கீழானவைகளாய் இழிந்திருக்கின்றன. இந்த உயர்வு தாழ்வுகளுக்குக் காரணம் என்ன? மனிதன் பேசுகிறான்; மிருகம் பேச முடியாது. பேச்சு எண்ணங்களை வெளிப்படுத்தி வருதலால் பேசுகிற இனம் அறிவு நலங்கள் நிறைந்து தேசு மிகுந்துள்ளது. பேச்சிழந்த இனம் மூச்சளவில் வாழ்ந்து வருதலால் காட்டு விலங்குகளாய் அவை விலகி நிற்கின்றன. மொழி வழக்கு உயிர் விளக்கமாயுள்ளமையால் அஃது இல்லாதது இழிந்து பட நேர்ந்தது.

பேச்சுகள் மனிதனை மாட்சிமைப் படுத்தி வருகின்றன; அவை மொழிகளால் வெளிப்படுகின்றன; மொழிகள் எண்ணங்களிலிருந்து எழுகின்றன. எண்ணங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு உயர்கின்றனவோ அவ்வளவுக்கு அவ்வளவு மனிதன் உயர்கிறான். நீர் மேல் எழுந்த பூக்கள் என நீர்மையில் மக்கள் எழுந்துள்ளனர். மனிதன் எதைச் சார்கிறானோ அதன் வண்ணமாகவே

வளர்ந்து வருதலால் மேலோர்களுடைய எண்ணங்களும் செயல்களும் அவனுக்கு மேன்மைகளை அளித்தருளுகின்றன. மேலான எண்ணங்கள் நூல்களாய் வெளி வந்துள்ளன.

மக்களுடைய உள்ளங்களைப் புதுமையாக உயர்த்திப் புத்தொளி அளித்துத் தத்துவ நலங்களை அருளி வருதலால் நூல்கள் புத்தகங்கள் எனப் போந்தன.

புத்தி நலமருளிப் புத்துயிர் தந்துவரும்
புத்தகமே புத்தக மாம்.

என்றதனால் எத்தகைய நிலைகளையுடையது புத்தகம் என்பதை உய்த்துணர்ந்து கொள்ளலாம். மனிதனுடைய அகத்தைப் புனிதமாகப் புதுப்பித்து வருவதே புத்தகமாம்; அல்லாத மற்றவையெல்லாம் வெறும் செத்தைகளே.

உயர்ந்த கருத்துக்கள் நிறைந்த நூல்கள் உயிரினங்களை உயர்த்தி வருகின்றன. அறிவின் சாரங்கள் ஆன்ம போகங்களாய் அமைந்து நிற்கின்றன.

சிறந்த அரசர்களுடைய சரித்திரங்களும், உயர்ந்த பெரியோர்களின் கருத்துக்களுமே காவியங்களாகவும், நூல்களாகவும் வெளி வந்திருத்தலால் அவை அரிய உணர்வு நலங்களையும் இனிய சுவைகளையும் ஊட்டி மக்களுடைய சீவிய நிலைகளை உயர்த்தி வருகின்றன.

மேலோர்களுடைய உணர்வின் சாரங்கள் நூல்களாய் நின்று உயிரினங்களுக்கு யாண்டும் உறுதி புரிந்து வருகின்றன.

"A good book is the precious life-blood of a master-spirit embalmed and treasured up on purpose to a life beyond life."
(Milton)

"உயர்ந்த பெரியாரின் அரிய உயிரின் சாரம் பின் வருகிற சந்ததிகளுக்கெல்லாம் உரிமையாக நன்கு பாதுகாத்து வைத்திருப்பதையே நல்ல புத்தகம் என்று நாம் சொல்லி வருகிறோம்" என மில்ட்டன் என்னும் ஆங்கிலக் கவிஞர் இங்ஙனம் கூறியிருக்கிறார்.

"Books are a substantial world, both pure and good."
(Wordsworth)

"தூய்மை நன்மையுடைய உண்மையுலகமே புத்தகங்கள்" என வேட்ஸ் வோர்த் என்பவர் இவ்வாறு குறித்துள்ளார்.

இவ்வாறு அறிவு நலங்கள் செறிந்த நூல்களைப் பயின்று வரின் அவர் சிறந்த அறிவாளிகளாய் உயர்ந்து திகழ்கின்றார்; அங்ஙனம் பயிலாதவர் அறிவிலிகளாய் இழிந்து நிற்கின்றார்.

கல்லாமல் சொல் அளவில் காணுமகன் பேசுகின்ற
போல்லா மிருகம்.

கல்வியில்லாதவனை இது இங்ஙனம் சுட்டிக் காட்டியுள்ளது. மிருகங்கள் இயற்கையறிவோடு இருக்கின்றன; உண்ணுகின்றன; உறங்குகின்றன; பெட்டைகளோடு கூடுகின்றன; குட்டிகளைப் போடுகின்றன. இயற்கை அறிவோடு கூடியுள்ள மனிதனும் உண்டு உறங்கிப் பெண்டுகளைக் கலந்து பிள்ளைகளைப் பெற்று விடுகிறான். அந்தக் காட்டு மிருகத்திற்கும் இந்த நாட்டு மனிதனுக்கும் வேற்றுமை என்னை? எனின், அது பேசாது; இவன் பேசுவன். வாயடங்க நோயடங்கும் என்றபடி பேசாமையால் யாதொரு பிழையும் நேராது. இவன் பேசுவதால் இடர்கள் பல நேர்கின்றன. குறும்பு பேசிக் கோள் மூட்டிப் பொய் புகன்று புறங்கூறிப் பயனில்லாத சொற்களைப் பாரித்து உரைத்து வருதலால் பிறர்க்கு அல்லல்கள் ஆகின்றன. ஆகவே பேசாத அந்த மிருகத்தினும் பேசுகின்ற இந்த மனிதன் மிகவும் கொடியவனாகின்றான்.

கல்லாத இவனது கடுமையும் கொடுமையும் மடமையும் தெரியப் பேசுகின்ற மிருகம், போல்லாத மிருகம் என விதந்து சொல்ல நேர்ந்தது. பேச்சும் மூச்சும் உயிர் உண்டு என்று காட்டுமே யன்றி வேறு உயர்ந்த மாட்சிகளை யூட்டா.

பேசத் தெரிந்த அளவில் மனிதன் உயர்ந்தவன் ஆகான்; அந்த வாய்மொழியோடு தன் தாய் மொழியையும் ஓரளவு நன்கு கற்றுக் கொள்ளவேண்டும்; அங்ஙனம் கற்கவில்லையானால் முன்னோர்களுடைய பெரிய எண்ணங்களையும் அரிய அறிவு நலங்களையும் அவன் இழந்தவனாகிறான்; அந்த இழவு இழிபழிகளை விளைத்து அவனை ஈனன் ஆக்கி விடுகிறது.

இலங்கு நூல் கல்லாதான் விலங்கு என்றார் நாயனார்.

நீட்டு ஓலை வாசியான் காட்டு மரம் என்றார் ஔவையார்.
கற்றறிவில்லா உடம்பு பாழ் என்றார் விளம்பிநாகனார்.
கல்லாதான் கோட்டி கொளல் இன்னா என்றார் கபிலர்.
கல்லாது நீண்ட ஒருவன் நாய் என்றார் சங்கப்புலவர்

உயர்ந்த உள்ளமுடைய நல்லோர்கள் இங்ஙனம் இகழ்ந்து சொல்லியது கல்லாமையின் பொல்லாமையை நினைந்து வருந்தி நெஞ்சம் இரங்கி என்க. சிறந்த மனிதப் பிறப்பை அடைந்தும் கல்லாமல் வீணே கழிந்து படுதல் மிகுந்த பரிதாபம். ஆதலால் மேலோர்கள் இவ்வாறு பரிந்து கூற நேர்ந்தார்.

கற்றவர் அறிவு நலங்களை அடைந்து பெருமைபெறுகின்றார்; கல்லாதவர் அறிவு குன்றிச் சிறுமை யுறுகின்றார். உள்ளத்தில் உணர்வொளி பெருகவே உலகத்தில் அவர் ஒளிவீசி நிற்கின்றார்; அந்த அறிவொளி குறைந்தவர் அவலமாய் இழிந்து படுகின்றார்.

கல்லாதான் கல்லாய்க் கழிந்திழிந்தான்; கற்றவனே
எல்லொளி வீசி எழில்மிகுந்து---நல்ல
மணியாய் உயர்ந்தான்; மதிகெட்டு நின்றார்
பிணியாய் இழிந்தார் பிறழ்ந்து.

கல்விமான் அரிய மணியாய் ஒளி மிகுந்து உயர்கிறான்; கல்லாதவன் கடிய கல்லாய் இழிந்து கிடக்கின்றான் என்றது நிலைமைகளை நினைந்து தெளிய வந்தது. உயிரொளி மங்கினமையால் உயர்வொழிய நேர்ந்தது.

நந்தன் என்னும் உழவன் ஒருநாள் ஒரு பெரியவரைக் கண்டான்; உரிமையுடன் வணங்கினான். அவர் அறிவுரைகள் கூறினார்; பின்பு குடும்ப நிலைகளை விசாரித்து மகனுடைய படிப்பைக் குறித்துக் கேட்டார். "அவன் படிக்கவில்லை; இரண்டு எருமைகள் உள்ளன; அவற்றை மேய்த்துக்கொண்டிருக்கிறான்" என்று அவ்வுழவன் உரைத்தான். அவ்வுரையைக் கேட்டு அவர் வருந்தினார்; மாட்டுமகனே! என்று மறுகி இரங்கினார்; மீட்டும் அவனை நோக்கி, "அப்பா இரண்டு என்று இனி நீ யாரிடமும் சொல்லாதே; உனக்கு மூன்று எருமைகள் இருக்கின்றன; நீ பெரிய பாக்கியவான் போய்வா!" என்று வாய் மொழிந்தருளினார்.

படியாமையால் தன் மகனை எருமை மாடு என்று குறிப்பாக அப் பெரியவர் இகழ்ந்துரைத்தார் என அவன் உணர்ந்து கொண்டான். மறுநாளே பையனைப் படிக்க வைத்தான். சில காலத்துள் அவன் நன்கு படித்துத் தேர்ந்தான். சிறந்த அறிவாளியா யிருந்தமையால் அரசாங்கத்தில் ஓர் உயர்ந்த பதவியும் கிடைத்தது. தான் கற்று முன்னுக்கு வந்த நிலைமையைத் தன் தந்தை ஒருநாள் உரைத்ததைக் கேட்டு அம்மைந்தன் வியந்தான். தன்னைமனிதனுக்கிய அந்தமகானை நன்றியறிவோடு கண்டு தொழ வேண்டும் என்று கருதி விரைந்தான். அதிகார முறையில் ஓர் உயர்ந்த குதிரையிலேறி அப் பெரியவரிடம் வந்தான். "ஒரு இழிந்த எருமைக்குச் சிறந்த அரசபதவி தந்து அதனைக் குதிரையில் இவர்ந்து வரும்படி செய்த பெரிய தரும மூர்த்தி!" என உருகி யுரைத்து அடியில்விழுந்து தொழுது எழுந்து அவர்எதிரே வணங்கி நின்றான். அவர் திகைத்தார். அவன் உண்மையை உரைத்தான். அவர் உள்ளம் உவந்தார்.

"கல்லா திழிந்து கடைப்பட் டெருமையாய்
நில்லா துயர்ந்த நிலையருளி---எல்லாரும்
கண்டுதொழ என்னையிந்தக் காட்சி புரிந்துவைத்த
மண்டுதவம் என்றான் மகிழ்ந்து."

இங்ஙனம் மொழிந்து மீண்டும் பணிந்து அவன் விடை பெற்றுப் போனான். கல்லாமல் இழிந்து பொல்லாத மிருகங்களாய்ப் போய்த் தொலையாதீர்கள்; கற்று உயர்ந்து கொள்ளுங்கள் என உலகத்தவர்க்கு இந்தச் சரித்திரம் ஓர் உறுதி நலனை உணர்த்தி யுள்ளது. உண்மையை ஓர்ந்து உயர்வு காணுக.

---

554. செல்வம் குலமுதலாம் சீரெல்லாம் சேர்ந்திருந்தும்
கல்வியொன் றின்றேல் கடையனாய்—நல்ல
விழியிரண்டும் இல்லாத மெய்யேபோல் வெய்ய
பழியே மிகுந்து படும். (௪)

இ—ள்

செல்வம் குடிப்பிறப்பு முதலிய சீர்கள் எல்லாம் ஒருங்கே நிறைந்திருந்தாலும் கல்வி ஒன்று இல்லையானால் அவன் கண் இழந்த குருடனாய் இழிந்து படுகிறான் என்பதாம்.

இது, கல்லாதவன் கண் இல்லாதவன் என்கின்றது.

சிறப்புகளும் மதிப்புகளும் பல வகைகளில் மனிதனுக்கு அமைந்துள்ளன. பிறப்புரிமைகளில் சிலர் சிறப்பு நலங்களை அடைந்திருக்கின்றனர். அரசர் குடி, அமைச்சர் குடி, அறிஞர் குடி, வீரர் குடி என இவ்வாறு பரம்பரையான குடும்பங்களில் பிறந்து வருபவர் இயல்பாகவே மதிப்படைந்து நிற்கின்றனர்.

இந்த மதிப்புகள் சொந்தமானவையல்ல; புறத்திலிருந்து வந்தன; ஆதலால் தனது அகத்தில் தகுதியில்லையாயின் அந்த மகனுக்கு இவை அயலாகின்றன.

செல்வம் அழகு பலம் குலம் முதலிய நலங்கள் எல்லாம் ஒருவனுக்கு ஒருங்கே வாய்ந்திருந்தாலும் கல்வி அவனிடம் இல்லையாயின் அவன் கடையனாயிழிந்து நிற்கிறான். கல்லாதவனிடமுள்ள உருவ அழகும் திருவும் பிறவும் பொல்லாதனவாய்ப் புலையுறுகின்றன.

நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை அற்று. (குறள், 407)

கல்வியறிவில்லாதவனது வடிவழகை வள்ளுவப்பெருந்தகை இவ்வாறு எள்ளலாக இழித்துக் காட்டியிருக்கிறார்.

தருமர் முதலிய ஐவருடைய மன நிலைகளைக் குறித்து ஒரு முறை கண்ணன் வினவி வருங்கால் நகுலனை நோக்கி உன் உள்ளக் கிடக்கையை உண்மையாக உரை என்று கேட்டார். அப்பொழுது அவன் உரைத்த மொழிகள் அயலே வருகின்றன.

நகுலன் சொன்னது

குலமிக உடையர் எழில்மிக உடையர்
குறைவில் செல்வமுமிக வுடையர்
நலமிக வுடையர் என்னினும் கல்வி
ஞானம் அற்பமும் இலாதவரை
வலமிகு திகிரிச் செங்கையாய்! முருக்கின்
மணமிலா மலர் என மதிப்பேன்
சலமிகு புவியில் என்றனன் வாகைத்
தார்புனை தாரைமா வல்லான். (பாரதம்)

குலம் எழில் செல்வம் முதலிய நலங்கள் எல்லாம் உடையராயினும் கல்வி இல்லாதவரை ஒரு பொருளாக மதியேன் என

அம் மதிமான் இங்ஙனம் உறுதியாக உரைத்திருக்கிருர். செம் முருக்கம் பூ பார்வைக்குப் பெரிதாகவும் அழகாகவும் இருக் கும்; மணம் இராது. நெடிது வளர்ந்து எழிலாய் இருந்தாலும் கல்வியில்லாதவன் அந்த மணம் இல்லா மலர் என நேர்ந்தான்.

மலர்க்கு மணம் போல் உயிர்க்குக் கல்வி என்றதனுல் அஃது இல்லாத உயிர் வாழ்வின் இளிவு தெளிவாம்.

"ரூப யௌவந ஸம்பந்நா விசாலகுல ஸம்பவா:
வித்யா ஹீநா ந சோபந்தே நிர்க்கந்தா இவ கிம்சுகா:"

"உயர்ந்த குடியில் பிறந்து சிறந்த உருவமும் பருவமும் அமைந்திருந்தாலும் வித்தையில்லாதவன் மணமில்லாத முருக்கம் பூவைப்போல் ஒளியிழந்து இழிந்தே நிற்பன்" என வடமொழி யாளரும் இங்ஙனம் குறித்துள்ளனர்.

மண்ணிற்செய் பாவைமீது வயங்குபொற் பூச்சோ, தண்பூங்
கண்ணியை மாற்றில் சூடும் காட்சியோ, பழம்பாண்டத்தில்
பண்ணிய கோலமோ, நற்பண்பொடு ஞானம் கல்வி
புண்ணியம் ஏதும் இல்லான் பூண்டபேர் எழில் உடம்பே.

(நீதி நூல்)

கல்லாதவனது உருவ அழகை மேலோர்கள் இவ்வாறு இழித்துக் கூறியுள்ளனர். சிறந்த மதிப்புடைய அழகும் கல்வி யில்லாதவனிடம் சார்ந்தமையால் இழிந்து பட்டது.

கல்வி உயிரழகு ஆதலால் அதனை இழந்தவன் எவ்வளவு எழிலுடையனுயினும் எவ்வழியும் இழி பழிகளை அடைய நேர்ந்தான்.

குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல---நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு. (நாலடியார்)

முடி அழகு உடை அழகு முதலிய புற அழகுகள் எல் லாம் அழகல்ல; அக அழகாகிய கல்வி அழகே அழகு என இது காட்டியுள்ளமை காண்க.

தன்னை யுடையானை அரசர் முதல் யாவரும் உவந்து கண்டு புகழ்ந்து தொழச் செய்யும் ஆதலால் கல்வி அழகு என வந்தது.

பிற அழகுகள் நிலை திரிந்து அழியும்; கல்வி அழகு என்றும் நிலையாய் நின்று நிலவும். எவ்வழியும் அழியாத இந்த அழகை யுடையவன் யாண்டும் திவ்விய மகிமைகளை அடைந்து வருகிறான்.

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம்---முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக்கு அழகு செய்வார். (நீதிநெறிவிளக்கம், 13)

மயிர் வனப்பும் கண்கவரும் மார்பின் வனப்பும்
உகிர்வனப்பும் காதின் வனப்பும்---செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு. (சிறுபஞ்சமூலம், 37)

இடைவனப்பும் தோள்வனப்பும் ஈடின் வனப்பும்
நடைவனப்பும் நாணின் வனப்பும்---புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல எண்ணோடு
எழுத்தின் வனப்பே வனப்பு. (ஏலாதி, 75)

கல்வியே அழகு எனக் குறித்துக்காட்டி அதன்மகிமையை விளக்கி வந்துள்ள இவை இங்கே நன்கு காணத்தக்கன.

இத்தகைய கல்வியை இழந்திருப்பது எத்தகைய இழிவு! எவ்வளவு இழவு! அவ்வளவையும் செவ்வையாகச் சிந்திக்க வேண்டும். இழி நிலையை உணராமல் வாழ்வது ஈனமேயாம்.

விழி இல்லா மெய்யே போல் பழியே.

கல்லாமையின் இழிவைத் தெளிவாகக் காட்ட இவ்வுவமை வந்தது. கண் இல்லாத உடல் போல் கல்வி இல்லாத உயிர் என்றது இருளடைந்திருக்கும் அதன் மருள் நிலை தெரிய.

கல்லாதவன் அறிவு நலம் குன்றி உயிரொளி மங்கி வறிதே இழிந்திருப்பன் ஆதலால் கொடிய குருடன் என நின்றான்.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். (குறள், 393)

கற்றவர் நிலையும் கல்லாதவர் புலையும் இங்ஙனம் இது ஒருங்கே காட்டியுள்ளது. கண் அனைய அருமைக் கல்வியை இழந்து மனிதன் சிறுமைப்பட்டிருப்பது பெரியபரிதாபமேயாம்.

கண்ணே அனையதெனக் கல்விதனை வள்ளுவப்பேர்
அண்ணல் இரங்கி அறிவித்தும்---எண்ணமுடன்
கற்றுத் தெளியாமல் கண்குருடு பட்டுநமர்
இற்றொழிதல் என்னோ இடர்.

அரிய கல்வியை உரிய பருவத்தே பயின்று பெரியவனுருக.

---

555. மனித உருவை மருவினும் கல்வி
இனிதமையா தாயின் இளிவே—மனிதன்தான்
தெய்வம் எனவே சிறப்பருளும் கல்விதனை
எய்தார் இறந்தார் இழிந்து. (௫)

இ—ள்

அரிய மனிதப் பிறப்பை அடைந்திருந்தாலும் கல்வி யில்லை யாயின் அது இளிவாய் இழிந்துபடும்; மனிதனைத் தெய்வமாகச் செய்தருளுகிற கல்வியை உரிமையுடன் அடைந்து கொள்ளாதவர் உயிரோடிருந்தாலும் இறந்தவரே என்பதாம்.

இழிபிறவிகள் பலவும் தப்பி மனித உருவை மருவி வருவது பெரிதும் அரிது ஆதலால் அந்த அருமை நிலையை உம்மை உணர்த்தி நின்றது. எண்ணரிய பிறவிகளுள் மானிடப் பிறவி மிகவும் கண்ணியமுடையது; ஆகவே அது புண்ணியப் பேருக எண்ண வந்தது.

அத்தகைய அரிய உயர்ந்த பிறவியும் கல்வியைப்பெறவில்லை யானல் புல்லிதாய் இழிந்து படுகின்றது. கல்லாமையால் அறிவு வளர்ச்சி இல்லாமல் போகிறது; போகவே பொல்லாத மடமைகள் புடைசூழ்ந்து கொள்ளுகின்றன; கொள்ளவே அந்த மனித வாழ்வு எவ்வழியும் எள்ளலாய்த் தாழ்ந்து இழிவுகளில் வீழ்ந்து அழிவுகளில் ஆழ்ந்து அவலமாய் உழலுகின்றது.

கல்வி இல்லாதவர் ஒளி யில்லாத விழி போலவும், சிறகு இல்லாத பறவை போலவும் வலியிழந்து இழிவுறுதலால் அவரது வாழ்க்கை பழியடைந்துள்ளது.

"சுநப் புச்சமிவ வ்யர்த்தம் ஜீவிதம் வித்யயா விநா
ந குஹ்யகோபநே சக்தம் ந சதம்சநிவாரணே."

"கல்வி யில்லாதவனது ஜீவியம் நாய் வால் போல் விருதா வானது; மறைக்கவேண்டியதை மறைத்து மானம் காக்காமல் ஈனமாய் அது இழிந்துள்ளது" என்பது மேலே குறித்த சுலோகத்தின் பொருள். நாய்வாலே உவமை குறித்தது எள்ளல் இழிவுகளை உள்ளி யுணர. மாடு குதிரை கழுதை பன்றி முதலிய மிருகங்களின் வால்கள் மருமநிலையை மறைத்து ஈக்கள் முதலியவற்றால் இடர்கள் நேராமல் நீக்கிக் காக்கின்றன. நாய் வால் அவ்வாறு யாதொரு பலனுமின்றி வீணே கோணலாத் தோன்றி நிற்கிறது. ஈனமான அந்த வீணத்தோற்றம் கல்லாதான் தோற்றத்துக்கு இங்கே உவமானமாய் வந்தது.

உயர்ந்த பிறப்பில் பிறந்திருந்தும் உரிய பருவத்தில் கல்லாமையால் மனிதன் இவ்வாறு பொல்லாத பழிகளை அடைய நேர்ந்தான். கலையிழந்த போதே தலையிழந்து தாழ்ந்தான்.

கல்வி அமையா தாயின் இளிவே.

என்றது வேறு வகையில் எவ்வளவு உயர்வுகள் அமைந்திருந்தாலும் கல்வி ஒன்று அமையவில்லையாயின் அவன் பிறப்பு இழிக்கப்படும் என்பதை இது உணர்த்தி நின்றது. உலக நிலையில் குலம் முதலியவற்றால் இழிந்தவனாயினும் கல்வி யுடையவன் உயர்ந்த மதிப்பை அடைந்து கொள்ளுகிறான்; எல்லாச் செல்வங்களையும் எய்தி யிருந்தாலும் கல்லாதவன் புல்லியனாகவே எண்ணப்படுகிறான்.

மண்ணைப் பொன் ஆக்குவது போல் எவ்வளவு தாழ்ந்தவனையும் கல்வி திவ்விய நிலையில் உயர்த்தி யருளுகின்றது.

தெய்வம் எனவே கல்வி சிறப்பு அருளும்

மண்ணுலகில் பிறந்த மனிதனே எனினும் கல்வி யுடையவன் அறிவால் சிறந்து விளங்குதலால் விண்ணுலகில் இருக்கும் தேவனைப்போல் யாவரும் அவனை மதித்துப் போற்றுகின்றனர்.

"தேவர் அனையர் புலவர்" (நான்மணிக்கடிகை, 75)

என்றார் விளம்பிநாகனார். கல்வியால் அறிவு ஒளி பெற்று உயர்கிறது. உயரவே அந்த மனிதன் எந்தவகையிலும் சிறந்து உயர்ந்து விளங்குகிறான். புலவர் என்னும் பெயர் கல்வியறிவால் தலை சிறந்தவர் என்னும் பொருளை யுடையது.

கலை அறிவால் உயர்ந்திருத்தலால் தேவரும் புலவர் எனநேர்ந்தார்.

உயர்நிலையோர் சுரர் உம்பர் புலவர்
அண்டர் முதல்வர் ஆதித்தர் சுவர்க்கர்
பொன்னுலகுடையோர் தேவர் பொதுப்பெயர்.
(பிங்கலந்தை)

தேவர்க்குப் புலவர் என்று ஒரு பெயர் இதில் வந்துள்ளது.

"புத்து ஈர்த்து அலையாமல் புலவர்நாடு உதவுவது"
(இராமா, நாடவிட்ட, 21)

தெய்வ லோகத்தைப் புலவர் நாடு என்று இது குறித்திருக்கிறது. இத்தகைய உத்தம நிலையில் உயர்த்தியருளுகிற அருமைக் கல்வியைப் பெற்றவரே பிறவி நலனை உற்றவராய் உயர்கிறார்; பெறாதவர் பிறப்பின் சிறப்பை இழந்து இழிந்துபடுதலால் அவர் இருந்தும் இறந்தார் என நேர்ந்தார். உயிருக்கு அமுதமான இனிய கல்வியை உடனே உரிமை செய்து கொள்ளுக.

---

556. உடலுக் குணவுபோல் ஒண்மதிக்குக் கல்வி
அடலுள் அருளும் அதனால்—படமகன்று
தேசுடைய ராகிச் சிறந்து திறல்மிகுந்து
ஓசையுடன் நிற்பர் உயர்ந்து. (சு)

இ—ள்

உடலுக்கு உணவுபோல் உணர்வுக்குக் கல்வி உறுதி நலம் அருளுதலால் அதனையுடையவர் மடமையிருள் நீங்கி ஒளிமிகுந்து தெளிவமைந்து உயர்ந்து விளங்குவர் என்பதாம்.

இது கல்வி உயிர் அமுதம் என்கின்றது.

உடல், உள்ளம், உணர்வு, உயிர் என்னும் இவை மனித உருவங்களாய் மருவியுள்ளன. மலரின் மணமும் நிறமும் போல உணர்வும் உள்ளமும் உயிரின் குண நீர்மைகளாய்க் குலாவி நிற்கின்றன. கல்வியால் அறிவு தெளிந்தபொழுது அது சிறந்து திகழ்கிறது.

அரிய உயிர் இனிது தங்கியிருத்தற்கு உரிய நிலையமாயுள்ளமையால் உடலை யாவரும் பிரியமாய் வளர்த்து வருகின்றனர்.

உடல் உணவால் நிலைபெற்றுள்ளது. உணவு இல்லையானால் நிற்றல் இருத்தல் கிடத்தல் நடத்தல் முதலிய தொழில்களை அது செய்யாது. உண்டியினாலேதான் உடல் உரம் அடைந்து எவ் வழியும் இனிது இயங்கி வருகிறது.

உணவு உடலுக்கு உறுதிபுரிந்து வருதல்போல் கல்வி உணர் வுக்கு உறுதி பயந்து வருகிறது. கல்லாத அறிவு உண்ணாத உடல் போல் மெலிந்து தளர்ந்து யாதொன்றும் செய்ய இயலாமல் இழிந்து படுகிறது. உயிரின் உணவாயுள்ளமையால் கல்வி அமு தம் என வந்தது.

கல்வி இல்லையானால் அந்த அறிவு புல்லிதாய்ப் பொலிவிழந்து போதலால் அது எவ்வழியும் இழிவடைந்து ஒழிகிறது.

கலை அறிவு தலையறிவாய்த் தழைத்து வருகிறது; அந் நிலையை நழுவவிடின் அது புலையாய் இழிந்து புன்மையுறுகிறது.

சத்துள்ள நல்ல உணவு உடலை வளர்த்து நலம் பல செய் கின்றது; அது போல் சாரமுள்ள இனியகல்வி அறிவைவளர்த்து அரிய பல உறுதி நலங்களை உதவி வருகிறது.

மனிதன் எண்ணங்களால் உயர்கிறான். உயர்ந்த எண்ணங் களை இழந்தபொழுது அவன் இழிந்த மிருகமாய்க் கழிந்துபடுகி றான். அறிவு நலம் குறைய அவலஇழிவுகள் பெருகுகின்றன. மேலோர்களுடைய மேதா விலாசங்களும், எண்ணங்களும் நூல் களில் மேவியுள்ளன. அந்த நூல்களைக் கற்குந்தோறும் அவர்க ளுடைய அறிவு நலங்கள் கற்கின்றவர்களிடம் பெருகி வருகின் றன. வரவே அரிய கலைஞராய்ப் பெரிய அறிவாளிகளாய் அவர் பெருமகிமை பெறுகின்றனர்.

கல்வி இவ்வாறு நல்ல பான்மை மேன்மைகளை நல்கி வருத லால் அதனை எவ்வழியும் கற்றுக் கொள்ள வேண்டும் என்று பெரியோர்கள் எல்லாரும் உரிமையோடு உரைத்துவருகின்றனர்.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே. (1)

கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே. (2)

நாற்பால் குலத்தின் மேற்பால் ஒருவன்

கற்றிலன் ஆயின் கீழிருப் பவனே. (3)

எக்குடி பிறப்பினும் யாவரே ஆயினும்
அக்குடியில் கற்றோரை மேல்வரு கென்பர். (4)

அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும். (5)

(நறுந் தொகை)

கல்வியின் பெருமையையும், கல்லாமையின் சிறுமையையும் பலவகையிலும் எடுத்துக் காட்டி அதிவீரராமபாண்டியன் இவ்வாறு அறிவு கூறியிருக்கிறார். அரச குலத் தோன்றலான இந்த மதிமான் மனித குலத்துக்கு மதியூட்டி வழிகாட்டியிருக்கும் முறை உவகை நிலையமாய் ஒளி சிறந்து திகழ்கின்றது.

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போர் அன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோர் உள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே. (புறம், 183)

நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னன் கல்விநலனைக் குறித்து இவ் வண்ணம் பாடியிருக்கிறார். அரிய பொருள்களை வாரிக் கொடுத்தோ, உரிய ஏவல்களைச் செய்தோ, என்ன பாடு பட்டாவது மக்கள் படித்துக் கொள்ள வேண்டும் என்று இம் மன்னன் வடித்துச் சொல்லியிருப்பது நுனித்து நோக்கத்தக்கது.

கைப்பொருள் கொடுத்தும் கற்றல்! கற்றபின் கண்ணும் ஆகும்;
மெய்ப்பொருள் விளக்கும் நெஞ்சின் மெலிவிற்கோர் துணையுமாகும்;
பொய்ப்பொருள் பிறகள் பொன்னும் புகழுமாம் துணைவி ஆக்கும்
இப்பொருள் எய்தி நின்றீர் இரங்குவ தென்னை? என்றான்.

(சீவக சிந்தாமணி)

கல்வியினால் உண்டாகின்ற பலவகை நன்மைகளையும் எடுத்துச் சொல்லிச் சீவக மன்னன் இவ்வாறு கூறியிருக்கிறான்.

குடி சனங்கள் யாவரும் கற்றவர்களாயிருந்தால் நாடு சிறந்து விளங்கும்; தங்கள் ஆட்சியும் அமைதியாய் இனிது

நடைபெறும் ஆதலால் அரசர்கள் கல்வியை யாண்டும் இவ்வண்ணம் விழைந்து பேணிப் புகழ்ந்து போற்றி வருகின்றனர்.

கற்றவன் மனிதனாய் உயர்ந்து வருகிறான்.

கல்லாதவன் மிருகமாய் இழிந்து திரிகிறான்.

கல்லாத மக்களையுடைய நாடுகள் பொல்லாத காடுகளாய்ப் புன்மையடைந்திருக்கும் ஆதலால் நாடு ஆள நேர்ந்தவர் எவரும் தம் குடிகளிடம் கல்வியைப் பல் வகையிலும் பரப்பி நன்மை செய்ய நேர்ந்தனர். கல்லாத மாக்களைக் கட்டி ஆள்பவன் ஆடு மாடுகளை மேய்ப்பவனைப் போல் பீடழிந்து பிழைபடுகின்றான்.

தன்பால் வாழும் மக்களுள் கற்றவர்களின் அளவைக் கொண்டே ஒரு நாடு நன்கு மதிக்கப்படுகின்றது. தற்காலத்தில் நம் நாடு கல்வியில் தாழ்ந்து நிற்கிறது.

அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மன், ஜப்பான், ரஷ்யா முதலிய தேசங்களில் நூற்றுக்குத் தொண்ணூற்று மூன்று பேர் படித்திருக்கிறார்கள். ஞானபூமி என்று நாம் பெருமை பேசிக் கொண்டுள்ள நம் இந்தியாவில் நூற்றுக்குப் பத்துப் பேரே படித்திருக்கின்றனர். மற்றைத் தொண்ணூறு பேர்? படியாதவர் என்னும் பட்டதாரிகளாய் நெடிதோங்கி யுள்ளனர். உவமானமே இல்லாத இந்த அவமானத்தை நீக்கி அறிவு நலம் ஆக்க நமது அரசாங்கம் இப்பொழுது முயன்று வருகிறது. முயற்சியும் பயிற்சியில் ஏறிப் பயனாய் உயர்ச்சியடைய வேண்டும்.

எழுத்தை அறிந்து கொள்ளுவது ஓரளவு கல்வியேயாயினும் உள்ளத்தைப் பண்படுத்துவது தான் உண்மையான கல்வியாம். அந்தப் பண்பாடு பரம்பரையாகச் சிறிது மருவி வருதலால் படியாதிருந்தாலும் இந்நாட்டு மக்கள் இழிந்து ஈனமாய்ப் போய் விடாமல் மனிதராகவே மானமுடன் வாழ்ந்து வருகின்றனர். நல்ல கல்வியை ஒல்லையில் உதவி ஆட்சியாளர் மாட்சி புரியின் அது நாட்டுக்குப் பெரிய காட்சியாம்.

இராமன் ஆட்சியில் கல்வியும் செல்வமும் கனிந்திருந்த நிலையை நம் கவிச் சக்கரவர்த்தி சுவையாகச் சொல்லியிருக்கிறார்.

கல்லாது நிற்பார் பிறர்இன்மையின் கல்வி முற்ற
வல்லாரும் இல்லை; அவை வல்லர் அல்லாரும் இல்லை;

எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்த லாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ.
(இராம, நகரப் படலம், 74)

இந்தக் கவியின் அழகைக் கண்டு கண்டு களிக்கின்றோம். கலையின் சுவையை உண்டு உண்டு சுகிக்கின்றோம். சுவையைத் தாமாகவே நுகர வேண்டும்; பிறர் ஊட்டின் உருசி குறைந்து போம். உணர்வமுதங்களைக் கூர்ந்து நோக்கி ஓர்ந்து நுகர்க.

கற்றவர் கல்லாதவர் செல்வர் வறியர் என அயோத்தியில் எவரையும் தரம் பிரித்துக் காண முடியாது. எல்லாரும் கல்விமான்களே; எல்லாரும் செல்வர்களே. படியாதவர் ஒருவரும் இல்லை ஆதலால் படித்தவர் இவர் என யாரையும் குறித்துச் சொல்ல முடியவில்லை. எல்லாரும் கலையறிவில் தலை சிறந்தவரா யுள்ளனர். கவி சிருட்டியில் காட்டியுள்ள இப்படி ஒரு நாட்டைப் பிரம சிருட்டியில் காண முயல்கின்றோம். கருதி யலைகின்றோம்.

---

557. மூடன் எனுமொழியை மூடருமே கேட்கமனம்
கூடா தழன்று கொதிக்கின்றார்—பீடுபெறக்
கற்றவ் விளிவைக் களையா தயர்ந்துநின்று
மற்றவரை நோதல் மடம். (எ)

இ—ள்

மூடன் என்னும் வார்த்தையை மூடரும் கேட்க வருந்தி முனிந்து கொதிக்கின்றார்; அந்த ஈன நிலை ஒழியும்படி மான முடன் கற்று உயர்ந்து கொள்ளாமல் அயர்ந்து நின்று பிறரை நோதல் பிழையாம் என்க.

பணம் இல்லாதவன் ஏழை வறியன் என இழிந்து நிற்கிறான். படிப்பு இல்லாதவன் மடையன் மூடன் எனக் கடையாகின்றான். படியாதவனாயிருந்தாலும் அவனைப் பார்த்து நீ மூடன் என்றால் அவன் சகிக்கமாட்டான். தன்னை அன்னவாறு சொன்னவனை எதிர்த்துச் சினந்து இகழ்ந்து பேசுகிறான்.

கல்லாமல் கழிந்துநின்ற தனது பொல்லாமையை உணர்ந்து கொண்டாலும் அந் நிலையைப் பிறர் சுட்டிச் சொல்லும்பொழுது

அவன் சுளித்து வருந்துகிறான். உயர்ந்த நிலைகளையே சீவர்கள் விழைந்துள்ளனர் என்பதை இது விளக்கி நிற்கின்றது. இழிந்த நிலைகளில் தாழ்ந்திருந்தாலும் தங்களை உயர்ந்தவர்களாகப் புகழ்ந்து சொன்னால் அதனை அவர் உவந்து கேட்கின்றனர். தங்கள் குறைகளை மறந்து மயங்கி யுழலுகின்றனர். உச்ச நிலைகளை மனிதர் இவ்வாறு கொச்சையாய் நச்சி நிற்றலால் இச்சக வார்த்தைகள் யாண்டும் பெருகி எதிர் வர நேர்ந்தன.

"கல்லாத ஒருவனைநான் கற்றாய் என்றேன்;
காடெறியும் மறவனை நாடாள்வாய் என்றேன்;
பொல்லாத ஒருவனைநான் நல்லாய் என்றேன்;
போர்முகத்தை அறியானைப் புலியேறு என்றேன்;
மல்லாரும் புயம்என்றேன் சூம்பல் தோளை
வழங்காத கையனைநான் வள்ளல் என்றேன்;
இல்லாது சொன்னேனுக்கு இல்லை என்றான்
யானும் என்றன் குற்றத்தால் ஏகின்றேனே."
(இராமச்சந்திரகவிராயர்)

இழிந்த உலோபிகளிடம் சென்று அவரைப் பலவாறு புகழ்ந்து கூறியும் யாதொரு பலனும் பெறாமல் ஒரு கவிராயர் வருந்திப் போயுள்ளதை இதனால் அறிந்து கொள்ளுகிறோம். தம் குற்றத்தைக் குறித்துச் சொல்லி உலக நிலைகளின் புலைகளைக் கவிஞர் அழகாக விளக்கிப் போயிருப்பது சுவை சுரந்துள்ளது.

கல்லாமல் நின்று இழிந்து படாமல் எல்லாரும் கற்று உயர்ந்து கொள்ளவேண்டும் என்றே மேலோர் யாண்டும் விழைந்து வேண்டி வருகின்றனர்.

தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு வைத்துப் படிப்பிப்பது பெற்றோர்களின் பெருங் கடமையா யுள்ளது. அவ்வாறு செய்யாது ஒழியின் அது அவர்க்கு வெய்ய பழி யாகின்றது.

மாலினால் இருவரும் மருவி மாசிலாப்
பாலனைப் பயந்தபின் படிப்பி யாதுயர்
தாலமேல் செல்வமா வளர்த்தல் தங்கட்கோர்
காலனை வளர்க்கின்ற காட்சி போலுமே." (நீதிநூல்)

படியாத பிள்ளை கொடியனாய் வளர்ந்து குடிக்குக் கேடு செய்வன் ஆதலால் பெற்றோர்க்கு அவன் காலன் என நேர்ந்தான்.

கல்லாத மகன் தனக்கும் தன் குடிக்கும் பொல்லாதவனுகிறுன். ஆகவே வழி வழியாய் மடமை மண்டி அக் குடி பழியடைய நேர்கின்றது. அந்த இழிபழி ஏருமல் இளமையிலேயே விழி திறந்து விரைந்து கற்று உயர்ந்து கொள்பவர் சிறந்த மனிதராய் விளங்கி நிற்கின்ருர். அயர்ந்து நின்ருர் இழிந்து படுகிருர்.

மட்டி மடையன் மதிகேடன் மூடனென
ஒட்டி உளவாகும் ஊனமெல்லாம்---கட்டிப்
படியா திருந்த பழியால் விளைந்த
மடியா தெழுந்து மகிழ்.

மடையன் மூடன் என்னும் இழிபெயர் தன்னை அடையாதபடி பாதுகாத்துக்கொள்ளின் அந்த மகன் மானமும் ஞானமும் உடையனுய் மகிமை அடைகிருன். படியாது கழியின் அப் பிறவி பாழாய் முடிகிறது.

மற்றவரை நோதல் மடம்.

தான் கற்று உயராமல் கடையாயிருந்து கொண்டு தன்னைக் குற்றஞ் சொல்பவரைக் கொதித்து நோவது மடமையாம் என இது உணர்த்தி நின்றது. கல்லாமையால் விளையும் இளிவைக் கருதி உணர்ந்து ஒல்லையில் கற்று உன்னை ஒளிசெய்துகொள்ளுக.

---

558. செல்வன் எனஒருவன் சேரவரின் ஆயிரம்பேர்
அல்லல் வறுமை அடையவரும்—கல்விமான்
என்ன ஒருவன் எழின்ே அறிவுபலர்
துன்ன வருவர் தொடர்ந்து. (அ)

இ—ள்

ஒருவன் செல்வன் ஆய் உயர்ந்தால் ஆயிரம்பேர் அல்லல் வறுமைகள் அடைந்து தாழ நேர்வர்; கல்விமான் என ஒருவன் சிறந்து எழுந்தால் பல்லாயிரம்பேர் நல்ல அறிவுகளடைந்து தொடர்ந்து உயர்ந்து வருவர் என்க.

செல்வம் மனித வாழ்க்கைக்கு இனிய துணையாய் அமைந்திருக்கிறது. கல்வி அரிய மகிமையாய் மருவியுள்ளது. இந்த இரண்டு செல்வங்களும் எவ்வழியும் விழைந்து ஈட்டப் படுகின்றன. அந்த ஈட்டங்களில் அதிசய விளைவுகள் கோட்டி கொண்டுள்ளன. மாறுபாடுகளின் கூறுபாடுகள் கூர்ந்து காணவுரியன.

செல்வம் உலக நிலையில் பருப் பொருள்களாய் உருண்டு வருகிறது. கல்வி உயிர் நிலையில் நுண் பொருளாய்ப் பண்பமைந்து மிளிர்கிறது. முன்னது ஒரு நிலையுமின்றிச் சுழன்று திரிகிறது; பின்னது என்றும் நிலையாய் நின்று திகழ்கிறது. அது உடலள வில் நின்று ஒழிகிறது; இது என்றும் உயிரோடு ஒன்றி யாண்டும் ஒருவாமல் உறைந்து நிற்கிறது. அது எடுக்குந்தோறும் குறை ந்துபடுகிறது; இது கொடுக்குந் தோறும் நிறைந்து வருகிறது. அது பொறி நுகர்வுகளை வளர்த்து வெறிகளை விளைக்கிறது; இது அறிவின் அமிர்தமாய் ஆனந்தம் அருளுகிறது. இன்னவாறு பல வேறுபாடுகள் இந்த இருவகைத் திருவுகளுள் மருவி யிருத்த லோடு வரவு நிலையிலும் மாறுபாடுகள் பெருகி யுள்ளன.

செல்வன் எனஒருவன் சேரவரின் ஆயிரம்பேர்
அல்லல் வறுமை அடையவரும்.

பெரிய செல்வன் என ஒருவன் பெருகி எழுவானாயின் அங்கே மருவியுள்ள பிழைபாடுகளைக் கருதி யுணரும்படி இது காட்டி யருளியது. உண்மைக் காட்சி நுண்மை யுடையது.

மேட்டின் உயரம் பள்ளங்களைக் காட்டுதல் போல் ஒருவ னுடைய செல்வத்தின் ஈட்டம் பலபேர்களை வறுமையாக்கிச் சிறு மை செய்துள்ள நிலைமைகளை நேரே நீட்டி யுள்ளது.

புதிய பணக்காரன் ஒரு பெரிய வீடு கட்டி யிருந்தான். மூன்று அடுக்குகள் உள்ள அந்த மாளிகையைப் பார்த்ததும் ஒரு நீதிமான் நெடிது பரிந்து நின்றார். "எத்தனை குடிகளைக் கெடுத்து இந்த வீடு இப்படி எழுந்திருக்கிறது!" என்று அவர் வெப்போடு மொழிந்து போனார். கள் முதலிய மதுபானங் களைக் குடித்துப் பலர் வறியராய்க் குடி கெட்டழிய அவற்றை விற்றவன் பெரிய செல்வன் ஆய் அரிய மாடங்கள் கட்டிப் பெருமை பாராட்டி நிற்கிறான்.

"வட்டியால் களவால் வஞ்சனை வகையால்
மாயசா லங்களால் ஈட்டிப்
பெட்டியை நிரப்பிப் பெருந்திரு வாளர்
எனப்பலர் பெருகியுள் ளனரே"

என ஒரு பெரியவர் மறுகி யுள்ளதும் ஈண்டு அறிய வுரியது.

"Some treasures are heavy with human tears." (Ruskin)

"சில நிதியறைகள் மக்களுடைய கண்ணீரால் நிறைந்திருக்கிறது" என ரஸ்கின் என்னும் ஆங்கில அறிஞர் இங்ஙனம் கூறியிருக்கிறார். பொருளில் ஆசை மிகுந்தபொழுது அருள் நாசம் அடைந்து போகிறது; போகவே எவ் வழியும் இரக்கமின்றி அதனை வவ்வ நேர்கின்றனர்.

"The ways to enrich are many, and most of them foul."
(Bacon)

"பெரும்பாலும் கெட்ட வழிகளாலேதான் செல்வம் ஈட்டப் படுகின்றது" என பேக்கன் இவ்வாறு குறித்திருக்கிறார். ஒருவன் செல்வன் ஆக நேரின் அது பலரை வறியர் ஆக்கி வருதலால் அந்த ஆக்கத்தின் போக்கும் நோக்கும் புலனாய் நின்றன.

கல்விமான் என்ன ஒருவன் எழின்
பலர் அறிவு துன்ன வருவர்.

என்றது கல்வி ஈட்டத்தின் விளைவைக் கருதியுணர வந்தது.

செல்வம் பிறரை வறியராக்கி ஒருவனிடம் வருகிறது.
கல்வி பலரை அறிவுடையராக்கி அடைகிறது.

ஒருவன் கல்விமான் ஆனல் அவனுடைய சொல் செயல்கள் யாவும் நல்ல அறிவுகளை ஊட்டி வருதலால் பலர் அறிவாளிகளாய் வருகின்றனர்.

"கல்லாரே ஆயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளும் தலைப்படுவர்---தொல்சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலால் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு." (நாலடியார்)

கல்லாதவரும் கற்றவரைச் சார்ந்தால் நல்லறிவுடையராய் நலம் பல பெறுவர் என இது உணர்த்தி யுள்ளது. உவமை நிலையை ஓர்ந்து பொருள் நயங்களை உணர்ந்து கொள்ளுக.

பிறர்க்குச் சொல்லிக் கொடுக்குந்தோறும் கல்வியறிவு உள்ளே பெருகி வருதலால் கற்றவர் யாண்டும் யாருக்கும் அதனை உவந்து வழங்கி வருகின்றனர். வெளியே அள்ளி அருளுவது உள்ளே வெள்ளமாய்ப் பெருகிவருவது அதிசயவிளைவாயுள்ளது.

வாரிப் பிறர்க்கு வழங்குந் தொறும்பெருகி
வாரி எனவே வளருமால்---நேரில்

கலைச்செல்வம் என்கின்ற கற்பகமே என்றும்
தலைச்செல்வம் ஆகும் தழைத்து.

கல்வி இவ்வாறு அற்புத நிலையில் வளர்ந்து வருதலால் அது கற்பக தருவென வந்தது. ஒரு விளக்கிலிருந்து பல விளக்குகள் உளவாகி அளவின்றி விரிந்து யாண்டும் ஒளிகள் புரிந்து வருதல் போல் ஒரு கல்விமானால் பல்லாயிரம் பேர் கல்வியாளராகின்றனர். தன்னை யுடையவனுக்கு எழுமையும் இன்பம் தந்து சீவர்களுக்குத் திவ்விய நலங்களை அருளி வருதலால் கல்வி என்றும் அழியாத தெய்வீக நிதி என நின்றது.

வைக்கும் பொருளும் இல்வாழ்க்கைப் பொருளும் மற்றைப்பொருளும்
பொய்க்கும் பொருளன்றி நீடும் பொருளல்ல; பூதலத்தின்
மெய்க்கும் பொருளும் அழியாப் பொருளும் விழுப்பொருளும்
உய்க்கும் பொருளும் கலைமான் உணர்த்தும் உரைப்பொருளே.
(சரசுவதியந்தாதி)

பொன் மணி முதலிய செல்வங்கள் பொய்ப் பொருள்கள்; கல்வி ஒன்றே அழியாத மெய்ப் பொருள் என இது உணர்த்தியுள்ளது. உயிர்க்கு உய்தி தருதலால் மெய் என வந்தது.

"கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி."

என ஔவையார் இவ்வாறு செவ்வையாக அருளியுள்ளார்.

"அபூர்வ: கோபி கோசோயம் வித்யதே தவ பாரதி
வ்யயதோ வ்ருத்திமாயாதி க்ஷயமாயாதி சஞ்சயாத்."

"கல்விச் செல்வமாகிய கருவூலம் அதிசயநிலையது; கொடுக்குந்தோறும் விருத்தியடைந்து வருகிறது; கொடாது வைத்திருந்தால் தேய்ந்து போகிறது" என்னும் இது இங்கே ஆய்ந்து அறியவுரியது. செலவு வரவாய் வளர்ந்து வருகிறது.

கல்வியாகிய இந்த அரிய திருவைப் பருவமுள்ள பொழுதே உரிமைசெய்துகொண்டவர் யாண்டும் பெருமைமிகப்பெறுகிறார்.

செல்வத்தினும் கல்வி எல்லா வகையினும் மேலானது; அதனை ஒல்லையில் ஈட்டிப் பல்லோரும் பயன் பெற நல்லன புரிக.

உன்னைப் பொருளென் றுரைக்கும் தொறும்வளர்வாய்
பொன்னைப் பொருள்என்னப் போதுமோ---கன்னமிட்டு
மன்னர் கவர்ந்தும் வளர்பொருளே கைப்பொருள்கள்
என்ன பொருளுனைப்போல் எய்தாவே. (தமிழ் விடுதூது)

வைப்புழிக் கோட்படா; வாய்த்தீயின் கேடில்லை;
மிக்க சிறப்பின் அரசர்செறின் வவ்வார்;
எச்சம் எனஒருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற. (நாலடியார்)

நிதிசெல வாய்க்கெடும்; நீசர் வவ்வுவர்;
மதியினை மயக்கிவெம் மறம் விளைத்திடும்;
கொதியழல் நரகிடும்; குணமும் கல்வியும்
விதிதரும்: பதிதரும்; வீடு நல்குமே. (நீதி நூல்)

வெள்ளத்தால் அழியாது; வெந்தழலால் வேகாது; வேந்தராலும்
கொள்ளத்தான் இயலாது; கொடுத்தாலும் குறையாது; கொடியதீய
கள்ளத்தார் எவராலும் களவாட முடியாது; கல்வி என்னும்
உள்ளத்தேபொருளிருக்கஉலகெங்கும்பொருள்தேடிஉழல்வதென்னே

இவை ஈண்டு உள்ளி யுணர வுரியன.

---

559. தாய்போல் இனிதோம்பும் தந்தைபோல் நன்காற்றும்
தூய மனைபோல் சுகமருளும்—ஆயநலம்
எல்லாம் அருளி இதமளிக்கும் கல்வியிது
வல்லார்க் கெவைதாம் வரா. (௯)

இ—ள்

கல்வி தாயைப் போல் பேணுகிறது; தந்தையைப் போல் காணுகிறது; இனிய மனைவி போல் இன்பம் தருகிறது; செல்வம் புகழ் முதலிய எல்லா நலங்களையும் ஒருங்கே உதவுகிறது; இத்தகைய அருமைக் கல்வியை யுடையவர் அடைய முடியாதன எவை? யாவும் எளிதே அவரிடம் வந்து சேரும் என்க.

பெற்ற தாய் பிள்ளையை எவ்வழியும் பேரன்புடன் பேணி வருகிறாள். இனிய உணவூட்டி, நல்ல உடை யுடுத்தி, நன்கு சீவி முடித்து எல்லாவகையினும் செல்லமாகப் பேணி யருளுகிறாள். கல்வியும் அவ்வாறே உணவு உடை முதலியன யாவும் நல்கி உரிமையுடன் மக்களைப் பாதுகாத்து வருதலால் தாய் என நேர்ந்தது.

அறிவு நலங்களை நன்கு உணர்த்தித் தன்னைப் பெரிய நிலைகளில் வைத்தருளுதலால் கல்வி தந்தை என வந்தது.

தூய மனை போல் சுகம் அருளும்

என்றது கல்வி நல்கி வருகிற இன்ப நலங்களைக் கருதி யுணர. தூய மனை என்றது பரிசுத்தமான மனைவி என அவளது கற்பு நிலை தெரிய வந்தது. மனம் மொழி மெய்கள் புனிதமுடைய இனிய பதிவிரதை தன் கொழுநனுக்கு ஐம்புல இன்பங்களும் ஆர நல்கி ஆவன புரிந்து யாண்டும் ஆர்வமோடு பேணி வருவள் ஆதலால் அங்ஙனம் இன்ப நலங்களை இனிது அருளி வருகிற கல்விக்கு அவள் இங்கே உவமையாய் வந்தாள்.

கல்வியே கற்புடைப் பெண்டிர்.

எனக் குமர குருபரர் குறித்துள்ளதும் ஈண்டு உணரவுரியது.

அறிவுக்குப் பேரின்ப போகமாய்க் கல்வி மருவியுள்ளது. அந்த இன்பச் சுவையில் உள்ளம் ஊன்றி யுள்ளபொழுது உலக இன்பங்களை யெல்லாம் அது மறந்து விடுகின்றது.

உள்ளம் கலைச்சுவையை ஊன்றி நுகருங்கால்
வெள்ளமென இன்பம் விளையுமே---வள்ளமுலை
ஊர்வசியே நேர்வந் துலாவிஎதிர் நின்றாலும்
பேர்வறியா வுள்ளம் பிறழ்ந்து.

கல்வி நல்ல அறிவின்பம் ஆதலால் அதனை அழுந்தி நுகரும் பொழுது பொறியின்பங்கள் எல்லாம் புல்லிதாய் ஒழிந்து போகின்றன. பேரின்பம் பெற்றவர் சிற்றின்பத்தை இகழ்ந்து விடுகின்றனர். மனம் ஒரு முகமாய் ஆய்ந்து தோயுந்தோறும் அந்த ஆனந்தம் பாய்ந்து வருகிறது.

ஆயுந் தொறுந்தொறும் இன்பம் தரும்கல்வி; ஆங்கறிவு
மாயும் தொறுந்தொறும் இன்பம் தரும்வள்ளல் வார்கழல்கள்;
தேயும் தொறுந்தொறும் இன்பம் தரும்சந்து; தேங்குழல் நிற்
றோயும் தொறுந்தொறும் நேராத இன்பம் சுரந்திடுமே.

(தணிகைப் புராணம்)

சந்தனக் கட்டை தேயும் தோறும் வாசனையாம்; மங்கையரைத் தோயும் தோறும் சுக போகமாம்; சீவ போதம் மாயுந் தோறும் சிவானந்தமாம்; கல்வியை ஆயுந்தோறும் பேரின்பமாம் என்னும் இது இங்கே கூர்ந்து ஓர்ந்து சிந்திக்க வுரியது.

எல்லாம் அருளி இதம் அளிக்கும்.

என்றது அரிய பல உறுதி நலங்கள் யாவும் கல்வியால் வரு

தல் தெரிய வந்தது. பொருள் இன்பம் புகழ் புண்ணியம் முதலி யன நல்கி மறுமையிலும் அதிசய முத்தி நிலையை அருளும் என்க.

“எழுத்தறியத் தீரும் இழிதகைமை; தீர்ந்தால்
மொழித்திறத்தின் முட்டறுப்பான் ஆகும்---மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்.”

கல்வியறிவால் விளையும் கதிநலங்களை இது காட்டியுள்ளது.

கற்பக் கழிமடம் அஃகும்; மடமஃகப்
புற்கம்தீர்ந் திவ்வுலகின் கோளுணரும்; கோளுணர்ந்தால்
தத்துவ மான நெறிபடரும் அந்நெறி
இப்பால் உலகத்து இசைநிறீஇ உப்பால்
உயர்ந்த உலகம் புகும். (நான்மணிக்கடிகை, 29)

மடமை ஒழியும், மதி தெளியும், புகழ் பெருகும், பேரின்ப வீடு மருவும் எனக் கல்வியால் உண்டாகும் பாக்கியங்களை விள ம்பி நாகனார் இங்ஙனம் விளக்கியுள்ளார். இப்பால்=இம்மை. உப்பால்=மறுமை. இருமையிலும் கல்வி பெருமை தருகிறது.

கல்வியால் எல்லா நன்மைகளும் எய்துகின்றன; ஆதலால் அதனை யுடையவர் யாவும் அடைந்தவராகின்றனர்.

தாய் தந்தை மனைவி என மருவி நின்று இனிமை புரிகின் றது; பொருளும் போகமும் புகழும் தருகின்றது; மறுமையில் பேரின்பம் அருளுகின்றது. இத்தகைய அருமைக் கல்வியை உரிமை செய்து கொண்டவரே மனிதப் பிறவியின் பயனைப் பெற்றவர் ஆகின்றார்.

“வித்யா ரக்ஷதி மாதேவ பிதேவ ச ஹிதா சதா
தேசாந்தரே பந்துதேவ பசுரேவ தயா விநா.”

“வித்தை தாயைப் போல் காத்தருளுகிறது; தந்தையைப் போல் எப்பொழுதும் இதம் புரிகிறது. அயலே சென்ற இடங் களிலெல்லாம் உறவினர் போல் நின்று உபசரிக்கின்றது; இத் தகைய கல்வியை இழந்திருப்பவன் இழிந்த மிருகமேயாவன்” என்னும் இது இங்கே தெளிந்து உணர்ந்து கொளத் தக்கது.

கல்வி மனிதனைத் தெய்வமாக்குகிறது; அதனை இழந்தவன் விலங்கா யிழிந்து வீணே ஒழிந்து போகிறான்.

கருதிய நலங்களையெல்லாம் உரிமையுடன் அருளுகிற கற்பகம் போல் கல்வி பொற்பமைந்துள்ளது; இந்த அற்புதத் திருவை விரைந்து அடைந்து கொள்பவர் உயர்ந்த பாக்கியசாலிகளாய் ஒளி மிகுந்து திகழ்கின்றார்.

சிறிது படித்தாலும் அதனைக் கருதி யுணர்வது பெரிதும் நன்மையாம். ஊன்றியுணர்பவன் உயர்ந்த கல்விமான் ஆகிறான். சிந்தனையில்லாத படிப்பு சிறந்து திகழாமல்சிதைந்து படுகின்றது.

கற்ற கலையைக் கருத்தூறச் செய்யாமல்
மற்றும் படிக்கவே மண்டுதல்---உற்ற
உணவு செரிக்காமல் உண்டிமேல் உண்டி
உணவிழைந்த தாமே யுணர்.

உண்ணும் உணவும், எண்ணும் கல்வியும் கண்ணும் கருத்துமாய் இதில் காண வந்துள்ளன. கருதி நோக்கி உறுதி தெரிக.

உள்ளம் படித்ததை உணர்வின் சாரமாக்கிக் கொள்க.

---

560. பூவேந்தர் எல்லாரும் போற்றிப் புகழ்ந்தேத்தும்
பாவேந்தர் என்னும் பதமுடையார்---நாவேந்தித்
தந்த அறிவுணவே தாரணியில் யாவருக்கும்
அந்தண் அமிர்தம் அறி. (ம)

இ---ள்

புவியரசர் யாவரும் புகழ்ந்து போற்றி உவந்து வணங்கும் உயர் நிலையுடைய கவியரசர் நாவால் தருகிற அறிவுணவு உலக மக்களுக்கு அழகிய இனிய அமிர்தமாம் என்க.

உலக மக்களுள் அரசர் தலை சிறந்தவர். பூமியை ஆளும் அரிய பெரிய திருவினை உரிமையாக உடையவர் ஆதலால் திருமாலின் அமிசமாகவே அவர் கருதப்படுகின்றனர். அத்தகைய மன்னரும் வணங்கிப் போற்றும் மாட்சியைக் கவிஞர் பெற்றிருக்கின்றனர்.

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்---மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை; கற்றோற்குச்
சென்றவிடம் எல்லாம் சிறப்பு. (மூதுரை, 26)

அரசனையும்கலைஞனையும் சீர் தூக்கி நோக்கிக் காரணங்களைக் குறித்துக் காட்டி ஔவையார் இவ்வாறு உறுதி கூறியிருக்கிருர்.

"வித்வத்வஞ்ச நிருபத்வஞ்ச நைவ துல்யம் கதாசந
ஸ்வதேசே பூஜ்யதே ராஜா வித்வாந் சர்வத்ர பூஜ்யதே."

"தன் தேசத்தில் மாத்திரம் அரசன் மதிக்கப் படுகிருன்; வித்துவான் எல்லா இடங்களிலும் போற்றப் பெறுகிருன்; ஆகலால் புலவனுக்கு அரசன் எவ்வகையிலும் ஒவ்வான்'' என இது உணர்த்தியுள்ளது.

பொன்அணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத்தாம் மற்ருெவ்வார்---மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே அதுபுனையாக்
காணும்கண் ஒக்குமோ காண். (நன்னெறி, 40)

முத்துக் கடுக்கன்களும், பொற்கடகங்களும், வயிர மோதிரங்களும் அணிந்திருந்தாலும் காதும் கையும் விரலும் கண்ணுக்கு ஒப்பாகா; அது போல் செல்வம் மிகப் பெற்றிருந்தாலும் யாதும் இல்லாத கல்விமானுக்கு அரசர் நிகராகார் எனச் சிவப்பிரகாசர் இங்ஙனம் சுவையாக விளக்கி யிருக்கிருர். உவமையின் நயம் ஊன்றி உணருந் தோறும் உவகை சுரந்து வருகிறது. உடலுறுப்புக்களுள் கண் சிறந்துள்ளது போல் உலக மக்களுள் கலைஞர் சிறந்துள்ளனர்.

அரசர் சிரசா அருங்கலைஞர் கண்ணுப்
பரசும் உலகம் பணிந்து.

கண் காட்டிய வழியே கால்கள் நடக்கின்றன; கலைஞன் காட்டிய வழியே ஞாலம் இயங்குகின்றது. கவிஞர் உணர்வொளிகளை அருளி வருதலால் உலகம் அவ்வழியே ஒழுகி வருகிறது. "Poets are the unacknowledged legislators of the world.''(Shelly)

"கவிஞர்கள் உலகத்திற்குச் சட்டம் விதிக்கின்ற தனியான நீதி கருத்தர்கள்'' என ஷேல்லி என்னும் ஆங்கிலக் கவிஞர் சொல்லியுள்ள இது இங்கே உள்ளியுணர வுரியது.

வெளிப்படையாய் நின்று ஆரவாரமா உலகத்தை நடத்தி வருகிற அரசரையும் கவிஞர் அடக்கமாயிருந்து அதி விநயமா அறிவுறுத்தி இனிது நடத்தி வருகின்ருர்.

குடிதழீஇக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. (குறள், 544)

தன் குடிகளை இனிது தழுவிச் செங்கோல் செலுத்தும் அரசனது அடிகளை உலக முழுவதும் உவந்து தழுவி நிற்கும்'' என வள்ளுவப் பெருந்தகை இங்ஙனம் உணர்த்தியுள்ளார். முடியாட்சி முடிவின்றி நிலைத்துவருதற்கு வழிகாட்டி வகுத்தபடியிது.

மன்னன் இன்னவாறு ஒழுகவேண்டும் என அவனுக்கு உறுதி கூறி அறிவு போதித்திருக்கும் அருமை கருதியுணர்வுரியது. கவிஞர் ஆட்ட யாவரும் ஆடுகின்றனர்; அவர் காட்ட எல்லாரும் காணுகின்றனர்.

எவ்வழியும் யாருக்கும் அடங்காத தனித் தலைமையாளர் ஆதலால் உலக காவலருக்கும் உறுதி நலங்களை உரிமையோடு அறுதியிட்டு இடித்து அவர் அறிவுறுத்துகின்றனர்.

"The poet is not any permissive potentate, but is emperor in his own right." (Emerson)

"கவிஞன் எந்த வகையிலும் யாருக்கும் அடங்கினவனல்லன்; தனது உரிமையில் அவன் தனியான ஒரு சக்கரவர்த்தி" என அமெரிக்க ஞானியான எமர்சன் இவ்வாறு கூறியுள்ளார்.

இத்தகைய தலைமைத் தன்மையில் நிலைத்திருத்தலினாலேதான் அவர் சொல்லை உலகமெல்லாம் உவந்து கேட்டு ஒழுகி வருகின்றன. அவரது உணர்வொளிகள் ஊழியும் மங்காமல் ஒளி புரிந்து மிளிர்கின்றன. நித்திய உண்மைகள் நிலைத்து நிலவுகின்றன.

உள்ளுந்தோறும் உள்ளம்மகிழ, உணர்வு திகழ, உயிர் உயர வள்ளுவர் வாய் மொழிகள் வழங்கி வருதலை வையம் வாழ்த்தி வருகிறது.

பாவேந்தர் நாவேந்தித் தந்த அறிவுணவு அந்தண் அமிர்தம்

கவிராசர்கள் உலகத்திற்குச் செய்து வருகிற உதவி நலங்களை இது உணர்த்தியுள்ளது. அமிர்தம் என்பது தேவ போகமான திவ்விய உணவு. சுவை வீரியங்களில் தலைசிறந்தது. தன்னை உண்டவர்களை நெடிது வாழச் செய்வது. அந்த அவியுணவு கவியுணவோடு இங்கே எதிர் காண வந்தது.

மொழிகளின் வழியே கவிஞர் அருளுகிற விழுமிய எண்ணங்கள் எவ்வழியும் உவகைகளை யூட்டி உணர்வை ஒளிசெய்து உயிரை உயர்த்தியருளுதலால் அந்த அறிவுணவு அமிர்தம் என அமைந்தது. ஆன்ம போதம் அதிசய ஆனந்தமாயது.

"அம்பிலே சிலையை நாட்டி அமரர்க்குஅன் றமுதம் ஈந்த
தம்பிரான் என்னத் தானும் தமிழிலே தாலே நாட்டிக்
கம்பநா டுடைய வள்ளல் கவிச்சக்கரவர்த்தி பார்மேல்
நம்புபா மாலே யாலே நரருக்கின் றமுதம் ஈந்தான்."

பாற்கடலைக் கடைந்து திருமால் தேவர்களுக்கு முன்பு அங்கே அமுதம் அளித்தார்; கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர் தமிழ்க் கடலைக் கடைந்து கவிகளாகிய அமுதத்தை மக்களுக்கு இன்று இங்கே அருளியுள்ளார் என இது குறித்துள்ளது.

இந்த நாட்டிலுள்ள மனித சமுதாயத்திற்குப் புனிதமான இனிய அறிவின்பங்களைக் கம்பர் ஊட்டியுள்ளார்; அந்த அறிவமுதங்களை உண்டு மகிழ்ந்தவர் இப்படி உரைத்திருக்கிறார்.

கம்பரது காவியச் சுவையை நுகர்ந்தவர் உம்பர் அமுதையும் விரும்பார்; இந்திர போகமும் அவர்க்கு இனியாது எனப் பண்டு தொட்டே பழமொழி எழுந்துள்ளமையால் அதன் நிலைமையும் நீர்மையும் தலைமையாக உணர்ந்து கொள்ளலாம்.

பெருந் தடங்கட் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே. (இராமாயணம்)

கோசல நாட்டிலிருந்த பெண்கள் நீர்மையை இவ்வாறு நம் கண்கள் காணக் காட்டியுள்ளார். உயர்ந்த கல்வியும் சிறந்த செல்வமும் அவர்பால் நிறைந்திருந்தன; தம்பால் வருந்தி வந்தவர்க்கு விருந்து புரிந்து உபசரித்தலும், பொருளை உவந்து கொடுத்தலும் ஆகிய இந்தப் புண்ணிய கருமங்களையே கண்ணியமாக நாளும் அவர் செய்து வந்தனர். இந்தப் பெருந்தகைமையை எண்ணியுணருந்தோறும் நாம் இன்பம் உறுகிறோம். கல்வி செல்வங்களை யாவரும் அடைந்து எல்லாரும் பயன் பெற இனிது வாழ வேண்டும் எனக் கவி இங்ஙனம் கருதி மகிழ்ந்திருக்கிறார்.

எழுத்தை அறிவதும், நூல்களைத் திருத்தமாகப் படித்துக் கொள்வதும் மாத்திரம் கல்வி ஆகாது; மனத்தைப் பண்படுத்தி வாழ்க்கையைப் புனிதமாக உயர்த்திக் கொள்ளுவதே உண்மையான கல்வியாம். பண்பாடு இன்றேல் அது புண்பாடாகின்றது.

தனது வாழ்வை இனிமையாக்கி இதமா நடத்தி வருகிறவன் உயர்ந்த மதிமானாய் மதிக்கப்படுகிறான். கல்வி நலம் கனிந்த

வாழ்வு எல்லா வழிகளினும் அறிவு மணம் கமழ்ந்து வருதலால் அது பெரு மகிமையாய் ஒளி மிகுந்துள்ளது. கல்லாமை தோய்ந்தது யாண்டும் பொல்லாமையாய்ப் புலை யுறுகின்றது.

கல்வி கேள்விகள் முக்காலங்களையும் ஒக்கநோக்கி உணரும்படி செய்து வருதலால் அவற்றையுடையவர் பரந்த நோக்கமும் விரிந்தநெஞ்சமும் வாய்ந்து சிறந்த மேலோராய் உயர்ந்து விளங்குகின்றனர். கல்வியாகிய ஞான ஒளி யில்லையானல் அந்த வாழ்வு ஈனமாய் இழிந்து படுகின்றது.

இருவிழிகள் வாண்முகத்தில் இருந்தாலும் வானிரவி எழுந்தாலன்றிக்
கருதுநிலப் பல்பொருளும் காண்டலரி தாமுலகில் கண்போல் யாரும்
பெருகியசெல்வமுமறிவும்பெற்றாலும் நூற்கேள்விபெறுவார்க்கன்றித்
திருவளர்புண் ணியபாவம் இம்மைமறு மையும்வீடும்தெரியாவன்றே.
(திருக்குற்றாலத்தல புராணம்)

நூலறிவாகிய கல்வியில்லையானல் மனிதன் மேலான நிலைகளை யடைய முடியாதென இது உணர்த்தியுள்ளது. உயர்ந்த உறுதி நலங்களை அருளி வருதலால் கல்வி சிறந்த பேருய் விளங்கி நிற்கின்றது.

"Studies serve for delight, for ornament, and for ability."
(Bacon)

"இன்பம் அழகு ஆற்றல்களைக் கல்வி அருளுகிறது" என்னும் இது இங்கே அறிய வுரியது.

### இவ் அதிகாரத்தின் தொகைக் குறிப்பு.

கல்வி மனிதனுக்குக் கண்.
அதனைப் பெற்றவர் பெரியராய் உயர்வர்.
பெருதவர் சிறியராய் இழிவர்.
கண் இருந்தும் குருடராய் உழல்வர்.
உயிர் இருந்தும் இல்லாதவராவர்.
உணர்வொளி இழந்து ஊனமடைவர்.
மடையர் என நின்று மறுகி அலைவர்.
செல்வத்தினும் கல்வி சீர் பல தரும்.
அறம் பொருள் இன்பம் யாவும் அருளும்.
அரசும் தொழ அமுதமாய் நிலவும்.

௫௬-வது கல்வி முற்றிற்று.

# ஐம்பத்தேழாம் அதிகாரம்

## செல்வம்.

அஃதாவது உலக வாழ்க்கைக்கு இனிய ஆதாரமாயுள்ள பொருள். கல்வியும் செல்வமும் கண் என முன்னம் சேர்த்து எண்ணப்பட்டமையின் அந்த இனவுரிமை கருதி அதன் பின் இது வைக்கப் பட்டது. இரு பெருந்திருவும் ஒருவருந்தகையன.

561. இவ்வுலக வாழ்க்கை இனியபொரு ளாலியங்கும்
செவ்வி தெரிந்து செயல்தெளிந்தே—எவ்வழியும்
பொன்னை வளர்த்துப் புகழ்பெறுக போற்றினார்
தன்னை வளர்க்கும் தழைத்து. (க)

இ—ள்

இந்த உலக வாழ்வு யாண்டும் பொருளால் இயங்கி வருகிறது; அந் நிலைமையை உணர்ந்து தெளிந்து எவ்வழியும் பொருளை வளர்த்துப் புகழ் மிகப் பெறுக; தன்னை உரிமையோடு பேணி வருவாரை அப் பொருள் பெருமையாக உயர்த்தி வரும் என்க.

செல்வம், பொருள், பணம் என்னும் மொழிகள் மனிதனுடைய செவிகளில் விழும் பொழுது உவகைகளை விளைத்து வருகின்றன. கேள்வியைச் செவிச் செல்வம் என்றார் நாயனார். அறிவுக் கேள்வி நல்லது; அதனை நாளும் நயந்து கேளுங்கள் என்று உலக மக்களுக்குச் சொல்ல வந்தவர் செல்வம் என இவ்வாறு புனைந்து சொல்லியது நினைந்து சிந்திக்க வுரியது. தான் எவ்வழியும் ஆவலோடு விழைந்து தேடுவது ஆதலால் அந்தப் பெயரால் சொன்னால் மனிதன் சிந்தை யுவந்து செவி சாய்த்துக் கேட்பான் என்று கருதி இந்த வண்ணம் இசைத்தருளினார்.

செல்வமே! சிவபெருமானே! என ஈசனை நோக்கி மாணிக்க வாசகர் இவ்வாறு அன்பால் உருகி இன்பாகக் கூவியிருக்கிறார்.

திருச்செந்தூர்ச் செல்வா! என முருகக் கடவுளைப் பகழிக்கூத்தர் இப்படி உவந்து பாடியிருக்கிறார். செல்வம் என்னும் சொல் எவ்வளவு இனிமையும் மகிமையும் உடையது என்பது இதனால் இனிதுபுலனும். கடவுளும் செல்வம் எனின் உவகையுறுகின்றார்.

உயிர் வாழ்க்கைக்கு உயிராதாரமாயுள்ளமையால் செல்வம் பல்வகையிலும் புகழ்ந்து போற்றப் பெற்றது. அது புரிந்து வரும் இத நலங்களால் அருமையும் பெருமையும் வாய்ந்து இருமையும் இனிமையாய் இசை மிகுந்து எழில் சுரந்து நிலவுகின்றது.

இவ் வுலக வாழ்க்கை இனிய பொருளால் இயங்கும்.

என்றது இந்த வையக வாழ்வுகள் நடந்து வருகிற மெய்மை தெரிய வந்தது. அவன் அன்றி ஓரணுவும் அசையாது என்றபடி பொருளின்றி யார் வாழ்வும் இங்கு இசையாது என்க.

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடு முதலிய வசதிகள் பல அவசிய தேவைகளாய் மனித வாழ்வில் மருவியுள்ளன.

சீவிய வகைகளான இவை யாவும் பொருளால் அமைந்து வருதலால் உலக வாழ்வுக்கு இது உயிர் நிலையமாய் நிலவி நின்றது. பொருள் இல்லையானால் இந்த உலக இன்பங்கள் யாதும் அடைய முடியாது ஆதலால் அந்த மனித வாழ்வு அவலமுடையதாகின்றது.

பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்றது தெய்வநூல்.

பொருள் இலார்க்கு இவ்வழிப் பொறியின் போகமும்,
அருள் இலார்க்கு அறத்தினும் பயனும், நூல்வழி
உருள்விலா மனத்தவர்க்கு உணர்வும் போல்மனம்
தெருளிலார்க்கு இசைவிலள் திருவின் செல்வியே.
(சூளாமணி)

எட்டானும் பத்தானும் இல்லாதார்க்கு
இவ்வுலகில் இன்பமே போல் ஒட்டாவே (சீவகசிந்தாமணி)

அத்திட்ட கூறை அரைச்சுற்றி வாழினும்
பத்தெட் டுடைமை பலருள்ளும் பாடெய்தும்
ஒத்த குடிப்பிறந்தக் கண்ணும்ஒன் றில்லாதார்
செத்த பிணத்திற் கடை. (நாலடியார்)

நூலுறு கல்வியை நுனித்து நாடியே
வாலறிவு எய்திய வரத்தி னோர்களும்
மேலுறு திருவொடு மேவுறார் எனின்
ஞாலமங் கவர்தமை நவையுள் வைக்குமால். (கந்தபுராணம்)

பொருளில் குலனும், பொறுமையில் நோன்பும்,
அருளில் அறனும், அமைச்சில் அரசும்,

இருளினுள் இட்ட இருள்மயிர் என்றே
மருளில் புலவர் மனங்கொண் டுரைப்ப. (வளையாபதி)

மதியிலா விசும்பும் செவ்வி மணமிலா மலரும் தெண்ணீர்
நதியிலா நாடும் தக்க நரம்பிலா நாத யாழும்
நிதியிலா வாழ்வும் மிக்க நினைவிலா நெஞ்சும் வேத
விதியிலா மகமும் போன்ற வீடுமன் இலாத சேனை. (பாரதம்)

கல்லானே யானாலும் கைப்பொருள்ஒன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர்---இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல் (நல்வழி)

எனைத்துணைய வேனும் இலம்பாட்டார் கல்வி
தினைத்துணையும் சீர்ப்பா டிலவாம்---மனைத்தக்காள்
மாண்பிலள் ஆயின் மணமகன் நல்லறம்
பூண்ட புலப்படா போல். (நீதி நெறி விளக்கம்)

முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னுன் முடியும்.
வறியார் இருமை அறியார். (திருக்கோவையார்)

அறன்கடைப் படாஅ வாழ்க்கையும் என்றும்
பிறன்கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்
பொருளின் ஆகும். (அகம்)

பொருளிலான் வண்மை புரிவு இன்னு. (இன்னுநாற்பது)

பொருளிலார்க்கு இன்பம் இல்லை; புண்ணியம் இல்லை; என்றும்
மருவிய கீர்த்தி இல்லை; மைந்தரில் பெருமை இல்லை;
கருதிய கருமம் இல்லை; கதிபெற வழியும் இல்லை;
பெருநிலம் தனில் சஞ்சாரப் பிரேதமாய்த் திரிகுவாரே.
(விவேக சிந்தாமணி)

பொருளினுலேதான் இவ்வுலக வாழ்வு நடைபெறுகின்றது; அஃது இல்லையாயின் அல்லலும் இருளும் படிந்து மனித வாழ்வு அவலமடைந்து போம் என இவை உணர்த்தி யுள்ளன. ஆன்றோர் பலர் கூறியுள்ளபொருள்நிலைகளை ஊன்றியுணர்ந்துகொள்க.

பொன்னை வளர்த்துப் புகழ்பெறுக; போற்றினர்
தன்னை வளர்க்கும் தழைத்து.

அன்னை தந்தையரினும் உன்னை வளர்த்து உலகில் உயர்த்தி உயர் நலங்கள் புரிந்து வருவது பொருளே ஆதலால் அதனைப் பேணி வளர்த்துப் புகழ் புண்ணியங்களை அடைந்து கொள்ளுக.

பொருள் நிலையை இங்ஙனம் வரைந்து கூறியது தனது நிலைமையை மனிதன் நினைந்து தெளிய. தன் குடி வாழ்க்கை செழித்துத் தழைத்து வர எவன் உழைத்து வருகிறானோ அவன் உயர்ந்து விளங்குகிறான்.

சுகமாக மதிப்போடு வாழ்ந்து வரும் வாழ்வெல்லாம் பொருளினாலேயாம்; அதனைக் கருதி யுணர்ந்து தன் கையில் செவ்வையாகப் பொருளை உரிமை செய்து கொள்பவர் எவ்வழியும் பெருமை மிகப் பெறுகிறார். அவ்வாறு செய்யாது வறிதே நின்றவரது வாழ்வு தாழ்வாய் வசை யுறுகின்றது.

"வாழ்வதுவும் உன்னுடைய வாழ்வாமே; வாழ்வொழித்துத்
தாழ்வதுவும் உன்னுடைய தாழ்வாமே---கூழ்குடித்துக்
கட்டப் புடைவையின்றிக் கந்தையுமாய்ச் சென்று செல்வர்
கிட்டப் பலகாலும் கெஞ்சிப்போய்---முட்டமுட்டத்
தாங்குவார் அற்றுத் தடுமாறி ராப்பகலாய்
ஏங்குவார் ஏக்கமும்உன் ஏக்கமே---ஓங்கும்
பணம்என்னும் உன்னைப் படைக்காத சென்மம்
பிணம்என்பர் கண்டாய் பெரியோய்---இணையிலாச்
சாவடியும் வீடும் தலைவாசலும் சதங்கைச்
சேவடியும் மைந்தர்களும் தேவியரும்---பாவடியிட்டு
ஏறும் கடும்பரியும் எச்சேவையும் சுவைகள்
ஆறும் கலந்த அமுதுணவும்---வீறும்
குடவண்டியும் குலவை கொண்டுபயில் பின்னே
தொடரும் பிலுக்கும் சுகிப்பும்---குடையின்கீழ்
வீதிவலம் வந்துலவும் வேடிக்கையும் கடுக்கன்
காதில் அசைவதுவும் கற்கட்டும்---சீதசந்தம்
பூசுவதும் சப்ரமஞ்சப் பூவணையில் ஆங்காரம்
பேசுவதும் ஐயன் பெருமையே." (பணவிடுதூது)

மனிதனுடைய வாழ்வு பொருளால் மருவி வருகிறது; அஃது இல்லையானால் இழிவுகளும் துயரங்களும் பெருகியெழும்; அது உண்டானால் எல்லா இன்பங்களும் எவ்வகை மேன்மைகளும் உளவாம் எனப் பணத்தின் மகிமையை இது உணர்த்தியுள்ளது. உண்மை நிலைகளை ஊன்றி உணர்ந்து கொள்ளுக.

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு;
பொருள்தனைப் போற்றி வாழ்.

என ஔவையார் இவ்வாறு அறிவு கூறியுள்ளார்.

பொன்னைப் போற்றிவரின் அது உன்னைப் போற்றியருளும்; உண்மையை ஓர்ந்துணர்ந்து உறுதி நலம் பெறுக.

562. உற்றபசி நீக்கி உறுபுலன்கள் நன்கூட்டிச்
சுற்றம் புரந்து சுகம்புரிந்து—பெற்ற
பிறவிப் பெரும்பயனைப் பேணி யருளும்
அறவி திருவே அறி. (உ)

இ—ள்

உயிர்களுக்கு நேர்ந்துள்ள பசியை நீக்கிப் பொறி புலன்களை யூட்டி, உறவினங்களைப் புரந்து, உயர் சுகங்கள் புரிந்து பிறவிப் பயனை விரும்பியருளுகிற தருமத்தாய் அருமைச் செல்வமே என்க.

செல்வம் செய்து வருகிற சீவிய நிலைகளில் சிலவற்றைச் சுட்டிக் காட்டி அதன் மகிமையை இது உணர்த்துகின்றது.

வயிற்றுப் பசியோடு மனிதன் பிறந்திருக்கிறான்; அந்த உயிர்க் கனலுக்கு நாளும் அளவாக உணவும் நீரும் ஊட்டி வர வேண்டும். அவ் வூட்டம் உயிர் வாழ்வின் ஓட்டமாயுள்ளமையால் எப்பொழுதும் தப்பாமல் சீவர்கள் அதனைச் செய்து வருகின்றனர். வயிறு வளர்த்தலே உயிர்வாழ்வாய் வளர்ந்து வருகிறது.

பசி தீர உண்பதும், உறங்குவதுமே மானிட வாழ்வின் மருமங்களாய் மருவியுள்ளன. பசி எழுந்த பொழுது அதற்கு உணவு தரவில்லையாயின் படு துயரமாய் நெடிதோங்கி நிற்கிறது. அது உயிர்களை வருத்தி வரும் கொடுமையை நினைந்து அழி பசி என்றார் நாயனார். பசிப்பிணி என்னும் பாவி என்றார் சாத்தனார்.

பசி இல்லாகுக; பிணி சேண் நீங்குக என ஓரம்போகியார் பேரன்போடு வேண்டி நின்றார். இவ்வாறு எவரையும் அச்சுறுத்தி வருகிற பசியை நீக்கும்படி பொருள் அருள் புரிந்து வருதலால் அந்த உபகார நீர்மை முதலில் அறிய வந்தது.

உறு புலன்கள் நன்கு ஊட்டி,

ஐம்புலன்களுக்கும் இன்ப நலங்களைப் பொருள் இனிது ஊட்டியருளும் ஆதலால் அதனை இது காட்டி நின்றது. நல்ல உணவு நல்ல உடை நல்ல மனை முதலிய எல்லாச் சுகபோகங்களும் பொருளால் இனிது அமைகின்றன; அமையவே அந்த மனித வாழ்வு இன்ப நிலையமாய் யாண்டும் காட்சி மிகுந்து மாட்சியடைந்து திகழ்கின்றது.

பொருளுடையான் கண்ணதே போகம்; அறனும்
அருளுடையான் கண்ணதே ஆகும். (சிறு பஞ்ச மூலம்)
எனக் காரியாசான் இவ்வாறு கூறியுள்ளார்.

அருளில் பிறக்கும் அறநெறி; எல்லாம்
பொருளில் பிறந்து விடும். (நான் மணிக் கடிகை, 7)
விளம்பிநாகனார் இங்ஙனம் விளப்பி யிருக்கிறார்.

விரும்பிய இன்ப நலங்கள் எல்லாம் பொருளால் வந்து சேரும் ஆதலால் அதனையுடையவன் சிறந்த சுகி; உயர்ந்த போகி எனப் புகழ்ந்து போற்றப் பெறுகிறான். தன்னை வைத்துள்ளவனைப் பலவகையிலும் உயர்த்திப் பொருள் பெருமைசெய்து வருதலால் அதனை அருமையாக விழைந்து பேணி உலகம் உவந்து போற்றி வருகிறது.

பூரியர் தமைவேந்து ஆக்கும்; புவி புரப்பிக்கும்; துய்க்கும்;
சீரிய உண்டி சேர்க்கும்; தேவர்தம் உலகம் போக்கும்;
காரியம் அனைத்தும் கூட்டும்; கருதலர் தம்மை வாட்டும்;
கூரியது இதன்மேல் இல்லை கொழும்பொன்னீர் கொண்மின்
[என்றான். (இராமாயணம்)

இழிந்த கீழ் மக்களையும் உயர்ந்த அரசர்கள் ஆக்கும்; உலகத்தை ஆளும்படி செய்யும்; சிறந்த போகங்களை யூட்டும்; பொன்னுலக வாழ்வையும் பொருந்த நல்கும்; கருதிய கருமங்களையெல்லாம் எளிதே கூட்டியருளும்; எதிரிகளை வாட்டி ஒழிக்கும்; இவ்வாறு அரிய பல உறுதி நலங்களைச் செய்து வருதலால் பொருளினும் சிறந்தது வேறு யாதும் இல்லை என இது கூறியிருக்கும் நிலையைக் கூர்ந்து பார்க்க.

அல்லல் பலவும் நீக்கி நல்லன யாவும் செல்வம் நல்கி வரும் என இராமனே இங்ஙனம் குறித்திருத்தலால் அதன் சீர்மையும் நீர்மையும் கூர்மையாய் ஈண்டு ஓர்ந்து கொள்ள வந்தன.

மானம் குலம் கல்வி அறிவு முதலிய உயர் நலங்கள் எல்லாம் ஒருங்கே ஒழிந்து போம் எனப் பசியின் கொடுமையைக் குறித்து ஔவையார் பரிந்து மொழிந்துள்ளார். அத்தகைய கொடிய பிணியை ஒழித்து மானம் முதலியவற்றைக் காப்பாற்றியருளுதலால் பொருள் எத்தகைய அற்புத சஞ்சீவியாய் அமைந்துள்ளது என்பதை உய்த்துணர்ந்து கொள்ளலாம்.

"No man can be wise on empty stomach."

"வயிற்றுப் பசியில் எவனும் அறிவாளியா யிருக்க முடியாது" என்னும் இந்த ஆங்கில வாசகமும் ஈங்கு அறிய வுரியது.

அல்லல் களைந்து ஆதரவு புரிந்து எல்லா வகையிலும் இதம் புரிந்து வருதலால் செல்வம் சீவிய அமுதம் ஆயது.

பிறவிப் பெரும் பயன் என்றது புகழ் புண்ணியங்களை.

இம்மையிலும் மறுமையிலும் நன்மைகள் புரிந்து வருதலால் பொருள் திரு என வந்தது. புகழ் ஒளி பரப்பிப் புண்ணியங்களை வளர்த்து எண்ணிய இன்ப நலங்களையெல்லாம் செல்வம் ஈந்தருளுதலால் மாந்தருக்கு அது மகிமை நிலையமா யுள்ளது.

அறவி திருவே

என்றது செல்வத்தின் உருவ நிலையைக் கருதி யுணர.

தரும சொரூபி, புண்ணியத்தாய் என இலட்சுமியை எண்ணித் துதித்த படியிது. புனித சீவியத்தை இனிமை செய்து இன்புறுத்தி வருதலின் அறவி என வந்தது.

அருந்தவரும் அமரரும் புகழ்ந்து போற்றுகின்ற அகத்திய முனிவர் செல்வத்தின் அதி தேவதையான இலக்குமியை உவந்து துதித்துள்ளார்.

மட்டற்கமல நறும்பொகுட்டில் அரசிருக்கும்
செந்துவர்வாய் மயிலே மற்றுன்
கடைக்கணருள் படைத்தன்றோ மணிவண்ணன்
உலகமெல்லாம் காவல் பூண்டான்;
படைத்தனன்நான் முகக்கிழவன்; பசுங்குழவி
மதிபுனைந்த பரமன் தானும்
துடைத்தனன்நின் பெருஞ்சீர்த்தி எம்மனோ
ரால்எடுத்துச் சொல்லற் பாற்றோ? (காசிகாண்டம்)

மகத்துவம் மிகுந்த அகத்திய முனிவர் இலக்குமியைக் குறித்து இவ்வாறு துதித்திருக்கிறார். துதி மொழிகளின் பொருள் நயங்கள் கருதி யுணரவுரியன. உலக முழுவதும் திருவின் அருளால் ஒளி பரவி இயங்கி வருகிறது என வழங்கியுள்ளமையால் உண்மை நிலையை உளங்கூர்ந்து உணர்ந்து கொள்கிறோம்.

உலக வாழ்வுகளுக்குப் பொருள் உயிர் நிலையமா யுள்ளது; அதனை எவ்வழியும் உரிமையுடன் பேணி உயர் நலம் காணுக.

---

563. எல்லா நலனும் இனிதுதவும் இன்பருளும்
வல்லான் எனவுலகம் வாழ்த்தவைக்கும்—கல்லானே
ஆனாலும் மேன்மை அடைவிக்கும் செல்வமது
தானேதற் கொண்டான் தனக்கு. (ங)

இ—ள்

தன்னைக் கைக்கொண்டவனுக்குச் செல்வம் எல்லா நலங்களையும் இனிது உதவும்; இன்பங்களை அருளும்; வல்லவன் என உலகம் வாழ்த்தி வணங்கும்படி செய்யும்; கல்லாதவனேயானாலும் எல்லா மேன்மைகளையும் உளவாக்கும் என்க

பல வகையான சுக போகங்களை மனிதன் அவாவி அலைகிறான். உயர்ந்த வீடுகள், சிறந்த மாடுகள், நல்ல குதிரைகள், நயமான பசுக்கள், பல்லக்குகள், வண்டிகள் முதலியன போகப் பொருள்களாய்ப் பொருந்தி யிருக்கின்றன. இவை யாவும் வேண்டும் என யாவரும் ஆவலுறுகின்றனர். மாந்தருடைய ஆசைகள் யாண்டும் அளவு கடந்துள்ளன.

உடல் எடுத்த உயிர்கள் எல்லாம் குடல் எடுத்த பசியோடு தோன்றி யுள்ளமையால் மனிதன் முதலில் அதனை ஆற்ற நேர்ந்தான். ஆதியில் கிழங்கு காய் கனிகளை அருந்தினான். அதன்பின் தானியங்களைப் பச்சையாகவும் நனைத்தும் அவித்தும் தின்றான். பின்பு சுவையாகச் சமைத்து உண்ணும்படி உணர்ந்தான். கண்டதை யெல்லாம் தின்று வந்த அந்தத் தீனி நிலை மாறி இனிமையாக உணவுகளை உண்டு மகிழும்படி கண்டு கொண்டான். உண்ணும் உணவால் வயிற்றுப் பசியைத் தணித்து வந்தவன் காமப் பசியைத் தணிக்க ஒரு பெண்ணை விழைந்தான். அவள் மனைவி

யாய் மருவி வந்தாள். இருவரும் சுகமாயிருந்து வாழுதற்கு ஓர் இடத்தை நாடினன். அது வீடு என விரிந்து நின்றது. தரையில் கிடந்து, பாயில் படுத்து, கட்டிலில் உறங்கி மெத்தையில் கண்ணயர்ந்து, அமளியில் துயில நேர்ந்தான். மருவிய மனைவிக்கு உரிமையுடன் அரிய அணிகளும் இனிய ஆடைகளும் பெருமையாகப் புனைந்து மகிழ்ந்தான். குடிசையை அகற்றிக் கூரையை நீக்கிப் பெரிய மாட மாளிகைகளை ஆக்கினன். அரிய வாகன வசதிகளை நோக்கினன். இன்னவாறே வாழ்க்கை வகைகளைப் பெருக்கி வசதி நிலைகளை விரித்து எங்கும் இன்பப் பெருக்குகளில் மாந்தர் களித்துத் திளைக்க நேர்ந்தார்.

மேலே குறித்த போக போக்கியங்கள் யாவும் பொருளால் வருதலால் எல்லா நலனும் இனிது உதவும் என வந்தது.

அறிவு ஆற்றல் முதலிய நலங்கள் யாதும் இல்லான் எனினும் செல்வம் உடையவன் எல்லா வகையினும் வல்லவன் என உயர்ந்து நிற்கின்முன். மடையன் மதிமான் ஆகிருன்; கோழை வீரன் ஆகிருன்; குரூபி அழகன் ஆகிருன். இழி நிலைகளையெல்லாம் மாற்றி மனிதனை மகிமைப் படுத்தி வருதலால் பொருள் ஓர் அற்புத சத்தியாய்ப் பொற்பமைந்துள்ளது.

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள். (குறள், 751)

பொருளின் பெருமையைக் குறித்து வந்துள்ள இந்த அருமைத் திருக்குறளில் எவ்வளவு பொருள்கள் ஏறியுள்ளன!

ஒரு பொருளாக மதிக்கப் படாதவரையும் எல்லாரும் மதித்து வணங்கும்படி பொருள் செய்தருளும் ஆதலால் அதனை விரைந்து தேடிக் கொள் எனத் தேவர் இங்ஙனம் போதித்திருக்கிருர். குறிப்புகள் கூர்ந்து சிந்திக்க வுரியன.

பொருள் அல்லவர் என்றது காசு பெருதவர் என உலகில் வழங்கி வரும் வழக்கை நோக்கி வந்துள்ளது. ஒரு காசுக்கும் உதவாத முழுமடையனையும் விழுமிய மனிதனுக்கிப் பெரிய மதிமான்கள் எல்லாரும் தொழுது துதிக்கும்படி பொருள் செய்து விடும் என்றது அதன் அதிசய மகிமையை விளக்கி நின்றது. காசு பெருதவரும் காசு பெற்றபின் தேசு மிகப் பெறுகின்முர்.

காசு பெருத கடையரையும் காசினியில்
ஈசன்எனச் செய்தருளும் இன்பொருளே!---நேசமுடன்
உன்னைப் பெருதார் உலகில் எதைப் பெறுவார்?
இன்னல் இழிவே எதிர்பெறுவார்;---சொன்னம் எனப்
பேர்பெற்று நிற்கும் பெருமானே! உன்மகிமை
யார்பெற்று நின்ருர் அவனியிலே?

என இன்னவாறு சீர் பெற்றுள்ளமையால் பொருளின் நீர்மை நிலைகளை நேரே தெரியலாகும். மண்ணைப் பொன் ஆக்கு வது போல் இழிந்த மனிதனையும் உயர்ந்தவனுகப் பொருள் உயர்த்தி யருளுகிறது. அது செய்து வருகிற வேலை அதிசய வியப்பாயுள்ளது.

கல்லானே ஆனுலும் செல்வம் மேன்மை அடைவிக்கும் என்றது அதன் பான்மை தெரிய வந்தது. கல்லாதவன் இருகால் விலங்கு என இழிக்கப் பட்டுள்ளான். அங்ஙனம் இழிந்துள்ள அவனையும் செல்வம் சிறந்தவனுகச் செய்தருளுகின்றது.

கல்வி வாசனையே இல்லாதவரும் மிகுந்த செல்வமுடைய வராயுள்ளனர்; நன்கு கற்றவரும் அவர்பால் வந்து ஊழியம் புரிகின்றனர். அந்த நிலைமையைக் கண்டதும் தங்கள் தலைமை யைக் கொண்டாடுகின்ருர். செல்வத்தின் சிறப்பையும் மதிப்பை யும் நினைந்து நினைந்து நெஞ்சம் களிக்கின்ருர்.

கேடில் விழுச் செல்வம் என்று பீடு பெற்றுள்ள கல்வியை யுடையவரும் தம்பால் வந்து பாடுபட்டுப் பாடழிந்து நிற்றலால் செல்வமே எல்லாவற்றினும் சிறந்தது என வியந்து செல்வர் செருக்கு மிகப் பெறுகின்ருர். உலக நிலை பலவகையிலும் அவ ரைத் தலை நிமிரச் செய்கிறது. இழிந்த ஏதங்களெல்லாம் மறை ந்து உயர்ந்த மேதைகளாய் அவர் சிறந்து திகழ்கின்ருர்.

கோதறு கல்வி சாலூர்க் குடிபிருந்து அறியான் ஏனும்
ஓதரும் செல்வம் மிக்கோன் ஒருவனே உயர்ந்தோன் ஆவன்;
காதலின் வேத முன்னும் கலைகள்கற் றுணர்ந்தான் ஏனும்
தீதமை மிடிய ஞயின் சிறந்திடான் வேத்தவைக்கே.

(குசேலோபாக்கியானம்)

குசேலர் தன் மனைவியிடம் இவ்வாறு கூறியுள்ளார்.

எவ்வளவு படித்திருந்தாலும் பொருள் இல்லையானல்

அவரை உலகம் மதியாது என்பதை இதனல் உணர்ந்து கொள்ளுகிறோம்.

நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும் (குறள், 1046)

என்பது எவ்வளவு அற்புத அனுபவமாய் வெளிவந்துள்ளது! கல்லாதவனுயினும் பொருளுடையவன் சொல்வதை எல்லாரும் விழைந்து கேட்கின்றார். பிழையாய் உளறினாலும் அவன் பேசுவதை உவந்து கேட்டு வியந்து கொண்டாடுகின்றார்.

"நல்லாவின் கன்ருயின் நாகும் விலைபெறூஉம்
கல்லாரே ஆயினும் செல்வர்வாய்ச் சொற்செல்லும்
புல்லீரப் போழ்தின் உழவேபோல் மீதாடிச்
செல்லாவாம் நல்கூர்ந்தார் சொல். (நாலடியார், 115)

இதில் வந்துள்ள உவமை நயங்களைக் கவனியுங்கள். மடையனுயினும் செல்வனுடைய சொல்லுக்கு ஒரு மதிப்பிருக்கின்றது. செல்வ வாக்கு சேல்வாக்கு ஆயுள்ளது.

உலகம் பொருளால் நடந்து வருதலால் அதனையுடையவர் எவ்வழியும் சிறந்தவராய் யாண்டும் உயர்ந்து வருகிறார்.

"தனவான் பலவான்லோகே ஸர்வஸ்ஸர்வத்ர ஸர்வதா."

"உலகத்தில் தனவானே பலவானுயிருக்கிறான்; எப்பொழுதும் எவ்வழியும் யாரிடமும் யாண்டும் அது நீண்டு நிலவுகின்றது" என்னும் இது ஈண்டு அறிய வுரியது.

தனமுடையான் கனமுடையான் என்னும் முதுமொழி பொருளின் உயர் நிலைகளை மதி தெளிய வந்தது. பொல்லாச் சிறுமைகளை நீக்கி எல்லாப் பெருமைகளையும் ஆக்கியருளுதலால் செல்வம் ஆக்கம் என நேர்ந்தது.

"வென்றி ஆக்கலும் மேதக வாக்கலும்
குன்றி னார்களைக் குன்றென ஆக்கலும்
அன்றி யும்கல்வி யோடுஅழகு ஆக்கலும்
பொன்துஞ்சு ஆகத்தினுய் பொருள் செய்யுமே."
(சீவக சிந்தாமணி)

கல்வி அழகு வெற்றி மதிப்பு முதலிய எல்லா மேன்மைகளையும் பொருள் அருளும் என இது உணர்த்தி யுள்ளது.

குன்றினுர் குன்று என நிலவுவர் என்றது கூர்ந்து சிந்திக்கத் தக்கது. சிறிய புலை நிலையி லிருந்தவரையும் பெரிய மலை என உலகில் தலை தெரியச் செய்யும் என்றது பொருளின் நிலை தெரிய நின்றது. பொருள் ஏற அருள் ஏறி அதிசய ஒளி தருகிறது.

தன்னையுடையானைச் செல்வம் பலவகையிலும் உயர்த்தியருளுகிறது; அதனை நல்ல வழியில் ஈட்டிக் காத்து ஈந்து இன்புறுக.

564. பாக்கியவான் செல்வன் பவிசுடையான் என்றுமேல்
நோக்கிய வானும் நுவலுமால்—ஆக்கிய
பொன்னுல் புகழின்பம் பொங்கிவரும் பொன்னிலதேல்
என்னும் இதனைநீ எண். (சு)

இ—ள்

பொருள் இருந்தால் பாக்கியவான் செல்வன் பவிசுடையான் என வானவரும் உவந்து மொழிவர்; புகழ் இன்பங்கள் பொங்கி வரும்; பொருள் இல்லையேல் என்ன உண்டாம்? இதனை எண்ணி யறிக என்பதாம்.

உலகில் மனிதன் சுக போகமாய் வாழ்வது பெரிய புண்ணியத்தின் பயனுக எண்ணப் பட்டுள்ளது. செல்வ வளங்கள் சுரந்து செழித்துள்ள சிறந்த வாழ்வைப் பிறவியிலேயே அடைந்து வருதலால் கருவிலே திருவுடையார் என அரசர் பெருமகிமை பெற்றுள்ளார். கர்ப்ப சீமான் என்னும் பேர் அற்புதப் பேருய் அமைந்திருக்கிறது.

செல்வன் என்பது திருமாலுக்கு ஒரு சிறந்த பெயர்.

"செல்வன் நாரணன் என்ற சொல் கேட்டலும்
மல்கும் கண்பனி நாடுவன் மாயமே
அல்லும் நன்பகலும் இடைவீ டின்றி
நல்கி என்னைவிடான் நம்பி நம்பியே." (திருவாய்மொழி)

நம்மாழ்வார் திருமாலை இவ்வாறு பாடி உருகி யிருக்கிருர்.

"திருவுக்கும் திருவாகிய செல்வா!" எனத் திருமங்கையாழ்வார் இங்ஙனம் துதித்துத் தொழுதிருக்கிருர். இலட்சுமி கடாட்சம் உடையவர் எனச் செல்வரை உலகம் வியந்து புகழ்ந்து வருகிறது. புகழெல்லாம் பொருளைத் தழுவி எழுகின்றன.

சீமான், பாக்கியவான் என்னும் நாமங்கள் சிறந்த பொரு ளில் வழங்கப் படுகின்றன. பாக்கியம் என்பது பெரும் புண்ணி யத்தின் பயனுக எண்ணப் பட்டுள்ளது.

"சேக்கையின் அரவு நீங்கிப் பிறந்தது தேவர் செய்த பாக் கியம்" எனத் திருமால் இராமனுய் அவதரித்ததைக் குறித்து இது உரைத்துள்ளது. தேவர் தெய்வத் திருவை அடையும்படி அப் பிறப்பு அமைந்திருத்தலால் அது அவர் செய்த பாக்கியம் என வந்தது. செல்லப் பெயரில் செல்வ ஒளிகள் வெளியாகின்றன.

போன்னுல் புகழ் இன்பம் போங்கி வரும்.

என்றது செல்வத்தின் திவ்விய விளைவுகளை உணர்த்தி நின்றது.

கீர்த்தி சுகம் முதலிய அரிய நலங்கள் எல்லாம் பொருளு டையானிடம் எளிதே வந்து சேருகின்றன. போருள் வரின் எல் லாம் வரும் என்னும் அருள் மொழி பொருள் பொதிந்து வந் துள்ளது.

"பொன்னின் ஆகும் பொருபடை; அப்படை
தன்னின் ஆகும் தரணி; தரணியின்
பின்னை ஆகும் பெரும்பொருள்; அப் பொருள்
துன்னுங் காலைத் துன்னுதன இல்லையே."

(சீவக சிந்தாமணி)

பொருளால் விளைந்து வரும் விளைவுகளைக் குறித்துக் காட்டி ஆட்சியாளருக்கு இது அறிவுக் காட்சிகளை யூட்டியுள்ளது.

அரிய பல காரியங்களையும் பொருள் இனிது முடித்து வரு தலால் அதனையுடையவர் யாண்டும் பெருமையாளராய்ப் பேர் பெற்று நிற்கின்றார். எல்லா வழிகளும் செல்வர்க்கு விழி மலர் ந்து நிற்றலால் அவர் கழிபேருவகையில் களித்துத் திளைக்கின் றார். அவருடைய உள்ளத்தில் உறுதியும் ஊக்கமும் பெருகியுள் ளன. பொருளுடையேம் என்னும் எண்ணம் மனிதனுக்கு அரிய பல உறுதிகளை அருளி வருகின்றது. அவ் வரவால் அவனுடைய வாழ்வு உயர்தரமாய் ஒளி பெற்றுள்ளது.

"The rich man's wealth is his strong city; the destruction of the poor is their poverty." (Bible)

"செல்வனுடைய பொருள் அவனுக்கு அரணை நகரமாய்

ஆதரவு புரிகிறது; ஏழைகளுடைய வறுமை அவர்க்கு இழி நரகமாய் அழி துயர் செய்கிறது” எனச் சாலமன் என்னும் நீதிமான் இங்ஙனம் கூறியிருக்கிருர்.

செல்வம் உடையவர் இவ் வுலகத்தில் சுவர்க்க இன்பத்தை அனுபவிக்கிருர்; அஃது இல்லாதவர் அல்லலும் அவமதிப்பும் அடைந்து நரக துன்பத்தில் உழலுகிருர். இந் நிலைமைகளை நினைந்து நோக்கிப் பல வழிகளிலும் விரைந்து முயன்று செல்வங்களை உளவாக்கித் தலைமையான திருவாளனாய் நீ நிலவி வாழுக.

---

565. பல்வழியும் இன்பம் படிந்துவரப் பார்வாழ்வு
செல்வ வழியால் சிறந்துவரும்—நல்வழியில்
வந்தபொருள் என்றும் வளமாய்ப் பெருகிநின்று
சந்ததிகட் கின்பம் தரும். (ரு)

இ---ள்

செல்வம் இருந்தால் பல வழிகளிலும் இன்ப நலங்கள் பெருகி வருகின்றன; உலக வாழ்வுகள் உயர்வுறுகின்றன; நல்ல வழியில் வந்த பொருள் என்றும் நிலையாய் நின்று வழி முறைகளுக்கெல்லாம் இன்பம் வழங்கி வரும் என்பதாம்.

உயிர் உடலோடு கூடி வாழும் வரையும் மனிதன் உலகில் வாழ்ந்து வருகிருன். அந்த வாழ்நாளுள் அரிய பல அனுபவங்களைக் காணுகின்ருன். மனைவி மக்கள் முதலிய துணைகளை ஆதரித்து உரிய வினைகளைச் செய்து குடும்பம் தாங்கும் குல வீரனாய் அவன் நிலவி நிற்கின்ருன். தேக யாத்திரையாய் அமைந்துள்ள சீவிய காலத்தைச் சிறந்த வழியில் நடத்தி மானம் மரியாதைகளுடன் நடந்து வருபவனே உயர்ந்த மேன்மகன் ஆகின்ருன். தான் பிறந்த குடியைச் சிறந்த நிலையில் உயர்த்திச் சீரும் சிறப்புமாகச் செய்து வருபவனை யாரும் புகழ்ந்து போற்றுகின்றனர்.

குடி வாழ்க்கை செல்வத்தால் செழித்து வருதலால் அதனைப் பல்வழியிலும் நாட்டமாய் ஈட்ட முயல்கின்ருன். அம் முயற்சியாளன் பொருளும் புகழும் பெற்று உயர்ச்சியடைகின்ருன்.

நல்ல இன்ப நலங்களை அனுபவித்து யாண்டும் சுகமாய் வாழ வேண்டும் என்றே எல்லாரும் விரும்பியுள்ளனர். அவ்

விருப்பத்தைப் பொருள் பூரணமாக நிறைவேற்றியருளுதலால் யாவரும் அதனை அவாவி அடைகின்றார்.

பணம் பத்தும் செய்யும் என்பது பழமொழி.

எண்ணிய எதையும் செய்ய உறுதியும் ஊக்கமும் தருதலால் பொருள் மனிதனுக்கு ஒரு தெய்வீக சத்தியாய் எய்தியுள்ளது. செல்வம் ஒன்று உடையவன் எல்லா வகையிலும் வல்லவனாய்ச் சிறந்து திகழ்கின்றான். கருதிய போகங்களைக் கருதியபடியே இனிது அருளுதலால் கைப்பொருளே மெய்ப்பொருள் என்று உறுதி பூண்டு அவன் உள்ளம் களிக்கின்றான்.

“கைத்துடையான் காமுற்றது உண்டாகும்; வித்தின்
முளைக்குழாம் நீருண்டேல் உண்டாம்; திருக்குழாம்
ஒண்செய்யாள் பார்த்துறின் உண்டாகும்; மற்றவள்
துன்புறுவாள் ஆகின் கெடும்.” (நான்மணிக்கடிகை)

நிலத்தில் வித்திய பயிர்களுக்கு நீர் போல் உலகத்தில் தோன்றியுள்ள உயிர்களுக்குச் சோத்து என்னும் இது ஈண்டு உய்த்துணர வுரியது. திருமகள் கண் நோக்கின் செல்வங்கள் பெருகி வரும்; அவள் கண் மூடின் அவை அருகிப் போம் என்றது செல்வ வரவுகளின் நிலை தெரிய வந்தது.

செல்வம் முயற்சியில் உள்ளது; மனிதன் வினை செய்யானாயின் திரு பொருள் செய்யாள். செய்யாள் எனத் திருமகள் பருவியுள்ள பேர் உருவும் செயலும் அயலறிய அமைந்தது.

“முயற்சி திருவினை ஆக்கும்” என்றது பொய்யாமொழி.

ஊக்கி முயன்றவன் பெரிய ஆக்க முடையவனாய் உயர்ந்து வருகிறான். செல்வம் கைவந்த போது எல்லா இன்ப நலங்களும் எதிர் வந்து நிற்கின்றன. எங்கே போனாலும் செல்வன் சிங்க ஏறுபோல் சிறந்து வருகிறான். கொடிய காட்டில் போயிருந்தாலும் இனிய தேக போகங்களை அவன் அனுபவித்து மகிழ்கிறான்.

“போய்க்கொடிய கானம் புகுந்தாலும் அவ்வனத்தில்
வாய்க்கினிய சோறூட்டும் மாதாவே!
ஓது கலை ஞானம் உள்ள வெல்லாம் கற்று நன்றாச்
சாதிக்க வைக்கும் தகப்பனே!
தந்தரத்துக்கு ஒவ்வாத தாழ்ந்தகுலம் ஆனாலும்
வந்தெடுத்துப் பெண்கொடுக்கும் மாமனே!

புந்தியில்லார் ஆனாலும் புந்தியெல்லாம் தந்துகலா
தந்தியெல்லாம உண்டாக்கும் தாட்டிகா!
வெட்டிவெல்லக் கூடா வினையை அரைநாழிகைக்குள்
கட்டிவெல்லக் கச்சைகட்டும் காவலா!" (பணவிடு தூது)

பணத்தின் பெருமையை இது உணர்த்தியுள்ளது.

தாய் தந்தை முதலிய உரிமையாளர் எவரினும் அருமையாகப் பொருள் மனிதனை இனிது பாதுகாக்கும் என வருணித்திருக்கும் இதில் அதன் வன்மைகளையும் தன்மைகளையும் உணர்ந்து கொள்ளுகிறோம். வாழ்வு தருவது வாழ்த்த வந்தது.

எவ்வளவு குண நலங்கள் நிறைந்திருந்தாலும் பொருள் இல்லையானால் அவனை உலகம் இகழ்ந்து விடுகின்றது. இல்லானை இல்லாளும் வேண்டாள் என்றதனால் இல்லாமையின் பொல்லாமை புலனாய் நின்றது.

இல்லாதவன் வாழ்வு இருள் படிந்து அல்லல் பல அடைகின்றது. பொருள் இன்ப நலங்களை விளைத்து வருதலால் அஃது இல்லாதபோது துன்பங்கள் யாவும் தொடர்ந்து எழுகின்றன.

நல்குர வென்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும். (குறள், 1045)

வறுமையாகிய துன்பத்துள் பல துன்பங்களும் வந்து குடிபுகுந்து கொள்ளும் என்று இது குறித்துள்ளது. இன்பங்களையே நாடியுள்ள சீவர்களுக்குத் துன்பங்களையே விளைத்து வருகிற வறுமை எவ்வளவு துயரமான பயங்கரமுடையது! என்பது எளிது தெளிவாம்.

இன்ப துன்பங்களை மறந்து உலகத்தைத் துறந்த துறவிகளால் மாத்திரம் வறுமையைச் சகிக்க முடியும்; வேறு எவரும் அதனைச் சகித்திருக்க முடியாது. எவ்வழியும் சுகமாய் வாழ வேண்டும் என்றே யாவரும் அவாவியுள்ளனர். அந்த ஆவலை இயல்பாகவுடைய மக்களுக்கு வறுமை கொடிய துயரமாகிறது.

"Aspiring beggary is wretchedness itself." (Goldsmith)

"நசையுடைய வறுமை மிகவும் கொடியது" என இது குறித்துள்ளது. இன்னல் ஏறும்பல் வாழ்வை இனிமை செய்க.

இழிவு ஈனம் முதலிய சிறுமைகளையெல்லாம் ஒழித்துப்

பொருள் பெருமையை அருளி வருதலால் மனிதர் யாண்டும் அதனை ஆவலோடு தேடி வருகின்றனர். பொருளைப் பல வழிக ளிலும் பெறலாம்; ஆயினும் நல்ல வழியில் வருவதே நிலையாய் நின்று நலம் பல நல்கி வருகின்றது.

நல்வழியில் வந்த பொருள்
சந்ததிகட்கு இன்பம் தரும்.

தரும நெறியோடு மருவி வருகிற பொருளே நெடிது நின்று நிலையான பலன்களை அருளி வருதலால் அவ்வழியிலேயே பொருளை ஈட்ட வேண்டும்; வேறு வெவ்வழியில் ஈட்டின் அது எவ்வழியிலும் இடரே செய்து இழிந்து ஒழிந்து போம் என்க.

"நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்." (குறள், 171)

பிறருடைய பொருளை அநியாயமாய் அபகரித்தால் அது குடிகேடு செய்து பல குற்றங்களையும் விளைத்து விடும் என இது உணர்த்தியுள்ளது.

இடைப்பல சொல்லி எளியவர் தம்மை
யுடைப்பொருள் வெஃகி ஒறுத்த பயத்தால்
முடைப்பொலி மேனியை முள்மத் திகையால்
புடைப்ப நடுங்கிப் புரள்வர் ஒருசார். (சூளாமணி)

ஆசை வார்த்தைகளைப் பேசிப் பிறரை ஏமாற்றிப் பொருளைக் கவர்ந்து கொண்டவர் பின்பு நரகத்தில் கொடிய துயரங்களை அடைந்து நெடிது வருந்துவர் என இது குறித்திருக்கிறது.

தானத்துக்கு உரித்தும் அன்று; தன் கிளைக்கு ஈயின் சால
இனத்தில் உய்க்கும்; நிற்கும் எச்சத்தை இழுக்கப் பண்ணும்;
மானத்தை அழிக்கும்; துய்க்கின் மற்றவர்க்கு அடிமை யாக்கும்;
ஊனத்து நரகத்து உய்க்கும் பிறர்பொருள் உவக்கில் வேந்தே.
(சாந்தி புராணம்)

தன்னுடைய நெறியான முயற்சியால் அன்றி வேறு களவான வழியில் வரும் பொருள் பல வகையான இழிவுகளையும் அழிவுகளையும் விளைத்து இறுதியில் நரகத்திலும் செலுத்தி விடும் என் உரைத்துள்ள இதை ஊன்றி நோக்கி உண்மையை உணர்ந்து கொள்க. தரும நெறியில் வருவதே இருமையும் இன்பம் தரும்.

பொருள் எல்லா இன்ப நலங்களையும் தருவதாயினும் அது பொல்லாத வழியில் வரலாகாது; வரின், எவ்வகையிலும் அது அல்லலே புரியும். பழி வழியில் வந்தது அழி துயரமே செய்யும் ஆதலால் அதனை யாதும் தீண்டாமல் அயலே ஒழிக.

நேர்மையான சொந்த முயற்சியில் வந்த பொருளே எந்த வழியும் இன்பம் பயந்து என்றும் நிலையாய்ச் சந்ததிகளுக்கும் தழைத்து வரும். அந்த வழியில் ஆய்ந்து ஆக்கத்தைத் தேடி யாண்டும் பாக்கியவானாய் நீண்டு வாழ்ந்து வருக.

---

566. எண்ணியநல் இன்பங்கள் எய்தி மகிழலாம்
புண்ணியங்கள் செய்து புகழ்பெறலாம்—ஒண்ணிதிகை
யுற்றால் அரிய உறுதி நலமெல்லாம்
பெற்றுள ளாமே பெரிது. (சா)

இ—ள்

பொருள் கையில் இருந்தால் கருதிய சுக போகங்களை மருவி மகிழலாம்; புகழ் உறலாம்; புண்ணியம் பெறலாம்; அரிய உறுதி நலங்கள் யாவும் அடையலாம் என்க.

செல்வத்தால் விளையும் நலன்களை இது உணர்த்துகின்றது.

தேக போகங்களையே சீவர்கள் யாண்டும் விரும்பியுள்ளனர். மெய் வாய் முதலிய பொறி இன்பங்களில் வெறி மண்டியுள்ளமையால் மனித வாழ்வுகள் எவ்வழியும் வெவ்விய ஆசைகளாய் விரிந்து நிற்கின்றன. அருந்தல் பொருந்தல்களிலேயே யாவரும் அலமந்துழலுகின்றனர். தாம் விரும்பிய இன்ப நலன்கள் யாவும் பொருளால் மேவி வருதலால் எல்லாரும் அதனையே அவாவிப் போற்றி வருகின்றனர்.

பொருள் போகங்களை விளைத்துப் பல வகையான மேன்மைகளை அருளுகின்றது. அது இல்லாத இடத்தில் சோகங்களும் இழிவுகளும் தொடர்ந்து அடர்ந்திருக்கின்றன.

வறுமை சிறுமை மிகச் செய்யும்; இருமையும் கெடுக்கும் என்றதனால் பொருள் இல்லாதவரது இழிவும் துயரமும் விழி தெரிய வந்தன. இன்னுமை நீங்கின் இனிமை ஓங்கும்.

"வறுமை போல் இன்னது வறுமை அன்றி வேறில்லை;
மறுவின் மொழிகள் சோர்வுபடும்; வாய்த்த குடிநற் செயல்மொழிகள்
இறுதி படும்; மற்று இரப்பாதி எல்லாத் துயரும் உடனுகும்;
பிறனின் நோக்கும் இன்ருளும்; பிள்ளாய்! அது வந்திடினிறத்தல்."

பொருளைப் போற்றி வாழும்படி தன் மகனுக்குச் சோம காந்தன் என்னும் அரசன் இன்னவாறு புத்தி போதித்திருக்கிருன்.

"தாயும் பகை; கொண்ட பெண்டீர் பெரும்பகை; தன்னுடைய
சேயும் பகை; உறவோரும் பகை; இச் செகமும் பகை
ஆயும்பொழுதில் அருஞ்செல்வம் நீங்கில் இங்கு ஆதலினுல்
தோயும் நெஞ்சே மருதீசர் பொற்பாதம் சுதந்திரமே."

செல்வம் இல்லையானுல் இவ் வுலகில் நேரும் இழிவுகளையும் அல்லல்களையும் சுட்டிக் காட்டித் தம் நெஞ்சை நோக்கிப் பட்டினத்தடிகள் இப்படிப் போதித்துள்ளார்.

பெண்டிர் மதியார்; பெருங்கிளை தானது;
கொண்ட விரகர்; குறிப்பின் அஃகுப;
வெண்டரை நின்று வெறுக்கை இலராயின்
மண்டினர் போல்வர் தம்மக்களும் ஒட்டார். (1)

சொல்லவை சொல்லார்; சுருங்குபு சூழ்ந்துணர்
நல்லவை யாரும் நனிமதிப்பார் அல்லர்;
கல்வியும் கைப்பொருள் இல்லார் பயிற்றிய
புல்லென்று போதலை மெய்யென்று கொள்நீ. (2)

(வளையாபதி)

செல்வம் இல்லாவழி இவ்வாறு பலவகையான அவமானங்களும் அல்லல்களும் நேரும் ஆதலால் பொருளை எல்லாரும் விரும்பித் தொகுத்துப் பெருமையோடு வாழ வேண்டும் என்று யாண்டும் மூண்டு முயன்று நீண்டு வர நேர்ந்தனர்.

ஏழை, வறியன், எளியன், மிடியன் எனப் பொருள் இல்லாதவன் இழிந்து நிற்கிருன். அந்த இழி நிலைகளையெல்லாம் அறவே நீக்கிச் செல்வம் மனிதனைச் சிறந்த மேன்மையில் உயர்த்தியருளுகின்றது. இனிய பொருள் கைவர இன்னுத மருள்எல்லாம் மறைந்து போகின்றன.

இல்லான் வறியன் எளியன் மிடியனெனப்
பொல்லாத சொல்லால் புலையாடி—எல்லாரும்

எள்ளி இகழும் இழிப்பழியை நீக்கியுயர்
வள்ளியன் ஆக்கும் வளம்.

பொருள் இல்லாத பொழுது மனிதன் இருக்கும் வகையும், அது வந்த போது அவன் நின்று நிலவும் நிலையும் இதனால் நன்கு அறியலாகும்.

புண்ணியங்கள் செய்து புகழ் பெறலாம்.

எண்ணிய இன்ப நலன்களை இனிது எய்தி அனுபவிப்பதோடு புண்ணியங்களையும் புகழ்களையும் பொருளால் செய்து கொள்ளலாம் ஆதலால் அதன் கண்ணிய நிலைகளைக் கருதியுணரும்படி இது காட்டி நின்றது.

ஒண் நிதி என்றது நல்ல வழியில் வந்தது என அச் செல்வத்தின் நயம் தெரிய. நீதி நெறியோடு தழுவி வந்த பொருளே நிதி என நேர்ந்தது. சங்க நிதி பதும நிதி என்னும் தெய்வ நிதிகளை இங்கே சிந்தனை செய்து கொள்க. நல் வழியில் வந்த செல்வமே நலம் பல செய்ய வுரியதாம். தீவினை விட்டு ஈட்டல் பொருள் என நம் பாட்டி காட்டியுள்ள பொருட்காட்சி ஈண்டுக் கருதிக் காணத் தக்கது. புனிதமாய் வருவது புண்ணியமாய்ப் பெருகுகிறது.

பொருளைப் பெறுவது போகங்களை அனுபவித்தற்கு மாத்திரமன்று; மறுமைக்குரிய தருமங்களையும் செய்து கொள்ளவேயாம். அங்ஙனம் செய்யாவழி அப்பொருள் ஈட்டம் மருளீட்டமாய் மாண்பிழந்து படுகின்றது.

கண்ணியமான வழிகளில் சம்பாதித்த சம்பாத்தியமே நல்ல புண்ணியமான நெறிகளில் புகுந்து பெருகி உயர்ந்து வருகிறது.

"அறத்தின் ஈட்டிய ஒண்பொருள் அறவோன்
திறத்து வழிப்படூஉம் செய்கை போல." (மணிமேகலை)

தரும வழியில் வந்த பொருள் தருமநெறிகளில் பரவி நின்று இருமையும் நிலையாய் இன்பம் தரும் என இது உணர்த்தி யுளது.

தருமம் என்பது எவ்வழியும் உயிரினங்களுக்கு இதமான செவ்விய நிலைகள். பசித்தவர்க்கு அன்னம் இடுதல், நீர் நிலைகளை உளவாக்கல், கல்விச் சாலைகளை அமைத்தல் முதலிய நலங்கள் எல்லாம் உயர்ந்த அறங்களாய் ஒளி பெற்றுள்ளன.

இத்தகைய அறம் புகழ் இன்பம் முதலியன யாவும் பொருளால் அமைந்து வருதலால் அது புண்ணியத்தின் வித்து எனப் பொலிந்து நின்றது. பொருளுக்கு வித்தம் என்று ஒரு பெயர்.

எல்லா மேன்மைகளும் விளைந்து வருதற்குப் பொருள் மூல வித்தாய் இருத்தலால் அது வித்தம் என வந்தது.

ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு. (குறள், 760)

பொருளுடையவர்க்கு அறமும் இன்பமும் எளிதாக அமையும் என இது அருளியுள்ளது. முதலில் கண்ணும் கருத்துமாய்ப் பொருளை ஈட்டு; பின்பு எல்லா நலங்களும் உன்னை நோக்கி ஓடி வரும் எனத் தேவர் இதில் உணர்த்தியிருக்கும் அழகு ஊன்றி யுணர வுரியது.

அரிய பொருள் கைவரின் அறமும் இன்பமும் எளியனவாய் ஒருங்கே விரைந்து உன் மருங்கு வந்து நிற்கும் என்க.

ஒண் பொருள் எண் பொருள் என்பதில் உறைந்துள்ள நுண் பொருளை நுனித்து நோக்குக. பொருளை நெறியே ஈட்டுபவர் புண்ணிய போகங்களை முறையே நண்ணி மகிழ்கின்றனர்.

வடுவிலா வையத்து மன்னிய மூன்றின்
நடுவணது எய்த இருதலையும் எய்தும்;
நடுவணது எய்தாதான் எய்தும் உலைப்பெய்து
அடுவது போலும் துயர். (நாலடியார் 114)

அறம், பொருள், இன்பம் என்னும் இம் மூன்றனுள் நடுவேயுள்ள பொருளை ஒருவன் அடைவானாகில் முன்னும் பின்னும் மன்னியுள்ள அறமும் இன்பமும் அவனிடம் எளிதே வந்தடையும்; நடுவுள்ளதை அடையானாயின் படு துயரம் உடையனாய் அவன் பதைத்து அயர்வான் என இது உணர்த்தி யுள்ளது.

இல்லாதவனது அல்லல் நிலைக்கு இதில் உவமை சொல்லியிருப்பது உள்ளத்தை நடுங்கச் செய்கிறது. உற்று நோக்குக.

தன் உள்ளத்தில் அருளும் இரக்கமும் உடையனாயினும் கையில் பொருள் இல்லையானால் அவன் யாதொரு உதவியும் செய்ய இயலாது. பொருள் இருந்தால் அருள் வளரும்; அன்பு

தழையும்; அறம் விளையும் ஆதலால் எல்லா நன்மைகளுக்கும் அது ஈன்ற தாயாய் ஆன்ற மகிமை புரியும் என்க.

அருள்என்னும் அன்பீன் குழவி பொருள்என்னும்
செல்வச் செவிலியால் உண்டு. (குறள், 757)

அருளை வளர்க்கும் செவிலித்தாய் எனப் பொருளை இதில் போற்றியிருக்கும் அழகைப் பார்க்க. செல்வச் செவிலி என்னும் பேர் சீர்மை நிறைந்து நீர்மை சுரந்துள்ளது.

“இருள்படு நெஞ்சத்து இடும்பை தீர்க்கும்
அருள்நன் குடையர் ஆயினும் ஈதல்
பொருள்இல் லோர்க்கு அஃது இயையா தாகுதல்
யானும் அறிவென் மன்னே.” (அகம், 335)

மதுரைத் தத்தங் கண்ணனார் என்னும் சங்கப் புலவர் பொருளின் பெருமையைக் குறித்து இங்ஙனம் உறுதி கூறியிருக்கிறார்.

அருள் அறங்களை வளர்த்து இருமை இன்பங்களையும் பொருள் இனிது அருளும் ஆதலால் அதனை நல்ல வழியில் நாடி ஈட்டி உரிமையுடன் பேணி உறுதி நலங்களைக் காணுக.

567 வானும் நிலனும் வரையும் கடலுமெலாம்
நானும்நீ என்று நகையாடி—ஞானம்
தெளிந்த முனிவோரும் செய்பொருளைக் கண்டால்
நெளிந்து விழைவர் நெகிழ்ந்து. (எ)

இ—ள்

மண் விண் மலை கடல் முதலிய உலகத் தோற்றங்கள் எல்லாம் கடவுள் நிலை என்று கருதி உரையாடுகிற பெரிய ஞானிகளும் பொருளைக் கண்டால் உள்ளம் நெகிழ்ந்து விரைந்து விழைந்து கொள்ளுவர் என்பதாம்.

பொருளில் யாரும் மருள் கொண்டுள்ளனர். அரிய துறவிகளும் பெரிய ஞானிகளும் அதில் மயங்கியிருக்கின்றனர். அந்த மயக்கம் அதிசய விசித்திரமாயுள்ளது.

உலகப் பொருள்கள் யாவும் நிலையில்லாதன; பரம்பொருள் ஒன்றே என்றும் நித்தியமானது; நித்த முத்த புத்த சுத்த பரிபூ

ரணமான அந்தப் பரம்பொருளை உறுதியாகக் கருதி நிற்பவரே பிறவி தீர்ந்து பேரின்பம் அடைவர் என இங்ஙனம் தெரிந்து கொண்ட உயர்ந்த ஞானிகளும் பொருளைக் கண்டபோது இழிந்து அதனை விழைந்து கொள்ளுகின்றனர்.

பரம்பரையாய்ப் பழகி வந்துள்ள வாசனை உரம் பெற்றுள்ளமையால் ஈசனையும் மறந்து பொருள் மேல் ஆசை கொள்ள நேர்கின்றனர். பொன், பெண், மண் என்னும் மூவகை இச்சைகளிலும் பொன் ஆசை முன்னுக மன்னியுள்ளது.

பொருளை மனிதன் இவ்வளவு ஆவலோடு விரும்புவதற்குக் காரணம் என்ன? உலக போகங்கள் பலவும் பொருளால் இனிது அமைகின்றன; சீவிய நிலைகள் செழித்து வருகின்றன ஆதலால் அதனை மக்கள் பேராவலோடு விரும்புகின்றனர் என்க.

உயிர் வாழ்வின் சுகங்கள் அதனுல் உளவாம் என அனுபவங்களால் உறுதி பூண்டுள்ளமையால் யாவரும் அதன்பால் ஆசை கொண்டு யாண்டும் அவாவி நிற்கின்றனர்.

பணத்தைக் கண்டால் பிணமும் வாயைப் பிளக்கும்.

என்பது பழமொழி. பொருளின் அதிசய நிலையை இது விசித்திரமாய் விளக்கியிருக்கிறது. செத்த சவத்தையும் பிழைக்க வைக்கின்ற அற்புத சத்தி பணத்துக்கு உண்டு என்பதை இது உணர்த்தி நிற்கின்றது. பணம் என்னமும் செய்யும் என உன்னி ஊக்கும்படி அது மன்னியுள்ளது.

இன்னவாறு பொருள் அரிய இசைகளைப் பெற்றிருத்தலால் பெரிய சன்னியாசிகளும் நசையாய் அதனை எண்ணி ஏங்கி இழிந்து படலாயினர்.

"குருளை மான்பிணித்து இளஞ்சிறார் ஊர்ந்திடும் கொடித்தேர்
உருளை ஒண்பொனை மணித்தலம் கவர்ந்துகொண் டுறுவ
வெருளின் மாக்களை வெறுப்பதென்? முனிவரும் விழைவார்;
பொருளின் ஆசையை நீங்கினர் யாவரே புவியில்?"

(கந்த புராணம்)

சூரபன்மனுடைய இராசதானி ஆகிய வீர மகேந்திரபுரியில் நிகழ்ந்த ஒரு காட்சியை இது காட்டியுள்ளது. அந் நகரின் பெரிய இராச வீதிகள் பளிங்கு முதலிய மணிகளால் தளவரிசை

கள் செய்யப் பெற்றுள்ளன. பொன்னால் செய்த அழகிய இரத்தங்களை அரசிளங் குமரர்கள் அவ் வீதிகளில் ஊர்ந்து செல்லுகின்றனர். மான் குட்டிகள் பூட்டிய அத் தேர்கள் ஓடும் பொழுது பொன் உருளைகள் பளிங்குத் தலங்களில் உருண்டு போகின்றன. அங்ஙனம் போங்கால் அப் பொன்னின் ஒளி அயல் எங்கும் வீசுகின்றது. அந்த மணித்தலம் பொன்னை ஆசையோடு கவர்ந்து கொள்வது போல் அக் காட்சி கனிந்து நின்றது. சடமான தலமே இவ்வாறு பொருள் ஆசை மண்டியிருத்தலால் மக்கள் ஆசை கொண்டு உழல்கின்றார் எனப் பிழை சொல்வது பிழை. பெரிய ஞான முனிவரும் பொருளின் ஆசையை நீங்க முடியாமல் ஏங்கியுள்ளனர் என வீரவாகுதேவர் இவ்வாறு வியந்து போயுள்ளார்.

முனிவரும் விழைவார் என்றது விழைவு நீங்கிய அவர் விழைந்து வீழ்ந்துள்ள இழிவு தெரிய வந்தது. உம்மை உணர்த்தி நிற்கும் பொருண்மையை நுண்மையாக ஓர்ந்து கொள்ளுக.

புவியில் பொருளின் ஆசையை யாவரே நீங்கினர்?

எனக் கவி இதில் வினவி விளக்கியிருக்கும் நிலை வியந்து காண வுரியது. பொருள் யாரையும் மயக்கித் தன் வசப்படுத்தும் என அதன் அதிசய வசியம் துதி செய்ய வந்தது.

"தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினும் அவர்தம்
மருண்ட தன்மையை மாற்றுவர் எனுமிது வழக்கே;
உருண்ட வாய்தொறும் பொன்னுருள் உரைத்துரைத்தோடி
இருண்ட கல்லையும் தன்னிறம் ஆக்கிய இரதம்."

(இராமாயணம்)

தசரதன் மிதிலைக்கு எழுந்தருளி வரும்பொழுது இடையே சந்திர சைலம் என்னும் மலையில் தங்கி யிருந்தான். அந்த மலைச் சாரல்களில் ஓடி உலாவிய தேர்களின் நிலைகளைக் குறித்து இது உரைத்துள்ளது. மேலே வந்துள்ள கவியோடு இது இணைத்து எண்ணத் தக்கது. பொருள் நிலையில் ஒரு முகமாய் மருவியிருப்பினும் கவிகளுடைய கற்பனைக் காட்சிகளையும் உணர்ச்சிகளையும் உள்ளப் பண்புகளையும் அனுபவங்களையும் தனித்தனியே வெளிப்படுத்தியிருக்கின்றன. வழியில் கிடந்த கல்லுகளில் பொன் உருளைகள் தோய்ந்தன; அந்த இருண்ட கற்களும் உயர்ந்த பொன்

களாய் ஒளி வீசலாயின. தெளிந்த மேலோர் இழிந்த கீழோரைச் சேர்ந்தால் அவரையும் உயர்ந்தவராக்கி அருளுவர் என்னும் உண்மையை அது உணர்த்தி நின்றது எனக் கம்பர் இங்ஙனம் இன்பம் ததும்ப இசைத்திருக்கிறார். இரண்டு கவிகளும் இரண்டு உண்மைகளை இரண்டு நோக்கில் இனிது வெளியிட்டுள்ளனர்.

உலக அனுபவங்கள் கலையறிவோடு கலந்து வெளி வரும் பொழுது தலைமையின்பம் சுரந்து வருகின்றன. மனித வாழ்வின் நிலைமைகள் இனிய சார்புகளால் இசைந்து திகழ்கின்றன. எவ்வழியும் மாய மயக்கங்கள் தொடர்ந்து வருதலால் வைய மையல்கள் வெய்யனவாய் விரிந்து நிற்கின்றன.

ஞானம் தெளிந்த முனிவோர்

என்றது அவரது அறிவு தெளிவு அனுபவங்களைக் கருதியுணர. பொருளில் உள்ளம் நெளிந்த பொழுது தெளிந்த அறிவு ஒளிந்து போகிறது. நெளிதல் = குழைதல், சலித்தல். தெளிந்த உள்ளத்தையும் நெளிந்துபடச் செய்தலால் பொருளின் உயர்ந்த வன்மை உணர்ந்து கொள்ள வந்தது.

"வெறும்பொருளை விட்ட பொழுதுதான் பரம்பொருள்
உறும்பொருள் ஆகி உறவாம்"

என உறுதி பூண்டு உலகைத் துறந்து போன துறவிகளும் இடையே பெரும் பொருளைக் கண்டால் பரம் பொருளை மறந்து விட்டுப் பெரிய மடாதிபதிகளாய் மருவி விடுகின்றனர்.

பொருள் இவ்வாறு அதிசய மகிமை வாய்ந்திருத்தலால் அது சாமி, ஈசன் எனப் பேச நேர்ந்தது.

"ஈசன் உனக்கு ஒப்பு என்பார் ஈசனை உண்டாக்கி அவன்
பூசனைநீ செய்விப்பாய் புண்ணியா!---பேசுங்கால்
மூவர் கடவுளர்கள் மூவரில் ஒன்றான தனித்
தேவன் மகிமை தனைச் சென்றேத்தற்கு---ஆவது போல்
சின்மயமாம் உன்னுடனே செம்பு வெள்ளி சேர்ந்தாலும்
உன்மயமே எங்கும் உயர்ச்சி காண்---பொன்மகளை
மார்புதனில் மாயோன் வரிசையா வைத்ததுநின்
பேர்மகிமை கண்டாய் பெரியோனே---பாருலகில்
ஆன்ற பலகோடி ஆத்மவர்க்கம் அத்தனையும்
இன்ற பிரமனும் நீ இன்றமகன்---தோன்றுமொரு

நற்பொரு ளுண்டாங்கவன்றன் நாமம் இரணிய
கெற்பனென்று சொல்வதுநான் கேட்டிலனோ-கற்பனையால்
ஆங்கவன் உண்டாக்கும் அகிலாண்ட கோடியெல்லாம்
தாங்குமக மேருவுநீ தானன்றோ---தீங்கின்றி
எண்ணுன் கறம்வளர்த்து இரட்சிக்கும் காந்திமதிப்
பெண்ணு ரமுது பிறந்ததலம்---அண்ணலே
முந்தி மயமான முழுச்சிமய வெற்பென்பார்
அந்தமலை உன்றன்மயம் அல்லவோ---எந்தையார்
முந்தப் பதஞ்சலிக்கு முன்னின்று கூத்தாடும்
அந்தக் கனகசபை யார்வடிவம்?---நிந்தையிலா
உன்மரபு சொல்ல ஒருகோடி நாள்செல்லும்
என்மனதில் வந்தது இயம்புவேன்." (பணவிடுதூது)

பொருளின் பெருமைகளைக் குறித்து வந்துள்ள இப்பகுதியைப் படித்து நோக்கிப் பொருள்களைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ளுக.

செய் பொருள் என்றது அரிய பல காரியங்களைச் செய்தருளுகிற அதன் செயலும் இயலும் தெரிய. செல்வம் எல்லா நலங்களையும் இனிது உதவ வல்லது; அதனை அன்புரிமையோடு தழுவி இன்பமும் அறமும் கெழுமி இசை புரிந்து வாழுக.

---

568. அறிவு சிறிதில்லான் ஆண்மையறம் இல்லான்
செறிவுயர்வு யாதுமே சேரான்—உறுதிதரு
கல்வியொன்றும் இல்லான் எனினும் கடல்ஞாலம்
செல்வனிடம் செய்யுமே சீர். (அ)

இ—ள்

கல்வி அறிவு ஆண்மை அடக்கம் முதலிய உயர் நலங்கள் யாதும் இல்லான் ஆயினும் செல்வம் உடையவனை எல்லா வகையிலும் உலகம் மதித்துப் போற்றும் என்பதாம்.

மனிதனுடைய உயர் நிலைக்குக் காரணங்கள் பல உள்ளன. அவற்றுள் எல்லாம் மிகவும் தலை சிறந்தது அறிவு.

"அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடையர் ஏனும் இலர்." (குறள், 430)

அறிவுடையவனது பெருமையும் அஃது இல்லாதவனது சிறுமையும் இதில் முறையே நன்கு தெரிய வந்தன. மனிதனைத்

திவ்விய நிலையில் உயர்த்தி எவ்வழியும் மகிமைப் படுத்துகிற இத் தகைய அறிவு சிறிதும் இல்லான் எனினும் பொருள் உடைய வன் பெருமை அடைந்து நிற்கிறான்.

கையில் இருக்கும் பொருளைத் தூர ஒதுக்கி வைத்து விட்டு ஆளைத் தனியே நிறுத்துப் பார்த்தால் கடுகு அளவு நீர்மையும் இல்லாதவனும் செல்வத்தால் சீர்மை மிகுந்து நிற்கிறான்.

பெரிய அறிவாளிகளும் அரிய ஆண்மையாளர்களும் வறிய நிலையை மருவிய பொழுது சிறுமையுறுகின்றனர். எல்லா வகை யிலும் புல்லியராயினும் செல்வர்கள் சிறந்து விளங்குகின்றனர்.

குண நலங்களில் இழிந்தவர் என்று தெரிந்திருந்தாலும் பணமுடைமையால் அவரை எவரும் புகழ்ந்து போற்றுகின்ற னர். யாரும் அவரிடம் விழைந்து செல்லுகின்றனர்.

"அறிவிலாப் பித்தர் உன்றன் அடிதொழாக் கெட்ட வஞ்சர்
அசடர் பேய்க் கத்தர் நன்றி அறியாத
அவலர்மேற் சொற்கள் கொண்டு கவிகளாக்கிப் புகழ்ந்து
அவரை வாழ்த்தித் திரிந்து பொருள்தேடி.." (திருப்புகழ்)

மகா மேதையான அருணகிரிநாதர் பொருளை நாடிப் போய் அலைந்திருக்கும் உருப்படிகளை இதில் உணர்த்தியிருக்கிறார்.

எவ்வளவு இழிந்த நிலையினராயினும் பொருளிருந்தால் அவர் உயர்ந்தவராய் உலாவுகின்றார். பணம் எவ்வழியும் யாரையும் மணம் பெறச் செய்கிறது.

பணம் பந்தியிலே; குலம் குப்பையிலே

என்பது பழமொழி. ஒரு செல்வன் வீட்டுக் கலியாணத் தில் விளைந்து வந்த முதுமொழி இது. ஒத்த குலத்தில் பிறந்தவன் ஆயினும் பணம் இல்லையாயின் அவனை ஒதுக்கி விடுகின்றனர்; பணம் இருந்தால் அவன் எவனாயினும் உவந்து அழைத்துப் போய் உயர்ந்த விருந்துகள் புரிந்து உபசரித்தலை உலக அனுபவ த்தில் அறிந்து வருகிறோம்.

"பொன்னொடு மணியுண்டானால் புலைஞனும் கிளைஞனாவான்;
தன்னொடு கூட்டி யுண்டு சாதியில் மணமும் செய்வார்;
மன்னராய் இருந்த பேர்கள் வகைகெட்டுப் போவாராகில்
பின்னவர் யாரோ என்று பேசுவார் ஏசு வாரே."

இன்னவாறு பொன்னின் பெருமைகள் மன்னியுள்ளன.

"Wealth maketh many friends: but the
poor is separated from his neighbour." (Bible)

"செல்வம் நண்பர் பலரைச் சேர்க்கும்; வறியவனை உறவினரும் வெறுத்து விலகி விடுவர்" எனச் சாலமன் என்பவர் இங்ஙனம் கூறியிருக்கிறார்.

பொருள் இல்லையானால் அந்த மனிதன் இந்த உலகில் எந்த வகையிலும் சிறுமைகளையே அடைகிறான்.

இல்லான் இருமையும் இல்லான் என்றதனால் எல்லாவழிகளிலும் அல்லலுடையனாய் அவன் அலமரலுறுவதை அறிந்து கொள்ளலாம்.

பணம் இல்லாதவன் பிணம் என இந் நாட்டில் வழங்கி வரும் பழமொழி பொருளின் மாட்சியைத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது. உயிர் இருந்தாலும் பொருள் இல்லையானால் அவன் ஒரு மருளனாய் மருண்டு திரிகிறான்.

உடற்குயிர்போல் செல்வம் உயிர்க்குயிராம் இன்றேல்
நடைப்பிணமே யாவர் நவை.

இந்த உவமை நிலையை ஊன்றியுணர்ந்து பொருள் நலங்களை ஓர்ந்து கொள்ள வேண்டும். எவ்வளவு குண நலங்கள் நிறைந்திருந்தாலும் பொருள் இல்லையானால் அவனை உலகம் மதியாது ஒழிகிறது. அது இருந்தால் உவந்து போற்றுகிறது.

இன்சொல்லன் தாழ்நடையன் ஆயினும்ஒன் றில்லானேல்
வன்சொல்லின் அல்லது வாய்திறவா---என்சொலினும்
கைத்துடையான் காற்கீழ் ஒதுங்கும் கடன்ஞாலம்
பித்துடைய வல்ல பிற. (நீதி நெறி விளக்கம்)

"எவ்வளவு நல்லவனாயினும் செல்வம் இல்லையாயின் அவனை உலகம் இகழ்ந்து விடுகிறது; மிகவும் பொல்லாதவனாயிருந்தாலும் செல்வனை உவந்து கொண்டாடுகிறது. இது ஒரு மடமையான பைத்தியம்" என உலகப் போக்கைக் குமரகுருபரர் இவ்வாறு இகழ்ந்திருக்கிறார்.

பொறி புலன்களில் வெறி மண்டியுள்ளமையால் பொருளில் மனித இனம் மருள் மண்டியுள்ளது. தெருளுடையார்க்கு இது

மருளாயிருந்தாலும் பொருளுடைமையிலேயே எல்லாம் நடந்து வருகிறது. யாவும் சிறந்து திகழ்கிறது.

பொருளையே உலகம் தலைமையாக மதித்துள்ளது; அந்த நிலைமையை உணர்ந்து அதனை நெறியே ஈட்டிக் கொள்ளுக.

569. இந்த உலகுக் கினியபொருள் தெய்வமே
அந்த உலகுக் கறம்அருளே—எந்தவகை
ஆனாலும் பொன்னை அடைந்துகொள்க ஆருயிர்க்கு
வானாலும் இல்லைகாண் வாழ்வு. (கூ)

இ—ள்

அந்த உலக வாழ்வுக்குத் தருமமும் கருணையும் போல் இந்த உலக வாழ்வுக்குப் பொருளே தெய்வமாம்; எந்த வகையிலும் பொன்னை விரைந்து தேடிக் கொள்க; அது இல்லையானால் வாழ்வு அல்லலாம் என்க.

இம்மை மறுமை என இருவகை நிலைகளை மனிதன் கருதி வருகிறான். எடுத்து வந்துள்ள இந்த உடலோடு கூடி வாழும் வரையும் இவ் வுலக வாழ்க்கை ஆகிறது. உடல் நீங்கிய பின் உயிர் தனியே அடைய வுரியது அவ்வுலக வாழ்வாகின்றது.

அருள் என்பது பிறவுயிர்களுக்கு இதம் புரியும் நீர்மை ஆதலால் அது புண்ணியமாய்ப் பெருகி வருகிறது. அதனால் சுவர்க்கம் முதலிய புண்ணிய உலகங்களில் கண்ணியமடைந்து எண்ணிய இன்ப நலங்களை இனிதே உயிர் எய்தி மகிழ்கின்றது.

அருளுடையவர் அவ் வுலகத்தில் உரிமையுடன் உயர்ந்து இன்பங்களை அடைதல் போல் பொருளுடையவர் இவ் வுலகத்தில் சிறந்து இனிய சுக போகங்களை அனுபவிக்கின்றனர்.

"அருள்இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை; அதுபோல்
பொருள்இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை."

என நாயனார் இவ்வாறு இருவகை நிலைகளையும் ஒருமுகமா உணர்த்தியருளினார். பொருள் உடலை வளர்த்தல் போல், அருள் உயிரை வளர்க்கிறது. இந்த இரண்டையும் வளர்த்து மனிதன் இங்கும் அங்கும் மகிமையடைய வேண்டும் என்பது கருத்து.

அறிவு அழகு குலம் முதலிய நலங்கள் வாய்ந்திருந்தாலும் பொருள் இல்லையானால் அவை மழுங்கி மறைகின்றன.

"குலம் பெரிய குணம் அறிவு வடிவு குடிப்பிறப்புப்
பொலம்மை யுடையவர்க் கலது புகழ்ச்சியினை அடையா;
இலங்கு மணியாளும் பொருள் இல்லவிடத்து இகழும்
அலங்கல்வரை மார்ப பொருள் ஆதலினி அழியல்."
(மேரு மந்தர புராணம்)

பொருள் இல்லையானால் எல்லா மேன்மைகளும் இழிவுறும் என இது உணர்த்தியுள்ளது. பொலம்=பொன்.

சுரசை என்பவள் அசுர வேந்தனுடைய அருமைத் திருமகள். பல கலைகளையும் சுக்கிரனிடம் பயின்று தெளிந்தவள்; சிறந்த அழகி. காசிபரை மணந்து சில குழந்தைகளைப் பெற்றாள். அப் புதல்வர் பருவம் அடைந்த பொழுது உலகில் அவர் உயர்ந்து வாழும்படியான உறுதி நலங்களைப் போதித்தாள். தன் மக்களுக்கு உரிமையுடன் அவள் கூறிய போதனைகள் அயலே வருகின்றன.

பிறந்தநல் லுயிர்க்கெலாம் பெருமை நல்கிய
இறந்ததோர் பொருண்மையது இரண்டின் வன்மையும்
அறிந்தவர் தெரிவரேல் அரிய கல்வியிற்
சிறந்தது திருவெனச் செப்ப லாகுமால். (1)

சொற்றரு கலையெலாம் தொடர்ந்து பற்பகல்
கற்றவர் ஆயினும் கழி நிரப்பினால்
அற்றவ ராவரேல் ஆக்கம் வேண்டியே
பற்றலர் தம்மையும் பணிந்து நிற்பரால். (2)

அளப்பரும் விஞ்சையே அன்றி மேன்மையும்
உளப்படு தருமமும் உயர்ந்த சீர்த்தியும்
கொளப்படு கொற்றமும் பிறவும் கூட்டலால்
வளத்தினில் சிறந்தது மற்றொன் றில்லையே. (3)

ஆக்கமிங்கு ஒருவரால் அணுக வேண்டுமேல்
ஊக்கமுண் டாவரேல் உறுவர் அன்னது
நீக்கமில் கொள்கையின் நிற்பரே எனின்
மேக்குறு பெருந்திரு விரைவின் மேவுமால்.
[கந்த புராணம்]

செல்வமே எவ்வழியும் தேட வுரியது; அது இல்லையானல் உலக வாழ்வு பல வகையிலும் தாழ்வாம்; அது ஒன்று இருந்தால் கல்வி முதலியன எல்லாம் வந்து சேரும்; அதனை விரைந்து தேடிக் கொள்ளுங்கள் என அத் தாய் தன் சேய்களுக்கு இங்ஙனம் போதித்திருக்கிருள். உரைகளிலுள்ள உணர்வு நலங்கள் ஓர்ந்து சிந்தித்துத் தேர்ந்து கொள்ள வுரியன.

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில். (குறள், 759)

தேடு பணத்தை; அது உன் பகைவருடைய செருக்கை அறுத்து உனக்கு உயர்ந்த சிறப்பைக் கொடுக்கும். நீ சீருடன் வாழ அதை விடச் சிறந்த துணை வேறு யாதும் இல்லை எனத் தேவர் இதில் உணர்த்தியுள்ளார். எள்ளி நிற்கும் பகைவரது உள்ளச் செருக்கை வேரோடு கிள்ளி எறியும் கூரிய வேலாயுதம் எனப் பொருளை இங்கே குறித்திருப்பது கூர்ந்து சிந்திக்கவுரியது.

பகைமையும் குரோதமும் நிறைந்த இந்த உலக வாழ்க்கையை இனிமையாக்கிப் பொருள் தனி மகிமை செய்து வருதலால் அது சீவிய சஞ்சீவியாய் மேவி நின்றது. அதனல் அதனைத் தகுதியாக ஈட்டிக் கொள்ளும்படி மேலோரும் நூலோரும் அறிவு நலங்களை ஊட்டியருளினர்.

"செய்கபொருள் யாரும் செறுவாரைச் செறுகிற்கும்
எஃகு பிறிதில்லை இருந்தே உயிரும் உண்ணும்
ஐயமிலை இன்பம் அறனேடுஎவையும் ஆக்கும்
பொய்யில் பொருளே பொருள்; மற்றல்ல பிறபொருளே."
[சீவக சிந்தாமணி, 497]

மேலே குறித்த திருக்குறளை அடியொற்றி அதற்கு ஓர் விரிவுரை போல் இது பெருகி வந்துள்ளது. ஸ்ரீ தத்தன் என்னும் வணிகன் கலம் ஏறிக் கருங்கடல் கடந்து பெரும் பொருள் தேடச் செல்லும் பொழுது இவ்வாறு தேறிப் போயுள்ளான்.

எந்த வகை ஆனலும் பொன்னை அடைந்து கொள்க.

என்றது என்னபாடு பட்டாவது பொருளைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும் என ஈட்டத்தின் அவசியத்தைக் காட்டி வந்தது. தேட்டம் என்னும் பதத்தின் கருத்தைத் தெளிந்து கொள்க.

பொருள் மனிதனால் தேடப்படுவது. அவன் கண்ணூன்றிக் கருதித் தேடாமையால் அது கை கூடாமல் ஒதுங்கியுள்ளது. கருதிய எதையும் மனிதன் அடைந்து கொள்ளலாம்; அந்தக் கருத்து திருத்தமாய் விருத்தி யடைந்திருக்க வேண்டும்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப" (குறள், 666)

என்னும் புண்ணிய வாசகம் நாளும் எண்ணி எண்ணிச் சிந்திக்க வுரியது. மனத் துணிவோடு மனிதன் முயற்சியில் மூண்ட பொழுது அவனிடம் உயர்ச்சியான ஓர் தெய்வீக சத்தி ஓங்கி எழுகின்றது.

ஆண்மையோடு முயலாதவன் கீழ்மையாய் இழிகின்றான். ஆற்றல் அவனை விட்டு விலகி விடுகின்றது. தனது அவல நிலையை அறியாமல் அவன் கவலையடைய நேர்கின்றான்.

தான் சுகமாய் வாழ வேண்டும் என்று விரும்புகின்றவன் அதற்குரிய மூல சாதனமான பொருளை ஈட்டிக் கொள்ள எவ் வழியும் கடமைப் பட்டிருக்கின்றான். இன்பமான பிழைப்பு துன்பமான உழைப்பில் உள்ளது என்பது உறுதிமொழி.

மதிப்பு மேன்மைகளை அருளி வருதலால் உடல் வருந்தியும் கடல் கடந்தும் மனிதர் பொருளை அடைந்து வருகின்றனர்.

"Get money; still get money, boy;
No matter by what means." (Jonson)

"குழந்தாய்! எந்த வழியாலும் மேலும் மேலும் பொருளைத் தேடிக் கொள்" என ஜான்ஸன் என்பவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

"Get place and wealth; if possible, with grace;
If not, by any means get wealth and place." [Pope]

"செல்வத்தையும் பதவியையும் யாண்டும் கண்ணியமான முறையில் பெறுக; அவ்வாறு அமையாவழி, எவ்வழியிலாவது அவற்றை அடைந்து கொள்க" என போப் என்னும் ஆங்கிலக் கவிஞர் இங்ஙனம் பாங்கோடு பாடியிருக்கிறார்.

"The want of fortune is a crime which I can never get over." [Nelson]

"செல்வம் இல்லாதிருத்தல் எனக்கு என்றும் தொலையாத ஒரு பெரிய பழியாம்" என நெல்சன் என்பவர் இவ்வாறு பேசி யிருக்கிறார்.

"Poverty is infamous in England." [Sydney Smith]

"வறுமை என்பது இங்கிலாந்து தேசத்தில் கொடிய இழி வாம்" என சிட்னிஸ்மித் என்பவர் இப்படி உரைத்திருக்கிறார்.

ஆங்கிலேயர் செல்வத்தை எவ்வாறு கருதிப் போற்றிச் சம்பாதித்து வந்துள்ளார் என்பதை இவற்றால் ஓரளவு அறிய லாம். இவ் வுலக வாழ்வை அவர் திவ்விய நிலையில் ஆக்கியுள்ளார்.

பொருள் வருவாய்க்குரிய துறைகளை வகுத்து விரித்து அவர் செல்வங்களைப் பெருக்கி வருவது அதிசயங்களை விளைத்து வருகிறது. அவர்களுடைய ஊக்கமும் உறுதிப்பாடும் எவ் வழி யும் ஆக்கங்களையே நோக்கி வளர்ந்திருக்கின்றன. ஆறாயிரமைல் களுக்கு அப்பாலிருந்து இங்கு வந்து இந்தியா முழுவதையும் தம் கைவசப் படுத்தி எந்த அரசும் யாதொரு வருமானமும் கண்ட றியாததும், இந் நாட்டில் காட்டு மரங்களாய்த் தனியே வளர்ந் துள்ளதுமான பனை நீரிலிருந்து பதினெட்டுக் கோடி ரூபாய்களை வருடந்தோறும் வாரிக் கொண்டு போயிருக்கிறார்களே! இது எவ்வளவு பெரிய விந்தை? கொஞ்சம் சிந்தனை செய்து உணர வேண்டும். எழுபத்தேழு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த அமெரிக்க மேதையான எமர்சன் ஆங்கிலேயருடைய செல்வ நிலையைக் குறித்து வியந்து எழுதி யிருக்கிறார்.

"The English are so rich, because they are constitutionally fertile and creative. The wealth of London determines prices all over the globe." (Wealth)

"ஆங்கிலேயர் பெருஞ் செல்வர்; இயல்பாகவே செழிப்பும் செல்வங்களைப் படைக்கும் ஆற்றலும் உடையவர். லண்டன் நகரிலுள்ள செல்வம் உலகம் முழுவதையும் ஒருங்கே விலைக்கு வாங்கத்தக்கது" என இங்ஙனம் அவர் குறித்திருக்கிறார். ஆங்கில மக்களுடைய செல்வ வளங்களையும், அவற்றை அவர் ஈட்டி வந்துள்ள நிலைகளையும் இதனால் உணர்ந்து கொள்ளுகிறோம்.

இந் நாட்டவரும் முன்னம் செல்வங்களைத் திரளாக ஈட்டி யிருந்தனர். அருநிதியாளர், பெருநிதிக் கிழவர் எனப் பலர்

பெயர் பெற்று நின்றனர். ஒரு ஊரின் செல்வம் உலகம் பெறும் எனச் சீரும் சிறப்பும் பெற்றிருந்தது.

"முழங்கு கடல் ஞாலம் முழுவதும் வரினும்
வழங்கத் தவாஅ வளத்த தாகி
அரும்பொருள் தரூஉம் விருந்தின்தேம்
ஒருங்குதொக் கன்ன உடைப்பெரும் பண்டம்
கலத்தினும் காலினும் தருவனர் ஈட்டக்
குலத்திற் குன்றாக் கொழுங்குடிச் செல்வர்."
(சிலப்பதிகாரம்)

காவிரிப்பூம் பட்டினத்தின் செல்வ நிலையையும், அதிலிருந்த செல்வர்களையும் இது குறித்துள்ளது. ஆயிரத்தறுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்நாடு எந்நாடும் பொன்னாடு எனப் புகழ்ந்து போற்ற யாண்டும் வளங்கள் நிறைந்து உயர்ந்திருந்தது. இந்நாள் இன்ன நிலையில் இழிந்திருக்கிறது.

மக்களுக்குத் தேவையான பண்டங்களைப் புதிய புதிய முறைகளில் விளைத்து உலகம் முழுவதும் பரப்பிப் பெருவளம் படைத்து வந்த நாடு ஒரு வளமும் இல்லாமல் வறிய நிலையில் மாறி யிருப்பது பெரிய பரிதாபமாயுள்ளது.

எல்லாரும் செல்வச் சீமான்களா யிருக்கவே ஆசைப்படுகின்றனர். அதற்கு வேண்டிய ஆக்க வேலைகளில் நோக்கமின்றியுள்ளனர். வழி தெரிய இல்லையே! என்று கண்ணை மூடிக்கொண்டிருப்பது பழி; விழி திறந்து நோக்கி எவ்வழியும் செவ்வையாய் ஊக்கி எழுந்து உறுதியோடு வேலை செய்ய வேண்டும்.

வானாலும் இல்லைகாண் வாழ்வு.

தானாக முயன்று மனிதன் பொருளைத் தேடிக் கொள்ளவில்லையானால் அவனுக்கு யாரும் யாதும் உதவி செய்ய முடியாது என்பதை இது உணர்த்தி நின்றது.

வானம் மழை பொழிந்தாலும், சுவர்க்கம் சுகமாய் இருந்தாலும் தன் கையில் பொருள் இல்லாதவனுக்கு அவை யாதொரு நலனும் செய்யா என்க. பிள்ளை அழுத பொழுதுதான் தாய் வந்து பால் கொடுக்கிறாள்; மனிதன் ஊக்கி முயன்ற போது தான் தெய்வம் நோக்கி உதவுகின்றது. ஆக்கம் வருகின்றது.

"God helps them that help themselves." [B. Franklin]

"தாமாக முயல்பவருக்கே கடவுளும் துணை புரிகிறார்" என்னும் இது ஈண்டு ஊன்றி உணர வுரியது.

"Help thyself, and God will help thee." [Herbert]

"உனக்கு நீயே உதவி செய்; கடவுளும் உனக்குத் துணை செய்வார்" என ஹேர்பர்ட் என்பவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

எதையும் செய்ய வல்ல சத்தி மனிதனிடம் நிறைந்திருக்கிறது. அதனை மறந்திருக்கும் வரையும் அவன் இழிந்திருக்கிறான்; உணர்ந்து எழுந்த போது தெய்வீக ஒளியோடு அவன் உயர்ந்து திகழ்கிறான். ஒளியும் உயர்வும் உள்ளத்தில் உள்ளன.

உள்ளம் ஊக்கி எழின் செல்வம் உன்னை நோக்கி வரும். அந்த ஆக்கத்தை அடைந்து பாக்கியவானாகுக.

570. செம்பொருள் என்று சிவனுக் கொருபெயர்காண்
செம்பொருளும் வெண்பொருளும் சேர்ந்துமே—நும்பொருள்
ஈங்கு மருவி யிருத்தலால் நும்புகழ்
ஓங்கி நிலவும் உலகு. (ம)

இ—ள்

சிவ பெருமானுக்குச் செம்பொருள் என்று ஒரு பெயர் உள்ளது; செம்பொருளும் வெண்பொருளும் சேர்ந்து நும் பொருள் பெருகியுள்ளமையால் உமது புகழ் உலகில் ஓங்கி உலாவும் என்பதாம்.

பொருள் என்னும் சொல் அரிய பல பொருள்களை மருவியுள்ளது. கண் எதிரே காணப் படுகின்ற யாவும் பொருள் எனவரினும் எண்ணி மதிக்கத் தக்கனவே இனிய பொருள்களாய்த் தனி எழுகின்றன. மனிதனுடைய அனுபவங்களை மருவி வரும் அளவு அவை பெருமை பெறுகின்றன.

நெல் கோதுமை புல் சோளம் சாமை கேப்பை கடலை துவரை உளுந்து முதலியன உணவுப் பொருள்களாய் உள்ளன. இரும்பு ஈயம் செம்பு வெண்கலம் வெள்ளி தங்கம் முதலியன அனுபோக வகைகளாய் அமைந்திருக்கின்றன. மாடு நிலம் வீடு முதலியன வாழ்வின் இனிய வசதிகளாய் வாய்ந்துள்ளன.

முன்காலத்தில் பண்டமாற்றுகளே பெரும்பாலும் யாண்டும் நிகழ்ந்து வந்தன. பின்பு வாணிக முறையில் நாணயமாற்றுகள் நேர்ந்தன. அதன் பிறகுதான் வெள்ளியும் பொன்னும் பெருமதிப்புகளை அடைந்தன.

முத்து, வைரம், மரகதம், பவளம், மாணிக்கம், கோமேதகம், வைடூரியம், நீலம், புருடராகம் என்னும் இந்த ஒன்பதும் நவமணிகள் என நின்றன. உயர்ந்த அணிகளை இவை அழகு செய்து சிறந்த செல்வங்களாய் விளங்கியுள்ளன.

இன்னவாறான எல்லாப் பொருள்களும் **செல்வம்** என்னும் பேரால் சிறந்து நிற்கின்றன. எல்லாச் செல்வங்களையும் என்றும் இயல்பாகவே உடையவன் ஆதலால் ஈசனுக்குச் **செல்வன்** என ஓர் செல்லப் பெயர் வந்தது.

"செல்வன் சேவடி சென்று தொழுமினே"

என்று அப்பர் இப்படி அருளியிருக்கிறார்.

ஈசன் உருவமாய் எண்ணப்பட்டுள்ள இத்தகைய செல்வத்தை மனிதன் பெற்றுக் கொள்ளானாயின் அவன் பிறப்பு பிழையாயிழிந்து பீழை படுகின்றது.

**செம்பொருள் வெண்பொருள்** என்றது தங்கக் காசுகளையும் வெள்ளி நாணயங்களையும் தனித் தனியே குறித்து வந்தது.

"பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானை"

எனச் சிவபெருமானை நோக்கிச் சுந்தரமூர்த்தி நாயனார் இங்ஙனம் துதித்திருக்கிறார். மறுமை நிலையைக் கருதி உருகியுள்ளவரும் இம்மையில் சிறந்த போக போக்கியங்களையும் உயர்ந்த பாக்கியங்களையும் விழைந்திருக்கின்றனர். தேகமுடையவர் போகமடையவே நேர்கின்றனர்; ஆகவே அதனை அருளி வருகிற பொருளில் மோகமடைந்து நிற்கின்றனர்.

எல்லா ஐசுவரியங்களையுமுடைய ஈசுவரனை நோக்கி அரிய தவங்களைச் செய்து மேலோர் பெரிய செல்வங்களைப் பெற்றிருக்கின்றனர்.

அத்தகைய தவங்களை யாவரும் நேரே செய்ய முடியார்;

தத்தமக்கு இயன்றவாறு கருமங்களைச் செய்து வந்தால் அவ் வழிகளால் செல்வங்கள் வந்து சேருகின்றன.

மனிதன் செய்யும் தொழில்கள் தெய்வ ஒளிகளாய்த் தேசு மிகுந்து வருகின்றன. வினை செய்யா திருந்தால் அந் நேரம் வெய்யதாய் விளிந்து ஒழிகின்றது.

மனிதனுக்கு அமைந்துள்ள வாழ்நாள் அருமை மிக வுடையது. அதனைப் பழுதாகக் கழிப்பவர் பாழ்படுகின்றனர். ஒவ்வொரு கணமும் பொருளும் புகழும் புண்ணியமும் மணந்து வரும்படி புரிந்து வந்தால் அந்த மனித வாழ்வு பெரு மகிமை அடைகின்றது.

> உற்ற பொழுதை உயர்பயன் ஆக்கிவரின்
> கற்ற கலையின் கரைகண்டான்---பெற்ற
> பிறவிப் பெரும்பயனைப் பெற்றான் பெரிய
> அறவன் அவனே அறி.

பொழுதைப் பழுதுபடுத்திப் பாழாக்காமல் அதனை விழுமிய செல்வமாக விரைந்து மாற்றிக் கொள்பவர் உயர்ந்த பாக்கிய வான்களாய்ச் சிறந்து திகழ்கின்றனர்.

இந்த வையக வாழ்வு சுகமாய் அமைய வேண்டுமாயின் அதற்குப் பொருள் அவசியம் வேண்டும். அதனை எவ் வழியும் செவ்வையாக ஆக்கிக் கொள்க.

> ஊக்கி முயலும் உறுதி நலங்களெல்லாம்
> பாக்கியங்க ளாகி வரும்.

இதனை நோக்கி உணர்ந்து ஆக்கம் அடைக.

வினை, விதி, கருமம், பால், ஊழ் என்னும் மொழிகள் மனிதனுடைய செயல்களிலிருந்து விளைந்து வந்துள்ளன. நல்ல குறிக்கோள்களோடு உள்ளம் துணிந்து முயலின் அதனால் செல்வங்கள் உளவாகின்றன. சிறப்புகள் சேர்கின்றன.

> "உத்யமஸ் ஸாஹஸம் தைர்யம் புத்திசக்தி பராக்ரம:
> ஷடேதே யத்ர வர்த்தந்தே தத்ர தேவஸ்ஸஹாயக்ரத்."

"முயற்சி, சாகசம், தைரியம், அறிவு, ஆற்றல், பராக்கிரமம் ஆகிய இந்த ஆறும் எங்கே இருக்கின்றனவோ அங்கே தெய்வம் துணை புரிகிறது" என்னும் இது இங்கே அறியவுரியது.

மனிதன் செய்கின்ற கருமம் தெய்வத்தின் பிரியத்தையும் செல்வத்தையும் அடைந்து கொள்ளுகின்றது ஆதலால் நீ கருதி முயன்று பெரிய திருவுடையனாகுக.

செல்வம் பெறவேண்டின் செய்ய முயற்சியை
வல்விரைந்து செய்க வருமதுவே—செல்வம்
முயற்சியில் உள்ள முறைதெரியின் அன்றே
உயர்ச்சி யடையும் உனை.

வாழ்வின் உயிர் நிலை செல்வத்தில் உள்ளது; அந்தச் செல்வம் ஆள்வினையில் அமர்ந்திருக்கிறது; இவ் வுண்மையை ஆழ்ந்து சிந்தித்து எவ்வழியும் செம்மையாய் முயன்று நன்மைகளை நாடிக் கொள்ளுக.

"பொருளில் ஒருவற்கு இளமையும், போற்றும்
அருளில் ஒருவற்கு அறனும்,---தெருளான்
அறந்தாழும் நெஞ்சினன் கல்வியும் மூன்றும்
பரிந்தாலும் செய்யா பயன்." (திரிகடுகம்)

செல்வமும் கல்வியும் அருளும் அறமும் மருவியுள்ள பொழுதுதான் மனித வாழ்வு புனிதமாய் மகிமையடைந்து மிளிர்கின்றது. இனிய நீர்மைகளையும் அரிய சீர்மைகளையும் உரிமையாக எய்தி உயர் இன்பம் பெறுக.

### இவ் அதிகாரத்தின் தொகைக் குறிப்பு

செல்வம் உலக வாழ்க்கைக்கு உயிர்.
சீவர்களை அது பேணி வரும்.
மனித வாழ்வை மாண்புறுத்தும்.
இனிய போகங்களை விளைக்கும்.
இன்ப நலங்களை ஈயும்.
புகழ் புண்ணியங்களை அருளும்.
முனிவரும் அதனை விழைவர்.
எல்லா மேன்மைகளும் அதனால் உளவாம்.
அது இல்லையானால் வாழ்வு இல்லை.
அதனை இனிது தேடி இன்பம் பெறுக.

ருள-வது செல்வம் முற்றிற்று.

# ஐம்பத்தெட்டாம் அதிகாரம்

## ப த வி

அஃதாவது சிறந்த அதிகார நிலை. கல்வி செல்வங்களைப் போல் மனிதனுக்கு உயர்ந்த மதிப்பையும் பொருளையும் இனிது அருளி வருதலால் அவற்றின் அயலே இது வைக்கப்பட்டது.

571. தலைவன் ஒருவன் தனிநின் றருள
நிலைகள் பலவும் நெறியே—உலைவின்றி
எங்கும் இயங்கும் இயல்பினால் யாண்டுமே
தங்கும் தலைமை தழைத்து. (க)

இ—ள்

தனி முதல் தலைவனான இறைவன் அருளால் உலக நிலைகள் யாவும் ஒழுங்கா இயங்கி வருகின்றன; வரவே பல சிறிய தலைமைகள் உரிமையாய் எங்கும் தழைத்து வந்துள்ளன என்க.

இது, பதவியின் பான்மையை உணர்த்துகின்றது.

தலைவன் என்னும் சொல் உயர்ந்த நிலைமையை உணர்த்தியுள்ளது. உடலில் உயர்ந்திருக்கும் சிறந்த உறுப்பைத் தலை என்று வழங்கி வருகின்றோம். எல்லா உலகங்களுக்கும் தனி முதல்வனாயுள்ளமையால் கடவுளும் தலைவன் என நின்றான். அந்த முழுமுதல் தலைவனுடைய அருள் வழியே அரசர் முதலாயினோரும் இங்கே தலைவர் என வந்தார்.

அவன் என்றும் நிலையான நித்தியத் தலைவன்.
இவர் நிலைமாறி அழியும் அநித்தியத் தலைவர்.
அவன் யாராலும் அறியப் படாதவன்.
இவர் எல்லாராலும் அறியப் பட்டவர்.
அவன் எதையும் செய்ய வல்ல அதிசய நிலையினன்.
இவர் இயன்றதைச் செய்யும் எளிய இயல்பினர்.

அவனுடைய தன்மையும் வன்மையும் நன்மையும் நீதியும் தோய்ந்து எம்மையும் நிலையாய் இயங்கி வருதலால் என்றும்

தலைவனாய் நின்று நிலவுகின்றான். அவனது அதிசய நிலைகள் எவராலும் தெளிவா அறிய முடியாதன.

தன்மை பிறரால் அறியாத தலைவா!

என இறைவனை நோக்கி மாணிக்கவாசகர் இவ்வாறு உருகி உரையாடியிருக்கிறார். சிவனைத் தலைவன் என்றது சீவனுடைய நிலையைத் தெரிய வந்தது. தலைவி தலைவனைத் தழுவியிருந்தால் இனிய மகிழ்ச்சியும் இன்ப போகங்களும் சுரந்திருக்கின்றன. பிரிந்து நின்றால் பெருங் கவலைகளும் கொடுந் துன்பங்களும் தொடர்ந்து நிற்கின்றன.

ஆன்மா பரமான்வைத் தோய்ந்தால் பேரானந்தம் பெருகி எழுகின்றது. தோயாது பிரிந்தால் மாயாத துன்பம் மருவி நிற்கின்றது. பிரிவும் செறிவும் அறிய அரியன.

அழியாத ஆனந்த நிலையை இழந்துவிட்டு ஒழியாத அவலத் துயரில் அழுந்தி உழல்வது உயிர்க்குக் கழிகேடாயது; அக்கேட்டை விழி திறந்து நோக்கியபோது விழுமிய இன்பப் பேற்றை அது அடைந்து கொள்கின்றது. பேரானந்த நிலையமாய்ப் பெருகியுள்ள அதனைப் பெறுவதே அரிய பிறவிப்பேறும்.

இங்ஙனம் ஆன்ம நாயகனாயுள்ள இறைவன் ஒருவனே தலைவன் என்னும் பெயருக்கு உரியவன் ஆயினும் உலக நிலையில் பல தலைவர்கள் நிலவியுள்ளனர். இந்த உலகம் பல வகையான வேறுபாடுகளை யுடையது. அந்த மாறுபாடுகள் அளவிடலரியன.

ஐந்து விரல்களும் ஒன்றுபோல் இல்லை. இருக்கவும் முடியா; இருந்தாலும் நன்கு பயன் படா. சிருட்டி பேதங்கள் அதிசயமான விசித்திரங்களை யுடையன. பல்லாயிரம் பேர்களை நுணுகி நோக்கினாலும் ஒருவர் முகம் போல் மறுவர் முகம் இராது. ஒரு தாய் வயிற்றில் பிறந்த சேயரும் செயல் இயல்களில் அயலாயுள்ளனர்.

இன்னவாறு பிரிவுகளும் பேதங்களும் பெருகியிருத்தலால் உரிய இனங்களை ஒருமுகமா அடக்கியாள உரிமையாளர்கள் கருமவகையாய் மருவி வந்தனர். தந்தை எதிரே மைந்தர்கள் அடங்கி நிற்கின்றனர். அண்ணன் முன்னிலையில் தம்பி தணிந்து நின்று கண்ணியம் புரிகிறான். அரசன்பால் மந்திரி வணங்கி நின்றுமரியாதைசெய்கிறான். உரியஉறவுகள்உலாவிவருகின்றன.

இவ்வண்ணம் இயல்பான உயர்வு தாழ்வுகள் உரிமையோடு மருவி வந்துள்ளன. பிறப்புரிமையாகவே சில சிறப்பு நிலைகள் சேர்ந்திருக்கின்றன. அரசர் குடியில் பிறந்தவன் அரசனாய் வருகிறான். அமைச்சுவழி வந்தவன் அமைச்சனாய் எழுகின்றான்.

யாண்டும் தலைமை தங்கும்.

என்றது உலக இயக்கத்தின் நிலைமை தெரிய வந்தது. தலைமை = அதிகாரம். உயர்ந்த நிலையிலிருந்து காரியம் செய்யும் சீரிய தன்மை சிறப்பாய் நின்றது.

தானைத் தலைவர், தண்டத் தலைவர், குடித் தலைவர், படித் தலைவர் என இவ்வாறு தலைமைகள் பல வகைகளாய்ப் பரந்து விரிந்துள்ளன. உலக நிலைகள் அலகிலாடல்களா யியங்குகின்றன.

எல்லாரும் தலைவர்களாயிருக்க இயலா; தக்கவர்களே தனியுரிமையாளராய் வருகின்றனர். காரியங்களைச் சீரிய முறையில் நடத்துகின்றவரே சிறந்த அதிகாரிகளாய் உயர்ந்து திகழ்கின்றனர். வினையாண்மைகளால் மேன்மைகள் விளைகின்றன.

அறிவு ஆண்மை ஆற்றல் என்னும் இந்நீர்மைகளை மருவியுள்ள அளவே அதிகாரிகள் சீர்மையும் சிறப்பும் பெறுகின்றனர்.

மதியூகமும் மன வுறுதியும் அதிகாரிகளை அதிசய நிலையில் உயர்த்தியருளுகின்றன. எவரும் துதி செய்து வரும் நிலையினது ஆதலால் அதிகார பதவியை யாவரும் விரும்புகின்றனர். கருதிய பதவிக்குரிய தகுதியை முதலில் அடைந்து கொள்ளுபவர் பின்பு உரிமையில் உயர்ந்து பெருமைகள் பெறுகின்றனர்.

---

572. அதிகாரம் செய்வோர் அதிகா ரிகளாய்ப்
பதிகா ரியங்கள் படிந்து—விதியாகச்
செய்து வருமளவே தேசங்கள் சீர்மைமேல்
எய்தி வருமால் இனிது. (உ)

இ—ள்

கருமங்களைச் செய்கிற கருமத் தலைவர் தம் கடமைகளை உணர்ந்து விதி முறையாய்க் காரியங்களைச் செய்து வரும் அளவே ஒரு தேசம் சீரும் சிறப்பும் அடைந்து சிறந்த நிலைகளில் உயர்ந்து விளங்கும் என்பதாம்.

**இது கருமத் தலைமையின் நிலைமையைக் கூறுகின்றது.**

அதிகாரம் என்னும் சொல் வினையாண்மைமேல் விளைந்து வந்தது. சிறந்த காரியங்களைத் தலைமையாகச் செய்யும் நிலைமை அதிகாரம் என நேர்ந்தது.

அதிகாரம் = உத்தியோகம், ஒழுங்கு, உரிமை.

அதிகாரத்தை உடையவன் அதிகாரி என வந்தான்.

தான் செய்ய வுரிய கருமங்களை உரிமையோடு ஊன்றிச் செய்த பொழுதுதான் கருமத் தலைவன் பெருமை மிகப் பெறுகிறான். ஒருவன் செய்யுங் கருமங்களிலேயே அவனுடைய பெருமைகளெல்லாம் மருமமாய் மருவி யுள்ளன.

உரிய வினையைச் செய்தவன் அரிய வினையாளனாய் ஆண்மையும் மேன்மையும் அடைகின்றான்; அங்ஙனம் செய்யாதவன் அலியாயிழிந்து கீழ்மையுறுகின்றான். கடமையான கருமத்தைக் கைவிட்ட பொழுதே மடமையான சிறுமைகள் அவனை மருவிக் கொள்கின்றன. சிறுமையடைந்து சீரழியாமல் உரிமையான கருமங்களை ஓர்ந்து செய்து பெருமைகள் பெற வேண்டும்.

பதி காரியங்கள் என்றது தமக்கு உரிமையாகப் பதிந்துள்ள கருமங்களை. தன்னுடைய தலைவனுக்கும் நாட்டுக்கும் உறுதி நலங்கள் பெருகி வரும்படி கருமங்களை உணர்ந்து செய்பவனே உயர்ந்த அதிகாரியாய்ச் சிறந்து வருகிறான்.

அரிய பதவியை அடைந்த போதே அவன் உரிய கடமைகளைக் கருதிச் செய்யும் பெரிய கடனாளியாகின்றான். பதவி உயரப் பாடும் பொறுப்பும் கூடவே உயர்கின்றன.

"Men in great place are thrice servants; servants of the Sovereign, servants of fame, and servants of business." (Bacon)

"உயர்ந்த பதவியில் உள்ளவர் மூன்று வகையில் ஊழியர்களாயுள்ளனர்; தம் அரசுக்கும், கீர்த்திக்கும், தொழிலுக்கும் அவர் அடிமைகள்" என்று பேக்கன் என்பவர் இங்ஙனம் கூறியிருக்கிறார்

தலைமையான பதவியிலிருப்பவருடைய நிலைமைகளை இதனால் இனிது உணர்ந்து கொள்ளுகிறோம். வெளியே பிறரை

அதட்டி அதிகாரங்கள் செய்து வந்தாலும் உள்ளே பலருக்கும் ஊழியராகவே அவர் வாழ்ந்து வருகிறார்.

தன் தொழிலில் பிழைகள் நேராதபடி பார்த்து, உலகம் பழியாதவாறு ஒழுகி, தனக்கு மேலேயுள்ள தலைவன் பணிக்குத் தலை சாய்ந்து எவ்வழியும் அஞ்சி நடந்து வரும் நிலையில் இருத்தலால் அதிகாரியினுடைய நெஞ்சக் கவலைகள் நெடிது நீண்டுள்ளன. அவனுடைய வாழ்வு கூர்மையான வாள்முனையில் நடப்பது போல நாளும் சூழ் நிலைகள் வாய்ந்து நிற்றலால் அந்த அதிகார வாழ்வின் நீர்மையும் நிலைமையும் நிலை தெரியலாகும்.

பிறருடைய பார்வையில் உயர்ந்த பதவியில் இருப்பது போல் சிறந்து தோன்றினும் தன்னுடைய உள்ளத்தில் கவலையும் பொறுப்பும் அதிகாரிக்கு நிறைந்திருக்கின்றன. பிறரை அடக்கியாள நேர்ந்தவன் யாண்டும் அடங்கி ஒடுங்கி நெறியே நடக்க வேண்டியவனாகின்றான். நெறியோடு நடந்து வரும் அளவே பதவி நிலைத்து வருகிறது. நடை பிறழ்ந்தால் இடை முரிந்து இழிந்து வீழ்கின்றான்.

"The standing is slippery, and the regress is either a downfall or at least an eclipse, which is a melancholy thing."
(Great place)

"நிலை தவறினால் அதிகாரி அதோ கதியில் வீழ்கிறான்; துன்ப இருள் அவனைச் சூழ்ந்து கொள்ளுகின்றது" என்னும் இது இங்கே அறிய வுரியது.

உடலுக்குக் கண் வாய் கை கால்களைப் போல் நாட்டுக்கு வினையாளர்கள் அமைந்திருக்கின்றனர். அந்த அதிகாரிகள் தத்தமக்குரிய கருமங்களைச் செம்மையாகச் செய்து வரின் தேசம் நன்மைகள் பல சுரந்து ஒளி மிகப் பெற்று உயர்ந்து விளங்கும்.

தம் கடமைகளை ஓர்ந்து அவர் வினை செய்யாதொழியின் அங்கே மடமையிருள் மண்டிக் கொடுமைகள் பல நேரும்.

உறுப்புகள் சரியாகத் தொழில் செய்ய வில்லையானால் உடல் இழிந்து படுகின்றது; வினையாளர்கள் தம் கருமங்களைக் கருதிச் செய்யாதொழியின் நாடு பீடழிந்து கேடுறுகின்றது.

விதியாகச் செய்துவரும் அளவே சீர்மை.

என்றது அதிகாரிகளுடைய நீர்மைகளை நினைந்துணர வந்தது.

நெறி முறையே அவர் கருமங்களைச் செய்யின் தேசம் தேசு மிகப் பெறுகின்றது. அவரும் சீர்மையுடையராய்ச் சிறந்து விளங்குகின்றார். ஆட்சியளவு மாட்சி விளைகின்றது.

நேரே சரியாய்க் காணாத கண் குருடாய் இழிகின்றது. கேளாத காது செவிடு எனப் படுகின்றது. நடவாத கால்கள் முடமாகின்றன. அது போல் தம் கடமைகளைக் கருதிச் செய்யாதவரும் கடையராயிழிகின்றனர்.

உரிய பொறுப்புகளை உணர்ந்து அதிகாரிகள் உண்மையாய் உழைத்து வர வேண்டும்; உழைப்பில் பிழைப்பு நேரலாகாது. கருமத் தலைமையைக் கருதிச் செய்க என்பது கருத்து.

---

573. நாட்டில் குடிசனங்கள் நன்மையுற நன்காய்ந்து
வீட்டில் குடும்பமென மேலோர்ந்து—ஈட்டிநின்ற
பண்போ டிதமாய்ப் பணிபுரியின் அன்னவனை
மண்பேணி நிற்கும் மகிழ்ந்து. (ங)

இ—ள்

தம் குடும்பத்தை உரிமை அன்போடு கருதிப் பேணுவது போல் நாட்டிலுள்ள குடி சனங்களையும் ஆதரவோடு அதிகாரிகள் பேணிவரின் அவரை உலகம் புகழ்ந்து போற்றி மகிழ்ந்து வரும் என்க.

அதிகார நிலையில் அமர்ந்திருப்பவன் குறியோடு கூர்ந்து ஓர்ந்து செய்யவுரிய கடமையை இது குறித்துள்ளது. கருமங்கள் புரிவதில் பல மருமங்கள் மருவி யிருக்கின்றன.

தன்னுடைய உறவு முறைகளுக்கே மனிதன் மனம் உவந்து உரிமையுடன் உதவி செய்ய நேர்கின்றான். தன் சாதி, தன் மதம், தன் இனம் என இன்னவாறான வேறுபாடுகளால் மனிதன் கூறுபட்டு நிற்கிறான். உடலளவில் தோன்றியுள்ள இந்தச் சின்ன வேற்றுமைகளையெல்லாம் அறவே மறந்து விட்டு எல்லாரிடமும் பரந்த அன்பு செலுத்தி நேர்மையோடு நீர்மை புரிந்துவரின் அவன் சிறந்த மனிதனாய் உயர்ந்து விளங்குகின்றான்.

உள்ளம் சுருங்க உயர்வு சுருங்குகிறது.

அது பெருந் தன்மையாய் விரிந்து உயர்ந்த போது பெரியோர், மேலோர், உயர்ந்தோர் என வெளியே ஒளி பெற்று நிற்கின்றார். மனம் உயர மதிப்புகள் உயர்கின்றன.

மனத்தின் அளவே மனிதன் மாண்படைந்து வருகிறான்.

அரச மன்றில் அங்கங்களாய் அமர்ந்து தேசப் பணிகளைச் செய்ய நேர்ந்தவர் எவ்வழியும் செவ்வியராய்த் திருந்தியிருப்பின் அவர் திவ்விய நிலையில் சிறந்து திகழ்வர். கருமத் தலைவர் தரும நெறிகளைத் தழுவி ஒழுகின் உலக மக்கள் வாழ்வு உயர் நிலைகளைத் தழுவி எழும். அங்கே இன்ப நலங்களும் பொங்கி விளங்கும்.

பண்போடு இதம் புரியின்.

என்றது பதவியாளருடைய பான்மை தெரிய வந்தது.

இனிய நீர்மை பண்பு என இசைந்தது. அதனையுடையவர் இனியராய் வருதலால் மனிதருள் அவர் மாண்பினராயினர்.

தலைமையான அதிகார பதவியில் அமர்பவர் பண்புடையராயிருத்தல் வேண்டும். இலரேல் அவரால் நாட்டுக்குத் துன்பமே நேரும். தேச காரியங்கள் இராச காரியங்களாய்ச் சிறந்திருத்தலால் அவற்றைச் செய்ய நேர்ந்தவர் செவ்வியராய் உயர்ந்திருத்தலை வையம் எவ்வழியும் எதிர்பார்த்து நிற்கின்றது.

உரிமையாக வாய்த்த பதவியை அருமையாகப் போற்றிவரின் பெருமைகள் பெருகி வருகின்றன. பலரும் வணங்கி வழிபடும் மாட்சிமை யுடைமையால் அதிகாரம் அழகிய காட்சியாய் ஒளி புரிகின்றது. உத்தியோகம் புருட லட்சணம் என்பது பழமொழி. தொழிலின் அளவே எழில் எழுகின்றது.

மனிதனை மாண்புறுத்தி வருதலால் அதிகாரம் ஒரு மாய மோகமாய் மருவி நிற்கிறது. இத்தகைய விழுமிய பதவியைப் பெற்றவர் எத்தகைய நிலைகளினும் வழுவாமல் ஒழுகி வரவேண்டும். வழுவின் பழியும் இழிவும் ஒழியாமல் பற்றிக் கொள்ளும்.

அதிகாரி செய்யும் பிழைபாடுகளுள் மிகவும் கொடியது பரிதானம் வாங்குதல். நடுவு நிலைமையுடன் நின்று காரியங்களை யாண்டும் நேர்மையாகச் செய்யவுரியவன் நெஞ்சம் திரிந்து இலஞ்சம் கொள்ளின் அது படு வஞ்சகமாய்ப் பழிபடுகின்றது.

கொடியவர்களையும் திருடர்களையும் வஞ்சகர்களையும் இலஞ்சம் வளர்த்து வருதலால் அது பஞ்சமா பாதகம் என மேலோரால் அஞ்ச நேர்ந்தது. இலஞ்ச ஒழிப்பு என இக்காலத்தில் ஒரு சட்டமும் இங்கே செய்யப்பட்டுள்ளது. இதனால் அந்த ஈனத் தீமை இந்த நாட்டில் எவ்வளவு பரவியிருக்கிறது! என்பதைச் செவ்வையாகத் தெரிந்து கொள்ளலாம்.

கெட்ட காரியங்களைச் செய்கிற துட்டர்களை அடக்கி ஒடுக்குவது அதிகாரிகளுடைய தொழில். அவரே கேடு செய்யத் துணிந்தால் நாடு எவ்வாறு பாடு பெற்று வரும்?

வலியினால் இலஞ்சம்கொள் மாந்தர் பாற்சென்று
மெலியவர் வழக்கினை விளம்பல் வாடிய
எலிகள் மார்ச்சாலத்தி னிடத்தும் மாக்கள்வெம்
புலியிடத்தும் சரண் புகுதல் ஒக்குமே. (1)

அல்லினில் களவுசெய் பவரை வெஞ்சிறை
இல்லிடும் பண்பினுக்கு இயைந்த மாக்களே
எல்லினில் எவரையும் ஏய்த்து வவ்வுலால்
கொல்லினும் போதுமோ கொடியர் தம்மையே. (2)

கொலைஞரும் சோரரும் கொடிய வஞ்சரும்
நிலைபெற அவர்கையில் நிதியைக் கொண்டுதண்
அலைகடல் உலகியல் அழிக்கும் தீயர்பால்
மலைஎனப் பாவமும் பழியும் மண்டுமே. (3)

பயிரினை வேலிதான் மேய்ந்த பான்மைபோல்
செயிருற நீதியைச் சிதைத்துஓர் தீயன்சாண்
வயிறினை வளர்த்திட வாங்கு மாநிதி
வெயிலுறு வெண்ணெய்போல் விளியும் உண்மையே. (4)

(நீதி நூல்)

இலஞ்சத்தால் விளையும் தீமைகளையும், அதனை வாங்குகிற அதிகாரிகளின் இழி நிலைகளையும் இவை உணர்த்தியுள்ளன. உரைகளில் பொதிந்துள்ள உணர்வு நலங்களை ஊன்றி உணர்ந்து கொள்பவர் அதன் தீமையைத் தேர்ந்து தெளிந்து கொள்ளுவர்.

இரவில் மறைந்து திருடுகிறவனைக் கள்ளன் என்று எள்ளி இகழ்ந்து சிறையில் தள்ளிக் கொடிய துயரைச் செய்கின்றார். அங்ஙனம் எள்ளித் தண்டிக்கின்ற அதிகாரிகளே அந்தக் கள்ள

ரடம் பகலில் பொருளைக் கவர்ந்து கொள்ளுகிறார்களே! இது எவ்வளவு பெரிய கொள்ளை! பட்டப் பகலில் துணிந்து பிறருடைய பொருளைக் கவர்ந்து கொள்ளுகிற இந்த அதிகாரத் திருடர்களைச் சிறையில் இடுவது முறையாகாது; சிரச் சேதமே செய்ய வேண்டும் என்று ஒரு பெரியவர் பறையறைந்திருக்கின்றார். தலைவன் இழிவு தலை அழிவாகிறது.

பிழைகள் புகாமல் பாதுகாத்துச் சமுதாயத்தை எவ்வழியும் செவ்வையாக நடத்தும்படி நியமிக்கப் பட்டுள்ள தலைவனே நிலை வழுவிப் பழி வினைகளைச் செய்வது படுபாதகம் ஆதலால் அது கொடிய கொலைத் தண்டனைக்குரிய குற்றமாய்க் குறிக்க நேர்ந்தது. குறிப்புகள் கூர்ந்து நோக்கத் தக்கன.

தன் தலைமையையும் நிலைமையையும் உணர்ந்து தலைவன் நெறியோடு ஒழுகிவரின் உலகம் அவனை உயர்வாக உவந்து வரும். அந்த மதிப்பையும் மாண்பையும் இழந்து விடாமல் மதியோடு ஒழுகி வருபவன் சிறந்த வினையாளனாய் விளங்கி நிற்கிறான்.

மண் பேணி நிற்கும் என்றது மண்ணவர் எண்ணங்களில் அவன் கண்ணியமாய் மருவி நிற்கும் நிலை தெரிய வந்தது.

வினையாளனாய் அதிகார பதவியைப் பெற்றவன் உலக மக்களுடைய உவக்கை மதிப்புகளை அடைந்து கொள்ள வேண்டும். அது அவனுக்குச் சிறந்த பரிசாய் விளங்கி நிற்கின்றது.

தேச மக்களுக்கு இதமாகச் சேவை செய்வதே ஈசனுக்குச் செய்கிற பெரிய பூசனையாம். பிற உயிர்கள் உவக்கை யுறும்படி வினை புரிந்து வருபவன் உயர் நிலையை அடைந்து ஒளி மிகுந்து வருகிறான். அவ்வாறு அளி சுரந்து செய்யாதவன் இளிவடைந்து வீழ்கின்றான்.

> நாட்டு நலங்கருதி நல்லது செய்பவர்
> பாட்டு நலங்கண்டு பாராள்வார்---நாட்டுநலம்
> காணுமல் தன்னலமே காண்பார் கழிபழியே
> பூணுகப் பூண்பர் புனைந்து.

பழியும் துன்பமும் படியாமல் புகழும் இன்பமும் பொருந்தி வரும்படி அதிகாரிகள் திருந்தி ஒழுக வேண்டும்.

நாட்டுக்கு நயன் காணுமல் தன் பாட்டுக்குப் பயன் காண்பவன் பழியே காண்கின்றான். அந்தப் பழிக் காட்சியால் அழி

மதியாளனாய் இழிந்து படுகிறான். படுமோசம் தெரியாமல் பாழ் படுவது பரிதாபமாகின்றது.

ஓர்ந்து வினை செய்து உயர்வு காணுக.

---

574. பதவி அமையின் பணிவுடைய னாகி
உதவி புரியின் உயர்வாம்—உதவிநலம்
செய்யா தகம்செருக்கின் தேசம் அவனைமேல்
வையா திகழும் வலிந்து. (சு)

இ—ள்

தனக்கு ஒரு பதவி அமையின் பணிவுடையனாகி மக்களுக்கு உதவி புரியின் அது அவனுக்கு மிகவும் உயர்வாம்; உதவி நலம் செய்யாமல் உள்ளம் செருக்கி நின்றால் அவனை உலகம் எள்ளி இகழ்ந்து கீழே தள்ளும் என்பதாம்.

இது, பதவியின் உதவியை உணர்த்துகின்றது.

பதவி என்னும் சொல்லுக்கு உயர்ந்த இடம் என்பது பொருள். சிறந்த தானத்தில் அமர்ந்திருந்து காரியங்களைப் பதமாய்ச் செய்து வருதலால் அந்த நிலை பதவி என வந்தது.

பதவிமோகம் என்னும் பழமொழியால் அந்த அதிகார நிலையில் மனிதர் கொண்டிருக்கும் மதிப்பும் பேராவலும் அறியலாகும். உலக நிலையில் பல பேர்க்குத் தலைவராய் நிலவி வருதலால் அதிகாரிகள் உயர்ந்த மதிப்புடையராய்ச் சிறந்து நிற்க நேர்ந்தனர். சிறப்புரிமைகள் களிப்பு வகைகளாய்க் கலித்து வந்தன.

கல்வி செல்வங்களால் அமைகின்ற மதிப்பினும் அதிகாரத்தால் அமைந்து வருவது யாரும் வியந்து காணும்படி விரைந்து வேலை செய்கிறது. காரியங்களைத் தலைமையாய் நின்று நடத்துவது அதிகாரம் என வந்திருத்தலால் அதன் நிலைமையும் நீர்மையும் நேரே தெரியலாகும்.

பொருள் வருவாயோடு பலரும் மதித்துப் போற்றும் மாட்சி மருவியுள்ளமையான் பதவி அதிசய நிலையில் துதி செய்ய நின்றது. அதனை அடைய மனிதன் படாதபாடு படுகிறான். அதற்கு உரிய தகுதி தன்பால் இல்லை ஆயினும் அதன்

பால் பிரியம் மீதூர்ந்து பேராசையுறுகிருன். எப்படியாவது அதனை அடைந்து கொள்ள அவாவி யுழலுகிருன்.

பொருளை உயிரினும் இனியதாகக் கருதி இறுகப் பிடித்திருக்கும் கொடிய உலோபிகளும் பதவியைப் பெறும் பொருட்டுப் பெரும்பொருளை வாரி வீசி விடுகின்ருர். அதிகார ஆசையில் மதி மாண்டு போய் அந்த மனிதர் படுகிற பாடுகள் அதிசய விந்தைகளாய் விரிந்து நிற்கின்றன.

வந்தவருக்கு அரைக்காசு மனமார
வழங்காத வளமை வாய்ந்த
அந்தநிலை யுடையவரும் ஆயிரம்
ஆயிரமாக அள்ளி வீசி
இந்தஒரு தேறுதலில் என்னைத்தேற்ற
வேண்டும்என ஏங்கி நிற்பார்
எந்தவிதம் இவர்நிலையை இங்கெண்ணித்
தேறிநான் இசைப்பேன் அம்மா!

இந்தப் பாட்டு இந்தக் கால நிலையைக் காட்டி வந்துள்ளது.

தேறுதல் = தக்கவன் என்று பலரால் தெரிந்து எடுக்கப் படுதல். ஆங்கிலத்தில் இதனை எலெக்ஷன் (Election) என்பர்.

"தேறுதலில் தேற்ற வேண்டும்" என்றதிலுள்ள நயத்தைத் தோர்ந்து தெரியின் நகைச் சுவைகள் நேர்ந்து வரும்.

சட்டசபையில் ஒருவன் ஒரு தானத்தை அடையவேண்டின் பொது சனங்களிடமிருந்து பல வாக்குரிமைகளை அவன் பெற வேண்டும் என்று புதிதாய் ஒரு சட்டம் விதிமுறையில் விளைந்து வந்தது. அதன்படி அந்தப் பதவியை அடைய இந்த நாட்டில் நடந்த நாடகங்கள் பல. அந்த நாடகக் காட்சிகளுள் தலைமையான ஒன்றை மேலே வந்துள்ள பாடல் படம் பிடித்திருக்கிறது. M. L. A. என்ற வெறும் இந்த மூன்று எழுத்துப் பட்டத்தைப் பெறச் செல்வர் சிலர் வறியராக நேர்ந்துள்ளனர் என்ருல் பதவி எவ்வளவு பெரிய மோகமுடையது என்பது எளிது தெளிவாம்.

இத்தகைய பதவியை அடைந்து கொண்டவன் எத்தகைய நிலையிலும் தன்னை உத்தமனுகப் பண்படுத்திக் கொள்ள வேண்டும். அங்ஙனம் கொள்ளானுயின் எல்லாராலும் எள்ளப் பட்டு இழிந்து படுவான். உரிய இயல்பு திரியின் அரிய உயர்வு அயலாகின்றது. செயல் உயரச் சீர்த்தி உயர்கின்றது.

பதவி அமையின் பணிவுடையன் ஆகி.

என்றது அதிகாரம் கிடைத்தால் மனிதன் அமைந்து ஒழுக வேண்டிய அமைதியை உணர்த்தி நின்றது. அகங்காரம், செருக்கு, மமதைகள் பதவியில் விளையும் ஆதலால் அந்த இழி விளைவுகள் தழையாதபடி மனத்தை விழுமிய நிலையில் பழக்கிக் கொள்வது நல்லது. நயனுடைமை பயனுடைமை ஆகிறது.

உள்ளம் நல்ல நீர்மையில் பழகிப் பண்பட்ட பொழுது தான் மனிதன் எல்லாவகையிலும் இனியனாய் விளங்குகிறான். பணிவும் பண்பும் அவனுக்கு அணிகளாய் அழகு செய்கின்றன. நல்ல தன்மையில் எல்லா நன்மைகளும் குடி கொண்டுள்ளன.

ஒருவன் உயர்ந்த மனிதன் ஆக வேண்டுமானால் அவனிடம் சிறந்த குணங்கள் பல அமைந்திருக்க வேண்டும். இனிய நீர் மைகள் மனிதனைத் தனி நிலையில் உயர்த்துகின்றன. இனிமை குறைந்த அளவு அவன் இன்னாதவனாய் இழிந்து போகிறான். இழிவும் உயர்வும் இயல்பின் வழியே விழி தெரிய வருகின்றன.

சிறந்த அதிகார பதவியில் உள்ளவன் தன் கடமையைச் சரியாகக் கருதிச் செய்யின் அவன் நல்ல கரும வீரனாய்ப் பெருமை பெறுகிறான். உரிமையை உணராமல் உள்ளம் செருக்கின் சிறுமை அடைந்து சீரழிகின்றான்.

நாட்டு மக்களுக்கு இதத்தை நாடி நல்ல காரியங்களைக் கண்ணூன்றிச் செய்ய வல்லவனே ஆட்சிக் குழுவில் இருக்க உரியவன். அவ்வன்மையும் தன்மையும் இல்லாதவன் தனக்கும் பிறர்க்கும் நன்மை செய்ய இயலாது ஆதலால் அவனது இருப்பு பலர்க்கும் வெறுப்பாகின்றது.

மேல் வையாது இகழும்

என்றது கருமங்களைக் கருதிச் செய்யாதவன் கடையாய் இழிவன் என்பதைக் காட்டி நின்றது. அதிகார நிலையில் மேலாயிருந்தாலும் விதி முறை தெரிந்து மதி யூகமாய் நடந்து கொள்ளானாயின் அவனை உலகம் உயர்வாக மதியாது; கீழாகவே எள்ளி இகழ்ந்து தள்ளி விடும் என்க. தாழ்வு நேராமல் தன் பதவியை இதமாகப் பாதுகாத்துக் கொள்ளுகின்றவன் அதி சதுரனாகின்றான். மதியூகம் எவ்வழியும் மாண்பு தருகின்றது.

தன்னுடைய உயிர் வாழ்வுக்கு உயர் மதிப்பாய் அமைந்த அதிகார பதவியை விதிமுறையே பேணி ஒழுகாமல் வீணே செருக்கு மண்டி நின்றால் அவன் விரைந்து இழிந்து படுவான் ஆதலால் அந்த உள்ளத் தருக்கின் ஊனமும் ஈனமும் உணரலாகும். தன் நிலைமையை உணர்ந்து கருமங்களை உரிமையோடு செய்து பணிவும் பண்பும் தோய்ந்துவரின் அவன் தருமவானாய் உயர்ந்து திகழ்கிறான்.

பதவிமேல் உயர்ந்தான் தன்னுயர் நிலையின்
பான்மையை முன்னுற அறிந்து
மதம்ஒழிந்து எவர்க்கும் எளியனாய் இனிய
வாய்மொழி யுடையனாய் என்றும்
இதமுடன் ஒழுகின் இருமையும் பெருமை;
இன்பமும் புகழுமென் மேலாய்
நிதமும்வந் தெய்தும்; நித்தனும் அவனை
நித்தனாய்ச் செய்குவன் நினைந்தே.

(வீர பாண்டியம்)

இதனை இங்கே உய்த்துணருக.

என்றும் தலைமை அதிபதியான இறைவன் எதிரே நின்று கருமம் புரிவதாக உரிமையோடு பயந்து அதிகாரி தொழில் புரிந்துவரின் விழுமிய பலன்களை அவன் எளிதே அடைந்து கொள்ளுகிறான். தெய்வ பயம் திவ்விய மகிமையாகின்றது.

---

575. உன்னைப் பலர்க்கும் உயர்ந்தவனாச் செய்துவைத்த
தென்ன பயனை எதிர்நோக்கி—அன்னதனை
ஓர்ந்து கடமை யுணர்வோ டொழுகாயேல்
பேர்ந்து விழுந்தாய் பிறழ்ந்து. (ரு)

இ—ள்

பலர்க்கும் உயர்ந்தவனாக உன்னைப் பதவியில் உயர்த்தி வைத்தது எவர்க்கும் இனியனாய் இத நலங்களைச் செய்வாய் என்று எதிர்நோக்கியேயாம்; அந் நிலைமையை உணர்ந்து உன் கடமையைக் கருதிச் செய்க; வழுவினால் பழிவாய் வீழ்ந்து அழிவாய் என்க.

இது, தன் நிலைமையை உணர்வது தலைமையான கடமை என்கின்றது. உணர்ச்சி வர உயர்ச்சி வருகிறது.

உலக மக்கள் பலவகை நிலைகளில் படிந்துள்ளனர். செல்வம் கல்வி அறிவு ஆற்றல் உழைப்பு பிழைப்பு முதலிய பல்வேறு வகைகளில் பாகுபாடுகளை யடைந்திருக்கின்றனர். எல்லாரும் சுக சீவிகளாய் வாழவே யாண்டும் மூண்டு முயன்று நீண்டு வருகின்றனர். அத்தகைய மனித சமுதாயம் இனிது வாழ்ந்து வர நாடுகள் தோறும் தலைவர்கள் அமைந்துள்ளனர். அவருள் அரசர்கள் உயர்நிலையாளராய் ஒளி மிகுந்து நிற்கின்றனர். தேச காரியங்களைச் செவ்வையாய் நடத்தி வரும்படி பல துறைகளிலும் தக்கவர்களை அவர் நியமிக்கின்றனர். அந்த நியமனங்களைப் பெற்றவர்கள் அதிகாரிகள் என நிலவி நிற்கின்றனர்.

அரசுக்கும் நாட்டுக்கும் உறுதியாய் நின்று எவ்வழியும் நெறி முறை தவறுமல் உண்மையோடு உழைத்து வருவதாக அரச மன்றில் சத்தியம் செய்து தந்தே தங்களுடைய பதவிகளை யாவரும் பெற்று வருகின்றனர். விசுவாசப்பிரமாணம் என்னும் சொல் அவருடைய சுவாசத்தில் எப்பொழுதும் ஓடிக்கொண்டிருக்க வேண்டும் என்றே அதனை நாடிச் செய்கின்றனர். அந் நாட்டமெல்லாம் நாட்டின் நலம் கருதியே கூட்டப்பட்டுள்ளன. இந்தக் குறிக்கோளைக் குறிக்கொண்டு கூர்ந்து ஓர்ந்து ஒழுகி வருகின்றவரே தம் கடமையை உண்மையாச் செய்தவராகிருர்.

தன் கடமையைக் கருதிச் செய்தவன் உயர்ந்து திகழ்கின்ருன். அங்ஙனம் செய்யாதவன் இழிந்து படுகின்ருன்.

தமது நிலைமை உரிமைகளை உணராதவரே நெறிகேடராய் இழிந்து வீழ்கின்ருர். உரிய உணர்வு ஒழிந்தபொழுது பெரிய இழிவுகள் பெருகி வருகின்றன. உணர்ந்தவன் உயர்கின்ருன்; அயர்ந்தவன் அழிகின்ருன்.

உன்னை உயர்ந்தவனுச் செய்து வைத்தது
என்ன பயனை எதிர்நோக்கி?

ஒவ்வொரு அதிகாரியும் நாளும் எண்ணியுணர வேண்டிய உண்மை வாசகமாய் ஈண்டு இது உருவாகி வந்துள்ளது. தன்னையும் தனது பதவியையும் கருதியுணர்ந்து நெறிமுறையே ஒழுகி வருவது விழுமிய சீலமாய் ஒளிமிகப் பெறுகின்றது.

எல்லாரையும்போல் இருந்து தொலையாமல் உன்னை உயர்ந்த பதவியில் ஓர் சிறந்த அதிகாரியாக ஆக்கி வைத்துள்ள அந்தப்

பாக்கியத்தை நினைந்து பணிகள் புரிக என உணர்வு கூறியது அவன் உண்மையை நோக்கி ஒழுகி உயர.

விதிமுறை தெரிந்து வினை புரியாதவன் மதி கேடனாயிழிவுறுகின்றான். தகுதியில்லாதவர்க்கும் அதிகார பதவிகள் சில வழிகளில் கிடைத்து விடுகின்றன. அதனால் நாட்டுக்கு இன்னலும் இடையூறுகளும் நேருகின்றன.

மன்னர் திருவும் மகளிர் எழில்நலமும்
துன்னியார் துய்ப்பர் தகல்வேண்டா---துன்னிக்
குழைகொண்டு தாழ்ந்த குளிர்மரம் எல்லாம்
உழைதங்கட் சென்றார்க்கு ஒருங்கு. (நாலடியார், 167)

பதவியை வகிக்கும் தகுதியில்லாதவரும் அரசாங்க நிலைகளில் உயர்ந்த மந்திரிகளாய்ச் சிறந்த அதிகாரிகளாய் வந்துள்ளதைக் கண்டு அறிஞர் பலர் அதிசயமடைந்து வியந்து நின்றனர். அதுபொழுது அவரை நோக்கி ஒரு கவிஞர் இவ்வாறு கூறியருளினர். அனுபவக் காட்சிகள் இனிய சுவைகளை ஊட்டி வருகின்றன. கவியின் பொருள் நிலைகள் கருதி புணர வுரியன. தகுதியில்லாதவர்க்கும் தக்க வாய்ப்புகள் கால வேற்றுமையால் அமைந்து கொள்ளுகின்றன. அவற்றால் அவர் நிமிர்ந்து திரிகின்றனர். நிலைமையை மறந்து தலைமையில் களிக்கின்றனர்.

அரிய அரச செல்வமும், அழகிய மகளிர் இன்பமும் அவரோடு நெருங்கிப் பழகினவர் எவராயினும் அவருக்கு எளிதே கிடைத்து விடுகின்றன; அவற்றை அடைதற்குத் தகுதி வேண்டா; குளிர்ந்த மர நிழல் தன்பால் ஒதுங்கினவர்க்கெல்லாம் இனிய நிழலைக் கொடுத்தருளுகிறது; அதுபோல் அவை அமைந்து நிற்கின்றன என்னும் இது விநயமான வித்தக வசனமாய் வந்துள்ளது. உள்ளக் கருத்து உய்த்துணரத் தக்கது. கவியின் குறிப்பு உணர்வின் சுவை தோய்ந்து உவகை மணம் கமழ்ந்துள்ளது. புன்மைக் காட்சி தன்மை மாட்சியாய்த் தழைத்து வருகிறது.

தகுதியை உணர்ந்து வினையாளர்களை நியமிக்கவில்லையானால் அந்த அரசன் பகுத்தறிவு அற்ற மரம் போல் இழிக்கப்படுவான் என்பது இதில் தெளிக்கப் பட்டது. குறிப்பு மொழிகள் கூரிய சீரிய உண்மைகளை வெளிப்படுத்தியருளுகின்றன. குடி சனங்

னின் நன்மையைக் கருதி ஒழுகி வரும் அளவு முடி ஆட்சி நெடிய மாட்சியாய் நிலைத்து வருகிறது.

ஓர்ந்து ஒழுகாயேல், பேர்ந்து விழுந்தாய்.

அதிகார பதவியில் உள்ளவர் தம் கடமையை உணர்ந்து நெறி முறையே ஒழுகி வர வேண்டும். வழுவினால் பழியும் பாவமும் அடைந்து இழிவாய் அழிந்து படுவார் என இது அறிவுறுத்தியது. நிலைமையை நினைந்து பேணி உன் தலைமையைக் காப்பாற்றிக் கொள்ளுக. தக்க கருமம் மிக்க தருமமாகிறது.

---

576. நாட்டுக் குரிய நலம்புரியின் நல்லவர்தம்
பாட்டுக் குரியனாய்ப் பாடுபெறும்—நாட்டுநலம்
எண்ணா திழிசெருக்கில் ஏறின் இடர்பழியில்
மண்ணாகி வீழ்வன் மருண்டு. (சு)

இ—ள்

அதிகார பதவியில் உள்ளவன் தன் நாட்டுக்கு வேண்டிய நன்மைகளை ஆராய்ந்து செய்யின் நல்லோர் பல்லோரும் அவனைப் புகழ்ந்து போற்றுவர்; அங்ஙனமின்றிச் செருக்கி நின்றால் எல்லாரும் இகழ்ந்து எள்ளித் தள்ளுவர் என்பதாம்.

இது உள்ளம் ஓர்ந்து நல்லது செய் என்கின்றது.

தனக்கு இனிய சுகத்தை நாடுவதே மனிதனுடைய இயல்பாயுள்ளது. தன்னலமே கருதி வரும் வரையும் அந்த மனித வாழ்வு அவ்வளவு பெருமை அடையாது. சுய நய விழைவு மயலான வழியிலேயே மனிதனைத் தாழ்த்தி விடுகிறது. அயலாரை ஆதரிப்பது உயர்வான நன்மையாய் ஓங்கி வருகிறது. பிறர்நலம் பேணுவோன் பெரிய மனிதனாய் அறநலம் காணுகின்றான்.

தன்னுடைய சுகத்தையே அவாவி அலைகின்றவன் ஊன உடலை வளர்க்கின்றவனாய் ஈன நிலையில் இருக்கின்றான். பிறருடைய இதத்தை நாடி நடப்பவன் இனிய உயிரை வளர்ப்பவனாய் அரிய மேன்மையில் நிற்கின்றான். குறுகிய நோக்கம் சிறுமையைத் தருகிறது. விரிந்த காட்சி சிறந்த மாட்சிகளை அருளுகிறது.

தன்னைப் போல் பிறரையும் எண்ணி ஒழுக நேரின் அப்பொழுதே அவன் புண்ணியவான் ஆகின்றான். உயர் நலங்கள்

எல்லாம் உள்ளப் பண்பில் உறைந்திருக்கின்றன. மனம் புன்மையாய் இழியின் மனிதன் புல்லியனாய் இழிந்து படுகிறான். அது நன்மையாய் உயரின் அவன் நல்லவனாய் உயர்ந்து திகழ்கிறான்.

தனி மனிதனை விட அதிகார நிலையில் அமர்ந்திருப்பவன் இனிய பண்பாடுடையனாய் இசைந்திருக்க வேண்டும். பல பேர்களுடைய சுக துக்கங்கள் அவன் கையில் இருக்கின்றன. அவன் நெறிகேடனாயின் பழிகேடுகள் பல விளைந்து விடும் ஆதலால் அவனது நிலை நெடிது சிந்திக்க வுரியது.

பரந்த நோக்கமுடைய பெருந்தகையாளனைத் தமக்கு அதிகாரியாகப் பெற்றிருப்பவர் சிறந்த பாக்கியசாலிகளாகின்றனர்.

நாட்டுக்கு உரிய நலம் என்றது தேச மக்களுக்கு வேண்டிய இதங்களை. நாட்டிலுள்ள பல நிலைகளையும் கருதியுணர்ந்து பருவம் தவறாமல் கருமம் செய்து வருவதே அதிகாரியின் தருமமாம். சாதுரிய சாகசமாய் அங்ஙனம் காரியம் செய்து வருகிறவன் கரும வீரன் என்னும் பெருமையைப் பெறுகிறான்.

தன் கடமையை உரிமையோடு கருதிச் செய்கிறவனை உலகம் பெருமையாகப் புகழ்ந்து போற்றி வருகிறது. நல்லதை நாடிப் பேணுகிறவன் நல்லவனாய் நலம் பல காணுகின்றான். எல்லாரும் அவனை ஏத்தி வருகின்றார்.

"நல்லாரை நாவில் உரை; பொன்னைக் கல்லில் உரை."

என்பது இந்நாட்டில் வழங்கி வரும் பழமொழி. பல உண்மைகளை இது காட்டி வருகிறது. பொன்னின் உண்மை நிலையை உரை கல் உணர்த்தி விடும்; அதுபோல் ஒரு மனிதனுடைய தன்மையை உலக உரைகள் உணர்த்தி வரும் என்க.

பொது மக்கள் வாக்கு அதிசய ஆற்றலுடையது. பலர் ஒரு முகமாய் உள்ளம் உவந்து ஒருவனைப் புகழ்ந்து கூறின் அது தெய்வ வாக்காய்த் தேறி வருகின்றது.

தன் உள்ளத்தில் நேர்மையும் செயலில் நீர்மையும் தோய்ந்திருந்தால் அந்த மனிதன் சீர்மையாளனாய்ச் சிறந்து திகழ்கிறான்.

மனம் திரிந்து மாறுபாடு புரியின் அவனை எவரும் சினந்து இகழ்ந்து சீறி விடுகின்றார். உயர்ந்த பதவியில் உள்ளவன் அதற்

குத் தகுந்த நிலையில் நடந்து கொள்ளானாயின் அவன் விரைந்து இழிந்து படுகின்றான்.

எண்ணாது இழி செருக்கில் ஏறின்
மண்ணாகி வீழ்வன் மருண்டு.

அதிகாரி அறிந்து ஒழுக வேண்டிய உண்மையை மதி கூர்ந்து உணர்ந்து கொள்ளும்படி இது உணர்த்தி யுள்ளது. இழி செருக்கு என்றது தன்னையுடையானை இழி நிலையில் தள்ளி அழி துயர் செய்யும் அதன் பழி நிலை தெரிய வந்தது. தனக்குக் கிடைத்த பதவியை மரியாதையோடு பேணாமல் மமதை கொண்டு தருக்கின் அந்த அதிகாரி அதி வேகமாய் அவல நிலை யில் வீழ்ந்து கவலையடைய நேர்கின்றான்.

எவ்வளவு பெரிய பதவி கிடைத்தாலும் பண்பாடுடையவர் யாண்டும் அன்போடு அமைதியாய் ஒழுகி வருகின்றார். பண் பில்லார் படு செருக்காளராய்ப் பழி வழியில் பாய்கின்றார்.

பண்பு குன்றியபோது அங்கே பதவி பெரிதாய்த் தோன்று கிறது. தோன்றவே அவன் தலை நிமிர்ந்து செருக்கி நிலைகுலைந்து வீழ்கின்றான். பதவிச் செருக்கில் தான் சிறுமையாய் இழிவ தோடு பலர்க்கும் அழி துயரங்களை விளைத்து விடுதலால் அந்தச் சின்ன மனிதன் இன்னல் நிலையமாகின்றான்.

அடக்கமும் அமைதியும் இல்லாதவன் அதிகாரியாய்வரின் அது நாட்டுக்கு ஒரு பெரிய கேடேயாம். உள்ளம் கெட்டதா யின் மனிதன் கொள்ளித் தேளைப் போல் கொடியவன் ஆகின் றான். அதனோடு அதிகாரமும்சேர்ந்தால் அவனுடைய கொடுமை கடுமையாய்க் கதித்துக் கடுந்துயர் புரிகின்றது.

"தேளுக்கு அதிகாரம் கொடுத்தால் அது நாள் முழுதும் கொட்டும்" என்பது பழமொழி. கெட்டவனுக்கு அதிகாரம் கிடைத்தால் அவன் எவ்வழியும் கேடே செய்வான் என்பதை இது சுட்டிக் காட்டியுள்ளது.

தகுதியை ஆராய்ந்தே ஒருவனுக்குப் பதவியைக் கொடுக்க வேண்டும். அங்ஙனம் ஆராயாமல் தரின் அது பலர்க்கும் அபா மாய் முடியும். புல்லர் வரின் எவ்வழியும் பொல்லாங்கே வரும்.

உடைப்பெரும் செல்வத்து உயர்ந்த பெருமை
அடக்கமில் உள்ளத்த னாகி---நடக்கையின்
ஒள்ளியன் அல்லான்மேல் வைத்தல் குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல். (பழமொழி)

தகாதவனுக்கு உயர்ந்த பதவியைக் கொடுப்பது குரங்கின் கையில் கொள்ளியைக் கொடுத்தல் போலாம் என முன்றுறையரையனார் இங்ஙனம் கூறியிருக்கிறார். அதிகாரம் தீக்கொள்ளிக்கும், கெட்ட மனமுடையவன் துட்டக் குரங்குக்கும் ஒப்பாய் வந்துள்ள நுட்பம் உய்த்துணரத் தக்கது. சும்மாவே சேட்டை செய்கிற குரங்கு கையில் கொள்ளிக் கட்டையும் கிடைத்தால் வீட்டைச் சுட்டு வெந்துயர் செய்யும். துட்டனுக்கு அதிகாரம் தந்தால் நாட்டுக்குத் துன்பமாம் என்க.

நெறிகேடான செயலால் மனிதன் இழிமிருகமாய் இழிந்து படுகிறான். நல்ல செல்வாக்கைப் பொல்லாத வழியில் புகுத்திப் புலைப்பட்டு ஒழியாமல் புனித நிலையில் மனிதன் உயர்ந்து கொள்ளவேண்டும். வஞ்சக் கரவுகளை நெஞ்சில் கொள்ளலாகாது; கொண்டால் அந்த மனித வாழ்வு அஞ்சத் தக்கதாய் அவலமடைகின்றது. கள்ளம் கபடுகள் எள்ளல் இழிவுகளாகின்றன.

அதிகாரஆசையால் பலர் மதிகேடராய் மனம் மருண்டு திரிகின்றார். கூட்டம் கூட்டமாய்த் திரண்டு கொண்டு தங்கள் நாட்டத்தை நிறைவேற்ற அலைதலால் அது கோட்டிக் கூட்டமாய் ஈட்ட மிகப் பெற்றது. காரிய ஆவலால் கபட நாடகங்களை நயமாக நடிக்கின்றார். கட்சிகளைத் தழுவிக் கொண்டு இச்சகங்களைப் பேசி எவ்வழியும் கொச்சைகளா யிழிந்து அவர் காட்டி வரும் வேலைத் திறங்கள் வியப்பு மிகவுடையன.

காலையிலே ஒருகட்சி கடும்பகலில்
ஒருகட்சி கதிரோன் சாயும்
மாலையிலே ஒருகட்சி மறுநாளில்
ஒருகட்சி மாறி மாறி
ஆலையிலே சுழன்றுவரும் அடலெருதின்
தொடர்போல அவமா யிந்த
வேலையிலே திரிந்துவரும் வித்தகர்தம்
சித்தநிலை வியப்பே அம்மா!

நெஞ்சில் நேர்மையின்றி வஞ்சம் புரிந்து இவ்வாறு திரிந்து வருவதைப் பெரிய இராச தந்திரமாக அவர் நினைந்து வருகிறார். புல்லிய சிறுமைகளைப் புனைந்து கூறுவது புலையாய் வளர்ந்து வருகிறது. பான்மை சிதைய மேன்மை சிதைகிறது.

கமலை மாடுகளை உவமை கூறியது அவரது நிலைமைகளை உணர்ந்து கொள்ள. தொழிலில் ஓரளவு நிகராயினும் பயனில் அவை நயனுடையன. அவற்றின் சுழற்சியால் நிலத்தில் நீர் பாய்கிறது. பயிர்கள் வளர்கின்றன. இவர் சுற்றித் திரிவதால் நாட்டில் வஞ்சகம் சூதுகள் தாம் வளர்ந்து வருகின்றன.

நேர்மை குன்றிய போது மனிதன் சீர்மை குன்றி இழிகின்றான். அந்த இழி நிலையை எண்ணி உணராமல் களித்திருந்து திரிவது பழிபடிந்த வாழ்வாய்ப் படர் அடர்ந்துள்ளது.

நெஞ்சம் பாழ்பட்டவர் நிறைந்திருக்கும் வரையும் நாடு கொஞ்சமும் முன்னேறாது. நஞ்சம் தோய்ந்த குட்டம் போல் நாசமே கண்டிருக்கும். வெளியே நல்லவர்களைப் போல் நடித்து உள்ளே பொல்லாமைகள் புரிந்து வரும் வேடதாரிகளால் நாடு கேடு அடைதலால் அவர் கொடிய பீடைகளாயுள்ளனர்.

தன்பால் வாழுகின்ற மக்களின் நீர்மையைப் பொறுத்தே ஒரு நாடு சீர்மை அடைந்து வருகிறது. தம் உள்ளங்களைப் புனித நிலையில் உயர்த்தி இனிய பண்பாடுகளை வளர்த்து வருகிற மனித சமுதாயத்தை எந்த நாடு பெற்றிருக்கிறதோ அந்த நாடே புண்ணிய பூமியாய்ப் பொலிந்து விளங்குகிறது.

"உள்ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்"

என இராமலிங்க சுவாமிகள் இவ்வாறு ஆண்டவனை நோக்கி வேண்டியிருக்கிறார்.

"Who dares think one thing, and another tell,
My heart detest him as the gates of hell." (Iliad)

"தன் உள்ளத்தில் ஒன்றை நினைத்துக் கொண்டு வெளியே மாறாய் வேறு பேசுகிறவனை நரகம் ஆக என் இதயம் வெறுக்கின்றது" என ஹோமர் இவ்வாறு பாடியிருக்கிறார்.

வஞ்சப் புன்மை எவ்வளவு அஞ்சத் தக்கது என்பது இதனால் அறியலாகும். நேர்மையோடு நீர்மை சுரந்து வாழுக.

---

577. நீதி பதியினுயர் நெஞ்சம் நெறிநேர்மை
யாதி பதியின் அறநிலையம்—நீதி
பதியா திழியின் பழிநிலைய மாகி
அதிபா தகமாம் அது. (எ)

இ—ள்

நீதிபதியினுடைய உயர்ந்த உள்ளம் நெறி நேர்மை முதலிய நீர்மைகள் தோய்ந்திருப்பின் சிறந்த தரும நிலையமாய் விளங்கி நிற்கும்; நீதி முறை பதியாது இழியின் அதி பாதகமான கொடிய பழி நிலையமாய் அது இழிந்து படும் என்பதாம்.

இது செம்மை நிலை எம்மையும் நன்மை என்கின்றது.

நெறி, வழி, முறை என்னும் மொழிகள் அரிய பல துறைகளை யுடையது. நாட்டு மொழிகளில் எழுந்துள்ள ஒலிகள் பழமையான நிலைகளையும் பண்பாடுகளையும் காட்டி வருகின்றன.

நீதி என்னும் சொல் நீதத்தையுடையது என்னும் ஏதுவான் வந்தது. நியாயம், நெறி, முறைமை, தருமம், செம்மை முதலிய நன்மைகள் பலவும் நீதி என்னும் பதத்தில் அடங்கியுள்ளன. உரிய மொழியுள் அரிய ஒளிகள் மருவி நிற்கின்றன.

நிதமும் மனிதன் நெறியோடு ஒழுகி வரும் நியமங்கள் நீதி என நேர்ந்தன. நித்தமும் நெறிமுறையே மருவி வருபவனை நித்திய நிலையில் உய்த்தருளுவது எதுவோ அது நீதி என நிலவி நிற்கின்றது.

"நெறியும் நியாயமும் தருமமும் நீதி." (பிங்கலந்தை)

எனப் பிங்கலமுனிவர் இங்ஙனம் கூறியுள்ளார்.

நீதியாளருடைய நிலைமையை இதனால் அறியலாகும்.

நெறியும் நேர்மையும் நிறைந்த தரும குண சீலர்களே உயர்ந்த நீதிமான்களாய் ஒளி மிகுந்துள்ளனர்.

"தள்ளரிய பெருநீதித் தனிஆறு புகமண்டும்
பள்ளம் எனும் தகையான்." (இராமா, குலமுறை, 21)

எனப் பரதனை விசுவாமித்திரர் இவ்வாறு குறித்திருக்கிறார்.

நீதி விரத மெய்த் தாதை எனத் தசரதன் இங்ஙனம் நின்றுள்ளான். சத்திய நீதி உத்தம சோதியாய் ஒளி புரிகின்றது.

“நீதி விளையாவரு நன்னெறி நின் அறிவாகும்” என இலக்குவனை இராமன் இவ்வண்ணம் குறித்திருக்கிறான்.

நீதி வித்தகன் என அனுமான் இப்படி இசை பெற்றிருக்கிறான். தரும நீதிகள் அரிய மேன்மைகளை அருளுகின்றன.

“நீதியால் வந்ததொரு நெடுந்தரும நெறியல்லால்
சாதியால் வந்தசிறு நெறிஅறியான் என்தம்பி.”

விபீடணனைக் குறித்துக் கும்பகருணன் இங்ஙனம் இராமனிடம் உரைத்து அவனை ஆதரித்தருளும்படி வேண்டியிருக்கிறான்.

நீதியது நேர்மை யுளன் (பெருங்கதை)

என யூகி இங்ஙனம் பேர் பெற்றுள்ளான்.

நீதியுடையவர்களுடைய மேன்மையும் பான்மையும் இவற்றால் ஓரளவு உணர்ந்து கொள்ளலாம். நெறியோடு ஒழுகி வரும் அளவு மனிதர் அரிய மகிமைகளை யடைந்து வருகின்றனர்.

நீதிபதி என்றது தரும பரிபாலனங்களைச் செய்யவுரிய அதிபதியை. அதிகார பதவிகளுள் இது உயர்தரமானது.

இத்தகைய உன்னத பதவியில் உள்ள நீதிமான் உருவத்தில் மனிதனாயிருப்பினும் உள்ளத்தில் தெய்வீக நீர்மையை எய்தியிருக்க நேர்கிறான். அவனுடைய நெஞ்சம் எவ்வழியும் யாதும் கோடாமல் செவ்விதாயிருக்க வேண்டும்.

நெறி நேர்மை பதியின் அற நிலையம்.

நீதிபதியின் உள்ளம் நெறியும் நேர்மையும் தோய்ந்து நீர்மை வாய்ந்திருப்பின் அது தரும நிலையமாய்ப் பெருமை சுரந்திருக்கும். அரிய பல நன்மைகள் சமுதாயத்தில் வளர்ந்து வரும்படி செய்து வருதலால் அது புண்ணிய நிலையமாய் எண்ண வந்தது. நீதி பதிந்த அளவு நிலைமை உயர்ந்து மிளிர்கின்றது.

பதியின் என்றது அங்ஙனம் பதிவது அருமை என்பது அறிய நின்றது. நியாய அநியாயங்களை நிறைதூக்கி நோக்கி உண்மை நிலைகளை உறுதியாகத் துணிந்து சொல்லவல்ல நீதிமான்

நெஞ்சம் கோடி நின்றால் குடிசனங்களுக்கு நெடுங்கேடுகள் விளைந்து விடும் ஆதலால் அவன் கொடிய பழியாளனாய் நெடிய பாவியாய் இழிந்து பட நேர்கின்றான்.

நீதி பதியாது இழியின் பழி நிலையம்.

நெறி முறையே நின்று தரும நீதிகளைச் செய்யவுரிய நீதி பதியின் உள்ளத்தில் நீதி பதியவில்லையானால் அங்கே பதிந்திருக்கும் தீதுகளை இது குறித்து நின்றது. எவனுடைய உள்ளத்துள் நீதிகள் நெறியே பதிந்திருக்கின்றனவோ அவனே உண்மையான நீதிபதியாம். அரிய பேருக்குத் தக்கபடி உரிய நீர்மைகள் இல்லாத போது அது பெரிய தீமைகளை மருவிப் பிழை படுகின்றது. தன்மை குறைய நன்மை மறைகின்றது.

நீதிமான் எனப் புறத்தே போர்த்துள்ள வேடத்துக்குத் தக்கவாறு அகத்தே நெறி நீர்மைகள் மருவியிருக்கும் அளவே மகிமையுளது; மருவாது ஒழியின் விருதாவாய் அவன் விளிந்து படுகின்றான்.

"வேட நெறிநில்லார் வேடம்பூண்டு என்பயன்?
வேட நெறிநிற்பார் வேடமே மெய்வேடம்." (திருமந்திரம்)

எனத் திருமூலர் கூறியுள்ள இது இங்கே ஒரு மூலமா யுணரவுரியது. உரிய நீர்மை இன்றேல் அரிய சீர்மை இன்றாம்.

தக்க தகுதி வாய்ந்தவர் அதிகாரிகளாய் அமைந்தபோது தான் மக்கள் வாழ்வு பக்குவமடைந்து மகிழ்ச்சி மிகுந்து வரும். நீதிபதிக்கு உரிய நீர்மைகளில் நேர்மை தலை சிறந்தது. நெறி திறம்பாத மனச் செம்மையே நேர்மை ஆதலால் அதனையுடையவன் சிறந்த சீர்மையாளனாய் உயர்ந்து விளங்குகின்றான்.

மனக்கோட்டம் இன்றி யாரிடமும் நேர்மையாய் நின்று நீதி செலுத்துவோன் என்பதை அறிவிக்கவே அரசன் செங்கோலை ஏந்தி நிற்கிறான். செங்கோல், கொடுங்கோல் என்பன நாட்டு மக்களுக்கு நன்மை புரிவதையும், தீமை செய்வதையும் காட்டி நிற்கின்றன. தவறான எண்ணங்களால் மனம் கோட்டம் அடைந்திருந்தால் அந்த மனிதன் எந்த வகையிலும் நீதி முறைகளைச் சரியாகச் செய்ய முடியாது. அந்த உள்ளக் கோணலால் எல்லாம் கோணிப் பொல்லாங்கே விளைந்து வரும்.

"When the judgment's weak, the prejudice is strong."
Midas)

"மனக்கோட்டம் மிகுந்த பொழுது நீதித் தீர்ப்பு இழிந்து படும்" என்னும் இது இங்கே அறிய வுரியது. செம்மை சிதைந்த போதே நன்மைகள் மங்கி மறைகின்றன; புன்மைகள் பொங்கி வருகின்றன. உள்ளம் இழிய எல்லாம் இழிகின்றன.

தன் நெஞ்சம் நேர்மையாய் அமைந்திருப்பவனே நீதிபதி என்னும் சீர்மையை அடைந்து நிற்கின்றான். தரும தேவதை போல் அவன் எவ்வழியும் நடுவு நிலையில் இருக்க வுரியவன். நடுவன், சமன் என எமனுக்குப் பெயர்கள் வந்துள்ளன. யாரிடமும் பாரபட்சம் பாராமல் நேர்மையாய்த் தன் கடமையைச் செய்பவன் ஆதலால் அவன் செங்கோற்கடவுள் என நின்றான்.

பகை உறவு என்று உள்ளம் சாயாமல் நீதியை நெறியோடு புரிபவனே உயர்தர நீதிமான் ஆகின்றான். வாரங் கொண்டு சாய்ந்தால் வசையுடையனாய்த் தாழ்கின்றான்.

"வாரம் பட்டுழித் தீயவும் நல்லவாம்;
தீரக் காய்ந்துழி நல்லவும் தீயவாம்." (சிந்தாமணி)

ஒருவன்பால் அன்பாய் அபிமானம் கொண்டால் அவன் தீயது செய்தாலும் நல்லதாய்த் தோன்றும்; வம்பாய் வெறுப்பிருந்தால் நல்லது செய்தாலும் கெட்டதாய்த் தெரியும் என்னும் இது இங்கே நன்கு அறிய வுரியது.

காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்ற குணம்தோன்றா தாகும்; உவப்பதன்கண்
குற்றமும் தோன்றாக் கெடும். (அறநெறிச்சாரம்)

குணம் குற்றங்களைக் கூர்ந்து ஓர்ந்து தேர்ந்து முடிவு கூற வுரிய நீதிபதிகளுக்கு இது போதனை செய்துள்ளது. இந்த மானச தத்துவத்தை மதியூன்றி உணர்ந்து கொள்ள வேண்டும்.

வழக்காளிகள் பால் விருப்பு வெறுப்பு இன்றி நடுவு நிலைமையோடு நின்று மனித சமுதாயத்துக்கு நெறி முறைகளைச் செய்து வருபவனே நீதிமான் என்னும் பேருக்கு நேரே உரியவனாகின்றான். அல்லாதவன் அநீதியாளனாய் அவலமடைகின்றான்.

அதி பாதகமாம் அது.

என்றது நீதிமான் கோதுடையனாய்த் தீது பதிந்திருந்தால் அநீதியான கொடிய பாதகங்கள் அங்கே விளைந்து விடும் ஆதலால் அவ் வினை விளைவை இங்ஙனம் விளக்கி நின்றது.

நெஞ்சம் புனிதமாய் நெறியோடு நின்று நீதியைச் செய்.

---

578. நீதி நிலையில் நிலவியுளோன் நெஞ்சிலருள்
நீதம் நடுநிலைமை நேராமல்—கோதுமிகக்
கொண்டிருப்பா னாகில் கொடுவிலங்கோர் மானுடமெய்
கொண்டிருப்ப தாமே கொடிது. (அ)

இ—ள்

நீதிமானாய் அமர்ந்திருப்பவனுடைய நெஞ்சில் தரும நீதியும் நடுவு நிலைமையும் நிறைந்திருக்க வேண்டும்; அங்ஙனமின்றிக் கோதுகள் பதிந்திருப்பின் அவன் ஒரு கொடிய காட்டு மிருகமே என்க.

இது நீதிமானது நிலைமை நீர்மைகளைக் கூறுகின்றது.

தேச ஆட்சிக்கு அநுகூலமாக் கருதி அமைக்கப்பட்டுள்ள வினையாளர்களே அதிகாரிகள் என விளங்கி நிற்கின்றனர். அவர் இனிய பண்புடையராயின் மனித சமுதாயத்துக்குப் பெரிதும் நன்மையாம். கொடியர் எனின் நெடிய துயரமாம்; குடிசனங்கள் அவரால் நிலைகுலைந்து வருந்துவர் ஆதலால் அவரது தலைமை உலகிற்குக் கொடிய புலையாய் முடிகின்றது.

அநியாயங்களையும் அவகேடுகளையும் அகற்றி நியாயங்களையும் நெறி முறைகளையும் நாட்டில் நாட்ட வுரிய தலைவர்கள் உள்ளே கோட்டமுடையராய்க் கொடுமை செய்ய நேர்ந்தால் அந்நாட்டு மக்கள் புலி கடுவாய்களைக் கண்ட புல்வாயினங்கள் போல் அஞ்சி அலமந்து அவலமிக அடைவர். நெஞ்சில் அமைதியில்லாமையால் அந் நாட்டு வாழ்வு நரக வாழ்வாய் அஞ்சும்படி நேரும்.

கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டில்
கடும்புலி வாழும் காடு நன்றே. (1)

சான்றோர் இல்லாத் தொல்பதி இருத்தலின்
தேன்தேர் குறவர் தேயம் நன்றே. (2)

(நறுந்தொகை)

நல்ல நாடு எது? நல்ல ஊர் எது? என்பதை இந்தப் பாட்டுகள் இரண்டும் முறையே காட்டியிருக்கின்றன. அதிகார ஆற்றல்களுடைய தலைவர் நேர்மையோடு நீர்மை சுரந்திருந்தபோது தான் அந்நாட்டு மக்கள் நெறியோடு நிம்மதியாய் வாழ முடியும்; கோட்டம் தோய்ந்து நின்றால் குடிசனங்களிடம் கொடுமை பாய்ந்து நிற்கும். பாயவே அவருடைய வாழ்வு எவ்வழியும் அபாயமாம். அரசு பிழை ஆயின் யாவும் பிழையாம்.

நாட்டுக்கு நீதி நெறிகளைச் செய்ய வுரியவன் நீதிபதி என நேர்ந்தான். அவனே தீது செய்ய மூண்டால் மாந்தர் வேதனையடைந்து வெருண்டு மருளுவர்.

கோது கொண்டிருப்பின் கோடு விலங்கு.

நீதிமான் கோது உடையனாயின் அவன் உருவத்தால் மனிதனாயிருப்பினும் கொடிய காட்டு மிருகமே என்று இது காட்டி நின்றது. கோது=குற்றம். நாட்டு மக்களுக்கு அச்சத்தையும் திகிலையும் ஊட்டி வருதலால் அந்த அதிகாரி பொல்லாத காட்டு மிருகம் என நின்றான்.

"As a roaring lion, and a ranging bear; so is a wicked ruler over the poor people." (Bible)

"எளிய சனங்களை ஆளுகிற அதிகாரி கொடியவன் ஆனால் உறுமுகிற சிங்கமும் உலாவுகிற கரடியும் போல் நெடிய திகில்களைச் செய்வான்" என சாலமன் என்னும் நீதிமான் இவ்வாறு கூறியிருக்கிறான்.

அருளும் நீதமும் நடுவு நிலைமையும் நீதிமானுக்கு உரிய நீர்மைகளாம். இந்த இனிய இயல்புகள் அவனிடம் இல்லையானால் கொடியவனாகி விடுகிறான். ஆகவே குடி கேடுகள் வேகமாய் விளைந்து விடுகின்றன.

"The hungry judges soon the sentence sign,
And wretches hang, that jurymen may dine." (Pope)

"பசியுள்ள நீதிபதிகள் தீர்ப்பில் விரைந்து கையெழுத்திடுகின்றனர்; பஞ்சாயத்தாருக்கு இரையாய் ஏழை மக்கள் தொங்கிச் சாகின்றனர்" என்னும் இது இங்கே அறிய வுரியது. நிலைகுலைந்த வேகத்தால் நிலையான விவேகம் ஒழிந்து போகிறது.

வெகுளி வெறுப்பு பொறாமை எரிச்சல் தப்பெண்ணம் முதலிய இந்தப் பொல்லாங்குகள் எந்த உள்ளத்தில் இல்லாமல் இனிமை படிந்துள்ளதோ அந்த மனிதனே நல்ல நீதிபதி ஆவன்.

எதையும் பொறுமையோடு அமைதியாய்க் கேட்டு யாரிடமும் நேர்மையாய் நீர்மை புரிந்திருப்பதே நீதிபதியின் சீர்மையாம். நீதிமான் எனத் தனக்கு அமைந்திருக்கும் பேரையும் சீரையும் பேணி ஒழுகி வரும் அளவே அவனைத் தரும தேவதை பேணி வருகிறது. தன் நிலைமையை நினைந்து பேணாமல் இழிந்து பிழை புரிய நேரின் அப்பொழுதே அவனைத் தருமம் வெறுத்து விலகி விடுகிறது. விலகவே அவன் பழி நிலையாளனாய் இழிவுறுகின்றான். இளிவு நேராமல் தெளிவு கொண்டிருப்பவன் விழுமியனாகின்றான். புனிதமுடையவனை மனித சமுதாயம் இனிது போற்றி எவ்வழியும் உவந்து புகழ்ந்து கொள்ளுகின்றது.

எதையும் பகுத்து உணர்ந்து யாண்டும் நேர்மையுடன் இருந்து வழக்குகளை வழுவாமல் முடிக்க வல்லவனையே நல்ல நீதிமான் என்று உலகம் சொல்லி வருகின்றது.

அறிவும் நீதியும் அமைந்திருக்கும் அளவே மனிதன் புனிதனாய் மாண்புற்று நிற்கிறான். அந்த அரிய தன்மைகளை இழந்து விடின் அவன் வெறியனாய் இழிந்து படுகிறான்.

நீதி வரம்போடு வாழ்ந்து வருபவர் நாட்டு மக்கள். அவ்வாறு நெறிமுறையோடு வாழாதவர் காட்டு மாக்கள் என்க.

"O judgment! thou art fled to brutish beasts,
And men have lost their reason!" (Julius Cæsar)

"ஓ நீதி முறையே! தங்கள் அறிவு நலங்களை மனிதர் இழந்திருத்தலால் நீ காட்டு மிருகங்களிடம் போய் விட்டாயோ?" என ரோமாபுரியிலிருந்த ஒரு நீதிமான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வாறு வயிறு எரிந்து கூறியிருக்கிறான்.

நீதியும் தருமமும் நிலவியிருக்கும் வரையும் மனிதன் தலைமையாய் உயர்ந்திருக்கிறான். அவை குன்றிய அளவு அவன் இருகால் மிருகமாய் இழிந்து நிற்கின்றான் என்றமையால் நீதியின் பெருமையும் அருமையும் அறியலாகும்.

சிறந்த பதவியை அடைந்திருக்கிற நீதிமான் தனது நிலைமை தலைமைகளை உணர்ந்து பேணி எவ்வழியும் செவ்வியனாய் ஒழுகி வரின் திவ்விய மகிமை பெருகி வரும். உரிமையை மருவி உயர்க.

---

579 உள்ளம் துலையா உறுநிறைகள் நேர்தூக்கிக்
கள்ளம் கரவுகள் கண்டறிந்து—எள்ளளவும்
கோடாமல் நீதிமுறை கூறுவோன் வானுலகம்
தேடாமல் தந்த திரு. (கூ)

இ—ள்

உற்ற முறையீடுகளைத் தன்னுடைய உள்ளம் ஆகிய தராசில் வைத்து நிறை தூக்கி நேரே நோக்கிக் கள்ளம் கரவு முதலிய குறைகள் யாதும் இல்லாமல் ஓர்ந்து தெளிந்து நேர்மையாகத் தரும நீதிகளை வழங்குகின்றவன் நாட்டுக்கு உயர்ந்த ஒரு தெய்வத் திரு என்பதாம்.

உலக மக்கள் பலவகை நிலையினர். யாவரும் வாசனை வயத்தராய் ஒழுகி வருகின்றனர். நல்ல நெறிகளில் இயல்பாகவே செல்லுபவர் நல்லவராய் நிலவுகின்றனர். தீய வழிகளில் திமிர்ந்து திரிபவர் தீயவராய்த் தெரிகின்றனர். பழகி வந்துள்ள வாசனைகளின்படியே பழக்க வழக்கங்கள் படிந்து வருதலால் மாந்தர் அவ்வாறே நடந்து வருகின்றார். காமம் குரோதம் அகங்காரம் இடம்பம் முதலிய பொல்லாத இயல்புகள் எல்லாரையும் பிணித்திருத்தலால் யாண்டும் கலகமும் குழப்பமும் அல்லலும் அவலமும் நீண்டு நிற்கின்றன. இவ்வாறான போராட்டங்கள் பொங்கி எழுந்தபொழுது அவற்றை எங்கும் நேர்மையாய் அடக்கியருள அதிகாரிகளை அரசன் நியமித்திருக்கிறான். அந்தப் பதவி நியமனங்களுள் நீதித் தலம் தலைமை நிலையில் உயர்ந்திருக்கிறது. புனிதமான அவ் வுயர் பதவியில் அமர்ந்து நீதி நலங்களை நெறிமுறையே புரிபவர் அதிசய மேதைகளாய்த் துதி செய்யப்

பெறுகின்ருர். நீதிமான் என்னும் பெயர் உயர்ந்த மகிமை யுடையது. சிறந்த நீர்மை தோய்ந்தது.

நீதியின் நிலையமாய் நிலவியிருந்தமையால் இராமனை நீதி மான் என மேலோரும் நூலோரும் உவந்து போற்றியுள்ளனர். இக் காலத்திலுள்ள அதிகாரிகளைப் பார்த்து இராம மூர்த்தி என்று உபசாரமாய்ச் சொல்லி வருவது நாட்டில் வழக்கமா யுள்ளது. தரும சீலனை உலகம் உரிமையாய்ப் போற்றுகின்றது.

தான் யாதும் வழுவாமல் நெறிமுறையே ஒழுகி வந்தமை யினலேதான் அப் பெருமான் தருமமூர்த்தி எனப் பெருமை மிகப் பெற்றுன். பேரின் நினைவு சீரின் விளைவாயுள்ளது.

தன் உள்ளம் திருந்தி யுள்ளவனே உலகத்தைத் திருத்த வல்லவனுய் ஒளி பெற்று நிற்கின்றுன். அறிவும் ஒழுக்கமும் ஒருங்கே நன்கு மருவிய பொழுது அங்கே அரிய அதிசய ஆற் றல் பெருகி எழுகின்றது. உள்ளம் திருந்தினவன் எதிரே உலகம் எளிதே திருந்தி வருகிறது.

உள்ளம் துலையா

என்றது நீதிபதியினுடைய நெஞ்சின் நிலை தெரிய வந்தது.

யாதொரு கோட்டமும் இல்லாமல் எவ்வழியும் செவ்வையா யிருந்து தன்பால் உற்ற வழக்குகளின் குணம் குற்றங்களைக் கூர்ந்து ஓர்ந்து உண்மையை உணர்த்தவுரிய நீதிமான் உள்ளத் திற்குத் துலை உவமையாய் வந்தது. துலை = தராசு. நெறியே நிறுத்து நிறையின் மெய்யான அளவை நேரே காட்ட வல்ல நிறைகோல் போல் முறை செய்யும் நீதிமான் இறைவன் அருளை எய்தி உயர்கின்றுன்.

"ஐயம் தீரப் பொருளை உணர்த்தலும்
மெய்ந்நடு நிலையும் மிகுநிறை கோற்கே." (நன்னூல்)

நிறைகோலின் இயல்பை இது துலக்கி யுள்ளது.

செங்கோல் செலுத்துபவர் நிறைகோல் போல் நேர்மையா யிருக்க வேண்டும் என்னும் இந் நீர்மை இங்கே கூர்மையாக ஓர்ந்து கொள்ள வுரியது. உள்ளச் செம்மையே நீதிபதிக்கு உயர்ந்த தன்மையாய் ஒளி சுரந்து எழில் புரிந்தருளுகின்றது.

உள்ளம் கோடிய அளவில் அந்த மனிதன் புல்லியனாய்ப் பீடிழந்து படுகிறான். அது கோடாதுள்ளவன் மேலோனாய் உயர்ந்து மேன்மை மிகப் பெறுகின்றான்.

"நெடுநுகத்துப் பகல் போல
நடுவு நின்ற நன்னெஞ்சினோர்." (பட்டினப் பாலை)

எனச் செம்மையான சான்றோர் நீர்மையை உருத்திரங்கண்ணனார் என்னும் சங்கப் புலவர் இங்ஙனம் குறித்திருக்கிறார்.

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி. (குறள், *118*)

மனக் கோட்டமின்றி யாண்டும் நேர்மையாய் நிற்கும் நீர்மையே மேலோர்க்கு அணி என நாயனார் இவ்வாறு வாய்மலர்ந்துள்ளார். இந்த அழகை இழந்திருப்பது அவலட்சணமாகிறது.

உயரிய உயிரணி உள்ளச் செம்மையே; அதனைப் பூண்டு கொள்; அஃது இல்லாமல் மணியணிகளை உடலில் தாங்கி வீணே பிலுக்கித் திரிவது நாணத் தக்கதாம். இவ் வுண்மை இங்கே காணத் தக்கது. அகத்தின் நேர்மை அற்புத அழகாய் நீதிமானைப் பொற்புறுத்துகிறது. நெறியும் நீதியும் எவ்வழியும் யாண்டும் பெரிய மகிமைகளை அருளுகின்றன.

கள்ளம் கரவுகள் கண்டு அறிந்து.

நீதிபதி கருதித் தெளிய உரிய உறுதிநிலைகளை இது உணர்த்தியுள்ளது. வழக்கில் நேர்ந்துள்ள வாதி பிரதிவாதிகளுடைய உரைகளை ஊன்றி உணர்ந்து உண்மை தெளிந்து நியாயம் வழங்க வேண்டியது நீதிமானுடைய கடமை ஆதலால் அதில் மடமை நேராமல் மதியூகியா யிருத்தல் வேண்டும். உரிய நியாயம் தவறினால் அது கொடிய அநியாயமாய் முடியும்; முடியவே நீதிபதி குடிகேடனாய் நெடிய பழி யடைய நேர்கின்றான்.

பொய்யுடை ஒருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே. (*1*)

மெய்யுடை ஒருவன் சொலமாட் டாமையால்
பொய்போ லும்மே பொய்போ லும்மே. (2)

இருவர்தம் சொல்லையும் எழுதரம் கேட்டே
இருவரும் பொருந்த உரையார் ஆயின்

மனுமுறை நெறியின் வழக்கிழந் தவர்தாம்
மனமுற மறுகிநின்று அழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழி ஈர்வதோர் வாள் ஆகும்மே. (3)

(நறுந்தொகை)

நீதிபதிகள் உணர்ந்து ஒழுக வேண்டிய போதனைகளை அதிவீரராம பாண்டியன் என்னும் மன்னன் இன்னவாறு போதித்திருக்கிறான். தனக்கு உண்மையான உரிமையை வழக்காளி இழந்துவிடின் அவன் வயிறு எரிந்து அழுதுபோவன்; போகவே அந்தப் பாவம் தீர்ப்புக் கூறிய அதிகாரியைப் பிடித்து அவனுடைய வழிமுறைக்கும் அழிகேடுகளைச் செய்கின்றது.

"வழக்குடையான் நிற்ப வலியானைக் கூடி
வழக்கை அழிவழக்குச் செய்தோன்---வழக்கிழந்தோன்
சுற்றமும் தானும் தொடர்ந்தழுத கண்ணீரால்
எச்சம் அறும் என்றால் அறு." (ஔவையார்)

மனக் கோட்டமுடையனாய் வழக்கை வழுப்படுத்தின் அவனது வமிச வழி அழியநேரும் என ஔவையார் இவ்வாறு கூறியிருக்கிறார். நியாயத் தீர்ப்பு பழுதுபடின் அதனால் விளையும் அழிவு நிலையை இது விழி தெரிய விளக்கியது.

உள்ளம் கோடாமல் எள் அளவும் மாறாமல் யாண்டும் நேர்மையாய் நீதிமுறைகளைச் செய்து வருபவன் ஆதிபகவன் அருள் பெற்று அரிய உயர் நிலையில் ஒளிசெய்து மிளிர்கிறான்.

நீதிபதி யாயுலகில் நிலையுயர்ந்த
பதவியினில் நேர்ந்தமர்ந் தோன்
வாதிகளின் முறைகளையும் வழக்குகளின்
நிலைகளையும் வகையாய் ஓர்ந்து
தீதுபதி யாதவகை எவ்வழியும்
செவ்வையாய்த் தெளிந்து நோக்கி
ஓதிவரு முறைபுரியின் உயர்நீதி
பதியாகி ஒளிர்வா னன்றே.

மருவிய பெயருக்கு மாசு நேராதவாறு தேசு புரிந்து ஒழுகிவரின் ஈசன் அருளை அவன் இனிதே அடைந்து கொள்ளுகிறான்.

தலைமையான பதவியைத் தனக்குத் தந்திருக்கிற கரும தேவதையின் உள்ளம் உவந்து கொள்ள உரிமையோடு நீதி

முறைகளைச் செய்கின்ற அந்த நீதிபதி எவ்வழியும் தருமதேவதையின் திருவருளை மருவி மகிழ்கின்றான்.

---

580. உரிய கருமம் உரிமையுடன் செய்யின்
அரிய தருமவான் ஆகிப்—பெரிய
மனிதனென வையம் மதித்து வணங்கப்
புனிதனாய் நிற்பன் பொலிந்து. (ய)

இ—ள்

தனக்கு உரிய கருமங்களை நெறிமுறையே நின்று உரிமையோடு செய்யின் அவன் அரிய தருமவான் ஆகின்றான்; ஆகவே பெரிய மகான் என உலகம் அவனை மதித்து வணங்க உயர்ந்து விளங்குவன் என்பதாம்.

இது கருமமே தருமம் என்கின்றது.

இந்த உலகில் பிறந்துள்ள எந்த மனிதனும் எவ்வழியும் தொழில் செய்யும் கடமையை இயல்பான உடைமையாய் மருவி வந்திருக்கிறான். செயல், வினை, கருமம் என்னும் மொழிகள் மனிதனால் செய்யப் படுவன என அவற்றின் நிலைகளை நேரே விளக்கி நிற்கின்றன. கருமங்களைக் கருதிச் செய்யும் அளவே மனிதன் உறுதி நலங்களை அடைந்து வருகிறான். செயலின் அளவே உயர்வுகள் வருதலால் அதன் இயல்புகளின் நிலைகளை இனிது தெரியலாகும்.

உரிய கருமம் என்றது தான் உரிமையாகச் செய்ய நேர்ந்துள்ள வினைகளை. மனிதனுடைய நிலைமைகளுக்குத் தக்கபடி தொழில்கள் அமைந்திருக்கின்றன. எந்த நிலைமையிலும் எந்த மனிதனும் எந்தக் காரியத்தையும் செய்ய நேர்ந்திருக்கிறான். கருமங்களைச் செய்யாமல் அயர்ந்திருப்பின் அவை கடினமான கடன்களாய் வளர்ந்து நிற்கின்றன.

கருதி உழைத்தவன் கண்ணியமாய்ப் பிழைக்கின்றான்; அங்ஙனம் உழையாதவன் பிழையா யிழிந்து பேதையாயுழலுகின்றான். கருமத்தைக் கையிழந்து நிற்பவன் தருமத்தையே இழந்தவனாகின்றான்; ஆகவே அவனுடைய வாழ்வு பாவச் சூழ்வாய் இழிவடைந்து பழி படுகின்றது.

செய்கின்ற கருமங்களிலிருந்தே பொருள் புகழ்கள் எல்லாம் உளவாகின்றன. கை செய்கின்றவன் மெய் செய்கின்ருன் என்னும் பழமொழி வினையாளனுடைய மேன்மைகளை விழி தெரிய விளக்கியுள்ளது.

அரிய பெரிய காரியங்களை ஆற்றி வருபவன் உலகம் போற்ற ஒளி சிறந்து நிற்கிருன்.

காலம் விரைந்து கழிந்து கொண்டே போகின்றது; அவ்வாறு கழிகிற ஒவ்வொரு கணமும் பயன் படும்படி எவன் செய்து வருகிருனே அவன் காலனை வென்றவனுகிருன். உரிமையாக் கிடைத்துள்ள பொழுதை இனிமையாகப் பயன் படுத்தினவன் பெருமை மிகப் பெறுகின்ருன்.

நல்ல கருமங்களை நாடிச் செய்கின்றவன் நலம் பல காண்கின்ருன் எனக் கருமக் காட்சியைக் குறித்து வன வாச காலத்தில் தருமருக்கு ஒரு முனிவர் போதித்திருக்கிருர்.

வினையாளன் வெற்றியாளன்.

என்னும் பழமொழி காரிய கருத்தாவின் சீரிய நிலைகளைத் தெளிவுறுத்தி யுள்ளது. விதி முறையான செயல்கள் அதிசய மகிமைகளை அருளி வருகின்றன.

தொழிலாளிகளால் உலகம் ஒளி பெற்று வருதலால் அவர் இயற்கை அன்னையின் எழில் மக்களாய்ச் சிறந்து எவ்வழியும் உயர்ந்த பலன்களை அடைந்து கொள்ளுகின்றனர்.

முயற்சி யுடையவனுக்குத் தானுகவே உயர்ச்சி யுண்டாகிறது. உழைக்கின்றவனே உண்ண வுரியவன் என்று கண்ணன் உரையாடி யுள்ளது ஈண்டு எண்ண வுரியது.

வேலை செய்தவன் கூலி பெறுகின்ருன்.

தன் கடமையை எவன் கருதிச் செய்கின்ருனே அவனை நாடி உரிமைகள் ஓடி வருகின்றன. கரும உணர்ச்சியுள் உறுதியும் ஊக்கமும் பெருகி அரிய பல மருமங்கள் மருவியிருக்கின்றன.

"Men who their duties know,
But know their rights." (Jones)

"கடமைகளை அறிகின்றவர் தங்கள் உரிமைகளையும் உணர்கின்றார்" என வில்லியம் ஜோன்ஸ் என்பவர் இவ்வாறு கூறியுள்ளார். வினையின் விளைவுகள் அனுபவங்களாய் வருகின்றன.

உரிமையுணர்ச்சி உள்ளத்தில் உறுதி நலங்களை ஊட்டி யருளுகின்றது. செவ்விய வினைகளைச் செய்தவன் திவ்விய நிலைகளை எய்தி மகிழ்கின்றான். வித்திலிருந்து விளைவுதோன்றுதல் போல் வினையிலிருந்து பலன்கள் தோன்றுகின்றன.

சீவர்களை ஊட்டி ஆட்டி வருதலால் கருமம் தெய்வீக ஆற்றலுடையதாய்ப் போற்ற நின்றது. வினைகளின் மூலமாகவே இறைவன் எல்லாவற்றையும் இயக்கி வருகிறான்.

"கர்ம ப்ரஹ்மோத்பவம் வித்தி" (கீதை, 3-15)

"கருமம் பிரமத்திலிருந்து பிறந்தது என அறிந்துகொள்" என்று கண்ணன் அருச்சுனனுக்கு இன்னவாறு போதித்திருக்கிறான். சீவன் செய்வது தேவன் தந்தது என்பது தெரிய வந்தது.

கருமத்தைச் செய்கிறவன் தெய்வத்தின் பிரியத்தைப் பெறுகிறான் என்பதை இதனால் அறிந்து கொள்ளுகிறோம்.

அரிய தருமவான் ஆகி நிற்பன்.

என்றது உரிய கருமங்களை உணர்ந்து செய்பவன் அடைந்து கொள்ளும் உயர்ந்த நிலைமை உணர வந்தது. தன் செயல் இயல்களால் அயல்கள் நலமடைய ஒழுகி வருபவன் விழுமிய நிலைகளில் விளங்கி நிற்கின்றான்.

கரும பூமியாகிய இவ்வுலகில் பிறந்தவன் தனக்கு உரிய கருமங்களைச் செய்த போதுதான் கடன்கள் தீர்ந்தவனாய் உயர்ந்து திகழ்கிறான். உழையாமல் உண்பது பிழையாம் எனச் சவுனக முனிவர் ஓர் அரசனை நோக்கிச் சொன்னது உழைப்பின் தன்மையை யாவரும் அறிய உணர்த்தி யுள்ளது.

உழைக்கும் ஒருவனே உண்ண வுரியன்
பிழைக்கும் அவனே பெரியன்---இழைக்கின்ற
நல்ல பலன்களெலாம் நாடி அவனிடமே
ஒல்லை அடையும் உவந்து.

வினையாளனது வியனிலையை இது விளக்கி யுள்ளது.

உரிய கருமத்தை ஓர்ந்து புரிகிறவன் பெரிய மனிதனாய்த்

தேர்ந்து வருகிருன். உழைப்பதே தன் கடமை என உணர்ந்து கொண்டவன் உயர்ந்து விளங்குகிருன்.

அதிகார பதவியை அடைந்தவன் எவ்வழியும் விதிமுறை ஒழுகி யாவருக்கும் இதம் புரிந்து வரின் அவனைத் தேவனுக மதித்து வையம் வாழ்த்திவரும் ஆதலால் அவ் வரவு நிலையை உறவாக அவன் உரிமை செய்து கொள்ள வேண்டும்.

பெற்ற பதவியைப் பேணி ஒழுகிவரின்
உற்ற பிறவி ஒழியுமே---பெற்றம்
உடையான் பதவி உரிமையாய் உன்னை
அடையும் அதனை அறி.

தன் கடமையைக் கருதி யுணர்ந்து புனிதமாகச் செய்து முடித்தவன் இனிய கதியை எளிதே அடைகிருன் என்னும் இது ஈண்டு உணர வுரியது. பெற்றம் = இடபம். அதனை வாகனமா வுடையவன் சிவன் என்க. தன் கருமத்தை உரிமையோடு ஓர்ந்து தகுதியாகச் செய்கின்றவன் தவம் செய்தவனுகின்ருன்; ஆகவே அவன் சிவகதியை மேவுகின்ருன்.

கருமம் கருதிப் புரியின் அதுவே
தருமம் தவமும் தரும்.

---

### இவ் அதிகாரத்தின் தொகைக் குறிப்பு.

பதவி என்பது தலைமை நிலையுடையது.
வினை புரிய வாய்ந்தது.
விதிமுறை தோய்ந்தது.
சேவை செய்ய நேர்ந்தது.
கடமை மிக ஊர்ந்தது.
உரிய பணி வழுவின் பெரியபிழை விளையும்.
கரும நீதி தரும நிலையம்.
நீதிமான் நிலைதவறின் பாதகமாகும்.
செவ்விய நீதிமுறை திவ்விய திரு.
புனித வினையாளன் புண்ணியன் ஆகிருன்.

ருஅ வது பதவி முற்றிற்று.

# ஐம்பத்தொன்பதாம் அதிகாரம்

## கல்விச் செருக்கு.

அஃதாவது கல்வியறிவில் சிறந்தவன் என்று தன்னை வியந்து மனிதன் தருக்கி நிற்றல். உயர்ந்த நிலைமையைச் சிதைத்து இழிந்த புலையில் தள்ளுகின்ற இவ்வுள்ளப் புன்மையை ஒழித்தொழுக வேண்டும் என உணர்த்துகின்றமையால் பதவியின் பின் இது வைக்கப்பட்டது. பதவிச்செருக்கும்படிப்புச்சிந்தனைக்கு வந்தன.

581. இறைவன் புதல்வன்நீ எவ்வளவோ கல்வி
பெறுதற் குரிய பெரியன்—முறையிதனைக்
கண்ணூன்றி நோக்காமல் கற்றசில கொண்டுகளி
விண்ணூன்றி நிற்கின்றாய் வீண். (க)

இ—ள்

நீ இறைவனுடைய அருமை மகன்; எவ்வளவோ கல்வியறிவுகளைப்பெறுதற்குரிய பெரியவன்; இந்த உண்மையை உணர்ந்து பாராமல் சிறிதுகற்றதை நினைந்து வீணே பெருஞ்செருக்கு மண்டிநிற்கிறாய்; அந்நிலை இழிவான பிழைபாடுடையது என்க.

இது நெஞ்சம் தெளிய நிலைமையை உணர்த்துகின்றது.

உலகில் தோன்றியுள்ள சீவகோடிகள் அளவிடலரியன. எல்லையில்லாத அந்த உயிரினங்களுள் மனிதஇனம் உயர்நிலையில் தலைசிறந்து நிற்கிறது. பலவகை இயல்புகள் நன்கு படிந்திருத்தலால் இவ்வுயர்வுகள் பொங்கி எழுந்துள்ளன. உரிமைகளைச் சரியாகப் பயன்படுத்தாமையால் அவை வறிதே கழிந்து ஒழிந்து போகின்றன. நாடிச் செய்யாத காரியம் பேடிகை வாள் போல் பீடிழந்து படுகின்றது. தன் கடமைகளையும் நிலைமைகளையும் உணர்ந்து ஒழுகுகின்றவன் உறுதி நலங்களை அடைந்து கொள்ளுகின்றான். அவ்வாறு உணராதவன் உயர்ந்த பலன்களை அடையாமல்இழிந்துபடுகிறான். உண்மை யுணர்வு நன்மை தருகிறது.

எதையும் நுண்ணிதாக எண்ணியுணர்ந்து கொள்ளும் கண்ணியமுடைய மனிதன் கதிநிலையை அறியாமல் மதிமருண்டு திரிவது விதிவிளைவாயுள்ளது. உண்மையை ஊன்றி உணராமையால்

புன்மைகள் சூழ்ந்து அவனைப்புலைப்படுத்திவிடுகின்றன. விரிந்த நெஞ்சமும் பரந்த நோக்கமும் மனிதனை உயர்ந்தவனாக்குகின்றன; சின்ன எண்ணங்கள் சிறுமைப்படுத்துகின்றன. நினைவின் வழியே நிலைமைகள் எழுகின்றன.

கல்வியில் உயர்ந்தவன், செல்வத்தில் சிறந்தவன், அதிகாரம் ஆற்றல்களுடையவன் என இன்னவாறான மனத் திமிரோடு தன்னைப் பெரிதாக எண்ணித் தலைநிமிர்ந்து திரிவது பிழைபாடுகளாதலால் அந்த இழி நிலைகள் விழி தெரிய வந்தன.

கற்ற சில கொண்டு களி ஊன்றி நிற்கின்றாய்!

என்றது உள்ளக்களிப்பின் உளவை நோக்கி வந்தது.

நல்ல நிலைகளில் மலர்ந்து எழுகின்ற உள்ளக் கிளர்ச்சிகள் உவகை மகிழ்ச்சி என்று சொல்லப்படுகின்றன. களிப்பு என்பது அவற்றின் வேறுபட்டது. புல்லிய வழிகளில் பொருந்தி வருதலால் இது புன்மையாய் நின்றது. தனது கல்வியறிவைப் பெரிதாக எண்ணி உள்ளம் தருக்கி ஒருவன் பிலுக்கி நிற்பது மிகவும் அறியாமையாய் அவலமடைகின்றது.

உண்மையான அறிவு விரிந்த காட்சி யுடையது ஆதலால் அது அடக்கமாய் அமைந்துள்ளது. குறுகிய நோக்கமாய்ச் சிறுமை அடைந்துள்ள அறிவு பெருமையாய்ப் பிலுக்கி நிற்கின்றது. பிழைபாடான விளைவு பழியோடு வருகிறது.

அடக்கம் பெருந்தன்மையாய் மகிமை பெறுகின்றது
செருக்கு சின்னத்தனமாய்ச் சிறுமை யுறுகின்றது.

அமைதியாய் அடங்கியுள்ளவன் பெரிய மனிதனாய் அரிய மேன்மைகளை அடைகிறான். துடுக்காய்ச் செருக்கித்திரிபவன் சின்னமனிதனாய்ச் சீரழிந்து இழிகின்றான். உள்ளத்தில் ஊனம் படிந்த பொழுது வெளியே ஈனங்கள் படிகின்றன. இளிவுகளை விளைத்துக் களி மிகுத்துத் திரிவது பழி நிலையமான முழு மடமையாம். பெருமை விளைவில் பிழையாய்ச் சிறுமை விளைகிறது.

நிலைமைகளைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ளாமையால் மனிதன் தாழ்ந்து போகிறான். தன்னை உண்மையாக உணர்ந்து கொண்டவன் உயர்ந்த நன்மைகளை விரைந்து காண்கிறான்.

இறைவன் புதல்வன் நீ எவ்வளவோ கல்வி
பெறுதற்கு உரிய பெரியன்.

மனிதன் உரிமையோடு உணர்ந்து கொள்ளவேண்டிய உண்மையை இது உணர்த்தியுள்ளது. கடவுளுடைய பிள்ளை என்று தன்னை மனிதன் தெளிந்து கொள்ளின், எவ்வளவு மகிமைகளை அவன் அடைந்து கொள்ளுவான்! உண்மை நிலையை உணர்ந்து கொள்ளாமையால் புன்மைகளில் இழிந்து புலையாடித் திரிகின்றான். உயர் குலத் தலைமையை மறந்து போய் இழிபுல நிலைகளில் அழுந்தி உழலுவது பழிதுயரங்களாய்ப் படிந்து வருகிறது. விழுமிய உண்மைகளை விழிதிறந்து காணாமையால் மனிதன் அழிதுயரங்களில் இழிந்து அலமருகின்றான்.

இறைவன் எல்லாம் அறிய வல்லவன்; அவனுடைய புதல்வனை நீயும் யாவும் அறிய வுரியவன். அரிய பெரிய அந்த நிலையிலுள்ள நீ சிறிது கற்றதைப் பெரிதாக நினைந்து செருக்குவது எவ்வளவு பேதைமை? எத்துணை இழிவு? உய்த்துணருக.

பரமான்மா வாகிய அந்தப் பெருஞ் சோதியிலிருந்தே இந்தச் சீவான்மா வெளிவந்துள்ளது. இவ்வுண்மையை விழி திறந்து நோக்கி விழுமிய பண்புடன் வாழுக. பெரிய இடத்துப் பிள்ளை பெரிய தன்மையை மருவுக. சிறிய புன்மையை ஒருவுக.

உள்ளச் செருக்கு எள்ளலை விளைத்து இழிநிலையில் தள்ளி விடும்; அந்தப் பழிநிலை படியாமல் பாது காத்து ஒழுகுக.

---

582. அறிவை வளர்க்கும் அருங்கல்வி கற்றும்
செறிவின்றி உள்ளம் செருக்கல்—நெறிநின்று
காணுகின்ற கண்பெற்றும் காட்சிநலம் துய்க்காமல்
வீணே கெடுத்த விதம். (உ)

இ—ள்

நல்ல அறிவை வளர்த்தருளுகின்ற அரிய கல்வியைக் கற்றும் அடக்கமின்றி அகம் செருக்கி நிற்றல் காட்சி யின்பங்களைக் கண்டு மகிழ உரிய கண்களை வீணே கெடுத்துக் குருடாக்கிக் கொண்டது போல் கொடிய துயரமாம் என்க.

இது உள்விழியின் ஒளி நிலையை உணர்த்துகிறது.

இயல்பாகவே மனிதன் அறிவுடையவன். எதையும் பகுத்துப்பார்க்கிருன்; தொகுத்து நோக்குகிருன். முன்னும் பின்னும் எண்ணி அறியும் திறம் மிருகங்களுக்கு இல்லை; மனிதனுக்கு உண்டு. இந்த மனவுணர்விஞலேதான் மனிதன் மாண்பு அடைந்துள்ளான். தன்னை மகிமைப் படுத்தியுள்ள இயற்கை அறிவைக் கல்வியால் விருத்தி செய்து கொண்டவன் உயர்ந்த மதிமாஞய்ச் சிறந்து விளங்குகிருன். கல்லாத அறிவு புல்லிதாய் இழிந்து படுகிறது; ஆகவே அதனையுடையவன் புல்லியஞய்ப் புன்மையுறுகின்ருன். கலை தோய்ந்த மதி கதி தோய்ந்து மிளிர்கிறது.

உரிய அறிவை வளர்த்து அரிய மதிப்புகளை விளைத்துப் பெரிய இன்பங்களை நல்கி வருதலால் கல்வி ஆருயிர்க்கு அமுதம் என வந்தது. உயிர் அமிர்து உயர் பேரின்பமாய்ச் சுவை சுரந்துள்ளது.

"அருள்நிறைந்து அமைந்த கல்வியர் உளம் எனத்
தேக்கிய தேனுடன் இருல்மதி கிடக்கும்." (கல்லாடம்)

நல்ல கல்விமான்களுடைய உள்ளத்தைக் கல்லாடர் இவ்வாறு காட்டியிருக்கிருர். இனிய தேன் நிறைந்த மதுக்குடம் போல் அரிய கல்வியாளர் மனம் கருணைசுரந்து இருக்கும் என்றதனுல் கல்வியின் பயனும் நயனும் காணலாகும்.

அறிவை வளர்க்கும் அருங்கல்வி

என்றது அறிவுக்கும் கல்விக்கும் உள்ள உறவுரிமையை ஓர்ந்து உணர்ந்து கொள்ள வந்தது. உடல் உணவால் உரம் பெற்று வருதல் போல் அறிவு கல்வியால் வளம் பெற்று வருகிறது. ஊன உடலை வளர்க்கும் உணவினும் ஞான உடலை வளர்க்கும் கல்வி மனிதனுக்கு மிகவும் அவசியமானது. அதனை இழந்து இருப்பவன் இருகால் மிருகமாய்த் தளர்ந்து நிற்கின்ருன். கலை நிலை தலை நிலையாய்த் தழைத்து நிற்கிறது; கல்லாமை பொல்லாமை யாய்ப் புன்மையுறுகின்றது.

யாண்டும் அதிசய மேன்மைகளை அருளிவருகிற கல்வியை அடைந்தும் அதனை நல்லவகையில் பயன்படுத்தாமல் மோசம் போவது நீசமாகின்றது.

உள்ளத்திற்கு அமைதியையும் அறிவுக்குத் தெளிவையும் உறுதியாக உதவி வருவதே கல்வியாம். அரியபல அறிவின் பங்களை இனிமையாக அனுபவிக்கவுரிய கல்வியைச் செருக்கு வறிதே பாழாக்கி விடுகின்றது; விடவே அச்செருக்கன் வீண னாய் இழிந்துபடுகின்றான்.

செருக்கு என்னும் சொல் அகங்காரம், ஆணவம், மமதை, இறுமாப்பு, இடம்பம், களிப்பு முதலிய இழி நிலைகளைக் குறித்து வருதலால் அதன் பழி நிலையும் பாவமும் அறியலாகும்.

உயர் நலங்களையெல்லாம் ஒருங்கே ஒழித்து எவ்வழியும் துயரங்களை விளைத்து நிற்றலால் செருக்கு ஒரு கொடிய தீமை என மேலோர் முடிவு செய்துள்ளனர். இந்த இழி தீமை இல் லாதவரே விழுமிய நல்லோராய் விளங்கி நிற்கின்றனர்.

செறிவு = அடக்கம், நிறைவு.

சிறந்த அறிவுக்கு அடையாளம் நிறைந்த அடக்கம். உள் ளம் நெறியோடு அடங்கிய பொழுது அங்கே அதிசய மேன் மைகள் வெள்ளமாய் விரிந்து நிறைந்து நிற்கின்றன.

அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். (குறள், 121)

அடக்கம் உடையவன் தேவனாய் உயர்கின்றான்; அஃது இல்லாதவன் பாவியாய் நரகத்தை அடைகின்றான் என்னும் இது ஈண்டு எண்ணி யுணரவுரியது. அடக்கத்தின் பெருமையும் அடங்காமையின் சிறுமையும் இதனால் நன்கு தெரிய வந்தன.

"கற்றறிவு குலமேன்மை கருணைபெரும்
புகழ்செல்வம் கைம்மாறு எண்ணாது
உற்றுதவு கொடை சீர்மை ஒழுக்கம்அருந்
தவம் நியமம் உறவின் கேண்மை
மற்றெதிரி லாத்திண்மை வாய்மைமிகுந்
தூய்மைகுணம் வனப்பு யாவும்
பெற்றிடினும் அடக்கமிலாப் பெருமிதத்தால்
அத்தனைக்கும் பிழை யுண்டாமால்."

(மெய்ஞ்ஞான விளக்கம்)

அடக்கமின்றிச் செருக்குவதால் விளையும் அழி கேடுகளை இது விழிதெரிய விளக்கி யுள்ளது. செருக்கு உள்ளம் புகின்

அரிய பல நன்மைகள் அழிந்து போம் என்றதனால் அதன் இழி தீமையை அறிந்து கொள்ளலாம்.

ஒளி அமைந்த கண்ணால் உலகக் காட்சிகளை நோக்கி உவகை யுறாமல் அதனைக் குருடாக்கிக் கண்ணிழந்த கபோதியாய் இழிந்து கிடப்பது எவ்வளவு துயரம்! கல்வியறிவால் அரிய பல உணர்வின்பங்களை அனுபவியாமல் வீணே செருக்கி விளிதல் விழியைப் பழுதுபடுத்திய மூழுமூடம் போல் அவ்வளவு துன்பமாம். ஆணவத் திமிர்கள் அழிவுகளையே தருகின்றன. செருக்கு பழிதுயரங்களை விளைக்கும்; அதனை ஒழித்து ஒழுக.

---

583. கல்வி கடல்போல் கரைகாண் பரியதுன்
புல்லறிவில் ஓர்துளியே பொத்தியுள்ளாய்—எல்லையிதை
ஓர்ந்து தெளியாமல் உள்ளம் செருக்குதல்
ஆர்ந்த மடமை அறி. (௩)

இ—ள்

கல்வி கடல்போல் எல்லையின்றி யுள்ளது; உனது புல்லிய அறிவின் அளவால் அதிலிருந்து ஒரு சிறிய துளியை பருகியுள்ளாய்; இந்த உண்மை நிலையை உணராமல் நீ உள்ளம் செருக்குவது பெரிய மடமையாம் என்க.

கலைகளின் நிலைகள் அளவிடலரியன; அலைகடலினும் அவை விரிவுமிக வுடையன. பல்லாயிரம் ஆண்டுகளாய்த் தொடர்ந்து வருகிற மேலோர்களுடைய எண்ணங்களே எண்ணரிய கலைகளாய் நீண்டு நிற்கின்றன. அந் நிலைகளை நினைந்து உணர்ந்தவர் அதிசயம் மீதூர்ந்து துதி செய்துள்ளனர்.

எல்லை யில்லாத கல்விப் பரப்பையும் அதில் மனிதன் கற்றுள்ளதையும் கருதி யுணரின் பெரிதும் நாணுவன். உண்மையை யுணராமையால் புன்மை மீதூர்ந்து புலையாய் இழிந்து படுகின்றான்.

இலக்கண இலக்கியங்களையும் பல இதிகாச புராணங்களையும் நன்கு கற்ற பண்டிதர் ஒருவரை ஒருநாள் ஒளவையார் கண்டார். உரையாட நேர்ந்தார். பலகலைகளையும் படித்திருப்

பதாகப் பண்டிதர் மிடுக்கோடு தலை நிமிர்ந்து பேசினார். அவரது உள்ளச் செருக்கை நோக்கிக் கிழவி மெல்லச் சிரித்தாள். பின்பு தன் கையில் கொஞ்சம் மண்ணை அள்ளி மூடிக்கொண்டு "இது என்னது?" என்றாள். அவன் மண் என்றான். இதனை நீ எண் என்று கிழவி கையை விரித்தாள்: "நீ கற்றது கைம் மண்அளவு; கல்லாதது உலகுஅளவு" எனக் கல்வியின் நிலைமையை இங்ஙனம் சுட்டிக் காட்டினாள். பாட்டி கூறிய இந்த உரையைக் கேட்டதும் அந்தப் பண்டிதர் பரிந்து நாணினார்; பணிந்து போயினார்.

அறியாமையால் மனிதன் அகம் செருக்கி வெறியனாய்த் திரிகிறான்; அறிந்த போது அடங்கி அமைதி யுறுகிறான்.

அளவிடலரிய படி கடலில் நீர் நிறைந்துள்ளது; சின்னக் கிண்ணத்தைக் கொண்டு அதில் ஒருவன் தண்ணீரை எடுத்துக் கொள்ளுகிறான்; அந்தச் சிறு பாத்திரம் நிறைந்து விடுகிறது; அதனால் கடல் முழுவதும் அதில் அடங்கி விட்டது என்று எண்ணுவானா? எவனும் எண்ணமாட்டான். அது போல் கல்வியும் எல்லையின்றிக் கடல்போல் விரிந்துள்ளது. தன் அறிவுக்குத் தக்கபடி மனிதன் சிறிது படித்துக் கொள்ளுகிறான்; அந்தச் சிறியபடிப்பைக் கொண்டு உரிய வாழ்வை இனிமையாக நடத்திவரின் அவன் நலம் பல காண்கின்றான். தன் கல்வியை அங்ஙனம் பயன் படுத்தாமல் வீணே செருக்கி நின்றால் இளிக்கப் படுகின்றான்.

உன் புல்லறிவில் ஓர் துளியே பொத்தியுள்ளாய்!

மனிதனது கல்வி நிலையை இது உள்ளி உணரவந்தது.

நீ படித்துள்ளது சிறிய ஒரு துளியே; படியாது இருப்பது கடலினும் பெரிதே என்றது தன் கல்வி நிலையைக் கருதித்தெளிய.

துளி அளவு படித்துக் கொண்டு கடல் அளவு செருக்குவது கழிமடமையாம். செருக்கு எவ்வழியும் சிறுமைப் படுத்திச் சீரழித்து விடும் ஆதலால் அதனையுடையவர் யாண்டும் அவமானமாய் அவலமடைகின்றனர்.

கடலே அனையம்யாம் கல்வியால் என்னும்
அடலே றனையசெருக் காழ்த்தி---விடலே
முனிக்கரசு கையால் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும். (நன்னெறி)

கல்வியைக் கடல்போல் முழுவதும் படித்தாலும் உள்ளம் செருக்கலாகாது; செருக்கினல் சீரழிவு நேரும் எனச் சிவப்பிர காசர் இதில் ஓரறிவு போதித்திருக்கிருர். கலைக் கடலான அகத்தியமுனிவர் செருக்கின்றியிருந்தமையால் அவர் எதிரே அலைகடலும் நிலை குலைந்து அடங்கியது.

செருக்கு மனிதனைச் சிறுமைப் படுத்துகிறது; செருக்கின்மை பெருமைப் படுத்திப் பெரிய மகானுக்கி விடுகிறது.

முற்றும் உணர்ந்தவர் இல்லை முழுவதூஉம்
கற்றனம் என்று களியற்க---சிற்றுளியால்
கல்லும் தகரும் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தினல். (நீதிநெறிவிளக்கம்)

இவ்வுலகில் எல்லாம் தெரிந்தவர் யாரும் இல்லை; யாவும் கற்றுள்ளோம் என்று நீ உள்ளம் செருக்காதே; செருக்கினல் தலை தகர்ந்து அழிந்து படுவாய் எனக் குமரகுருபரர் இங்ஙனம் கூறியிருக்கிருர். கல்வியில் கடல் என நின்றவரும் செருக்குறின் அழிவர் என்பதை முன்னம் அறிந்தோம்: இதில் மலையையாரும் அதனல் மடிவர் என்பதை உணர்ந்து கொள்ளுகிறேம்.

பெரிய பண்டிதன் என்று வீணே கருவம் கொண்டு திரியாதே;சிறிய ஒருவன் அறிந்துள்ளதையும் நீ அறியாதவனுய் அவன் எதிரே அவமானம் அடைய நேர்வாய். தன் நிலைமையை உணர்ந்து அடங்கியிருப்பது என்றும் நலமாம்; அடங்காமல் செருக்குதல் யாண்டும் அவலமாம்

பலகற்றேம் யாம்என்று தற்புகழ வேண்டா;
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்;
சிலகற்ருர் கண்ணும உளவாம் பலகற்ருர்க்கு
அச்சாணி அன்னதோர் சொல். (அறநெறிச்சாரம்)

அதிகம் படித்திருக்கிறேம் என்று யாதும் செருக்காதே என இது அறிவு போதித்துள்ளது. இதில் குறித்திருக்கும் உவமை நிலையை ஓர்ந்து பொருள் நலனைக் கூர்ந்து உணர்ந்து கொள்க.

செருக்குதல் மடமை என்றது செருக்காமையின் நிலைமை தெரியவந்தது. நல்ல அறிவு அடக்கத்தை அருளுகின்றது; அத

ஞல் உயர்வும் இன்பமும் ஓங்கி வருகின்றன. பொல்லாத செருக்கு அல்லலையே விளைத்தலால் அதனை ஒழித்து ஒழுகுதல் எவ்வழியும் நல்லது. அடங்கிய பான்மை அதிசய மேன்மை.

---

584. எண்ணரிய பன்மொழிகள் இஞ்ஞாலத் துள்ளன்வுன்
கண்ணிலுறும் ஓர்மொழியே கற்றுள்ளாய்—திண்ணமுடன்
அவ்வொன்றும் நன்கு அறியகில்லாய் நீசெருக்கல்
எவ்வண்ணம் சற்றே இசை. (ச)

இ—ள்

அளவிடலரிய மொழிகள் இவ்வுலகில் பரவியுள்ளன; உன் விழிஎதிரே தோன்றிய ஒரு மொழியையே நீ படித்திருக்கிருய்; அதையும் தெளிவாக அறிந்து கொள்ளவில்லை; அவ்வாறிருக்க நீ செருக்குவது எவ்வாறு? இதனை உணர்ந்து சொல் என்பதாம்.

இது செருக்கனை நெருக்கிச் சிந்திக்கச் செய்கின்றது.

பேசுகின்ற இயல்பு மனித இனத்துக்குத் தனியுரிமையாய் அமைந்துள்ளது. உள்ளத்தின் எண்ணங்களை வெளியே உணர்த்தி வருதலால் அந்த ஒலித்துணுக்குகள் மொழிகள் என வந்தன. பேச்சு, வார்த்தை, உரை, சொல் முதலியன எல்லாம் காரணப் பெயர்களாய் வெளி வந்திருக்கின்றன. மனிதர் நிலவகையால் பிரிந்து பல பிரிவுகளாய் வாழ்ந்து வருகின்றனர். அவரவர்க்குத் தனியே மொழிகள் அமைந்திருக்கின்றன. ஒரு நாட்டில் வழங்கும் மொழி மற்ற நாட்டவர்க்குத் தெரியாது.

தமிழ், தெலுங்கு, கன்னடம், துளு, சவுராட்டிரம், மலையாளம் முதலிய மொழிகள் இத் தென்னுட்டில் வழங்கப் படுகின்றன. தமிழர், தெலுங்கர், கன்னடர், துளுவர், சவுராட்டிரர், மலையாளிகள் எனத் தாங்கள் பேசுகின்ற மொழிகளால் பெயர் பெற்றுள்ளனர். ஒருவருக்குத் தாய்மொழியாயுள்ளது மற்றவர்க்கு வாய்மொழிய வராது. தங்களுக்கு உரிமையான மொழிகளையே எவரும் பெருமையாகப் பேசி வருகின்றனர்.

“அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது” என்முன் தமிழன்.

“சிவனி ஆக்ஞ லேக சீம கறவது” என்முன் தெலுங்கன்.

இறைவன் ஆணை இன்றேல் எறும்பும் கடியாது என்பது இத்தெலுங்கு வாக்கியத்தின் பொருள். இந்த மொழியின் பொருள் தமிழனுக்குத் தெரியாமையால் திகைத்து நின்றான். அவன் நகைத்துச் சென்றான். இன்னவாறே ஒரு தேசத்தவர் பேசுவது வேறு தேசத்தவர்க்கு விளங்காமையால் நேரே சந்தித்தபொழுது பார்வை அளவில் பார்த்து வேறே ஊமைகளாய் ஒதுங்கிப் போகின்றனர். "தேசங்கள் தோறும் பாஷைகள் வேறு" என்பது பழமொழி. பாஷைகளே மனித உலகத்தை மாண்புடன் இயக்கி வருகின்றன. இந் நிலவுலக முழுவதிலும் வழங்கிவரும் மொழிகள் எவ்வளவு? என ஒரு ஆங்கில அறிஞர் ஆராயத் தொடங்கினர். பல நாடுகளுக்கும் சென்று பலவகையிலும் ஆராய்ந்து கணக்கு எடுத்தார். எண்ணூற்றுத் தொண்ணூற்றாறு (896) மொழிகள் உள்ளன என்று அளவு கண்டு உளவு தெரிய எழுதி வைத்துள்ளார். காலந்தோறும் மேலும் பெருகி வரும். இங்கே வழங்கி வருவன அளந்து காணவந்தன.

"சிங்களம் சோனகம் சாவகம் சீனம் துளுக்குடகம்
கொங்கணம் கன்னடம் கொல்லம் தெலுங்கம் கலிங்கம்வங்கம்
கங்கம் மகதம் கடாரம் கவுடம் கடுங்குசலம
தங்கும் புகழ்த்தமிழ் சூழ்பதி னேழ்புவி தாமிவையே"

பதினேட்டு நாட்டு மொழிகள் இங்ஙனம் காட்டப்பட்டுள்ளன.

"ஆரியம் முதலிய பதினெண் பாடையிற்
பூரியர் ஒருவழி புகுந்த போன்றன
ஓர்கில கிளவிகள் ஒன்றொடு ஒப்பில
சோர்வில விளம்புபுள் துவன்று கின்றது."

(இராமா, பம்பா 14)

பம்பைப் பொய்கையில் பறவைகள் ஒலித்தன; பதினெட்டுப் பாடை மாக்கள் ஒன்று கூடி ஒருவருக்கு ஒருவர் பொருள் தெரியாமல் பேசியது போல் இருந்தன என்று கம்பர் இவ்வாறு கூறியிருக்கிறார். பொருள் புரியாதது மருளாய் வேறு படுகிறது.

காளமேகப்புலவர் தமிழில் பெரிய பண்டிதர்; சிறந்த கவிஞர். ஒரு முறை திம்மி என்னும் தெலுங்கச்சி வீட்டுக்குப் போயிருந்தார். அவளுக்குத் தமிழ் தெரியாது; இவருக்குத் தெலுங்கு தெரியாது. இவரைப் பார்த்ததும் "ஏண்டா அப்பா!

நீ யார்? எங்கிருந்து வருகிறாய்?'' என்று இங்ஙனம் தெலுங்கில் கேட்டாள். கவிராயர் ஒன்றும் தெரியாமல் விழித்தார். அவள் சிரித்தாள். இரவு அங்கே ஊமை போல் தங்கியிருந்து மறுநாள் வெளியே வந்தார். அங்கு நேர்ந்த நிலைமையை ஒரு கவியாகப் பாடினார். அந்தப் பாட்டு அயலே வருகின்றது.

"ஏமிரா ஒரு என்றாள் எந்துண்டி வஸ்தி என்றாள்
தாமிராச் சொன்ன வெல்லாம் தலைகடை தெரிந்த தில்லை;
போமிராச் சூழும் சோலை பொருகொண்டைத் திம்மிகையில்
நாமிராப் பட்டபாடு நமன் கையில் பாடு தானே."

தமிழில் பெரிய புலவராய் இருந்தும் தெலுங்கு பாஷை தெரியாமையால் கவிராயர் இந்தப்பாடு பட்டிருக்கிறார். இந்தப் பாட்டைப் பாடும்போது அவருக்குச் சிரிப்பு வந்திருக்கும் என்று தெரிகின்றது. மனிதனுடைய அறிவின் எல்லையும் சிறுமையும் இந்த நிகழ்ச்சி நன்கு காட்டியுள்ளது.

ஒருதேசத்தவன் பேசுகிற மொழி அயல் தேசத்தவன் அறியான் ஆதலால் இயன்ற அளவே பேச்சுவழக்குகள் நடந்து வருகின்றன. ஆயிரக்கணக்கான மொழிகள் உலகங்களில் பரவி யிருக்கின்றன

நாம் தமிழ்நாட்டில் பிறந்திருக்கிறோம்; தமிழைத் தாய் மொழியாப் பேசிவருகிறோம். இம்மொழியில் அரியபல நூல்கள் பெருகி இருக்கின்றன. காவியக் கலைகள் சீவிய நதிகளாய்ச் செழித்து வளர்ந்துள்ளன. ஒருநூலைச் செவ்வையாகத் தெளிந்து கொள்ளவே மனிதனது வாழ்நாள் முழுவதும் காணாது; அவ்வளவு மதி நலங்கள் எவ்வழியும் மன்னி நிற்கின்றன.

ஓர் மொழியே கற்றுள்ளாய்!

எண்ணரிய பாஷைகளுள் உன் கண் எதிர்ப்பட்ட ஒரு மொழியையே நீ படித்திருக்கிறாய் என்றது தன் படிப்பை அவன் எண்ணி யுணர்ந்து எளிமை தெளிய.

கற்ற கல்வியும் அரை குறையானதே.

இன்னவாறு சின்ன நிலையில் இருந்து கொண்டு தன்னைப் பெரிய மதிமானு எண்ணிச் செருக்குவது என்ன மடமை!

ஒன்றும் நன்று அறிய கில்லாய்!

என்றது மனிதன் கற்றுள்ள கல்வியின் சிறுமை தெரிய வந்தது. கல்வி நிலை எல்லை இல்லாதது; அதில் சிறிது அளவே ஒருவன் கற்றுக் கொள்ளுகிறுன். படித்தது பிடி அளவு; படியாதது படி அளவு என்றபடி படிப்பு எங்கும் படிந்துள்ளது.

கல்வியின் பெருமையையும் தான் கற்றுள்ள சிறுமையையும் ஒருவன் உற்று உணர்ந்தால் உள்ளம் செருக்கான். அறியாமையால் அகங்காரம் விளைகிறது; அறிந்தபோது அது மறைந்து போகிறது. மெய்யறிவால் மேன்மைகள் வருகின்றன.

நீ எவ்வளவு படித்திருக்கிறுய்? உனக்கு என்ன தெரியும்? நீ படித்துள்ளது அணுவினும் சிறியது; படிக்க வேண்டியது அண்டத்திலும் பெரியது; கலைகள் அலை கடல்களினும் விரிவாய்ப் பெருகி யுள்ளன. சிறு திவலை அளவும் நீ படிக்க வில்லை; உன் நிலைமையை உணர்ந்து பார்த்தால் உள்ளம் நாணுவாய்! உண்மையை உணராமையால் புன்மையாய்ச் செருக்குகின்றுய்! எதையும் அமைதியாய் எண்ணி நோக்கிக் கண்ணியமாய் வாழுக.

---

585. அறிய அறிய அறியாமை தோன்றும்
நெறியே ஒருவன் நிறைய்ச்—செறிவோடு
கற்றவனே யானல் கடுகளவும் ஓர்செருக்
குற்றவனே யாகான் உணர். (ரு)

இ—ள்

கலைகளின் நிலைகளை அறியுந்தோறும் மனிதனுடைய அறிவின் சிறுமை பெருகித் தோன்றும்; உண்மைகளை நுண்மையாக ஓர்ந்து ஒருவன் நன்கு கற்பானேஆனல் கடுகின் அளவு கூடச் செருக்கு அடையமாட்டான்; உருக்கமாய் நெடிது வியந்து நிற்பான் என்க.

அறிவு என்பது உண்மையை உணர்வது. மனிதன் இயல்பாகவே அறிவுடையவன். அந்த இயற்கை யறிவோடு செயற்கை அறிவு சேர்ந்தபோது அவன் உயர்ச்சி மிகப் பெறுகிறுன். கல்வி கேள்விகளாகிய பயிற்சிகளால் வரும்அறிவு முயற்சியால் ஈட்டிய பொருள்போல் மருவியுள்ளமையால் அது எவ்வழியும் பெருமையாய் இன்பமும் மகிமையும் தருகிறது.

கல்வி யறிவு ஊற்று நீர்போல் எல்லையின்றிப் பெருகி வருகிறது. நூல்களை ஆராய்ந்து அறியுந்தோறும் மேலும் மேலும் புதிய புதிய அறிவுகள் அதிசயமாய்த் தோன்றுகின்றன. தோன்றவே முன்னைய அறிவு சின்னதாய்க் காணப்படுகின்றது. இன்னவாறே பின்னால் பெருகி வருந்தோறும் முன்னால் மருவியது அறியாமையாய் முடிகிறது.

அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு. (குறள், 1110)

கல்விப் பொருளை அறியுந்தோறும் அறியாமை காணப்படுவது போல் அன்புடைய காதலியைத் தோயும் தோறும் இன்பமும் ஆசையும் புதிது புதிதாய்ப் பொங்கி எழுகின்றன என ஓர் காதலன் இங்ஙனம் ஆராமை மீதூர்ந்து தனது அனுபோக அனுபவத்தை இனிது வெளியிட்டிருக்கிறான். கல்வி அறிவைக் கலவி இன்பத்திற்கு உவமைகூறியிருக்கும்அழகு உவகை சுரந்து திகழ்கின்றது. போகமும் போதமும் ஏகமாய் அறியவந்தன. அனுபவநிலைகள் நுணுகி உணர வுரியன.

செறிவோடு கற்றலாவது சாரமான கல்வியை ஆழமாய் ஆராய்ந்து தெளிந்து கொள்ளுதல். அரிய கல்வியீட்டம் உரிய நாட்டமாய் ஓர்ந்து கொள்ள வந்தது.

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல---தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீர்ஒழியப்
பாலுண் குருகிற் றெரிந்து." (நாலடியார்,135)

மனிதனுடைய வாழ்நாள் மிகவும் குறுகியது; கல்வி எல்லையின்றி விரிந்துள்ளது. ஆதலால் அன்னப்பறவை நீரைநீக்கிப் பாலைப் பருகுதல் போல் நல்ல நூல்களைச் சாரமாக அவன் விரைந்து கற்றுக் கொள்ள வேண்டும் என இது உணர்த்தியுள்ளது. கலை பயில் இயல்பை இதில் கருதிக் காணுக.

இவ்வாறு கற்றகல்வியை உயிர்க்கு ஊதியமாச் செய்து கொள்பவர் உத்தமராய் உய்தி பெறுகின்றனர். கல்வியால் பெற்ற அறிவை நல்லவகையில் பண்படுத்தாமல் உலக ஆடம்பரங்களில் செலுத்தி வீண் பெருமை கொண்டு திரியின் அவர் மாண்பயன் இழந்தவராய் மடிந்து படுகின்றார்.

ஆன்ம நலனை அடைவதே அறிவின் மேன்மையான பலனும்.

தாயுமானவர் சிறந்த மேதை; வடமொழியிலும் வல்லவர். அவரது கல்வி நிலையும் கருதி யுணர்ந்துள்ள உறுதி நலங்களும் உயர்ந்த பண்பாடுகளை உணர்த்தியுள்ளன.

"கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
கற்றும் அறிவில்லாத என்
கர்மத்தை என்சொல்கேன் மதியை என்சொல்லுகேன்
கைவல்ய ஞான நீதி
நல்லோர் உரைக்கிலோ கர்மம் முக்கியம் என்று
நாட்டுவேன்; கர்மம் ஒருவன்
நாட்டினு லோபழைய ஞானம் முக்கியம் என்று
நவிலுவேன்; வடமொழியிலே
வல்லான் ஒருத்தன்வர வுந்திரா விடத்திலே
வந்ததா விவகரிப் பேன்;
வல்லதமி ழறிஞர்வரின் அங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிது புகல்வேன்;
வெல்லாமல் எவரையும் மருட்டிவிட வகைவந்த
வித்தைஎன் முத்தி தருமோ?" (தாயுமானவர்)

இந்த வாக்கு மூலத்தால் அடிகளுடைய புலமை நிலையும் வாழ்க்கை வகையும் ஞான சீலங்களும் நன்கு தெரிய வந்தன. பலகலைகளிலும் தலைமையான புலமை வாய்ந்து அதிசய வாக்கு வன்மையோடு வாழ்ந்து வந்தவர் முடிவில் உலக நிலைகளை வெறுத்து உயர் ஞான சீலராய் உறுதி நலனை அடைந்திருக்கிருர்.

கற்றவன் கல்வியின் பயனை அடையவில்லையானல் கல்லாதவனிலும் அவன் கடையனுவான் என்பதை இங்கே காட்டியருளினர்.

வித்தை முத்தி தருமோ? என்னும் வினு உய்த்துணரத்தக்கது.

வித்தை என்பது வெறும் புலமை அறிவு. அது தலைமையான ஞானநிலையை மருவிய பொழுது தான் அரிய கதிநிலையைக் காணவுரிய தகுதியை அடைகிறது. ஞானம் காணுதவரையும் ஊனம் காணுகிறது.

"ஓதலும் உணர்த்தலும் உணவு சுட்டியே
சாதலும் பிறத்தலும தவிர்க்க அல்லவே." (அஞ்ஞவதை)

படித்தலும் போதித்தலும் வயிற்றை வளர்க்கவே; பிறவியை நீக்க அல்ல; என்று வித்தையாளரை நோக்கித் தத்துவராயர் இங்ஙனம் இடித்து உணர்த்தியிருக்கிறார்.

"படித்தேன் பொய் யுலகியல் நூல் எந்தாய்நீயே
படிப்பித்தாய் அன்றியும் அப்படிப்பில் இச்சை
ஒடித்தேன் நான்" (அருட்பா.)

உலகப் படிப்பின் நிலையைக் குறித்து இராமலிங்கசுவாமிகள் இவ்வாறு விளக்கியுள்ளார். உயிர்க்கு உறுதியான உண்மைப்படிப்பே படிக்கவேண்டும் என வடித்துக் காட்டியிருப்பது நுனித்து நோக்கத் தக்கது.

அலகுசால் கற்பின் அறிவுநூல் கல்லாது
உலகநூல் ஓதுவது எல்லாம்---கலகல
கூஉம் துணையல்லால் கொண்டு தடுமாற்றம்
போஒம் துணையறிவார் இல். (நாலடியார்)

பிறவித்துயரம் நீங்கக் கற்பதே கல்வி எனச் சங்கப்புலவர் இங்ஙனம் குறித்திருக்கிறார். உற்ற துன்பங்களை ஒழித்து உயர்ந்த இன்பங்களை அருளுவதே சிறந்த கல்வியாம் என்க.

"கற்ற கல்வியைக் கதிதரு நெறிகளில் செலுத்தி
உற்ற பேரின்ப உறுதியை அடைந்தவன் உயந்தான்;
பெற்ற இப்பெரும் பிறவியின் அறிவுக்குப் பிறவி
அற்று நிற்றலே அல்லதொன் றில்லைகாண் அறியின்."
(வீரபாண்டியம்)

இதன் கருத்தைக் கருத்தில் இருத்துக.

செருக்கு முதலிய சிறுமைகளின்றிச் சிறந்த குறிக்கோளோடு கற்று நிறைந்த நீர்மைகள் புரிந்து விரைந்து உயர்ந்து கொள்ளுக.

---

586 வித்தை சிறிதாயின் வீண்செருக்கு மேற்கொள்ளும்
புத்திமிகின் அச்செருக்கு போயொழியும்---தத்துமொளி
தேயின் இருள்சேரும் தேறி ஒளிமீறின்
மாயும் உடனே மறைந்து. (சு)

இ—ள்

வித்தை சிறிதாய பொழுது வீணச் செருக்குப் பெரிதாய்

எழுகின்றது. நல்ல புத்தி மிகுந்து வரின் பொல்லாச் செருக்குப் போயொழிகின்றது. ஒளி குறைய இருள் நிறைகின்றது; அது தெளிவாய் ஒளி வீசி எழின் இருள் அடியோடு ஒழிந்து போகின்றது என்க.

இது மனத் தருக்கு மருள் என்கின்றது.

உள்ளத்தின் பண்பாடுகளுக்குத் தக்கபடியே மனிதன் உயர்ந்து விளங்குகிறான். குண நீர்மைகளால் மேன்மைகள் விளைகின்றன. குற்றத் தீமைகளால் கீழ்மைகள் வருகின்றன.

அறிவு நல்லது; உயர்ந்தது. செருக்கு பொல்லாதது; இழிந்தது. மாறுபாடுடைய இந்த இரண்டும் ஒருங்கே கூடியிரா.

கல்வியறிவு வித்தை என வந்தது. இது வடமொழிச் சொல். வித் என்றால் அறிதல் என்பது பொருள். பல நூல்களையும் படித்திருக்கிறேம்; பெரிய பண்டிதன்; அரிய புலவன்; தேர்ந்த வித்துவான் என இன்னவாறான தடிப்புகளும் முனைப்புகளும் கற்றவன் உள்ளத்தில் கிளைத்து எழுகின்றன. புலமை வீறு, கல்விச் செருக்கு, வித்தியா கருவம் என வழங்கப் படுதலால் கல்வியறிவில் பெருமித நிலைகள் பெருகியுள்ளமை அறியலாகும்.

கலையறிவில் விளைந்து வருகிற தலைமையுணர்வு தகுதியும் பெருந்தன்மையும் தழுவி வரின் அது பெருமிதம், கம்பீரம் ,வீறு, வீரம் என்னும் பெயர்களால் உயர் பகிமை பெறுகின்றது.

தகுதியின்றிச் சிறுமையும் பிளுக்கும் மருவிவரின் அது செருக்கு, கருவம், மமதை என இழிக்கப் படுகின்றது.

கம்பீரம் உயர்ந்த தன்மையுடையது.

செருக்கு இழிந்த புன்மையது.

அது அழகும் ஆண்மையும் அமைந்தது.

இது இழிவும் கீழ்மையும் இயைந்தது.

அதனை எவரும் புகழ்ந்து போற்றுவர்.

இதனை யாவரும் இகழ்ந்து தூற்றுவர்.

சிறிய நிலைமையில் இருந்து கொண்டே பெரிய தலைமையாய்ப் பிளுக்கி வருவது செருக்கு ஆதலால் அது எங்கும் வெறுக்கப் படுகிறது. பொல்லாத தருக்கு புலை ஆகின்றது.

வித்தை சுருங்கிய இடத்தில் வீண் செருக்கு விரிந்து நிற்கிறது. கல்வியறிவு நிறைந்திருந்தால் அங்கே பெருந்தன்மை சுரந்திருக்கிறது. அமைதி அரிய நீர்மையாய் மகிமை யுறுகின்றது.

"குறை குடம் கூத்தாடும்; நிறை குடம் நீர் தளும்பாது"

என்னும் பழமொழி சிறிய கல்வியரது சிறு சிலுப்பையும், பெரிய அறிவாளிகளது அடக்கத்தையும் குறிப்பாக விளக்கியுள்ளது.

"மறையின் அந்தமும் தொடாததாள் நிலம்தொட வந்த
நிறைபரஞ்சுடர் நிராமய நிருத்தற்குப் பிழைத்தேன்;
சிறிய கேள்வியோர் கழியவும் செருக்குடையோர் என்று
அறிஞர் கூறிய பழஞ்சொல் என் அளவிற்றே அம்மா!"
(திருவிளையாடல்)

இறைவனோடு எதிர்த்து வாதாடிய நக்கீரர் பின்பு உறுதியுண்மை தெரிந்து இங்ஙனம் பரிந்து இரங்கியிருக்கிறார். சிறிய கேள்வியர் கழியவும் செருக்குவர் என்றது பண்டைப் பழமொழி வாசகமாய் ஈண்டு வெளி வந்துள்ளது.

நிறைந்த கல்வியும் விரிந்த கேள்வியு முடையவர் பரந்த நோக்கமுடையவராய் அடங்கி யிருக்கின்றார்; குறைந்த படிப்பாளர் மிகுந்த செருக்குடையராய் நிமிர்ந்து திரிகின்றார்.

உலகிலுள்ள கலைகளையும் உறுதியுண்மைகளையும் உணர்ந்து கொள்ளாமையால் புல்லறிவாளர் உள்ளஞ் செருக்கி எள்ளல் இழிவுகள் புரிந்து துள்ளி யுழல்கின்றார்.

சிற்றறிவோர் தம்மைச் செருக்கெனும்பேய் பற்றிநின்று
முற்றறிவேம் என்று மொழிவிக்கும்---மற்றவரை
எள்ளி மதியா திகழ்வித் திழிநிலைக்கே
தள்ளுமவர் என்செய்வார் தாம்.

சின்ன அறிவினர் செயல் இன்னவாறு இரங்கி வருந்தும்படி இழிந்து வளர்ந்துள்ளது. செருக்கு என்னும் பேய்வாய்ப்பட்டுச் சிற்றறிவாளர் சீரழிந்து படுகின்றார். செருக்கைப் பேய் என்றது துடுக்காய்த் துயர் தருதல் கருதி. அடக்கம் தெய்வத் தன்மையாய் இன்பம் அருளுகிறது. செருக்கு பேய்த் தன்மையாய்த் துன்பம் புரிகிறது.

செருக்கு உன் உள்ளம் புகின் நீ பேய் வாய்ப் புகுந்தவனாய் நோய்வாய்ப் படுகின்றாய்! எனத் தன் பிள்ளைக்கு ஓர் தந்தை அறிவூட்டியுள்ளது இங்கே அறிய வுரியது.

புல்லிய கல்வியர் புலை நிலையில் இழிந்து பொல்லாங்கு புரிதலால் யாதும் கல்லாதவரினும் அவர் பொல்லாதவராகின்றார்.

"A little learning is a dangerous thing." (Pope)

"அற்பக் கல்வி ஆபத்துடையது" என போப் என்னும் ஆங்கிலக் கவிஞர் இங்ஙனம் கூறியிருக்கிறார்.

சிறிது கற்றவர் வீண் பெருமை கொண்டு மேட்டிமை புரிதலால் அவர் யாண்டும் அபாயமுடையராய் அவமதிக்கப் படுகின்றார். சின்னப் புத்தி இன்னல் நிலையமாகிறது.

ஒளி தேயின் இருள் சேரும்.

என்றது அறிவு மங்கிய பொழுது அகந்தை பொங்கி எழுந்து கவிந்து கொள்ளும் என்பதை உணர்ந்து கொள்ள வந்தது. இருள் சேராதபடி தெருள் சேர்ந்து உயர்க.

செருக்கு மடமை மயக்கங்களால் எழுதலால் அது இருள் என நேர்ந்தது. ஒளி புகுந்த பொழுது இருள் ஒழிந்து போதல் போல் நல்ல அறிவு எழுந்த போது செருக்கு அழிந்து போகிறது.

இனிய கல்வி இன்னச் செருக்காய் எழுந்தது என்னை? எனின், சேர்ந்த இனத்தின் தீமையால் விளைந்ததென்க. நல்லவர் கற்ற கல்வி இனிமை சுரந்து நன்மையாய் வருகிறது; தீயவர் கற்றது கொடுமை நிறைந்து தீமையாய் விரிகிறது.

பாம்புண்ட நீர்எல்லாம் நஞ்சாம்; பசுவுண்ட
தேம்படு தேண்ணீர் அமுதமாம்—ஓம்பற்கு
ஒளியாம் உயர்ந்தார்கண் ஞானம்; அதுபோல்
களியாம் கடையாயார் மாட்டு. (அறநெறிச்சாரம்)

பசு அருந்திய நீர் பால் ஆய் வருகிறது; பாம்பு குடித்த நீர் நஞ்சமாய் மாறுகிறது. உயர்ந்தோர் பயின்ற கல்வி ஞானமாய் ஒளி வீசி உயர்கின்றது; இழிந்தோர் பயின்றது களி செருக்காய் இழிவுறுகின்றது என முனைப்பாடியார் இங்ஙனம் பாடியிருக்கிறார். மருண்ட மயக்கம் இருண்ட இயக்கமாகின்றது.

தெருண்ட மேலவர் நல்ல நீர்மையோடு அடங்கியிருக்கின்றார். மருண்ட கீழவர் பொல்லாச் செருக்கராய்ப் பொங்கி நிற்கிறார்.

செருக்கு சின்னத்தனமானது; அதனையுடையவர் சிறியராய் இழிகின்றார்; அந்தச் சிறுமையை மருவிச் சீரழியாதே; எவ்வழியும் பெரிய நீர்மைகளை உரிமையோடு பேணி ஒழுகுக.

சின்ன இயல்பே செருக்காய் எழுதலால்
அன்ன மயலை அறிந்துமே—மன்னிய
மேலான நீர்மையை மேவி ஒழுகினுன்
பாலாகும் மேன்மை படிந்து.

இதனை நெஞ்சில் நினைந்து கொள்ளுக.

---

587. கல்வியில்தாம் வல்லரென்று கண்டார் வியந்துசொலப்
புல்லறிவோர் தாமே புகழ்ந்துசொல்லி—நல்லறிவோர்
தம்மைப் பழித்துத் தருக்குவார் தாழ்வன்றி
எம்மை யுயர்வார் இவர். (எ)

இ—ள்

தாம் கல்வியில் வல்லவர் என்று கண்டவர் வியந்து சொல்லும்படி தம்மைத் தாமே புகழ்ந்து நல்லறிவாளரை இகழ்ந்து புல்லறிவாளர் புலையாடி நிற்கின்றார். ஈனச் செருக்குடைய இவர் இழிந்து தாழ்வதை உணராமல் அழிந்து ஒழிவது அவலமாயுளது.

உலகப் புகழ்ச்சிகளில் மனிதன் பெருமையல் கொண்டு பேயாய்த் திரிகிறான். தன்னை எல்லாரும் வியந்து புகழ்ந்து சொல்ல வேண்டும் என்றே யாண்டும் நசையாய் நயந்து அலைகிறான். இந்த அவல ஆசைகள் எங்கணும் பெருகியுள்ளன.

கல்வி செல்வம் அழகு ஆண்மை முதலியன புகழ்மொழிகளுக்கு உரியன ஆதலால் அவற்றுள் ஏதாவது ஒன்று சிறிது கிடைத்தாலும் அதனைப் பெரிதாகப் பிலுக்கிக் காட்டிப் பிறருடைய வாய்களிலிருந்து புகழ் மொழிகளை அடைய விரும்பிப் பேராவலோடு உழலுகின்றான். தன்னைப் புகழ்ந்து சொல்லுவார் யாரும் இல்லாமையால் தானே புகழ்ந்து பேசத் தொடங்குகின்றான். வீணை இந்தப் பேராசையில் அவன் மோசம்போகிறான்.

நல்லறிவோர் தம்மைப் பழித்துத் தருக்குவார்.

என்றது புல்லறிவோர் புலை நிலையைக் குறித்து வந்தது.

பழி கூறுவது இழி செயல் என்று தெரியாமையால் அழி மதியாளராய்ப் பலர் அவலமுறுகின்றனர்.

சிறந்த கல்விமான்களை மதியாமல் இகழ்ந்து பேசினால் தம் மைப் பெரிய படிப்பாளி என்று மதித்துப் பிறர் புகழ்ந்து கூறு வர் எனப் புல்லர் சிலர் நினைந்து கொள்ளுகின்றனர். கொள்ள வே யாரையும் கூசாமல் ஏச நேர்கின்றனர்.

இலக்கண இலக்கியங்களை வரம்போடு வழுவறக் கற்று வாழ்நாள் முழுவதும் தமிழை நன்கு ஆய்ந்து தெளிந்த பெரிய மேதைகளையும் பேதைகள் துணிந்து பிழைபடப் பேசுகின்றனர். உண்மைப் புலமை ஒதுங்கி மறைகிறது. புன்மைப் படிப்பு புலை யாய்த் துடித்து வருகிறது. போலிகள் காலிகளாய்க் கலித்து வருதலால் கேலிகளும் கிளைத்து எழுகின்றன. முப்பது ஆண்டு கள் தமிழ் மொழியை ஆய்ந்து தெளிந்த புலவர்களை மூன்று நாள் மேலெழுந்தவாரியாய்ப் படித்த கலவர்கள் இகழுகின்ற னர். புனை கதைகளை அதிகமா எழுதுகின்றவரே மதிமான்கள் என்கின்றனர். மறுமலர்ச்சி என மணம் அற்ற வெறு மலர்ச்சி கள் விரிந்து நிற்கின்றன. வீண நிலைகள் காண வந்துள்ளன.

தமிழை வளர்க்க வந்திருப்பதாகத் தங்கள் பெயர்களை வளர்த்துச் சிலர் கிளர்ச்சிகள் செய்கின்றனர். உண்மையான வளர்ச்சி இன்னது என்று அவர் தெரியாமல் இருப்பது பரிதாப மாயிருக்கின்றது. அமுதக் கடல் போல் தமிழ்மொழி இனிது பரந்து விரிந்துள்ளது. அதில் சிறிது படிந்து முழுகி எழுந்து தங்களை விழுமிய நிலையில் வளர்த்துக் கொள்ளாமல் அதனை வளர்ப்பதாக வீணே ஆரவாரம் செய்வது விபரீதமாயுள்ளது.

தாங்கள் அன்புரிமையோடு தமிழைப் படித்துப் பண்பு நலம் சுரந்து வளர்ந்து கொள்ள வேண்டும். அங்ஙனம் படிக்க அவகாசமோ, பிரியமோ, அறிவோ இல்லையென்றால் படிக்கின்ற இளைஞர்களுக்கு உதவி புரிந்து ஊக்க வேண்டும்; அவ்வாறான உபகார நீர்மை தங்களிடம் இல்லையானால் படித்த மதிமான்களை மதித்துப் போற்ற வேண்டும்; புலவர்களை அப்படி மதித்துப்

போற்றும் மதிமாண்பும் பெருந்தன்மையும் இல்லை எனின் அவரை அவமதியாயலாவது இருக்க வேண்டும். இவ்வாறு யாதொரு வழியிலும் இதம் புரியாமல் எவ்வழியும் விபரீதமே செய்து கொண்டு தமிழை வளர்ப்பதாகச் சொல்லுவது வெறும் வாயளிப்பான கபட நாடகமேயாம்.

இந் நாளில் இந் நாட்டில் கல்வியின் பேரால் கிளைத்துள்ள செருக்குகள் பல. மாதிரிக்குச் சில சுருக்கமாக ஈண்டுக் காட்டப்படுகின்றன.

### கிறுக்குச் செருக்கு

*இலக்கணங்கள் கற்றவர்கள் இலக்கியங்கள்*
*பயின்றவர்கள் இந்நாள் இங்கே*
*அலக்கணுறும் படியாக அவையறியார்*
*அவையேறி அவங்கள் பேசிப்*
*புலக்கணுடை யார்போன்று புலம்புகின்றூர்*
*சிலரவரைப் புகழ்ந்து கொள்வார்*
*கலக்கணீர் சொரிந்திந்தக் கண்ணிலிகட்கு*
*இரங்குகின்றூர் கலைஞர் எல்லாம்.* (1)

### எழுத்துச் செருக்கு

*எழுத்தாளர் எனஎழுவார் எழுதும் நிலை*
*எதிர்அறியார்; எழுதி ஏதோ*
*முழுத்தாளும் கரியாக்கி மூதுலகில்*
*வெளியாக்கி முயன்று கற்ற*
*பழுத்தபெரும் புலவரினும் தாம்பெரியர்*
*எனச்செருக்கிப் பழுது கூறிக்*
*கழுத்தாழம் தெரியாமல் காலாழம்*
*கண்டுநிற்பார் கருமம் என்னே.* (2)

### சங்கச் செருக்கு

*சங்கங்கள் நடத்துகின்றேம் தண்தமிழைப்*
*புரக்கின்றேம் தலைமை ஓங்க*
*எங்கெங்கும் பரப்புகின்றேம் இன்புலவர்க்*
*குதவுகின்றேம் என்று சொல்லி*

அங்கங்கே பொருள்தொகுத்துத் தன்தலைமைக்
குள்ளாக்கி அகம் செருக்கிப்
பங்கங்கள் வளர்ப்பதல்லால் பலன்வளர்த்து
வருவாரைப் பார்த்தி லேனே. (3)

பேச்சுச் செருக்கு

உரியதாய் மொழியின்கண் ஒருநூலும்
கல்லாமல் உணர்வு மின்றிப்
பெரியமதி மான்கள்போல் பேரவையில்
பேரொலிகள் பெருக்கித் தாமே
அரியதமிழ் தனைவளர்க்க அவதரித்து
வந்தவர்போல் அகம்செருக்கிக்
கரியமனப் புன்மையொடு களியாட்டம்
புரிகின்றார் கருமம் அந்தோ! (4)

கோட்டிச் செருக்கு

தமிழ்வளர்ச்சி வேண்டுமெனத் தனிமுழக்கம்
செய்கின்றார்; தாமும் கல்லார்;
அமிழ்துறழும் தமிழ்மொழியை ஆதிமுதல்
கற்றவரை யாதும் பேணார்;
குமிழ்சிரிப்பாய் அவமதிப்பார்; கூட்டங்கள்
மிகக்கூட்டிக் கோட்டி கொள்வார்
இமிழ்திரைசூழ் ஞாலமிதில் எவ்வழியும்
மயலாதல் என்னே அம்மா! (5)

வீணச் செருக்கு

கற்றவரை அவமதிப்பார்; கல்லாரை
மிகமதிப்பார்; கல்வி எங்கும்
வெற்றியுடன் பரவியிந்த நாடெங்கும்
தமிழ்விரிய வேண்டும் என்பார்;
உற்றவுணர் வொன்றுமே உள்ளத்தில்
இல்லாமல் உளறி நிற்பார்;
பெற்றதாய் வயிறெரியப் பிழைகள்புரி
பேதைகளாய்ப் பெருகி யுள்ளார். (6)

மூடச் செருக்கு

எழுதிவைத்த ஏடுகளை ஏற்றிவைத்துப்
பூசிப்பார்; இனிய கல்வி
முழுதுணர்ந்த புலவர்களை முன்னெதிரே
தூசிப்பார்; மூடமாகத்
தொழுதுபலி பீடங்கள் துதிசெய்வார்;
மனிதர்கட்குத் தொல்லை செய்வார்;
இழுதைகளின் செயல்களெல்லாம் எங்கணுமே
மயல்களாய் எழுதல் என்னே! (7)

மலர்ச்சிச் செருக்கு

மறுமலர்ச்சி இந்நாளில் தமிழ்மொழிக்கு
வந்ததா மகிழ்ச்சி கூர்வார்
வெறுமலர்ச்சி எனுமெய்யை வெட்டவெளி
யாகவே விழைந்து கண்டு
பெறுமலர்ச்சி ஒன்றுமின்றிப் பிழைகளையும்
களைகளையும் பெருக்கி வீணே
செறுமலர்ச்சி செய்வதெல்லாம் செயிர்மலர்ச்சி
யாவதன்றிச் சேர்வதென்னே? (8)

உண்மை வளர்ச்சி

பாலூட்டிச் சோறூட்டிப் பசுந்தமிழை
வளர்ப்பதுபோல் பரிவு காட்டி
மாலூட்டித் திரிகின்ற மதியுடையீர்!
மதியொன்று மதித்துக் கேண்மின்!
நாலூட்டி நலமூட்டி நவமூட்டி
வளர்தமிழை நாடி நீங்கள்
தாலூட்டிப் படியுங்கள் தாயன்பு
புரியுங்கள் தகைமை யாமே. (9)

உறுதி யுணர்ச்சி

ஒருநூறு குறளேனும் உள்ளத்தில்
பதிவுசெய்க; உயர்நூல் தம்முள்

இருநூறு கவிகளையும் இயல்சங்க
நெறிகளையும் எண்ணி ஆய்ந்து
பெருநீர்மை யுடன்வாழ்க; பேருலகில்
மனிதனாய்ப் பிறந்தும் பேசும்
திருவான மொழிபயிலார் திருவிலிக
ளாயிழிவார் தெளிக தேர்ந்தே. (இந்தியத் தாய் நிலை)

தமிழ் மொழியாளரது பரிதாப நிலைகளை இதனால் ஓரளவு அறியலாகும். புல்லிய துடுக்குகள் அல்லல்களாய் வருகின்றன.

நல்ல நீர்மைகளும் பெருந் தன்மைகளும் இல்லாமல் போயின. பொல்லாத புன்மைகளே எங்கணும் பொங்கி யுள்ளன. கெடு குறிகளே யாண்டும் காணப் படுகின்றன. ஆண்டவன் தான் அருள் புரிந்து இந்த நாட்டை இனிமேல் காக்க வேண்டும்.

எம்மை உயர்வார் இவர்?

புல்லிய வழிகளில் செருக்கிப் புலையாடித் திரிவாரது நிலைகளை நினைந்து இது இரங்கியுள்ளது. உள்ளம் திருந்தி உயர்ந்த தன்மைகள் தோய்ந்த பொழுதுதான் உறுதி நலங்கள் வாய்ந்து வருகின்றன. பெருந்தகைமைகளைப் பேணி உயர்க.

---

588. குற்றம் களைந்து குணம்வளர்க்கும் கல்வியுளம்
உற்றும் உயிர்க்குறுதி ஓராமல்—குற்றம்
படியத் தருக்கல் படித்தும் படியா
மடமைக் கொடுமை மருள். (அ)

இ—ள்

பொல்லாத குற்றங்களை நீக்கி நல்ல குணங்களை வளர்த்து அருளுகிற கல்வியைப் பெற்றும் தம் உயிர்க்கு உறுதி நலனை ஓர்ந்து கொள்ளாமல் வறிதே செருக்கல் படித்தும் படியாத கொடிய மடமையான நெடிய மருளாம் என்க.

இது செருக்குதல் மடமை என்கின்றது.

கல்வி அறிவை வளர்க்கிறது. அது வளர அறியாமை நீங்குகிறது. அது நீங்கவே மதிப்பும் மாண்பும் பெற்று மனிதன் மரி

யாதைகளோடு வாழ்ந்து வருகிறான். நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து உயர்ந்த குறிக்கோள்களோடு வாழும் தன்மை கல்வியாளருக்கே இனிது அமைகின்றது.

மேலோர்களுடைய அறிவு நலங்களையும் குண நீர்மைகளையும் நூல்கள் வாயிலாகக் கல்வி யூட்டியருளுதலால் கல்விமான் சிறந்த மதிமானாகவும், உயர்ந்த குணவானாகவும் ஒளி மிகுந்து திகழ்கிறான். கலை யுணர்வால் நிலை யுயர்கின்றது.

மாசு நீக்கித் தன்னை யுடையானைத் தேசு மிகச் செய்தலால் கல்வி ஈசன் அருள் என எண்ண வந்தது.

"உரத்தின் வளம்பெருக்கி உள்ளிய தீமைப்
புரத்தின் வளம்முருக்கிப் பொல்லா---மரத்தின்
கனக்கோட்டம் தீர்க்குநூல் அஃதேபோல் மாந்தர்
மனக்கோட்டம் தீர்க்குநூல் மாண்பு." (நன்னூல்)

மனிதரது மனக் குற்றத்தை நீக்கிக் கல்வி நூல் மாட்சி தரும் நிலையை இது காட்டியுள்ளது. கல்வியறிவு உள்ளத்தில் ஒளி செய்து வெளியே உயர் நலங்களை அருளுகிறது.

குற்றங்களை நீக்கிக் குணங்களை ஆக்கியருளுகிற கல்வியை அடைந்தும் அதன் பயனை அடையாமல் வறிதே இழந்திருப்பது பெரிய பரிதாபமாம்.

உயிர்க்கு உறுதி என்றது பிறவித் துயரம் நீங்கி ஆன்மா பேரின்பம் பெறுதலை. கலையறிவுக்குப் பயன் புலையிழிவுகள் தோயாமல் நிலை உயர்ந்து நிற்றலே.

அடக்கம் அமைதி முதலிய நீர்மைகள் தோய்ந்து மேலான இன்ப நலன்களை மேவாமல் செருக்கும் துடுக்கும் படிந்து சிறுமையுறுதல் கொடிய மடமையாம்.

தருக்கல் மடமைக் கொடுமை மருள்.

என்றது செருக்கின் இழிவும் தீமையும் விழிதெரிய வந்தது.

வருந்திக் கற்ற கல்வியைக் கொண்டு உள்ளம் திருந்தி உயர் நிலையை அடையாமல் எள்ளலாய் இழிந்து நிற்றல் இழி மூடமாம்; ஆகவே அது பழி யிழிவாய் அழி துயர் தருகின்றது.

தனக்கு இன்னலும் பழியும் விளைக்கின்ற செருக்கை இனிதாக மருவிக் கொள்வது பெரிய பேதைமை ஆதலால் அது மருள், மடமை என வந்தது. கேடு தெரியாமல் கூடி நிற்பது மூடம் ஆகின்றது.

"Pride, the never-failing vice of fools." (Pope)

"செருக்கு என்பது மூடரிடம் கூடியுள்ள தீமை" என்னும் இது ஈண்டு அறிய வுரியது. அகந்தை மடமையான சின்னத் தனம் ஆதலால் அதனை ஒழித்து ஒழுகுபவன் அறிவுடைய பெரிய மனிதன் ஆகின்றான்.

சின்னப் படிப்பு செருக்கு மிகப்பெருக்கி
என்னைப்பார் இல்லென் றிறுமாக்கும்—மன்னும்
பெருங்கல்வி என்றும் பெரிதும் அடங்கி
அருங்கலம் ஆகும் அமர்ந்து.

இறுமாப்புடையவரது இழி நிலையையும், அஃது இல்லாத வரது உயர் மகிமையையும் இது தெளிவாக விளக்கியுள்ளது. அடங்கிய நீர்மையர் பெரியராய் உயர் மகிமை பெறுகின்றனர்; செருக்கி நின்றவர் சிறியராய் இழிவுறுகின்றனர்.

சிறிய புன்மை நீங்குக; பெரிய தன்மை ஓங்குக.

———

589 படித்தான் ஒழுக்கம் படிந்து பிறவி
எடுத்த பயனைநன் கெய்தல்—அடுத்த
பயன்படி யாமல் பழுதே படித்த
வியன்பிடி யெல்லாம் விழல். (கூ)

இ—ள்

ஒருவன் படித்ததற்குப் பயன் நல்ல ஒழுக்கம் படிந்து பிறந்த பிறவிக்கு உரிய உயர்ந்த பயனை அடைந்து கொள்ளுதலேயாம்; அங்ஙனம் அடையான் ஆயின் அவன் படித்த படிப்பெல்லாம் பாழாய்ப் பழியே படும் என்க.

உலக நிலைகளையும், அரிய கலைகளையும், முன்னோர்களுடைய எண்ணங்களையும் எண்ணி ஆராய்ந்து படித்து வருவது படிப்பு என வந்தது. உணர்வு நலங்களில் உள்ளம் படிந்து ஓர்ந்து

கொள்ளுவது என்னும் காரணக் குறியாய் இப் பேர் அமைந் துள்ளது. மொழிகள் பொருள்களை விளக்கி வருவது ஒளி சிறந்து தெளிவு மிகுந்து திகழ்கின்றது.

படித்தலால் அறிவு சுரந்து வருகிறது; படியாமையால் அது கரந்து நிற்கிறது. உள்ளம் படிய உணர்வு பெருகுகிறது.

படித்த படிப்புக்குப் பயன் எடுத்த பிறவியைப் புனித மாக்கி அடுத்த பிறவியை அடையாதபடி செய்தலேயாம். அடைய வேண்டியதை அடைந்தவனே யாண்டும் உயர்ந்து எல்லாம் உடையவனாய் ஒளி மிகுந்து திகழ்கிறான்.

தான் கற்ற கல்வியை உற்ற பிறவிக்கு உரிமையாக்கிஉய்தி பெற்றவன் உயர்ந்த ஞான சீலனாய்ச் சிறந்து விளங்குகிறான். அங்ஙனம் செய்யாதவன் இழிந்த பேதையாய்க் கழிந்து படுகி றான். அரிய கல்வியறிவுக்குப் பயன் உரிய வுண்மை நிலையை மருவி மகிழ்தலேயாம்.

“கற்றதும் கேட்டதுந்தானே ஏதுக் காகக்
கடபடம் என்று உருட்டுதற்கோ? கல்லால் எம்மான்
குற்றமறக் கைகாட்டும் கருத்தைக் கண்டு
குணங்குறி யற்று இன்பநிட்டை கூட அன்றோ? (1)

கற்பதெல்லாம் கற்றேம்முக் கண்ணுடையாய்! நின் பணியாய்
நிற்பதுகற் றன்றோ நிருவிகற்ப மாவதுவே. (2)

கற்றும் பலபல கேள்விகள் கேட்டும் கறங்கெனவே
சுற்றும் தொழில்கற்றுச்சிற்றின்பத்தூடு சுழலின்என்னாம்?
குற்றம் குறைந்து குணமேலிடும் அன்பர் கூட்டத்தையே
முற்றும் துணையென நம்புகண்டாய்சுத்த மூடநெஞ்சே! (3)

கற்றாலும் கேட்டாலும் காயம் அழியாத சித்தி
பெற்றாலும் இன்பம் உண்டோ? பேசாய் பராபரமே! (4)

(தாயுமானவர்)

கல்வி நிலையையும் அதன் பயனையும் குறித்துத் தாயுமான வர் இங்ஙனம் உள்ளம் உருகி உரையாடியிருக்கிறார். உரைகளில் பொதிந்துள்ள உணர்வு நலங்கள் ஊன்றி ஓர்ந்து சிந்திக்க வுரியன. ஆன்ம போதம் தோய்ந்த மகான்களுடைய வாக்குகள் அமிர்த நீர்மைகள் சுரந்துள்ளன. உரிமையோடு பருகினவர் துயர்கள் நீங்கி உயர் இன்பங்கள் பெறுகின்றனர். பெற உரிய

பேறுகளைப் பெற்றுக் கொள்ளுவதே பிறந்த பிறப்பின் பெரும் பயனும். பயன் இழந்தது பாழாகின்றது.

தான் வருந்திக் கற்ற கல்வியால் தன் உயிர்க்கு உறுதியை நாடிக் கொள்ளாமல் உலகத்தில் பிலுக்கித்திரிந்து பிறர் மெச்சப் பிரசங்கங்கள் புரிந்து பொருள் வருவாயையே அவாவி மருள் கொண்டு அலைதல் மடமையான மையல் மயக்கமாய் முடிகின்றது. மெய்யறிவின் மேலான பலனை மேலோர் நூல்களில் விளக்கியுள்ளனர்.

"பிறர்க்குப் பயன்படத் தாம்கற்ற விற்பார்
தமக்குப் பயன்வே றுடையார்---திறப்படூஉம்
தீவினை அஞ்சா விறல்கொண்டு தென்புலத்தார்
கோவினை வேலை கொளல்." (நீதிநெறி விளக்கம், 22)

தம் கல்வியை நல்லொழுக்கமாக்கித் தமக்குப் பயன்படுத் தாமல் வெறும் சொல்லொழுக்கால் பிறர்க்கே பயன்படுத்தி வீணே பேசி அலைபவர் முடிவில் எம தண்டனைக்கு ஆளாகின்றனர் எனக் குமர குருபரர் இங்ஙனம் விநயமாக் குறித்திருக்கிறார்.

"கற்பார் பொருள்காணார் காசுபணம் காணில்உனை
விற்பார் அவர்பால்நீ மேவாதே." (தமிழ்விடு தூது)

எனத் தமிழ்த் தெய்வத்தை நோக்கி ஒரு கவிஞர் இப்படிக் கூறியுள்ளார். அல்லலை நீக்கி யருள்வதே நல்ல கல்வியாம்.

அரிய கல்வி உரிய பயனை இழந்தபோது பெரிய இழவாய் முடிதலால் பெரியோர் அதனை நினைந்து அழுகின்றனர்.

கற்றதனால் ஆய பயன் உற்ற உயிர்க்கு உறுதியாய் உரிமை மருவியுள்ள ஒரு முதல்வனைக் கருதி மகிழ்வதே எனத் தேவர் அறிவு கூறியருளினர்.

உயர்ந்த குறிக்கோளோடு கல்வியை நல்ல வகையில் பயன் படுத்த வில்லையானால் கல்லாதவரினும் பொல்லாத புல்லியனாய்க் கற்றவன் எள்ளி இகழப் படுகின்றான். உரிய பலனை இழந்தவன் சிறிய கலனாயிழிந்து உழலுகின்றான்.

எழுத்துச் சொற்பொருள் யாப்பு அலங்காரம் என்று
இவற்றைக் கற்று இறுமாப்புறும் பேய்சில.

(மோகவதைப் பரணி)

ஐந்து இலக்கணங்களைக் கற்றும் அதன் நல்ல பயனை அடைந்து கொள்ளாமல் உள்ளம் செருக்கித் திரியும் பேய்களும் இவ் வுலகில் உள்ளன எனத் தத்துவராயர் இப்படி வித்தக விநோதமாக் குறித்திருக்கிறார். உரைத்துள்ள பேய்களின் உருவங்களை ஓர்ந்து பார்த்து உள்ளம் கவல்கின்றோம்.

கல்விப் பயனை அடைந்தவன் தெய்வமா மதிக்கப் படுகிறான். அங்ஙனம் அடையாதவன் பேயாய் இழிக்கப்படுகின்றான்.

இறுமாப்பு மனிதனை எவ்வளவு இழி நிலையில் கொண்டு போய்த் தள்ளுகின்றது என்பதை இங்கே நன்கு உணர்ந்து கொள்ளலாம். நவலட்சணங்கள் பயின்றும் அவலட்சணங்களாய்த் திரிதல் அவல இழிவுகளாய்ப் பெருகியது என ஒரு பெரியவர் கவலை அடைந்து மறுகியுள்ளார்.

அடக்கம் இனிய நீர்மை ஆதலால் அதனையுடையவர் பெரியோராய் மகிமை பெறுகின்றனர். செருக்கு சின்னத்தனம் ஆதலால் அதனை யுடையவர் சிறியராய் இழிவுறுகின்றனர்.

“ஒருமையுள் ஆமைபோல் ஒடுக்கும் ஐம்பொறிப்
பெருமைநல் லறிஞர்பால் பெறவும் நல்கி மேல்
வருமதன் செருக்கையும் மடிக்க வல்லனால்
அருமைசெய் குணத்தன்என் மகன் அடக்கனே.”

(மெய்ஞ்ஞான விளக்கம்)

பொறுமை என்னும் குணசீலன் ஞானமன்னன் முன்னிலையில் பேசிய படியிது. அடக்கம் அறிவுடைய பெரியோர் இயல்பு; அது செருக்கை அழிக்கும் என இதில் குறித்திருத்தல் அறிக.

படித்தான் பிறவி எடுத்த பயனை எய்தல்.

கற்ற கல்விக்குப் பயனை இது காட்டி நின்றது.

விலங்குகள் கல்லா; மனிதன் தான் கற்க முடியும். அறிவுடைய இந்த மனிதப் பிறவியைப் பெற்றும், உற்ற கல்வியைக் கற்றும் உயிர்க்கு உறுதியான பயனை அடைய வில்லையானால் அது பழியா யிழிக்கப்படும் ஆதலால் அப் பழி நிலை விழி தெரிய வந்தது. ஆன்ம உய்தியே அறிவின் பயனும்.

படித்த படிப்பைச் செருக்கு முதலிய இழி நிலைகளில் செலுத்திப் பாழாக்காதே; விழுமிய குண நீர்மைகள் தோய்ந்து மேலான உறுதி நலன்களை மேவிக் கொள்ளுக.

ஆசிரியனிடத்திருந்து நூல்களை மாத்திரம் படித்தால் போதாது; தானாகவே தனியமர்ந்து உலகத்தையும் உள்ளத்தையும் படிக்க வேண்டும். அங்ஙனம் படித்தால் அரிய பல அனுபவங்கள் வெளியாம்; அறிவும் தெளிவாம். அது தெளியவே அடக்கமும் அமைதியும் விளையும்; மிடுக்கும் செருக்கும் ஒழியும்.

பள்ளிப் படிப்புப் படித்து முடிந்தவுடன்
உள்ளப் படிப்பில் உயர்ந்தெழுக—உள்ளம்
படியா திருந்தால் படித்தபடிப் பெல்லாம்
மடியா விளியும் மருண்டு.

உண்மைப் படிப்பை இது உணர்த்தியுள்ளது. உள்ளம் படிந்து பொருளை ஊன்றி யுணர்ந்து ஆன்ற அமைதியுடன் அருளை நாடி ஒழுகுக. உயர்ந்த அருள் நாட்டம் அல்லல்களை யெல்லாம் அயலே ஒட்டி எல்லையில்லாத இன்பநலங்களை எளிதே கொண்டு வந்து இனிது உதவுகின்றது. தலைமையான ஆன்ம ஊதியத்தை அடைவதே மேன்மையான கல்வியாம். எவ்வழியும் பொறுமையாய்ப் பயின்று செவ்விய நீர்மைகளை வளர்த்து வருபவர் திவ்விய நிலைமைகளைப் பெறுகின்றனர்.

"Still achieving, still pursuing,
Learn to labour, and to wait." (Longfellow)

"காரிய சித்தி அடையும் வரையும் தொடர்ந்து செல்; உழைக்கக் கல்; பயனை எதிர் நோக்கி நில்" என லாங் பெல்லோ என்னும் கவிஞர் இங்ஙனம் கூறியிருக்கிறார். உள்ளத்தைப் பண்படுத்தி உறுதிநலனை அடைந்து கொள்வதே உயர்ந்த கல்வியாம்.

---

590. உள்ளம் செருக்கின் உயிரின் ஒளிகுன்றி
எள்ளல் இழிவே எதிரெழுமால்—உள்ளம்
அறிவோ டடங்கின் அரியபே ரின்பம்
நெறியோடு நிற்கும் நிலைத்து. (ய)

இ—ள்

உள்ளத்தில் செருக்கு எழுந்தால் உயிரின் ஒளி மழுங்கி விடும்; எள்ளலும் இழிவும் எதிரே முழங்கி எழும்; உள்ளம் அறிவோடு அடங்கின் அரிய பெரிய இன்பம் நெறியே பெருகி நெடிது நிலைத்து நிற்கும் என்க.

உயர்வும் தாழ்வும் ஒழுக்கத்தாலும் இழுக்கத்தாலும் முறையே விளைகின்றன. உள்ளத்தில் இனிய நீர்மைகள் தோய்ந்திருந்தால் அந்த மனிதன் நல்லவன் என உலகத்தில் சொல்லப் படுகின்றான். நல்ல தன்மைகள் இல்லையானால் பொல்லாதவன் என்று எள்ளப்படுகின்றான்.

உள்ளத்தின் நீர்மை அளவே எல்லா மேன்மைகளும் உளவாகின்றன. செருக்கு சிறுமையுடையது ஆதலால் அது பெருமையைக் கெடுத்து விடுகிறது. அரிய பல நன்மைகளுக்கு உரிமையாயுள்ளது மன நலமே. நீசமான செருக்கால் அது மாசு படுகின்றது; படவே ஆன்ம ஒளி மழுங்கி அவலம் அடைகின்றது. உள்ளம் மாசு படாமல் தேசு படப் பேணி வருபவன் ஈசனை நேரே காணுகிறான். அதனை மாசு படுத்தினவன் நாசத்தையே அடைகிறான்.

எள்ளல் இழிவே எதிர் எழுமால்.

செருக்கால் விளையும் விளைவுகளை இது உணர்த்தியுள்ளது.

தம்மை வியந்து புகழ்தலும் பிறரை இகழ்ந்து பேசுதலும் செருக்குடையவர் இயல்பு ஆதலால் அவர் எங்கும் சிறுமையடைய நேர்கின்றார்.

எல்லாம் தெரிந்ததா எண்ணிச் செருக்குவார்
பொல்லா தனசொல்லிப் பொங்குவார்—நல்லாரை
எள்ளி இகழ்வார் இழிபுல்லர் மேன்மேலும்
துள்ளி மிகுப்பர் துயர்.

இழி செருக்காளர் இங்ஙனம் களி மிகுத்து விளிகின்றனர்.

அகந்தை அவலமாய் இழிவுகளையே தருதலால் அதனையுடையவர் பழி துயரங்களையடைந்து அழிவுறுகின்றனர்.

"Pride goeth before destruction." [Bible]

"செருக்கு அழிவின் அறிகுறி" என சாலமன் என்னும் நீதிமான் இவ்வாறு கூறியிருக்கிறார். மமதை மதியைக் கெடுத்து மனிதனுக்கு மரண துன்பத்தை விளைக்கின்றது.

கல்வி எவ்வழியும் அறிவும் அமைதியும் தருவது; அது உள்ளம் தீய பொல்லாதவர்பால் சேர்ந்தால் அகந்தையாய் விரிந்து அல்லல் புரிகின்றது.

"வல்லவர்பால் கல்வி மதம்ஆணவம் போக்கும்;
அல்லவர்பால் கல்வி அவையாக்கும்—நல்லிடத்தில்
யோகம் பயில்வார் உயர்ந்தோர் இழிந்தோர்கள்
போகம் பயில்வார் புரிந்து." (நீதி சாரம்)

கல்விச் செருக்கு யார்பால் உண்டாம் என்பதை இது காட்டியுளது. நல்லவர் நீர்மையும் அல்லவர் கீழ்மையும் அறிய வந்தன.

அரிய பல கலைகளைக் கற்றுப் பெரிய மேதைகளாயினும் மேலோர் அடங்கியே யிருக்கின்றனர். அனுமான் அதிசய மேதை. அவன் கல்லாத கலைகள் யாண்டும் இல்லை; அத்தகைய உத்தமக் கலைஞன் எத்தகைய நிலைகளினும் அடக்கமும் பணிவு முடையனாயிருந்து வந்துள்ளான்.

செருக்கு இல்லாமல் இருத்தலே மேலோரது நீர்மையாம்.

"பெருமை பெருமித மின்மை; சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல்." (குறள், 979)

பெரியாரது தன்மையையும், சிறியாரது புன்மையையும் இது ஒருங்கே உரைத்துள்ளது. பெருமிதம் = செருக்கு. கல்வி செல்வம் முதலிய வளங்கள் எவ்வளவு நிறைந்திருந்தாலும் பெரியோர் செருக்கின்றி அடங்கியிருப்பர். யாதொன்றும் இல்லையாயினும் சிறியோர் தருக்கித் திரிவர் என்றதனால் அவரது புலையும் புன்மையும் நிலையும் அறிய வந்தன.

"சிற்றில் பிறந்தமை பெருமிதத்தின் அறிப."
(முதுமொழிக் காஞ்சி)

ஒருவன் இழி குடிப் பிறப்பினன் என்பதை அவனது கழி செருக்கால் அறியலாம் எனக் கூடலூர்க்கிழார் என்னும் சங்கப் புலவர் இங்ஙனம் கூறியுள்ளார். உள்ளத் தருக்கின் பிறப்பிடத்தைக் குறித்துள்ளது கூர்ந்து சிந்திக்கவுரியது. சிறுமையும் பெருமையும் செயல் இயல்களால் தெரிய வருகின்றன.

"பணியுமாம் என்றும் பெருமை; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து." (குறள், 978)

அமைதியாய்ப் பணிந்து ஒழுகுவது பெரியார் இயல்பு; தன்னை வியந்து தருக்கித் திரிவது சிறியார் நிலை என இரு வகையாரையும் ஒரு தொகையாக இது உணர்த்தியுள்ளது.

"Great souls are always loyally submissive, reverent to what is over them; only small mean souls are otherwise." (Carlyle)

"பெரியோர் என்றும் தகுதியறிந்து தம்மினும் மேலோர்களை மரியாதையோடு வணங்கி வருகின்றனர்; சிறியோர் வேறு விதமாய்ச் செருக்கித் திரிகின்றனர்" என கார்லைல் என்னும் ஆங்கில அறிஞர் இங்ஙனம் கூறியிருக்கிறார்.

பெருமை பிறரை உவந்து பணியும்; சிறுமை தன்னை வியந்து அணியும் என முன்னே வந்துள்ள திருக்குறளை அடியொற்றி அதன் நேரான மொழிபெயர்ப்புப் போல் இது அமைந்துள்ளமை ஈண்டு ஆய்ந்து சிந்திக்கத் தக்கது.

குண நீர்மைகள் எங்கணும் மேன்மையாப் போற்றப் பெறுகின்றன. குறைபாடுகள் எவ்வழியும் சிறுமையா எள்ளப் படுகின்றன. உள்ளம் உயர உயிர் உயர்கின்றது.

செருக்கு சிறிய புன்மை ஆதலால் அதனை ஒருவி ஒழுகினவர் பெரிய மனிதராய்ப் பெருகி வருகின்றனர். மனம் புனிதமாயுயர்ந்த பொழுது அரிய மகிமைகள் யாவும் அங்கே நிறைந்து திகழ்கின்றன.

அறிவோடு அடங்கின் அரிய பேரின்பம்.

உள்ளம் அமைதியாய் அடங்கின் ஆங்கே உணர்வொளி மிகுந்து பேரின்ப வெள்ளம் பெருகி வரும் என்க.

புனிதமான ஆன்ம அமைதி பரமான்ம போகமாய்ப் பாய்ந்து வருதலால் அது அதிசய ஆனந்தம் ஆகின்றது. சித்த சாந்தியே முத்தி நிலையம் என்னும் உத்தம வாசகம் ஈண்டு உய்த்துணரத் தக்கது. இதயம் இனிதாயுயர இன்ப நலன்கள் விளைகின்றன.

அமைதி தோய்ந்த கல்வி ஞான சீலமாய் மேன்மை தருகிறது.

சகல கலா வல்லவர் என்று உயர் புகழ் பெற்றிருந்த விக்கிரமன் என்னும் பண்டிதரை அந்நாட்டு வேந்தன் ஒரு முறை கண்டான். அவரது பேரையும் பெருமையையும் முன்னரே கேள்வியால் அறிந்திருந்தான் ஆதலால் அவரைக் கண்டதும் உவந்து கொண்டாடி அரண்மனைக்கு அழைத்துப் போனான். உபசரித்து அருகிருத்தி அறிவு நலங்களைக் குறித்து உரையாடி

வந்தான். அவ்வாறு பேசி வருங்கால் "தாங்கள் முழுவதும் தெளிவாகத் தெரிந்த கலை எது?" என்று நிலை தெரிய வினவினன். அரசன் கேட்ட கேள்விக்குப் பண்டிதர் என்ன பதில் சொன்னார்? அயலே வருவது காண்க.

"ஓதி யுணர்ந்தேன் ஒருகோடி நூல்களையும்
ஏதும் தெரியா தெனஒன்றை—நீதமுடன்
கண்டு தெளிந்தேன் கழிமடையன் என்றெனைநான்
கொண்டு தெளிந்தேன் குணம்."

பண்டிதர் கூறிய இவ்வுரையைக் கேட்டதும் அரசன் வியந்து மகிழ்ந்தான். நீரே உண்மையான உத்தமக் கலைஞர் என்று உவந்து புகழ்ந்து உரிமையோடு தொழுது வணங்கினன்.

செருக்கு நீங்கிய கல்வி திவ்விய மகிமையாய் ஓங்குகிறது.

ஒளிசெய் விளக்கை உவந்து தொழுவர்;
விளிசெய் நெருப்பை வெறுத்தே அவிப்பர்;
அளிசெய் மகனை அருள்வர்; அழிப்பர்
களிசெய் மகனைக் கடுத்து.

இனிய சுடர் விளக்கை உவந்து தொழுகின்றார்; இடரான நெடிய நெருப்பைக் கடிது வெறுத்து அவிக்கின்றார். அமைதியாளனை யாவரும் மகிழ்ந்து போற்றுகின்றார்; செருக்கனை எவரும் இகழ்ந்து வெறுக்கின்றார். இந்நிலைமையை உணர்ந்து நெஞ்சம் திருந்தி நீர்மை சுரந்து உயர்ந்து கொள்ளுக.

### இவ் அதிகாரத்தின் தொகைக் குறிப்பு.

மனிதன் கலைகள் பல கற்க வுரியன்.
சில கற்றதும் செருக்கலாகாது.
கல்வி கடல்போல் விரிந்துள்ளது.
உலகில் பல மொழிகள் உள.
அறியுந் தோறும் அறியாமை தோன்றும்.
செருக்கு சிறுமை யுடையது.
அதனல் பெருமை அழியும்.
இழிவும் இடரும் விளையும்.
படிப்பின் பயன் அடக்கமே.
அடங்கி ஒழுகின் அதிசய இன்பமாம்.

௩௬-வது கல்விச் செருக்கு முற்றிற்று.

# அறுபதாம் அதிகாரம்

## செல்வத் திமிர்.

அஃதாவது தன்னைப் பெரிய செல்வன் என எண்ணிக் களித்து இறுமாந்து நடத்தல். மனிதனை நீசப்படுத்துகின்ற இந்த நெஞ்சத் திமிர் அஞ்சி ஒழிக்கத்தக்கது. கல்விச் செருக்கினும் பொல்லாதது ஆதலால் அதன் பின் இது வைக்கப் பட்டது.

591. செல்வமுறின் நல்லோர் திருவுடைய ராய்நின்று
பல்வழியும் நன்மை படிகின்றார்—புல்லரோ
உள்ளம் செருக்கி உறுதி நலமிழந்து
எள்ளல் உறுவர் இழிந்து. (க)

இ—ள்

நல்லவர் செல்வம் அடையின் எல்லார்க்கும் இனியரா யிருந்து பல வழிகளிலும் நன்மைகளைச் செய்கின்றார்; புல்லர் பெறின் உள்ளம் செருக்கி எள்ளல் இழிவுகளைப் புரிந்து இழிந்து படுகின்றார் என்க.

இது செல்வச் செருக்கு விளையும் இடம் கூறுகின்றது.

உலக வாழ்வு பொருளால் நடந்து வருகிறது. ஆகவே அதனை மனிதன் விழைந்து ஈட்டி எவ்வழியும் உவந்து பேணி வருகிறான். பலவகை நிலைகளிலும் தலைமையாய் நின்று காரியங்களைச் செய்து வருதலால் செல்வத்தை எல்லாரும் யாண்டும் ஆவலோடு மதித்துப் போற்றுகின்றனர். இங்ஙனம் யாவரும் விழைந்து வியந்து போற்றி வரவே பொருளுக்குப் பெரு மதிப்பு உண்டாயது. அந்த நிலைமையைக் கண்டதும் பொருளைப் பெற்றுள்ளவர் தங்களைப் பெரிய தலைமையாளராக எண்ண நேர்ந்தனர். அவ்வாறான எண்ணத் தடிப்புகள் மடமையும் புன்மையும் மருவி வளர்ந்த போது செருக்கு, மமதை, இறுமாப்பு, கருவம், திமிர் என அவை வெளியே தெரிய வந்தன. தரும நீர்மைகளை வளர்த்து இருமையும் பெருமை தருதற்கு உரிய செல்வம் இவ்வாறு சிறுமைகளை விளைத்து நிற்பது சேர்ந்த இடத்தின் தீமையால் நேர்ந்தது. இழிந்த இனத்தால் இழிவாய் நின்றது.

பெருந்தன்மையான நல்ல குலமக்களிடம் செல்வம் வந்து சேர்ந்தால் அவர் சிறந்த குண நீர்மைகளோடு உயர்ந்து விளங்கி எல்லார்க்கும் இனியராய் இதம் புரிந்து வருகின்றனர்.

புல்லரிடம் பொருள் புகின் எல்லா வகையிலும் தம்மை உயர்ந்தவராக எண்ணி இறுமாந்து பொல்லாச் செருக்கராய்ப் பொங்கித் திரிகின்றனர். சேர்ந்த இனத்தின் சிறுமையால் அரிய செல்வமும் அவலமடைய நேர்ந்தது. பாத்திர பேதங்களால் பழி துயரங்கள் விளைந்தன.

பாலையே ஊட்டினும் பாம்பு விடம்காட்டும்;
மாலையே சூட்டினும் மாயப்பேய்—மூலையாய்ப்
பொல்லாங்கே செய்யுமால் புல்லர் பொருள்பெறினும்
பொல்லாங்கே செய்வர் புகுந்து.

பாலும் மாலையும் அகமும் புறமும் அறிய வந்தன. பொருள் கல்வியையும் குறித்தது. பால் போல் நல்ல கல்வி உள்ளே சுரந் திருந்தாலும் வளமான செல்வம் வெளியே நிறைந்திருந்தாலும் புல்லர் உள்ளம் திருந்தி நல்லது செய்யார்; எள்ளிச் செருக்கி அல்லலே செய்வார் என்க. பாம்பும் பேயும் தீம்பும் கொடுமை யும் தெரிய நின்றன. செருக்கு மனிதனைப் பேயனாக்கித் தீய னாக்கிச் சிறுமைப் படுத்தும் ஆதலால் அதனை ஒருவி நின்றவர் பெருமை பெறுகின்றனர்.

செல்வம் நல்லவர்பால் சேர்ந்தால் புகழும் இன்பமும் புண்ணியமும் தருகின்றன. தீயவர்பால் சேர்ந்தால் பழியும் துன்பமும் பாவமும் புரிகின்றன.

புல்லரிடம் செல்வம் புகுந்தால் உள்ளக் களிப்பு எல்லை மீறி எழுகின்றது; எழவே அறிவு பாழ்போய் அவகேடுகளைச் செய்கின்றார்; அதனால் இருமையும் இழந்து இழிவுறுகின்றனர்.

"நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கட் பட்ட திரு." (குறள், 408)

கல்லாப் புல்லர் கையில் செல்வம் வரின் அவர் களிப்பு மீதூர்ந்து அடியோடு கெடுவர் எனத் தேவர் இங்ஙனம் பரிதாப மாய்க் கூறியிருக்கின்றார். நல்லார் வறுமையுறினும் இனியராய் நலம் பல பெறுவர். கல்லார் செல்வம் பெறினும் கொடியராய்க்

கேடே அடைவர் என்றதனால் அவரது மடமையும் கொடுமையும் அறியலாகும்.

"அறிவிலாத அற்ப ரானவர்க்குச்
செல்வம் அல்லது பகைவேறு உண்டோ?"
(திருவிளையாடல்)

அறிவு கெட்ட புல்லருக்கு வேறு பகை வேண்டியதில்லை; செல்வமே அவர்க்குக் கொடிய பகை எனப் பரஞ்சோதி முனிவர் இங்ஙனம் குறித்திருக்கிறார். பழி பாவங்களைச் செய்து கொடிய நரக துன்பங்களை விளைத்துக் கொள்ளுவர் ஆதலால் அற்பர்க்குச் செல்வம் அழிபகை ஆயது.

அற்பனாய் இழிந்து அழியாதே; தகுந்த குண நீர்மைகளைப் பேணிச் சிறந்த பெருந்தகையாளனாய் உயர்ந்து வாழுக.

---

592. செல்வம் ஒருவன்பால் சேர்ந்தக்கால் அப்பொழுதே
பொல்லாத நான்கும் பொருந்துமே—கல்லாத
மூடம் உலோபம் முரண்செருக் கம்மம்மா
பீடையெவர் உய்வார் பிழைத்து. (உ)

இ—ள்

ஒருவனிடம் செல்வம் சேர்ந்தால் அப்பொழுதே அவனிடம் மூடம் உலோபம் முரண் செருக்கு ஆகிய பொல்லாத புன்மைகள் கூடவே வந்து சேர்கின்றன; அந்தப் பீடைகளிலிருந்து அவன் தப்பி உய்வது அரிது என்பதாம்.

ஆக்கம், வளம், வாழ்வு, பாக்கியம், திரு, பொருள் என வரும் பெயர்களால் செல்வத்தின் உயர் நிலைகளை உணர்ந்து கொள்ளுகிறோம். இத்தகைய செல்வம் தனக்கு உரிமையாகப் பெருகி வரும்பொழுது மனிதன் உள்ளத்தில் பெருங் களிப்பு ஒருங்கே உயர்ந்து எழுகின்றது. எல்லா இன்ப நுகர்ச்சிகளுக்கும் ஏதுவாயுள்ளமையால் பொருளைக் கண்டதும் பெரு மகிழ்ச்சி கொண்டு எவரும் உள்ளம் பூரித்து உவந்து நிற்கின்றனர்.

"செல்வம் புலனே புணர்வு விளையாட்டுஎன்று
அல்லல் நீத்த உவகை நான்கே." (தொல்காப்பியம்)

உவகைச் சுவைக்கு உரியன நான்கு; அந்த நால் வகை நிலைகளிலும் செல்வம் தலைமையானது எனத் தொல்காப்பியனார் இங்ஙனம் காட்டி யுள்ளார்.

இன்ப நுகர்வுகளுக்கு இங்ஙனம் இனிய சாதனமாயிருத் தலால் செல்வத்தை எல்லாரும் பேராசையோடு பேணி வரு கின்றனர். அந்த ஆசை மயக்கத்தில் மோசம் விளைகின்றது. பொருள் ஒன்று இருந்தால் போதும்; அதனால் எல்லாச் சுக போகங்களையும் இனிது அனுபவிக்கலாம். கல்வி சீலம் முதலிய வேறு யாதும் வேண்டியதில்லை என்னும் இறுமாப்பு புல்லிய செல்வரிடம் பொங்கி எழுகின்றது. எழவே அவர் பணிவாய்ப் படிந்து படிப்பதை இழந்து விடுகின்றனர். கல்லாமை அவரைக் கவர்ந்து கொள்ளவே அவரது வழிமுறையும் மூடமாய் இழி வுறுகின்றது. ஒரு முறை நழுவியது பழி நிலையமாயது.

மூடம்=மடமை. அறியாமையால் மூடி யிருப்பது மூடம் என வந்தது. கல்வியறிவால் உள்ளம் தெளிவாய் ஒளிபெறுகின் றது. அது இல்லாவழி மூடமாய் இருள் மூடியுள்ளது.

உலோபம்=ஈயாமை. பொருள் மேல் கடும் பற்றுக் கொண்டு உள்ளே பேராசை மண்டி யுள்ளவன் வெளியே உலோபி என நேர்ந்தான்.

முரண்=மாறுபாடு, பகை. தவறாயிருந்தாலும் தான் சொன் னதையே முரட்டுத் தனமாய்ச் சாதிப்பது முரண் என வந்தது.

செருக்கு=மனத் தருக்கு. எல்லாவற்றிலும் தாம் சிறந்த வர் என உள்ளக் களிப்போடு ஓங்கி நிற்கும் மமதை செல்வ ரிடம் தேங்கி நிற்கிறது.

"பேரினும் பெரியன், மிக்க பிறப்பினும் பெரியன், செல்வச்
சீரினும் பெரியன், கல்வித் திறத்தினும் பெரியன், தெவ்வர்
போரினும் பெரியன், மற்றுஎப் பொருளினும் பெரியன், யானே
யாரினும் பெரியன், என்னும் என்னையார் அடக்கப் பாலார்?"

(மெய்ஞ்ஞான விளக்கம்)

அகங்காரத்தின் வடிவத்தை இது வடித்துக் காட்டியுளது.

இப்படிச் செருக்கிக் கூறும் சிறுமையைச் செல்லப் பிள்ளையா வளர்த்துச் செல்வம் பெருக்கி விடுதலை உலக அனுப

வத்தில் எவரும் எளிதே காணலாம். அரும்பு ஏறக் குறும்பு ஏறும் என்னும் பழமொழி செல்வச் செருக்கின் நிலைமையைக் குறிப்பாக உணர்த்தியுள்ளது.

பெரும்பாலும் செல்வம் கூடியிருக்கும் இடங்கள் கல்லாத மூடங்களாய் நீடி நிற்கின்றன. கல்வியறிவுடைய நல்லவர்கள் வறுமையால் வருந்துவதையும், பொல்லாதவர்கள் செல்வச் செருக்கில் செழித்துத் திரிவதையும் கண்ட ஒரு பெரியவர் உள்ளம் பரிந்து உளைந்தார். செல்வத்தின் அதி தேவதையான இலட்சுமி தேவியை நோக்கி வைதார். அவர் திட்டிச் சபித்த பாட்டு அயலே வருகிறது.

> "நாருத் தகடேபோல் நன்மலர்மேல் பொற்பாவாய்!
> நீருய் நிலத்து விளியரோ---வேருய
> புன்மக்கள் பக்கம் புகுவாய்நீ பொன்போலும்
> நன்மக்கள் பக்கம் துறந்து." (நாலடியார், 266)

"மணம் அற்ற தாமரை மலரில் மருவி இருக்கிற ஓ இலக்குமியே! குணமுடைய நல்லவரிடம் சேராமல் பொல்லாத புன் மக்களிடம் கூடி யிருக்கிருயே! நீ விளங்குவாயா? எரி சாம்பலாய் நீ நாசமாப் போகக் கடவது!" என்று கோபமாய் அவர் இப்படிச் சாபமிட்டு வைதிருக்கிருர்.

நல்லவரது அல்லலையும், புல்லியரது செல்வத் திமிரையும் பல வகையிலும் பார்த்து உள்ளம் கொதித்து அக் கவிஞர் இவ்வாறு பாடியிருத்தலால் செல்வம் கூடியிருக்கும் இடத்தையும் இயல்பையும் நாடி அறிந்து கொள்ளுகிறேம்.

> "செல்வச் செருக்கர் தலைவாயில் தோறும் திரிந்து திரிந்து
> அல்லற் றுயர்கொண் டிளைத்துவிட் டேன்அடியேன் இனிஅப்
> புல்லர்க்கு எளிமை புகலாமல் காத்தருள் பூந்தடமும்
> மல்லற் பழனமும் சூழ்கரு வாபுரி வானவனே."
>
> (கருவைக் கலித்துறை)

இப் பாட்டைப் பாடினவன் ஒரு பாண்டிய அரசன். பரிசில் கருதி யாரிடமும் இவன் போயிருக்க மாட்டான். இருந்தாலும் தமிழ்க் கல்வியாளரது நிலைமையையும், செல்வரது மடமையையும் இங்ஙனம் வருந்தி உரைத்திருக்கிருன். செல்வச் செருக்கர், புல்லர் எனச் செல்வரை எள்ளி இகழ்ந்திருத்தலால்

அவரது இழிவான மமதையும் புன்மையும் தெளிவாக அறிய வந்தன.

"பொருட் செல்வம் பூரியார் கண்ணும் உள" (குறள், 241) என நாயனார் கூறியுள்ளதும் இங்கே கூர்ந்து சிந்திக்க வுரியது.

"அறிவி லாதவர் ஈனர்பேச்சு இரண்டு
பகரு நாவினர் லோபர்தீக் குணங்கள்
அதிக பாதகர் மாதர்மேல் கலன்கள் புனைசூதர்

அசடர் பூமிசை வீணராய்ப் பிறந்து
திரியு மானுடர் பேதைமார்க் கிரங்கி
அழியு மாலினர் நீதிநூற் பயன்கள் தெரியாத

நெறி யிலாதவர் சூதினுல் கவர்ந்து
பொருள்செய் பூரியர் யோகமாய்ப் ரபஞ்ச
நிலையில் வீழ்தரு மூடர்பாற் சிறந்த தமிழ்கூறி

நினைவு பாழ்பட வாடி நோக்கிழந்து
வறுமை யாகிய தீயின் மேற்கிடந்து
நெளியு நீள்புழு வாயினேற்கு இரங்கி அருள்வாயே."
(திருப்புகழ்)

செல்வமுடையவரது புல்லிய நிலைகளை அருணகிரிநாதர் இவ்வாறு பொருள் நயம் தோன்ற விளக்கியிருக்கிறார்.

சிறந்தவீரர்கள், உயர்ந்த வள்ளல்கள், நல்ல கல்விமான்கள் ஆகிய இவர்களிடம் செல்வம் கூடி நில்லாமல் புல்லிய உலோபிகளிடம் பேர்ப்ப் பொருந்தியுள்ளதே! இது என்னே? எனப் போசராசன் ஒரு கவிஞனிடம் உல்லாச விநோதமாக் கேட்டான். வடமொழியில் வல்லவனை அக் கவிஞன் உடனே சுவையாக ஒரு சுலோகம் பாடினன். அயலே வருகிறது.

"சூரம்த்யஜதி வைதவ்யாத் உதாரம் லஜ்ஜயா புந:
ஸாபத்ந்யாத் பண்டிதம் லக்ஷ்மீ: ஸ்ரீயதே க்ருபணம்தத:"

"விதவையாய் விடுவோம் என்று வீரனை இலட்சுமி விலக்கினுள்; மறுபடியும் சேர நாணி வள்ளலை ஒருவினுள்; கல்வி ஆகிய மனைவியை மருவியுள்ளமையால் பண்டிதனை ஒதுக்கினுள்; யாதொரு நலனும் இல்லாமல் பேதையாய்ப் பிழைமண்டி இருந்தமையால் உலோபியை அவள் உவந்து தழுவிக் கொண்டாள்" என்பது மேலே வந்துள்ள சுலோகத்தின் பொருள்.

வீரன் எப்பொழுதும் போர்த்தொழிலை யுடையவன்; தன் உயிரையும் மதியாமல் போர்மேல் மூண்டு செல்பவன்; அவனைச் சேர்ந்தால் ஆபத்து என்று விலகினாள்; தன்னிடம் உள்ள பொருள்களை யெல்லாம் வள்ளல் வாரிக் கொடுக்கின்றவன் ஆதலால் அவனை மீண்டும் அணுக நாணினாள்; கல்வியே கற்புடைப் பெண்டிர் என்றபடி ஒரு பத்தினியை முன்னதாகவே பெற்றிருத்தலால் புலவனை நெருங்காமல் நீங்கினாள்; புல்லிய உலோபியிடம்தான் செல்லமா நிலைத்து வாழலாம் என்று கருதி அங்கே போய் இலக்குமி அமர்ந்து கொண்டாள் எனக் கவி புனைந்து கூறியுள்ளது நினைந்து சிந்திக்கவுரியது.

வீரம் கொடை கல்வி முதலிய உயர்ந்த நீர்மைகள் யாதும் இல்லாத இழிந்த பேதைப் புல்லர்களிடமே செல்வம் பெருகி நிற்கும் என்பது தெரிய வந்தது.

நல்ல அறிவாளிகள் செல்வத்தின் இயல்பையும் நிலையையும் நன்கு அறிந்து கொள்ளுகின்றனர். கொள்ளவே அதனை இனிய வழிகளில் பயன்படுத்திப் புகழ் புண்ணியங்களை எய்துகின்றனர்.

தெளிவான உணர்வு நலம் இல்லாமையால் தங்களிடம் சேர்ந்துள்ள பொருளைப் பெரிதாக எண்ணி மருள்கொண்டு மயங்கிச் செருக்கிப் பிலுக்கிச் சிலுகு புரிந்து உழலுகின்றனர்.

பித்தோடு கள்ளுண்ட பேய்க்குரங்கு தேட்கடுப்பும்
ஒத்தேறின் உள்ள வுறுதிபோல்—தத்திநிற்கும்
பேதைச் சிறுவர் பெரும்பொருள்கை யுற்றக்கால்
வாதை புரிவர் வலிந்து.

ஒரு துட்டக் குரங்கு; கொஞ்சம் பைத்தியம்; புளித்த கள்ளையும் குடித்திருந்தது; பேயும் பிடித்துக் கொண்டது; தேளும் கொட்டி விட்டது; இந்த நிலையிலுள்ள அந்தக் குரங்கைப் போல் பேதைச் சிறியர் செல்வம் பெற்றால் களிப்பு மீதூர்ந்து சேட்டைகள் செய்வர் என இது உணர்த்தியுள்ளது.

செல்வச் செருக்கு எள்ளலாய் அல்லலை விளைக்கும்; அந்தப் புன்மை படியாமல் பெருந்தன்மையுடன் நன்மை படிந்து ஒழுக.

———

593. நில்லாத செல்வ நிலையை நினையாமல்
பொல்லாச் செருக்குப் புரிதல்தான்—கல்லாத
புன்மக்கள் பூணும் புலையே புலமுடைய
நன்மக்கள் காணு நவை. (ரு)

இ—ள்

நிலையில்லாத செல்வத்தின் நிலையினை உணர்ந்து தெளியாமல் உள்ளம் செருக்குதல் அறிவில்லாத இழிந்த மக்கள் இயல்பாம்; அறிவுடைய நன்மக்கள் அவ்வாறு செருக்கி நில்லார் என்க.

இது நிலை தெரியாமல் செருக்குவது புலை என்கின்றது.

அவலமான இழி நிலைகள் யாவும் அறியாமையால் நிகழுகின்றன. முன்னும் பின்னும் எண்ணி யுணராமையால் மனிதன் கழி செருக்குடையனாய் இழிந்து படுகின்றான். வாழ்க்கைக்கு உரிய வளங்கள் செல்வங்கள் என வந்தன. அவை நிலையில்லாதன; நீர் மேல் எழுகின்ற அலைகள் போல் பார்மேல் எழுந்து மறைந்து போகின்றன.

இளமை கழிகிறது; மூப்பு நுழைகிறது; செல்வம் ஒழிகிறது. இந்த அழிவுகளை நாளும் விழி எதிரே கண்டிருந்தும் உணர்ந்து சிந்திக்காமல் ஊனம் உறுகிறான். உண்மையை யுணர்வது ஞானம் ஆய் நன்மை பல தருகிறது. அங்ஙனம் உணராது ஒழிவது ஈனமாய் இழிவுகளை விளைக்கிறது. தன் செல்வ நிலைமையை உண்மையாக எண்ணி உணரின் மனிதன் நன்மை அடைய நேர்கின்றான். எண்ணி நோக்காமையால் இழிவாய்க் களி மிகுத்து நிற்கிறான்.

செல்வர்யாம் என்றுதாம் செல்வுழி எண்ணாத
புல்லறி வாளர் பெருஞ்செல்வம்---எல்லில்
கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போல் தோன்றி
மருங்கறக் கெட்டு விடும். (நாலடியார்)

மேகத்தில் தோன்றி மறைகிற மின்னலைப் போல் செல்வம் விரைந்து மறைந்து போம்; அந்தப் போக்கை எண்ணி நோக்காமல் புல்லறிவாளர் செல்வம் உடையேம் என்று செருக்கித் திரிகின்றார் என இது இளித்திருக்கிறது.

முல்லை முகை சொரிந்தால் போன்றினிய
பாலடிசில் மகளிர் ஏந்த
நல்ல கருணையால் நாள் வாயும்
பொற்கலத்து நயந்துண்டார்கள்
அல்லல் அடைய அடகிடுமின்
ஓட்டகத்துஎன் றயில்வார்க் கண்டும்
செல்வம் நமரங்காள் நினையன்மின்
செய்தவமே நினைமின் கண்டீர்! (சீவக சிந்தாமணி)

முல்லை அரும்பு போன்ற நல்ல நெல் அன்னத்தை இனிய சுவைக் கறிகளுடன் நெய்யும் பாலும் கலந்து பொன் கலத்தில் உண்ட செல்வச் சீமான்களும் பின்பு கையில் ஓடு ஏந்திப் பிச்சை எடுத்துள்ளனர்; ஆகவே செல்வம் நிலையில்லாதது; அதனை நினைந்து செருக்காமல் நல்ல தரும நெறியை நாடிக் கொள்ளுங்கள் என இது உணர்த்தியுள்ளது.

கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று. (குறள், 332)

கூத்தாடும் இடத்தில் சனங்கள் வந்து கூடியிருந்து பின்பு ஒருங்கே பிரிந்து போதல் போல் செல்வம் விரைந்து சிதைந்து போம்; அது உள்ளபோதே நல்லதைச் செய்து கொள்; வீணே செருக்கி நில்லாதே எனத் தேவர் இங்ஙனம் போதித்திருக்கிறார்.

"மனைத்திற வாழ்க்கையை மாயம்என் றுணர்ந்து
தினைத்தனை ஆயினும் செல்வமும் யாக்கையும்
நிலையா வேன்றே நிலைபெற உணர்ந்தே
மலையா அறத்தின் மாதவம் புரிந்தேன்."
(மணிமேகலை, 28)

உண்மை நிலையை உணர்ந்து செய்தவம் மருவி மாசாத்துவான் உய்தி பெற்றுள்ளதை இவ்வாறு உரைத்திருக்கிறான்.

"துகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோடு உண்க
அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்." (நாலடியார், 2)

செல்வம் எவரிடமும் நிலைத்து நில்லாது; சகடக்கால்போல் மாறி மாறிச் சுழன்று வரும்; அது கிடைத்த போதே பலர்க்கும்

பகுந்து கொடுத்து அறத்தை ஆக்கிக் கொள்ளுக என இது குறித்துள்ளது. தருமம் தலை காக்கும் என்பது தனி மொழி.

பொருள் வாய்த்த பொழுதே புண்ணியங்களை விளைத்துக் கொள்க; அவ்வாறு செய்யாமல் செருக்கி நின்றால் சின்ன மனிதனாய்ச் சிறுமையடைவாய் என மேலோர்கள் பல வழிகளிலும் தெளிவாக உரைத்திருக்கின்றனர்.

புன் மக்கள் பூணும் புலை.

செருக்கை விழைந்து கொள்ளும் மக்களுடைய இழி நிலையை இது விழி தெரிய விளக்கியது. சின்னத்தனத்தின் சின்னம் ஆகச் செருக்கு மன்னியுளது; அதனை மருவி இழியாதே; ஒருவி உயர்ந்து பெரிய மனிதனாகுக.

வணக்கம் இல்லார்கள் எல்லாம் வண்பயன் என்னும் பாரம்
இணக்கம் இல்லார்கள் என்போல் எனத்தலை நிவந்த சாலி;
வணக்கம் உள்ளார்கள் எல்லாம் வண்பயன் என்னும் பாரம்
இணக்கம் உள்ளார்கள் என்போல்எனத்தலைஇறைஞ்சிற்றம்மா.
(திருவானைக்காப் புராணம்)

உள்ளே அறிவாகிய சாரமுடையவர் அமைதியாய் வணங்கி அமர்வார்; சாரமாகிய அப் பாரம் இல்லாதவர் செருக்காய் நிமிர்ந்து நிற்பார் என்பதைச் சாலி கோலிக் காட்டியது என இது கூறியிருத்தலைக் கூர்ந்து நோக்குக. சாலி = நெற்பயிர்.

செருக்கி நிற்பவர் சிறியவராயிழிகின்றனர்; அது செய்யாதவர் பெரியவராய் உயர் மதிப்படைகின்றனர். நல்ல பான்மைகளை மருவி எல்லா வகைகளிலும் மேன்மை பெறுக.

---

594. உலக நிலையை உணராமல் உள்ளம்
கலக நிலையமாய்க் காட்டிப்—புலைமிகுந்து
நெஞ்சம் செருக்கல் நெடுந்தீமை யாகுமே
கொஞ்சம் நினைந்து கொளல். (௪)

இ—ள்

உலகத்தின் உண்மை நிலையை உணர்ந்து பாராமல் கலகமாய்ப் புன்மை புரிந்து புலைமிகுந்து உள்ளம் செருக்குதல் கொடிய தீமையாம்; நிலைமையை நினைந்து தெளிக என்பதாம்.

சிருட்டி பேதங்கள் அதிசயமுடையன. விண்ணும் மண்ணும் விரிகடல்களும் எண்ணிடலரியன. எல்லை யில்லாதன. மனிதன் கண்டுள்ள நில உருண்டைகள் சில. காணுதனபல.

ஆசியா.
ஐரோப்பா.
அமெரிக்கா.
ஆப்பிரிக்கா.
ஆஸ்திரேலியா.

என்னும் இந்த ஐந்து கண்டங்களும் மனித சமூகத்தால் காணப் பட்டுள்ளன. இவற்றுள் ஆசியா மிகவும் பெரியது. இதன் நீளம் 6700 மைல். அகலம் 5400மைல். ருஷியா, துருக்கி, அரேபியா, தீபேத்து, பாரசீகம், சீனம், ஜப்பான், ஆப்கானி, பர்மா, இந்தியா என்னும் தேசங்கள் பல இந்தக் கண்டத்தில் அடங்கியிருக்கின்றன. அகண்டமான உலகப் பரப்பில் சில கண்டங்கள் தெரிய நின்றன.

இந்தப் பூமண்டலம் போல் பல்லாயிரம் மடங்கு பெரியன வாய்ச் சூரியன் சந்திரன் முதலிய கோளங்கள் உள்ளன. இவை யாவும் சேர்ந்து ஓர் அண்டமாம். இத்தகைய அண்டகோடிகள் அளவிடலரியன.

மண்டலத்தின் மிசைஒருவன் செய்தவித்தை
அகோ எனவும் வார ணுதி
அண்டமவை அடுக்கடுக்காய் அந்தரத்தில்
நிறுத்துமவ தானம் போல
எண்தரும்நல் அகிலாண்ட கோடியைத்தன்
அருள்வெளியில் இலக வைத்துக்
கொண்டு நின்ற அற்புதத்தை எவராலும்
நிச்சயிக்கக் கூடா ஒன்றை. (தாயுமானவர்)

கோழி முட்டைகளை அந்தரத்தில் அடுக்கு அடுக்கா நிறுத்தி வைத்திருத்தல் போல் அண்ட கோடிகளை அகில வெளிகளில் விளங்க வைத்துள்ள பரமனது அதிசய நிலை யாரும் அறியமுடி யாத அற்புதமுடையது என்னும் இது இங்கே ஆராய்ந்து சிந்திக்க வுரியது. வாரணம்=கோழி. அண்டம்=முட்டை.

பல்லாயிரம் அண்டங்கள் எல்லையில்லாத நிலையில் எங்கும் பரவி யாரும் யாண்டும் நிலை காணாதபடி நிலவி யிருக்கின்றன.

பூகோள ககோளங்களின் நிலைகளை விஞ்ஞான அறிவால் எவ்வளவு துருவி அறிந்தாலும் தினை அளவும் முடிவு அறியாதபடி அவை நெடிது நிலவி நிற்கின்றன. இவ்வாறு பரந்துள்ள அண்ட கோடிகளுள் நிலவுலகம் முழுவதும் ஒரு சிறு மண்டலமாய் நிலவியுளது. இந்த மண்டலத்தில் மனித இனம் கண்டுள்ள கண்டங்கள் மிகவும் சிறிய துண்டங்களே.

எல்லையிலா அண்டத்தில் இவ்வுலகம் ஓரணுவே
எல்லை தெரிக எதிர். (1)

அண்டங்கள் கோடி அவற்றுள்ளே ஓரணுவாக்
கண்டங்கள் உள்ளன காண். (2)

இந்தக் காட்சிகளைக் கண்ணூன்றிக் கருதிக் காணுக.

ஒரு கண்டத்தில் பல தேசங்கள் இருக்கின்றன. குமரி முனை முதல் இமயமலை வரையுள்ள நிலப்பரப்பு இந்தியா என வந்தது. இந்தப் பெயர் முந்திய காலத்தில் இல்லை. இடையே புகுந்தது. முன்னம் பரதகண்டம் என்றே இந் நில மண்டலம் நிலவியிருந்தது. ஆசியாக் கண்டத்தின் தென் பகுதியில் உள்ளது. பதினறு லட்சம் சதுர மைல் அளவுடையது. அரிய பல நதிகளும் பெரிய மலை வனங்களும் சிறந்த பொருள் வளங்களுமுடைய இந் நில மண்டலம் உலக உருண்டையில் ஓர் அணுவாய் நுணுகியுளது.

ஒரு சின்ன ஊரில் உள்ள ஒருவன் ஆயிரம் ஏக்கர் நிலம் தனக்கு உரிமையாயிருந்தால் தன்னைப் பெரிய செல்வனாக அவன் எண்ணிக் கொள்ளுகின்றான். தன்னுடைய ஊரைப் போல் பல்லாயிரம் ஊர்கள் அந்த ஜில்லாவில் அடங்கியிருக்கின்றன. அத்தகைய நில வட்டங்கள் பல சேர்ந்தது ஒரு மாகாணம்; அவ்வகை மாகாணங்கள் பல கொண்டது ஒரு தேசம். அவ்வாறான தேசங்கள் பல கூடியது ஒரு கண்டம்; அந்தக் கண்டங்கள் பல திரண்டது நிலவுலகம். அப்படி உலகங்கள் பல கொண்டது அண்டம். அந்த நிலையில் உள்ள அண்டங்கள் அளவிடலரியன. இந்த அதிசய நிலையைச் சிறிது சிந்தனைசெய்து பார்த்தால் எவனும் தன்னை ஒரு செல்வன் என்று எண்ணிச்

செருக்கான். எண்ணிப் பாராமையால் யாண்டும் மதி மருண்டு மண்ணு யிழிகின்முன்.

எல்லையிலா அண்டத்துள் இவ்வுலகம் ஓர்தூசி
சொல்லியஅத் தூசியில்ஓர் தூசியாய்ப்---புல்லியுள்ள
உன்னுடும் உன்னூரும் உன்னிலையும் உன்னினல்
என்னும் அதனைநீ எண்.

உலகப் பரப்பில் உன்னுடைய தேசம் ஒரு தூசி. அந்தத் தூசியுள்ளே உன் நாடு கண்ணுக்குத் தெரியாத சின்னத்தூசி யாயுள்ளது; அந்தச் சிறு தூசியுள் உன் ஊர் உளது; அவ் வூருள் உனக்கு நிலம் இருக்கிறது; அதனை நினைந்து நீ தலை செருக்கினல் அது எவ்வளவு மடமை! எத்துணை மதியீனம்! உண்மை நிலைகளை ஓர்ந்து உள்ளம் திருந்துக.

ஒரு பெரிய அரசன்; வரருசி என்னும் தவசியைக் கண்டு ஒரு நாள் உரையாடிக் கொண்டிருந்தான். தன்னை மிகுந்த செல்வ வளங்கள் நிறைந்த உயர்ந்த திருவுடையவன் என்று அம் மன்னன் எண்ணிக் களித்திருப்பதை உரையால் அத் துறவி உணர்ந்து கொண்டார். உடனே தமது அடர்ந்த தாடியிலிருந்து ஒரு மயிரைப் பிடுங்கி எடுத்து "இதன் நுனியைப் பார்!" என்று அவன் எதிரே நீட்டினர். அவன் பார்த்தான்; யாதும் தெரியா மல் திகைத்தான். "என் தாடியில் எவ்வளவு மயிர்கள் உள்ளன?" என்று இவர் கேட்டார். "எண்ணி அறிய முடியா" என்று அம் மன்னன் சொன்னன். "இந்த மயிர்கள் போல் எண்ணமுடியாத பொருள்கள் உலகில் உள்ளன; உன்னிடம் இருப்பது இந்த ஒரு மயிரின் நுனி அளவினும் சிறியது; இதனை நீ உணர்ந்து கொள்ள வேண்டும்" என்று குறுமுறுவலோடு கூறினர். அர சன் நாணினன். தன் உள்ளச் செருக்கை ஒழித்து ஒழுகும்படி அப் பெரியவர் பரிவோடு விநயமாய்க் கூறியருளினர் என உணர்ந்து வணங்கி உரிமையோடு தொழுது போயினன்.

கோஞ்சம் நினைந்து கோளல்.

என்றது நெஞ்சம் செருக்கிய பொழுது நினைந்து சிந்திக்க வேண்டிய நிலைகளை உணர்த்தியது. அளவிடலரிய பொருள்கள் உலகில் பரவியிருக்கின்றன. உன்னிடம் உள்ளதைப் பெரிதாக எண்ணி உள்ளம் செருக்காதே. உணர்ந்து திருந்துக.

595. ஆங்காரத் தீமை அகம்செருக்கி மேலோங்கி
ஈங்கார் எமக்குநிகர் என்னுமால்—பாங்கு
தெரிந்து தெளியாமல் தீவினையே மண்டிப்
பரிந்து சுழலல் பழி. (ரு)

இ—ள்

ஆங்காரமாகிய தீமையால் உள்ளம் செருக்கி எமக்கு ஈங்கு எவரும் நிகர் இலர் என்று கருவம் மீதூர்ந்து இழிமடைமையாய்க் களி மிகுந்து அலைதல் பழியாம் என்க.

உள்ளத்தில் கிளைத்தெழுகின்ற துடுக்கும் மிடுக்கும் திமிரும் நிமிர்வும் வெளியே பல பெயர்களை அடைகின்றன. நான் பெரியவன் என்று முனைந்து வரும் நெடிய முனைப்பு ஆங்காரம் என வந்தது.

மனத் தடிப்பு மருள் மண்டி எழுந்தபொழுது மனிதன் இழிந்தவனாய் வளர்ந்து நிற்கிறான். புறத்தில் ஒருவன் விரிந்து தோன்றுகிற தோற்றங்களுக்கெல்லாம் மூலகாரணங்கள் அகத்தில் உறைந்திருக்கின்றன. நினைப்பின்வண்ணமே நிலைகள் நிலவி வருகின்றன. நல்ல எண்ணங்களையுடையவர் நல்லவராய் எழுகின்றனர். தீய எண்ணங்களையுடையவர் தீயவராய் விரிகின்றனர். மேலோர் கீழோர் என்பன குண நீர்மைகளின் மேன்மை கீழ்மைகளாலாயின.

இழி குணங்களோடு பழகினவன் எவ்வழியும் இழிந்துபடுகின்றான். செல்வம் கல்வி முதலிய உயர் நலங்களை எய்தியிருந்தாலும் அவன்நிலை யாண்டும் பரிதாபமாய் முடிந்து படுகின்றது.

மனச் செருக்கு மருண்ட நிலையில் விளைதலால் அதனையுடையவன் இருண்ட பழி வழிகளில் வெருண்டு திரிய நேர்கின்றான். அமைதியும் இன்பமும் அவனைவிட்டு விலகிவிடுகின்றன. அவலத் துன்பங்கள் அடர்ந்து சூழ்ந்து கொள்ளுகின்றன. செருக்கு என்னும் பேய்வாய்ப் பட்டவன் கொடிய நோய்வாய்ப் பட்டவனாய் நொந்து தவிக்கின்றான்.

"ஆங்காரம் என்னுமத யானைவாயில் கரும்பாய்
ஏங்காமல் எந்தையருள் எய்துநாள் எந்நாளோ?"

இந்தவாறு தாயுமானவர் கவன்று இறைவனை நோக்கி

நொந்து கூறியுள்ளார். யானை வாயில் அகப்பட்ட கரும்புபோல் ஆங்காரத்தின் வசப்பட்டு மனிதன் அழிந்து படுகிருன் என்பது இதனல் தெளிந்து கொள்ள வந்தது.

செல்வம் கல்வி முதலிய வசதிகள் வாய்த்தால் உள்ளம் கனிந்து அவற்றை நல்ல வழிகளில் நன்கு பயன்படுத்த வேண்டும்; அவ்வாறு செய்யின் அந்த மனிதன் உயர்ந்த திருவாளனுய்ச் சிறந்த மதிமானுய்ச் சீர் பல பெறுகிருன். அங்ஙனம் செய்யாமல் செருக்கி நின்ருல் மதிப்பும் மாண்பும் இழந்து இழிந்து கழிகின்ருன்.

ஆங்காரத்தைத் தீமை என்றது தன்னை யுடையானைச் சின்ன வனுக்கிச் சிறுமை பல செய்யும் அதன் கொடுமை தெரிய. நெஞ்சத் திமிரால் மனிதன் நிலை குலைந்து போகின்ருன். புலைப் புன்மைகள் புடை சூழ்ந்து மூடிக் கொள்வதால் அவன் கடையனுய் அதோகதி யடைகிருன்.

யான் என்னும் செருக்கு அகங்காரம் ஆகிறது.

எனது என்னும் தருக்கு மமதை ஆய் வருகிறது.

இந்தத் தொடர்புகளின் வழியே இடர்கள் பெருகுகின்றன.

அகந்தையை அகங்காரன் சேர்ந்து அருமகள் மமதையோடும்
இகந்தலோ பனையும் பெற்ருன்; இச்சையை அவனும் வேட்டுத்
தகுந்திறல் இடம்பன் தன்னைத் தந்தனன்; இடம்பன் தானும்
மிகுந்த வஞ்சனையைப் புல்லி மிகும் அசத்தியனை ஈன்ருன்.

(மெய்ஞ்ஞான விளக்கம்)

அகங்காரனுக்கு அகந்தை மனைவி; மமதை மகள்; உலோபன் மகன்; இச்சை மருமகள்; இடம்பன் பேரன்; வஞ்சனை அசத்தியம் முதலிய தீமைகள் எல்லாம் இந்த மரபில் வந்துள்ளன. உருவகங்களாய் மருவியெழுந்துள்ள தீய வருக்கங்களைக் கூர்ந்து நோக்கி நேய நிலைகளை ஓர்ந்து கொள்ளுக.

அமைதி இதம் முதலிய இனிய நீர்மைகள் மனிதனை உயர்த்தி உயர்ந்த இன்ப நலங்களை உதவுகின்றன. ஆங்காரம் முதலியன கொடுமைகளாய் வளர்ந்து நெடிய துயரங்களை விளைக்கின்றன. துன்ப விளைவுகளான தீய தொடர்புகளை ஒழித்துத் தூய நீர்மைகளை அன்புரிமையுடன் வளர்த்து வரின் இருமையும் மகிமைகளாய் இன்ப நலங்கள் பெருகி வருகின்றன.

596. மடமை இருளில் மனச்செருக் கென்னும்
நெடியபேய் நின்று நிமிர்ந்து—கொடிய
பழியுரைகள் ஆடியே பல்லுயிரும் அஞ்ச
அழிதுயர்கள் செய்யும் அடர்ந்து. (சு)

இ—ள்

மனச் செருக்கு என்னும் நெடிய பேய் மடமை யிருளில் தலை நிமிர்ந்து திரிந்து பலரையும் இகழ்ந்து பழிமொழிகள் ஆடி எவரும் அஞ்ச அழி துயர்கள் செய்யும் என்பதாம்.

அறிவு இனிய ஒளியாய் நின்று அரிய பல உறுதி நலங்களை மனிதனுக்கு அருளி வருகின்றது. அந்த ஒளி குறைந்த அளவு இருள் சூழ்ந்து கொள்கின்றது. அது சூழவே மருள்கள் பல மண்டி மனித வாழ்வு பாழ்படுகின்றது.

அறிய வேண்டியதை அறியாமல் இருப்பது அறியாமை யாய் முடிகின்றது. அதனல் கொடிய அவலங்கள் விளைகின்றன.

மடமையை இருள் என்றது உண்மை நெறிகளையுணராமல் புன்மை படிந்து உழலும் அதன் புலை நிலை கருதி. அஞ்ஞானம் மூடம் அறிவின்மை பேதைமை என்பன எல்லாம் ஆன்ம வுரி மைகளை இழந்து நிற்கும் இழிவுகளை விளக்கி நிற்கின்றன.

உணர்வின் அளவே உயர்வு விளைந்து வருகிறது.

குண நீர்மைகளால் மனிதன் மகிமை பெற்று வருகிறுன். மனச் செருக்கு குணக்கேடு ஆதலால் அதனை யுடையவன் இழிக்கப் படுகிறுன். இழிவும் உயர்வும் வெளியிலிருந்து வருவன வல்ல. மனிதனுடைய செயல் இயல்களால் அவை மருவி நிற்கின்றன. நல்ல தன்மையால் எல்லா நன்மைகளுமாகின்றன.

பண்பு படிந்த மனிதன் யாண்டும் இன்ப நிலையமாய் உயர்ந்து வருகிறுன். அது படியாதவன் துன்ப நிலையமாய் இழிந்து நிற்கிறுன்.

எவ்வளவு செல்வங்கள் எய்தி யிருந்தாலும் மேலோர் அமைதியாகவே அடங்கி யிருப்பர். சிறிது கிடைத்தாலும் கீழோர் செருக்கு மீதூர்ந்து வீணே பிலுக்கி நிற்கின்றுர்.

"சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோர்
எக்காலும் சொல்லார் மிகுதிச்சொல்---எக்காலும்
முந்திரிமேல் காணி மிகுவதேல் கீழ்தன்னை
இந்திரனு எண்ணி விடும்." (நாலடியார்)

மேன் மக்களுடைய நிலையையும் கீழ் மக்களது இயல்பையும் இது விளக்கியுள்ளது. உலகம் முழுவதும் ஆளும் படியான அரச செல்வம் பெற்றாலும் மேலோர் அமைதியா யிருப்பர்; சிறிது பொருள் கிடைத்தாலும் கீழோர் களி மிகுந்து செருக்கித் திரிவர்என்றதனல் பெருமைசிறுமைகளின்பெற்றி தெரியவந்தது.

"வெள்ளென்பு பெற்றநாய் துண்ட விடக்குறின்
கொள்ளும் நனிகளி கோடியும் வேண்டுமோ?
உள்ளதுடன் இம்மி மிகினும் உறுபகீழ்
வெள்ளத் தணைய வியப்பு." (இன்னிசை)

எலும்பைக் கடித்துக் கொண்டிருந்த நாய்க்கு விடக்குத் துண்டம் கிடைத்தது போல் கீழ்மக்கள் சிறிது பொருள் உற்றாலும் பெரிதும் களித்து நிற்பர் என இது குறித்திருக்கும் குறிப்பைக் கூர்ந்து நோக்குக. கீழின் இழி நிலையை நாய் உவமை தெளிவாக விளக்கியது.

நல்ல அறிவையும் பண்பையும் இழந்த பொழுது மனிதன் இவ்வாறு இழிந்து படுகிறன். எவ்வளவு மடையனுயிருந்தாலும் பொருள் கையில் வந்தால் அவன் ஒரு பெரிய மனிதனுய்ப் பிலுக்கித் திரிய நேர்கிறன். இருள் மண்டியுள்ள மருளனையும் பொருள் பெருமைப் படுத்தி விடுகிறது.

"Fortune favours the fools."

"செல்வம் மூடரை மேன்மைப் படுத்துகிறது" என்னும் இது இங்கே அறிய வுரியது. அறிவிலிகளை எந்த நாடும் அவமதிக்கிறது. அவர் செல்வம் பெற்றிருந்தாலும் புல்லியராகவே கருதப் படுகின்றனர். அவரது புலை நாற்றம் நிலை மீறி வெளி வருதலால் எவரும் இளிவாகவே அவரை எண்ணி ஒதுங்குகின்றனர்.

கிளர்ந்த பொருள்களால் கீழோர் உயர்ந்து
வளர்ந்து வரினும் வழுவை---அளந்துலகம்
கண்டு தெளியக் களிப்பும் செருக்குமே
விண்டு விளக்கும் விரைந்து.

தமது இளி நிலைகளைக் களி செருக்குகளால் வெளியறியக் கீழோர் விளக்கி விடுவர் என இது விளக்கியுள்ளது.

செருக்கு என்னும் நெடிய பேய்.

என்றது அதன் கொடிய தீமை தெரிய வந்தது.

இருள் நிறைந்த இரவிலேதான் பேய் வெளி ஏறி வெந்துயர் செய்யும். மடமை நிறைந்த இடத்திலேதான் செருக்கு நெடிது ஓங்கி நிமிர்ந்து கொடுமைகள் புரியும். அறிவொளி பரவிய பொழுது அது அகன்று போய் விடும் என்க. செருக்கித் திரிவது அறிவு கெட்ட மூடர் இயல்பாம் என்பது பெறப்பட்டது.

"அறியாமை யோடிளமை கூடுவதாம் ஆங்கே
செறியப் படுவதாம் செல்வம்---சிறிய
பிறைபெற்ற வாணுதலாய்! தானே ஆடும்பேய்
பறைபெற்றால் ஆடாதோ பாய்ந்து." (பழமொழி)

அறிவில்லாத வாலிபனிடம் பொருள் சேர்ந்தால் பறை அடிக்கப் பேய் ஆடுவது போல் அவன் களிப்பு மிகுந்து தருக்கித் திரிவன் என இது உணர்த்தியுள்ளது. மடமையும் சிறுமையும் மருவியுள்ள இடத்தே செருக்கு பெருகி நிற்கும் என்றதனால் அதன் இருப்பும் இயல்பும் அறிய நின்றன.

செருக்குடையார் மடையர் சிறியர் என இளிக்கப் படுவர்; அந்த இளிவு நிலை ஏறாமல் இனியனாய் ஒழுகி எவ்வழியும் விழுமியனாகுக.

---

597. தீய செருக்கென்னும் தீயோன் தலைநிமிர்ந்தால்
தூய அறிவு தொலையுமே—மாய
மருளும் இருளும் மடமையும் அங்கே
உருளும் புரளும் ஒருங்கு. (எ)

இ—ள்

தீய செருக்கால் தூய அறிவு ஒழியும்; மாயமான மருளும் மையல் இருளும் வெய்ய மடமையும் விரிந்து பெருகி வெந்துயர் புரியும் என்க.

நன்மை தீமை என்னும் மொழிகளை நாளும் நாம் கேட்டு வருகிறோம். எது நன்மை? எது தீமை? இந்தக் கேள்விகளுக்குத்

தெளிவான விடைகள் எளிதில் கிடையா. மனிதனுடைய எண்ணங்களும் செயல்களும் நல்லனவாயின் நன்மை; தீயனவாயின் தீமை ஆம். நன்மையால் புகழும் இன்பமும் உளவாகின்றன. தீமையால் பழியும் துன்பமும் வருகின்றன.

தான் சுகமாயிருக்க விரும்புகின்றவன் எவ்வழியும் நல்லதையே செய்ய வேண்டியவனாகின்றான். அவ்வாறு செய்யானாயின் அல்லல் அடைய நேர்கின்றான். கரும காரணங்களின் மருமங்கள் கருதியுணர வுரியன. தான் விதைத்த வினையின் பலனையே எவனும் அனுபவித்து வருகிறான். வினையின் விளைவுகள் நினைவரு நிலையில் நேரே வருகின்றன.

ஒருவன் உள்ளத்தில் செருக்கு அடைந்தால் கள்ளைக் குடித்த குரங்கு போல் அம் மனம் துள்ளித் துடித்துத் துடுக்குகள் மிகச் செய்கின்றது. களி வெறி அதிகமானால் உயிர்போன சவம் போல் உணர்ச்சியின்றி யுள்ளது. நெடிய செருக்கால் நெஞ்சம் திமிர் கொண்டபோது அந்த மனிதன் யாரையும் மதியாமல் உன்மத்தனாய் இருக்கிறான்.

அண்ணலந் திருவிடை அழுந்தி யாரையும்
எண்ணலன் செந்நெறி இயற்ற ஓர்கலன்
கண்ணிலன் மதியிலன் களிப்பின் ஓர்மகன்
மண்ணிடை விரைவொடு வழிக் கொண்டாலென.

(கந்த புராணம்)

விழிதெரிந் திருக்கவும் குருடு மேவுவர்;
மொழிதெரிந் திருக்கவும் மூகர் ஆகுவர்;
பொழிமது வன்றியும் மயக்கம் பூணுவர்;
அழிதரு காலமாம் அரசர் வண்ணமே.

(செவ்வந்திப் புராணம்)

சிறியரே மதிக்கும் இந்தச் செல்வம்வந் துற்றஞான்றே
வறியபுன் செருக்கு மூடி வாயுளார் மூகர் ஆவர்;
பறியணி செவியுளாரும் பயிறரு செவிடர் ஆவர்;
குறிபெறு கண்ணுளாரும் குருடராய் முடிவர் அன்றே.

(குசேலோபாக்கியானம்)

“நோக்கிருந்தும் அந்தகராக் காதிருந்தும்
செவிடரா நோயில்லாத

வாக்கிருந்தும் மூகையரா மதியிருந்தும்
இல்லாரா வளரும் கைகால்
போக்கிருந்தும் முடவரா உயிரிருந்தும்
இல்லாத பூட்சி யாரா
ஆக்குமிந்தத் தனமதனை ஆக்கமென
நினைத்தனைநீ அகக் குரங்கே." (நீதிநூல்)

செல்வச் செருக்கு அகத்தில் ஏறிய பொழுது அந்த மனிதர் புறத்தில் இருக்கும் நிலைகளை இவை உணர்த்தி நிற்கின்றன.

மனக் களிப்பு முற்றி மதிகெட்டு மதோன்மத்தரா யிருத்தலால் செல்வச் செருக்கர் பல் வழிகளிலும் இழிந்து பழியடைகின்றனர். அவரை அணுகினவரும் அவலமுறுகின்றனர்.

"நாவலர் புகழ்சிவ ஞான தேசிக
எவ்வம் அகன்ற சைவ நாயக
நின்னடிக் கமலம் நெஞ்சுற இருத்தி
நறுமலர் தூவி நாடொறும் பரவுதூஉம்
செல்வச் செருக்கிற் செவிடுபட் டிருக்கும்
காதில் தீம்பால் கமர்கவிழ்த் தாங்கு
பாப்பல பன்முறை பாடி நின்னைப்
பாடா மாந்தர் பக்கல்
கூடா அடியரில் கூட்டுக எனவே."

"ஞான நாயக! நல்ல ஆவின் பாலைக் கமரில் கவிழ்த்தது போல் செல்வச் செருக்கால் செவிடு பட்டிருக்கும் காதில் சுவையான இனிய தமிழ்ப் பாக்களை நவையாகச் சொரிகின்ற பாவலர் பக்கம் நான் சேராமல் அருள் புரிக" எனத் தமது குருநாதனை நோக்கிச் சிவப்பிரகாச சுவாமிகள் இவ்வாறு வேண்டியிருக்கிறார்.

செல்வச் செருக்கால் மனிதன் எவ்வளவு இழிந்தவனாய் ஈனமடைந்துழலுகிறான்! என்பது இதனால் அறிந்து கொளளலாம்.

மருளும் இருளும் மடமையும் அங்கே
உருளும் புரளும் ஒருங்கு.

செருக்கு உள்ள இடத்தில் இருக்கும் புன்மைகளை இது குறித்துள்ளது. அகத்தின் விளைவுகள் புறத்தில் வெளியாகின்றன.

தன்னைப் பெரிய செல்வச் சீமான் என்று கருதிப் பிறர் வியந்து புகழ்ந்து உவந்து கொள்ளுவர் என உள்ளம் களித்து மருண்டு மயங்கி உருண்டு புரளுதலால் அந்த மயக்க நிலைகள் மருள், இருள் என வந்தன.

ஒளி இழந்த விழியன் வழி நடப்பது போல் உள்ளச் செருக்கால் அறிவு பாழ் போனவன் எவ்வழியும் அவலமடைந்து பழி படிந்து இழிவுறுகின்றான். ஈனம் தெரியாமல் இறுமாந்து திரிவது மானக் கேடாம். உள்ளத் தருக்கு ஊனமாய் உன்னை ஈனப்படுத்தும்; அதனை மெல்ல விலக்கி மேன்மை பெறுக.

---

598. விண்ணும் புவியும் விரிகடலும் மேலோங்கி
நண்ணும் கதிர்மதியும் நாள்வரவும்—எண்ணித்
தினையள வேனுநீ சிந்தனையைச் செய்தால்
உனையளந்து காண்பாய் உணர்ந்து. (அ)

இ—ள்

உயர்ந்த விண்ணையும் பரந்த மண்ணையும் விரிந்த கடல்களை யும் விளங்கி ஒளிர்கின்ற சூரிய சந்திரர்களையும் வழங்கி வருகிற நாள்களையும் தினை அளவேனும் எண்ணியுணர்ந்தால் உனது நிலைமையை நீ உணர்ந்து கொள்வாய் என்பதாம்.

உண்மை உணர்வு மனிதனுக்கு உய்தி தருகிறது; அங்ங னம் உணர்ந்து பாராமையால் இழிந்த நிலைகளில் அழுந்தி ஒழிந்து போகிறான்.

தன் கையில் கிடைத்துள்ள சிறு பொருளை நினைந்துபெருஞ் செருக்குக் கொள்வது முழு மடமை ஆதலால் செல்வச் செருக் கன் இழி மடையன் ஆகின்றான். ஓர்ந்து சிந்தியாமையால் ஊனங்கள் நேர்ந்து விடுகின்றன.

செல்வம் நிலையில்லாதது; விரைவில் உருமாறி ஒழிவது; எவ் வழியும் அழிவில் உழல்வது. அலைகள் தோன்றி மறைவதுபோல் நிலைகள் மாய்ந்து படுதலால் "நிறை செல்வம் நீரில் சுருட்டு" என நேர்ந்தது. இவ்வாறு நிலையற்ற செல்வத்தை நினைந்து நெஞ்சம் செருக்குதல் புலையாய் முடிதலால் கலைவல்லோர் அதன் நிலைமை யை நேரே எடுத்துக் காட்டி நிலையான அறிவுகளை ஊட்ட நேர்ந்தனர். உயிர்கள் உயர ஊட்டியருள்கின்றார்.

அற்கா இயல்பிற்றுச் செல்வம்; அது பெற்றால்
அற்குப ஆங்கே செயல். (குறள், 333)

செல்வம் நிலையில்லாத இயல்பினது; அதனைப் பெற்றால் உடனே நிலையான தருமங்களைச் செய்து கொள்ளுக எனத் தேவர் இவ்வாறு போதித்துள்ளார்.

"அம்பொற் கலத்துள் அடுபால்
அமர்ந்துண்ணு அரிவை அந்தோ
வெம்பிப் பசிநலிய வெவ்வினையின்
வேறாயோர் அகல்கை ஏந்திக்
கொம்பிற் கொள ஒசிந்து பிச்சை
எனக்கூறி நிற்பாட் கண்டும்
நம்பன்பின் செல்வம் நமரங்காள்!
நல்லறமே நினைமின் கண்டீர்! [சீவக சிந்தாமணி]

இனிய சுவை அமுதைப் பொன் கலத்தில் வைத்து உண்டு களித்த அரசியும் கையில் ஓடு ஏந்திப் பிச்சை எடுக்கும்படி நேர்ந்திருத்தலைப் பார்த்திருக்கிறோம்; ஆதலால் செல்வத்தை நிலை என்று நினையாமல் புண்ணியத்தை எண்ணி உய்தி பெறுங்கள் எனத் திருத்தக்க தேவர் இவ்வாறு உரைத்திருக்கிறார்.

"ஒரு நாயகமாய் ஓட உலகுடன் ஆண்டவர்
கருநாய் கவர்ந்த காலர் சிதைகிய பானையர்
பெருநாடு காண இம்மையிலே பிச்சைதாம் கொள்வர்
திருநாரணன் தாள் காலம்பெறச் சிந்தித்து உய்ம்மினோ."
(திருவாய்மொழி)

உலக முழுவதும் ஏக போக வுரிமையாத் தனிச் செங்கோல் செலுத்தி யாண்டும் நீண்ட புகழுடன் அரசு ஆண்ட முடி மன்னரும் வரிசை குலைந்து கொடிய மிடியராய் யாவரும் காணப் பிச்சை எடுக்க நேர்வர்; ஆதலால் நிலையற்ற செல்வத்தை நம்பி நில்லாமல் இறைவனைச் சிந்தித்து உய்யுங்கள் என நம்மாழ்வார் இங்ஙனம் உய்தி கூறியுள்ளார்.

"அரையது துகிலே மார்பினது ஆரம்
முடியது முருகுநாறும் தொடையல் புடையன
பால்வெண் கவரியின் கற்றை மேலது
மாலை தாழ்ந்த மணிக்கால் தனிக்குடை
முன்னது முரசுமுழங்கு தானை இங்நிலை

*இனைய செல்வத்து ஈங்கிவர் யாரே*
*தேவர் அல்லர் இமைப்பதும் செய்தனர்*
*மாந்தரே என மயக்கம் நீங்கக்*
*களிற்றுமிசை வந்தனர் நெருநல் இன்றிவர்*
*பசிப்பிணி காய்தலின் வணங்கித் துணியுடுத்து*
*மாசுமீப் போர்த்த யாக்கையொடு*
*தாமே ஒருசிறை இருந்தனர் மன்னே."* (ஆசிரியமாலை)

அரிய பெரிய செல்வ நிலையில் அமரர் போல் இருந்தவரும் வறியராய்ப் பசிப்பிணி வருத்தக் கிழிந்த அழுக்குத் துணியை யுடுத்தி அவலத் துயரில் அலமந்துழந்தனர் என இது உணர்த்தி யிருக்கும் நிலையை ஊன்றி நோக்குக.

இவ்வாறு நிலையற்ற செல்வத்தை நினைந்து களித்தல் இளி வாம் ஆதலால் உண்மையைத் தெளிவாக உணர்ந்து உயர்ந்த நீர்மைகளை மருவிச் சிறந்த சீர்மையுடன் வாழுக.

*தினை அளவேனும் நீ சிந்தனையைச் செய்தால்*
*உனை அளந்து காண்பாய்!*

மனிதன் கருதி புணர வேண்டிய உறுதி நிலையை இது உணர்த்தியுள்ளது. விண் மண் முதலிய விரிவுகளைக் கண்ணுல் காணுகின்றாய். அந்த அற்புதக் காட்சிகளையெல்லாம் ஆராய்ந்து காண வல்ல நீ யார்? உலக வாழ்வோடு உனக்கு எவ்வளவு தொடர்பு உளது? எதுவும் நிலையில்லாத நிலையில் நிலைத்துள்ள உனது நிலை என்ன? உள் முகமாய் நோக்கிப் பலவும் சிந்தனை செய்து பார்! அந்தப் பார்வையில் அதிசய வுண்மைகள் அறிய வரும்; அதனுல் அரிய பல நன்மைகள் அடையலாம்.

---

599. உன்அறிவும் உன்பொருளும் உன்வலியும் உன்நிலையும்
சின்னம் சிறியவெனத் தேராமல்—பென்னம்
பெரியவென எண்ணியே பேதாய் செருக்கல்
அரிய மடமை அது. (கூ)

இ—ள்

பேதையே! உன்னுடைய அறிவும் பொருளும் வலியும் மிக வும் சிறியன; உண்மைகளைக் கருதி உணராமல் பெரிதும் செருக் குதல் கொடிய மடமையாம் என்க.

உன் என முன்னிலைச் சுட்டாக மனிதனை நேரே குறித்துக் காட்டியது தன்னுடைய நிலைமைகளை அவன் உன்னி யுணர. எண்ணி அறியாமையால் இறுமாப்புகள் பெருகி வரலாயின. தன்னை அறியின் முன்னை யுறவு முழுதும் வெளியாம்.

சீவன் இறைவனோடு உறவுரிமை யுடையது; அரிய பல மேன்மைகள் அதனிடம் மருவியுள்ளன; ஆயினும் தேகச் சிறை யில் அடைபட்டுள்ளமையால் அறிவாற்றல்கள் யாவும் குறை பட்டிருக்கின்றன.

பெரிய சோதியில் இருந்து வந்ததாயினும் சிறிய திரியில் மருவியுள்ள விளக்கு அதன் அளவுக்குத் தக்கபடியே ஒளியைப் பரப்பி வெளியே விளங்கி நிற்கிறது. பரமான்மாவிலிருந்து பிரிந்து வந்துளதாயினும் ஊன உடலில் உறைந்துள்ளமையால் ஞான நலங்கள் குறைந்து சீவான்மா சீவித்து வருகிறது.

பெரும்பாலும் தேக புத்தியே தடித்திருத்தலால் யோக சித்திகள் ஒழிந்து போயின. இழி நிலைகளில் பழகி வரவே உயர் நிலைகள் ஒழிவுற நேர்ந்தன. ஊன வுறவுகளால் ஞான வரவுகள் நலிந்து போயுள்ளமையால் மனிதன் ஈனமாயிழிந்து உழல நேர்ந்தான். பிறந்த குலத்தையும் பெற்ற நலத்தையும் எவ்வழியும் பெரிதாக எண்ணி வறிதே பிழைபட்டு உழலுகின்றான். குலச் செருக்கு, கல்விச் செருக்கு, செல்வச் செருக்கு, அதிகாரச் செருக்கு முதலிய தடிப்புகள் மனிதனை நெடிய தடியனுக்கிக் கொடிய மிடியுள் ஆழ்த்தியிருக்கின்றன. ஆங்கார ஆணவங்க ளால் அவலமாயிழிந்து போயிருத்தலால் உயர்ந்த தெய்வீக நிலைகளை இழந்து அவன் இழிந்து தவிக்கிறான்.

“ஆங்காரப் பொக்கிசம் கோபக் களஞ்சியம் ஆணவத்தால்
நீங்கா அரண்மனை பொய்வைத்த கூடம்விண் ணீடிவளர்
தேங்கார் பெருமதிற் காம விலாசம்இத் தேகங்கந்தல்
பாங்காய் உனைப்பணிந்து எப்படி ஞானம் பலிப்பதுவே?”

எனப் பட்டினத்தார் இப்படி இறைவனை நோக்கி ஏங்கி யிருக்கிறார். மெய்ஞ்ஞான ஒளி பெற்று மேலான நிலைகளை அடைய விடாமல் அவலப் படுத்தியிருக்கும் அஞ்ஞான இளிவு களைத் தெளிவாக எடுத்துக் காட்டி அடிகள் கவலையடைந்து வருந்தியுள்ளமையை இதில் கண்ணூன்றி உணர்ந்து கொள்க.

புல்லிய பொருள்களை நினைந்து செருக்கி உள்ளம் இழிந்து வுள்ளவன் உயர்ந்த பரம்பொருளின் அருளை இழந்து போகின்றான்; போகவே அவனுடைய நிலை பரிதாபமாய் இரங்க நேர்கின்றது. உற்ற செல்வத்தை உறுதியான நல்ல வழிகளில் பயன்படுத்தினவன் நலம் பல அடைந்து உயர்ந்து மகிழ்கின்றான்; அங்ஙனம் செய்யாதவன் இழிந்து கழிகின்றான்.

"முற்றெருட்பில் செய்த முறைமையால் வந்தசெல்வம்
இற்றைநாட் பெற்றோம்என்று எண்ணாது பாழ்மனமே!
அற்றவர்க்கும் ஈயாமல் அரன்பூசை ஓராமல்
கற்றவர்க்கும் ஈயாமல் கண்மறந்து விட்டனையே! (1)

மாணிக்கம் முத்து வயிரப் பணிபூண்டு
ஆணிப்பொன் சிங்கா தனத்தில் இருந்தாலும்
காணித்து உடலைநமன் கட்டியே கைப்பிடித்தால்
காணிப்பொன் கூடவரக் காண்கிலமே நெஞ்சமே! (2)

கற்கட்டு மோதிரம்நற் கடுக்கன்அரை ஞாண்பூண்டு
திக்கெட்டும் போற்றத் திசைக்கு ஒருத்தர்ஆனாலும்
பற்கிட்ட ஏமனுயிர் பந்தாடும் வேளையிலே
கைச்சட்டம் கூடவரக் காண்கிலமே நெஞ்சமே! (3)

வீடிருக்கத் தாயிருக்க வேண்டுமனை யாள்இருக்கப்
பீடிருக்க ஊணிருக்கப் பிள்ளைகளும் தாமிருக்க
மாடிருக்கக் கன்றிருக்க வைத்த பொருளிருக்கக்
கூடிருக்க நீபோன கோலம்என்ன கோலமே!" (4)

(பட்டினத்தார்)

நிலையில்லாத பொருளில் மருள்கொண்டு நெஞ்சம் செருக்கி நில்லாதே; அதனை நல்ல நெறிகளில் உபகரித்து ஒல்லையில் உய்தி பெறுக என இவை உணர்த்தியுள்ளன. உடலளவில் ஒட்டியுள்ள தொடர்புகளில் மையல் மண்டி மருண்டு மடியாமல் உயிர்க்கு ஊதியத்தைச் செய்து கொள்ளுபவர் தெய்வ கதியை எய்துகின்றனர். உய்தி பெறுவதே எய்திய பிறவியின் இனிய பேறும்.

மெய்யை ஊன்றி யுணரவே பொய்கள் பொன்றி மறைகின்றன. உறுதியான உய்தி நலங்கள் ஒன்றி வருகின்றன.

உன் அறிவும் பொருளும் வலியும் நிலையும் சிறிய.

ஒருவன் உரிமையோடு அறிய வுரிய உண்மைகளை இது

உணர்த்தியுள்ளது. நிலைமை தெரியாமையால் நெஞ்சம் செருக்கு கிறன். நீர் மேல் குமிழிபோல் மனிதன் பார்மேல் வந்துள் ளான். அதி விரைவில் அழிந்து மறைந்து போகும் வழியில் விழி திறந்து நிற்கிறன். அந்த நிலையில் அடைந்துள்ள அறிவு முதலியன மிகவும் குறுகியன; குறுமையைக் கூர்ந்து நோக்கின் சிறுமை யை ஓர்ந்து கொள்ளுவான். நிலையற்ற சிறிய பொருளை நிலை யுடையதாக நினைந்து களித்தல் பெரிய மருளாகின்றது.

தன்னது சாயை தனக்கு உதவாது கண்டு
என்னது மாடென்று இருப்பர்கள் ஏழைகள்
உன்னுயிர் போமுடல் ஒக்கப் பிறந்தது
கண்ணது காணொளி கண்டு கொளீரே. (திருமந்திரம்)

உயிரோடு உடன்பிறந்த உடலே பிணமாய் அயல் ஒழிகி றது; இதனை நேரே கண்டும் புறமான பொருளை என்னுடையது என்று மருளாக மடையர்கள் எண்ணிக் களிக்கின்றனர் எனத் திருமூலர் இவ்வண்ணம் இரங்கி யுரைத்திருக்கிறர். உள்ளம் தெளிய உரைகள் வந்துள்ளன. மாடு = செல்வம்.

“என்பொருள்என் பொருள்என்று சீவன்விடு
மனமேஒன் றியம்பக் கேளாய்
உன்பொருளானல் அதன்மேல் உன்நாமம்
வரைந்துளதோ? உன்றனேடு
முன்பிறந்து வளர்ந்ததோ? இனியுனைவிட்
டகலாதோ? முதிர்ந்து நீதான்
பின் பிறக்கும் போததுவும் கூடஇறந் திடும்
கொல்லோ பேசு வாயே! (1)

நிறைசெல்வம் உடையாரை நோய்துன்பம்
அணுகாதோ? நினைத்த எல்லாம்
குறையின்றிப் பெறுவரோ? புவிக்கரசு
செலுத்துவரோ? குறித்த ஆயுள்
பிறைஎன்ன வளருமோ? இயமன்வர
அஞ்சுவனே? பேரின்பத்துக்கு
உறையுளோ அவர்கிரகம்? ஈதெலாம்
மனமேநீ உன்னு வாயே! (2)

எத்தனைபேர் கையில்முனம் இப்பொருள்தான்
இருந்தது அவர் எல்லாம் தத்தம்

அத்தமென நம்பினர் அவர்களைவிட்
டகன்றுன்கை அமர்ந்த தின்னும்
சத்தமின்றி உனைமோசம் செய்து அனந்தம்
பேர்கரத்தில் சாரும் சொன்னேன்
சித்தமே அது செல்லு முன்நீசற்
பாத்திரத்தில் செலவிடாயே!" (நீதிநூல்)

பொருளின் நிலைகளை இவை உணர்த்தியுள்ளன. குறித்த பொருள்களைக் கூர்ந்து நோக்கி உறுதிநலங்களை ஓர்ந்து கொள்க.

பேதாய்! செருக்கல் மடமை.

தனது நிலைமையை நினைந்து தெளியாமல் நெஞ்சம் செருக்கிக் களித்து நிற்கும் மனிதனது இழிவை இது உணர்த்தியுளது.

உற்ற உடல்களும் பெற்ற பொருள்களும் முற்றவும் அழிந்துபடுதலை உலக அனுபவங்களால் நாளும் அறிந்திருந்தும் தன் உயிர்க்கு உறுதியை விரைந்து செய்து கொள்ளாமல் அஞ்ஞான மருளால் மனிதன் மறந்திருப்பது எஞ்ஞான்றும் இழிதுயரமாய்ப் பழிபடிந்து அழிவுகள் விளைந்திருக்கிறது.

உலகில் பிறந்த ஒருவன் உரிமையோடு கருதிச் செய்யத் தக்கது எது? என்று கண்ணன் ஒரு முறை சகாதேவனிடம் கேட்டான். அதற்கு அந்த மதிமான் சொன்னது சிந்தனையுடன் ஈண்டு எண்ணி யுணர வுரியது. அயலே வருகிறது.

"அநித்யாநி சரீராணி விபவோ நைவ சாச்வத:
நித்யம் ஸந்நிஹிதோ மிருத்யு: கர்த்தவ்யோ தர்மஸங்கிரஹ:"

"தேகங்கள் நிலையில்லாதன; செல்வங்கள் அழிவுடையன; எமன் எப்பொழுதும் அருகே உயிர் கவர ஆயத்தமாய் நிற்கிருன்; ஆதலால் தருமம் விரைந்து செய்யத்தக்கது" என அம் மெய்யறிவாளன் இவ்வாறு சொல்லி யருளினன். உண்மை யுணர்வு உலகம் உய்ய நன்மைகளை நல்கியருளுகிறது.

"சம்பத்து சாஸ்வதமு காது; தர்மமே மநகு ரக்ஷ."

"செல்வம் நிலையில்லாதது; தருமமே நமக்குத் துணை" என ஒரு தெலுங்குக் கவிஞர் இங்ஙனம் கூறியுள்ளார்.

உன் பொருளைக் கண்டு வீணே செருக்கி விளியாதே; அதனைப் புண்ணியம் ஆக்கிக் கொண்டு கண்ணியமுடன் வாழுக.

600. உலகின் நிலையை ஒருசிறி தோரின்
அலகில் அனுபவங்கள் ஆகும்—விலகி
விழிமூடி யுள்ளமையால் வீணே செருக்கிப்
பழிமூடி யுள்ளாய் பரிந்து. (ய)

இ—ள்

உலக நிலையை ஒரு சிறிது கருதி யுணரினும் அரிய பல அனுபவங்கள் தெளிவாம்; அவ்வாறு கருதி அறியாமல் கண் மூடிக் குருடுபட்டுள்ளமையால் விருதாவாகச் செருக்கிப் பழி மூடி இழிந்துள்ளாய்! விழி திறந்து உய்க என்பதாம்.

நேர்ந்துள்ளதை ஓர்ந்து பார் என இது உணர்த்தியுள்ளது.

உணர்ச்சியால் உயர்ச்சிகள் உளவாகின்றன. கூர்ந்து பார்த்து ஓர்ந்து சிந்தித்து வரும் அளவு மனிதன் உயர்ந்து வருகிறான். கண் எதிரே கண்ட காட்சிகளை எண்ணி ஆராய்ந்து உண்மைகளை உணர்ந்து கொள்பவர் உயர்ந்த பெரியோர்களாய் விளங்கி நிற்கின்றனர். அவ்வாறு ஒருமையோடு உணராதவர் சிறுமையாளராய் மறுமை நலமிழந்து வெறுமையாய் வாழுகின்றனர். தெளிந்த உணர்வில்லாத அந்த வாழ்வு இழிந்த மிருகமாய்க் கழிந்து போகின்றது. ஒருவன் இவ்வுலகில் வந்து பிறந்திருக்கிறான்; மனிதன் என்று சிறந்து நிற்கிறான்; மன வுணர்வின் வாய்ப்பால் அந்த மாட்சியை மருவி யுள்ளான்; இந்த நிலையை எய்தியுள்ளவன் தன் சொந்த நிலைமையை உணர்ந்து தெளியானாயின் அது எந்த வகையினும் மிகுந்த பழியாகின்றது.

உலக நிலையை ஓர்தலாவது அதில் தோன்றியுள்ள மக்களுடைய நிலைமை நீர்மைகளைக் கூர்ந்து தெளிதல். எவ்வளவோ பெரிய செல்வர்கள் பெருகி யிருந்தனர்; அவர் இருந்த இடமும் தடந்தெரியாமல் மறைந்து போயினர். "கோடிக் கணக்கில் பொருள் கூடி இருந்தவரும் ஓடும் கையுமாய் நாடறிய நின்றாரே!" என்று வடமொழியில் ஒரு கவி பாடியுள்ளமையால் உடைமைகளின் நிலைமைகளை உணரலாகும். அழிவுடையதை அழிவடையுமுன் அழியா வகையில் வழி செய்து கொள்ளின் அது விழுமிய நீர்மையாய் விளங்கி இன்பம் கெழுமி யுள்ளது.

பொருள் உலக வாழ்வுக்கு அவசியம் உரியது; அளவிட லரியது; அரச திருவுகளாய் வரிசைகள் மிகுந்துள்ளன. வெள் ளம் போல் அது எவ்வளவு பெருகி வந்தாலும் மனிதனுடைய உள்ளம் தீயதேல் அவ்வளவும் தீமையாய் அல்லலையே விளைத்து அவல நிலையில் தள்ளி அயலே ஒழிந்து போம்.

செல்வமுடையவன் பணிவும் பண்பும் உடையனுயின் அவன் அரிய பெரிய ஓர் அதிசயமான பாக்கியவானுகின்ருன்.

எல்லார்க்கும் நன்ரும் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து. (குறள், 125)

செருக்கின்றி அடங்கியிருப்பது எல்லார்க்கும் நல்லதே; ஆயினும் செல்வர்க்கு அது ஒரு திவ்விய சம்பத்தாய்ச் சிறப்பினை அருளும் என்னும் இது இங்கே சிந்தித்து உணர வுரியது. உள் ளத்தில் தருக்கு இல்லையானுல் அந்தச் செல்வன் உலகத்தில் உயர்ந்த சீமானுய் எல்லா மேன்மைகளையும் எய்துகிருன்.

பணிவுடைமையே செல்வமுடைமையை நல்ல செல்வம் ஆக்குகின்றது; அங்ஙனமின்றிச் செருக்கி நின்ருல் அது பொல் லாத புலையாயிழிக்கப் படுகின்றது.

கல்வி யுடைமை பொருளுடைமை என்றிரண்டு
செல்வமும் செல்வம் எனப்படும்—இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோல் தாமும்
தலைவணங்கித் தாழப் பெறின். (நீதிநெறிவிளக்கம்)

கல்வியாளரும் செல்வரும் தலைவணங்கித் தாழ்ந்திருப்பின் அவரது நிலை அதிசய மேன்மையாய் உயர்ந்து விளங்கும் என இது உணர்த்தியுள்ளது. செல்வர்க்குப் பணிவு மேலான செல்வ மாம் என்ற தேவர் கருத்தைத் தழுவி கல்வியாளரையும் இணைத்து இக் கவி உரைத்துள்ளமை நுனித்து நோக்கத் தக்கது.

படித்தவர்க்கு அழகு பண்பும் பரிவும்.
பணத்தவர்க்கு அழகு பணிவும் பயனும்.

நல்ல செல்வங்களை அடைந்தவர் எல்லார்க்கும் நலமாய் இதம் புரிந்து வர வேண்டும்; அவ்வாறு செய்யின் ஈசன் அருளை எய்தி மேலும் அவர் தேசு மிகப் பெறுகின்ருர். அங்ஙனம் செய் யாது செருக்கி நின்ருல் வெறுத்து இழிக்கப் படுகின்ருர்.

ஒத்த உயிரினங்களுக்கு உதவி புரிந்து வரவே இறைவன் உன் கையில் பொருளைக் கொடுத்து வைத்திருக்கிறான். அவன் திருவுளப்படி அதனைச் சரியாகச் செய்து வந்தால் அரச பதவி முதலிய பெரிய செல்வங்களை உதவி மேலும் மேலும் உன்னை மேன்மைப் படுத்தியருளுவான்; அவ்வாறு புரியாமல் பொருளில் மருள்கொண்டு உள்ளம் செருக்கி நின்றால் எள்ளி இகழ்ந்து இழி நிலையில் தள்ளி விடுவான். இந்த உண்மையை உள்ளி யுணர்ந்து உரிமையான நன்மையை நாடிக் கொள்ளுக.

எவன் உள்ளத்தில் செருக்கு எழுந்ததோ அன்றே அவன் பொருளுக்கு வளர்ச்சி குன்றியது; அவனும் அருள் இழந்தவனாய் மருளில் விழுந்து இருளில் உழல்கின்றான். சின்னப் பொருளைக் கண்டு செருக்க நேர்ந்தவன் பின்பு பெரிய பொருளை என்றும் காணாதவனாய் இழிந்தே போயினான்.

பணிவின் பான்மை மனிதனுக்கு உயர்ந்த மேன்மைகளை அருளுகின்றது; செருக்கின் நிமிர்ச்சி அவனை இழிந்த கீழ்மையில் இறக்கி ஈனன் ஆக்கி விடுகின்றது.

"தாழ்ந்தோர் உயர்வர் என்றும்மிக
உயர்ந்தோர் தாழ்வர் என்றும் அறம்
சூழ்ந்தோர் உரைக்கும் உரைகண்டாம்
மதில்சூழ் கிடந்த தொல்லகழி
தாழ்ந்தோர் அனந்தன் மணிமுடிமேல்
நின்றன்று உயர்ந்து தடவரையைச்
சூழ்ந்தோர் வரையின் உதிப்பவன்தாட்
கீழ்நின்றது போய்ச் சூழ் எயிலே."

(பிரபுலிங்க லீலை)

ஒரு அரசனது நகருக்கு அமைந்திருந்த அகழியையும், மதிலையும் இது வருணித்துளது. பாதலம் வரை கீழே ஆழ்ந்தும், சூரிய மண்டலம் வரை மேலே உயர்ந்தும் அவை முறையே நின்றன என்க. தாழ்ந்து போன அகழி முடிவில் ஆதிசேடன் முடிமேல் அமர்ந்திருந்தது; உயர்ந்து சென்ற மதில் சூரியன் காலடியில் குனிந்து நின்றது; ஆகவே பணிவோடு தாழ்ந்தவர் உயர்ந்து திகழ்வர்; செருக்காய் நிமிர்ந்து நடப்பவர் இழிந்து நிற்பர் என்னும் உண்மை இதனால் விளங்கி நின்றது எனச் சிவப்பிரகாசர் இங்ஙனம் சுவையாக விளக்கியுள்ளார்.

செருக்கால் சிறுமையே வரும் ஆதலால் அதனை மருவா திருக்க வேண்டும் என மேலோரும் நூலோரும் பல வகைகளி லும் நிலைமைகளை விளக்கி உறுதி நலன்களை உணர்த்தி யுள்ளனர்.

உள்ளத்திமிர் உயிர்க்குக் கேடு என்னும் முதுமொழியால் அதன் நாசமும் நீசமும் நன்கு அறியலாகும்.

"Before destruction the heart of man is haughty, and before honour is humility." (Bible)

"அழிவு வருமுன் மனிதன் இருதயம் இறுமாப்பு உறும்; மேன்மை வருமுன் பணிவாயிருக்கும்" என சாலமன் என்னும் நீதிமான் இவ்வாறு கூறியுள்ளார்.

விழிமூடி யுள்ளமையால் வீணே செருக்கிப்
பழிமூடி யுள்ளாய்!

என்றது வழுவின் வழிதெரிய வந்தது.

அறிவுக் கண்ணைத் திறந்து பாராமல் குருடாய் மூடம் மண்டியுள்ளமையினாலேதான் செருக்கு என்னும் பீடை உண் டாகிறது. பொருளின் நிலையைத் தெருளுறின் இருள் நீங்கி விடும்.

லட்ச ரூபாய் கையில் இருந்தால் உன்னைப் பெரிய செல்வ னாக நீ எண்ணிக் கொள்ளுகின்றாய். அவ்வாறு எண்ணும் பொ ழுது உலகத்தை முன்னும் பின்னும் கொஞ்சம் எண்ணிப்பார். பாரி, நள்ளி முதலிய வள்ளல்கள் பெரிய திருவுடையவர்; யாண் டும் பெருந்தன்மையுடன் எவ்வுயிர்க்கும் இரங்கி இதம் புரிந்தி ருந்தனர். அதனால் அவரை உலகம் இன்றும் உவந்து புகழ்ந்து வருகிறது. திருவின் பயனையடைந்தவர் திருவாளராகின்றார்.

ராக்பெல்லர் (Rockefeller) என்பவர் அமெரிக்காவில் உள்ள வர். பெரிய செல்வர். கல்விக்காக மட்டும் முந்நூறுகோடி பொ ன்களைப் பல தேசங்களுக்கும் உபகாரமாச் கொடுத்திருக்கிறார். அரிய பெரிய செல்வரான அவர் எவரிடமும் எளிய நீர்மை யுடன் இனியராகவே நடந்து வந்துள்ளார். அவருடைய செல் வம் கொடை அமைதி முதலிய நிலைகளைச் சிறிது சிந்தித்தாலும் பெரிய செல்வன் என்னும் இறுமாப்பு உன்னை விட்டு ஒழிந்து போம். கோடி கோடியான அவன் கொடைப் பொருளோடு உன் கடைப்பொருளைக் கருதிக் காணுக. பெரிதும் நாணுக.

எல்லார்க்கும் நல்லது செய்யவே ஆண்டவன் உன்னைச் செல்வன் ஆக்கி வைத்தான். ஏழைகளிடம் தாழ்மையாய் நடந்து வரும் அளவு உன் வாழ்வு வளம்பெற்று வரும். நிலைமையை உணராமல் நெஞ்சம் செருக்கினல் புலையாயிழிந்து புன்மையுறுவாய்; உண்மையை உணர்ந்து உறுதியை விரைந்து கொள்.

செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து. (குறள், 431)

செல்வம் பெருகிச் சிறப்புடன் வாழ வேண்டுமானல் செருக்கு முதலிய சிறுமைகள் இன்றி இருக்க வேண்டும் எனத் தேவர் இங்ஙனம் உணர்த்தியுள்ளார். பெரியோர்களுடைய அருள் மொழிகள் விழுமிய அறிவொளிகளை இனிது அருளி வருகின்றன. அவ் ஒளிகளால் உள்ளம் தெளிந்து உயர்ந்து கொள்ளுக.

அறம்புகழ் ஈட்ட அமைந்த பொருளை
மறம்பழி யீட்ட மருண்டு—புறம்பழிக்க
உள்ளம் தருக்கியே ஊனமுறல் ஈனமே
உள்ளம் தெளிக வுடன்.

செல்வம் பெற்றால் நல்ல நீர்மைகள் தோய்ந்து உள்ளம் தயாளமாயிரு; உறுதி நலங்களை ஓர்ந்து செய்; எல்லா மேன்மைகளும் இனிய தரும சிந்தனைகளால் தனியே உளவாகின்றன.

இவ் அதிகாரத்தின் தொகைக் குறிப்பு.

நல்லவர் செல்வம் பெறின் நலம்பல புரிவர்.
அல்லவர் உறின் அகம் செருக்கி நிற்பர்.
உள்ளச் செருக்கு ஊனப் படுத்தும்.
ஈனங்களை விளைத்து இழிவுகள் ஆக்கும்.
பழியும் துயரும் வழிவழி விளைக்கும்.
பேய்போல் நிமிர்ந்து பெருங்கேடு செய்யும்.
அறிவைப் பாழாக்கி அவங்கள் புரியும்.
அகந்தை ஒழியின் அமைதி விளையும்.
கீழ்மை நீங்கி மேன்மை ஓங்கும்.
நீர்மையும் சீர்மையும் நிறைந்து நிலவும்.

௬௰-வது செல்வத் திமிர் முற்றிற்று.

# அறுபத்தோராம் அதிகாரம்

## கள்ளின் களிப்பு

அஃதாவது கள் உண்டு களித்து உழலுதல். செல்வத் திமிர்போல் வெறிமண்டிச் சீவர்களைச் சிறுமைப் படுத்தி இழி நிலையில் தள்ளும் பழியுடையது ஆகலான் அதன்பின் இது வைக்கப்பட்டது. பணக் கள்ளைக் கண்டு களிக்கின்ருன்; பனங் கள்ளை உண்டு களிக்கின்ருன் என்றமையால் செல்வச் செருக்கிற்கும் கள்ளின் களிப்புக்கும் உள்ள உறவுரிமை உணரலாகும்.

601. பஞ்சமா பாதகத்துள் ஒன்ரும் படுகள்ளை
அஞ்சி அறிஞர் அகல்கின்ருர்—கொஞ்சமுநீ
ஓரா தருந்தி உளங்களித்து நிற்கின்ருய்
தேராய் அதன்தீத் திறம். (க)

இ—ள்

கள் அருந்துதல் கொடிய பாதகம்; மேலோர் அதனை அஞ்சி அகலுகின்ருர்; நீ கொஞ்சமும் அஞ்சாமல் குடித்துக் களிக்கின்ருயே! அந்தக் குடிகேட்டை உணர்ந்து விரைந்து ஒழித்து உயர்ந்து ஒழுகுக என்பதாம்.

இது கள்ளின் தீமையை உணர்த்துகின்றது.

உயிரைப் பாழ் படுத்தித் துயரில் தள்ளுகின்ற தீவினை பாதகம் என வந்தது. செய்கைக் கேடுகள் வெய்ய துயரங்களாய் விரிந்து வருகின்றன. கெடு நிலை தெரியாமல் படு பழிகளுள் வீழ்ந்து மாந்தர் பாழாய் உழலுகின்றனர்.

உணவும் நீரும் உடலை வளர்த்து உயிரைப் பேணி வருகின்றன. அவை புனித முடையனவாயிருப்பின் அந்த மனித வாழ்வு இனிமை சுரந்து யாண்டும் செவ்வையாய் இன்பம் நிறைந்திருக்கும். உண்டவன் உரம் செய்வான் என்னும் பழமொழி உணவின் தரம் தெரிய வந்தது. இயற்கையான இனிய உணவுகளை அருந்திவரின் அமைதியும் ஆரோக்கியமும் ஆண்மையும் மேன்மையும் பெருகி வருகின்றன. அவை மாறுபடின் அவலமான ஊறுபாடுகளும் நோய்களும் கவலைகளும் மேவி நிற்கின்றன.

உண்ணும் உணவுகளைப் புனிதமாக ஓர்ந்து அளவா உண்டு வருகின்றவன் உணர்வு நலம் சிறந்து உறுதி வளம் படிந்து ஒளி மிகுந்து நெடிது வாழ்ந்து வருகிருன்.

மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு. (குறள், 945)

உயிர் துயர் உருமல் சுகமாய் வாழ வேண்டுமாயின் உணவு நயமாயிருக்க வேண்டும் என இது உணர்த்தியுள்ளது. உயிருக்கும் உணவுக்கும் உள்ள உறவுரிமை இதனல் உணரலாகும். மறுத்து உண் என்று தேவர் இதில் குறித்திருக்கும் குறிப்பு கூர்ந்து சிந்திக்கத்தக்கது. கண்ட உணவுகளையெல்லாம் ஆசை கொண்டு உண்டு விடாதே; பசியின் நிலை அறிந்து அளவாக உண்ணுக; அதனல் ஆயுள் வளரும்; நோயின்றி வாழ்வாய்! என அருள் மீதூர்ந்து இந்தப் பொருள் மொழியைப் போதித்திருக்கிருர். உணவின் உண்மையை ஓர்ந்து உணர்க.

நுண்மை நுகரேல்.
மீதூண் விரும்பேல்.

என ஔவையார் இவ்வாறு அறிவு கூறியுள்ளார்.

நெறிமுறையான உணவுகளையும் அதிகமாக உண்ணலாகாது; எதையும் இதமாகவே உண்ண வேண்டும் என்றதனல் நெறிகேடானதை உண்டால் அதனல் எவ்வளவு அவகேடுகள் உளவாம் என்பது எளிதே தெளிவாம்.

கள் என்பது அறிவைக் கெடுப்பது; வெறியைக் கொடுப்பது; அவலத் துயர்களை விளைப்பது ஆதலால் அதனை உண்பது பழி எனவும் பாதகம் எனவும் வந்தது.

பஞ்சமா பாதகத்துள் ஒன்று.

என்றது கள்ளின் தீமையை உள்ளி யுணர. உயிரைத் துயரப் படுத்துகிற கொடிய தீமைகள் ஐந்தை ஒருங்கே தொகுத்துப் பஞ்சபாதகம் என மேலோர் குறித்து வைத்துள்ளனர். பஞ்சம் = ஐந்து. அழிகேடுகள் தொகையாய் விழிதெரிய வந்தன.

கொலை, களவு, கள், காமம், பொய், என்னும் இந்த ஐந்தும் பஞ்ச மா பாதகங்கள் என்று எண்ணப்பட்டுள்ளன. மனித வாழ்வை நீசப்படுத்தி நெடுந்துயர் செய்யும் கடுங்கேடுகள் ஆதலால் இவை கொடும் பாவங்கள் ஆயின.

கொலைஞன், கள்ளன், களியன், காமி, பொய்யன் என்னும் பேர்கள் மனிதரை எவ்வளவு வெய்யவராக்கி வெளி தெரியச் செய்கின்றன. இழி செயல்கள் பழி துயர்களாய் விளைந்தன.

உயர்ந்த மனிதப் பிறப்பை அடைந்தும் இழிந்த பழக்கங்களைப் பழகி ஈனராய்க் கழிந்து அழிந்து போவது ஞான சூனியமாய் முடிந்து நிற்கிறது.

கள் வெறியைக் கிளப்பி அறிவைக் கெடுக்கிறது; அதனால் அவகேடுகள் விளைகின்றன. மது உள்ளே போக மதி வெளியே போகும் என்னும் பழமொழி கள்ளைக் குடிப்பதால் விளையும் பழி கேடுகளை விழி தெரிய விளக்கியுள்ளது.

"அறிவை அழிக்கும்; செயல் அழிக்கும்;
அழியாமானம் தனை அழிக்கும்;
செறியும் அறிஞர் மதியாத
சிறுமை விளைக்கும்; ஈன்றாளும்
முறியும் வெறுப்பு மிக விளைக்கும்;
முனிவு விளைக்கும்; பகை அஞ்சாக்
குறிகள் விளைக்கும்; நகை விளைக்கும்;
கொள்ளேல் கள்ளுண்டலை மைந்தா!"
(விநாயக புராணம்)

கள் உண்பதால் விளையும் தீமைகளை எல்லாம் குறித்துக் காட்டி ஒரு அரசன் தன்னுடைய மகனுக்கு இன்னவாறு புத்தி போதித்திருக்கிறான். உரிய ஒருவனுக்குச் சொன்னது உலக போதனையாய் உறுதி பயந்து நின்றது.

எல்லா நலங்களுக்கும் ஏதுவாயுள்ள அறிவு பொல்லாத கள்ளால் புலையாயிழிந்து போகின்றது. போகவே குடிகாரனுடைய பரிதாப நிலை பெரிதாய் நின்றது. இனிய தண்ணீரைக் குடித்து இன்பமாய் வாழவந்த மனிதன் கொடிய கள்ளைக் குடித்துப் பழிகேடனாய் அடியோடு அழிவது அவலக் காட்சியாய்க் கவலைகளை விளைத்து வருகின்றது.

மனிதனுக்கு அறிவு மாட்சிமை தருகிறது; மதுவைக் குடித்து அறிவைக் கெடுத்து மதி கேடனாய் இழிந்து ஒழிந்து போகாதே; உண்மையை உணர்ந்து உறுதிநலம் தெளிந்து உயர்ந்து வாழுக. புனித வாழ்வு புண்ணியமாய் மிளிர்கின்றது.

602. புனித அறிவைப் புலைப்படுத்தி நல்ல
மனித நிலையை மடித்துத்—துனிதுயரம்
எல்லாம் பெருக்கும் இழிகள்ளை உண்டல்போல்
பொல்லாத துண்டோ புகல். (உ)

இ—ள்

தூய அறிவைத் தீய தாக்கி நல்ல மனிதத் தன்மையைக் கெடுத்துக் கொடிய பழி துயரங்களை விளைத்து எவ்வழியும் அழிவுகளைச் செய்கிற இழிகள்ளை உண்டல் போல் பொல்லாத ஈனம் யாதும் யாண்டும் இல்லை என்பதாம்.

இயல்பாகவே உயர்நலங்களை விரும்பியுள்ள மனிதன் தான் விரும்பியபடி பெரும்பாலும் அவற்றை அடைந்து கொள்வதில்லை. அங்ஙனம் இழந்து நிற்றற்குக் காரணம் அவனது செய்கைக் கேடேயாம். பழகி வருகிற செயல் பழுது ஆய பொழுது அதன்விளைவுகள் பழிதுயரங்களாய் வருகின்றன.

பொறி புலன்களை நல்ல வழிகளில் பழக்கிவருபவன் நல்லவனாய் உயர்ந்து நலம் பல பெறுகின்றான். தீயவழிகளில் செலுத்தி வருபவன் தீயவனாயிழிந்து நோயுழந்து கெடுகின்றான். பழகிவருகிற பழக்கத்தின் அளவே மனிதன் உயர்ந்தவன் ஆகவும் இழிந்தவன் ஆகவும் உலகம் அறிய வருகிறான். ஒரு முறை பழகியது பல பிறவிகளையும் விடாது தொடர்ந்து பிடித்து வருதலால் பழக்கத்தின் தன்மையும் வன்மையும் உணரலாகும்.

தாம் தொட்டது கெட்ட பழக்கம் என்று தெரிந்தாலும் அதனை விட்டொழிக்க முடியாமல் பலர் தட்டழிகின்றனர். அரசனுடைய சட்டளையான சட்டங்களையும் மீறித்தவறுகள் புரிகின்றனர். பழகியது பழிகேடுகளாய் விழிகளைமூடி எழுகிறது.

இந்நாட்டில் இனிமேல் யாரும் கள்ளைக் குடிக்கக் கூடாது என்று நம்சுதந்திர அரசாங்கம் ஒரு விதியை மதியோடு விதித்து மாண்பு செய்துள்ளது. கள் விலையால் பல கோடி பொருள்கள் வருவாய் வருவதையும் வேண்டாம் என்று நீக்கி மக்களுக்குத் தக்க நன்மையை நாடி ஆக்க வேலையைச் செய்திருக்கிறது. அவ்வாறு செய்தும் குடியர் சிலர் தம் குடியைவிடமுடியாமல் கரவாய்க் குடித்துக் களித்து வருகின்றனர். பழைய கள்ளுக்

குடியர் புதிய கள்ளக்குடியராய்ப் பதிவாகியுள்ளனர். கள்ளச் சாராயங்கள் யாண்டும் கரவாய்க் காய்ச்சப்படுகின்றன.

இந்தத் திருட்டுக் குடியரைக் கண்டுபிடித்துத் தண்டித்தற்கு அரசாங்கம் தனியாக ஒருபகுதியை அமைத்துப் பல அதிகாரிகளை நியமித்துள்ளனர். கள்ளக்குடியரைக் கருதி ஆராய்ந்து உறுதிபூண்டு ஒழுங்கு செய்து வரினும் கள்உண்டல் யாண்டும் உள்ளே பெருகியே விரிகிறது. குடியை ஒழிக்க மூண்ட அதிகாரிகள் இடையேயும் சிலர் குடியராயுள்ளனர் என்னும் பழிகள் படியறிய வந்துள்ளன. தொட்டபழக்கம் சுடுகாடு போனாலும் விட்டு நீங்காது என்பதை அவர் விடாமல் விளக்கி நிற்கின்றனர்.

"யோக்கியனுக்குச் சட்டம் வேண்டியதில்லை; தன் உள்ளமே சட்டமாய் யாண்டும் அவன் ஒழுங்காக நடப்பான்; அயோக்கியனுக்கு எவ்வளவு சட்டங்களிட்டுக் கட்டுக்காவல் செய்தாலும் அவற்றையெல்லாம் தட்டிவிட்டு அவன் தாவியே போவான்; அவன் ஆவி போனால் அன்றி நாட்டில் ஒழுங்கு மேவாது" என்று ஜெர்மன் தேசத்து மேதாவி ஒருவர் நீதிமன்றத்தில் வாதாடிய போது இவ்வாறு பேசியிருக்கிறார்.

நல்ல நீதிமான் தன் உள்ளமே சாட்சியாய் யாண்டும் மாட்சியோடு ஒழுகி வருகிறான்; பொல்லாதவன் எல்லாவகையிலும் அல்லாதனவே புரிந்து அவலவழியில் ஆவலாய்ப் போகின்றான். இழிதுயரங்கள் எதிர்வதை விழிதிறந்துபாராமல் களியர் குடித்துழல்வது பழிநிலையாயுள்ளது.

நோய்கண்ட உடல் தளர்ந்து மெலிந்து இழிந்து காணப்படுதல் போல் தீயவர் மண்டிய நாடும் சீரழிந்து சிறுமையுறுகிறது. இழிபழக்கங்களை ஒழித்து உயர்ந்த நீர்மைகளோடு மனிதர் செழித்துவரின் அந்நாடு எந்நாடும் வியந்து புகழத் தேசுமிகுந்து சிறந்து விளங்கும். தீமை நீங்கியபோது அது தூய்மையாய் ஓங்கித் திவ்விய மகிமைகளோடு செவ்விதின் மிளிர்கிறது.

"Were men entirely free from vice, all would be uniformity, harmony and order." (Asem)

"மனிதர் தீமையிலிருந்து நீங்கினால் யாவும் நேர்மையாய் எங்கும் ஒழுங்கும் இனிமையும் பொங்கிநிற்கும்" என்னும் இது இங்கே அறியவுரியது. உயிர்கள் திருந்தின் உலகம் உயர்கிறது.

கெட்டபழக்கத்தால் மனிதன் கெட்டவன் ஆகின்றான்.

கள்ளுக்குடி மிகவும் கொடியது. எல்லாத் தீமைகளும் அதனால் விளைகிறது; ஆகவே நெடிய தீமையான அது கொடிய பாவம் என்று எள்ளி இகழப்பட்டுள்ளது.

புனித அறிவைப் புலைப்படுத்தி.

என்றது குடியின் நீச நிலைகளை நெஞ்சம் தெளியவந்தது.

மிருகங்களினும் மனிதர் பெரியவர் என மகிமையோடு மருவியிருப்பது அறிவினாலேயாம். உயிரின் ஒளியாய் உயர் நலங்களை அருளிமிளிர்கிற அந்த அறிவு மது அருந்திய போது மறைந்து போகின்றது. அது குடிபோகவே எல்லாக்கேடுகளும் குடிபுகுந்து கொள்ளுகின்றன; கொள்ளவே குடியன் அடியோடு நாசம் அடைய நேர்கின்றான்.

இழிகள்ளை உண்டல் போல் பொல்லாதது உண்டோ?

நல்லஅறிவைக்கெடுத்து எல்லா நீசங்களையும் விளைத்து மனிதனை அடியோடு நாசப்படுத்துகின்ற குடியைப்போல் பொல்லாத கொடிய கேடு யாதும் இல்லை என்க. உண்டோ? என்னும் வினா குடியரை நோக்கி வினவியதாம். அவர் நெடிது சிந்தித்து நேரே பதில்சொல்ல வேண்டும். தன்னை வாயில் வைத்தவனை நோயில் வைத்துப் பொருளையும் புகழையும் கெடுத்துப் பழிவறுமைகளை வளர்த்து முடிவில் கொடிய நரகத்தில் கொண்டு போய் வைக்கின்ற நீசக்கள்ளை மனிதன் ஆசையோடு உண்பது எனக்கு அதிசயமாயுள்ளதே! என்று ஒரு பெரியவர் பரிதபித்திருக்கிறார்.

கள்ளின் தீமையைக் கருதியுணர்ந்து அதனை எள்ளி ஒதுங்குக.

---

603 செல்வமெலாம் தேயும் திறலழியும் தேசொழியும்
புல்லிநின்ற நன்மையெலாம் போய்த்தொலையும்—அல்லலொடு
பாவம் பழியாவும் பற்றும் படுகள்ளை
மேவின் அதனை விடு. (௩)

இ—ள்

கள்ளை வாயில் வைத்தால் செல்வம் தேயும்; திறல் அழியும்;

தேசு ஒழியும்; நன்மைகள் எல்லாம் நாசமாய்ப்போம்; அல்லல் அவமானம் பழி பாவம் யாவும் பற்றிக் கொள்ளும்; அக்குடியை அடியோடு விட்டு விலகுக என்பதாம்.

குடியால் நேருகின்ற பழிகேடுகள் சில விழி தெரிய இதில் வெளிவந்துள்ளன. கள் அருந்துவதால் அறிவு கெடுவதோடு பொருள் வலி புகழ் முதலிய எல்லாம் கெடுகின்றன. தேக போகங்களை அனுபவிக்கவும் பிறர்க்கு உபகரிக்கவுமே பொருள் ஈட்டப்படுகிறது. உயிர் வாழ்க்கைக்கு இனிய சாதனமான அந்தப் பொருளைத் துயரமான கள்ளுக்குடியில் கொட்டுவது எள்ளத்தக்க இழிபழியாகிறது.

"கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்." (குறள்,925)

நல்லபொருளைக் கொடுத்துப் பொல்லாத மதிமயக்கத்தை வாங்கிக் கொள்வது கொடிய மடமையான பெரியமருள் எனக் கள் உண்பார் நிலைமையைக் குறித்து வள்ளுவப் பெருந்தகை இங்ஙனம் வருந்தி இரங்கியிருக்கிறார். அறியாமை யுடைத்தே! என்பதில் ஏகாரம் ஒலித்திருக்கும் ஓசையை உள்ளச் செவியால் ஓர்ந்து உணர்க. பரிவும் இரக்கமும் உரையில் பெருகியுள்ளன.

புகழ் இன்பம் புண்ணியங்களைப் பெறுதற்கு உரிய பொருளைப் பழி துன்பம் பாவங்களைத் தருகின்ற கள்ளுக்குக் கொடுத்துக் குடிகாரர் அடியோடு கெடுகின்றாரே! என அடிகள் பரிதபித்திருப்பது மானமனிதர் ஈனமாய் அழிவதை எண்ணி என்க.

"ஞானம்மெய்ச் சுகம்புகழ் நலம்பெறத் தனம்
தானமே செய்குவர் தகுதியோர்; அறி
வீனம்மெய் மறதி நோய் இழிவுறப் பொருள்
வானென வழங்குவர் மதுவுண் போர்களே. (1)

பாலினைத் தேனையின் பாகை நீத்துவெண்
மாலியை மாந்துவோர் மலர்கள் நீத்துமெய்த்
தோலிர ணந்தனைச் சூத கந்தனைக்
கோலியுண்டுவக்கும் ஈக் கூட்டம் ஒப்பரே." (நீதி நூல்)

கள்ளைக் குடிப்பவர் இப்படி எள்ளப் பட்டுள்ளனர்.

வறுமை சிறுமை பழி துயரம் முதலிய அவலங்களையே விளைத்துவருகிற கள்ளை ஒருவன் விழைந்து உண்பது வியப்பாயுள்ளது. ஊனம் உணராமையால் மானமழிந்து ஈனமுறுகின்றனர்.

பழகியபழக்கத்தால் அழிநிலை தெரியாமல் அநியாயமாய் அழிந்து படுதலால் குடியர் குடிகேடர் எனப் பழி படிந்தனர்.

தாம் நல்லாயிருக்க வேண்டும் என்றே எல்லாரும் விரும்புகின்றனர்; அவ்வாறு கருதி வருபவர் பொல்லாத கள்ளையுண்டு புலையாடிப் போவது தொலையாத தொல்லையாய்த் தோன்றுகிறது.

பொறிகளையும் புலன்களையும் அடக்கி நெறியே ஒழுகி வருபவர் உயர்ந்த மனிதராய் ஒளிபெற்று வருகிறார்; அவற்றின் வழியே இழிந்து செல்பவர் இழிந்தவர் ஆகின்றார். அதன் மேலும் களியராய்ப் பழிவழியில் செல்பவர் பாவிகளாயிழிந்து பாழ்படுகின்றனர்.

உயிர்க்கு ஒளியாய் நின்று உறுதி நலங்களை உணர்த்தி வருகிற உணர்வு பாழாய்ப் போதலால் கள்ளுக்குடியர் விழிகண் குருடராய் அழிதுயரங்களில் ஆழ்ந்து அவமே அழிகின்றார்.

உள்ளுண்மை ஓரார்; உணரார் பசுபாசம்;
வள்ளன்மை நாதன் அருளினின் வாழ்வுறார்;
தெள்ளுண்மை ஞானச் சிவயோகம் சேர்வுறார்;
கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறி யாரே. (1)

மயக்கும் சமயம் மலமன்னு மூடர்
மயக்கு மதுவுண்ணும் மாமூடர் தேரார்;
மயக்குறு மாயையின் மாமாயை வீடு
மயக்கிற் றெளியின் மயக்குறு மன்றே. (திருமந்திரம்)

கள் உண்பவர் கருத்து அழிந்து கதியிழந்து ஒழிகின்றார் எனத் திருமூலர் இவ்வாறு பரிந்து வருந்தி யிருக்கிறார்.

படு கள்ளை விடு.

என்றது படுதலை யுணர்ந்து விடுதலைபெற. மடமையால் மருவிய குடிப்பழக்கத்தைக் கடுமையா வெறுத்து விடு; விடாது நின்றால் படாத பாடுகள்படுவாய்; படுவதை எதிரறிந்து அடுதுயர் அகலுக. இளிவு நீங்கிவிடின் ஒளியும் உயர்வும் ஓங்கிவரும்.

604. குடியைவாய் வைத்தான் குடிகெடுவான் என்னும்
படியின் பழமொழியைப் பார்த்தும்—கெடுவாக
நின்று குடித்து நெளிகின்றாய் என்றுகொலோ
நன்றறிந் துய்வாய் நலம். (௪)

இ—ள்

குடியை வாயில் வைத்தவன் குடி கெடுவான் என்பது பழமொழி; உலக வழக்காகிய இந்த உறுதி மொழியைக் கண்டும் உய்தி காணுமல் குடித்து உழல்பவர் ஒருநாளும் உய்யார் என்க.

உணவும் நீரும் மனிதனுக்கு உரிமையாக அமைந்திருக்கின்றன. இயல்பாக இசைந்துள்ளதை விடுத்து அயலே பாய்ந்து உண்பது மயலாய் மண்டியுள்ளது. வழுவான செயல்கள் பழி துயரங்கள் படிந்து அழிகேடுகளாய் வருகின்றன.

மனிதன் இயற்கையாகவே பிழைபாடுகளுடையவன். மேலும் மேலும் பிழைகளோடு பழகி இழிவுறுவது கொடிய பரிதாபமாய் விழி தெரிய நின்றது. கெட்ட பழக்கங்கள் பல வழிகளிலும் வந்து ஒட்டிக் கொள்ளுகின்றன. பொடியை மூக்கில் உறிஞ்சுகிறான்; இது எவ்வளவு மடமை! மெல்லிய நாசித் துவாரங்களில் பொல்லாத புகையிலைத் தூளைச் செலுத்தி உவகையில் களிப்பது நகையை விளைக்கிறது. கரிப்பும் காரமும் கலந்திருத்தலால் அது மூக்குள் புகுந்தவுடன் கொஞ்சம் உற்சாகம் தோன்றுகிறது. அது வஞ்சமான மாயத் தோற்றமே. கண்ணில் சிறிது தூவிப்பார்த்தால் அதன் கடுமையும் கொடுமையும் காணலாகும். உள்ளே போய் எரிச்சலைக் கிளப்பவே மூக்குச்சளி பொடியோடு பொலிந்து வெளியே வருகிறது. அந்தச் சளியைத் துண்டில் துவட்டிப் பிடித்து மேலே போட்டுக் கொள்ளுகிறான். சிலர் அதற்கென்று கைக்குட்டையை வைத்துத் தோய்த்து மெய்ப் பையில் மேன்மையாகச் சொருகிக் கொள்ளுகின்றனர். பொடியை மூக்கில் போடுவதில்தான் எவ்வளவு மேட்டிமைகள்! எத்தனை வித்தகங்கள்! எத்தனை விநோதங்கள்! அதனை வைத்துக் கொள்வதற்கு வகைவகையாகப் பேழைகள் பெருகியுள்ளன. ஒரு கல்லூரி ஆசிரியர் பொடிப் பழக்கமுடையவர். உல்லாசப் பேர்வழி. பாடசாலைக்கு வரும்பொழுது உருண்டை வடிவமாத் தந்தத்தால் செய்த பொடி டப்பியைக் கொண்டு வருவார்.

வேலையின்றி வீட்டில் இருக்கும் போது சாதாரணமா வாழைத் தடையை வைத்துக் கொள்ளுவார். பள்ளியில் ஒரு நாள் பரீட்சை நடந்தது; பரீட்சகர் பிள்ளைகளிடம் கல்வி நிலைகளைக் குறித்துக் கேள்விகள் கேட்டார். அங்ஙனம் வினவி வருங்கால் பூமியின் வடிவம் என்ன? என்ருர். பிள்ளைகள் சொல்ல முடியாமல் மறுகி நின்ருர். அந்த ஆசிரியர் மறைவாய் நின்று தன் பொடி டப்பியை எடுத்துப் பிள்ளைகளுக்குத் தெரியும்படி காட்டினர். தன் டப்பி உருண்டையாயிருத்தலால் அதனைக் கண்டு பூமியின் வடிவத்தை மாணவர் சொல்லி விடுவார் என்று அவர் கருதி நின்ருர். பிள்ளைகள் அவ்வாறு சொல்ல வில்லை; குறிப்பறிந்து கூறும் கூர்மையில்லாமையால் நேர்மையாகவே வேறே சொன்ஞர். "பூமி பொடி டப்பி போல் இருக்கும்" என்று இரண்டு பையன்கள் ஒருங்கே உரைத்தார். பரீட்சகர் திகைத்தார். அதன்பின் உண்மை தெரிந்தது; அவர் உள்ளம் நாணிப் போஞர். கல்வியறிவைப் போதித்து நல்ல பழக்கங்களை மாணவர்க்குப் பழகிக் கொடுக்க வுரிய ஆசிரியரே பொடியோடு பழகி இப்படிப் பொடியராயிருந்தால் உலகம் எப்படி உயர் நிலை அடையும்?

"மூக்குக்கு அணி பொடியை மோவாமை."

என்று அவயவ அழகுகளைச் சுவையாக முன்ஞேர் சொல்லியிருந்தும் நாசியைப் பாழாக்கி நவை செய்து வருவது அவகேடேயாம். கெடு நிலை தெரியாமல் படுதுயர் அடைகின்ருர்.

சிறிது பழகிய பொடிப் பழக்கம் இறுதி வரையும் விடாமல் இறுகப் பற்றிக் கொள்ளுகிறது. மிகவும் பெரியவர்களும் பொடியர் ஆனபின் அதிலிருந்து விலக முடியாமல் புலையாடியுழலுவது உலக மையலாய் நிலையோடியுள்ளது. எல்லாவற்றையும் விட்ட துறவிகளையும் பொடி விடாமல் பற்றி வருதலால் அதிசயமான ஒரு கொடிய மாயையாய் அது நெடிதோங்கி வருகிறது. தன்னை ஒரு முறை தொட்டு மூக்கில் வைத்தவனை உயிர் இருக்கும் வரையும் தன் போக்கில் அது வைத்துக் கொள்ளுகிறது.

"உண்ணும் உணவை மறந்தாலும் உரிய பொருளை மறந்தாலும்
மண்ணும் மனையும் மறந்தாலும் மகவும் உறவும் மறந்தாலும்
பெண்ணும் பிறவும் மறந்தாலும் பிரிய மான புகையிலையால்
பண்ணும் பொடியை ஒருபோதும் பாரில் மறந்து வாழேனே."

என்று இப்படி ஒரு பொடிப்பத்தர் பாடியிருத்தலால் அதன் அதிசய வன்மை அறியலாகும். மனித சமுதாயத்தை அது எப்படி மயக்கி யிருக்கிறது! அந்த மாயப் பொடியை மருவி மாய்வது பெரிய பரிதாபமாயுள்ளது.

பொடி, சுருட்டு, பீடி என்னும் பீடைகள் இந்நாட்டைக் கேடாக்கி வருகின்றன. பொடிக்கு அடிமை; பீடிக்கு அடிமை; சுருட்டுக்கு அடிமை; என இங்ஙனம் சுருண்டு மருண்டு கிடப்பவர் சுதந்திரம் அடைந்தவர் போல் துள்ளிக் குதிப்பது எள்ளி நகைக்கத்தக்கது. வழிவகை தெரியாமல் இழிபழிகளில் வீழ்ந்து அழி துயர்களில் ஆழ்ந்து அவமே உழலுகின்றனர்.

தாம் புகைந்து போவதை உணராமல் புகையிலைப் புகையை உவந்து பேணி ஊதி வருவது பேதைகளிடம் பெருகி வருகிறது.

புகையிலையை நீளும் புகையிலே போக்கிப்
புகையிலே நாளும் புகைவீர்—புகையிலே
நீரும் புகைந்து நிலையழிவீர் நேருமுன்
பாரும் புகையும் பகை.

புகைக் குடியில் நம்மவர் நாளும் புகைந்து வருவதை நோக்கி இது வருந்தி வந்துள்ளது. பொருளை ஊன்றி உணர்ந்து கொள்ளுக. புலையான பழக்கங்கள் தொலையாத துன்பங்களா கின்றன. தொல்லைகளை ஒருவி நல்லவை மருவுக.

பொடியும் புகைக்குடியும் கள்ளுக் குடியைப் போல் எள்ளித் தள்ளத்தக்கன ஆதலால் ஈண்டு இடையே அவை சொல்ல வந்தன. கெட்ட இனங்கள் கேடறிய நின்றன.

குடியை வாய் வைத்தான் குடி கெடுவான்.

கள் உண்பது குடி என வந்தது. இறந்து கிடக்கிற புழுக்களை ஊதி உறிஞ்சிக் குடிப்பது ஆதலால் அது இப்படிச் சொல்லப்பட்டது. கள்ளுக் குடியால் செல்வம் அழிவதோடு பழியும் பாவமும் படர்ந்து குடியன் அடியோடு அழிய நேர்கின்றான். அவன் குடும்பமும் மிடிவாய்ப்பட்டு இடும்பைகள் பல அடைந்து அழிந்து படும் ஆதலால் குடி குடிகேடு என வந்தது.

குடி குடியைக் கெடுக்கும் என்பது பழமொழி.

இடிமேல் விழுந்த இனிய மரம்போல்
குடிமேல் விழுந்த குடியும்—படிமேல்
இழிந்து படலால் இழிகுடியின் தீமை
பொழிந்து வழியும் புறம்.

நல்ல குடியுள் கள்ளுக்குடி புகுந்தால் இனிய கனி மரத்தின் மேல் இடி விழுந்த படியாம். குடியை இடி என்றது அடியோடு அழிக்கும் அதன் கொடுமையைக் கூர்ந்து தெரிய.

அறிவைப் பாழாக்கி அவகேடுகளை விளைக்கும் கொடிய பானத்தை மனிதன் விழைந்து குடிப்பது தன் அழிவுக்கே வழி கோலிய படியாம். விழி நாடி அறிக.

உள்ளத்தில் வெறிகளைக் கிளப்பி இழிந்த காம இச்சைகளை விளைக்கும் ஈனங்களைப் படிப்பதும் இழிகள்ளைக் குடிப்பது போல் எள்ளத்தக்கதே யாம். இந்நாட்டில் இக் காலத்தில் காலித் தாள்கள் பல கடுத்து வருகின்றன. அவற்றைப் படிப்பது அறிவைக் கெடுப்பதாம். வெறி மயக்கங்கள் வீணப் பிலுக்குகளாய் விரிந்து வெய்ய மய்யல்கள் புரிந்து நிற்கின்றன.

ஆனந்தம் தரும்என்றும் அறிவுநிலை
வரும் என்றும் ஆசை காட்டி
ஊனங்கள் கலித்துள்ளே ஒருபயனும்
இல்லாமல் உலாவும் தாள்கள்
ஈனங்கள் விளைத்துவரும் இயல்நோக்கி
அறிஞரெல்லாம் இரங்கு கின்றார்
பானம்தான் என்றாலும் கள்ளருந்தல்
பழியன்றோ பாவம் உண்டே. (இந்தியத்தாய் நிலை)

கவியின் கருத்தைக் கருதி நோக்கி உறுதி காணுக.

மாலான மயக்கங்களைப் படிப்பது மாலியைக் குடிப்பது போலாம். நல்ல பாலை நயந்து பருகுவது போல் இனிய நூலை உவந்து கருதுக. மாலி = கள். மயக்கம் தருவது என்பதாம்.

படிப்பதை ஓர்ந்து படி. குடிப்பதைக் கூர்ந்து குடி.

உடலுக்கு உரம், உணர்வுக்குத் தெளிவு, உயிருக்கு இன்பம் பெருகி வரும்படி எவ்வழியும் கருதி இதமாய் ஒழுகுக.

605. எல்லையிலா இன்பம் இனிதருளும் நல்லறிவை
இல்லையெனச் செய்யும் இழிகள்ளை—நல்ல
குலனுடை மாந்தர் குடியார் குடிப்பர்
புலனழி புல்லர் புகுந்து. (ரு)

இ—ள்

எல்லா இன்பநலங்களையும் இனிது அருளவல்ல அறிவை அடியோடு அழித்து ஒழிக்கும் கள்ளை நல்ல குலமக்கள் குடியார்; புல்லிய இழி மக்களே குடித்து அழிவார் என்க.

அறிவு மனிதனுக்கு அரிய பெரிய ஓர் அதிசய செல்வமாய் அமைந்திருக்கிறது. அதன் தெளிவுக்குத் தக்கபடி ஒளியும் இன்பமும் பெருகி வருகின்றன. அதனை யுடையவன் எல்லாம் உடையவனாய் இசைமிகப் பெற்றுள்ளான். அது ஒன்று இல்லை யானல் யாதும் இலனாய் இழிவுறுகின்றான்.

பொருள் புகழ் புண்ணியம் முதலிய உயர் நலங்களை யெல் லாம் ஒருங்கே விளைத்தருளுதலால் அது தெய்வீகமான ஒரு சீவ நிதியமாய்ச் சிறந்து திகழ்கின்றது. மனித வாழ்வைப் பலவ கையிலும் வளம் படுத்தி அது மாட்சிமை புரிந்து வருகிறது.

புத்திமான் பலவான் ஆவான் என்பது பழமொழி,

பலவகை நிலைகளை இம் முதுமொழி மதிதெளிய விளக்கி யுள்ளது. அறிவு அதிசயமுடையதாய்த் துதி செய்ய நின்றது.

"Knowledge is power" (Bacon)

"அறிவு வல்லமை யுள்ளது" என ஆங்கிலப் புலவராகிய பேக்கன் என்பவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

"A man of knowledge increaseth strength." (Bible)

"அறிவுடையவன் ஆற்றல்களை வளர்த்துக் கொள்கிறான்" எனச் சாலமன்என்னும் நீதிமான் இங்ஙனம் உரைத்திருக்கிறார்.

"அறிவு அற்றம்காக்கும் கருவி:" (குறள்,421)

"அறிவுடையார் ஆவது அறிவார்" (குறள்,427)

எனத் தேவர் இவ்வாறு அருளியுள்ளார்:

அறிவின் மகிமை மாண்புகளைக் குறித்து வந்துள்ள இவை இங்கே கூர்ந்து சிந்திக்க வுரியன. தனக்கு இனிமையான இதங்

களை உறுதியாகச் செய்ய வல்ல அறிவினாலேதான் மனிதன் பெருமையடைந்து வருகிறான். அமிர்த மயமான இத்தகைய அறிவு குடி வெறியால் அழிந்து போகின்றது; போகவே அந்த மனித வாழ்வு நீசமாயிழிந்து படுகிறது.

நல் அறிவை இல்லை எனச் செய்யும் இழி கள்.

கள்வெறி உள்ள அறிவை ஒழித்துவிடும் ஆதலால் இல்லை எனச் செய்யும் என்று அதன்மேல் ஏற்றிச் சொல்லப்பட்டது. எல்லாம் வல்ல அறிவு கெடவே யாதும் இல்லாதவனாய் மறுகிக் குடியன் அழிவுறுகின்றான்.

இழிகள் என்றது தன்னை வாயில் வைத்தவனை இழிமகனாக்கி நோயில் வைக்கின்ற அதன் ஈனத்தீமை தெரியவந்தது.

“வள்ளத்தேயுற வாக்கு மதுநுகர்ந்து
உள்ளத்தே உணர்வு ஓடிட ஓடிவீழ்ந்து
அள்ளற் பள்ளத் தழுந்தினர் மள்ளர்தாம்
கள் உண்பார்க்குக் கதியும் உண்டாங்கொலோ?”
(திருப்பூவணம்)

கள்ளைக் குடித்து அறிவு கெட்டுச் சேற்றில் விழுந்து கிடந்த குடிகாரர் நிலைமையை இது குறித்துள்ளது. கள் உண்பார்க்குக் கதியும் உண்டோ? என்று இரங்கி வருந்தியிருப்பது ஈண்டு எண்ணி உணர உரியது.

“தீமை பயக்கும் சுராபானம் செய்த பாவி மலம் புசித்துத்
தூய்மையடையா வுடல் வீக்கித் துக்கத்துழலும் உயிர்களா
நாமதடையும் பறவைகளா நலமில் கிருமி கீடமாத்
தோம துறுபல் பவம்எடுத்துச் சுழன்று திரிவான் பற்பலநாள்.”
(சூதசங்கிதை)

கள்ளை உண்டவன் பழியடைந்து பாவம் படிந்து இழிந்த பிறவிகளில் அழுந்தி ஈனமாய் உழன்று திரிவன் என இது உணர்த்தியுள்ளது. இழி நறவு பழி நரகமாய் அழிவு தருகிறது.

மதுபானம் உயிர்களை இவ்வாறு நீசப்படுத்தி வருதலால் அது அதிபாதகம் என அஞ்ச நேர்ந்தது. உயர்ந்த மேன்மைகளை எல்லாம் கெடுத்து இழிந்த கீழ்மைகளை மடுத்து வருகிற ஈனக்கள்ளை மனிதன் விழைந்து குடிப்பது வியப்பை விளைத்துள்ளது. இளிவு காணாமல் விளிவு காண்கின்றான்.

பிழையான வழிகளில் பழகி வருவது பீழையாய்ப் பெருகி வருகிறது. பழிதுயரங்களுக்கு ஏதுவான இழி கள்ளை அருந்துவது ஈனம் என்று தெரிந்தாலும் பழகிய பழக்கத்தை விட முடியாமல் அழி நிலைகளையே புரிந்து அவமானம் அடைகின்றனர். குடிகாரனை எவரும் மதியார்; குடிப்பவன் எவ்வழியும் இழிந்தவனாகவே எண்ணப்படுகிறான். குடித்தபொழுது அவனும்வெளிவரநாணுகின்றான். ஒதுங்கிப்படுத்துக்கொள்ளுகிறான்.

உயிரைக் கெடுப்பதை உண்ணாது ஒழிக.

---

606. உணர்வை அழித்துள் உயிர்க்கேடு செய்யும்
புணர்வினால் கள்ளும் புலையும்—கணமுடைய
பாவமெனத் தள்ளிப் பழித்தார் பழிவிளைவை
நாவகம் கொள்ளல் நவை. (சு)

இ—ள்

உணர்வைக் கெடுத்து உயிர்க்கேடு செய்தலால் கள்ளும் புலாலும் கொடிய பாவங்கள் என இகழ்ந்து மேலோர் தள்ளி வைத்துள்ளனர்; அவற்றை நாவில் உண்டால் நாசமாம் என்க.

மனிதன் பலவகை நிலைகளில் உருவாகி வருகிறான். காரிய காரணத் தொடர்புகள் கூரிய சீரிய முறைகளில் கூடியுள்ளன. பிறப்பும் இருப்பும் படிப்பும் பழக்கமும் சிறப்பாக அமையின் அந்த மனிதன் சிறந்தவனாய் வருகின்றான்; அவை இழிவாய் இயையின் அவன் இழிந்தவனாய் எழுகின்றான். சுற்றியுள்ள சூழல்களாலும் பற்றியிருந்த பழைய வாசனைகளாலும் மனிதன் நல்லவன் ஆகவோ, அல்லவனாகவோ மருவிவருவது அதிசய மருமமாயுள்ளது. உள்ளம் படிந்தது உலகம் படிந்து வருகிறது.

அறிவுக்குத் தெளிவும் உடலுக்கு ஆரோக்கியமும் தருகிற உணவுகளைத் தரம் தெரிந்து உண்டு வருகிறவர் உயர்ந்த புத்திமான்களாய்ச் சிறந்த சத்துவ குணசீலராய் ஒளி மிகுந்து வருகின்றனர். உணவின் படியே உணர்வு விளைந்துள்ளது.

பழங்களை உண்டு பாலைப்பருகுபவர் நிலைகளையும், மாமிசங்களைத்தின்று மதுவைக் குடிப்பவரது புலைகளையும் அனுபவத்தில் கண்டு வருகின்றோம். உண்டு வரும் உணவுகளின் அளவே

உணர்வும் செயலும் மண்டிவருகின்றன. கள்ளுக்குடியர் எவ்வழியும் எள்ளப்படுகின்றனர். அறிவைப் பாழாக்கி விடுதலால் அந்தப்பழிநீரைக்குடிப்பவர் இழிமக்களாயிழிந்து நிற்கின்றனர். உயர்ந்த குடியில் பிறந்திருந்தாலும் குடிப் பழக்கத்தால் இழிந்து படுகின்றனர். பழிவழியில் பழகி ஒருமுறை இழிந்தவர் மீண்டு தெளிந்து மேலே உயர்ந்து வருதல் மிகவும் அருமையாம்.

தமக்கு இழிவு நேராமல் காத்து வருபவரே விழுமிய சீர்த்தியை மேவி உயர்கின்றனர். உண்மை ஒழுக்கம் யாண்டும் உறுதி நலங்களை உதவி அரிய பெருமைகளை அருளி வருகிறது.

இங்கிலாந்து தேசம் மிகுந்த குளிர்உடையது. அங்கு வசிப்பவர் குடிப்பது வழக்கமாயுள்ளது. ஒயின் (Wine) என்னும் ஒரு வகை மதுவை யாவரும் பருகி வருகின்றனர். குளிரை நீக்கிச் சிறிது சுறுசுறுப்பைக் கொடுத்தலால் அதனைக் குடிப்பது இயற்கை வழக்கமாயது. இந்நாட்டுக் கள் சாராயங்களைப் போல் அது அவ்வளவு கொடியது அன்று. அதனையும் குடியாமல் இருப்பதே புனிதமான இனிய வாழ்வு என்று அந்நாட்டிலுள்ள மேலோர் கருதியிருக்கின்றனர். சமீபத்தில் காலம் சென்ற பேர்னாட்ஷா (Bernardshaw) என்னும் புலவர் மது அருந்தார்; புலால் உண்ணார். சுத்தமான உணவுகளை உண்டு பரிசுத்தவாழ்வு நடத்தினர் என இவரைக் குறித்து அந்நாட்டவர் புகழ்ந்து பாராட்டி யுள்ளனர். குடிப்பது இயல்பாகவுள்ள நாட்டிலும் குடியாதவர் உயர்வாக மதிப்பட்டுள்ளார். சீலமுள்ள மேலோர் குடியார் என ஆங்கிலக் கவிஞர் ஆன மில்ட்டனும் (Milton) கூறியிருக்கிறார். அவர் சொல்லியிருப்பதை அயலே பாருங்கள்.

"The lyric poet may drink wine, but the epic poet must drink water." (Milton)

"சாதாரணக் கவிஞன் மதுவைக் குடிக்கலாம்; ஆனல் சிறந்த காவியம் பாடுகின்ற உயர்ந்த கவிஞன் தண்ணீரைத்தான் பருகவேண்டும்" என அவர் உறுதி கூறியுள்ளார். இது ஈண்டு எண்ணி யுணர வுரியது. மது இழிந்தது; ஈனமுடையது; அதனை உண்ணுதவரே உயர்ந்த உறுதி நலங்களை அடையவுரியவர் என்பதை மேலோர்யாவரும் யாண்டும் தெளிந்து மொழிந்துள்ளனர்.

உணவின் படியே உணர்வு படிகிறது. தேக தத்துவங்கள் அதிசய விசித்திரங்களாயுள்ளன. நல்ல நீரால் உடல் தூய்மை யடைகிறது; நல்ல உணவால் உள்ளம் தெளிவுறுகிறது. புறத்தே மருவியவகையே அகத்தே கருவி கரணங்கள் உருவாகி வருகின்றன. காரணம் காரியத்தில் தெரிதல் போல் உணவு உணர்வில் தெரிகிறது.

"As he eats, so he thinks." (Emerson)

"உண்ணுகிற படியே மனிதன் எண்ணுகிருன்" என எமர்சன் இவ்வாறு கூறியிருக்கிருர்.

உள்ளே கொள்வதை நல்ல நீர்மையுடையதாக் கருதிக் கொள்ளின் அந்த மனிதவாழ்வு எவ்வழியும் இனிமை சுரந்து செவ்விய நீர்மையோடு சிறந்து வருகிறது. பொல்லாதது புகின் புலையாய் அல்லல் புரிய நேர்கின்றது.

"Be not among winebibbers; among riotous eaters of flesh." (Bible)

"மது உண்போர் அருகும் புலால் புசிப்போர் இடையும் மருவி யிராதே" என்னும் இது இங்கே நன்கு அறியவுரியது.

சுராபானம் அசுரத்தன்மையைத் தருதலால் அதனைப் பருகினவர் மதிகேடராய் அவல நிலைகளையே அடைகின்றனர்.

"ஆஸுரீம் யோநிம் ஆபந்நா மூடா ஜந்மநி ஜந்மநி
மாம் அப்ராப்ய ஏவ கௌந்தேய ததோ யாந்தி அதமாம் கதிம்."
(கீதை,16-20)

"அருச்சுனு! ஒருமுறை அசுரயோனியை அடைந்தவர் பின்பு பிறவிகள்தோறும் மூடர்களாய் என்னை அடையாமல் இழிநிலைகளையே அடைகின்றனர்" எனக் கண்ணன் இவ்வாறு விசயனிடம் உரைத்திருக்கிருன்.

கள்ளுக்குடியர் கையிலுள்ள பொருளை எல்லாம் போக்கிப் பின்பு தெய்வ சம்பத்தையும் இழந்து வெய்ய துயரங்களில் வீழ்ந்து வருந்துவார் என்பதை இதனுல் ஓர்ந்து உணர்ந்து கொள்ளுகிறோம்.

உணர்வை அழித்து உயிர்க்கேடு செய்யும்.

என்றது குடியால் நேரும் இழி பழிகளையும் அழி நிலைகளையும் கருதி யுணர்ந்து உறுதி தெளிய வந்தது.

கள் உணர்வை அழிக்கும்; புலால் உயிர்க்கேடு செய்யும் என்க. நிரல் நிரையால் நிலைமைகளை நினைந்து கொள்ளுக.

இந்த அதிகாரத்தில் புலாலைக் குறித்தது இனமும் ஈனமும் தெரிய. புனித மனித வாழ்வு புலையுருமல் போற்றி ஒழுகுக.

மதி கேடான பானங்களையும் அதி பாதகமான உணவுகளையும் கொள்ளலாகாது என மேலோர் விதி முறையே தள்ளியுள்ளனர். நெறி நியமங்களின் மருமங்கள் அரிய தருமங்களுடையன; யாண்டும் கருதி யுணர வுரியன.

"கள்ளும் ஊனும்நீ விரும்பினுல்
மகங்கள்செய்! காமத்தில் மனதாளுல்
கொள்ளும் பெண்டொடு கலவிசெய்!
எனிலிவன் குறையெலாம் தொடான்என்றே
தள்ளும் வேதத்தின் சம்மதம்
சகலமும் தவிர்வதே கருத்தாகும்
விள்ளும் இவ்விதி என்எனின்
பூருவ நியமமாம் விதியன்றே. (1)

மதுஇறைச்சிகள் உண்என்ற சுருதிபின்
மணந்து பார்எனல் பாராய்
மிதுன இச்சையும் புத்திரோற்
பத்தியால் விரும்பென்ற விதிபாராய்
இதையும் விட்டொழி யதிநயிட்டிக
வன்னிக்குஇகழ்ச்சி யற்றதும் பாராய்!
அதையறிந்து கன்மங்கள் ஆசைகள்
ஒழிந்து ஆனந்தம் அடைவாயே." (கைவல்லியம்)

வேள்வி முதலிய நிலைகளைக் குறித்து இது விளக்கியுள்ளதைக் கூர்ந்து நோக்குக. அருந்தல் பொருந்தல்கள் ஆனவரையும் புனிதமாகப் பொருந்தியிருக்க வேண்டும் என்பதே மனித தருமமாய் மருவியுள்ளது.

பழி விளைவை நாவகம் கொள்ளல் நவை,

உண்பது சுகமாய் உயிர் வாழ. அங்ஙனம் உயிரின் ஆதார மான உணவு இழிவும் பழியும் உடையது ஆயின் அந்த மனிதன் இழிந்து பழிபட நேர்கின்றான். வாழ்வைப் பாழாக்கித் தாழ்வு படுத்துகிற ஈன பானமாய்க் கள் இழிக்கப் பட்டுள்ளது. அவ்வாறான இழிவை உண்பவன் எவ்வாற்றானும் இழிந்தே படுவன் ஆதலால் அதனை ஒழிந்து ஒழுகிய அளவு உயர்ந்தவனாகின்றான்.

உண்ணற்க கள்ளை; உணில்உண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார். (குறள், 922)

மனித சமுதாயத்துக்கு மதிநலம் கூறியுள்ள இந்தப் புனித வாசகம் ஈண்டு நுணுகி யுணர வுரியது. "கள்ளைக் குடியாதே; குடிக்க விரும்பினால் குடித்துக் கொள்; ஆனால் நீ ஒரு மனிதனாக மேலோரால் எண்ணப்பட மாட்டாய்!" எனக் குடிகாரனை நோக்கித் தேவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

உயர்ந்த மனிதப் பிறவியின் மாட்சியை அடியோடு கெடுத்து இழிந்த மிருகத்தினும் ஈனம் ஆக்கி விடுகிற இழி கள்ளை ஒருவன் விழி மூடிக் குடிப்பது எவ்வளவு பழி! எத்துணை அழிவு! என்பதை இதனால் உய்த்துணர்ந்து கொள்ளுகிறோம்.

ஈனக் குடியால் இழிபழிகள் ஏறுமே
ஊனம் ஒழிக வுடன்.

இந்த ஞான மொழியை நாடித் தெளிக.

---

607. உயிரோ டிருந்தாலும் உற்றசவம் என்றே
செயிரோ டிகழ்ந்து சிரிக்கும்—வயிரோடு
கள்ளுடை யானைக் கடல்ஞாலம் ஐயகோ
எள்ளல் இதன்மேல் எது. (எ)

இ—ள்

கள் அருந்துகின்றவன் உயிரோடு இருந்தாலும் அவனைச் செத்த சவம் என்றே உலகம் எள்ளிச் சிரிக்கும்; அந்தோ! இது எவ்வளவு நிந்தை! சிந்தனை செய்து சிறுமை ஒழிக.

உணர்ச்சியோடு இருக்கும் வரையும் மனிதன் உயர்ந்து திகழ்கிறான்; அது ஒழிந்து போனால் இழிந்த மிருகமாய் அவன்

அழிந்து போகிறான். கள்ளைக் குடித்த பொழுது அறிவு நிலை குலைந்து போதலால் அவன் பெரிய வெறியனாய்ப் பிதற்றிப் பேயாட்டம் ஆட நேர்கின்றான்.

கள்ளுக்குச் சோல்விளம்பி என்று ஒரு பெயர்.

உள்ளத்தில் மறைத்திருந்ததை யெல்லாம் குடித்த போது தன்னை மறந்து குடிகாரன் வெளிப் படுத்தி விடுகிறான். "கள் உள்ளதைச் சொல்லி விடும்" என்பது பழமொழி.

"களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்து
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்." (குறள்)

குடியை மறைக்க முடியாது என்று இது குறித்துள்ளது.

கள் உண்டவன் வெறி மண்டிக் கால் தடுமாறி நடந்து வாய்குழறிப் பேசி நோயுழந்து படுதலால் சீ! என்று யாவரும் அவனை எள்ளி இகழ்ந்து ஏசி ஒதுங்குகின்றார்.

"களித்தோன் அவிநயம் காணும் காலை
ஒளித்தவை ஒளியான் உரைத்தல் இன்மையும்
கவிழ்ந்தும் சோர்ந்தும் தாழ்ந்தும் தளர்ந்தும்
வீழ்ந்த சொல்லொடு மிழற்றிச் சாய்தலும்
களிகைக் கவர்ந்த கடைக்கண் நோக்குடைமையும்
பேரிசை யாளர் பேணினர் கொளலே." (அவிநயம்)

குடிகாரனுடைய செயல் இயல்களையும் மயல் மறுக்கங்களையும் இது விளக்கியுள்ளது. குறிப்புகளைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ளுக.

மது உண்டபோது மதி கேடராய் மனிதர் படுகிற பாடுகள் பரிகாசங்களாய்ப் பெருகியிருக்கின்றன. உச்சினி மாநகரத்தில் ஒரு முறை நீராட்டு என்னும் பெரிய திருவிழா ஒன்று நடந்தது. நகரம் முழுவதும் அலங்காரங்கள் நிறைந்திருந்தன. உவகைக் காட்சிகள் எங்கணும் ஓங்கி நின்றன. புனித நீராட்டுக்குப் பலரும் போய்க் கொண்டிருந்தனர். அப்பொழுது ஒரு குடிகாரன் தெருவழியே நிலை தடுமாறிப் பிதற்றிச் சென்றதைக் கோங்கு வேளிர் என்னும் புலவர் நன்கு விளக்கி யிருக்கிறார். அயலே வருவது காண்க.

"சுழலும் கண்ணினன் சோர்தரு மாலையன்
அழல்நறும் தேறல் ஆர மாந்திக்

காழக மீக்கொண்டு ஆழும் தானையின்
வாழ்க வாழ்க எம் மதில்உஞ் சேனை
மட்டுண் மகளிர் சுற்றமொடு பொலிகெனத்
துட்டக் கிளவி பெட்டவை பயிற்றி
முட்டின் றியம்பும் பட்டினம் ஒரீஇத்
துறக்கம் கூடினும் துறந்திவண் நீங்கும்
பிறப்போ வேண்டேன் யான்எனக் கூறி
ஆர்த்த வாயன் ஊர்க்களி மூர்க்கன்
செவ்வழிக் கீதம் சிதையப் பாடி
அவ்வழி வரும்ஓர் அந்தணாளனைச்
செல்லல் ஆணை நில்இவண் நீஎன
எய்தச் சென்று வைதவண் விலக்கி
வழுத்தினோம் உண்ணும் இவ் வடிநறுந் தேறலைப்
பழித்துக் கூறும்நின் பார்ப்பனக் கணமது
சொல்லா யாயின் புல்லுவென் யான்எனக்
கையலைத்து ஓடும் ஓர் களிமகன்." (பெருங்கதை, 40)

ஒரு குடிகாரன் செயலை இது படி எடுத்துக் காட்டியிருக்கிறது. கவியின் காட்சிகளைக் கருதி உணர்க.

நான் உவந்து குடிக்கிற கள்ளை உன் இனம் இகழ்ந்து சொல்லுகிறது; ஆதலால் உன்னை இன்று விடேன் என ஒரு வேதியனை அவன் வேதனை செய்திருத்தலை வியந்து காணுகிறோம். விபரீதமான செயல்களையெல்லாம் வெறி விளைத்து விடுகிறது.

வயிறோடு கள் உடையான் உயிரோடு இருந்தாலும் சவம்.

கள் அருந்திய பொழுது அறிவு அழிந்து படுகிறான்; படவே யாதும் அறியாதவனாய்த் தீதுகளைச் செய்து அயர்ந்து கிடக்கிறான். நோக்காடான அக்கிடை சாக்காடு ஆகின்றது.

கள் குடலுள் புகுந்தவுடன் உடல் பிணமாய் விழுகிறது; உயிர் துயருள் புகுந்து உழலுகிறது. வயிறு ஓடு கள் என்றது உயிரைத் துயரில் ஓட்டிச் சாக அடிக்கும் அதன் வேகம் தெரிய வந்தது. நறவால் அறிவு அழிகிறது; ஆவி ஒழிகிறது.

உயிர் இருந்தாலும் மனிதனைச் செத்த சவம் ஆக்கிச் சீரழிக்கும் தீய கள்ளை வாயில் வைப்பது எவ்வளவு தீமை! எத்தனை மடமை! எத்துணை அழிவு! உய்த்துணர்ந்து தெளிக.

608. செத்தசவம் வீழ்ந்தஅன்றே தீர்ந்தொழியும் கள்ளுண்போர்
நித்தம் பிணமாய் நிலேத்துமே—இத்தரையில்
உள்ளவரை பேரிழவே ஓங்கநிற்பர் இப்பிணங்கள்
எள்ளல் இழிவே இவண். (அ)

இ—ள்

செத்த சவம் இறந்த அன்றே நீங்கி ஒழியும்; கள் உண்பவன் நித்தமும் பிணமாய் நிலே குலேந்து கிடந்து உலகிற்குப் புலே யிழிவை விளேப்பன் என்க.

உயிர் நீங்கிய போது உடல் சவம் எனப்படும். சவத்தை உடனே எடுத்துக் கொண்டு போய்ச் சுடுகாட்டுள் வைத்துச் சுட்டு விடுவர்; அல்லது இடு காட்டுள் இட்டு மண்ணுள் புதைத்து மறைப்பர். பிணத்தை மறைப்பது பெருமணமாயது.

கள் உண்பவன் வெறியனுய் மயங்கி விழுகின்ருன். பிணம் போல் இழிந்து கிடக்கின்ருன். மயக்கம் தீர்ந்தவுடன் எழுகின்ருன்; மறுபடியும் போய்க் குடிக்கின்ருன்; அறிவழிந்து வீழ்கிருன்; மாண்டவன் போல் மீண்டும் பிணமாய் நீண்டு கிடக்கிருன். இவ்வாறு நாளும் தொடர்ந்து நடந்து வருதலால் கள் உண்போன் நித்தம் பிணம் என நேர்ந்தான்.

குடிகாரனுடைய மதிகேடுகள் பரிதாபநிலேயில் புரையோடியுள்ளன. எவ்வளவு இழிவுகள், எத்தனே அழிவுகள், விழி எதிரே தெரிந்தாலும் அவ்வளவையும் உடனே மறந்து விட்டுப் பழைய படியும் போய்க் கள்ளேக் குடித்து எழுந்து பாழாய் விழுந்து படுபிணமாயுழலுகின்ருன். இது எவ்வளவு கொடிய கேடு! மானம் மரியாதை யாவும் போய் ஈனமுழந்து கிடப்பதே குடியனிடம் இயற்கை வழக்கமாய் முடிந்திருக்கிறது.

ஒரு பெருங்குடியன்; குடி வெறியால் மயங்கிக் காட்டில் விழுந்து கிடந்தான்; நெடு நேர மாகியும் எழுந்திருக்கவில்லே. செத்த பிணம் என்று கருதிக் காக்கைகளும் கழுகுகளும் சூழ்ந்து நின்றன. அவ்வழியே சென்றவர் அருகே போய்ப் பார்த்தார். உயிர் போனதாகத் தெரிந்தார்; எவனே ஒருவன் இறந்து கிடக்கிருன் என்று பரிந்து இரங்கினர். எடுத்துக்

கொண்டு போய்ச் சுடுகாட்டை அடைந்தார். கட்டைகளை அடுக்கினர். அதன்மேல் அந்தப் பிணத்தைக் கிடத்தினர். அடியில் நெருப்பை மூட்டினர். தீயின் வேகம் உடம்பில் படவே அவனுக்கு உணர்ச்சி வந்தது; விழித்தான்; விரைந்து எழுந்தான்; அயலே நின்றவர் யாவரும் வியந்து திகைத்தார்; அயர்ந்து உறங்கி விட்டேன் என்று சொல்லிக் கொண்டே கடுகி நடந்தான்; சிறிது தூரம் போனன்; எதிரே ஒரு கள்ளுக் கடையைக் கண்டான்; ஆசை மண்டியது; உள்ளே புகுந்தான்; கள்ளைக் குடிக்க மூண்டான். அவனுடைய நிலைமைகளை நினைந்து எல்லாரும் எள்ளி இகழ்ந்து உள்ளம் பரிந்தார்; இந் நிகழ்ச்சியை அந் நாட்டுக் கவிஞர் கேட்டார்; ஒரு பாட்டாகப் பாடினர். அப் பாடல் அயலே வருகிறது.

"செத்த பிணம்என்று சேர்ந்தெடுத்துக் கட்டையிலே
வைத்தெரித்தார் கண்விழித்து வல்எழுந்தான் ---சித்தமயக்கு
என்று நடந்தான் எதிரிருந்த கட்கடையுள்
சென்று புகுந்தான் செறிந்து."

கள்ளைக் குடித்துப் பழகினவன் எவ்வழியும் திருந்தான்; யாரும் அவனைத் திருத்த முடியாது என்பதை இது தெளிவாக விளக்கியுள்ளது.

"களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று." (குறள்,929)

கள்ளுக் குடியனுக்கு உள்ளம் தெளிய நல்ல புத்தி சொல்லப் போவது தண்ணீருக்குள் மூழ்கிக் கிடப்பானை விளக்கைக் கொண்டு தேடப் போனது போலாம் என இது உணர்த்தியுள்ளது. உவமைக் குறிப்பிலுள்ள நயத்தை ஊன்றி உணர்ந்து கொள்ளுக. குடிகாரன் பழிகேடுகளை ஒரு சிறிதும் உணராமல் குடியுள் மூழ்கியே கிடப்பான் என்பது இதனல் தெளிவாயது.

"நரிநாய் பறவை சூழவழி
நடுவிற் கிடந்த சவமதனை
உரியாரிலர் என்று இடுகாட்டுக்
குடன்கொண்டேகிக் கட்டையில் வைத்து
எரியா நின்றேன் பிணம் விழித்திஃது
இன்தேன் மயக்கென்றியம்பி மெய்கொள்

அரியை அவிக்கு முன்னம் எழுந்து
அயல் கட்கடைக்குட் புகுந்ததுவே." (நீதி நூல்)

குடியனைக் குறித்து வந்துள்ள இக் கவியின் பொருளைக் கூர்ந்து நோக்கின் அதன் கொடுமையை ஓர்ந்து உணர்ந்து அவனது நிலைமையைத் தேர்ந்து கொள்ளலாம்.

கள் உண்போர் உள்ளவரை பேரிழவே.

குடிகாரருடைய பாரிழவை இது பரிந்து காட்டியுள்ளது

செத்த சவம் அன்றே ஒழிந்து போம்; கள்ளுக் குடியர் நித்தமும் பிணங்களாய் விழுந்து நாட்டுக்குள் நாளும் இழவு கூட்டி வருகின்றனர்; அந்த நீசப் பிணங்கள் தேசத்துக்குக் கொடிய நாசங்களாயுள்ளன.

குடி உயிரோடு உன்னைப் பிணமாக்கி விடும்; அதனை யாதும் அணுகாதே; தீதான அதனை ஏதும் விழையாதே; எவ்வழியும் உணர்வோடு யாண்டும் உறுதி நலனை ஓர்ந்து ஒழுகுக.

கள்ளைக் குடித்துக் கடைப்பிணம் ஆகாதே
உள்ளம் தெளிக உணர்ந்து.

---

609. உள்ளநலம் எல்லாம் ஒழித்துப் பழிவளர்த்து
வெள்ளமென அல்லல் விளைக்குமே—கள்என்னும்
பாவியொடு சின்னாள் பழகின் படுதுயரம்
ஆவியொடும் ஆழ்த்தும் அளறு. (கூ)

இ—ள்

கள் உண்பதால் உள்ள நலங்கள் எல்லாம் ஒழிந்து போம்; பழியும் அல்லல்களும் விளைந்து வரும்; கள் என்னும் பாவியோடு சில நாள் பழகினாலும் ஊழியும் நீங்காதபடி உயிர் நரகத்தில் அழுந்தும் என்க.

அறிவு செல்வம் புகழ் என்னும் இவை உயர்ந்த உயிர் வாழ்வின் ஊதியங்களாய் அமைந்திருக்கின்றன. இந்த இனிய உறுதி நலங்களைப் புனிதமாகப் போற்றி வருபவன் மனிதருள் உயர்ந்து மகிமை மிகப் பெறுகின்றான். இருமையும் இன்பம்தரவல்ல இந்த அருமைப் பொருள்கள் சிறுமைச் செயல்களால் சீரழிந்து போகின்றன. இழி களியால் கொடிய அழிவுகள் கடிது விளைகின்றன.

கள் அருந்துதல் கொடிய தீமைஆதலால் எல்லா நன்மைகளையும் அது அழித்து விடுகின்றது. மடமை வறுமை பழி முதலிய இழிவுகள் யாவும் அதனுல் விளைந்து வருகின்றன. உணர்வை அழித்து உயிர்க்கேடு புரிந்து என்றும் கொடுந் துயரங்களைக் கொடுத்தலால் கொடியபழி நெடியபாவம் என அது முடிவாகி நின்றது.

வீறுய பவக்கடலில் வீழ்ந்தவரைத் தவவரம்பில்
ஏருமல் அழுத்துசுழி அறிவுவெளிக்கு இருட்படலம்
தாறுய கொடு நரகின் அழுத்திவிடும் தோட்டி கதி
பேருன வழியடைக்கும் கதவமே பெருநற வூண். (1)

எவ்வமுற நுகர்ந்தாரை இயம்புவதுஎன்? ஆங்கவரைக்
கவ்வையுறப் புகன்ருலும் கண்டாலும் பெரும்பாவம்;
மெய்வளரும் நெறியோர்கள் விலக்குவது விலக்காத
பொய்வழியை விரும்பினரும் விரும்பாத புலேமதுவே. (2)
(திருக்குற்ருலப் புராணம்)

நறவு அறிவு தவங்களை அழித்து இருமையும் கெடுத்து நரகத்தில் அழுத்திவிடும்; அதனைக் குடித்தவரைக் கண்ணுல் கண்டாலும், அவர் பெயரை வாயால் சொன்னுலும் பாவம் என இது உணர்த்தியுள்ளது. உணர்வுரைகள் நன்கு சிந்திக்கத்தக்கன.

எவ்வழியும் பழி துயரங்களை விளைத்து அழிவே தருதலால் கள் அருந்துதல் பொல்லாத பாவம் என மேலோர் எல்லாரும் இகழ்ந்து வெறுத்து மனித சமுதாயம் உணர்ந்து திருந்தும்படி யாண்டும் பரிவோடு போதித்திருக்கின்றனர்.

கள்உண்ணுப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு. (குறள்)

கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின் (சிலப்பதிகாரம்)

உள்ளமொழி செய்கைகளின் ஒன்றியுல கேத்தும்
தள்ளரிய தன்மைவழி நிற்றலுறு நல்லீர்!
எள்ளுநர்கள் தன்மையிது நிற்கவிடர் செய்யும்
கள்ளும்உணல் குற்றம் கடைப்பிடிமின் என்ருன். (சிந்தாமணி)

கடாஅ யானைமுன் கட்கா முற்ருேர்
விடாஅது சென்றதன் வெண்கோட்டு வீழ்வது
உண்ட கள்ளின் உறுசெருக் காவது
கண்டும் அறிதியோ காரிகை நல்லாய்! (மணிமேகலை)

விள்ளுறும் நாணினர் விரகத் தீயினர்
உள்ளுறும் உயிர்ப்பினர் உலையும் நெஞ்சினர்
தள்ளுறு தம்உணர் வின்றிச் சாம்பினர்
கள்ளினும் உளதுகொல் கருத்தழிப்பதே. (கந்தபுராணம்)

ஒளியும் ஒளிசான்ற செய்கையும் சான்றோர்
தெளிவுடையர் என்றுரைக்கும் தேசும்---களிஎன்னும்
கட்டுரையால் கோதப் படுமேல் இவைஎல்லாம்
விட்டொழியும் வேறாய் விரைந்து. (அறநெறிச்சாரம்)

கிளைஞர்க்கு உதவாதான் செல்வமும் பைங்கூழ்
விளைவின்கட் போற்றான் உழவும்---இளையனாய்க்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையும் இம்மூன்றும்
உள்ளனபோன்று இல்லாப் பொருள். (திரிகடுகம்)

கள் தீயது; குடிகேடுகளை விளைத்துவிடும்; அதனை உண்ணலாகாது எனத் தேவர் முதலாக யாவரும் இங்ஙனம் உணர்த்தியுள்ளனர். உணர்வு நலங்களை ஊன்றி உணர்ந்து உறுதி நிலைகளைத் தேர்ந்து கொள்ளுக.

உள்ளக் களிப்பால் உணர்வழியும் ஊனமெல்லாம்
வெள்ளப் பெருக்காய் விளைந்துவரும்---எள்ளலெங்கும்
கூட்டிக் கொடிய குடிகேடு செய்யுமே
ஓட்டி விடுக வுணர்ந்து.

கள்ளின் களிப்பால் விளையும் அல்லல் அழிவுகளை உள்ளம் தெளிந்து விலகி நல்ல வழிகளில் பழகி நலம் பல பெறுக.

ஈன மதுக்குடியால் என்றும் குடிகேடாம்
ஊனம் தெளிக உடன்.

இழிந்ததை இகந்து உயர்ந்தவன் ஆகுக.

---

610 இம்மைப் பழியும் இடரும் குடிகேடும்
அம்மை நரகும் அடைவிக்கும்—வெம்மைமிகு
கள்ளைவாய் வைத்தல் கடுவிற் கொடிதாகும்
உள்ளி ஒழிக வுடன். (10)

இ—ள்

கள்ளை வாயில் வைத்தால் உன் குடி கெடும்; இம்மையிலே பெரிய பழியாம்; மறுமையிலே கொடிய நரகமாம்; அந்த நீசக் கள்ளை நெஞ்சிலும் நினையாமல் உயர்ந்து உய்தி பெறுக.

இது பழி துயர் ஒழிந்து விழி திறந்து உய்க என்கின்றது.

இந்த உலக வாழ்வு இம்மை என வந்தது. மனிதனுக்கு அமைந்துள்ள ஆயுள் அளவும் இங்கே வாழ்ந்து வருகிறுன். அதன்பின் மாய்ந்து போகிறுன். மருவிய உயிர் போயுள்ள அந்த உலகம் மறுமை என நேர்ந்தது. எல்லாருக்கும் இதமாய் நல்ல காரியங்களைச் செய்வதால் புகழும் புண்ணியமும் உளவாகின்றன. புகழ் இம்மைக்கும், புண்ணியம் மறுமைக்கும் உரிமையாய் நின்று உயர் பேரின்பங்களை உதவுகின்றன.

உயர்ந்த ஆன்ம வூதியங்களான இவை சிறந்த நீர்மைகளால் விளைந்து வருகின்றன; இழிந்த பான்மைகளால் அழிந்து போகின்றன. விளைவும் விளிவும் வினைகளால் விரிகின்றன.

மதுபானம் மதிகேடாய் இழிவே தருதலால் அதனை உடையவர் பழியாளராய் இழிவடைகின்றனர். எவ்வளவு உயர்ந்தவராய்ச் சிறந்திருந்தாலும் கள்ளுக்குடி அவரை இழிந்தவராக்கி மிகுந்த எள்ளல்களை விளைத்து விடுகின்றது.

சுக்கிரீவன் உயர்ந்த அரசன்; சிறந்த போர் வீரன். இராமன்பால் பேரன்புடையவன். தன்னை ஆதரித்து அருளிய அப்பெருமானுக்கு உரியகாலத்தே வந்து உதவி புரிவதாக உறுதி மொழி கூறி மீண்டான். கிட்கிந்தையில் அமர்ந்து அரசுபுரிந்திருந்தான். இளமையிலேயே குடியில் பழகியிருந்தான் ஆதலால் கள்ளில் உள்ளம் பறிபோய் அதனை உவந்து பருகிவந்தான். குறித்த தவணையை மறந்து போனான். இராமன் உள்ளம்கனன்று இலக்குவனை ஏவினான். அந்த வீர இளவல் வில்லும் கையுமாய் வெகுண்டு வந்தான்; மதுவின் மயக்கத்தால் மதியழிந்திருந்த சுக்கிரீவன் உணர்ந்தான். விளைந்துள்ள விபரீதங்களை யெல்லாம் நினைந்து உள்ளம் வருந்தினான். கள்ளின் தீமையை வெறுத்து இகழ்ந்தான். அப்பொழுது வெப்போடு அவன் சொல்லியுள்ள நிலைகளை அயலே காண வருகிறோம்.

### சுக்கிரீவன் துக்கித்துச் சொன்னது.

உறவுண்ட சிந்தையானும் உரைசெய்வான் ஒருவர்க்கின்னம்<br>
பெறலுண்டே அவரால் ஈண்டுயான் பெற்றபேருதவி யுற்றது<br>
இறலுண்டோ என்னிற் றீர்வான் இருந்த பேரிடரை யெல்லாம்<br>
நறவுண்டு மறந்தேன் காண நாணுவன் மைந்த! என்றான். (1)

ஏயின இதுவலால் மற்று ஏழைமைப் பாலது என்னே!
தாயிவள் மனைவி என்னும் தெளிவின்றேல் தருமம் என்னும்?
தீவினை ஐந்தின் ஒன்றும் அன்றியும் திருக்கு நீங்கா
மாயையின் மயங்கு கின்றும் மயக்கின்மேல் மயக்கும் வைத்தாம். (2)

தெளிந்துதீ வினையைத் தீர்ந்தோர் பிறவியில் தீர்வர் என்று
விளிந்திலா உணர்வி னோரும் வேதமும் விளம்ப வேயும்
நெளிந்துறை புழுவை நீக்கி நறவுண்டு நிறைகின் றேனல்
அளிந்தகத்து எரியும் தீயை நெய்யினல் அவிக்கின் றுமால். (3)

தன்னைத்தான் உணரத் தீரும் தகையறு பிறவி என்பது
என்னத்தான் மறையும் மற்றைத் துறைகளும் இசைத்த எல்லாம்
முன்னைத்தான் தன்னை ஓரா முழுப்பிணி அழுக்கின் மேலே
பின்னைத்தான் பெறுவ தம்மா நறவுண்டு திகைக்கும் பித்தோ? (4)

அளித்தவர் அஞ்சும் நெஞ்சின் அடைத்தவர் அறிவு மூழ்கிக்
குளித்தவர் இன்பதுன்பம் குறைத்தவர் அன்றி வேரி
ஒளித்தவர் உண்டு மீண்டிவ் வுலகெலாம் உணர ஓடிக்
களித்தவர் எய்தி நின்ற கதி ஒன்று கண்ட துண்டோ? (5)

செற்றதும் பகைஞர் நட்டார் செய்தபே ருதவி தானும்
கற்றதும் கண்கூடாகக் கண்டதும் கலைவ லாளர்
சொற்றதும் மானம் வந்து தொடர்ந்ததும் படர்ந்த துன்பம்
உற்றதும் உணரார் ஆயின் இறுதி வேறு இதனின் உண்டோ? (6)

வஞ்சமும் களவும் பொய்யும் மயக்கமும் மரபில் கொட்பும்
தஞ்சம்என் றுரைநீக்கும் தன்மையும் களிப்பும் தாக்கும்
கஞ்சமெல் அணங்கும் தீரும் கள்ளினல் அருந்தி னுரை
நஞ்சமும் கொல்வ தல்லால் நரகினை நல்கா தன்றே. (7)

ஐயநான் அஞ்சி னேன்இந் நறவினின் அரிய கேடு
கையினல் அன்றி யேயும் கருதுதல் கருமம் அன்றால்
வெய்யதாம் மதுவை இன்னும் விரும்பினேன் என்னின் வீரன்
செய்யதா மரைகள் அன்ன சேவடி சிதைக்க என்றான். (8)

(இராம, கிட்கிந்தைப் படலம்)

குடிவெறியால் அறிவழிந்திருந்த சுக்கிரீவன் மதி தெளிந்த பின் அங்கதனிடம் இவ்வாறு மனம் மறுகிப் பேசி யிருக்கிறான். பாசுரங்களில் பொதிந்துள்ள பொருள் நிலைகளைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ளவேண்டும். "எனது ஆருயிரைக் காத்து அரிய அரச திருவைத் தந்து பேருதவி புரிந்துள்ள பெருமானது நன்றியை மறந்து நான் நாசம் உறும்படி நீசக் கள் நெடுந்துயர் செய்து விட்டதே! பஞ்ச பாதகங்களுள் ஒன்றான பழி நறவைப் பருகி

இழிவுடையனாய் அழி நரகுக்கு ஆளாயினேனே! இவள் தாய்; இவள் மனைவி என்று பேதமும் தெரியாதபடி அறிவை அழித்துக் கொடிய பழிபாதகங்களை விளைக்கின்ற ஈனக் கள்ளைக் குடித்த நான் அந்த மான வீரன் முகத்தில் இனிமேல் எப்படி விழிப்பேன்? அந்தோ! ஞானபோதம் இன்றி ஊனமான உலக மையலில் மயங்கிக்கிடக்கின்றேன்; மேலும் தீய மதுவையும் பருகிப் பேயனாயினேன்; தன்னை அறிந்தவரே பிறவி தீர்ந்து பேரின்பம் பெறுவர் என முன்னை வேதங்கள் எல்லாம் முழங்கியுள்ளன. அந்த மெய்யுணர்வு பரிசுத்தமான விரத சீலங்களால் உண்டாம்; இழிந்த அசுத்தமான கள்ளை உண்ட நான் எவ்வாறு கதி காண்பேன்? நெருப்பில் நெய்யை வார்த்ததுபோல் தீய மதி கேட்டில் மதுவையும் குடித்துக் கொடிய தீயனாயினேன்; உள்ள அழுக்கைக் கழுவாமல் மேலும் சேற்றைப் பூசிக்கொள்ளும் மூட வெறியர்போல் குடி வெறியால் பீடை அடைந்தேன்; தீய நஞ்சினும் கள் தீயது; தன்னை உண்டவரை நஞ்சு கொல்லுமே யன்றி நரகத்தில் கொண்டுபோய்த் தள்ளாது. பழி பாவங்களை விளைத்து இருமையும் கெடுத்து அடு நரகில் ஆழ்த்தும் கொடிய கள்ளை நினைந்த போதெல்லாம் என் நெஞ்சம் நடுங்குகிறது. அதனைக் கண்ணால் பார்க்கவும் இனி என்னால் முடியாது. கருதினும் நெஞ்சம் வேகின்ற மதுவை இனி நான் தீண்டுவேன் ஆனால் இராமத் துரோகம் செய்த கொடிய பாதகனாய் அடுநரகில் போவேனாக" என்று வானர வேந்தன் இங்ஙனம் உள்ளம் மறுகி உணர்வு பெருகி உருகி உரையாடியுள்ளான்.

கள்ளுக்குடியால் தனக்கு நேர்ந்துள்ள இழி பழியையும் அழிதுயரையும் நேரே அனுபவித்தவன் ஆதலால் இப்படி அதனை வெறுத்துப் பேச நேர்ந்தான். மீண்டும் குடியில் வீழ்ந்துவிடாதபடி அணைகோலி ஆணையிட்டுச் சத்தியம் செய்து கொண்டான்.

அரச பதவியில் உள்ள ஒரு சிறந்த குடிகாரனைக் கொண்டு குடியின் தீமையை உலகம் தெளிந்து உய்யும்படி திவ்வியமான ஒரு பிரசங்கத்தைக் கவிச்சக்கரவர்த்தி செய்திருக்கும் வித்தகம் அதிசய விசித்திரமாய்ச் சுவை சுரந்துள்ளது. உண்மைகளை உய்த்துணர்ந்து கொள்ளுவது எவ்வழியும் நன்மையாம்.

**கள்ளை வாய் வைத்தல் கடுவில் கொடிது.**

குடி உயிர்க் கேடு செய்யும் கொடுமையை இது உணர்த்தி யுள்ளது. கடு=விடம். இல் உருபு எல்லைப் பொருளது.

நஞ்சு மரணத்தை விளைக்கும்; கள் உயிரை நரக துயரத்தில் ஆழ்த்தும் ஆதலால் கடுவினும் இது கொடியது என வந்தது.

"துஞ்சினர் செத்தாரின் வேறல்லர்; எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்உண் பவர்." (குறள், 926)

உறங்கினவர் யாதும் உணராமையால் இறந்தவரேயாவர்; அதுபோல் கள்ளை உண்டவர் உணர்வு அழிந்து உயிர் இழிதலால் நஞ்சு உண்டவரேயாவர் என இது உணர்த்தி யுள்ளது.

நீசக் குடி நாசப் பிடியாம் என்க.

கள்ளைக் குடித்தவர் நஞ்சைக் குடித்தவரே என்று வள்ளுவப் பெருந்தகை இங்ஙனம் குறித்துள்ளார். இந்தக் குறிப்பின்மேல் கம்பர் ஒரு குறிப்பைத் தொடுத்து வாதாடுகின்றார்.

நஞ்சமும் கொல்வது அல்லால் நரகினை நல்காது அன்றே!

கள் நஞ்சினும் கொடியது; எவ்வழியும் அதனை அஞ்சி ஒழிக்கவேண்டும் என இங்ஙனம் அச்சுறுத்தி உணர்த்தியிருக்கிறார். அன்றே! என்றது வினை உருவில் பரிதாப நிலையை விளக்கி நின்றது. உரையின்தொனி உணர்ச்சிஉருக்கங்களை விளைத்துளது.

கள் நஞ்சு என்றால் குடிகாரன் அஞ்சி விடுவான் என நாயனார் கருதினார். "நஞ்சு கொல்லத்தானே செய்யும்? கொல்லட்டுமே! குடித்தாவது செத்துப் போவனே யன்றிக் குடியாமல் இரேன்" எனப் பெருங்குடியர் துணிவர் ஆதலால் அவர் பயந்து நீங்கும்படி கம்பர் நயந்து கூறினார். நஞ்சு கொன்றதோடு நீங்கும்; கள் என்றும் நீங்காமல் நரக துன்பத்தில் அழுத்தி உயிரை நாசப்படுத்தும் என அதன் நீச நிலையை நெஞ்சம் தெளிய விளக்கி யருளினார். உறுதி நலங்களைக் கூறுகின்ற நீர்மையைக் கூர்மையாக ஓர்ந்து கொள்க.

கஞ்சமெல் அணங்கும் தீரும் கள்ளினால். (கம்பர்)

கள்ளை அருந்தினால் இலட்சுமி நீங்கி விடுவாள்; மூதேவி உன்னைப் பிடித்துக்கொள்ளும் எனச் செல்வம் இழந்து வறுமை யுறுவதை இங்ஙனம் எடுத்துக் காட்டினார். கஞ்சம்=தாமரை.

இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு. (குறள், 920)

கள் உண்டல், சூது ஆடல், வேசியை விரும்பல்ஆகிய இம் மூன்றும் திரு நீங்கிய மூதேவிகள் தொடர்பு ஆம் என்னும் இதனை அடியொற்றி அது வந்துள்ளது. வள்ளுவர் வாய்மொழி களை அள்ளிக் கொண்டுபோய்த் தம் காவியத்தில் சீவியஒளிகளா ஓவியங்கள் அமைத்துபூவுலகம் உய்யக் கம்பர் போதித்திருக்கிருர்.

தமிழ்மொழிக்கு இரண்டு கண்களாய் இந்தப் புண்ணியப் புலவர்கள் பொலிந்து விளங்குகின்றனர். கதி என்னும் சொல் இவ்வுண்மையை நுண்மையாக உணர்த்தி யுள்ளது. கம்பன் என்பதில் க முதலில் உள்ளது; திருவள்ளுவர் என்பதில் தி முத லில் நிற்கிறது. இந்த இரண்டும் சேர்ந்து கதி என்று ஆகிறது. ஆகவே கம்பர், திருவள்ளுவர் என்னும் இந்தப் பேராளர் இரு வருமே தமிழுக்கு நேரான கதி என்பதை உலகம் அறிய உணர்த்திப் புலவர் நிலைகளைத் துலக்கியுள்ளது.

செந்தமிழ்க்குக் கதியாவார் இருவர்என
அறிவுலகம் தேர்ந்து சொன்ன
அந்தவுயர் முதுமொழிக்கு முந்திநீ
முதன்மையாய் அமைந்து நின்ருய்!
எந்தவழி ஆய்ந்தாலும் எவ்வகையில்
ஓர்ந்தாலும் இறைமை உன்பால்
சொந்தமுறை யாய்வளரச் சோதியாய்
ஒளிர்கின்ருய் சுகுண வேந்தே! (1)

மானிடரின் செவிகளுக்கு வானவரின்
அமுதம்என இராம காதைத்
தேனினைநீ சுவைசெய்து தேன்மாரி
பொழிந்துள்ளாய்! தேவர் எல்லாம்
ஊனமுதம் உண்டொழிய உணர்வமுதம்
இனிதுநுகர்ந்து உயர்பே ரின்பம்
ஞானமுடன் பெற்றுநரர் வானைமறந்து
உவந்துள்ளார் நன்மை என்னே! (2)
(இந்தியத்தாய் நிலை)

கம்பரைக் குறித்து வந்துள்ள இந்தப் பாசுரங்கள் இங்கே நன்கு சிந்திக்கத்தக்கன, கள் அருந்துதல் தீது என்று மேலோர்

எல்லாரும் உள்ளம் இரங்கி உரைத்துள்ளனர். இருந்தும் அந்தப் பொல்லாத குடி போய்த் தொலையாமல் பேய்க் களிப்பாய்ப் பொங்கி எங்கும் புலையாடி நிற்கிறது. புலையாட்டம் எல்லாம் பாழான பழக்கத்தின் தலையாட்டமேயாம்.

மனிதன் இயற்கையில் நல்லவன். கெட்ட பழக்கத்தால் கேடு அடைய நேர்ந்தான். கேடு நீங்கிப் பீடு பெறவேண்டும்.

உள்ளி ஒழிக உடன்

என்றது கள்ளின் தீமையைக் கருதி உணர்ந்து உறுதி தெளிந்து விரைந்து உய்யும்படி பரிந்து உணர்த்தியுள்ளது.

மதியைக் கெடுத்து மனிதனைச் சிறுமைப் படுத்துவது ஆதலால் மதுபானம் எவ்வழியும் பழி கேடாய் இழிக்கப்பட்டது.

"Gambling and drinking are among the worst evils of modern life. They have reduced many families to squalor and misery." (John William Lawson)

"தற்கால வாழ்க்கையில் உள்ள பழி கேடுகளுள் சூதாட்டமும் குடியும் மிகவும் கொடியன; பல குடும்பங்களை அவை பாழ்படுத்தி யிருக்கின்றன." என்று வில்லியம் லாசன் என்பவர் இவ்வாறு தேச நலம் கருதிக் கூறியிருக்கிறார்.

இழிவும் கேடும் தருகிற பழி கள்ளை யாண்டும் தீண்டாமல் எவ்வழியும் வாழ்வைச் செவ்வையாகச் சீர் செய்து திவ்விய மேன்மை பெறுக. உண்மை யுணர்வு உயர்வு தருகிறது.

இந்த அதிகாரத்தின் தொகைக் குறிப்பு.

கள் உண்டல் பஞ்சமா பாதகம்.
அதனால் அறிவு பாழாம்.
செல்வமும் சீரும் நாசமாம்.
குடி அழிந்து போம்.
இழிவும் இன்னலும் எய்தும்.
பழியும் பாவமும் விளையும்.
அது உயிர்க் கேடு புரியும்.
நடைப் பிணம் ஆக்கும்.
நரகத்தில் ஆழ்த்தும்.
அதனை ஒழித்து உய்க.

௬௧-வது கள்ளின் களிப்பு முற்றிற்று.

# அறுபத்திரண்டாம் அதிகாரம்

## புன்மை.

அஃதாவது புல்லிய தன்மை. உயர்ந்த சிந்தனைகளை இழந்து சிறிய செயல் இயல்களில் வறிதே இழிந்துழலும் அற்பரது இளி நிலையை உணர்த்துகின்றமையால் புலையான களியின்பின் இது வைக்கப்பட்டது. களிப்பும் இளிப்பும் களைந்து வாழுக.

611 இழிந்தோர் உயர்ந்தோர் எனவே உலகில்
வழிந்து மனிதர் வருதல்—பொழிந்துவரும்
ஈன இயல்பால் எழிலுயர்வால் எய்தினகாண்
ஊனம் தெளிக வுணர்ந்து. (க)

இ—ள்

உயர்ந்தோர் தாழ்ந்தோர் என இவ்வுலகில் மனிதர் உலாவி வருகின்றனர். அவ்வரவுகள் இயல்புகளால் அமைந்தன. இழிவான புன்மைகளையுடையவர் இழிந்தவராய் உழல்கின்றார்; உயர்வான தன்மைகளையுடையவர் மேலோராய் உயர்ந்து திகழ்கின்றார்; இவ்வுண்மையை உணர்ந்து நன்மை தெளிக என்பதாம்.

இது உயிர் வாழ்வின் நிலைகளை உணர்த்துகின்றது.

மனிதன் மகிமை மிக வுடையவன். அளவிடலரிய சீவ கோடிகளுள் இவனுடைய நிலைமை தலைமை வாய்ந்துள்ளது. குண நலங்களும் உணர்ச்சிகளும் இவனை மேன்மைப் படுத்தி வருகின்றன. அவை நல்லனவாயின் இவனும் நல்லவனாய் உயர்ந்து விளங்குகிறான்; அல்லனவாயின் பொல்லாதவனாய் இழிந்து திரிகிறான். இயல்பின்படி உயர்விழிவுகள் படிகின்றன.

இழிவு என்னும் சொல் ஈனம் கேடு தாழ்வு குற்றம் கீழ்மை முதலிய நிலைகளை உணர்த்திவரும். இந்தப் பழி வழிகளில் படிந்தவர் இழிந்தவர் என விழி தெரிய வந்தனர். எண்ணங்களும் செயல்களும் இழிவானபொழுது அவன் இழிமகனாய் எண்ணப் படுகிறான். நெஞ்சம் தாழ நிலை தாழ்கின்றது.

கீழோர், தீயோர், கடையர், கயவர் என இன்னவாறு எண்ணப்பட்டு இழிந்துள்ளவர் யார்? உயர்ந்த எண்ணங்களையும் சிறந்த பழக்க வழக்கங்களையும் இழந்துபோய் ஈன நிலைகளில்

உழந்துவருபவரே இழிந்தவராயுள்ளனர். புன்மக்கள், நன்மக்கள் என்னும் வழக்கு புன்மை நன்மைகளின் புலன் தெரிய வந்தது.

கீழான தன்மைகளை யுடையவர் கீழோர்.

மேலான நீர்மைகளை மேவினவர் மேலோர்.

கீழ்மை மனிதனை ஈனமாத் தாழ்த்தி இழிவுபடுத்துகிறது.

மேன்மை அவனை மேலாக உயர்த்தி மகிமை புரிகிறது.

ஈன இயல்புகள் மனிதனைக் கீழோன் ஆகத் தாழச் செய்தலால் அந் நவைகளை ஒழித்த அளவு அவன் உயர் நிலையை அடைகிறான். இனிய பண்பு பெருமை தருகிறது; இன்னாதது சிறுமை தந்து இருமையும் கெடுக்கிறது.

"கீழ்மை அகற்று."

என ஔவையார் இவ்வாறு அருளியிருக்கிறார்.

இழிபுன்மைகளை ஒருவி உயர் நன்மைகளைத் தழுவி ஒழுகுக.

---

612 சின்ன நினைவால் சிறியர் எனவிளிவர்
உன்னம் உயரின் உயர்ந்துமே—அன்னார்
பெரியரென இந்தப் பேருலக மெல்லாம்
தெரிய வருவர் தெளி. (உ)

இ—ள்

சிறிய நினைவுகளை யுடையவர் சிறியராய்ச் சிதைந்து திரிகின்றார்; பெரிய எண்ணங்களை யுடையவர் பெரியராய் உயர்ந்து அரிய மகிமைகளோடு உலகம் புகழ ஒளி செய்துள்ளனர் என்க.

உன்னம் = நினைவு. உள்ளத்தில் ஊன்றி நினைப்பது உன்னம் என வந்தது. உன்னிய வாழ்வு மன்னிய மகிமையாம்.

புறத்தே தோன்றுகிற சிறுமை பெருமைகளுக்கு மூலகாரணங்கள் அகத்தே மருவி யிருக்கின்றன. அகமே புறம்; மனமே மனிதன் என்னும் பழமொழிகள் விழுமிய பொருள்களுடையன. இனிதா எண்ணிவரும் அளவுக்கு அந்த மனிதன் கண்ணியமடைந்து புண்ணிய வாழ்வு பெற்று வருகிறான்.

சின்ன நினைவு என்றது இழிந்த எண்ணங்களை.

பிறருடைய குற்றங்களையும் குறைகளையுமே எவ்வழியும்

கருதிப் பிழையான பழி மொழிகளைப் பேசிவரின் அவர் இழி மக்களாய்க் கழிவுறுகின்றனர். உள்ளம் ஊனமாய்ச் சிறுமை அடைந்த பொழுதே அதனை யுடைய மனிதன் ஈனமாய் இழிவுறுகின்றான். ஈனம் நேராமல் ஒழுகுவதே ஞானமாம்.

உயர்ந்த எண்ணங்களையே எண்ணித் தன் உள்ளத்தை எந்த மனிதன் பண்படுத்தி வருகிறானே அவன் செவ்வியமேன்மையாளனாய்த் திவ்விய மகிமை பெறுகிறான். உள்ளம் உயரவே எல்லா உயர்வுகளும் அங்கே வெள்ளமாய் விரைந்து வருகின்றன; வரவே உலகமெல்லாம் அவனை உவந்து நோக்கி வியந்து கொண்டாடுகின்றது.

துன்பங்கள் நீங்கி எல்லா உயிர்களும் இன்பம் அடைய வேண்டும்; அதற்கு வழி யாண்டுளது? என்று மூண்டு முயன்று நீண்டு நின்ற அந்த ஒரே எண்ணம்தான் புத்தரை உலகம் எல்லாம் உவந்துதொழுது புகழ்ந்துபோற்றும்படி உயர்த்தியுள்ளது.

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே."

தாயுமானவர் நினைந்துள்ள நினைவு நிலையை இதில் நேரே கண்டு நாம் நெஞ்சம் களிக்கின்றோம். இவ்வாறு பெரிய எண்ணங்களைஎண்ணிவருகிறவர்களே பெரிய மகான்களாய்ப்பெருகி வருகின்றனர். நல்ல சிந்தனை எல்லா நலங்களையும் அருளுகிறது.

சின்ன நினைவுகளை நினைந்து சிறியவனாயிழிந்து போகாதே; பெரிய சிந்தனைகளைச்செய்து அரியமகானாய் உயர்ந்துகொள்ளுக.

---

613 குலநலமே பேசிக் குதிப்பார் தமது
நிலையறியார் மேலென்று நீள்வார்—தலைமையெதில்
என்பதையும் எண்ணார் இழிநிலையே கண்டுபுல்லர்
துன்பமுற நிற்பர் தொடர்ந்து. (௩)

இ—ள்

உயிரின் உண்மை நிலைகளை ஊன்றி உணராமல் உடலளவில் ஒட்டியுள்ள சில புன்மைகளைப் புகழ்ந்து பேசி வியந்து செருக்கி அல்லல்கள் அடையவே புல்லர்கள் பொங்கி நிற்பர் என்பதாம்.

உலகநிலை உயிர்நிலை என நிலைகள் இருவகையினவாய் நிலவி நிற்கின்றன. முன்னது உடலின் உறவினங்களாய் உலாவியுள்ளது; பின்னது ஆன்ம வுரிமைகளாய் அமைந்து நிற்கின்றது. வெளியே உள்ளதிலேயே களிபுரிந்து வருபவர் இளிவடைந்து கழிகின்றார்; உள் நோக்கமாய் ஊன்றி ஒழுகுபவர் உயர்ந்த மேன்மைகளை எய்திச் சிறந்து திகழ்கின்றார்.

பிறந்த குலமும், புகுந்த மதமும், பெற்ற செல்வமும், உற்ற உறவுகளும் வெறும் மாயத் தோற்றங்களாய் விரைந்து கழிந்து மறைந்து போவன. இவற்றைப் பற்றிக் கொண்டு வியந்து புகழ்ந்து மகிழ்ந்து வருவது இழிந்த புன்மையாம்

உயர்ந்த தன்மைகளை இழந்துபோன அளவு மனிதன் இழிந்த புல்லனாய் எதிர்ந்து நிற்கிறான். அந்த நிலையில் அவனுடைய எண்ணங்களும் செயல்களும் பேச்சுகளும் சின்னத்தனங்களாய்ச் செழித்துச் சிறுமை நிறைந்து வருகின்றன.

நல்லோர் இகழ்ந்து சிரிக்கும்படியான பொல்லாத புன்மைகள் அவனை எல்லா வகைகளிலும் வளைந்து கொள்ளுகின்றன. கொள்ளவே உள்ளம் நாணாமல் உணர்வு காணாமல் அவன் எதையும் துணிந்து பேச நேர்கின்றான்.

குலநலமே பேசிக் குதிப்பார்.

என்றது புன்மக்களுடைய புலையாட்டங்களுள் ஒன்றை இது உணர்த்தி நின்றது. உண்மை நிலைகளை உணர்ந்து கொள்ளாமல் மருண்டு மயங்கிப் புன்மை புரிந்து வருபவர் புல்லர் ஆகின்றனர். ஆகவே வீணச் செருக்குகள் விரிந்து வரலாயின.

செய்யும் தொழில்களினாலேயே ஆதியில் சாதிகள் எழுந்தன.

நிலத்தை உழுது விளைபொருள்களை உளவாக்குகின்றவர் வேளாளர் என நேர்ந்தார். வேள் = மண். அந்த மண்ணிலிருந்து சட்டி பானை முதலிய பாத்திரங்களைச் செய்பவர் வேளார் என வந்தார். வேளைச் செய்பவன் வேளான்; அதனைக் கையாண்டு விளைவை உண்டு பண்ணுகிறவன் வேளாளன் என்க.

வேளாளன் விளைத்த பொருளை வெளியே கொண்டுபோய் விற்பவன் வணிகன் என வந்தான். வணிகருடைய தொழில் வாணிகம் என வந்தது. உழவும் வாணிகமும் உயிர் வாழ்வுக்கு

ஆதாரமாயுள்ளமையால் அவை இயற்கையுரிமைகளாய் அமைந்தன. இந்தத் தொழில்கள் ஒழுங்காக நடக்கவும், உலகில் ஒருவரை ஒருவர் நலியாதிருக்கவும் தலைமையாய் நின்று நாட்டை இனிது நடத்தவுரியவன் அரசன் என வந்தான்.

இந்த உலகஆசைகளைத் துறந்து பரமனையே கருதி எவ்வுயிர்க்கும் அறிவு நலங்களைப் போதித்து யாண்டும் தண்ணளியுடையனாய் இதமே புரிந்து வருபவன் அந்தணன் என அமைந்தான்.

அந்தணன், அரசன், வணிகன், வேளாளன் என்னும் இந்த நால்வரும் ஒரு குடும்பத்தில் பிறந்த நான்கு பிள்ளைகளைப் போல் உலகத்திற்கு உரிமையாய் அமைந்துள்ளனர்.

செயல் இயல்களால் இசைந்த இந்த நான்கு இனங்கள் உடன்பிறந்த துணைவர்போல் உரிமையுடன் மருவி ஒழுகிவந்தன. ஆதியில் அமைந்த இவையே என்றும் நீதியா யிருக்க வுரியன.

இப்பொழுது இந்த நாட்டில் எத்தனை பிரிவுகள் கிளைத்து எழுந்துள்ளன! எவ்வளவு சாதிகள்! எவ்வளவு குலங்கள்! ஒத்த பிறப்பினனை இழிந்த சாதியான் என்று தாழ்த்தித் தன்னை உயர்ந்த குலத்தவன் என்று காட்டிக் கொள்வதில் எத்தனை கபட நாடகங்கள் நடந்து வருகின்றன! குணம் செயல்களில் மிகவும் ஈனமா இருந்துகொண்டு தன்னை மேலான சாதியான் என்று செருக்கிநிற்பது எவ்வளவு மடமை! எத்துணைச் சிறுமை! இந்தப் பித்த மயக்கங்களை உய்த்துணர வேண்டும்.

சாதித் திமிரும் குலச் செருக்கும் மனிதருக்குள் பெரிய பிளவுகளை உளவாக்கி இந்த நாட்டைப் பாழ்படுத்தி யுள்ளன. சாதிப்பித்துகளால் இந் நாடு பிழைபட்டுள்ளதுபோல் வேறு எந்நாடும் பிழைபடவில்லை. பிழைபாடு பெருங்கேடா யுள்ளது.

வெய்ய சிறுமைகளை விளைத்து வைய மையலாய் வருகிற இந்தப் பொய்யான புலை மயக்கங்களை மெய்யறிவாளர்கள் வெறுத்து உய்தியை நாடி உருகியுள்ளனர்.

"சாதிகுலம் பிறப்புஎன்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லல்அறுத்து ஆட்கொண்டு
பேதைகுணம்பிறர்உருவம் யான்எனதென்உரைமாய்த்துக்
கோதிலமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே."

(திருவாசகம்)

மெய்யறிவு தோன்றி உய்தி பெற்றபோது சாதி குலம் என்னும் பொய்ப் புலைகள் எள்ளித் தள்ளப்படும் என்பதை இதனால் உள்ளி உணர்ந்து கொள்ளுகிறோம்.

வீணான மயக்கங்களில் மனிதர் மருண்டு உழலுகின்றனர்.

அரிய பிறவியைப் பெற்றும் உரிய பயனை அடையாமல் வறிதே பாழ்படுகின்றனர். ஞான நோக்கம் இல்லாமையால் ஊன வழிகளில் ஈனமா யிழிய நேர்ந்தனர். ஆதிமூலப்பொருளோடு நேரே உரிமையாயுள்ள சீவனைத் தீது மூலங்களில் ஆழ்த்திப் பேதைகளாய் இழிவது பெரிய பாதகமாகிறது.

சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்!
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞான
நிருத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தர் அவர்தாமே
வீதியிலே அருட்சோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணமிது கூவுகின்றேன் உமையே. (1)

சாதியும் மதமும் சமயமும் தவிர்ந்தேன்
சாத்திரக் குப்பையும் தணந்தேன்
நீதியும் நிலையும் சத்தியப் பொருளும்
நித்திய வாழ்க்கையும் சுகமும்
ஆதியும் நடுவும் அந்தமும் எல்லாம்
அருட்பெருஞ் சோதிஎன்று அறிந்தேன்
ஓதிய அனைத்தும் நீஅறிந்தது நான்
உரைப்பதென் அடிக்கடி உனக்கே. (அருட்பா) (2)

சாதித் திமிர் சாராமல் ஆதிப் பொருளை அடையுங்கள் என உலக மக்களை நோக்கி இராமலிங்க சுவாமிகள் இங்ஙனம் பரிந்து கூறியிருக்கிறார். அவருடைய பரிவுரைகள் ஆன்ம வுரிமைகள் சுரந்துள்ளன; அறிந்து அனுபவிக்கத்தக்கன.

"நல்ல குலமென்றும் தீய குலம்என்றும்
சொல்லள வல்லால் பொருளில்லைத்---தொல்சிறப்பின்
ஒண்பொருள் ஒன்றோ தவம்கல்வி ஆள்வினை
என்றிவற்றான் ஆகும் குலம்." (நாலடியார், 195)

கல்வி தவங்களையுடையவர் உயர்ந்தவர் ஆகின்றார்; அவற்றை இழந்தவர் இழிந்தவராகின்றார். இங்ஙனம் தன்மை நன்மைகளால் உயர்வு காண வேண்டுமேயன்றி வீணே குலப்பெருமை கூறுவது புன்மையாம் என இது போதித்துள்ளது.

"மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ?
காற்றும் சிலரை நீக்கி வீசுமோ?
மாநிலம் சுமக்க மாட்டேன் என்னுமோ
கதிரோன் சிலரைக் காயேன் என்னுமோ
வாழ்நான்கு சாதிக்கு உணவு நாட்டிலும்
கீழ்நான்கு சாதிக்கு உணவு காட்டிலுமோ?
திருவும் வறுமையும் செய்தவப் பேறும்
சாவதும் வேறிலைத் தரணி யோர்க்கே
குலமும் ஒன்றே குடியும் ஒன்றே
இறப்பும் ஒன்றே பிறப்பும் ஒன்றே
வழிபடு தெய்வமும் ஒன்றே ஆதலால்
முன்னோர் உரைத்த மொழி தவறாமல்
எந்நாள் ஆயினும் இரப்பவர்க்கு இட்டும்
புலையும் கொலையும் களவும் தவிர்ந்து
நிலைபெற அறத்தின் நிற்பதை அறிந்து
ஆணும் பெண்ணும் அல்லதை உணர்ந்து
பேணி உரைப்பது பிழைஎனப் படாது
சிறப்பும் சீலமும் அல்லது
பிறப்பு நலந் தருமோ பேதையீரே!" (கபிலரகவல்)

சாதிப்பெருமை பேசிப் பேதையாய் உழலாதே; நீதி நெறியில் ஒழுகி நேரே உயர்க என இது உணர்த்தியுள்ளமை தெளிக.

---

614 ஏதேனும் ஓர்பதவி எய்தினால் அப்பொழுதே
மாதேவ னாக மதித்துமே—மூதேவி
தந்த மகன்போலத் தாண்டவங்கள் ஆடிக்கீழ்
நிந்தை புரியும் நிலத்து. (௪)

இ—ள்

ஏதாவது ஒரு சின்ன அதிகாரம் கிடைத்தாலும் அதனைப் பெரிதாக எண்ணிச் செருக்கி யாண்டும் இழிவுகளைச் செய்து கீழ்மக்கள் பழிகள் புரிந்து நிற்பர் என்பதாம்.

பதவி என்றது அதிகார நிலையினை. நாலுபேருக்கு மேலாளாய்த் தலைமையாய் நின்று காரியங்களை நடத்தும் பொறுப்பு மனிதனுக்குச் சிறப்பாய் அமைந்துள்ளது. அந்த அதிகார பதவி தகுதியானவரிடம் அமைந்திருந்தால் எல்லாருக்கும் நல்லதாய் இதம்புரிந்து வரும்; தகாதவர்பால் நின்றால் அல்லலாய் விரிந்து அவமதிப்பே தரும்.

உயர்ந்த பதவி இழிந்தவர் கையில் புகுந்தால் எவ்வழியும் இன்னலாய் இழிவுகளே விளையும் ஆதலால் அந்தப்புல்லரது புலைநிலை உலகிற்கு அல்லலாயது. உள்ளம் சிறுமையா யிழிந்துள்ளமையால் அவருடைய செயல்கள் தவறுகளுடையனவாய்த் தாழ்வுற நேர்ந்தன.

மாதேவன் ஆக மதித்துமே.

என்றது புல்லரது மனச் செருக்கை உணர்த்தி நின்றது.

“அற்பர்க்கு வாழ்வுசற்று அதிகமானல் விழிக்கு
யாவர் உருவும் தோன்றிடாது;
அண்டிநின்றே நல்ல வார்த்தைகள் உரைத்தாலும்
அவர் செவிக்கு ஏறிடாது;
முற்பட்ச மானபேர் வந்தாலும் வாருமென
மொழியவும் வாய் வராது;
மோதியே வாதப் பிடிப்புவந்தது போல
முன்காலை அகல வைப்பார்;
விற்பன மிகுந்தபெரி யோர்செய்தி சொன்னாலும்
வெடுவெடுத்து ஏசி நிற்பார்;
விருதா மகத்துவப் பேயது சவுக்கடி
விழும்போது தீரும் என்பார்.”

அற்பருக்கு அதிகார வாழ்வு வந்தால் மதி கேடராய்க் களித்து அவர் படும்பாடுகளை இப் பாட்டு ஓரளவு காட்டியுள்ளது. அனுபவக் காட்சிகள் யாவருக்கும் தெளிவாய் இனிமை சுரந்து வருகின்றன. புல்லர் செயலால் புலைகள் தெரிகின்றன.

புன்மையாளனை மூதேவிமகன் என்றது ஈன நிலைகளில் களித்து வீணச் சேட்டைகள் செய்யும் விதம் தெரிய. கீழோர் மூதேவி மக்களாய் இழிந்துழல்கின்றார்: மேலோர் சீதேவிமக்களாய்ச் சிறந்து திகழ்கின்றார். இழிவு காணுமல் உயர்வு காணுக.

615 ஏற்ற பெருந்தன்மை இல்லாத புல்லர்க்குச்
சாற்றும் ஒருதலைமை தந்துவைத்தல்—ஆற்றுந்தீக்
கொள்ளி கொடுத்துக் குரங்கைவிடல் போலாமே
துள்ளி மிகுக்குந் துயர். (௫)

இ—ள்

உள்ளத்தில் நல்ல பெருந்தன்மை இல்லாத புல்லர்க்கு உலகத்தில் ஓர் அதிகாரத்தைத் தருவது குரங்கு கையில் கொள்ளியைக் கொடுத்தது போலாம் என்க.

ஏற்றதன்மை என்றது தலைமைக்குத் தகுதியான நிலைமையை.

மனித சமுதாயம் எவ்வழியும் ஒழுங்காய் இனிது இயங்கி வரின் உலக வாழ்வு நலமிக வுடையதாய் உவகை சுரந்து வரும். பிழைபடின் இழிவு பலபடிந்து இன்னல் மிகும். உறுப்புக்கள் உரிய முறையில் சரியாக வேலை செய்யவில்லை ஆனல் உடல் உரம் கெடும்; உயிரும் துயர் உறும்.

பண்பாடுடைய மக்கள் தக்க நிலையில் பக்குவமாய் உழைத்துவரும் அளவே ஒரு நாடு பீடும் பெருமையும் பெற்று விளங்கும்; ஆதலால் மேலோர் அதனை யாண்டும் நாடி நலம் செய்து வரவேண்டும். நல்ல வரம்பு நலம் பல தரும்.

பொல்லாத புல்லர்கள் தலைமைப் பதவியைக் கைக்கொள்ள நேர்ந்தால் எல்லா வழிகளிலும் அல்லல் இழிவுகளே பெருகி விரியும். அற்பர் ஆளின் அவலங்கள் நீளும் என்க.

பெருந்தன்மை இல்லாத புல்லர் என்றது சின்னத்தனங்களே யுடைய சிறியர் என்றவாறு. அகத்தில் புன்மை மண்டியுள்ளவர் புறத்தில் நன்மை செய்யமுடியாது ஆதலால் அவர்க்கு அதிகாரம் தருவது நாட்டுக்கு அல்லல் இழைத்த படியாம்.

கொள்ளி கொடுத்துக் குரங்கை விடல் போல் ஆம்.

உள்ளம் குறுகிய புல்லர்க்கு உயர்ந்த பதவியைக் கொடுப்பது மிகுந்த கேடாம் என்பதை இவ்வுவமை உணர்த்தி நின்றது. குரங்கு கையில் தீக்கொள்ளியைக் கொடுத்துவிட்டால் வீடுகளை எரித்து வெந்துயர் விளைக்கும்; அதுபோல் புல்லர் அதிகாரிகளாய் நீடி வந்தால் நாடுகளுக்குக் கேடுகளேயாம்.

மனத்தருக்கு மண்டி நல்லவர்களையும் மதியாமல் புல்லர் அல்லல் புரிவர் ஆதலால் அவரது அதிகாரம் பொல்லாத புலையாம்; ஆகவே எல்லாராலும் எள்ளி இகழ்ந்து அவர் தள்ளப்படுவார் என்பது உள்ளியுணர வந்தது.

“அல்ப புத்தி வாரிகி அதிகார மிச்சிந
தொட்ட வாரிநெல்ல தொலங்க கொட்டு
செப்புதின்ன குக்க செறுகுதீபு எறுகுநா?” (வேமந)

“அற்பப் புத்தியுள்ள சிறியருக்கு அதிகார பதவியைக் கொடுத்தால் பெரியோர்களை யெல்லாம் எள்ளித் தள்ளி அவர் இடரே செய்வார்; செருப்புத் தின்னுகிற நாய்க்குக் கரும்பின் இனிமை தெரியுமா?” என வேமநயோகி என்னும் தெலுங்குக் கவிஞர் இவ்வாறு பாடியுள்ளார். மனநலம் குன்றி மனிதன் இழிந்தபொழுது நாய் குரங்கு பேய் என்று இகழ்ந்து சொல்லப் படுகின்றான். இகழ்ச்சிகள் இழிபுன்மைகளைவிளக்கிவருகின்றன.

உள்ளம் சிறியர் உலகத்தில் உயர்ந்த பதவியை அடைய முடியாது; ஒருவேளை அடைந்தாலும் பழியும் பாவமும் படிந்து இழிந்து படுவரே அன்றிச் சிறந்த மேன்மையாளராய் விளங்க மாட்டார்; இவ்வுண்மை ஈண்டு விளங்கி நின்றது.

சின்ன மனிதர் சிறந்த பதவியுறின்
இன்னல் இழிவே எதிரெழுமால்---அன்ன
புலைநிலையி லுள்ளவர் பொன்றும் அளவும்
கொலைநிலை யாகும் குடிக்கு.

இந் நிலைகளை நினைந்து தெளிக.

---

616 கற்ற பெரியர் கலைஞானம் சொன்னாலும்
உற்ற சிறியர் உளந்திருந்தார்—சுற்றிநேர்
கட்டி நிமிர்த்தாலும் காயும் கொடுநாய்வால்
ஒட்டி நிமிருமோ ஓது. (சு)

இ—ள்

கல்வியறிவுடைய பெரியோர்கள் நல்ல உறுதி நலங்களைச் சொல்லியருளினும் புல்லர் உள்ளம் திருந்தாமல் நாயின் வால் போல் தீய வழிகளிலேயே சுருண்டு திரிவர் என்பதாம்.

அரிய பெருமைக்குக் கல்வி உரிமையா யுள்ளமையால் கற்றபெரியர் என அவர் பெற்றபேறு தெரிய வந்தது. அந்தப் பெருமையை இழந்திருப்பது சிறுமையாய் நேர்ந்தது.

கல்வியும் கேள்வியும் அறிவை வளர்த்து மனிதனை மகிமைப் படுத்தி வருகின்றன. இந்த அறிவின் விளைவுகளை எவ்வழியும் செவ்வையாய் ஈட்டிக்கொள்ள வேண்டும். கண்ணும் காதும் போல் கல்வியும் கேள்வியும் மருவியுள்ளன. கல்வியை இழந் தவன் கண் இழந்த குருடனாய்க் கடைப்படுகின்றான். கேள் வியை இழந்தவன் காது இல்லாதவனாய்த் தீதுழந்துகெடுகிறான்.

நல்லோர் வாய்ச் சொல் உள்ளத்தை உயர்த்தி உறுதி நலங் களை விளைத்தருளுகின்றது. அந்தச் செவி அமுதத்தை இழந்த வன் அறிவுநலம் குன்றிக் கொடியவனாகின்றான்.

காதகம் கேள்வி கனியான் கொடியதோர்.
காதகன் ஆவான் கடிது.

நல்லோர் சொல்லை நயந்து கேளாதவன் பொல்லாதவனாய் இங்ஙனம் புலையுறுகின்றான். காதகன் = கொலைபாதகன். இனிய அறிவு நலனை இழந்தபொழுது கொடிய செயல்களைச் செய்து மனிதன் நெடிய பாவி ஆகின்றான்.

நல்ல தன்மை குன்றவே பொல்லாத புன்மை பொங்கி எழுகின்றது. புலை நிலையில் தலை நிமிர்ந்துள்ளமையால் நல்லோர் சொல்லும் அறிவு நலங்களைப் புல்லர் உள்ளங் கொள்ளாமல் ஊனமாய்ப் போகின்றனர். அப் போக்கு ஈனமாகின்றது.

தானும் அறிவு கெட்டுப் பிறர் சொல்வதையும் கேளாமல் பிழை மண்டியிருத்தலால் அந்தப் பேதைகள் வாழ்வு ஏதங்கள் நிறைந்து யாண்டும் பாதகமா யிழிந்து படுகின்றது.

ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய். (குறள், 848)

புல்லரது புலை நிலையை நினைந்து வள்ளுவப் பெருமான் இவ் வாறு உள்ளம் வருந்திச் சொல்லியுள்ளார். தானும் நேரே தெரிந்து கொள்ளான்; நல்லோர் சொல்லும் புத்திமதியையும் கேளான்; அத்தகைய பேதை செத்து ஒழியும்வரையும் இந்த உலகிற்கு ஒரு கொடிய நோயேயாம் என்றதனால் புல்லனது

பிறப்பும் இருப்பும் எவ்வளவு இழிவுடையன என்பது எளிதே தெளிவாம். அழிமதியாளர் வாழ்வு பழிதுயரங்கள் ஆதலால் அவர் ஒழிவது உலகிற்கு உவகையாயது.

உற்ற சிறியர் உளம் திருந்தார்.

கீற்ற பெரியர் கலைஞானங்களைப் பரிவோடு இரங்கிப் போதித்தாலும் புன்மை நிறைந்த புல்லர் உள்ளம் திருந்தி உயர்ந்து கொள்ளார் என இது உணர்த்தியுள்ளது.

புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள்எனப் போயிற்று.

இராமபாணம் தாடகை நெஞ்சில் தங்காமல் ஊடுருவி வெளியே விரைந்து போனமைக்கு இது உவமானமாய் வந்துள்ளது. பேரறிவாளரான நம் கவிஞர்பிரான் புல்லர்களோடு சொல்லாடி அல்லலுழந்துள்ள அனுபவம் இந்தச் சொல்லுருவில் தோன்றி நிற்கிறது. வாய்மொழி வாழ்வின் விளைவாய் வருகிறது.

நாய் வால் நிமிருமோ?

தீய புல்லர்க்குத் தூய நல்லவர் எவ்வளவு இத நலங்களைப் போதித்தாலும் அவர் திருந்தமாட்டார் என்பதற்கு இது உவமையாய் வந்தது. புல்லர் உள்ளம் திருந்தார்; புலையிலேயே அலைவார்.

நாய்வால் இயல்பாகவே கோணலுடையது; அதனை யாரும் நேராக்க இயலாது. உள்ளத்தில் கோட்டம் உடையராய்ப் புல்லர் உருவாகியிருத்தலால் அவர் எவர் சொல்லையும் கேட்டுத் திருந்தமாட்டார்; கேடே பாடமாய்க் கிளர்ந்து திரிவார் என்க.

அவ்வியம் இல்லார் அறத்தா றுரைக்குங்கால்
செவ்வியர் அல்லார் செவிகொடுத்தும் கேட்கலார்
கவ்வித்தோல் தின்னும் குணுங்கர்நாய் பால்சோற்றின்
செவ்வி கொளல்தேற்று தாங்கு. (நாலடியார்)

புலையர் சூழலில் தோலைத் தின்றுவந்த நாய் பாலின் சுவையைத் தெரியாது; அதுபோல் ஈனப் பழக்கங்களில் இழிந்துள்ள புல்லர் உயர்ந்தோர் சொல்லுகிற நல்ல தரும நீதிகளை உவந்து கேளார் என இது உணர்த்தியுள்ளது.

புலையர்நாய் என்றது நிலையான நீசம் தெரிய.

பொல்லாத புல்லர் அல்லலான வழிகளிலேயே யாண்டும்

அவாவி அலைவர் ஆதலால் அந்த இழிமக்களோடு யாதும் பழக லாகாது என்பது குறிப்பு.

பழிமுதல் நாணர் செய்வன தவிர்வ
 பார்த்திடார்; குடிப்பிறப்பு ஒழுக்கம்
எழில்வளர் கல்வி ஆதிகள் பேணர்;
 எவரையும் முறிக்கும் சொற்செயலார்
கழிமகிழ் வுடையார் கெடுதிகொண்டு ஆக்கம்;
 கைவிடுவார் செல்வம் உறினும்
கொழிபயன் எய்தார் பிறர்க்கலால் தமர்க்குக்
 கொடாரிவர் பேதையர் ஒழிக.

தன்னை எப்பொருளும் அறிந்தவ னாகத்
 தான்மிக மதிக்கும்புல் லறிவின்
வன்மையை யுடையான்; உறுதிச் சொற் கேளான்;
 வல்லதல் லாதுங்கொண் டுரைத்துப்
புன்மையைத் தெரிப்பான்; நவைபுரிந் துலகோர்
 போல்நடிப் பான்தனை யுணர்த்தும்
நன்மதி யினரை அறிவில ராக
 நாட்டுவன் இவனையும் நண்ணேல்!

(விநாயகபுராணம்)

பேதைப் புல்லரைச் சேராதே எனத் தன்மகனுக்கு ஓர் அரசன் இன்னவாறு புத்தி போதித்திருக்கிறன். இழிந்தவ ரோடு கூடுதல் ஈனமே ஆகும் ஆதலால் அவரை ஒட்டாமல் ஒதுங்கி வாழ்வதே எவ்வழியும் நல்லதாம்.

பூத்தாலும் காயா மரமுமுள; நன்றறியார்
மூத்தாலும் மூவார்நூல் தேற்றுதார்---பாத்திப்
புதைத்தாலும் நாருத வித்துள; பேதைக்கு
உரைத்தாலும் செல்லாது உணர்வு. (சிறுபஞ்சமூலம், 23)

நல்ல நீதிகளை உரைத்தாலும் பேதைக்கு உணர்வு தோன் றுது எனக் காரியாசான் இங்ஙனம் கூறியிருக்கிறர்.

உய்த்தனர் தேன்மழை உதவிப் போற்றினும்
கைத்திடல் தவிருமே காஞ்சி ரம்கனி
அத்தக வல்லவோ அறிவிலா தவன்
சித்தம துணர்வகை தெருட்டு கின்றதே. (கந்தபுராணம்)

எவ்வளவு இனிமையாக உறுதி நலங்களைப் போதித்தாலும் புல்லறிவாளர் திருந்தார்; உள்ளம் போனபடியே களித்து நடந்து கெடுவர் என இது காட்டியுள்ள காட்சியைக் கருதிக் காணுக.

---

617 பெரியநலம் ஒன்றும் உணரார் செருக்கிப்
பெரியர் தமையுமே பேணார்—கரிய
மனப்புன்மை யோடு மருண்டு திரிவார்
இனப்புன் சிறியர் இழிந்து. (எ)

இ—ள்

புன்மையான சிறுமையாளர் நன்மை யாதும் உணரார்; நல்ல பெரியோரைப் பேணார்; உள்ளம் இருண்டு எள்ளல் இழிவுகளில் புரண்டு எவ்வழியும் மருண்டு இழிந்து திரிவர் என்க.

உணர்வு மனிதனுக்குத் தனி உரிமையாய் அமைந்திருக்கிறது. இனிய நீர்மைகளால் அது கூர்மை மிகுந்து சீர்மையோடு ஒளி பெறுகின்றது. நீர்மை குன்றியபொழுது உணர்வு கூர்மை மழுங்கிக் குருடுபடுகின்றது; படவே அறிய வேண்டியதை அறிய முடியாமல் அவலமடைகின்றது.

நல்ல தன்மைகள் இல்லையானல் அந்த மனிதனுடைய அறிவு பொல்லாத வழிகளில் புகுந்து அல்லல்களே புரிகின்றது. கொடியவன் தீயவன் சிறியவன் புல்லன் என வெளியே தெரிவன எல்லாம் உள்ளே இழிந்த குணக் கேடுகளின் விளைவுகளேயாம். மூலம் கெட முழுதும் கெடுகின்றது.

புன்மையுடையவர் புலைமக்களாய் இழிகின்றனர். நிலைமை தாழவே நீசங்கள் வளர்ந்து நாசங்களே செய்ய நேர்கின்றனர்.

பெரியர் தமையுமே பேணார்

என்றது சிறுமையாளரது நிலைமை தெரிய வந்தது.

நல்ல குண நீர்மைகளுடையவர் மேலோராய் மிளிர்கின்றனர். அங்ஙனமில்லாதவர் கீழோராய்த் தாழ்கின்றனர். அத் தாழ்வால் வாழ்வும் சூழ்வும் பாழாகின்றன.

மனப் புன்மையோடு மருண்டு திரிவார்.

இழிமக்களுடைய நிலைகளை இது விளக்கி நின்றது.

விதி நியமங்களின்றி மனம் போனபடியெல்லாம் இழிந்து திரியும் ஈன மக்களால் நாடு ஈனம் அடைய நேர்கின்றது. ஆகவே அவர் இருப்பு பூமிக்குப் பாரமாய்ப் பழிக்கப்பட்டது.

கடுஞ்சொல்லின் வம்பரை ஈனரைக் குண்டரைக் காமுகரைக்
கொடும்பவ மேசெயும் நிர்மூடர் தம்மைக் குவலயத்துள்,
நெடும்பனை போல வளர்ந்து நல்லோர்தம் நெறியறியா
இடும்பரை ஏன்வகுத்தாய்? இறைவா! கச்சி ஏகம்பனே! (1)

ஓயாமல் பொய்சொல்வர்; நல்லோரைநிந்திப்பர்; உற்றுப்பெற்ற
தாயாரை வைவர்; சதிஆயிரம் செய்வர்; சாத்திரங்கள்
ஆயார்; பிறர்க்குப காரம்செய்யார்; தமையண்டினர்க்கு ஒன்று
ஈயார்; இருந்தென்ன போயென்ன காண்கச்சி ஏகம்பனே. (2)

தீயவர்களுடைய செயல் இயல்களைக் குறித்துக் காட்டி அவர் இருப்பதால் உலகிற்கு நேரும் அவலங்களை விளக்கிப் பட்டினத்தார் இவ்வாறு பரிந்து பாடியிருக்கிருர்.

தீமை நீங்கித் திருந்தி உய்யவேண்டும்.

---

618 உண்ணல் உறங்கல் உருளல் உடைபூண்கள்
பண்ணல் பழிவினைகள் பாராட்டல்—வண்ணமுலை
மங்கையரைக் கூடி மருவல் இவையன்றி
வெங்கயவர் எண்ணுவரோ வேறு. (அ)

இ—ள்

உண்ணுவது உறங்குவது உடை அணிகளைப் பூண்டு பிலுக்கித் திரிவது காமபோகங்களில் களித்துக் கிடப்பது ஆகிய இந்த இழி நிலைகளைத் தவிர வேறு உயர் நலங்கள் ஒன்றும் கயவர் கருதார் ஆதலால் அவருடைய வாழ்வு விருதா என்க.

உடல் உயிர்களின் கூட்டமே சீவர்களின் நீட்டமாக யாண்டும் நிலவி வருகின்றது. என்றும் நிலையாயுள்ள உயிர்க்கு எவ்வழியும் நிலையின்றி இடையே பொன்றி ஒழிகின்ற உடல் உறவாய் அமைந்துள்ளமை அதிசய விசித்திரமாயுள்ளது. அநித்தியமான தேகம் இருக்கும்போதே நித்தியமான உயிர்க்கு நிலையான பயனை அடைந்து கொள்ள வேண்டும். அங்ஙனம் அடைந்தவர் பேரின்ப நிலையினராய்ப் பெருமகிமை கொண்டுள்

ளார்; அடையாதவர் கடையரா யிழிந்து கடுந் துயரங்களில் உழலுகின்றார். உரிய பயன் ஒழியவே ஊனங்களாயின.

அழிந்து படுகின்ற உடலையே ஓம்பி அந்த அளவில் ஒழிந்து போபவர் இழிந்த மாக்களாய் எண்ணப் படுகின்றனர்.

**உண்ணல் உறங்கல் உருளல்**

என்றது பசிதீர உண்பதும், உறங்குவதும் மங்கையரோடு முயங்குவதும் மயங்குவதும் ஆகிய செயல்களிலேயே இழிந்து கழிந்துவரும் வகைகளை உணர்ந்து கொள்ளவந்தது.

உயிர்க்கு உரிய உறுதி நலங்களைக் கருதிக் கொள்ளாமல் வன விலங்குகள்போல் வறிதே திரிவது பழிபட்ட இழிவாழ்வு ஆதலால் அது செத்த வாழ்வேயாம்.

*முடிப்ப முடித்துப்பின் பூசுவ பூசி*
*உடுப்ப உடுத்துண்ப உண்ணு---இடித்திடித்துக்*
*கட்டுரை கூறின் செவிக்கொளா கண்விழியா*
*நெட்டுயிர்ப்போடு உற்ற பிணம்.* (நீதிநெறிவிளக்கம்)

நல்ல அறிவுரைகளைக் கேட்டு ஞான நிலையில் உயர்ந்து வாழாமல் ஊன உடலையே ஓம்பி உழல்வது ஈனமாம் என இது உணர்த்தியுள்ளது. உயர்ந்த உணவுகளை உண்டு, சிறந்த உடைகளை அணிந்து, இனிய வாசனைகளைப் பூசி, அரிய மலர்மாலைகளைச் சூடிப் பெரிய அரசவாழ்வில் இருந்தாலும் உரிய உணர்வுகுன்றி உயிர் ஊதியத்தை இழந்திருப்பின் அது பெரிய இழவேயாம்.

ஒத்ததை உணராமல் உண்டு களித்து வாழ்பவர் செத்த சவங்களே என்பது உய்த்துணர வந்தது. செத்த சவத்தில் மூச்சு இராது; ஒத்ததை உணராத இத்தப் பிணத்தில் மூச்சு ஓடிக்கொண்டிருக்கும் ஆதலால் உயிர்ப்போடு உற்ற பிணம் என்றார். பயன் இழந்தபோது மனிதன் பாழாகின்றான்.

*உப்பிருந்த ஓடோ? ஒதியோ? உலாப்பிணமோ?*
*வெப்பிருந்த காடோ? வினைச்சுமையோ?---செப்பறியேன்*
*கண்ணப்பருக்குக் கனியனையாய்! நிற்பணியாது*
*உண்ணப் பருக்கும் உடம்பு.* (சிவநேசவெண்பா)

பரமனைப் பணியாது பருத்திருக்கும் உடம்பை இராமலிங்க அடிகள் இங்ஙனம் வெறுத்திருக்கிறார். உயிர்க்கு எவ்வழியும்

ஆதாரமாயுள்ள அந்தப் பரம்பொருளைச் செவ்வையாகத் தோய்ந்து கொள்வதே உடம்பு எடுத்த பயனாம்; உரிமையான அப்பயனை இழந்துபோவது கொடுமையான பழியாய் நின்றது. ஒதி=ஒருமரம். உலாப்பிணம் என்றது நடைப்பிணம் என்றபடி. உயிருடையதாயினும் துயரான பழியுடையது ஆதலால் பயன் இல்லாத உடல் பழியடைய நேர்ந்தது.

பொறி புலன்களில் வெறிமண்டி வீழ்ந்து மனம்போன போக்கெல்லாம் மதியழிந்து போதலால் மனிதன் கதி இழந்து கடையனாயினன்.

### மனமும் மனிதனும்.

"கொடுந்தவம் புரிந்துஒரு குரங்குபெற் றாற்போல்
மலைக்கப் பெற்றிட மனம்எனும் இளைஞன்
உலக்கைக் கொழுந்துஎன ஒருவன் பிறந்தனன்;
வருமிவன் சேட்டை வகுக்கவாய் கூசும்:
விதிவிலக்கு அறியா மிகச்சிறியன் ஆயினும்
விண்மண் நடுங்க வினைகள் இயற்றிக்
காமக் குழியில் கடுகிப் படுகுழி
விழுமதக் களிறுஎன விழுந்து திகைப்பன்;
பதியை இழந்த பாவையின் செயல்போல்
கோபவெங் கனலில் குதித்து வெதும்புவன்;
நிதிகவர் கள்வர் நேரும் சிறைஎன
உலோபச் சிறையில் உழன்று வாழ்வன்;
மோகக் கடலில் மூழ்கி மயங்குவன்;
மதத்தால் வீறி மதங்களில் வியப்பன்;
மச்சரங் கொண்டு மகிழ்கூர்ந்து அலைவன்;
காசில் ஆசை மூசிய வேசையை
அரியதெய்வம் என்று ஆடுவன்; பாடுவன்;
அணிகள் அணிவன்; அடியும் பணிவன்;
எலும்பைச் சுரண்டும் எரிநாய் போலச்
சுற்றுவன்; பற்றுவன்; தொழுவன்; எழுவன்;
கணத்தில் உலகெலாம் கண்டே இமைப்பில்
உற்ற இடத்தில் உறுவன் அம்மா!
சேய்மை எல்லாம் செல்லற் கினையான்
பித்தோங் கியஉன் மத்தனாய்த் திரிவான்;
சொல்வழி நில்லான்; நல்வழி செல்லான்;

சேர அழைக்கில் சிரத்தே ஏறுவன்;
வெட்டிலும் துணியான்; கட்டிலும் குறுகான்;
கள்ளது குடித்துத் துள்ளுவான் போல
மதத்தால் பொங்கி வழிந்து துள்ளுவன்;
பிறந்தஇப் பாவி இறந்தான் இல்லையே!
சென்றநாள் எலாமிச் சிறுவனால் அன்றோ
வருசுகம் காணு வைச்சுமை நேர்ந்தேன்."

மனத்தைக் குறித்து இதில் உரைத்திருக்கும் நிலைகளை ஓர்ந்து உணர்க. புல்லிய புலையாட்டங்கள் புலனாய் நின்றன.

உலக மையல்களில் இழுத்து அலைத்து அல்லல் பல செய்து எல்லையில்லாத இடர்களை மனம் இழைத்ததனாலேதான் நல்ல கதியை இழந்து நான் நாசமுற நேர்ந்தேன் என மானச மருமங்களை வெளிப்படுத்தி ஒரு ஞான சீலர் இவ்வாறு பரிதபித்திருக்கிறார். அறிவுக் காட்சி அரிய பல வுரிமைகளை அருளுகிறது.

மதி கெட்டு மடையனாய் மயங்கி அலைபவன் கதிகெட்டுக் கடையனாய் இழிந்து தொலைகின்றான். உறுதிநலங்களை உணர்ந்து ஒழுகினவன் உயர்ந்த பேரின்ப நிலையை அடைந்து கொள்ளுகிறான். அடைய வுரியதை அடையாதிருப்பது அவமேயாம்.

கருதி உணர்ந்து கதி நலம் காணுக.

---

619 சொல்லறிந்து சொல்லார் துடுக்காய் எவரிடமும்
பொல்லா தனவே புகலுவார்—அல்லலெலாம்
செய்து களித்துத் திரிவார் திறல்மறலி
வைது கழித்தல் மறந்து.

இ—ள்

புல்லர் நல்லமொழிகளை நயந்து பேசார்; யாரிடமும் பொல்லாத வார்த்தைகளையே புலைத்துடுக்காய்ப் பேசுவார்; யாண்டும் அல்லல்களையே செய்து அகம் செருக்கித் திரிவார்; தம்மை எள்ளி வெறுத்து எமன் கடுத்து நிற்பதையும் உணராமல் ஊனமாய் இழிந்து மானமின்றி அவர் உழலுவார் என்க.

சொல்லும் செயலும் மனிதனைத் தெளிவாக அறிதற்கு இனிய கருவிகளாய் அமைந்துள்ளன. உள்ளத்தில் உறைந்துள்ள நிலைகளைப் புறத்தில் நிறைந்து வரும் மொழிகளும்

தொழில்களும் வெளிப்படுத்தி விடுதலால் அவை உண்மையைக் காட்டும் கண்ணுடிகளாய் ஒளிபுரிந்து வருகின்றன.

பொய் பேசல் புறங்கூறல் முதலிய இழிமொழிகளை யுடையவர் பழிகளை வளர்த்துப் பாவிகளாய் இழிந்து போகின்றனர். தமது இழி நிலைகள் தெரியாமல் அவர் களி மிகுத்துத் திரிவது பெரிய மாய மயக்கமாய் மருவி நிற்கிறது.

ஒரு பொய் சொல்ல அஞ்சி அரசைத் துறந்து மனைவி மக்களை இழந்து அல்லல் பல அடைந்து எல்லையில்லாத இன்னலுழந்தும் அணு அளவும் வழுவாமல் சத்தியத்தைப் பாதுகாத்து உத்தம நிலையில் ஒளிசெய்து நின்ற ஒரு மன்னனைப் பெற்று மகிமையுற்றிருந்த இத் தேசம் இப்பொழுது எவ்வளவு நீசப் பொய்யர்களைச் சுமந்து கொண்டு நெடுங் கவலையாய் நிலை குலைந்துள்ளது!

ஒருபொய்யை உரைத்திடமுன் உளம்கூசி
உரியபேர் அரசை விட்டுத்
திருமலிந்த மனைவியையும் தேசுமிகு
புதல்வனையும் சேர விற்று
வருபுலையன் இடம்விலையாய் மன்னிநின்றுஓர்
மன்னன்முனம் வாய்மை காத்தான்
தரும்ஒருகா சுக்கேழு பொய்யுரைக்கும்
மெய்யரின்று தழைத்தார் அம்மா!

(இந்தியத்தாய்நிலை)

இந்தியத்தாயே! சத்தியசீலனுன ஒரு புத்திரனைப் பெற்று உலகம் போற்ற ஒளி புரிந்திருந்த உன் வயிற்றில் இன்று பழியான பொய்யர்கள் எவ்வளவு பேர் தோன்றி இழிவு செய்துள்ளனர்! எனப் பாரதமாதாவை நோக்கி விழிநீர்சிந்தி ஒருகவிஞன் இங்ஙனம் அழுதிருக்கிருன். போய்யுரைக்கும் மெய்யர் என்றது சீவ ஒளி இன்றி வெறும் சடங்களாய் வீணே உழலும் விளிநிலை தெரிய. நல்ல பிறவியுற்றும் நாவழிந்து நாசமுறுவது நீசமேயாம்.

வன விலங்குகளாய் இழிந்துஒழியாமல் வாய்பேசும்பாக்கியத்தைப் பெற்று வையத்துள் வாழ வந்துள்ள மனிதன் தனது வாக்கைப் போற்றி வாழும் அளவே மகிமை பெறுகின்றுன்; போற்றுதொழியின் அந்த வாழ்வு பாழாயிழிந்து போகின்றது.

சொல் அறிந்து சொல்லுதலாவது பயனுடைய வார்த்தைகளை நயமாகப் பேசுதல். அங்ஙனம் ஓர்ந்து பேசிவரின் அந்த

மனிதன் உயர்ந்தவன் ஆகின்றான். அவ்வாறு பேசாதவன் பிழையாளனாய் இழிந்து போகின்றான்.

இழி மொழிகளைப் பழகி வருபவன் எவ்வழியும் இழிமகனாய் அழிவுறுதலால் வாக்கின் வகைமை தகைமைகளை உணர்ந்து கொள்ளலாம். வாய் நல்லதாயின் வாழ்வு நலமாய் வளமுறும்.

எவரிடமும் பொல்லாதனவே புகலுவார்.

என்றது புல்லர்களுடைய சொல்லாடல்களை உள்ளி யுணர வந்தது. உள்ளம் மடமையாயிழிந்து கொடுமை நிறைந்துள்ளமையால் அந்த வாயிலிருந்து வெளிவருகிற வார்த்தைகள் எல்லா வழிகளிலும் பொல்லாதனவாகவே பொங்கி எழுகின்றன.

"கடுக்கெனச் சொல்வற்றாம்; கண்ணோட்டம் இன்றாம்;
இடுக்கண் பிறர்மாட் டுவக்கும்—அடுத்தடுத்து
வேகம் உடைத்தாம் விறல்மலை நன்னாடா
ஏகுமாம் எள்ளுமாம் கீழ்." (நாலடியார், 348)

கீழ் மக்களுடைய செயல் இயல்களை இது குறித்துள்ளது.

கடுஞ்சொற்களைப் பேசுவது, இரக்கமின்றி யிருப்பது, பிறருடைய அல்லல்களைக் கண்டு உள்ளம் களிப்பது, யாண்டும் துடுக்குத்தனமாய் நடப்பது, எவரையும் இகழ்ந்து பழிப்பது ஆகிய இவை இழிமக்களுடைய இயல்புகளாம் எனப் பழைய காலத்துப் புலவர் ஒருவர் இங்ஙனம் எழுதிக் காட்டியிருக்கிறார்.

ஏகும், உவக்கும், எள்ளும் என இழி திணையில் குறித்தது என்னை? எனின், உருவத்தில் மனிதராயிருந்தாலும் மிருகங்களினும் அவர் கடையர் என்பது தெரிய என்க.

வாலுகொம் பின்றியே வடிவம் மானுடம்
போலுயர்ந் திருப்பினும் புல்லர் என்றுமே
நாலுகால் மாடுகள் நடைப் பிணங்களே
மேலொரு நிலையையும் மேவிடார் களே.

என்றபடி மேவி யிருத்தலால் அவரது வாழ்வும் வகையும் அறியலாகும். பயன் இழந்தவர் பழி படிந்து இழிவடைந்தனர்.

அல்லல் செய்து களித்துத் திரிவார்.

இழி மக்களுடைய களியாட்டங்களை இது காட்டி நின்றது.

நல்லதை யாதும் நாடிச்செய்யார்; கெட்ட காரியங்களையே யாண்டும் ஓடிச் செய்து உள்ளம் களித்துத் திரிவார் என்றத ஞல் தீவினை யாளரது சீவிய நிலைகள் தெரியலாகும்.

"Fools rush in where angels fear to tread." (Pope)

"மேலோர் செல்ல அஞ்சுகின்ற இடத்தில் மூடர் உள்ளம் உவந்து கூடுகின்றனர்" என போப் என்னும் ஆங்கிலக் கவிஞர் இங்ஙனம் பாடியுள்ளார்.

மதிகேடான மடையர்கள் விதி நியமங்களைக் கடந்து வீணச் செயல்களில் களித்துத் திரிகின்றனர். இழி வழிகளில் களிமீறி யுள்ள அவரது நிலை யாண்டும் பழியூறி யுள்ளது.

"They only blush at being detected in doing good, but glory in their vices." (Goldsmith)

"நல்ல செயலில் காண நேர்ந்தபோது நாணுகின்றனர்; பாவ காரியங்களில் உள்ளஞ் செருக்கி உவந்து துள்ளுகின்ற னர்" எனத் தீயவர்களைக் குறித்து வந்துள்ள இது இங்கே கூர்ந்து சிந்திக்கத்தக்கது.

இழிமக்களுடைய பழக்க வழக்கங்கள் பழிவழிகளிலேயே படர்ந்து வந்திருத்தலால் அவற்றில் களித்து நிற்க நேர்ந்தனர். பழகியது எளிதாய் எதிர்கிறது; பழகாதது அரிதாய் அகலுகிறது.

தம்முடைய இழி செயல்களால் தமக்கு நேரும் அழிவு நிலையை அறியாமல் இருப்பது கழி மடமையாகிறது. செய்து வரும் தீமைக்கு நாளும் எம தண்டனைகள் பெருகி நிற்கின்றன. அந்த நரக துயரங்களுக்கு ஆளாகாமல் இனியராய் ஒழுகி உய்க.

---

920 ஆலைக் கரும்புபோல் அல்லலிடைப் பட்டாலும்
மேலைக் குடிப்பிறந்த மேலோர்கள்—சாலப்
பிறர்க்கிதமே செய்வர் பெரும்பொருள் கீழோர்
உறப்பெறினும் ஈயார் உவந்து. (ம)

இ—ள்

தாம் அல்லல் பல அடைந்தாலும் மேன்மக்கள் பிறர்க்கு நல்ல இதங்களைச் செய்வார்; செல்வம் மிகப் பெற்றாலும் கீழ் மக்கள் யாருக்கும் யாதும் உதவி செய்யார் என்பதாம்.

இனிய தன்மைகளையுடையவர் நல்ல தண்ணீர்போல் எல் லார்க்கும் இன்பம் பயந்து வருதலால் மேலோர் என ஞாலம் அவரை உவந்து போற்றி வருகிறது. தன்னுள்ளே சீலம்

செறிந்த பொழுது வெளியே சீர்மைகள் சுரந்து மேன்மைகள் பெருகி வருகின்றன.

உடல் பொருள் எவற்றினும் உயிர் உயர்ந்தது. இந்த ஆன்மாவைப் பழுதுபடுத்தாமல் எந்த மனிதன் புனிதமாப் பேணி வருகின்றானே அவன் பெரியமகான் என உயர்ந்து திகழ்கிறான். தான் இனியன் ஆகவே எவ்வழியும் யாண்டும் அவன் இன்பமாய் இனிது இயங்குகின்றான்.

மதுரமான இனிய சாரம் கரும்பில் அமைந்துள்ளது; அவ்வாறே புனிதமான நல்ல நீர்மைகள் மேலோரிடம் அமைந்திருக்கின்றன. கரும்பை எப்படிக் கசக்கிப் பிழிந்தாலும் இனிய சுவையே தரும்; மேலோர் அல்லல் பல அடைந்தாலும் யாண்டும் நல்லதே செய்வர் என்க.

ஆலைக் கரும்பு என்றது அல்லல் நிலையின் எல்லை தெரிய வந்தது. கரும்பைச் சிதைத்துச் சாறுபிழிந்து கொடுக்கும் யந்திரத்திற்கு ஆலை என்று பெயர். துன்பச் சூழலில் துடித்திருந்தாலும் மேலோர் இனியராய் இன்பமே புரிவர் என்பதை உவமை நன்கு உணர்த்தி நின்றது.

> "கடித்துக் கரும்பினைக் கண்தகர நூறி
> இடித்துநீர் கொள்ளினும் இன்சுவைத்தே யாகும்
> வடுப்பட வைதிறந்தக் கண்ணும் குடிப்பிறந்தார்
> கூறார்தம் வாயில் சிதைந்து" (நாலடியார், 156)

நல்ல குடிப் பிறந்தவரை அல்லல் உறுத்தினும் அவர் வாயால் பொல்லாத சொல்லைச் சொல்லார் என இது உணர்த்தியுள்ளது. நல்லோர்க்குக் கரும்பை இதில் உவமை காட்டியுள்ளமை கருதியுணர வுரியது.

பிறர்க்கு இதமே செய்வர்.

உயர்ந்த குடிப்பிறந்தவரது இயற்கை நிலைமையை இது விளக்கி யுள்ளது. ஒருவன் உயர்ந்தவன் என்பதற்கு அடையாளம் உள்ளம் புனிதமாய் இனிமை சுரந்திருப்பதேயாம்.

நல்ல நீர்மையாளன் எவ்வழியும் யார்க்கும் நலமே புரிந்து வருதலால் புகழும் புண்ணியமும் பொலிந்து அவன் ஒளிமிகுந்து நிலவுகின்றான். அல்லல் உறினும் நல்லதே செய்தலால் அவன் பிறந்த குடி உயர்ந்தது என உலகம் உவந்து புகழ நேர்ந்தது.

> "ஆற்றுப் பெருக்கற்று அடிசுடுமந் நாளுமவ்வாறு
> ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்---ஏற்றவர்க்கு
> நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
> இல்லையென மாட்டார் இசைந்து." (நல்வழி, 9)

நதியில் நீர்ப் பெருக்கு வற்றி மணலாயிருந்தாலும் ஊற்று நீரால் உயிர்களை அது ஊட்டியருளுகிறது; அதுபோல் பொருள் வருவாய் குன்றி வறுமையுற்றிருந்தாலும் நல்ல குடியில் பிறந்தவர் தம்பால் வந்தவர்க்கு உதவியே செய்வர் என ஔவையார் இவ்வாறு உணர்த்தியுள்ளார்.

உதவி புரிவது உயர் பிறப்பாகின்றது.

வழி வழியாகவே கெழுதகைமை புரிந்து விழுமிய நீர்மையில் விளைந்து வருவது மேன்மைக் குடியாய் விளங்கி நின்றது.

நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு. (குறள், 953)

உண்மையான உயர் குடிக்கு உரிய நான்கு அடையாளங்களைத் தேவர் இங்ஙனம் குறித்திருக்கிறார். வந்தவரை முகம் மலர்ந்து உபசரித்தலும், இயன்றதை ஈதலும், இன் சொல் இசைத்தலும், யாரையும் இகழ்ந்து பேசாமையும் ஆகிய இந்த நீர்மைகள் அமைந்திருப்பவர் உயர்ந்த குடியில் பிறந்த சிறந்த மேன்மக்களாய்ச் சீர் பெற்றுள்ளனர்.

தம்மை உயர்ந்த குலத்தவராய் எண்ணிக் கொள்ளுபவர் இந்த நான்கு தன்மைகளும் தம்பால் உள்ளனவா? என்று உரிமையோடு பரிசோதனை செய்து ஓர்ந்து உணர்ந்து கொள்ள வேண்டும். உணராமல் களிப்பது ஊனமேயாம்.

மேலோர்களுடைய செயல் இயல்கள் அதிசய நிலைகளில் பெருகி வருதலால் எவரும் அவரைத் துதிசெய்து வருகின்றனர்.

குமணன் ஒரு குறுநில மன்னன்; பெருந்தன்மையாளன்; நல்ல கொடையாளி; யாருக்கும் இல்லை என்னுமல் ஈந்து வந்த இவன் தம்பியால் அல்லல் அடைந்து அரசை இழந்துபோய் அடவியை அடைந்தான்; துறவிபோல் வறிய நிலையில் அங்கே தனியே வாழ்ந்து வந்தான். வருங்கால் ஒரு நாள் பெருந்தலைச்சாத்தனார் என்னும் புலவர் இவனை வந்து கண்டார். அவரைக் கண்டதும் ஏதேனும் கொடுக்க வேண்டுமே! என்று கருதினான். கையில் யாதும் இல்லாமையை எண்ணி உள்ளம் நொந்தான். தன் தலையைக் கொய்து கொண்டு வருவார்க்கு ஆயிரம் பொன் தருவதாகப் பகைமை கொண்டவன் உறுதி செய்திருந்தான் ஆதலால் அதனை நினைந்தான்; உள்ளம் உவந்தான்; உதவி செய்ய விரைந்தான்; புலவரை நோக்கினன்.

"அந்தநாள் வந்திலீர் அருங்கவிப் புலவீர்!
இந்தநாள் வந்துநீர் நொந்தெனை அடைந்தீர்

தலைதனைக் கொண்டுபோய்த் தம்பிகைக் கொடுத்துஅதன்
விலைதனைக் கொண்டுநும் வெறுமைநோய் களைக!''

என்று இங்ஙனம் சொல்லிக் கொண்டே தன் தலையைச் சாய்த்துக் கொலை செய்யக் கொடுத்தான். புலவர் அலறி அழுதார்; கண்ணீர் மார்பில் வழிந்தோட இப்புண்ணியனைப் போற்றியிருத்திவிட்டு இளையவனிடம் சென்று நிலைமையை உணர்த்திப் பழையபடி இவனை அரசனுக்கி வைத்துவிட்டு அவர் அகன்று போனார். இவனது உபகார நீர்மை வியனாய் விளங்கி நின்றது.

ஆலைக் கரும்புபோல் அல்லலிடைப் பட்டாலும் மேலைக் குடிப்பிறந்தார் சாலவும் பிறர்க்கு உதவி செய்வார் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்து மகிழ்ந்தது.

''இல்லாத நிலைமையிலும் தன்பால்வந்து இரந்தவருக்கு இல்லை என்று
சொல்லாமல் தலைகொடுத்துத் தலைக்கொடையான் எனக்குமணன்
[தோன்றி நின்றான்
மல்லாரும் மலையளவு வளமுறினும் அரைக்காசும் வழங்காது அந்தோ
கல்லான மனமுடைய பொல்லாதார் இக்காலம் கலித்தார் அம்மா!''

பண்டிருந்த வண்மையையும் இன்றிருக்கும் புன்மையையும் எதிரே எடுத்துக்காட்டி இது பரிவூட்டியுள்ளது. வறிய நிலையிலும் குமணன் அரிய வள்ளலாய்ப் பெரிய மகிமை பெற்றான்; நெடிய செல்வம் இருந்தாலும் யாதும் உதவாமல் புல்லர் அவலமடைந்திருப்பர் என்றது உயர்வு இழிவுகளின் நிலைமை தெரிய.

புன்மையாளர் புறப்பொருள் எய்தினும்
நன்மை காணலர் நாசமே காணுவார்.

என்றதனால் அவாது நீசநிலை தெளிவாம்.
புல்லனாயிழிந்து புலையுறாதே; நல்லவனாயுயர்ந்து நலம்பல பெறுக.

இந்த அதிகாரத்தின் தொகைக் குறிப்பு.

இழிந்த பழக்கங்களை யுடையவர் ஈனர் ஆகின்றார்.
உயர்ந்த எண்ணங்களையுடையவர் உயர்ந்தவராகின்றார்.
புல்லர் ஆய் இழிந்தவர் புலை புரிகின்றார்.
உள்ளம் தருக்கி எள்ளல் இழைக்கின்றார்.
அல்லல் விளைத்து அவலம் அடைகின்றார்.
தெளிந்து திருந்தாமல் இழிந்தே போகின்றார்.
மருண்டு திரிந்து மயங்கி யுழல்கின்றார்.
கயவராகிக் கடைப் படுகின்றார்.
வாய்த் துடுக்கராய் வசையுறுகின்றார்.
புன்மையில் இழியாமல் நன்மையில் உயர்க.

௬௨-வது புன்மை முற்றிற்று.

# அறுபத்துமூன்றும் அதிகாரம்

## பொருமை.

அஃதாவது பிறருடைய நலங்களைக் கண்டு உள்ளம் பொருது உழலுதல். பொல்லாத புல்லரது புலை இயல்பு, ஆதலால் புன்மையின் பின் இது வைக்கப்பட்டது. புன்மையும் பொருமையும் தம்மை மருவினரை ஈனப்படுத்தி இம்மையும் மறுமையும் கெடுத்துவிடும் ஆதலால் அந்த ஈனங்களை யாதும் அணுகாமல் ஒழுகி வருவதே விழுமிய மேன்மையாம்.

621. ஒத்த பிறரின் உயர்வு நலம்காணின்
சித்தம் கனன்று சிறுமையாய்—நித்தம்
பிழைபேசி நிற்கின்ற பேதைமைபோல் தீமை
உழையேதும் இல்லை யுணர். (க)

இ—ள்

பிறருடைய உயர் நிலைகளைக் கண்டு உள்ளம் பொருமல் கனன்று பிழை பேசி நிற்றல் கொடிய மடமையாம்; இந்தத் தீமைபோல் தீயது வேறு யாதும் இல்லை என்க.

இது பொருமையின் புலை நிலையை உணர்த்துகின்றது.

குணமும் குற்றமும் மனிதனிடம் மருவி யிருக்கின்றன. குணம் நல்லது; குற்றம் தீயது. குணத்தால் இன்பமும் புகழும் வருகின்றன; குற்றத்தால் துன்பமும் பழியும் தொடர்கின்றன. அமுதம்போல் குணம் எவ்வழியும் மகிழ்ச்சிதந்து மாண்புறுத்து கிறது; குற்றம் நஞ்சுபோல் யாண்டும் நாசமே செய்கிறது. தனக்கு நேருகின்ற அழிவுகளை அறியாமல் இழிவுகளில் இழிந்து ஈனமாய் மனிதன் அழிந்து போகிருன்.

உயிர்க்கு இனியதை ஒருவி இன்னுமையை மருவி இன்னலுழப்பது மாய மயக்கமாய் மன்னி வருகிறது. தீயவை தீயினும் தீயன என்று தூயவர் உணர்த்தி யுள்ளனர். அந்த உண்மையை யாதும் உணராமல் புன்மையைத் தோய்ந்து புலையாடி அழிவது நிலையான நெடிய வியப்பாய் நிலவியுள்ளது.

பொறுமை நல்லது; புண்ணியம் உடையது.

பொருமை தீயது; பாவம் படிந்தது.

பொறுமை இனிய நீர்மையாய் இன்பம் தருகிறது; பொறு மை கொடிய தீமையாய்த் துன்பம் புரிகிறது. தன்னை யுடை யானைச் சிறுமைப்படுத்தி இருமையும் கெடுத்துவிடும் ஆதலால் பொறாமை எவ்வளவு தீயது என்பது எளிது தெளிவாம்.

இட்டுள்ள பெயரே அதன் புலைப் புன்மையை வெளிப் படுத்தி யுள்ளது. பிறருடைய செல்வம் முதலிய நிலைகளைக் கண்டு உள்ளம் பொருயல் அழன்று எள்ளல் புரிந்து நிற்கும் இழி நிலைக்குப் பொறாமை என்று பெயர்.

மனிதனுடைய நல்ல உள்ளத்தைத் தீயது ஆக்கிப் பொல் லாத அழுக்காய் நீசப்படுத்தி வருதலால் பொறாமைக்கு அழுக் காறு என்று ஒரு பேரும் வந்தது. உற்ற பெயரால் அதன் ஊன மும் ஈனமும் உணரலாகும்.

நோனமை வக்கிரம் அழுக்காறு அவ்வியம்
கூரம் என்பது பொறாமையின் கூற்றே. (பிங்கலந்தை)

பொறாமைக்கு உரிய பரியாய நாமங்களைப் பிங்கலமுனிவர் இங்ஙனம் கூறியிருக்கிறார். கூரம், வக்கிரம் என்பன கூர்ந்து உணர வுரியன. நெஞ்சம் புழுங்கி எரிந்து வஞ்சமாய் மாறுபடும் நிலைகளை நேரே விளக்கியுள்ளன.

ஒத்த பிறரின் உயர்வு நலம் காணின்
சித்தம் கனன்று சிறுமையாய்.

என்றது பொறாமையின் உருவநிலையை உணர்த்தி நின்றது.

தன்னுடைய நலங்களையே கருதி வருவது மனிதனிடம் இயல்பாய் மருவியுள்ளது. தன்னைவிடப் பிறன் உயர் நிலையை அடைந்தான் என்று காணும் பொழுது தனக்கு ஏதோ சிறுமை நேர்ந்ததாகக் கருதி மறுகுகிறான். அந்த மாய மயக்கம் தீய இயக்கமாய்த் திரண்டு வருகிறது. உள்ளம் பொருத அப் புன் மை பொறாமையாய்ப் பொங்கி எழுகின்றது. அதனால் பழி மொழிகளும் அழி கேடுகளும் விளைகின்றன. விளையவே மனித சமுதாயத்தில் எவ்வழியும் இழி துயரங்கள் பெருகி ஈனங்கள் விரிந்து நிற்கின்றன.

அன்னியற்கு அறிவுருவு ஆக்கம் கண்டு கேடு
உன்னி உட்பொறாமையாம் உருவினேன் உடன்

தன்னிலுட் புழுங்குமத் தன்மையே வடிவு
என்னும் என் அசூயையை யாவர் வெல்வரே? (1)

கூனி சொல் கொடுமையால் கோளிழைத்து வெங்
கானிடை இராமனைக் கடத்தி விட்டதும்;
ஆனியுற் றிடுஞ்சுயோ தனன்பண்டு ஐவரை
மானிலத்தினில் பல வஞ்சம் செய்ததும்; (2)

அந்தரத் தமரரில் அவனி மாந்தரில்
தந்தவப் பயன்அவ ரவர்க்குத் தக்கது
வந்தடுத்ததுவென மனம் கொளாதுளே
வெந்த அப்பொறாமையை யாவர் வெல்வரே? (3)

யானும் என் அசூயையாம் இனிய தேவியும்
வானும் மண்ணுலகுமே வவ்வி யாரையும்
ஊனும் உள்ளுயிரும் உப்புறையும் பாண்டம்போல்
தானுகச் செயில் எவ்வாறு உறும் சந்தோடமே? (4)

(மெய்ஞ்ஞானவிளக்கம்)

மோகன் என்னும் மன்னன் எதிரே நின்று மச்சரன் இவ்வாறு பேசி யிருக்கிறான். மச்சரம்=பொறாமை. நான் இருக்கும் வரையும் இந்த உலகத்தில் ஒரு பயலும் சந்தோடமாயிருக்க முடியாது; எல்லாரும் என் வசப்பட்டு இழிந்து கிடத்தலால் எவரும் உயர்ந்த நல்லோராய் வெளிவரமுடியாது என அவன் உரைத்திருக்கும் நிலைகளை ஈண்டு ஊன்றி உணர வேண்டும். உருவக வுரைகள் கருதிக் காணத் தக்கன.

உள்ளே பொறாமை கொண்டவன் உப்பு வைத்த பாண்டம் போல் இழிந்து ஒழிவான் என்றதனால் பொறாமையாளரது அழிநிலையும் அவலமும் அறியலாகும்.

புன்மை பொறாமை பொய்மை ஆகிய இத் தீமைகள் இந்த நாட்டு மக்களை ஈனப்படுத்தியிருத்தல் போல் வேறு எந்த நாட்டையும் கெடுக்கவில்லை.

நீசத்தனங்களை ஆசையோடு தழுவி நாளும் நாளும் நாசம் அடைந்து வருகின்றனர். இழிவையும் அழிவையும் வழுவாது தருவதை நழுவாமல் கெழுமி நாசமுறுவது அதிசய வியப்பா யுள்ளது.

பஞ்சுட் பொதிந்த படுதீ பொறாமையுன்
நெஞ்சுட் புகினே நினை.

இந்த உவமையை ஓர்ந்து சிந்திக்க வேண்டும்.

பஞ்சுப் பொதியுள் புகுந்த தீ சிறிதாயிருந்தாலும் அதனை அடியோடு எரித்துவிடும்; அவ்வாறே நெஞ்சுள் புகுந்த பொறாமையும் மனிதனை நாசமாக்கி விடும் ஆதலால் அந்த நீசத்தின் நிலைமையை நினைந்து பாராமல் இழிந்து புலையுறுகின்றனர்.

பொறாமையில் இத் தென்னாடு மிகவும் முன்னேறியுள்ளது; அதன் அழி பயனை அனுபவித்தும் வருகிறது; வந்தும் விழி திறந்து பாராமல் பழி குருடாய்ப் பாழ்பட்டு உழலுகின்றது. தனக்கு நீசத்தையும் நாசத்தையும் தருவதை மனிதன் நேசித்து வருவது நித்திய விசித்திரமாயிருக்கிறது.

பொறாமையுடையவர் எவராயினும் அவர் இழி மக்களாகவே கருதப்படுகின்றனர். புலைப் புன்மை எவரையும் புலைப்படுத்தி விடுதலால் புல்லர் நீசர் என அவர் எள்ளலடைந்தே இழிகின்றனர்.

Deformed persons, and eunuchs, and old men, and bastards, are envious. (Bacon)

"அங்க ஈனர், அலிகள், நலி கிழவர், வேசைமக்கள் ஆகிய இவர் பொறாமை யுடையராயிருப்பர்" என பேக்கன் என்னும் ஆங்கிலப் புலவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

பொறாமையாளரை இன்னவராக எண்ணிக் கொள்ள வேண்டும் என இனந் துலக்கியுள்ள இது ஈண்டு மனங் கொள்ளத்தக்கது. எவன் நெஞ்சில் அழுக்காறு உள்ளதோ அவன் இழுக்குமிகவுடைய இழிமகனே எனத் தெளித்தருளியது விழித்து நோக்கவுரியது.

பழியான பொறாமையைப் பற்றினவர் எவ்வழியும் இழி நிலையாளராய் ஈனமுறுகின்றனர். மேன்மையான மனிதன் கீழ்மையில் இழியவே பான்மைசிதைந்து பழியடையநேர்ந்தான்.

ஈனப் பொறாமையுனை ஈனனெனச் செய்யுமே
ஊனம் ஒழிக வுடன்.

இந்த ஞான மொழியை நயந்து தெளிக.

622. பொறுமை உயர்வு பொறாமை இழிவு
சிறுமை பலவும் செறிந்து—மறுமைநலம்
இல்லா தொழியுமே ஈனப் பழிநிலையைப்
புல்லா தொழிக புறம். (உ)

இ—ள்

பொறுமை உயர் நலம் உடையது; பொறாமை இழிவான ஈனங்கள் பலவும் நிறைந்தது; பழி பாவங்கள் படிந்தது; இம்மை மறுமைகளைக் கெடுப்பது; அப்புன்மையை ஒழித்து நன்மையை நாடி ஒழுகுக என்பதாம்.

பிறர் செய்கிற இடர்களைப் பொறுத்துக் கொள்ளுதல் போறுமை என வந்தது. பொறுத்தல் சகித்தல் மன்னித்தல் என்னும் மானச கருமங்களால் பொறுமையின் மருமங்களை உணர்ந்து கொள்ளலாம்.

இது அரிய பெரிய நீர்மை. தன்னையுடையானைப் பெரிய மகான் ஆக்கும் பெருமகிமையுடையது. புகழும் புண்ணியமும் விளைத்தலால் பொறுமை யாண்டும் கண்ணியமா மதிக்கப்பட்டுத் தெய்வ நீர்மையாய்ச் சீர்மை பெற்றுள்ளது.

"To forgive is divine." (Pope)

"பொறுப்பது தெய்வத் தன்மை" எனப் போப் என்னும் ஆங்கிலக் கவிஞர் இங்ஙனம் பாடியிருக்கிறார். பொறுமையாளர் திவ்விய மகிமைகளை அடைந்து கொள்ளுகின்றனர்.

போறுத்தார் அரசாள்வார்; போங்கினர் போய்மாள்வார்.

என்பது இந் நாட்டில் வழங்கி வரும் பழமொழி. பொறுமையால் விளையும் பெருமேன்மைகளை இது காட்டியுள்ளது.

"பொறுத்தார்க்குப் பொன்றும் துணையும் புகழ்." (குறள்,156)

பொறுமையாளர்க்குப் பெரிய புகழ் உண்டாம் எனத் தேவர் இங்ஙனம் அருளியிருக்கிறார். சகித்தல் அரிய செயல் ஆதலால் அது புகழ் தவம் புண்ணியம் என்று போற்ற வந்தது.

கறுத்தாற்றித் தம்மைக் கடியசெய் தாரைப்
பொறுத்தாற்றிச் சேறல் புகழால்—ஒறுத்தாற்றின்
வானேங் குயர்வரை வெற்ப பயமின்றே
தானேன் றிடவரும் சால்பு. (பழமொழி, 19)

கள்ளறிந் தன்ன கயவர்வாய் இன்னச்சொல்
எல்லாரும் காணப் பொறுத்துய்ப்பர்—ஒல்லை
இடுநீற்றல் பையவிந்த நாகம்போல் தத்தம்
குடிமையான் வாதிக்கப் பட்டு. (நாலடியார், 65)

எள்ளிப் பிறருரைக்கும் இன்னச்சொல் தன்னெஞ்சிற்
கொள்ளிவைத் தாற்போல் கொடிதெனினும்—மெள்ள
அறிவென்னும் நீரால் அவித்தடக்கல் ஆற்றின்
பிறிதொன்றும் வேண்டா தவம். (அறநெறிச்சாரம், 101)

வெறுப்பவொருவன் காரணத்தால் மிக்கமடத்தால் புரிபிழையைப்
பொறுப்பின் அதுவே பேரறமாம்; புகழும்நிறையும் மிகவளரும்
கறுப்பொன்றறியா அறிவினர்கள் கருத்தில் மகிழ்ச்சியுளவாகும்;
ஒறுப்பின் வருவது ஒன்றில்லை; அதனல் பொறுமை உயிர்த்
[துணையாம்.
(விநாயக புராணம்)

அன்னமனை யாய்குயிலுக் கான அழகு இன்னிசையே
கன்னன்மொழி யார்க்கழகு கற்பாமே—மன்னுகலை
கற்றோர்க் கழகு கருணையே ஆசைமயக்கு
அற்றோர்க்கழகு பொறையாம். (நீதிவெண்பா. 66)

அற்றஉறுப் பெல்லாம் அறுவையினல் மறைப்ப
மற்றொருவர் காண மறையுமால்—வெற்றி
அறையார் கழலாய் அவமாய வெல்லாம்
பொறையான் மறைக்குமேல் போம். (பெருந்தேவனர்)

“முன்னம் பொறுத்தீர் இன்னம் பொறும்.” (தருமன்)

“பொறை ஆடவர்க்குப் பூண்.” (வீமன்)

“பொறைக் கயிற்றில் புகழை அசைப்பர்.” (சிவப்பிரகாசர்)

“புயத்துறை வலியர் ஏனும் பொறையொடும் பொருந்தி வாழ்தல்
சயத்துறை; அறனும் அஃதே,” (1)

“பெருமையும் வண்மைதானும் பேரெழில் ஆண்மைதானும்
ஒருமையின்உணர நோக்கின் பொறையினது ஊற்றமன்றே.”
(இராமன்)

பொறுமையைக் குறித்து வந்துள்ள இவை ஈண்டு ஊன்றி உணரவுரியன. குறிப்புகளைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ளவேண்டும்.

சித்த சாந்தியை அருளி மனிதனை உத்தம நிலையில் உயர்த்தி வருதலால் பொறுமைக்கு அளவிடலரிய பெருமைகள் உரிமைகளாயமைந்துள்ளன. பொறுமையாளன் புண்ணியவானகிறன்.

"To be so moral when he shall endure." (Shakespeare)

"பொறுக்கும் பொழுதுதான் மனிதன் புனிதன் ஆகிறான்"

இது இங்கே அறிய வுரியது. மானச தத்துவங்களை உய்த்துணர்ந்த மேலோர்கள் உள்ளப் பொறையை யாண்டும் வியந்து போற்றியுள்ளனர். பொறை ஏற நிறை ஏறுகிறது.

இத்தகைய பொறுமை அமுதத்தை மருவினவர் உயர்ந்து உய்தி பெறுகின்றார்; இழந்தவர் எவ்வழியும் இழிந்தவராய் வருந்துகின்றார்.

பொறாமைஇழிவு என அதனை இங்ஙனம் இகழ்ந்தது அதனால் மான மனிதருக்கு விளையும் ஈனங்களை எண்ணி. எந்த மனையுள் ஆமை புகுந்ததோ அந்த வீடு விளங்காது; எந்த மனத்துள் பொறாமை புகுந்ததோ அந்தமனிதன் விளங்கமாட்டான் என்பர்.

"இழிபொறாமை அழிவே தரும்"

எனச் சீன தேசத்தில் இப்படி ஒரு பழமொழி வழங்கி வருகிறது. இதனை ஞான நோக்கோடு நாம் பார்க்க வேண்டும்.

தனக்கே கேடு தருவதை நாடிக் கொள்வதால் பொறாமையாளன் முழு மடையன் ஆகின்றான். தன் கேட்டுக்குத் தானே காரணன் என்பதை உணர்ந்தும் திருந்தாமல் இழிந்துபடுவது ஈனப் பழக்கமாய் முடிந்துள்ளது.

"Envy is ignorance." (Emerson)

"அசூயைப் படுவது அறிவிலிகள் செயல்" என எமர்சன் என்னும் அமெரிக்க அறிஞர் இவ்வாறு கூறியுள்ளார்.

தனது அழிவு நிலையை உணராமல் பொறாமையை மனிதன் தழுவி மகிழ்கிறான்; இது ஒரு மாய மயக்கமாய் மருவிவருகிறது. தன் உயிர்க்கு யாண்டும் பெருந் துயரமான இழி பொறாமையை விழைந்து உவந்து கொள்வது வியப்பாயுள்ளது.

நஞ்சு குடித்தவன் நாசமுறுதல்போல் பொறாமை பிடித்தவர் நீசம் உறுகின்றான்; அந்த நீச நிலையால் மனிதசமுதாயம் நாசமடைந்து போகிறது.

ஈனப் பழிநிலையைப் புல்லாது ஒழிக.

என்றது புல்லி நின்றால் அழிவுறுதல் கருதி.

ஈனன்; கீழோன்; இழிபழியாளன்; என மனிதனைப் பாழ்படுத்தித் தாழ்த்தி வருதலால் பொருமை கொடிய நீசமாய் முடிவு செய்யப்பட்டது.

உள்ளத்தைக் கீழ்மையாக்கி ஊனப்படுத்துகிற அந்த ஈனத்தையுடைய மனிதன் அதோ க தி யை யே அடைகிருன். பொருமையால் மனம் கெடுகின்றது; கெடவே மனிதன் கெட்டவனுகின்ருன்; கே டு க ள் விளைகின்றன; விளையவே வாழ்வு முழுவதும் பாழாய் வழி வழியே இழிவும் அழிவும் பெருகி வருகின்றன. போங்காலம் புகுந்த போதுதான் பொருமை புகும் என்பது முதுமொழி.

"மாங்கனி வாயில் கவ்வி மரத்திடை இருந்த மந்தி
பாங்கர்நீர் நிழலே வேருேர் பழம்உ ணும் குரங்குஎன் றெண்ணித்
தாங்கரும் அவாவில் தாவிச் சலத்திடை இறந்தது ஒப்ப
நீங்கரும் பொருமை யுள்ளோர் நிலத்திடைக் கெடுவர் நெஞ்சே!"

(நீதிநூல்)

ஒரு மந்தி மாம்பழத்தை வாயில் கவ்விக் கொண்டு மரக்கிளையில் இருந்தது. கீழே பெருகியிருந்த நீர் நிலையைப் பார்த்தது; தன் சாயல் தெரிந்தது; ஒரு குரங்கு பழம் தின்னுகிறதே! என்று பொருமை கொண்டது; அதன்மேல் சினந்து பாய்ந்தது; நீருள் மூழ்கி மாய்ந்தது; பொருமையுடையவர் தாமாகவே இப்படி மாண்டு மடிவார் என இது உணர்த்தியுள்ளது.

உள்ளத்தில் பொருமை புகுந்தபொழுது அந்த மனிதன் இழிந்தவனுகின்ருன்; எவ்வழியும் அல்லலே அடைகின்ருன்; சிறுமையும் துன்பமும் தருகின்ற அத்தீமையை மருவாமல் தன்னைக் காத்துக் கொண்டவனே பெருமையும் இன்பமும் பெற்றவன் ஆகின்ருன். புன்மையான பொருமை புலேத் துன்பங்களை விளைத்து விடும் ஆதலால் அதனை ஒழித்து ஒழுகுபவன் உயர் மகிமைகள் பெறுகின்ருன்.

பொருமை புலேநரகம் ஆகும் அதனை
உருமை உயர்வாம் உயிர்க்கு.

உயர்நிலை தெரிந்து உறுதி நலம் பெறுக.

623. பொல்லாத புன்மை பொறாமையே பூவுலகில்
எல்லா இழிவும் எதிர்விளைத்து—நல்லார்
அருவருத்து நீங்க அவங்கள் பெருக்கிக்
கருவறுத்து நிற்கும் கடு. (௩)

இ—ள்

பொறாமை பொல்லாத புலையுடையது: எல்லா இழிவுகளையும் விளைப்பது; நல்லார் அருவருத்து வெறுப்பது; அது அழி கேடுகளைப் பெருக்கி வழி முறைகளை ஒழிக்கும் கொடிய விடம். கடு=நஞ்சு. கடுத்துக் கொல்வது என்னும் காரணமுடையது.

நல்ல தன்மைகளால் நலன்கள் பல விளைகின்றன; பொல்லாத புன்மைகளால் அல்லல்களே வருகின்றன. அவகேடுகள் தெரியாமல் அறிவிலிகளாய் அழிந்து படுகின்றனர். மயலான இயலால் உயிர் வாழ்வு துயர் வாழ்வாகின்றது.

எண்ணம் பழுதாய பொழுது அந்த மனிதன் இழிவாய் அழிவுறுகிறான். இனிய நினைவுகளால் அமைதியான புனித வாழ்வுகள் பொங்கி வருதலால் அவை எங்கும் இன்ப நிலையங்களாய் நிலவியுள்ளன. நல்ல எண்ணங்களையே பழகி வருகிற நெஞ்சு எல்லா மேன்மைகளுக்கும் இன்பங்களுக்கும் மூலகாரணமாயுள்ளமையான் உயிர் வாழ்வின் சீவ நாடியாய் அது ஒளி புரிந்துள்ளது. நல்ல மனமுடையவன் எல்லா உயர்வுகளையும் எளிதே அடைந்து கொள்கிறான். மனம் புனிதமாய் நலமுறின் அம் மனித வாழ்வு தனி மகிமை பெறுகின்றது.

“மன நலத்தின் ஆகும் மறுமை.” (குறள், 459)

என்றதனால் அந்த மனத்தின் அருமை பெருமைகளை ஆய்ந்து அறிந்துகொள்ளலாம். அதனைப் பேணிவருவது பெருமாண்பாம்.

கருதிய இன்ப நலங்களையெல்லாம் உரிமையுடன் உதவி உயர்ந்த சீவ அமுதமாய் அமைந்திருக்கிற நல்ல மனம் பொல்லாத பொறாமையால் புலைப்பட்டு இழிகின்றது; இழியவே அதனையுடைய மனிதன் அழிவையே அடைகிறான்.

பிறருடைய உயர்ச்சிகளையும் மகிழ்ச்சிகளையும் கண்ட பொழுது உள்ளம் பொறாமல் புழுங்குவதால் பொறாமையாளன் எவ்வழியும் வெவ்விய துயரங்களையே அனுபவிக்க நேர்கின்றான்.

"தாரணியில் எவரேனும் துயர்உறின்தன்
தலையில்முடி தரித்தது ஒப்பாம்;
சீரணியும் செல்வமவர் சேரின்தன்
தாய்மனைசேய் செத்தது ஒப்பாம்;
காரணமே ஒன்றுமின்றிச் சுகம்துக்கம்
தன்வலியால் கணத்துக் குள்ளே
பூரணமா ஆக்கிடுவோன் பொறாமையுளோன்
அன்றிஎவர் புவியில் வல்லார்?

பொறாமையாளரது செயல் இயல்களை விளக்கி அவரது துயர நிலைகளை இது உணர்த்தி யுள்ளது. பிறர் செல்வம் உறுவதைக் கண்டால் தன் பெண்டாட்டி பிள்ளைகள் தாய் முதலாயினர் செத்ததுபோல் துக்கம் உறுகிறான் என்றதனால் பொறாமையுடையவன் எவ்வளவு இழி மடையனாய் அழி துயரங்களை அடைகிறான்! என்பது எளிதே அறியலாகும்.

"Base envy withers at another's joy,
And hates that excellence it cannot reach."

(Thomson)

"இழிந்த பொறாமையாளர் பிறரது உயர்விலும் உவகையிலும் உள்ளம் கனன்று வருந்துகின்றனர்" என ஜேம்ஸ் தாமஸ் என்பவர் இங்ஙனம் கூறியிருக்கிறார்.

இழி பொறாமை ஒழியின் விழுமிய மேன்மையாம்.

---

624. உற்றதீக் கொள்ளி உறைத்த வுடனதுவே
முற்ற எரிந்து முதலழியும்—பற்றும்
அழுக்கா றுடையாரும் அப்பரிசே கேடு
வழுக்காமல் எய்திமடி வார். (சு)

இ—ள்

தீக்குச்சியை உறைத்த பொழுது அதுவே முதலில் எரிந்து அழியும்; அதுபோல் பொறாமையாளரும் தம் இழி நினைவால் தவறாமல் அழிந்தே தொலைவர் என்க.

உள்ளே பொறாமை யுள்ளவன் தானாகவே அழிந்து ஒழி

வான் என்பதை ஓர் அனுபவ உவமையால் இது உணர்த்தியுள்ளது. நாளும் கண்டுவரும் காட்சி கருதி யுணர வந்தது.

தீயைக் கொண்டிருப்பது தீக்கொள்ளி என அமைந்தது. தீக்குச்சி என்னும் வழக்கு இக் காலத்தில் வழங்கி வருகிறது.

எண்ணம் தீமை ஆயபொழுது அந்த மனிதன் தீயவன் ஆகின்றான்; ஆகவே அழிவும் துயரும் அவனைச் சூழ்ந்து கொள்ளுகின்றன. அந்த அல்லல் நிலையிலிருந்து மீள முடியாமல் அவலமாய் அவன் அழிந்தே போகின்றான். தம் போக்கை உணர்ந்து திருந்தாமல் புலையாய் இழிந்துழல்வது புலன்கெட்ட மாக்களின் நிலையாய்த் தொடர்ந்து நெடிது நீண்டு வருகிறது.

உள்ளம் கெட்டவன் உயிர்க் கேடனாய் உழலுகின்றான்.

பிறர்மேல் பொறாமை மண்டித் தன் நெஞ்சம் கனலும் போது அந்த மனிதன் தீயுள் வீழ்ந்தவனாய் மாய நேர்கின்றான். தன்னுடைய அழிவு நிலையை அறியாமல் கழிமடையனாய் அவன் பழி துயரங்களில் இழிவது பெரிய பரிதாபமாயுள்ளது.

தீக்குச்சியை உறைத்தவுடனே முதலில் அதுவே பற்றி எரிந்துபோகிறது. அயலாருடைய வீட்டையோ, படப்பையோ கொளுத்த வேண்டும் என்று கருதி உறைத்த தீக்குச்சி முன்னதாக அதுவே முடிந்து அழிந்து படுகின்றது; அதுபோல் பிறர் கேடு எண்ணுகிற பொறாமையாளனும் முன்னுற அழிந்தே போகின்றான். உவமையை விழியூன்றி உணர வேண்டும். தன் அழிவுக்குத் தானே காரணன் ஆதலால் அழுக்காறுளன் எவ்வளவு அபாய நிலையிலுள்ளான் என்பதை எளிதே அறிந்து கொள்ளலாம்

அழுக்கா றுடையார்க்கு அதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது. (குறள், 165)

பொறாமை யுடையவர்க்கு வேறுபகைவர் வேண்டியதில்லை; அதுவே அவர்க்கு எவரும் செய்யமுடியாத கேட்டை விரைந்து செய்து விடும் எனத் தேவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பொறாமை அழி கேடுடையது; அதனை ஒழிய விடுக.

625. பிறனொருவன் ஆக்கம் பெறினதனை நோக்கி
உறமகிழ்வு கொள்ளா துளத்தே—பொறாமைமேல்
கொள்ளுவார் அந்தோ குடிகேடர் தம்மையே
தள்ளுவார் வெந்நரகில் தான். (௫)

இ-ள்.

பிறனுடைய ஆக்கத்தை நோக்கி மகிழ்ந்து கொள்ளாமல் உள்ளம் புழுங்கி யுழல்வது பொல்லாத இழிவாம்; அந்த மனப் புன்மையுடையார் குடிகேடராகி அடியோடழிந்து முடிவில் கொடிய நரகில் வீழ்ந்து வருந்துவார் என்க.

உள்ளம் அமைதியாய்ப் பழகிவரின் அந்த மனித வாழ்வு உயர் மகிமையாய் வளர்ந்து வருகிறது. அது அல்லல் உழந்து அலையும்கால் எல்லாம் துயரங்களாய் இடர்மிகுந்து படுகின்றன. சுகம் விளைவதைத் துக்கமாக்குவது மிக்க கேடாகின்றது.

மன அமைதி இனிமைசுரந்து இன்பம்புரிகின்றது; அதுகலங்க நேரின் கடுந்துன்பம் ஆகின்றது. கண்ணில் மண் விழுந்துகலங்கிய பொழுது பார்வை குன்றிப் படுதுயர் நேர்தல் போல் மனத்தில் பொறாமை புகுந்து கலங்கிய போது மதி மருண்டு அழிதுயர் மிகுகின்றது. தீய நினைவுகளால் தீங்கே வருதலால் அந்த மனித வாழ்வு எவ்வழியும் வெவ்விய துன்பங்களாய் விரிந்து நிற்கின்றன. அகம் கெடச் சுகம் கெடும் என்பது பழமொழி.

எல்லாரும் நல்லாயிருக்க வேண்டும் என்று எண்ணுகின்ற மனம் புண்ணியமுடையதாய்ப் புகழ் இன்பங்கள் பெறுகின்றன. அல்லாத மனம் நல்ல பலன்களைக் காணமல் நலிந்து படுகின்றது. நலிவும் மெலிவும் வாழ்வை நாசம் செய்கின்றன.

பிறர்க்கு இதம் கருதுகின்றவன் பெரியவனாய் உயர்கின்றான்; அகிதம் எண்ணுகின்றவன் அற்பனாயிழிகின்றான். எண்ணம் புன்மையாயிழிந்த போது மனிதன் புல்லியனாயழிகின்றான்.

அயலவர் உயர்வை நோக்கி மகிழ்வது சிறந்த பெருந்தன்மையாம்; இகழ்வது அற்பரது இழிபுன்மையாம். செயல் இயல்களின் படியே உயர்வும் இழிவும் நேரே உளவாகின்றன.

"பிறர்செல்வம் கண்டால் பெரியோர் மகிழ்வும்
சிறியோர் பொறாத திறமும்—அறிவுறீஇச்

செங்கமலம் மெய்மலர்ந்த தேங்குமுதம் மெய்அயர்ந்த
பொங்கொளியோன் வீறெய்தும் போது,, (தண்டி)

சூரியன் எழுச்சிகண்டு தாமரை மலர்ந்தது; குமுதம் குவிந்தது; பிறர் உயர்வுகண்டால் பெரியார் மகிழ்வர்; சிறியார் பொறாமல் இகழ்வர் என்பதை அவைமுறையே உணர்த்தி நின்றன என்னும் இது ஈண்டு உவந்து சிந்திக்கத் தக்கது.

இயற்கை நிகழ்ச்சிகளை இதமா எடுத்துக் காட்டிப் பொறாமைப் படுவது அற்பர் செயல் எனக் கவி இவ்வாறு அறிவுறுத்தியிருக்கிறார். புத்தி போதனைகள் உய்த்துணர வுரியன.

அழிதுயர் செய்யும் பழி தீமை ஆகிய பொறாமை சிறிதும் புகாதபடி உன் உள்ளத்தைப் பேணி உறுதி சூழ்ந்து ஒழுகுக.

---

626.பொல்லாப் பொறாமைஎனும் புன்பேய்வாய்ப்பட்டவர்தாம்
சொல்லாத வன்சொலெலாம் சொல்லுவார்—கொல்ல
முடிந்தால் அதுவும் முடிப்பார் முடிந்து
கெடுவார்பின் என்செய்யார் கேடு. (சு)

இ-ள்.

பொறாமை என்னும் கொடிய பேய்வாய்ப் பட்டவர் நெடிய பழி மொழிகளைப் பேசி அழிதுயரங்களையே செய்வர்; பழியான கொலையையும் துணிந்து புரிவர்; கேடே புரியும் அக் கொடியவர் அடியோடு கெட்டே ஒழிவர் என்க.

பலகேடுகளை எல்லாம் பொறாமை விளைக்கும் என இது உணர்த்தியுள்ளது. கொலையைக் குறித்தது அதன் கொடுமை தெரிய.

மனிதனிடமிருந்து வெளியே நிகழும் கொடிய செயல்களுக்கும் கடிய மொழிகளுக்கும் மூலகாரணம் உள்ளத்தில் உறைந்துள்ளது. மனம் கேடாய்த் திரிந்தபொழுது அந்த மனிதன் கெட்டவனாய் இழிந்து நிற்கின்றான். சொல்லும் செயலும் உள்ளத்தின் படியே வருதலால் அவை மனிதனை அளந்து காணுதற்குத் தெளிந்த கருவிகளாய் அமைந்து நிற்கின்றன.

பொறாமை நெஞ்சில் ஊறிய பொழுது நஞ்சு தோய்ந்த குட்டம்போல் அந்த மனிதன் நீசமாய் நாசநிலையை அடைகிறான். அடையவே அவலங்கள் பெருகி ஆடல்கள் புரிகின்றன.

பொல்லாப் பொறாமை என்றது தன்னையுடையானை எல்லா வழிகளிலும் புல்லியன் ஆக்கிப் புலைப்படுத்தி வருதல் கருதி.

புறங்கூறல் பழிமொழியாடல் முதலிய இழிவுகள் எல்லாம் பொறாமையிலிருந்தே விளைந்து வருகின்றன. அயலாருடைய உயர் நிலைகளைக் காணச் சகியாத அவலமுடையது ஆதலால் பொறாமை எப்பொழுதும் வெப்போடு வெய்ய துயரங்களையே விளைத்து வருகின்றது. பொறாமையாளனுடைய முகமும் பேச்சும் இழிவுபடிந்து யாண்டும் ஈனமே புரிகின்றன.

"அழுக்கா றுடையோன் அவிநயம் உரைப்பின்
இழுக்கொடு புணர்ந்த இசைபொரு ளுடைமையும்
கூம்பிய வாயும் கோடிய உரையும்
ஓம்பாது விதிர்க்கும் கைவகை உடைமையும்
ஆரணங் காகிய வெகுளி உடைமையும்
காரணம் இன்றி மெலிந்தமுகம் உடைமையும்
மெலிவொடு புணர்ந்த இடும்பையும் மேவாப்
பொலியும் என்ப பொருந்துமொழிப் புலவர்."

(அவிநயம்)

பொறாமையுடையவனது மெய்ப் பாடுகளைக் குறித்து இது விளக்கியுள்ளது. குறிப்புகளைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ளுக.

கூம்பியவாய், கோடிய உரை, மெலிந்தமுகம் என்றதனால் பொறாமையாளனது நிலை எவ்வளவு இழிகேடுடையது! என்பது எளிதே தெளிவாய் நின்றது.

பிறர்வாழச் சகியாத நெஞ்சம் பெருந்தீமைகளையே கருதி வருதலால் அது பழி பாதகங்களாய் இழிந்து படுகின்றது.

"தந்தம் நல்வினையால் செல்வம் சார்ந்தவர் தம்மைக் கண்டு
சிந்தனை பொறாது அழுங்கித் தீர்வினுள் மகிழ்வான்"

(பிரபுலிங்கலீலை)

உள்ளத்தே பொறாமையுடையவனது நிலையை இவ்வாறு உலகம் அறிய விளக்கி இவன் பேரிழவுடையனாய்த் தீ நரகு அடைவான் எனச் சிவப்பிரகாசர் குறித்திருக்கிறார்.

அழுக்காறு இருமையும் கெடுக்கும் ஈனமுடையது ஆதலால் இனிமையான சுகவாழ்வை விரும்பும் மனிதன் அந்தத்

துன்பத் தீயை யாதும் அணுகாமல் அஞ்சி ஒழுக வேண்டும். அவ்வொழுக்கம் உயர்ந்த விழுப்பத்தை விளைத்தருளும்.

"ஒழுக்காறுக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்கா றிலாத இயல்பு." (குறள் 161)

உள்ளத்தில் அழுக்காறு கொள்ளாதவனே உண்மையான ஒழுக்கம் உள்ளவன் எனத் தேவர் இவ்வாறு உணர்த்தியுள்ளார்.

அழுக்காறு இழுக்குகளில் தாழ்த்தி மனிதனை ஈனம் செய்து வருதலால் அஃது இல்லாதவனே மேன்மகனாய் விளங்குகிறான்.

ஒழுக்காறு ஒழிக்கும் பொருள் அனைத்தும்
ஒழிக்கும் இம்மை மறுமையினும்
வழுக்காறனைத்தும் உறுக்குவிக்கும்
மருங்குளார்க்கும் கேடுறுக்கும்
இழுக்காறுடைய எரிநிரையத்
தேய்க்கும் இதனால் ஏமகண்டா!
அழுக்காறு ஆய பெரும் பகையை
அமரார் இடத்தும் புரியற்க. (விநாயகபுராணம்)

அழுக்காறு செல்வத்தைக் கெடுத்து சுற்றத்தைத் தொலைத்து இம்மை மறுமைகளை அழித்து எரி நரகத்திலும் கொண்டு போய்த் தள்ளிவிடும் ஆதலால் அந்தக் கொடிய புன்மையைப் பகைவர் பாலும் செய்யாதே எனத் தன் மகனுக்கு ஓர் அரசன் இவ்வாறு அறிவு போதித்திருக்கிறான். அமரார் = பகைவர்.

பொறாமையுறுவதால் தனக்கே பலவகையிலும் கேடுகள் உளவாகின்றன. அவ்வுண்மையை ஓர்ந்து கொள்ளாமையால் மனிதன் அதனை மருவி ஊனமாய் ஈனம் உறுகின்றான்.

அழுக்காற்றால் நெஞ்சம் அழுங்கியபுன் மாக்கள்
இழுக்காற்றால் இன்பநலம் எய்தார் பராபரமே! (1)

வஞ்சனையும்பொய்யும்உள்ளேவைத்துஅழுக்காறுயுளறும்
நெஞ்சனுக்கும் உண்டோ? நெறிதான் பராபரமே! (2)

நெஞ்சில் பொறாமையுடையவர் உய்திபெறார்; நெறிகேடராய் நிலைகுலைந்தே போவர்; அப்புலை புகாமல் மக்கள் உய்ய வேண்டும் எனத் தாயுமானவர் இவ்வாறு பரிந்து இரங்கி யிருக்கிறார்.

செல்வம் முதலிய நலன்களைப் பெற்றுத் தான் சிறந்து வாழ வேண்டும் என்றே எந்த மனிதனும் எண்ணுகின்றான்; அந்த

இயல்பினை யுடையவன் அயலவனுடைய உயர்வுகளை நோக்கி உள்ளம் உவந்து அவன் போலவே தானும் உயர்ந்து கொள்ள விழைந்து முயன்று மேலே போக வேண்டும்; அதற்கு மாருகப் பொருமை கொண்டு புன்மை மண்டிக் கீழே போவது பாழான வாழ்வாய்ப் பழிபடுகின்றது.

அள்ளித்தெண் ணீறணியும் தண்டலையார்
    வளநாட்டில் ஆண்மையுள்ளோர்
விள்ளுற்ற கல்வியுள்ளோர் செல்வமுள்ளோர்
    அழகுடையோர் மேன்மை நோக்கி
உள்ளத்தில் அழன்றழன்று நமக்கில்லை
    எனவுரைத்திங் குழல்வார் எல்லாம்
பிள்ளைப்பெற் றவர்தமைப்பார்த்து இருந்துபெரு
    மூச்செறியும் பெற்றியோரே. (தண்டலையார்சதகம்)

உள்ளத்தில் பொருமையுடையவரது நிலைகளை இது உணர்த்தியுள்ளது. பிள்ளைப் பேறுடையாரைப் பார்த்து மலடிகள் மனம் புழுங்கி ஏங்கிப் பெருமூச்சு விடுவதுபோல் அயலாருடைய உயர் நிலைகளைக் கண்டு பொருமையாளர் இழிந்து உழல்கின்ருர் என்றதனல் அவரது ஈன நிலை எளிதே தெரியலாகும்.

ஒத்த நிலையில் உள்ளவரிடம் உயர்வு காண நேர்ந்தபோது தான் பெரும்பாலும் பொருமை உருவாகி வருகிறது. அது உள்ளத்தில் புகுந்தவுடன் அல்லல் பல விளைந்து விடுகின்றது. நெஞ்சம் புழுங்கவே நிலை குலைந்து படுகின்ருன்.

ஆற்ருர்ஆகின் தம்மைக்கொண்டு அடங்காரோஎன் ஆருயிர்க்குக்
கூற்ருய் நின்ற குலச்சனகி குவளை மலர்ந்த தாமரைக்குத்
தோற்ருயதனுன் அகம்கரிந்தாய்!மெலிந்தாய்வெதும்பத்தொடங்கினுய்!
மாற்ருர் செல்வம் கண்டழிந்தால் வெற்றியாக வற்ருமோ?
(இராமா, மாரீசன், 115)

விரகவேதனை அடைந்திருந்த இராவணன் சந்திரனைநோக்கி இவ்வாறு புலம்பியிருக்கிருன். சீதையின் முகத்தை நோக்கி அந்த அழகு தனக்கு இல்லையே என்று அவன் அகம் கரிந்து மெலிந்து வெதும்பியிருப்பதாக இலங்கை வேந்தன் புலம்பியுள்ளதில் பொருமையாளர் நிலைமை விளங்கி யுள்ளமை வியந்து சிந்திக்கவுரியது. கலையின் சுவையை இதில் கருதி நுகர்க.

பொறாமை யுறுவதால் சிறுமையே அன்றி வேறு பயன் யாதும் இல்லை; அதனை மருவாமல் மகிமையுடன் வாழுக.

---

627. காணும்கண் உள்ளே கடுவிடத்தை வார்த்ததுபோல்
பூணும் உளத்தில் பொறாமையெனும்—வீணான
தீவிடத்தை வைத்தார் திருவிழந்து தீநரகில்
பாவியராய் வீழ்வர் பரிந்து. (எ)

இ-ள்.

உறுதி நலங்களை அறிய உரிய உள்ளத்தில் பொறாமையைச் சேர்த்தல் காணுகின்ற கண்ணுள்ளே கொடிய விடத்தை வார்த்தது போலாம்; பொறாமை என்னும் தீய நஞ்சு தோய்ந்த அவர் பாவியராய் இழிந்து மேவியதிரு யாவும் இழந்து பாழ் நரகில் வீழ்ந்து பரிந்து வருந்துவார் என்க.

அழுக்காறு நெஞ்சை இழுக்கு ஆக்கி எவ்வழியும் ஈனம் விளைக்கும் ஆதலால் அதனை ஒழித்து ஒழுக வேண்டும் என நூல்களெல்லாம் உறுதியோடு உணர்த்தியுள்ளன.

மனிதனுடைய மகிமைகள் யாவும் மனநலத்தால் மருவி வருகின்றன. அந்த மனத்தைப் புனிதமாகப் போற்றிவரும் அளவு மனிதன் இனியனாய் இன்பமிகப் பெறுகின்றான். உடலுக்குக் கண்போல் உயிர்க்கு விழியாய் அது ஒளி செய்துள்ளது. தீய இழிவுகள் யாதும் பற்றாமல் அதனைப் பேணி வருபவனே பேரின்ப நிலையைக் காணியாக அடைகின்றான் ஆதலால் அதன் காட்சியும் மாட்சியும் அளவிடலரிய அதிசயமுடையன.

புனித மனமுடைய புண்ணியரே என்றும்
இனிய தவம்தருமம் எல்லாம்---கனியுமுயர்
கற்பகமாய் நின்று கதிநலங்கள் காணுகின்றார்
அற்புத நீரர் அவர்.

மனம் தூய்மை அடைந்த போது அந்த மனிதன் இவ்வாறு அதிசய நிலைகளில் உயர்ந்து யாண்டும் இன்ப நலங்களையே எய்துகின்றான்.

மாசுபடியாத மனம் தேசுமிகுந்து ஈசனுக்கு இனிய நிலையமாய் இன்பம் கனிகின்றது என வேதம் ஓதியிருத்தலால் அதன் இயல்பும் உயர்வும் நிலையும் நீர்மையும் உணரலாகும்.

இத்தகைய அற்புதமனத்தை அற்பமான பொறாமை யால் அவலமடையச் செய்வது கொடிய அவகேடேயாம். நேர்கின்ற அழிதுயரங்களை நினைந்து பாராமல் நீச முறுவது நாசமான மாயமயக்கமாய் மருவி வருகின்றது.

காணும்கண் என்றது எல்லாப் பொருள்களையும் இனிது கண்டு இன்புறும் அதன் தனிமகிமை தெரிய வந்தது. அந்த இனிய கண்ணில் கொடிய நஞ்சை ஊட்டுவது போல் நல்ல நெஞ்சில் நாசமான பொறாமையைக் கூட்டுவது என்றதனால் கேட்டின் கொடுமையைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ளலாம்.

பொறாமையைத் தீவிடம் என்றது அது புகுந்த இடம் நீசமாய் நாசம் அடைதல் கருதி. தனக்கு நாசத்தை விளைக்கும் நீசப் பொறாமையை மனிதன் நேசித்துக் கொள்ளுவது நெடிய வியப்பாயுள்ளது. அதனைக் கடிந்து வாழுவதே கண்ணியமாம்.

---

628. வீரம் அறிவு வினையாண்மை மெய்யொழுக்கம்
ஈரம் பெருக இருமினோ—வாரம்
புரிந்திழிவே கொண்டு பொறாமை யுறினோ
எரிந்தழிவீர் உண்மை யிது. (அ)

இ—ள்

அறிவு ஒழுக்கம் ஆண்மை வீரம் அன்பு முதலிய பண்புகள் மருவிவரின் இன்ப நலங்கள் பெருகி வரும்; பொறாமை கொண்டு புன்மைபுரிந்தால் இன்மையில் இழிந்து எரிந்து அழிவீர்! இவ் வுண்மையை உணர்ந்து உய்மின் என்க.

உயர்ந்த நீர்மைகளைப் பழகி வாழுக என இது உணர்த்துகின்றது. நல்ல நினைவுகளால் எல்லா மகிமைகளும் விளைகின்றன.

தோய்ந்த பழக்கத்தின் படியே எவரும் வாய்ந்து வருகின்றனர். நல்ல நீர்மை மருவி வரின் எல்லாச் சீர்மைகளும் பெருகி வருகின்றன. வெளியே விரிந்து விளங்கும் மேன்மைகளுக்கெல்லாம் மூலகாரணமான பான்மை உள்ளே தோய்ந்திருக்கிறது. எண்ணங்களிலிருந்தே எல்லாம் விளைந்து விரிந்திருத்தலால் மனித உலகத்தின் மூலவித்துக்களாய் அவை முளைந்திருக்கின்றன. வித்தின்படியே விளைவுகள் விரிகின்றன.

நல்ல தன்மைகளையுடையவர் நல்லவர்களாய் வருகின்றனர். பொல்லாதபுன்மைகளையுடையவர் புல்லராய்உறுகின்றனர்.

இளமையிலிருந்தே நல்லவழிகளில் பழகிவருபவர் எல்லா நிலைகளிலும் உயர்ந்து விளங்குகின்றனர். அவ்வாறு பழகாதவர் அவலமாய் இழிந்து நிற்கின்றனர்.

நல்லவன், பெரியவன் என்றுபேர்பெற எல்லாரும் விரும்பு கின்றனர். அந்த நன்மையும் தன்மையும் அகத்தே இல்லாதவர் புறத்தே உயர்ந்த மேன்மைகளை அடைய முடியாமல் இழிந்து நிற்கின்றனர்.

தமது இழி நிலைகளை உணர்ந்து கொள்ளாமலே கழிபெருஞ் செருக்கராய்ப் பலர் களித்துத் திரிகின்றனர். இனிய மேன் மைகளை இழந்த பொழுது மனித இனம் மாவின் இனமாய் மருவி நிற்கின்றது.

மனித உருவில் மருவியிருந்தாலும் மாடு ஆடு பன்றி நாய் முதலிய விலங்கின் சுபாவங்களையே பலர் தழுவி நிற்றலால்அந்த மக்களை மாக்கள் என்று உயர்ந்தோர் தகுந்த காரணமா வழங்க நேர்ந்தனர். மொழிக் குறிப்பு பழிக் குறிப்பாய் வந்தது.

பண்பு குன்றியபொழுது மனிதன் பாழ்படுகின்றான்.

வீரன் வள்ளல் நீதிமான் தருமவான் என இன்னவாறு மேலான நிலைகளில் விளங்கி நிற்பவர் மேன்மையான பான்மை களை நன்கு அடைந்திருக்கின்றனர். அகத்தின் நீர்மையால் புறத்தின் சீர்மை விரிந்து மிளிர்கின்றது.

யாண்டும் நிலைகுலையாமல் எவ்வழியும் தலைமையாய் நெறி யோடு நிலைத்து நிற்கும் நீர்மை வீரம் என வந்தது. போர் வீரன் கல்விவீரன், தானவீரன், தருமவீரன் என வருவன கருமவகை யால் மருவின. அறிவு என்பது உலகஅறிவு நூலறிவு உண்மை யறிவு என நிலைமைகளை நோக்கி நேர்ந்து நிற்கின்றது. எதை அறிந்தால் எல்லாம் அறிந்ததாமோ அதை அறிவதே மெய்யறி வாம். அது பிறவித் துன்பங்களை நீக்கிப் பேரின்பம் அருளு கின்றது.

இன்பம் துன்பம் என்னும் இந்த இரண்டு ஒலிகளும் மனித சமுதாயத்தின் உள்ளச் செவிகளில் என்றும் ஒலித்துக் கொண்டு

யாண்டும் கலித்து நிற்கின்றன. எது இன்பம்? எது துன்பம்? இந்தக் கேள்விகளுக்குச் சரியான விடையைத் தெளிவாக அறிய வேண்டும். பொறிகளின் வழிகளிலேயே ஓடி எவ்வழியும் சீவ கோடிகள் வெறி கொண்டு அலேகின்றன. யூக விவேகங்கள் யாவும் மோக மயக்கங்களாய் மூண்டு உழலுகின்றன. புறத்தே புலேயிாய்த் திரிதலால் அகத்தே உள்ள நிலேயான இன்பத்தை அடையாமல் போகின்றன. தன்னே உணர்ந்து பாராமையால் இன்னல் பலவும் எழுந்து வர நேர்ந்தன.

புற நோக்கு புலேயாய்த் துன்பம் தருகிறது.

அக நோக்கு நிலேயாய் இன்பம் அருளுகின்றது.

நீ யார்? எங்கிருந்து வந்தாய்? எதற்காக வாழ்கின்ருய்? கைகால் முதலிய அவயவங்களோடு கூடியுள்ள உடலே மூடியாக் கொண்டு வந்துள்ள நீ இந்தக் கூடு பிரியுமுன்னரே நாடி அடையவுரியதை அடைந்து கொள்ள வேண்டும். பிறவியில் துன்பங்களே பெருகியுள்ளன. பிறவாமையிலேதான் பேரின்பம் மருவியுள்ளது. என்றும் பிறவாத ஒரு பொருளிலிருந்தே நீ பிரிந்து வந்திருக்கிருய். அவலமான இந்த வரவில் எல்லேயில்லாத அல்லல்களும் கவலேகளும் உன்னேத் தொடர்ந்து வந்திருக்கின்றன. துயரமான இந்த அலமரல்களிலிருந்து விலகி உய்பவரே நிலேயான மேலோராய் நிலவி நிற்கின்ருர். பிறவிப் பயனேப் பெற்றவர் பிறவாத பேரின்ப நிலேயில் பெருகி யிருக்கின்ருர்.

எடுத்த பிறவிக் கினியபயன் என்றும்
அடுத்த பிறவி அறல்.

பிறவியையுற்று வெளி வந்துள்ள பிராணிகள் அது அற்று ஒளி பெற்று உயர்ந்து போதலே உறுதியான இன்பப் பேருய் இனிது அமைந்துள்ளது. உண்மையை உணர்ந்தவர் ஊறு நீங்கி உய்தி பெறுகின்றனர்.

1. நாளும் ஒரு கணமாவது உன்னே நினேந்து பார்.
2. உடலளவில் உழன்று ஊனமாய் ஒழிந்து போகாதே.
3. உள்ளத்தைப் புனிதம் ஆக்கு.
4. உயிரை நோக்கி உயர்ந்து வாழ்.
5. எல்லா ஆக்கங்களும் உன்னே நோக்கி வரும்.

மனிதனது உண்மை யறிவுக்கு உரிய பயன் இத்தகைய தத்துவ நிலைகளில் பழகித் தன்னை அடைந்து கொள்வதேயாம்.

சீலம் கருணை முதலிய செவ்விய நீர்மைகள் தோய்ந்து இவ்வாறு மேலான நிலைமையை அடைய வுரிய மனிதன் கீழான பொருமையைத் தழுவிக்கெடுவது பிறவியைப்பாழாக்கிபடியாம்.

பொருமையுறின் எரிந்து அழிவீர்.

என்றது அதன் நாச நிலையை நன்கு தெரிய.

பிறருடைய உயர்வை நோக்கி உள்ளம் சகியாதவன் தன்னை அவமே கீழாக்கிக் கொள்ளுகின்றான். தான் இழிந்து அழிவதை அறிந்துகொள்ளாமல் ஊனமாய் ஒழிந்து போதலால் பொருமையாளர் நிலை பெரிய பரிதாபமாய் முடிந்துபடுகின்றது.

தன்னை நாசப்படுத்தும் நீசப் பொருமையை எவ்வழியும் அணுகாமல் ஒழுகி வருகிற மனிதன் விழுமிய நிலைமையை எளிதே அடைந்து கொள்ளுகிறான்.

உள்ளத்தே செவ்வி யுடையான் உயர்நலங்கள்
வெள்ளத்தே காணும் விரைந்து.

இதனை உள்ளி உணர்ந்து உறுதி காணுக.

---

629. பொங்கிப் பொருமையே பூண்ட சுயோதனன்தான்
மங்கி அடியோடு மாண்டொழிந்தான்—தங்கிஐவர்
நின்றுயர்ந்தார் வெங்கொடியகளைகளைபோம்நன்பயிர்மேல்
நின்றுயரு மன்றோ நிலத்து. (கூ)

இ—ள்

பொருமை கொண்டு நின்ற துரியோதனன் மங்கி மடிந்தான்; பொறுமையுடைய தருமர் முதலாயினோர் பெருமையடைந்து வாழ்ந்தார்; கொடியவர் களைகள்போல் இழிந்து அழிகின்றார்; இனியவர் பயிர்கள்போல் உயர்ந்து விளங்குகின்றார்; உலக அனுபவங்களை உணர்ந்து உய்க என்பதாம்.

அழுக்காறு அவலக் கேடுகளையே விளைக்கும் என்பதை இதுவரை அறிந்து வந்தோம். அதற்கு ஒரு தலைமையான சரிதச் சான்றை இது இங்கே நன்கு உணர்த்துகின்றது.

துரியோதனன் அரசகுலத் தோன்றல்; எல்லாச் செல்வங்களும் நிறைந்திருந்தும் அவனுடைய உள்ளம் தீமையாய் இழிந்து நின்றமையால் இழிபழியும் அழிதுயரும் அடைந்து எவ்வழியும் வெவ்வியனாய் அவன் நெளிந்து ஒழிந்தான்.

தருமன் முதலிய ஐவரும் அவனுக்குத் தாயாதிகள். இராசசூயம் என்னும் ஒரு பெரிய யாகத்தைத் தருமன் செய்தான். அந்த விழாவுக்குத் துரியோதனனை மிகவும் மரியாதையோடு அழைத்திருந்தான். அத்தினபுரியிலிருந்து தன் பரிவாரங்களோடு அவன் வந்திருந்தான். வேள்வி விழுமிய நிலையில் நடந்தது. அதில் தருமனை அரசர் பலரும் புகழ்ந்து மரியாதைகள் செய்தனர். அதனைக் கண்ட துரியோதனனுக்கு உள்ளத்தில் பொறாமை மூண்டது. தன் நகருக்கு மீண்டதும் சகுனி முதலிய கொடியவர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு பொறாமையால் புழுங்கிப் பொல்லாதன சூழ்ந்து புலையாகப் பேசினான். அன்று அவன் கூறிய மொழிகள் அயலே வருகின்றன.

"இந்திரன் முதலா உள்ள இமையவர் சிறப்புச் செய்ய
சுந்தரப் பொற்றோள் வேந்தர் தொழில் புரிந்து ஏவல்செய்ய
மந்திர முனிவர் வேள்வி மறைநெறி முறையில் செய்யத்
தந்திர வெள்ளச் சேனைத் தருமனே தலைவன் ஆனான். (1)

இனியவன்சின்னாட்செல்லின்எம்மனோர்வாழ்வும்கொள்ளும்
துனைவரும் புரவித் திண்டேர்த் துணைவரும் சூரர் ஆனார்
முனைவரு கூர்முள் வேலை முனையிலே களையின் அல்லால்
நனிவர வயிர்த்த போது நவியமும் மடியு மன்றே. (2)

போதுற விரைந்து மற்றப் புரவலன் செல்வம் யாவும்
பேதுறக் கவர்ந்தி லேனேல் பின்னையார் முடிக்க வல்லார்
மோதுறப் பொருதே ஆதல் மொழியொணு வஞ்சம் ஒன்று
தீதுறப் புரிந்தே ஆதல் கொள்வதே சிந்தை என்றான்." (3)

அழுக்காறு மண்டிய துரியோதனன் இவ்வாறு பேசியிருக்கிறான். இதனால் பொறாமையின் தீமையும் அதனையுடையவரது நிலைமையும் அறியலாகும்.

பிறருடைய உயர் நிலைகளை நோக்கிய பொழுது உள்ளம் சகியாமல் தபிக்கும் தீமைக்குப் பொறாமை என்று பெயர் அமைந்துள்ளமையால் அது காரணக் குறியாய் நின்றது. இந்

தத் தீமை உள்ளே புகவே துரியோதனன் அடியோடு அழிய நேர்ந்தான். உள்ளம் தூய்மையாய்ப் பொறை பூண்டிருந்த தருமன் அரச திருவை அடைந்து வரிசை மிகப் பெற்றான்.

"பொறுமைத் தருமன் புகழ்பூண் டுயர்ந்தான்
சிறுமைச் சுயோதனனே சீரழிந்து செத்தான்
மறுமைக்கு வித்து மனநலம் இன்றேல்
வெறுமைக்கு வித்தாய் விடும்."

சரிதச் சான்றுகளோடு தொனறி வந்துள்ள இது ஊன்றி உணர வுரியது. நெஞ்சம் திரிய நெறி கேடுகள் நேர்கின்றன.

மனத்தில் பொறாமை புகின் அந்த மனிதன் தீயவனாயிழிந்து திரு இழந்து படு துயரோடு அழிந்து போதலால் அது எவ்வளவு கொடியது! என்பதைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ளலாம்.

"அழுக்கா றெனஒரு பாவி திருச்செற் றுத்
தீயுழி உய்த்து விடும்." (குறள், *168*)

பொறாமை என்னும் பாவி இம்மையில் செல்வத்தைக் கெடுத்து மறுமையில் நரகத்தில் செலுத்திவிடும் என இது உணர்த்தியுள்ளது. மனித சமுதாயத்தை அது பாழாக்கி வரும் கொடுமையை நினைந்து அதனைப் பாவி என்று தேவர் கொதித்து வைதுள்ளார். அந்தப்பெருந்தகை இவ்வாறு உள்ளம் கொதித்துச் சொல்லி யிருத்தலால் உண்மையை ஓர்ந்து சிந்திக்க வேண்டும்.

உயர்ந்த மக்களை இழிந்த பாவிகளாக்கி இம்மையும் மறுமையும் கெடுத்து ஈன நரகில் ஆழ்த்தும் கொடிய தீமை ஆதலால் பொறாமை நெடிய பாவி என்று நெஞ்சம் அஞ்சி நிலைமையை நேரே உரைத்தருளினர்.

எவ்வழியும் அழி துயரங்களையே தருகின்ற பழி தீமையை மனிதன் தழுவி அழிவது முழு மூடமாய் முடிந்துள்ளது.

தன் உயிருக்கு நன்மையை நாடுகின்றவன் பொறாமைப் புன்மையை யாண்டும் எவ்வகையிலும் யாதும் கூடலாகாது; கூடின் கேடே விளையும் என்னும் உண்மையை உறுதியாக உன்னி உணர்ந்து நன்மை புணர்ந்து நலமுடன் வாழுக.

---

640. எவ்வுயிர்க்கும் அன்பாய் இதம்புரிந்த மேலோர்கள்
செவ்வியபே ரின்பமே சேர்கின்றார்—அவ்வியமுட்
கொண்டார் கொடுமைமீக் கூர்ந்தார் பழிதுயரே
கண்டார் இழிந்தார் கழிந்து. (ம)

இ—ள்

எல்லா உயிர்களுக்கும் இரங்கி இதம் புரிபவர் மேலோரா யுயர்ந்து பேரின்ப நிலையைப் பெறுகின்றார்; உள்ளத்தில் பொறாமை மண்டி ஊறுகள் செய்பவர் பழி துயரங்களை அடைந்து இழிவாய் அழிவுறுகின்றார் என்க.

இழிவு அழிவுகளை இது விழி தெரிய விளக்கியது.

மனிதன் சுகத்தை விரும்பி அலைகின்றான்; துக்கத்தை வெறுத்து உலைகின்றான். கருதிய சுகம் வருவது உள்ளத்தின் தகுதியால் அமைந்துள்ளது.

நல்ல நீர்மைகளைப் பழகித் தன் உள்ளத்தைப் புனிதமாக வைத்திருப்பவன் எல்லா இன்ப நலங்களையும் எளிதே அடைந்து கொள்ளுகிறான். அல்லாதவன் அல்லலையே அடைகிறான். செல்வம் முதலிய புறப் பொருள்கள் எவ்வளவு எய்தியிருந்தாலும் அகத்தே நல்ல தன்மை இல்லையாயின் அவன் நலம் பெற முடியாது; அவலத்துயரங்களையே அவன் அடைய நேர்கின்றான். அடைவு தெரியாமல் மடமையால் மனம் களித்திருந்தாலும் முடிவில் முடிவாய் இழிவே உறுகின்றான்.

அவ்வியம் என்பது பொறாமைக்கு ஒரு பெயர்.

நெஞ்சை நிலைகுலைத்துக் கோணலாக்கிச் சிறுமைப்படுத்தியிருப்பது என்னும் ஏதுவான் வந்தது. வியம்=பெருமை. அதனோடு மாறுபட்ட சிறுமை அவ்வியம் என நேர்ந்தது. மனக் கோட்டம் ஆன இப் புன்மை இல்லாதவரே செவ்வியர் எனச் சிறந்து சீர்மை மிகப் பெறுகின்றார்.

அவ்வியம் அற்றபோது அந்த மனிதன் மகானாய்த் திவ்விய மகிமைகளை எய்தி எவ்வுலகும் தொழுது புகழத் திகழ்கின்றான்.

"அவ்வியம் நீத்து உயர்ந்த மனத்து அருந்தவன்"

கலைக்கோட்டு முனிவர் இவ்வாறு கூறப்பட்டுள்ளார்.

"அவ்வியம் அவித்த சிந்தை முனிவன்" (இராமா,அகலிகை,74)

கௌதம முனிவரை இவ்வாறு கோசிகர் கூறியுள்ளார்.

"அவ்வியம் அவித்த சிந்தை அண்ணல்" (இராமா,திருமுடி,37)

இராமன் இப்படிப் பேர் பெற்றுள்ளான்.

அவ்வியம் அவிந்தபோது எவ்வளவு திவ்விய மகிமைகள் எழுந்து வருகின்றன என்பதை இவை இங்கே நன்கு உணர்த்தியுள்ளன. சான்றோர்; பெரியோர்; மேலோர் என உயரவேண்டுமாயின் அவர் உள்ளத்தில் பொறாமை ஒழிய வேண்டும்.

பொறாமை மனத்தைப் புன்மையாக்கிப் பாழ்படுத்தி விடுகின்றது; விடவே அந்த மனிதன் இழிந்தவனாய் ஈனமடைய நேர்கின்றான். மேலான நன்மைகளை இழந்து போதலால் அவன் வாழ்வு பாழ் ஆகின்றது. ஆவது அறியின் நோவது ஒழியும்.

நெஞ்சம் கோடி நிலை குலையவே மனிதன் புலையாய்ப் புன்மை யுறுகின்றான். பொறாமையான வார்த்தைகளைப் பேசினும் நீசம் ஆகும் ஆதலால் அங்ஙனம் பேசாத நாவே பெருமகிமை பெறுகின்றது.

"ஔவியம் பேசேல்" (ஆத்திசூடி, 12)

"ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு."(கொ.வே,12)

பொறாமை வார்த்தைகளைப் பேசாதே; பேசினால் அது உன் செல்வத்தைக் கெடுத்து உன்னைச் சீரழித்துவிடும் என ஔவையார் இவ்வாறு உலகமக்களை நோக்கி உபதேசம் செய்துள்ளார். அவ்வியம் பேசின் ஆக்கம் அழியும் என்றதனால் அதன் பழியும் பாவமும் விழி தெரிய வந்தன.

"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்." (குறள், 169)

அவ்விய நெஞ்சமுடையவன் ஆக்கம் இன்றி அலமருவான்; செவ்வியன் செல்வச் சீமானாய்ச் சிறந்து வாழுவான்; இது தரும நியதி. இதற்கு மாறாக அவ்வியனிடம் ஆக்கமும், செவ்வியனிடம் வறுமையும் காணப்படின் இது பழவினைப் பயனோ? என்று உள்ளம் உளைந்து உயர்ந்தோர் சிந்தனை செய்வர் என்க.

பொருமை கொடிய பாவம்; அதனையுடையவன் வறுமைத் துயரங்களை அடைந்து வருந்துவான்; பொருமை யில்லாதவன் புண்ணியவான்; அவன் செல்வ நலங்களை நுகர்ந்து மகிழுவான் என்பது குறிப்பு. அவ்விய நெஞ்சன் ஆக்கம் கெட்ட மூதேவி யாய் எவ்வழியும் அலமந்து அழிவான் என்னும் குறிப்பு இங்கே கூர்ந்து ஓர்ந்து கொள்ள வந்தது.

“அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும். [குறள், 167]

பொருமை யுடையவனை மூதேவிக்குக் காட்டிவிட்டு இலட்சுமி விலகிவிடுவாள் என இது உணர்த்தியுள்ளது. அவ்வியம் எவ்வளவு தீமையுடையது என்பதை இவற்ருல் செவ்வையாக உணர்ந்து கொள்ளுகிரும்.

“ஔவியம் இருக்கநான் என்கின்ற ஆணவம்
அமைந்திட் டிருக்க லோபம்
அருளின்மை கூடக் கலந்துள் இருக்கமேல்
ஆசா பிசாச முதலாம்
வெவ்விய குணம்பல இருக்களன் அறிவூடு
மெய்யன் நீ வீற் றிருக்க
விதியில்லை என்னிலோ பூரணன் எனும்பெயர்
விரிக்கில் உரைவேறும் உளதோ?” [தாயுமானவர்]

ஔவியம் முதலிய தீய இயல்புகள் உள்ள என் நெஞ்சில் நீ இருக்க நியாயமில்லை எனினும் பரிபூரணன் என்னும் பேர் உனக்கு அமைந்திருத்தலால் தெய்வமே! கருணை செய்து சிறிது அமர்ந்தருள் எனத் தாயுமானவர் இறைவனை நோக்கி இவ்வாறு உருகி மறுகி யுரையாடியிருக்கிருர்.

தீய குற்றங்களுள் பொருமை மிகவும் தீயது ஆதலால் அதனை முதலில் குறித்தார். ஔவியம் நீசமுடையது; ஆகவே அது ஈசனுக்கு நெடிய விரோதமாய் நினைக்க நேர்ந்தது. அவ்விய நெஞ்சன் திருவிலியாய்த் தேவ கோபத்தை எய்தி எவ்வழியும் இழிந்து அழிவான் என்பது தெளிவாய் நின்றது.

சீதேவி சீறி அகலும் பொருமை எனும்
மூதேவி சேரு முனம்.

என்றதனல் அதன் சேர்க்கைத் தீமை தெரியலாகும்.

அவ்வியம் உட்கொண்டார் பழி துயரே கண்டார்.

உள்ளத்தில் பொறாமையுடைவர் உரிமையாக அடையும் பலன்களை இது உணர்த்தியுள்ளது. பிறருடைய உயர் நிலைகளைக் கண்டு உள்ளம் புழுங்கி யாண்டும் கேடுகருதி வருதலால் கெட்ட துயரங்களையே கருக் கொண்டு வளர்ந்து தன்னைத் தொட்டவனுக்கு அழுக்காறு எவ்வழியும் அவற்றை வழுக்காமல் ஈந்து வருகிறது. தனது இழிபழிகளையும் அழிதுயரங்களையும் ஒரு சிறிதும் உணராமல் பொறாமையாளன் புலையாய்ப் பொன்றி முடிகின்றான்.

"Envy slayeth the silly one." (Bible)

"அறிவுகெட்ட அற்பர்களைப் பொறாமை அழித்து விடுகிறது" என யோபு என்னும் நீதிமான் இங்ஙனம் உரைத்திருக்கிறான்.

தனக்கு வருங்கேட்டைத் தான்உணரா தந்தோ
மனத்துள் பொறாமை மருவி---இனத்துள்
இருந்தும் மனிதன் இழிந்தழி கின்றான்
பொருந்தல் ஒழிக புலை.

பொறாமை பழியும் பாவமும் அழிதுயரமும் உடையது; அதனை எவ்வழியும் அணுகாமல் செவ்வியனாய் வாழுக.

---

இவ் அதிகாரத்தின் தொகைக் குறிப்பு.

பொறாமை மிகவும் தீயது.
இழிவும் ஈனமும் உடையது.
அல்லல் பலவும் தருவது.
உள்ளே அழிதுயரம் உள்ளது.
குடி கேடு செய்வது.
கொலை பாதகம் ஆனது.
நீசமாய் நாசப்படுத்துவது.
அவலமாய் அழிப்பது.
நரக துன்பம் விளைப்பது.
அதனை ஒழித்து ஒழுகின் உயர்நலம் விளையும்.

௬௩-வது பொறாமை முற்றிற்று.

# அறுபத்து நான்காம் அதிகாரம்

## கோபம்.

அஃதாவது உள்ளம் கொதித்து உருத்துச் சீறும் பொல்லாத் தீமை. நல்ல நெஞ்சை நவை ஆக்கி நாசப்படுத்தும் நீசத்தை ஒழித்து ஒழுகவேண்டும் என உணர்த்துகின்றமையால் பொறுமையின் பின் இது வைக்கப்பட்டது.

631. கோபமெனும் தீயோன் குடிபுகுந்தால் அப்பொழுதே
பாபம் விளையும் பழியுமாம்—தாபமிகக்
கூட்டுமவன் கூடுமுன்னே கொன்றிடுக நின்றிடநீ
நீட்டினுனைக் கொல்வன் நினை. (க)

இ—ள்

கோபம் என்னும் தீயவன் உன்னிடம் குடிபுகுந்தால் அப்பொழுதே பாபமும் பழியும் விளையும்; படு துயரங்களும் பெருகும்; அத் தீயவனைத் தலையெடாதபடி தொலைத்து விடுக; தலை எடுத்தால் கொலையை விளைத்து விடுவன் என்க.

இது, கோபம் கொலை பாதகன் என்கின்றது.

குணமும் குற்றமும் மனிதனைப் பற்றி நிற்கின்றன. வழி முறையே தொடர்ந்து வந்திருக்கின்றன. குணம் நல்லது; குற்றம் தீயது. பழகிய அளவு எவையும் படிந்து வருகின்றன.

உயிர்க்கு இனிமையாய் நன்மை தருவது குணம் என வந்தது. கொடுமையாய்த் தீமை புரிவது குற்றம் என நேர்ந்தது. நல்ல மணத்தால் மலர் மாண்புறுதல் போல் இனிய குணத்தால் மனிதன் மகிமை பெறுகிறான். குணம் குன்றிய அளவு அவன் குன்றி நிற்கிறான். உயிரைக் குறுகச் செய்து துயரில் ஆழ்த்துவது குற்றம் என்க. இத்தகைய குற்றங்களுள் கோபம் மிகவும் கொடியது. கொடுந்துயரங்களையுடையது.

கோபத்தைத் தீயோன் என்று உயர் திணையில் குறித்தது அதனால் விளையும் தீமைகளை நினைந்து தெளிந்து கொள்ள. "கோபம் பாவம் பழி" என்பது பழமொழி. பழியும் பாவமும் கோபத்தால் விளையும் என்பதை இது தெளிவாக்கியுள்ளது.

விருப்பு வெறுப்புகள் சீவ சுபாவங்களாய் அமைந்திருக்கின்றன. தன் விருப்பத்திற்கு மாறு நேர்ந்தபோது அங்கே கோபம் உண்டாகின்றது. உணர்ச்சியும் இச்சையும் உடையவன் ஆதலால் மனிதனிடமிருந்து முனிவு மூண்டு எழுகின்றது.

இந்தக் கோபத்தை மேலோங்க விடாமல் அடக்கினவன் ஆன்ற அமைதியாளனாய் மேன்மை பெறுகின்றான். அடக்க முடியாதவன் அல்லல் பல அடைந்து தாழ்வுறுகின்றான்.

கோபம் தீயது ஆதலால் அது எவ்வழியும் வெவ்விய துயரங்களையே விளைத்து விடுகின்றது. மனம் கனன்று முனைந்து வருதலால் கோபத்திற்கு முனிவு என்று ஒரு பெயரும் வந்தது.

"முனிவும் செயிரும் சீற்றமும் வியர்ப்பும்
சினமென் கிளவி தெரிக்கும் காலே;
கறுவம் கோபம் கலாம்மறம் குரோதம்
வெகுளி என்பர் வேரமும் ஆகும்." (பிங்கலந்தை)

கோபத்தின் பரியாய நாமங்களாய் இவை வந்துள்ளன.

மனிதனுடைய உள்ளத்திலிருந்து கொதித்து எழுகின்ற துடிப்புகளை இந்தப் பெயர்களின் குறிப்புகளால் உணர்ந்து கொள்ளுகிறோம். உருவ நாமங்கள் உலகறிய வந்தன.

ஆசை எப்படி மனிதனிடம் படிந்திருக்கிறதோ அப்படியே கோபமும் தொடர்ந்திருக்கிறது; இந்தத் தீய தொடர்புகளிலிருந்து விலகினவர் தூயராய் உயர்கின்றார்; விலகாதவர் மாய மயக்கங்களை யுடையராய் மறுகி யுழல்கின்றார்.

உடம்பில் தொடர்ந்து படிகிற அழுக்கை நீரால் கழுவி நாளும் சுத்தம் செய்து வருதல் போல் உள்ளத்தில் எழுகிற மாசுகளை நீர்மையால் ஒழித்து வருபவர் சீர்மை பெற்றுச் சிறந்து விளங்குகின்றார். புனிதம் புண்ணியம் புரிகின்றது.

மனத்தில் சினம் மூளும் பொழுது அமைதியான மதி நலத்தால் அதனை விரைந்து அடக்கிவிட வேண்டும். அவ்வாறு அடக்காது நீளவிடின் அல்லல் பல விளைந்து விடும்.

கூடு முன்னே கொன்றிடுக.

என்றது கோபத்தை அடக்கும் குறிப்பைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ள வந்தது. தலையை நீட்டும்போதே சினத்தை அடக்க

வில்லையானால் மனத்தைக் கவர்ந்து மாளாத் துயரங்களை அது விளைத்துவிடும் ஆதலால் அவ்விளைவினையுணர்ந்து விரைந்துசெய்க

நீட்டின் உனைக் கொல்வன் நினை.

கோபத்தை நீளவிடின் அது உன்னைக் கொன்றே விடும். என்னும் இது கூர்ந்து சிந்திக்கவுரியது. கடுத்து எழுந்த தீயை வளரவிடின் அடுத்திருந்த பொருள்களை யெல்லாம் அடியோடு அது அழித்துவிடும்; உள்ளே மடுத்து மூண்ட கோபமும் முறுகி எழின் இனிய நன்மைகளை யெல்லாம் கெடுத்து ஈனப்படுத்தி விடும் என்க.

சினத்தி னால்வரும் தீமை அத்தீமை தீப்பிறப்பு
மனத்தின் நீடிய மருட்கையும் வறுமையும் நரகும்
அனைத்தும் நல்கிடும் ஆதலால் ஒருபொழு தயர்த்தும்
தனக்கு நல்லவன் வளர்ப்பனோ சீற்றமாம் தழலை.

(சேதுபுராணம்)

கோபத்தால் விளையும் தீமைகளைக் குறித்துக் காட்டித் தன் உயிர்க்கு நன்மையை நாடுகின்றவன் அந்தக் கொடிய தீயை யாதும் கூடான் என இது உணர்த்தியுள்ளது. தன்னைக் கூடினவனை நீசத்தில் கூட்டி விடுதலால் அது நாசத் தீமை என நேர்ந்தது. தனக்கு நாசத்தைச் செய்து கொள்வது எவ்வளவு நீசம்!

மனத்தில் சினத்தை வளர்த்து வருபவன் கோபி, மூர்க்கன், கொடியன், பாவி எனப் பழியடைந்து பாழ்படுகின்றான்; சினத்தை அடக்கி மனத்தைப் பண்படுத்தி வருபவன் மகாத்துமா என மகிமை பெற்று மாநிலம் போற்ற வருகின்றான்.

கோபம் சித்தத்தைப் பேதித்துச் சிறுமைப் படுத்தும் ஆதலால் அதனை அடக்கினவன் உத்தம சீலனாய் ஒளிமிகப் பெறுகின்றான். உள்ளம் நல்லதாய் உயர எல்லாமகிமைகளும் வருகின்றன.

சாந்தசீலன், சன்மார்க்கன், சத்துவன் என்னும் பெயர்கள் எல்லாம் சித்த சாந்தியைப் பெற்றவர்களுக்கே சிறப்புரிமைகளாய் வந்துள்ளன. சினத்தை அடக்கிய நீர்மையாளரே இத்தகைய சீர்மைகளில் சிறந்து திகழ்கின்றார்.

கோபம் மூளும்போது சிறிது அமைதியாயிருந்து சிரித்துவிடின் அது சிதைந்து போகின்றது. தம்முடைய நகையையும்

உவகையையும் கொல்ல வருகின்ற கோபத்தை மெல்லச் சிரித்து வெல்லும் நீரரே மேலான வீரராய் விளங்கியுள்ளனர்.

"எரியான கோபம் எழுபோதின் ஆறி இனிதாயகூறி எதிரே
சிரியாதுஇரார்கள்பெரியோர்கள்; சீறநினைவார்கள்வேறுசிலரே.
(அஞ்ஞவதைப்பரணி)

தீய கோபம் மீறி எழும்பொழுது இனியராய் ஆறியிருப்பவர் பெரியோர்; சீறி எழுபவர் சிறியோர் என இது உணர்த்தியுள்ளது. உண்மை நிலைகளை ஊன்றி உணர வேண்டும்.

பெருமை சிறுமைகளுக்கு அடையாளங்களாய் வந்துள்ள இது ஆய்ந்து நோக்கத்தக்கது. அரிய செய்கை பெரியராக்குகிறது; எளிய மையல் சிறியராக்கி விடுகிறது. சிறுமையை வென்றவர் பெருமையில் உயர்கின்ருர்.

மிகையாளன் பொறைப் படைக்கு விருந்துஆக்கி விடுகின்றேன்
பகைபாவம் கொடுமை கொலை படையுடைய கோபனையே.

விவேக மன்னன் முன் நின்று சாந்தன் இவ்வாறு கூறியிருக்கிருன். பகையும் பாவமும் கொடுமையும் கொலையும் படைகளாக உடையவன் என்றதனுல் கோபனது கொடிய நெடிய தீமைகளை உணர்ந்து கொள்ளுகிருேம்.

கோபம் மிகவும் தீயது; அதனைச்சேராமல் பேணிச்சீர்மையுடன் வாழுக. அவ் வாழ்வு மகிழ்வு சுரந்து மகிமை நிறையும்.

---

632. அறிவு குலைய அமைதி அழியச்
செறிவுயர் வெல்லாம் சிதைய—நெறிகேடு
மூண்டெதிரே தோன்ற முடுகிவரு கோபம்போல்
ஈண்டெதிர் இல்லை இடர். (உ)

இ—ள்

அறிவைக் குலைத்து அமைதியை அழித்து அடக்கத்தை ஒழித்து நெறிகேடுகளைக் கடிதுசெய்யும் கொடிய கோபம்போல் நெடிய தீமை யாதும் இல்லை என்பதாம்.

சுகம் இன்பம் என்பன எல்லாம் மன அமைதியிலிருந்து மருவிவருகின்றன. அது சஞ்சலமாய் அவலமுறின் அந்த மனித வாழ்வு அல்லல்களாய் விரிகின்றன: நெருப்பு நீரை வெதுப்பி

வெம்மையாக்கி விடுதல்போல் கோபம் மனத்தைக் கொதிக்கச் செய்கிறது. செய்யவே வெய்ய துயரங்கள் விரைந்து விளைந்து விடுகின்றன. விளையவே இனிய வாழ்வு இன்னாதாயிழிகின்றது.

அறிவு குலைய, அமைதி அழிய.

என்றது கோபத்தால் விளையும் தீமைகளைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ள வந்தது. மானச மருமங்கள் அதிசய விநோதங்களாய் உள்ளன. தீப ஒளிபோல் அறிவு யாவும் தெளியச் செய்கிறது. அந்த ஒளியில் வளர்ந்து வரும் வாழ்வு எவ்வழியும் இன்பமும் புகழும் எய்தி வருகின்றன. உயிர்க்கு யாண்டும் ஒளி புரிந்து உதவி செய்து வரும் அறிவு வெகுளியால் விளிந்துபடுகிறது; அது படவே இருளும் மருளும் பெருகி அழிவுகள் நேர்கின்றன

க்ரோதாத்பவதி ஸம்மோஹ: ஸம்மோஹாத் ஸ்மிருதி விப்ரம:
ஸ்மிருதிம்ப்ரசாத் புத்தி நாசோ புத்திநாசாத் ப்ரணச்யதி.
(கீதை, 2-63)

"கோபத்தால் மயக்கம் உண்டாகிறது; அந்த மயக்கத்தால் நினைவு தடுமாறுகிறது; அத் தடுமாற்றத்தால் அறிவு கெடுகிறது; அக் கேட்டால் அழிவு நேர்கிறது" என்னும் இது இங்கே அறிய வுரியது. குரோதம் விரோதங்களை விரித்து வெந்துயர் விளைக்கிறது.

தனக்கு உறுதியை நாடி உய்தியைத் தேடுகிற மனிதன் இத்தகைய கொடிய கோபத்தை யாதும் கூடலாகாது எனக் கண்ணன் விசயனுக்கு இவ்வாறு போதித்திருத்தலால் வெகுளி எவ்வளவு பொல்லாத ஆன்மவிரோதி! என்பது புலனாய் நின்றது.

"எரிநிகர் வெகுளி பொங்க மயக்கம் வந்தெய்தும்; எய்தத்
தெரிபவை சிதையும்; உள்ளம் தெரிந்தவை சிதைந்த போதே
உரியதன் உணர்வு மாயும்; உணர்வுமாய்ந்து ஒழிந்த வாறே
அரியஎன்று அறிஞர் பேசும்அனைத்தும்மாய்ந்துஒழியுமன்றே."

மேலே குறித்த கீதையின் மொழி பெயர்ப்பாய் இது வந்துள்ளது. மானச தத்துவங்களை உய்த்துணர்ந்து கொள்ள வேண்டும்.

அறிவைப் பாழாக்கி அவலக் கேடுகளையெல்லாம் ஒருங்கே விளைக்கும் கொடிய நீசமுடையது ஆதலால் கோபத்தைக் கடிது கடிந்து ஒழுகவேண்டும். சினம் ஒழியின் சீர்மை விளையும்.

பழியும் பாவமும் கோபத்தின் விழிகளாயுள்ளன; அது தலை நீட்டும்பொழுதே அப் புலை நீசங்கள் வெளி நீட்டி எழும்; விளைவின் உளவறிந்து விரைந்து களைந்து உயர்ந்து உய்தி பெறுக.

---

633. தாபத் திரயங்கள் ஆக்கித் தனியுயிரை
ஆபத்தில் என்றும் அழுத்துமால்—கோபத்தீ
என்றதனை முன்னறிந் தீடழித்தான் எஞ்ஞான்றும்
கன்று துயரறியான் காண். (ங)

இ—ள்

கோபம் ஆகிய தீ பல துயரங்களை விளைத்து உயிரை ஆபத்தில் அழுத்தி அவலப் படுத்தும்; அதனை முன்னுற அறிந்து நீக்கினவன் யாதும் துயரம் காணுமல் என்றும் இன்ப நிலையில் உயர்ந்து இனியனுய் இருப்பன் என்க.

தாபத்திரயங்கள் என்றது மூவகைத் துன்பங்களை. தன்னுல் நிகழ்வது, பிறரால் விளைவது, பழவினையால் நேர்வது என்னும் இவை மனித வாழ்வில் மருவியுள்ளன. எவ்வழியும் அல்லல்களையே சூழ்ந்துள்ள நிலையில் தனது அவல வாழ்வை மனிதன் நடத்திவருகிறுன். ஆனவரையும் மனதை நெறியே செலுத்தி வருபவன் அமைதியான வாழ்வை அடைந்து கொள்ளுகிறுன். மனநிலை குலைய நேர்ந்தால் எவ்வளவு செல்வமிருந்தாலும் அல்லல்களையே அனுபவிக்க நேர்கின்றுன்.

தன்னுடைய செய்கைக் கேடுகளால் விளைந்த துன்பங்களை எந்த மனிதனும் நொந்து அனுபவித்தே தீர்கின்றுன். இந்த நிலையில் வந்துள்ளவன் சிந்தையைச் செம்மைப் படுத்தி ஒழுகிய அளவு சுகமாய் வாழுகிறுன்; வழுவிய பொழுது துயரங்களை மருவுகின்றுன். பிழைகள் பீழைகள் ஆகின்றன.

தன்னுடைய இச்சைக்குப் பங்கம் நேர்ந்த போது மனிதனுக்குச் சினம் வருகிறது. சினந்து சீறும்படியான செயல்களை அயலே சூழ்ந்திருப்பவர் இயல்பகவே செய்ய நேர்கின்றுர். அவ்வாறு நேரும் போது வெகுண்டு சீருமல் அறிவோடு அடங்கி அமைதியாய் நடந்து கொள்ளவேண்டும். அவ்வாறு பழகிவரின் சாந்த சீலனுய் விழுமிய நிலையில் அந்த மனிதன் உயர்ந்து

கொள்ளுகிருன். பிறரும் அவன்பால் மதிப்பும் மரியாதைகளும் புரிந்து இனியராய் ஒழுகி இதமுடன் மருவுகின்ருர்.

ஒருவன் கோபத்தை அடக்கிக் குணம் புரிந்துவரின் அவனுல் பலரும் திருந்திப் பயன்படிந்து வருகின்ருர். அவன் சினந்து சீறின் அயலாரும் சினந்து சீற நேர்கின்ருர். அதனல் பகையும் தீயரும் சினமும் சீற்றமும் எங்கும் பொங்கி எழுகின்றன. தீமை தீமையை வளர்த்து வருதலால் யாண்டும் தீயவர்கள் நீண்டு பெருகுகின்ருர். இந்த அவலக் கேடுகளால் அந்த நாடு தாழ்ந்து நைந்து படுகின்றது.

கோபம் எந்த வழியும் இடரே தரும். யார் மீது செலுத்தினும் அல்லலே வரும். தன்னினும் வலியார் மீது சினந்தால் அவர் ஒல்லேயில் அல்லல் புரிந்து அடக்கி ஒழிப்பர்; மெலியவரை வெகுண்டு சீறினல் அவர் உள்ளம் நொந்து வருந்துவர்; அதனல் பாவமும் பழியும் விளேயும். ஆகவே எவ்வகையினும் அல்லலே தருதலால் கோபம் பொல்லாத தீயது என்று நல்லோர் எல்லோரும் அதனே அஞ்சி அகன்றுள்ளனர்.

செல்லா இடத்துச் சினம் தீது; செல்லிடத்தும்
இல்லதனின் தீய பிற. (குறள், 302)

எளியவர் வலியவர் எவரிடமும் கோபத்தைச் செலுத்தலாகாது; செலுத்தினல் கோடிய தீமைகளே விளேந்து வரும் எனத் தேவர் இவ்வாறு உணர்த்தியுள்ளார். தன் கோபம் செல்லும் இடத்தே மனிதன் துள்ளி எழுகிருன்; செல்லாத இடத்தில் அடங்கி நிற்கிருன். செல்லாக் கோபம் பொறுமைக்கழகு என்னும் பழமொழியும் வந்துள்ளது. அந்த இருவகையும் ஒரு தொகையாய் இதில் அறிய வந்தன.

பெரியவர் தம்மைக் காய்ந்தான் பிறங்கல் கல்லியகோல்ஒப்பான்
புரிவன புரியப் பட்டு புலம்புவன் ஒத்தார்க் காய்ந்தான்;
எரிநர கதனில் வீழ்வன் இழிந்தவர்க் காய்ந்தான் என்ருல்
ஒருவர்தம் இடத்தும் சீற்றம் உருமையே நன்று மாதோ.
(பிரபுலிங்கலீலே)

தன்னினும் வலியாரைச் சினந்தால் கல்லில் முட்டியவன் போல் கடுந்துயர் அடைவன்; ஒத்தவரைக் காய்ந்தால் அவர் உடனே அல்லல் இழைப்பர்; மெலியவரைச் சினந்தால் அவர்

எதிர்த்து யாதும் செய்ய முடியாது; தெய்வமே கதி என்று வைது நோவர்; அந்தப் பாவத்தால் நரக துன்பம் உண்டாம்; ஆகவே யாவரிடமும் எவ்வகையிலும் கோபம் கொள்ளலாகாது எனச் சிவப்பிரகாசர் இங்ஙனம் கூறியிருக்கிறார்.

மேலே குறித்துள்ள திருக்குறளுக்கு ஒரு தெளிவான் விரிவுரையாய் இது விளைந்து வந்துள்ளது. பொருளின் உண்மைகளை ஊன்றி உணர்ந்து கொள்ளுக.

வலியோர்மேல் வரும் வெகுளி மறித்துடனே
தமைக்கெடுக்கும் வறிதே கோபம்
மெலியோர்மேல் வரில் இகத்தில் வெம்பழியும்
யேல் நரகும் விளைக்கும் அல்லால்
நலிவோர்தம் உவப்பினுக்கும் நகைக்கும் எய்தும்
கேடினிய நட்பும் மாற்றும்
புலியோகம் பசுவினம்போல் பல்காமை
அதன் சினத்தின் பொருட்டால் அன்றோ.

(பிரபோத சந்திரோதயம்)

கோபம் எவர்மீது செய்தாலும் தீமையே; இம்மையில் பழி துயரங்களை விளைத்து மறுமையில் அழி நரகையும் அது கொடுத்து விடும்: அதனைக் கொண்டவர் நாசமே அடைவர் என இது குறித்துள்ளது. இதுவும் முன்வந்த திருக்குறளையே கருதி வந்துள்ளது. கருத்துக்கள் விரித்து நயமாக் காட்டப்பட்டுள்ளன.

நாட்டில் பசுக்கள் பெருகி யிருக்கின்றன; காட்டில் புலிகள் அருகி யிருக்கின்றன; அதற்குக் காரணம் அவற்றின் கொடுங் கோபமேயாம் என இந்நூலாசிரியர் குறித்திருப்பது கூர்ந்து சிந்திக்க வுரியது. யோகம் = கூட்டம்.

கொடிய பாபத் தீமை யுடையது ஆதலால் கோபம் குல நாசம் செய்யும் என்று குறிக்க நேர்ந்தது. எவ்வழியும் வேதனைகளை விளைத்து வரும் தீமையை விலக்கி யாண்டும் நன்மையில் உயர்க. சினம் ஒழியின் இனம் விளையும் என்க.

634 தீயனைய கோபத்தைத் தேர்ந்த அறிவினால்
மாய அவித்தவரே மாண்புறுவர்—ஆயாமல்
அத்தீ வளர்த்தோர் அறநலங்கள் யாவும்போய்ச்
செத்தவரே யாவர் தெளி. (ச)

இ-ள்.

கோபம் கொடிய தீ; தெளிந்த அறிவினால் அதனை விரைந்து அவித்தவர் என்றும் சிறந்து விளங்குவர், அதனை அவியாமல் வளர்த்தவர் அற நலங்களை இழந்து அழிந்தே போவர் என்க.

நல்ல பண்பட்ட அறிவு கோபத்தை அடக்கி ஆளும். பாம்புக்குப் பல்லும் தேளுக்குக் கொடுக்கும் போல் துடுக்கும் மூர்க்கமும் கோபத்திற்குத் துணைகளாய் அமைந்துள்ளன. மூர்க்கம் மூடம் முதலிய பீடைகளைக் களைந்து விடின் கோபம் இருந்தாலும் பல் இழந்த பாம்பு போல் அது பதுங்கிக் கிடக்கும். நல்ல இயல்புகளைப் பழகிச் சாந்த சீலங்களோடு தழுவி வளர்ந்துவரின் அல்லலான அவலங்கள் தாமாகவே அவிந்து அழிந்து போகின்றன.

கோபம் பொறாமை முதலிய இழிவுகள் எல்லாம் வீரியம் குன்றியுள்ள இடத்திலிருந்து தான் சீறி எழுந்து வெளி வருகின்றன. சிறுமைப் புலைகளிலிருந்து விளைவன தீமைகளாய் நின்றன.

சிறந்ததிரு உயர்ந்த அறிவு தேர்ந்த பண்பாடு ஆர்ந்த சீலம் முதலிய மேன்மைகள் நிறைந்துள்ள இடத்தில் சினம் முதலிய கீழ்மைகள் சேர்ந்து நில்லா. புன்மைகள் மலிந்துள்ள இடத்திலிருந்து தான் புலைத்தீமைகள் பொங்கி வருகின்றன.

"Anger is certainly a kind of baseness." (Bacon)

"கோபம் உண்மையாகவே ஓர் இழிவின் சின்னம்"
என்னும் இது இங்கே தெளிவாய் அறியவுரியது.

ஈனம் நீசம் இழிவு முதலிய பழி மொழிகளால் கோபம் குறிக்கப்படுவதால் அதனைச் சேர்ந்தவர் நிலைகளையும் புலைகளையும் ஓர்ந்து உணர்ந்து கொள்ளுகிறோம்.

கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் தம்வாயால்
பேர்த்துநாய் கௌவினார் ஈங்கில்லை---நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்கால் சொல்பவோ
மேன்மக்கள் தம்வாயால் மீட்டு. (நாலடியார்)

கீழ்மக்கள் சினந்து சீறி வைதாலும் மேன்மக்கள் மாறிச் சீருர்; அமைதியாய்ப் பொறுத்தே போவர் என இது உணர்த்தியுள்ளது. ஆன்ற அமைதி சான்ருேர் இயல்பாம்.

கயவர், நாய், கீழ்மக்கள் என்றது சினந்து இகழ்பவரது இழி நிலைகளை நினைந்து வந்தது. சினம் மனிதனைச் சின்னவனுக்கிச் சிறுமையில் தள்ளுகிறது; பொறுமை பெரியவனுக்கிப் பெரும் புகழ் தருகிறது. தீய சினம் நோய் விளைத்து வருதலால் நாய் பேய் தீ என அது இழிக்கப்பட்டது.

"நாயானது சினந்து நமைக் கடித்தால் நம்முடைய
வாயால் அதைக் கடிக்க வாறுண்டோ?"

வாய்த் துடுக்குடைய ஒருவன் ஒரு பெரியவரைத் தெருவில் இகழ்ந்து பேசினுன். அவர் யாதும் மாறு பேசாமல் அமைதியாய் அடங்கிப் போனுர். அவருடைய உறவினன் அவரை நோக்கி "இந்தச் சின்னப்பயல் உங்களை இப்படிச் சிறுமையாப் பேச நீங்கள் பொறுத்து வந்தது எனக்கு வருத்தமாயுள்ளது" என்ருன். அப்பொழுது அவர் இந்த இரண்டு அடிகளை எடுத்துரைத்தார். "உன்னை ஒரு நாய் கடித்தால் அதனை நீ திருப்பிக் கடிப்பாயா?" என்று அடுத்துக் கேட்டார். பெரியவருடைய மன அமைதியை வியந்து அவன் உவந்து போனுன்.

"நெறியின் நீங்கியோர் நீரல கூறினும்
அறியாமை என்று அறிதல் வேண்டும்."(சிலப்பதிகாரம்)

பொறுமையாளரது அரிய பண்பாட்டை இது அறிவுறுத்தியுள்ளது. மரியாதையும் அடக்கமும் மகிமை சுரந்து வருகின்றன.

"மாசாய நாவுடையார் வாய்திறந்தால் அவர்களுடன்
பேசாமல் இருந்துவிடும் அஃதன்றே பெருந்தகைமை."
(அஞ்ஞவதைப்பரணி)

நல்ல பெருந்தன்மைக்கு அடையாளத்தை இது காட்டியுளது.

இன்னவாறு அமைதியைப் பேணி வருபவர் யாண்டும் பெருமை மிகப்பெற்று இருமையும் பெறவுரிய உயர்ந்த நிலைகளை அடைந்து கொள்ளுகின்றனர்.

மாய அவித்தவரே மாண்புறுவர்.

சினத்தை அடக்கினவரிடம் தவமும் தருமமும் பெருகி

வருதலால் அவர் திவ்விய மாட்சிகளை எய்திச் செவ்விய காட்சிகளைப் பெறுகின்றார். தீயது மாயவே நல்லவை யாவும் திரண்டு வருகின்றன. அது மாயாது நின்றால் ஓயாத துன்பங்களாம்.

அத் தீ வளர்த்தோர் செத்தவரே யாவர்.

கோபம் ஆகிய தீயை வளர்த்து வரின் உயிரோடு இருந்தாலும் அவர் செத்தவர் நிலையையே எய்திச் சீரழிந்து ஒழிகின்றார். சினத்தால் அறிவு பாழாய் அவலம் பெருகி வருதலால் அவர் இருப்பு இறப்பினும் இன்னாதாயிழிக்கப்பட்டது.

இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. (குறள், 310)

சினத்தில் மிகுந்தவர் செத்தவரே யாவர்; அதனை ஒழித்தவர் என்றும் அழியாத நித்திய நிலையினரே என இது உணர்த்தியுள்ளது. இறத்தல்=வரம்பு மீறி மிகுதல். கழிசினம் பழிதுயரங்களாய் அழிவே தரும்; அவ்வாறு அழிந்து போகாதீர்; தெளிந்து வாழுமின்! எனத் தேவர் இவ்வாறு கருணையோடு போதித்துள்ளார். புனித போதனை புண்ணிய சாதனமாய் நின்றது.

சினத்துக்கு இடம் கொடாமல் மனத்தைப் பண்படுத்தி வாழ்ந்து வரின் மகிமைகள் பல சூழ்ந்து வருகின்றன.

---

635. பாபம் பழிவளர்த்துப் பாவியெனப் பேர்விளைத்துத்
தாபம் மிகச்செய்யும் சண்டாளக்—கோபமெனும்
தீயோனைக் கூடாதே தேர்ந்தறிந்து மெய்யுணர்வாம்
தூயோனைக் கொள்க துணை. (ரு)

இ—ள்

பாவம் பழிகளை வளர்த்து உன்னைப் பாவி ஆக்கிக் கோபம் கொடியதுயரங்களைச் செய்யும்; நீசமான அத்தீயவனைச் சிறிதும் அணுகாதபடி விலக்கி மெய்யுணர்வாகிய தூயவனைத் துணைக் கொள்க என்பதாம்.

புகழும் புண்ணியமும் அதிசய செல்வங்கள். சீவர்களைத் திவ்விய நிலைகளில் உயர்த்துகின்றன. அவற்றை அடைந்து கொள்வதே உயர்ந்த பிறவிப் பயன் என மேலோர் கருதியிருக்கின்றனர். தன்னைப் புகழ்ந்து பேசும் பொழுது எந்த மனிதனும்

வியந்து விழைந்து கேட்கிறுன். புகழ்ச்சியை யாவரும் விரும்பி வருதலால் அதன் அதிசயமகிமை அறியலாகும். சீவ அமுத மான இத்தகைய புகழ்புண்ணியங்களை அடைவவே மனிதன் உரிமையோடு உயர்ந்த நிலையில் பிறந்திருக்கிறுன். பிறப்பின் பேருன அவற்றை அடையாமல் இழந்து நிற்பின் அப்பிறப்புக் கடையாய் இழிந்து படுகிறது. உரிமைகளை இழந்ததோடு அமை யாமல் அவற்றிற்கு மாறுன பழிபாவங்களைச் செய்து கொள்ளு வது கொடிய மடமையாம்.

கோபம் பாவத்தீமைகளை விளைத்தலால் அது சீவ நாசமாய் நின்றது. அது எழுந்த பொழுது சீவ ஆதாரமாயுள்ள இரத்தம் கொதிக்கிறது; உள்ளம் துடிக்கிறது; உயிர் பதைக்கிறது; ஆக வே அதன் நிலைமையும் நீசமும் நேரே தெரிய வருகின்றன.

சண்டாளக் கோபம்.

என்றது உயிரைப் பழிப் படுத்திப் பாவத்தில் ஆழ்த்திப் படுதுயர்செய்யும்அதன் கொடுமை கருதி. நீசன், சண்டாளன், கொலைபாதகன் என மனிதரை நிலைநிரித்துப் புலையாக்கி வருவது எது? இந்தக் கேள்விக்கு விடையாகக் கோபமே தடையின்றி எதிர்வரும். கோபம் மூண்டு நீண்ட போதுதான் மனிதன் கொலை செய்ய நேர்கின்றுன்; நேரவே கொலைஞன், பாவி, பாதகன், நீசன் என்று பழிபட்டு அழிகின்றுன்.

கலகம் சண்டை குத்து வெட்டு கொலை என்னும் புலைகள் எல்லாம் கோபத்தின் விளைவுகளாய் வருதலால் மனிதசமுதாயம் கொடிய துயரங்களை யாண்டும் அனுபவித்து வருகிறது.

ஒருவன் மனத்திலிருந்து எழுந்த சினத்தால் பல உயிர்கள் பரிதாபமாய் மாண்டு மடிந்துள்ளன; அவ் வுண்மைகளைச் சரித் திரங்கள் காட்டி வருகின்றன. சினம் மூண்டதால் இனம் மாண் டது எனக் குரு குலத்தார் இங்ஙனம் குறிக்கப்பட்டுள்ளார்.

“வயிரம்எனும் கடுநெருப்பை மிகமூட்டி
வளர்க்கினுயர் வரைக்காடு என்னச்
செயிர்அமரில் வெகுளிபொரச் சேரஇரு
திறத்தேமும் சென்று மாள்வோம்;
கயிரவமும் தாமரையும் கமழ்பழனக்
குருநாட்டில் கலந்து வாழ

உயிர் அனையாய்! சந்துபட உரைத்தருள் என்றான்
அறத்தின் உருவம் போல்வான். (பாரதம்)

கண்ணனை நோக்கித் தருமன் இன்னவாறு வேண்டி யிருக்கிறான். வெகுளித் தீயை மூட்டினால் இரு திறத்தாரும் ஒருங்கே அழிந்து போவோம்; அவ்வாறு நேராதபடி தூதுபோய்ச் சமாதானம் செய்தருள்! என அந்தச் சாந்த சீலன் இங்ஙனம் மறுகி வேண்டி யிருத்தலால் கோபத்தின் தீமையை அவன் எவ்வாறு உணர்ந்திருக்கிறான் என்பதை நாம் இங்கே கூர்ந்து ஓர்ந்து கொள்கிறோம்.

வீணே கோபத்தை மூட்டித் துரியோதனன் கொதித்து நின்றமையால் பல்லாயிரம் வீரர்கள் நாசமாயினர்; பல அரசர்கள் மாண்டு மடிந்தனர்.

"பெற்றிடு திருவினில் பிறந்த வெஞ்சினம்
கற்றவர் உணர்வையும் கடக்கும் அன்னது
முற்றுறு கின்றதன் முன்னம் அன்பினோர்
உற்றன கூறியே உணர்த்தல் வேண்டுமால்."
(கந்தபுராணம்)

சினம் பெரிய அறிவாளிகளையும் கெடுத்துவிடும்; அதனை முற்றவிடாது அடக்கிவிட வேண்டும் என இது உணர்த்தியுளது.

"வெகுளியே உயிர்க்கெலாம் விளைக்கும் தீவினை
வெகுளியே குணம்தவம் விரதம் மாய்க்குமால்
வெகுளியே அறிவினைச் சிதைக்கும் வெம்மைசால்
வெகுளியிற் கொடும்பகை வேறொன் றில்லையே."
(காஞ்சிப்புராணம்)

தவம் விரதம் முதலிய அரிய பல பெருமைகளையும் கோபம் கெடுத்துவிடும்; அது கொடிய பகை; அடியிடாதபடி அதனை அடியோடு ஒழித்துவிடுவதே நல்லது என இது குறித்திருக்கிறது.

கோபம் என்னும் தீயோனைக் கூடாதே.

என்றது சினத்தின் தீமையை நுனித்து உணர்ந்துகொள்ள வந்தது. தீயவரோடு கூடினால் மனிதன் தீயவனாய்த் தீங்குபுரிய நேர்கின்றான். சேர்ந்த சேர்க்கையின்படி மனிதன் நேர்ந்து வருதலால் கொடிய தீமையாகிய கோபத்தோடு கூடின் நெடிய பாவியாய் முடிகிறான். முடிவினை முன் அறிந்து தன்னை இனிது

காத்து வருபவன் என்றும் தனி மகிமையுடன் உயர்ந்து கொள் கிருன். முனிவு ஒழியின் இனிய மேன்மைகள் எதிர்விளைகின்றன.

மனத்துட் சினத்தை மருவான் தவத்தின்
இனத்துட் சிறந்தான் இனிது.

கோபம் ஒருவிக் குணம் மருவி வாழுக.

---

636. வனத்தீ எழினே வளர்மரங்கள் யாவும்
இனத்தோ டெரிந்தே இழியும்—சினத்தீ
மூளின் உயர்நலன்கள் முன்னழியும் நல்லுயிரும்
மாளும் படிசெய்யு மால். (சு)

இ—ள்

வனத்தில் தீ பற்றி எறிந்தால் நல்ல மரங்கள் பல நாசமாய் எரிந்து போம்; உன் மனத்தில் சினத் தீ எழுந்தால் அரிய நன் மைகள் யாவும் அழிந்து உயிரும் அநியாயமாய் ஒழிந்துபோம்; இதனைத் தெளிந்து கொள்க என்பதாம்.

காட்டுத் தீ எனச் சினத்தை இது காட்டியுள்ளது.

நெருப்பு அடுப்பின் அடியிலிருந்தால் பாலைக் காய்ச்சி இத மா ஊட்டும்; அது கூரையில் ஏறினல் வீட்டை எரித்து வெந் துயர் விளைக்கும். சினமும் அந்த இனமாய்ச் சிந்திக்க வுரியது.

பஞ்ச பூதங்களின் கலப்பால் இந்த உடம்பு அமைந்துள் ளது. இதில் கோபம் தீயின் கூருய் மருவியிருக்கிறது. கோபத் தை அறவே ஒழிக்க யாராலும் முடியாது. இயற்கைச் சூடாய் உள்ளே அது இணங்கி யிருக்கிறது. உணர்ச்சியும் நேர்மையும் மிகுந்தவர்களிடத்தில் அது விரைந்து வெளிப்படுகிறது." கோபம் உள்ள இடத்தில் குணம் இருக்கும்" என்பது பழமொழி. இது அரிய நுண் பொருளை மருவியுள்ளது.

நல்ல நீதிமான்கள் அநீதிகளைக் காணநேர்ந்தால் உள்ளம் கொதிக்கிறது; கொதிக்கவே உரைகள் சினந்து வருகின்றன. இது தீய கோபத்தோடு சேராது; தூய திருத்தமாய்த் தோன்றி நிற்கிறது. பொய்யும் மெய்ஆதல்போல் சினமும் குணம் ஆகிறது.

தவறு கண்டபொழுது தந்தை பிள்ளைகளைச் சினந்து தண் டிக்கிருன்; தலைவன் வேலையாட்களை வெகுண்டு திருத்துகிருன்.

இவ்வாறான கோபம் செவ்வி தோய்ந்து வருதலால், அது வெவ்விய தீமையாய் வெறுக்கப்படாது. நல்ல குறிக் கோளோடு வரும்பொழுது கோபம் ஒரு குணமாய் மாறுகிறது. வெகுளிச் சுவை என இனிமையான பேரால் அது குறிக்கப்படுகிறது. ரௌத்திரரஸம் என்பது உருத்திர மூர்த்தியின் உக்கிர வீர கோபத்தை உணர்த்தியுள்ளது. தீமைகளைத் தொலைத்து நன்மைகளைப் பாதுகாக்க எழுகின்ற வெகுளி விழுமிய வீரமாய் விளங்கி மிளிர்கின்றது. தேவ கோபம் என்பது இங்கே சிந்திக்கத்தக்கது.

தரும நீதிகளின் பொருட்டுப் பெரியோர்களிடமிருந்து எழுகின்ற கோபம் போற்றப்படுதலால் அதன் ஏற்றம் தெரியலாகும். நன்மை தோய்ந்தது செம்மை வாய்ந்தது.

கரும சாதனமாய் உரிய இடத்தில் உறுகிற முனிவு இனிமையாய் அமைகின்றது. கோபத்தில் பாவம் கலவாதது ஆபத்திற்கு உதவிசெய்து வருகிறது. அதனை அனுபவத்தில் அறிந்து வருகிறோம். தன் கோபத்தால் பிறர்க்கு வீணே கொடிய துயரங்களை விளைக்கும்போதுதான் அவன் பாவத்தை அடைய நேர்கின்றான். பாபம் படியாத கோபம் பயன் படிந்து வருகிறது.

"Be ye angry, and sin not." (Bible)

"நீங்கள் கோபம் கொண்டாலும் பாவம் செய்யாதிருங்கள்" என்னும் இது இங்கே அறியவுரியது. தீமையில்லாத கோபமும் உண்டு என்பதை இதனால் உணர்ந்து கொள்ளுகிறோம். இல்குவாக எதிலும் முனிவு செய்பவரைச் சுலபகோபர் என்பர்.

இவ்வாறு உல்லாச நிலையில் இல்லாமல் பொல்லாத புலையில் நிமிர்ந்து நீண்டால் அக்கோபம் கொடிய தீமையாய் மூண்டு முடிகிறது. ஆங்கார ஆணவங்களால் ஓங்கி எழுவது அவலக் கேடுகளை விரைந்து விளைத்து விடுகிறது. தெள்ளிய மதிமான்களையும் தேர்ந்த தவசிகளையும் கோபம் நிலை குலைத்துள்ளமையால் அதனை வெல்வது எவ்வளவு கடினம்! என்பது விளங்கி நின்றது.

"ஒள்ளிய தவத்தால் கல்வியால் உணர்வால்
உண்மையால் உணர்ந்தவர் உயர்ந்தோர்
எள்ளிய குற்றம் இல்லவர் எய்தும்
வெகுளியால் இப்படிப் பட்டார்

தெள்ளிய வீரச் சிலேயினுய்! புறத்துத்
திறப்பகை வெல்லலாம் சினமாம்
உள்ளுறு பகையை அறிந்தவர் உலகத்து
ஒருவரும் வென்றவர் இல்லே. (1)

மூங்கிலில் பிறந்த முழங்குதீ மூங்கில்
முதலற முருக்குமா போல
தாங்கரும் சினத்தீ தன்னுளே பிறந்து
தன்னுறு கிளேயெலாம் தகிக்கும்;
ஆங்கதன் வெம்மை அறிந்தவர் கமையால்
அதனேயுள் அடக்கவும் அடங்காது
ஓங்கிய கோபத் தீயினே ஒக்கும்
உட்பகை உலகில்வேறு உண்டோ? (2)

(இராமாயணம்)

அரிய பெரியோர்களும் வெகுளியால் சிறுமை யடைந்துள்ளனர்; அது மூண்டபோது காட்டுத்தீ போல் கடுங் கேடுகளே விளேத்துவிடும்; அதனே வென்றவர் அரியர் என இலக்குவனே நோக்கி இராமன் இப்படி உரைத் திருக்கிருன்.

மகாவீரனை இராமன் கோபத்தின் நிலேமையை இவ்வாறு குறித்திருத்தலால் அதன் கொடுமை வன்மைகளேக் கூர்ந்து ஓர்ந்து கொள்ளுகிறேம். கொடியது நீங்கின் இனியது ஓங்கும்.

சினத் தீயை மூளவிடாமல் அடக்கி யாள்பவரே அதிசய நிலேயினர்; எல்லா மகிமைகளேயும் அவர் எய்தி மகிழ்கின்ருர்.

பொல்லாச் சினத்தைப் புலேயடக்கி வென்றவனே
வல்லான் எனநின்ருன் வந்து.

வெகுளியை வென்று வீரனுய் விளங்குக.

---

637. சினமும் பகையுமிகத் தீமைசெய்யு மேனும்
சினம்போல் பகைதீங்கு செய்யா—சினந்தான்
உள்ளிருந்தே எல்லா உயர்நலனும் கொன்றுகீழ்த்
தள்ளுமே துன்பமெலாம் தந்து. (எ)

இ—ள்

பகையும் சினமும் தீமைகளேச் செய்யும் ஆயினும் சினத்தைப் போல் அது அவ்வளவு தீமையைச் செய்யாது; சினம்

உள்ளே இருந்து கொண்டே எல்லா நன்மைகளையும் அழித்துப் பொல்லாத துன்பங்களில் தள்ளிவிடும் என்க.

இது, கொடியபகையினும் சினம் நெடியதீயது என்கின்றது.

உலக வாழ்வு அல்லல்கள் நிறைந்தது; அந்தத் துயரங்கள் தாக்காமல் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டுமானால் தனது உள்ளத்தைப் புனிதமாக மனிதன் போற்றி வரவேண்டும். பொறாமையும் பகைமையும் குரோதமும் எவ்வழியும் வெளியே புடைசூழ்ந்து விரிந்து நிற்கின்றன. மாயப் பேயாட்டங்களுக்கு இடையே வாழ்க்கையை மாசுபடாமல் நடத்தித் தேசும் திருவும் செய்து வருவது அதிசய வெற்றியாம்.

அந்த வெற்றிக்கு உற்ற துணையாயிருப்பது நல்ல மனமேயாம். பொல்லாத கோபத்தால் அது புலையுற நேரின் எல்லாத் துயரங்களும் எதிர் எழுந்து கொல்லாமல் கொல்லும். யாண்டும் சினத்தை அடக்கி வாழ்பவன் நீண்ட சுகங்களை நேரே கண்டு வருகிறான். சீறிச் செயிர்த்து நிற்பதால் தீமைகளே விளைகின்றன.

நல்ல உயிரை நாசப்படுத்தி விடுதலால் கோபம் நீசப் பகை என நேர்ந்தது. பழி பாவங்களோடு தொடர்ந்து வருவதே அதன் இயல்பா யுள்ளமையான் நரகத்தின் தூதுவன் என அது பேரமைந்து நின்றது. கோபமே கொலை புலை குறித்துக் கொள்க.

சீவகோடிகளை மேலான நிலைகளில் செல்ல விடாமல் பாழான பழிகளில் தள்ளி விடுதலின் கோபம் மிகவும் அஞ்சத் தக்கது. அதன் தீய நிலைகளையும் செயல்களையும் அயலே வரும் பாசுரங்களில் அறியலாகும்.

“சாற்றும் உள்ளுறும் விருப்பம் தடைப்படில் எழும்
சீற்றமே உருவமாம் எனையும்என் சிந்தைநோய்
மாற்றும் ஓர் கொலைஎனும் மாதையும் கலகனும்
ஆற்றல்சேர் மகனையும் ஆர்கொல் வெல்வார்களே? (1)

எதிருறத் துடிதுடித்து எரிவிழித் துணைசிவந்து
அதிர்கொள் சொற்படபடத்து அங்கமும் பதைபதைத்து
உதிரமெய்க் குலைகுலைத் துட்கொதித்து எழுசினக்
கொதிபொறுப் பவர்கள் எக்குவலயத்தவர்களே? (2)

தெருளறக் கலையினிற் றிறனறச் சிந்தையூடு
அருளறப் பெரிதலைத்து அறிஞராமவரையும்

குருடெனச் செவிடெனக் கொடியர் மற்றிவரெனப்
பொருள்தெரித் தழலெழப் புகலுவித் திடுவனால். [3]

தூய சிந்தையுமறத் துணிவு முண்டாயினும்
காயும்வெஞ் சினம்வரின் கற்றுணர்ந் தோர்களும்
தாயர் தந்தையர் பெருந் தம்முனுற்றார் தமக்கு
ஏயநண்புடையர் என்று எண்ணவும் கூடுமோ? [4]

கோபமெய்க் கொடியன் யான் எய்திலார் குலேவுறார்?
தீபம்ஒத் தொளிர்தபோ தனர்களும் சினமெனும்
பாபமுற் றயலுளோர் பதைபதைத்து உயிரிறச்
சாபமிட் டனையர்தம் தவமும்விட் டிடுவரே." [5]

பொறையுமா மதிநலம் புணர்விவேகனும் இசைந்து
உறையும் ஓரிடனும் வெந்து ஒழிவுறும்படி எரித்து
இறையு மோகனே அலால் எங்கும் வேறிலையெனும்
பறையுமோ துவன்எனப் படபடத்து ஓதினன். [6]

[பிரபோத சந்திரோதயம்]

மோகன் என்னும் அரசன் எதிரே நின்று கோபன் இன்ன வாறு பேசியிருக்கிறான். தனது உருவநிலை மனைவி மக்களுடைய இயல்பு முதலியன விரித்து விளக்கி வீரப்பிரதாபங்களை வெளியிட்டிருக்கிறான். "அறிவு தவங்களில் சிறந்தவரையும் வெறியராக்கிப் பழிகளை விளைத்துப் பாழாக்கி விடுவேன்; நான் இருக்கும் வரையும் விவேகன் தலைநீட்டமுடியாது; மோகன் ஆட்சியே எங்கும் நிலைத்து நிற்கும்" என உறுதிமொழி கூறியுள்ளான். தனது மனைவி பெயர் கோலை; மகன் கலகன் எனக் கோபன் குறித்திருத்தலால் கூட்டத்தின் நிலைமைகளைக் கூர்ந்து ஓர்ந்து கொள்கிறோம். உருவக வுரைகளில் மருவியுள்ள பொருள்கள் கருதி யுணர வுரியன.

அறிவு சீலங்களைக் கலக்கிக் கொடிய கலகங்களை விளைத்து யாண்டும் பழிதுயரங்களையே செய்துவரும் பாபகாரி எனக் கோபத்தை ஈண்டு அறிந்து கொள்ளுகிறோம். இந்தத் தீமைக்கு இடங் கொடாதவனே என்றும் இனியனாய் இன்ப வாழ்வைக் காண்கின்றான். சினம் உறின் தீமைகளே எதிர் வருகின்றன.

கோபத்தைக் கொண்டாடி நின்றான் கொடியதோர்
ஆபத்தைக் கொண்டான் அவன்

இதனைச் சிந்தனை செய்து சீர்மை பெறுக.

638. பசிகாமம் என்னும் படுதீ உணவோடு
ஒசியும் இடையா ருடன்போம்—முசியாத
கோபத்தீ அந்தோ கொடிதாய் உயிர்குடித்து
ஆபத்துள் ஆக்கும் அறி. (அ)

இ—ள்

பசித் தீ உணவால் அடங்கும்; காமத் தீ புணர்வால் மடங்கும்; கோபத் தீ உணர்வால் ஒடுங்கும்; அவ்வாறு ஒடுக்காவிடின் அது மிடுக்காய்மீறி எழுந்து உயிரைக் குடித்துக் கொடிய துயரத்துள் ஆழ்த்தி விடும் என்க.

மனிதன் துன்பத் தொடர்புகளோடு தோன்றியிருக்கிறான். பசியும் காமமும் இயற்கை உரிமைகளாய் அவனைப் பற்றி நிற்கின்றன. இந்த இரண்டு நோய்களுக்கும் இரைகளை ஊட்டி அவன் பொறையாற்றி வருகிறான். வாழ்வின் அல்லல்களைச் சிறிது ஊன்றி நோக்கினும் பிறவியின் அவலங்கள் தெரியலாகும். அருந்தல், பொருந்தல் என்னும் உரைக் குறிப்புகள் மனிதனுடைய வருந்தல்களை விளக்கியுள்ளன.

உண்ணும் உணவால் பசியை அடக்கிப், பெண்ணை மருவிக் காமத்தைத் தணித்து மனிதன் சேமத்தை நாடி வருகிறான். பசி காமங்கள் உயிரைத் தகித்து வருதலால் பசித் தீ காமத் தீ என அவை பேர் பெற நேர்ந்தன.

தீயினங்கள் தொடர்ந்து இங்ஙனம் நோயுழந்துள்ளமையால் பிறவிநோய் தீர்ந்து பேரின்பம் பெற வேண்டும் என்று உயர்ந்தோர் உறுதி சூழ்ந்துள்ளனர். உள்மாசு கழுவி உயர்வதே உயிர் வாழ்வின் குறிக்கோளா யுள்ளது. உற்ற மாசுகளை நீக்க வுரிய மனிதன் மேலும் குற்ற அழுக்குகளில் படிவது கொடிய மடைமை யாகிறது.

பழி இழிவுகளையுடைய கோபம் நுழையு முன்னரே கடிது களைய வேண்டும். நெடிது நீளவிடின் குடிகேடுகள் விளைந்து விடும் ஆதலால் தெளிந்த அறிவுடையார் அதனை விரைந்து களைந்து விடுகின்றனர். சினம் தணிவது சீர்மை அணிவதாம்.

"ஆறுவது சினம்"

என்றார் ஔவையார். ஆற்றுவது சினம் என்னுமல் ஆறுவது என்று தன்வினையால் கூறியது அதன் நிலைமை தெரிய. கனன்று சீறும்படி சினத்தை வளரவிட்டுப் பின்பு அதனை அடக்கி மடக்கினும் அவலமேயாம். எப்பொழுதும் அமைதியாய்ச் சினம் ஆறியிருந்தால் அந்த மனிதன் தேறிய நீர்மையில் சிறந்து திகழ்வான். தெளிந்தசிந்தையில் சினம்ஒழிந்து விடுகிறது.

சாந்த சீலங்களோடு பழகி எவ்வழியும் மனத்தைப் பண்படுத்தி வரின் சினம் தானகவே அடங்கி ஒடுங்கி மறைந்து போம். அது போகவே யாவும் நன்மையாம்.

கோபம் குறையின் குணங்கள் பல நிறைகின்றன.

வெகுளியை நீக்கிய வித்தகனிடம் வியக்கத்தக்க நன்மைகள் விரைந்து வந்து சேர்கின்றன. கொடிய சினத்தை விட்டவன் அரிய சித்தி பெற்றவனுய்ப் பெரிய மகிமைகளைக் காணுகின்ருன். உயர்ந்த காட்சிகள் உள்ளத்தின் மாட்சியாலுறுகின்றன.

தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தானம் என்றும்
இடுங்கோள் இருந்த படியிருங் கோள்எழு பாரும் உய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றம் திறக்கத் துளைக்க வைவேல்
விடுங்கோன் அருள்வந்து தானே உமக்கு வெளிப்படுமே.
(கந்தர் அலங்காரம்)

வெகுளியை விடுங்கள்; தெய்வத் திருவருள் உங்களுக்கு எளிதே வந்து கைகூடும் என அருணகிரிநாதர் இவ்வாறு அருளியுள்ளார். மகிமை மாண்புகள் மதி தெளிய வந்தன.

கோபம் எவரையும் சிறுமைப்படுத்தும் ஆதலால் அதனை விட்டவர் பெரியராய் உயர்ந்து பெருநலங்கள் பெறுகின்ருர். மனத்தை அடக்குவதுபோல் சினத்தை அடக்குவதும் அரிய செயல் ஆகையால் அது செய்தவர் பெரியராயினர்.

உள்ளம் கவர்ந்தெழுந்து ஓங்கு சினம்காத்துக்
கொள்ளும் குணமே குணம்என்க---வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு. (நன்னெறி, 8)

கோபத்தை அடக்கினவனே உயர்ந்த குணவான் எனச் சிவப்பிரகாசர் இங்ஙனம் குறித்திருக்கிருர். கரையைத் திறமா உயர்த்தி வெள்ளத்தைத் தடுத்தல்போல் அறிவை நெறியே

உயர்த்திச் சினத்தை அடக்கிச் சீர்மை பெறுக.

கோபம் மீறினல் கொடுந் துயரங்கள் சீறிவரும் ஆதலால் அதனை மீருமல் காப்பவர் தன் உயிர்க்கு நன்மை செய்தவரா கின்ருர். சினத்தை மீறவிட்டுச் சிந்தை நொந்து தவிப்பது தீயை வளாவிட்டு நோயுழந்து துடிப்பது போல் கொடிய நிந்தனையாம்.

கோபத் தீ உயிர் குடித்து ஆபத்துள் ஆக்கும்.

என்றது அதன் கொடிய அழிவு நிலையைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ள வந்தது. கொதித்துச் சீறும்போதே உள்ளம் துடிக் கிறது; உணர்வு அழிகிறது; பின்பு அதன் விளைவான பழி துயரங்களை உயிர் அனுபவித்து வருந்துகிறது.

கோபத்துக்கு இடங் கொடுத்து ஆபத்தை அடைபவர் அறிவிலிகளாய்க் கருதப்படுகின்றனர். தன்னை நன்கு பேண விரும்பின் சினத்தை எங்கும் காணலாகாது.

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். (குறள், 305)

சினத்தின் கொலை நிலையை இது உணர்த்தி யுள்ளது.

"Wrath killeth the foolish man." (Bible)

"மூடமனிதனைக் கோபம் கொல்லுகிறது" என இது குறித் திருக்கிறது. உண்மையை உணர்ந்து உயிரைப் பேணி ஒழுகுக.

---

639. உள்ளம் கலைய உயிர்குலைய உற்றுநின்ற
தெள்ளறி வெல்லாம் சிதைந்தழிய—ஒள்ளெரிபோல்
மூளும் சினத்தீயை மூளாமல் காத்தவரே
நாளும் பெறுவார் நலம். (௯)

இ-ள்.

கோபம் ஆகிய தீ மூளும்பொழுது உள்ளம் கலையும்; உயிர் குலையும்; தெளிந்த அறிவு சிதைந்து அழியும்; இவ்வாறு நல்லவை களை யெல்லாம் நாசப்படுத்திவரும் அந்நீசத்தீயை நெஞ்சம் புகாமல் காத்தவரே என்றும் நிலையான பேரின்ப நலனைத் தலைமையாய் நன்கு பெறுவார் என்க.

இது, தீய சினம் ஒழியின் தூய நலம் வரும் என்கிறது.

ஒரு வீட்டில் தீ மூண்டு பற்றினல் அங்கு உள்ளவர் அஞ்சி அலமருகின்றனர்; அது போல் கோபம் கொதித்து மூண்டால் கரணங்கள் யாவும் கலங்கி யுழலுகின்றன. நெருப்பு நீரைக் குடித்தல் போல் உயிர் ஆதாரமான உதிரத்தைக் கோபம் உறிஞ்சிவிடுகிறது; விடவே சீவசத்து தேய்ந்து போகின்றது.

சின்ன ஒருசினத்தால் சீவசத்தி தேய்ந்துபோய்
இன்னல் பலவும் எதிரெழுமே---அன்னகொடுந்
தீயை அவியாமல் தீங்காய் வளர்த்துவரல்
மாயும் வகையே மருண்டு.

தன்னுடைய அழிவை எண்ணி நோக்காமல் கண் குருடு பட்டுக் கழிந்து ஒழிபவன் இழிந்த மனிதனய் ஈனமுறுகின்ருன்.

கோபம் புகுந்த போது நெடு மூச்செறிந்து நெஞ்சு துடித்து நிலை குலைந்து படுகிருன்; பட்டும் பாடுதெரிந்து விலகாமல் படுதுயருழந்து பாழாய் அழிகின்ருன்.

கண்கள் சிவந்து, புருவம் துடித்து, உடல் வியர்த்து, உள்ளம் கலங்கி எள்ளல் இளிவுகளோடு விரைந்து வருதலால் கோபத்தின் கொடுஞ் செயல்களை உணர்ந்து கொள்ளலாம்.

"வெகுண்டோன் அவிநயம் விளம்பும் காலை
மடித்த வாயும் மலர்ந்த மார்பும்
துடித்த புருவமும் சுட்டிய விரலும்
கன்றின உள்ளமொடு கைபுடைத் திடுதலும்
அன்ன நோக்கமோடு ஆய்ந்தனர் கொளலே." [அவிநயம்]

உள்ளத்தில் வெகுளி மூண்டபொழுது உடலில் இன்ன வாருன சின்னங்கள் தோன்றும் என்னும் இது ஈண்டு உன்னி உணரவுரியது. அகத்தின் அவல நிலைகள் அயல் அறிய வந்தன.

உள்ளம் கலைய உயிர் குலைய

என்றது கோபத்தின் நிலையை உணர்ந்து நெஞ்சம் தெளிந்து அதனை விலகி வாழவேண்டி. மேலான கதிநிலைகளுக்குச் செல்லவிடாமல் உயிர்களைத் துயர்களில் தள்ளி விடுதலால் கோபம் கொடிய நீசப்பகை எனப் பேச நேர்ந்தது.

உலகைத் துறந்து போய் அருந்தவம் புரிந்து சிறந்த ஞான சீலர்களாய் உயர்ந்துள்ளவர்களையும் கோபம் புகுந்து கெடுத்து

விடுதலால் அதனுடைய வேகமும் விறலும் விளங்கி நின்றன.

விசுவாமித்திரர் பெரிய தவசி. யோக ஞானங்களில் சிறந்தவர். அவர் கோபத்தால் தமது அரிய பெரிய தவங்களை இழந்து பலமுறையும் பரிந்து நொந்திருக்கிறார்.

"'கோபத்தால் கோசிகன் தவத்தைக் கோட்டினன்."

கோபத்தின் நிலையையும் வலியையும் உலகத்திற்குக் காட்டுதற்குச் சிறந்த சான்ருகக் கோசிக முனிவர் இங்ஙனம் குறிக்கப்பட்டுள்ளார். அரிய தவம் கோபத்தால் அழிந்து போயுளது.

"சிறப்புப் பெற்றநல் யோகிதன் மனத்தெழு சினம்தன்
அறத்தைக் கொன்றிடும் முன்புபஞ்சி யில்புகும் அழல்போல்
ஒறுக்கப் பட்டவன் பவம்பினை ஒழித்திடும் அதனல்
பொறுத்தற்கு ஒப்பிலை என்றுநன் றறிந்தனை போலும். (1)

வலியவன் இடத்தும் ஒத்தான் மாட்டினும் வெகுளி காத்தல்
பொலிவுசெய் அறமதென்னப் பொருந்துருது அனையர்தம்பால்
நலிவுறு வெகுளி செல்லாது ஆதலால் நலியல் ஆற்ரு
மெலியவன் இடத்திற் காக்கும் வெகுளியே அறம தென்பார்.

வைதவன் தன்னை நன்று வாழ்த்தினன் எனவும் தீய
செய்தவன் தன்னை நல்ல செய்தவன் எனவும் கொள்வோன்
கைதவம் அகன்ற முத்தி கண்டவன்; அவ்வா றுன்ஞன்
பொய்தவன் என்பதென்று புகன்றனர் புலவர் அன்றே. (3)

யாவர்க்கும் ஒப்ப நன்ரும் என்னினும் சினம் இலாமை
மூவர்க்கும் அரிய செய்யும் முனிவர்க்குச் சிறந்தது என்று
தேவர்க்கும் அரிய இன்பம் சித்தரா மப்பேர் அண்ணல்
மேவற்கு வடிவம் கொண்டு மேவிய விமலன் சொன்னன்." [4]

[பிரபுலிங்கலீலை]

சித்தராமன் என்னும் ஒரு யோகியை நோக்கி அல்லமர் என்னும் ஞானசீலர் கூறிய படியிது. உயர்ந்த சித்திகளில் வல்லவர் என்று உள்ளம் செருக்கி அவர் சினந்து சீறியபோது பரம சாந்த சீலராய் நின்று இவர் இவ்வாறு போதித்திருக்கிறார்.

"கல்வியும் தவமும் மாய்க்கும் வெய்யதாம் வெகுளிதன்னை விட்டிடு." என்று தொடங்கி இம் மெய்ஞ்ஞானி அவரது அஞ்ஞானம் தீர உணர்த்தியுள்ள உரைகள் ஊன்றி உணர வுரியன.

கோபத்தை அடக்கிக் குணங்களை வளர்த்து வருபவர் உயர்ந்த மேன்மைகளில் ஒளி புரிந்துள்ளனர். அது சீறி எழும் பொழுது மாறிவிழும்படி மதியூக மாய்ப் பொறுமையை எதிர் நிறுத்த வேண்டும். சாந்தி முன் கோபம் மாய்ந்து போகிறது.'

கொலையை மனைவி ஆகவும், கலகனை மகனாகவும், பழி பாவங்களைப் படைகளாகவும் கொண்டுள்ள கோபன் கொதித்து வருங்கால் அவனை எதிர்த்து அடக்குவார் நிலைகளை அயலே வரும் கவிகள் சுவையாக உணர்த்தியுள்ளன.

### கோபன் கோதித்து வந்தது.

மன்னு புருவச்சிலை குனித்துவிழி கக்குபொறி வார்கணை வடித்து
உன்னுமதி யுட்கொதி கொதித்து எயிறதுக் கலெனும் ஓர்முரசெழத்
துன்னுவெயர்மெய்க்கவசமிட்டழல்மொழிச்சுரிகைதொட்டுநெடுமூச்சு
என்னும் இரதத் தின்மிசை இஞ்சையொடு கோபன் எதிர் ஏறிவரவே,

### பொறை எதிர்த்து நின்றது.

கண்டவ னெடும் பகைஎனும் பொறை எனத்தகைய காளை மவுனத்
தண்டும் அமுதூறு மொழி அம்புமெய் வணக்கெனு மொர்சா பமுமுக
முண்டக மலர்ச்சி எனும்ஓர் குடையும் மூரல்எனும் மெய்க் கவசமும்
கொண்டுமரியாதையொடும் ஏறினன் மெய்ஞ் ஞானமத குஞ்சரமரோ.
(பிரபோத சந்திரோதயம்)

கோபத்தின் கொடிய ஆரவார நிலைகளையும், அதனை அடக்க மூண்ட சீரிய நீர்மைகளையும் இவை காட்டியுள்ளன. பொறுமை மெய்யறிவு மவுனம் மரியாதை என்னும் இவைகள் எதிரே கோபம் அடங்கி ஒழிந்து போம் எனக் குறித்துள்ளமையால் குணங்களின் திறங்களைக் கூர்ந்து உணர்ந்து கொள்கிறோம்.

சினந்து சீறும்படி பிறர் கோபத்தை மூட்டினாலும் அமைதியாய் அடங்கி யிருப்பதே ஆன்ற பெருமையாம். அடங்காது வெகுண்டால் அது சிறுமையாய்ச் சீர்மை குன்றும் என்க.

"நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோர்---ஓர்த்ததனை
உள்ளத்தான் உள்ளி உரைத்துராய் ஊர்கேட்பத்
துள்ளித்தூண் முட்டுமாம் கீழ்." [நாலடியார், 64]

பிறர் சிறுமையாய் இகழ்ந்து பேசினும் அவருடைய மடமைக்கு இரங்கி மேலோர் வெகுளாமல் அடங்கியிருப்பர்;

என்னை இப்படி வைதானே! என்று எல்லாரும் கேட்கும்படி துள்ளிக்குதித்து எள்ளிச் சொல்லி எதிர்த்துச் சீறிக் கொதித்துத் திட்டுவது கீழோர் இயல்பாம் என இது குறித்துள்ளது.

எவ்வழியும் கோபத்தை அடக்கிக் கொள்பவரே செவ்விய மேலோராய்ச் சிறந்து திகழ்கின்ருர். கோபம் குன்றின் அவன் குணக் குன்றமா யுயர்ந்து மகிமை பல பெறுகின்ருன்.

சினம் மூளாமல் காத்தவரே நாளும் நலம் பெறுவார்.

என்றது சித்தசாந்தியால் விளையும் நன்மைகளை உய்த்துணர வந்தது. அரிய பல மேன்மைகள் அமைதியால் அமைகின்றன.

உள்ளே வெகுளி ஒழியின் உயர்நலங்கள்
வெள்ளம் எனவே வரும்.

இதனை உள்ளி யுணர்ந்து உறுதி காணுக.

---

640. பொறுமை அமிர்தம் புசித்துப் புனித
மறுமை மருவி மகிழ்வார்—சிறுமைச்
சினமென்னும் தீநஞ்சைத் தீண்டார் தெளிந்த
மனமன்னும் மாட்சி யவர். (ம)

இ—ள்

பொறுமை ஆகிய அமுதத்தைப் பருகி மறுமை நிலையை மருவி மகிழும் மாண்புடையவர் சினம் ஆகிய தீய நஞ்சைக் கனவிலும் அணுகார் என்க.

இனிய அமிர்தம் எனப் பொறுமையையும், கொடிய நஞ்சு எனக் கோபத்தையும் குறித்தது அவற்றின் நீர்மை நிலைகளை உணர்ந்து கொள்ள. அமிர்தம் உண்டவர் இன்பம் மிகவுடைய ராய் நெடிது வாழ்ந்து வருகின்றனர். பொறுமை கொண்ட வரும் அவ்வாறே புகழ் இன்பங்களை மருவி உயர்ந்து வாழ்கின் ருர். நஞ்சைக் குடித்தவர் துயரமாய் நாசத்தை அடைகின்ருர்; அவ்வாறே கோபத்தை மடுத்தவர் ஆபத்தை அடைந்து அவல மாய் அழிந்து போகின்ருர்.

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும். (குறள்,306)

சினத்தின் தீமையைக் குறித்துத் தேவர் இவ்வாறு உணர்த்தியுள்ளார். சேர்ந்தாரைக் கொல்லி என்று கோபத்திற்கு ஒரு பெயரைக் கொடுத்திருக்கிருர். பெயர் சூட்டியுள்ள அழகு உவகையை ஊட்டி வருகிறது. வினையும் விளைவும் வியப்பை விளைத்து நிற்கிறது. உலகத்தில் உள்ள தீ தான் தொட்டதை மட்டும் சுட்டு எரிக்கும்; கோபத்தீ தொடாததையும் அழித்து ஒழிக்கும் எனக் குறித்திருப்பது கூர்ந்து சிந்திக்கத்தக்கது.

தனக்குச் சேமத்துணையாய் நின்று நல்ல உறுதி நலங்களைக் கூறி வரும் உரிமைச் சுற்றத்தையும் இழந்து கோபி கொடுந் துயரங்களை அடைந்து அழிந்து போவான் என்றதனல் கோபத்தின் நாச வேலைகளை நன்கு உணர்ந்து கொள்ளுகிறோம்.

எவ்வழியும் இவ்வாறு அழிதுயரங்களையே செய்யும் வெகுளியை மனிதன் தழுவி அழிவது மாயவியப்பா யுள்ளது.

தனக்கு வருகிற இன்பதுன்பங்கள் எல்லாம் தான் செய்த வினையின் பயனுகவே விளைந்து வருகின்றன. பிறர் இகழ்ந்தாலும் புகழ்ந்தாலும் இன்பம் புரிந்தாலும் துன்பம் செய்தாலும் அவை யாவும் தன்து கருமங்களின் மருமங்களேயாம். இந்த உண்மையை ஒருவன் உணர்ந்து கொண்டால் பிறர் மேல் எந்த வகையிலும் வெகுளாமல் அமைதியாய்ச் சிந்தை அடங்கியிருப்பான். சினந்து சீறும்படியான செயல்களை அயல்கள் செய்தால் அவை தனது வினையின் விளைவுகள் என நினைந்து தெளிந்து கொள்வது சினத்தை நீக்கு வதற்கு ஓர் சிறந்த வழியாம்.

தன்அரு குறுசேய் சிரத்துஒர் அங்குலியால்
  தான்புடைத்து ஒருவன்மீது ஒருவன்
சொன்னமாத் திரத்தின் அவனை அச்சேயும்
  துணிவுகொடு எழுந்தறை குதல்போல்
முன்னவன் விளையாட் டாயஐந் தொழிற்கு
  முன்னிலை யாயசீவரைப் பார்த்து
இன்னல்செய் சாபம் இட்டுமா தவரும்
  என்கொலோ தவம்இழப் பதுவே. [வைராக்கிய தீபம்]

இறைவன் மறைவாய் நின்று வினைப்பயன்களைச் சீவர்களுக்கு ஊட்டிவருகிருன். இந்த இரகசியத்தை உணர்ந்து கொள்ளாமல் தமக்குப் பிறர் பிழை செய்தார் என்று வெகு

ண்டுசபித்துப் பெரியோர்களும் வீணே தங்கள் தவங்களை இழந்து விடுகின்றார்களே! என்று சாந்தலிங்கசுவாமிகள் இங்ஙனம் ஆர்ந்த பரிவோடு வருந்தி இரங்கி யிருக்கிறார்.

பின்னே மறைந்து நின்று தன்தலையில் குட்டினவனை மறந்து விட்டு எதிரே நின்றவனை விரைந்து போய் அடிக்கும் சிறு பிள்ளையைப் போல் உண்மை நிலையை உணர்ந்து கொள்ளாமல் மனிதர் சினந்து சீறுவது புன்மையான நகைப்பாயுள்ளது எனக் குறித்திருக்கும் உவமை கூர்ந்து சிந்திக்க வுரியது.

காய்தறு கண்ணராம் கயவர் கைமிகத்
தீதுறும் வாசகம் செப்பினால் எதிர்
வாய்திற வாமையாம் மௌனம் அன்றிவேறு
ஏதத்தை வெல்வதற்கு இயன்ற செய்கையே. (1)

முனிவெனும் கொடுந்தழல் மூண்ட போழ்ததின்
பனிவரும் தண்புனல் பரவி னாலென
நனிமுகம் மலர்ந்துமா நகைபுரிந்து நல்
இனியசொல் அவர்க்கெதிர் இயம்பல் செய்வனே.

வந்தவர் வாழ்த்தினும் வசை உரைக்கினும்
சந்தனம் பூசினும் தசையைக் கொய்யினும்
முந்துறு வினையினால் மூண்ட தாமெனச்
சிந்தையில் உன்னியான் சினத்தை வெல்வனே.

[பிரபோதசந்திரோதயம்]

பொறுமை என்னும் அருமை நீர்மையாளன் இவ்வாறு பேசியிருக்கிறான். சினத்தை வெல்லுவதற்கு இதில் குறித்துள்ள உபாயங்கள் கூர்ந்து ஓர்ந்து கொள்ளவுரியன.

மதித்திறப் பாரும் இறக்க மதியா
மிதித்திறப் பாரும் இறக்க---மிதித்தேறி
ஈயும் தலைமேல் இருத்தலால் அஃதறிவார்
காயும் கதமின்மை நன்று. [நாலடியார், 61]

பிறர் உன்னை மதித்தாலும் அவமதித்தாலும் அவற்றை ஒரு பொருளாக மதியாதே; சிறிய ஈ கூட உன்தலையில் மிதித்து ஏறுவதை நினைந்து பார்; அவ்வாறு சிந்தனை செய்து எவ்வழியும் சினத்தை ஒழித்து ஒழுகுக என இது உணர்த்தியுள்ளது.

"கொழுங்கனலோ அவிப்பதுதான்
கோபம்எனும் கொழுங்கனலே." (அஞ்ஞவதைப்பரணி)

எனத் தத்துவராயர் இவ்வாறு அறிவுறுத்தி யிருக்கிறார்.

உயிர்க்குக் கொடிய துயரங்களைச் செய்வது ஆதலால் சினத்தை அடக்குவது எவ்வழியும் அவசியமாய் அமைந்தது. வெகுளி நீங்கிய பொழுது அங்கே அரிய பல நன்மைகள் உரிமையோடு தொடர்ந்து ஓங்கி வருகின்றன.

உள்ளிய எல்லாம் உடன்எய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின். (குறள், 309)

தன் உள்ளத்தில் கோபம் கொள்ளாதவன் விரும்பிய செல்வங்களை யெல்லாம் உடனே அடைந்து கொள்ளுகிறான் எனத் தேவர் இங்ஙனம் உறுதி கூறியுள்ளார். இது ஆழ்ந்த கருத்துடையது; மிகவும் ஆய்ந்து சிந்தனை செய்யவுரியது.

கோபம் தீயது; உள்ளத்தைச் சிறுமைப் படுத்தி உயிரைத் தாழ்த்துகிறது; அஃது இல்லாது ஒழியின் சீவன் தெய்வீக நிலையை அடைகிறது; அடையவே எல்லா மகிமைகளும் எளிதே விரைந்து வந்து கைகூடுகின்றன.

"முனியாதார் முன்னிய செய்யும் திரு." (நான்மணி, 40)

கோபம் கொள்ளாதவர் உள்ளியன யாவும் உடனே உவந்து செய்தருளத் திருமகள் எதிர் நோக்கி நிற்கிறாள் என விளம்பி நாகனார் இவ்வாறு விளம்பி யிருக்கிறார்.

கொடிய கோபத்தை ஒழித்தவர் அரிய பேறுகளை யெல்லாம் எளிதே எய்தி இன்பம் உறுகின்றார். இம்மகிமையை மருவி மாண்புடன் வாழுக.

### இவ் அதிகாரத்தின் தொகைக் குறிப்பு.

கோபம் மிகவும் கொடியது.
அறிவு அமைதிகளை அழிப்பது.
துயரங்களை விளைப்பது.
உயிரைப் பாழ்படுத்துவது.
பழி பாவங்களைச் செய்வது.
தீயினும் தீயது.
தீங்குகளே புரிவது.
யாண்டும் ஆபத்தை யுடையது.
அதனை ஒழித்தவர் உயர்ந்தவராவர்.
எல்லா நலங்களையும் எய்தி மகிழுவர்.

௬௪—வது கோபம் முற்றிற்று.

# அறுபத்து ஐந்தாம் அதிகாரம்

## காமம்

அஃதாவது இழிந்த இச்சை. மனிதனை இழி நிலையில் தள்ளி அழி துயர் செய்யும் அவலமுடையது ஆதலால் இதனை ஒழித்து ஒழுக வேண்டும் என உணர்த்துகின்றது. கோபத்தோடு அணுகிய தொடர்புடைமையின் அதன்பின் இது வைக்கப்பட்டது.

641. காமம் உயிரைக் கடைப்படுத்தி என்ஞான்றும்
தீமை அடையத் திருப்புமால்—சேமம்
பெறவிரும்பி னாரப் பிழைபாடு நீங்கி
அறவரென நின்றார் அமர்ந்து. (க)

இ-ள்.

புன்மையான காம இச்சை உயிரை இழிவுபடுத்தி ஈனமுறச் செய்யும்; மேன்மையான இன்பம் பெற விரும்பினார் அப்புன்மை நீங்கிப் புண்ணிய சீலராய் உயர்ந்து கண்ணியம் ஓங்கி விளங்குவர் என்பதாம்

உயிர்வாழ்வு பலவகையான சோதனைகளையுடையது. தீய சூழல்களிலிருந்து தன்னைத் தூயனாக்கிக் கொண்ட போது தான் மனிதன் மேன்மையான மகிமைகள் தோய்ந்து மேலான கதிகளை அடைகின்றான். மாயமயக்குகளுக்கு இடையே மருவிக் கிடத்தலால் சீவர்கள் தூயராய் உயர்தல் அரிய செயலாயுள்ளது.

ஐந்து பொறிகளின் வழியே வாழ்வு நடந்து வருகிறது. மாய மோகங்கள் யாண்டும் நீண்டு நிற்றலால் யாவும் தீய வெறிகளாய்ச் சேர்ந்து திரிகின்றன. புலன்களிலேயே பாய்ந்து புலையாய்த் தோய்ந்து எவ்வழியும் சீவர்கள் இழிந்து வருதலால் புலை வாழ்வே எங்கும் நிலையாய் ஓங்கி வர நேர்ந்தது.

இந்த அவலவாழ்வு இழி பழியுடையது என்று உணர்ந்து உள்ளம் தெளிந்தவர்கள் உறுதி நலங்களை ஓர்ந்து சீலவேலி கோலி மேலே போகிறார்கள்.

மாயமயக்கங்களுள் காமம் மிகவும் தீயது.

உணர்வைச் சிதைத்து உயிர்களுக்குத் துயர்கள் விளைப்பது ஆதலால் இது சீவ விரோதி, தீயபகை என அஞ்ச நேர்ந்தது.

காமம் என்றது இங்கே பெண் ஆசையை.

எல்லா ஆசைகளேயும் பொதுவாக இது குறித்து நிற்பினும் பெண்ணின் விழைவையே சிறப்பாக உணர்த்தி வருகிறது.

விரகம் மதனம் காமக் கவலே
காம நோயின் கட்டுரை ஆகும். (பிங்கலந்தை)

காமத்தை நோய் என்று குறித்து அதன் பரியாய நாமங் களேயும் இது விளக்கியுளது. சுட்டியுள்ள உரைகளால் உயிர் வேதனைகளின் நிலைகளை உணர்ந்து கொள்ளலாம்.

காமம் உயிரைக் கடைப்படுத்தும்.

என்றது காமமோகத்தால் சீவ கோடிகள் தாழ்ந்து இழிந் துள்ள நிலைகளை ஓர்ந்து உணர்ந்து கொள்ள வந்தது. அது ஒரு மையல்; மாயவெறி; தீய மயக்கம்; அந்த மோக வேகத்தில் மனித சமுதாயம் ஏகமாய் உழன்று வருகிறது.

பசி எப்படி சீவர்களுக்கு இயற்கையாய் அமைந்திருக் கிறதோ அப்படியே காமமும் தொடர்ந்திருக்கிறது. ஆனல் அதற்கும் இதற்கும் சிறிது வேறுபாடு உண்டு. மனிதன் பிறந்த போதே தொடர்ந்து இறந்து படும் வரையும் பசி ஒட்டி நிற்கும்; காமம் பதினறுவயதிலிருந்து தொடர்ந்து முதுமையில் கழிந்து போகிறது. கழியினும் விழியளவில் வெதும்பி நிற்கிறது.

இந்தக் காமத்தை நெறி முறையே ஒழுங்கு செய்து கொள் ளவே ஆண்மகன் ஒரு பெண்மகளை மணந்து கொள்ள நேர்ந் தான். மணமகன் மணமகள் என்னும் பேர் மணம் படிந்து வந் துள்ளது. மணத்தல்=கூடி வாழ்தல். இணைந்து பிணைந்துவாழும் கூட்டுறவுக்கு மணம் என்று பெயர் அமைந்திருப்பது நினைந்து சிந்திக்கத்தக்கது. மலரில் மருவியுள்ள வாசனை மணம் என வந்தது. பூவும் மணமும் போல் புருடனும் பூவையும்மேவியுள்ள உண்மையை இது வெளிப்படுத்தியுள்ளது.

தேக போகமாய் அமைந்துள்ள காமம் நேமம் நியதிக ளோடு கலந்து கொள்ள நேர்ந்தது. நெறியோடு நேர்ந்து வரும் அது நல்ல மக்களைப் பயந்து உலக விருத்திக்கு உரிமையாய் நின்றது. காம விழைவிலிருந்தே கருதரிய விளைவுகள் உளவாயின.

இவ்வகையில் செவ்வையாய் நின்று வரும் அளவு காமம் சேமமாய்ச் சிறந்து வரலாயது. உயர்ந்த ஞானமுனிவர்களும் இவ்வாழ்க்கையை உவந்து கொண்டுள்ளனர்.

இந்த நெறியையும் நீதியையும் கடந்து வெறி கொண்டு எழுந்த போது அந்தக் காமம் தீமையாய் ஓங்கித் தீங்குபுரி கின்றது. வழி வழுவியது இழிபழிகளாய் நின்றது.

கொடிய காமத்திற்கு அடிமை ஆயின் அந்த மனிதனிடம் பொல்லாத தீமைகள் எல்லாம் வந்து குடிபுகுந்து கொள்ளுகின்றன. கொள்ளவே நிலைகுலைந்து நெடும்புலைகள் நேர்ந்தன.

கொலைஅஞ்சார் பொய்ந்நாணார் மானமும் ஓம்பார்
களவொன்றோ ஏனையவும் செய்வார் பழியொடு
பாவமிஃ தென்னார் பிறிதுமற் றென்செய்யார்.
காமம் கதுவப் பட்டார். (நீதிநெறிவிளக்கம், 79)

காமம் உள்ளத்தைக் கவர்ந்து கொண்டபோது அந்த மனிதன் இன்னவாறு இழிதீமையாளனாய் அழிவான் என இது உணர்த்தியுள்ளது. ஒரு புலை பல துயர்களை விளைத்து நின்றது.

கொலை பொய் களவு மானக்கேடு பழிபாவம் யாவும் காமிக்கு உறவாம் என்றதனால் அவனது புலையும் நிலையும் பொல்லாத தீமைகளும் நேரே புலனாய் நின்றன.

கடுங்காமம் கொண்டவன் கொடுந்தீமைகள் உடையனாய் நெடுங்கேடுகள் செய்தலால் அவனது வாழ்வு நீசமாய் நாசமடைய நேர்கிறது. இவ்வாறு நாசத்தை விளைத்தலால் காமம் நீசமுடையது என மேலோர் நெஞ்சம் அஞ்ச நேர்ந்தார்.

தீமையுள்ளன யாவையும் தந்திடும்; சிறப்பும்
தோமில் செல்வமும் கெடுக்கும்; நல்லுணர்வினைத் தொலைக்கும்;
ஏமநன்னெறி தடுத்திருள் உய்த்திடும்; இதனால்
காமம் அன்றியே ஒருபகை உண்டுகொல் கருதில். (காந்தம்)

அணங்குநோய்எவர்க்கும்செய்யும்அனங்கனை லலைப்புண்டு ஆவி
உணங்கினர் உள்ளம் செல்லு மிடனறிந்து ஓடிச்செல்லா
குணம்குலன் ஒழுக்கம் குன்றல் கொலைபழி பாவம் பாரா
இணங்குமின் னுயிர்க்கு மாங்கே இறுதிவந் துறுவதெண்ணா.

கள்ளுண்டல் காமம் என்ப கருத்தறை போக்குச் செய்வது
எள்ளுண்ட காமம் போல எண்ணினில் காணில் கேட்கில்

தள்ளுண்ட விடத்தின் நஞ்சம் தலைக்கொண்டால் என்ன ஆங்கே
உள்ளுண்ட உணர்வு போக்காது உண்டபோ தழிக்கும்கள்ளுண்.

காமமே கொலைகட் கெல்லாம் காரணம்; கண்ணோடாத
காமமே களவுக் கெல்லாம் காரணம்; கூற்றம் அஞ்சும்
காமமே கள்ளுண் டற்கும் காரணம்; ஆதலாலே
காமமே நரக பூமி காணியாக் கொடுப்பது என்றான்.
(திருவிளையாடற் புராணம்)

காமத்தின் தீமைகளைக் குறித்து வந்துள்ள இவை இங்கே கூர்ந்து நோக்கி ஓர்ந்து கொள்ளவுரியன. தீய காமத்தால் மனித சமுதாயம் இங்ஙனம் துயருழந்து அழிதலால் அதனை ஒழிந்து நின்றவர் தெளிந்த மேன்மையாளராய் உயர்ந்துவிளங்குகின்றார்.

சேமம் பெறவிரும் பினார் பிழைநீங்கி நின்றார்.

என்றது காமப் பழிநீங்கினாரது காட்சியைக் கருதியுணர வந்தது.

அரிய பேரின்ப நிலையை அடைய விரும்பிய மகான்கள் சிறிய இன்பம் போல் தோன்றிச் சீரழித்து வரும் இந்தக் காமத் தீமையை நீங்கித் தங்களைச் சேமம் செய்து கொண்டு திவ்விய நீர்மையோடு சிறந்து திகழ்கின்றார்.

காமத்தை ஒழித்த அளவு மனிதன் சேமத்தை அடைகிறான்.

பொல்லாத காமப் புலையொழியின் பேரின்பம்
எல்லாம் விளையும் எதிர்.

புல்லிய துன்பம் ஒருவி நல்ல இன்பம் பெறுக.

---

642. புலன்வழி ஓடிப் புலையாடி னார்மேல்
நலனிழந்து நாசமே காண்பார்—நிலைதெளிந்து
பொல்லா நசையைப் புறம்போக்கின் அப்பொழுதே
எல்லா இசையும் எழும். (உ)

இ—ள்

பொறி புலன்களில் வெறியராய் ஓடி உழல்பவர் அரிய நலன்களை இழந்து அவலமே காண்பார்; பொல்லாத நசையை ஒழித்தவர் எல்லா இசைகளையும் எய்தி இன்பம் உறுவர் என்க.

மனதை அடக்கி நெறியே செலுத்தி முறையோடு வாழ்ந்து

வரும் மனிதன் சிறந்தவனாய் உயர்ந்து வருகிறான். மனம்போன படி அலைந்து திரிபவன் இழிந்த விலங்காய்க் கழிந்துபடுகிறான்.

பகுத்து நோக்கும் அறிவு மனிதனுக்கு உரிமையாய் அமைந்திருக்கிறது. நன்மை தீமைகளை நாடி அறிந்து நல்ல வழியில் செல்லவே மனிதன் கடமைப்பட்டிருக்கிறான்.

சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு, (குறள்,422)

மனிதனுடைய நல்ல அறிவுக்குப் பயனைநாயனார் இவ்வாறு அறிவுறுத்தியிருக்கிறார். தீமைகளை நீக்கி நன்மையான வழிகளில் மனத்தைச் செம்மையாகச் செலுத்துவதே அறிவு என்றதனால் அவ்வாறு செய்யாதது அறிவு ஆகாது என்பது பெறப்பட்டது. அறிவின் மேல் வைத்துக் கூறியுள்ள விநயம் நுணுகியுணரவுரியது. அறிவுடைய மனிதனை நேரே நோக்கிக் கூறாமல் அறிவுக்கு இலக்கணத்தை விளக்கியருளினார். இத்தகைய அறிவையுடையவனே அறிஞன்; மற்றவன் மடையனே என்பது உய்த்துணர. இயல்பு குன்றிய பொழுது மனிதன் மாடா யிழிந்து நிற்கிறான். அறிவின் காட்சி அளவே மனிதன் மாட்சி அடைந்து வருகிறான்.

குதிரையை அடக்கி நடத்தும் வீரன் போல மனத்தை வசமா நடத்திவரின் அந்த மனிதனுடைய வாழ்வு மாண்பு சுரந்து மகிமை நிறைந்து புகழும் இன்பமும் பொலிந்து திகழ்கின்றது.

மனம் வேகமாய் எதிலும் விரைந்து செல்லும் இயல்பினது; அதனை நல்ல வழியில் திருப்பிவிடின் நன்மைகள் விளைந்துவரும் ஆதலால் அச்செயல் உயர்ந்த மகிமையாய் வியந்து புகழவந்தது.

"A man's nature runs either to herbs or weeds; therefore let him seasonably water the one, and destroy the other."

(Bacon)

"மனிதனுடைய சுபாவம் நல்லதிலும் செல்லும் கெட்டதிலும் ஓடும்; ஆகவே கெட்டதைத் தடுத்து நல்லவழியில் அதனை அவன் செலுத்தவேண்டும்" என பேக்கன் என்னும் ஆங்கிலப் புலவர் இங்ஙனம் கூறியிருக்கிறார்.

தீது ஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு என்னும் திருக்குறட் கருத்தோடு இது ஒத்திருத்தல் உய்த்துணரத்தக்கது.

நலன் ஒன்றையும் நாடி அடையாமல் புலன்வழியே ஓடி அலேந்தால் அந்த வாழ்வு பழியுடையதாய்ப் பாழ்படுகின்றது. உயர்ந்த குறிக் கோளில்லாதது இழிந்ததாய் அழிந்துபோகிறது.

துன்பத் தொடர்புகள் நீங்கி என்றும் நிலையான இன்ப நலனை அடைய நேர்ந்தவர் புலன்களை அடக்கியே உயர்ந்திருக்கின்றனர். இழிந்த இச்சைகள் ஒழிந்த பொழுதுதான் உயர்ந்த மேன்மைகள் ஒளிசெய்து வருகின்றன.

"புலன் ஐந்து மேயும் பொறி ஐந்தும் நீங்கி
நலமந்த மில்லது ஓர்நாடு புகுவீர்!" (திருவாய்மொழி)

நம்மாழ்வார் இவ்வாறு நம்மை நோக்கிப் பாடியிருக்கிறார்.

"புலன்கள் ஐந்தால் ஆட்டுண்டு போது போக்கிப்
புறம் புறமே திரியாதே போது நெஞ்சே!" (தேவாரம்)

தம் நெஞ்சை நோக்கி அப்பர் இப்படி மறுகியிருக்கிறார்.

"அஞ்சுள சிங்கம் அடவியில் வாழ்வன
அஞ்சும் போய் மேய்ந்ததும் அஞ்சகமே புகும்;
அஞ்சின் உகிரும் எயிறும் அறுத்திட்டால்
எஞ்சாது இறைவனை எய்தலு மாமே." (திருமந்திரம்)

ஐம்புலன்களையும் வலியடக்கி ஒடுக்கிய பொழுதுதான் இன்ப நிலையமான இறைவனை எய்தலாம் எனத் திருமூலர் இங்ஙனம் ஒரு மூல நிலையை உணர்ந்து கூறியுள்ளார்.

"அடற் கரிபோல் ஐம்புலன்களுக் கஞ்சி அழிந்த என்னை
விடற் கரியாய் விட்டிடுதிகண்டாய்! விழுத்தொண்டர்க்கல்லால்
தொடற் கரியாய் சுடர்மா மணியே சுடுதீச் சுழலக்
கடற்கரி தாயெழு நஞ்சமு தாக்கும் கறைக் கண்டனே"
(திருவாசகம்)

புலன்களின் புலை நிலைகளை விளக்கி இறைவனை நோக்கி மாணிக்கவாசகர் இவ்வாறு உருகி உரையாடியிருத்தலால் அவற்றின் அடலும் மிடலும் ஆடலும் அறியலாகும்.

வேட்டைப் புலப்புலையர் மேவாதவண்ணம் மனக்
காட்டைத் திருத்திக் கரைகாண்பது எந்நாளோ?
ஐவரொடுங் கூடாமல் அந்தரங்க சேவைதந்த
தெய்வ அறிவே சிவமே பராபரமே!" (தாயுமானவர்)

புலன்களின் துயரையும் இறைவனது அருளையும் இங்ஙனம் நினைந்து தாயுமானவர் மனம் கரைந்து கூறியுள்ள இதில் அவரது புனிதமான அனுபவ நிலையைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ளுகிறோம்.

"மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேன்." (சிவபுராணம்)

உள்ளம் புலன்வழி இழியின் உயிர் உயர் நிலையை அடைய முடியாது என்பதை இது உணர்த்தி யுள்ளது. அரிய பெரியாருடைய அனுபவ மொழிகள் விழுமிய உண்மைகளை வெளியே தெளிவாக்கி உலகம் உய்ய வந்துள்ளமையால் நாளும் சிந்தனை செய்து நன்கு உணர வுரியன.

"மறம்திகழும் மனம்ஒழித்து வஞ்சம் மாற்றி
ஐம்புலன்கள் அடக்கி இடர்ப்பாரத் துன்பம்
துறந்திருமுப் பொழுதுஏத்தி எல்லை யில்லாத்
தொன் னெறிக்கண் நிலைநின்ற தொண்டர்"
[பெருமாள்திருமொழி]

குலசேகர ஆழ்வார் இவ்வாறு கூறியிருக்கிறார்.

புலன்களை அடக்கிப் பரம சிந்தனையுடன் உயர்ந்த மேன்மையை அடைந்து கொள்பவரே சிறந்த மகான்கள் என்றதனால் வாழ்வின் குறிக்கோளும் பிறப்பின் பேறும் அறிய வந்தன. புல்லிய காம இச்சையை ஒழித்துப் புனிதமான சேம நிலையைப் பெறுவதே மனித வாழ்வின் மருமமாய் மருவியுள்ளது.

பொல்லா நசையைப் புறம்போக்கின் அப்பொழுதே
எல்லா இசையும் எழும்.

அவலமான ஆசைகள் ஒழியின் உள்ளம் தேசடைந்து தெளிகின்றது; தெளியவே உயிர் உயர் நிலைகளை அடைந்துமகிழ்கின்றது. துயரங்கள் யாவும் நீங்கி என்றும் இனியனாய் மனிதன் உய்தி பெற வேண்டின் கொடிய நசைகளைக் கடிது களைந்து முடிவு காண வேண்டும்.

இன்பநலங்கள் விளைய இனிது ஒழுகுக.

643. சிற்றின்ப ஆசை சிறியர் எனத்தேய்த்து
மற்றின்பம் காணுமல் மாய்த்துமே—முற்றும்
இழிதுயரில் ஆழ்த்தி நேர்ஈனப் படுத்தும்
அழிநசை நீக்கி அகல். (௩)

இ-ள்.

சிற்றின்ப ஆசை சிறுமையில் ஆழ்த்திப் பேரின்பத்தை அடைய ஒட்டாமல் பெருங்கேடுகள் செய்யும்; அந்த ஈன இச்சை ஒழிந்து ஞான நிலையில் உயர்ந்து நலம்பல பெறுக என்பதாம்.

உலகில் மனிதன் படுகிற பாடுகள் எல்லாம் அருந்தல் பொருந்தல்களை நோக்கியே. பல சிறுமைகளுக்கு இடையே ஏதோ சிறிது பொறியின்பங்களை நுகர்தலால் அது சிற்றின்பம் என நேர்ந்தது. தேக போகங்களை யெல்லாம் பொதுவாக் குறித்து வரினும் பெண்ணின் போகத்தையே இது சிறப்பாகச் சுட்டியுள்ளது. சிற்றின்பப் பிரியன் என ஒருவனைக் குறித்துச் சொன்னல் அவன் கடுங்காமி, நெடுந்தூர்த்தன் என உலகம் நினைந்து கொள்ளுகிறது.

சிற்றின்ப நிலையில் அழுந்திக்கிடப்பவன் பேரின்ப நலனை இழந்தவன் ஆகின்றன். பொறிபுலன்களை நெறியே அடக்கிப் புனித நிலையில் உயர்ந்த மகான்களே பேரின்பத்தை அடைந்து கொள்ளுகின்றனர். ஊன உடலோடு ஒட்டி ஈன இச்சையால் எழுவது ஆதலால் முன்னது சிறுமையாய் நின்றது. பரிசுத்தமான ஆன்மபோகமாய் மேன்மை சுரந்து வருதலால் பின்னது பேரின்பம் எனப் பெருமைமிகப் பெற்றது.

தெளிந்த மெய்யுணர்வுடையவர் இழிந்ததை இகழ்ந்து விடுத்து உயர்ந்த பேரின்ப நிலையை விழைந்து விரைகின்றனர்.

"தினைத்தனை யுள்ளதோர் பூவினில் தேன் உண்ணுதே
நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்பொழுதும்
அனைத்து எலும்புள்நெக ஆனந்தத் தேன் சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ!"
(திருவாசகம்)

அற்பமான சிற்றின்பத்தில் வீழாதே; என்றும் எவ்வழியும் ஆனந்தமயமான இறைவனுடைய பேரின்ப போகத்தையே தோய்ந்து மகிழுக எனத் தம் மனத்தை நோக்கி மாணிக்க வாசகர்

இவ்வாறு கூறியிருக்கிருர். தெளிந்த ஞானசீலர் இளிந்ததை இகந்து விடுத்து விழுமிய நிலையை விழைந்து கொள்கின்றனர்.

"பழுதுண்டு பாவையர் மோக விகாரப் பரவையிடை
விழுகின்ற பாவிக்கும் தன்தாட்புணையை வியந்தளித்தான்
தொழுகின்ற அன்பர் உளம்களி கூரத் துலங்குமன்றுள்
எழுகின்ற ஆனந்தக் கூத்தன்என் கண்மணி என்அப்பனே."

சிற்றின்பத்தில் வீழ்ந்து இழிந்து போகாமல் பேரின்ப மூர்த்தியான பெருமான் என்னைக் காத்தருளினன் எனத் தாயுமானவர் இங்ஙனம் போற்றியிருக்கிருர். மங்கையரின் மையல் நீங்கினவரே திவ்விய நிலைகளை அடையவுரியவர் என்னும் குறிப்பை இதில் கூர்ந்து ஓர்ந்து கொள்ளுகிறோம்.

பிறந்து மண்மீதில் பிணியே குடிகொண்டு பேரின்பத்தை
மறந்து சிற்றின்பத்தின் மேல்மயலாகிப் புன்மாதருக்குட்
பறந்துழன்றே தடுமாறிப் பொன்தேடிஅப் பாவையர்க்கீந்து
இறந்திடவோ பணித்தாய் இறைவா கச்சி ஏகம்பனே. (1)

காதென்று மூக்கென்று கண்என்று காட்டிஎன் கண்எதிரே
மாதென்று சொல்லி வருமாயை தன்னை மறலிவிட்ட
தூதென்று எண்ணமல் சுகமென்று நாடுமித் துற்புத்தியை
ஏதென்று எடுத்துரைப்பேன் இறைவா கச்சி ஏகம்பனே! (2)

சிற்றின்பத்தின் இழிவுகளை வெளிப்படுத்தி அதனைத் துறந்து உய்யவேண்டும் எனப் பட்டினத்தார் இவ்வாறு பாடியிருக்கிருர். பெரிய துறவி ஆதலால் பெண் போகத்தை இங்ஙனம் எள்ளி இகழ்ந்துள்ளார் என்று எண்ணலாகாது. உண்மை நிலையை உள்ளம் பரிந்து உணர்த்தியுள்ளார்.

நூலினேர் இடையார் திறத்தே நிற்கும்
ஞாலம் தன்னொடும் கூடுவ தில்லையான்;
ஆலியா அழையா அரங்கா! என்று
மாலெழுந் தொழிந்தேன் என்தன் மாலுக்கே. (1)

மாரனார்வரி வெஞ்சிலைக்கு ஆட்செய்யும்
பாரினாரொடும் கூடுவது இல்லையான்;
ஆர மார்வன் அரங்கன் அனந்தன் நல்
நாரணன் நரகாந்தகன் பித்தனே. (பெருமாள் திருமொழி)

பெண் மையல் மண்டிக் காமனுக்கு அடிமைகளாய் உலக மக்கள் கடைப்பட்டுள்ளனர். இழிந்த இந்த மாயமோகிகளோடு நான் யாதும் சேரேன்; பரமனையே கூடிப் பரவசமாயுள்ளேன் என்று குலசேகர ஆழ்வார் இங்ஙனம் கூறியுள்ளார். தமக்கு உரிமையாய் அமைந்துள்ள அரசபோகங்களை யெல்லாம் அடியோடு வெறுத்துப் பரமநீர்மையில் இந்த அரசர்பிரான் திளைத்துள்ளமை இங்கே சிந்தித்து உணரத்தக்கது. நிலையான அதிசய இன்பத்தில் தோய்ந்தவர் புலையான புன்போகங்களை அருவருத்து வெறுத்து அகன்று போகின்றனர்.

சிற்றின்பம் சின்னீர தாயினும் அஃதுற்றார்
மற்றின்பம் யாவையும் கைவிடுப---முற்றுந்தாம்
பேரின்ப மாக்கடல் ஆடுவார் வீழ்பவோ
பாரின்பப் பாழ்ங்கும்பி யில். (நீதிநெறிவிளக்கம், 88)

பேரின்பம் ஆகிய அமுதக்கடலில் திளைப்பவர் சிற்றின்பமாகிய பாழ்ஞ்சேற்றில் வீழார் என இது விளக்கி யுள்ளது.

நித்திய அநித்தியங்களையும் உயர்வு இழிவுகளையும் உய்த்துணர்ந்து தெளிந்து கொள்ளும் ஆற்றல் மனிதனிடம் அமைந்திருக்கிறது. வித்தகமுடைய அந்த விவேகத்தால் மோகமயக்கங்களை வென்று மேலான கதியை அடைந்து கொள்ள வேண்டும். அவ்வாறு பெறவில்லையானல் எவ்வாற்றானும் உய்தியின்றி யாண்டும் அல்லல் அவலங்களே தோய்ந்து அவன் அலமந்து உழலுகின்றான்; உழலவே பிறவிகளிலும் பரிதாபங்களே விரிகின்றன. அரிய வசதிகள் வாய்த்தும் உரிய பயனை எய்தாமல் ஒழிபவர் பெரிய பேதைகளாய்ப் பிழைபட்டுள்ளனர்.

“தெரிவுறு வயதில் வந்த புந்தியால் சித்தம் தன்னைப்
பரிகரி யாது விட்டால் பரிகரிப்பது மற்று எந்நாள்?
விரிவிடம் விடம தன்று; விடயமே விடமாம்; துன்பம்
புரிவிடம் கொல்வது ஓர்மெய் புலன்மறு பிறப்பும் கொல்லும்.”
[வாசிட்டம்]

தெளிந்த அறிவை அடைந்துள்ள மனிதன் இழிந்த இச்சைகளை அடக்கித் தகுந்த பருவத்தில் உயர்ந்து கொள்ளவில்லையானல் பின்பு உய்தி பெறமுடியாது; விடயபோகங்கள் விடத்தினும் கொடியன; ஒரு பிறவியில் பற்றிய நசை பலபிறவிகளிலும் தொடர்ந்துபடுதுயரங்களைவிளைக்கும் எனஇதுஉணர்த்தியுள்ளது.

விடயமே விடமாம் என்றதனால் அதன் கொடுமை தெரிய வந்தது. உயிர்க்கேடு புரிவதை உணர்ந்து விலக வேண்டும்.

பொறி நுகர்ச்சி மனிதனை வெறியனாக்கி விடுகிறது; விடவே அறிவு கேடனாய் அழிவடைய நேர்கின்றான். காம தாபம் ஏம வேதனையாய் இடர் புரிந்து படர் படர்ந்து வருவதை அதனை யுடையவர் நிலைகள் யாண்டும் உணர்த்தியுள்ளன.

"The appetite may sicken, so die." (Shakespeare)

"காம தாபம் நோயாய் வளர்ந்து கொல்லும்" என்னும் இது இங்கே நன்கு அறிய வுரியது.

அழி நசை நீங்கி அகல்.

இழிவான சிற்றின்ப இச்சைகளை ஒழித்து வெற்றி வீரனாய் விளங்கி மேலான கதியை அடைந்து கொள்ளுக என இது விளக்கியுள்ளது. சிறுமை நீங்கிப் பெருமையில் ஓங்குக.

இளிவு நிலையில் இழியாமல் என்றும்
தெளிவில் உயர்க தெளிந்து.

---

644. காதலிபால் நீதியொடு காதல் புரிந்தொழுகின்
காதலன் ஆகிக் கவின்பெறுவாய்— பேதையாய்
வேறு விழைவின் விளிகாமி யாயிழிந்து
மாறு படுவாய் மருண்டு. (ச)

இ-ள்.

முறையே மணந்து கொண்ட மனைவிபால் காதல் புரியின் நீ நல்ல காதலனாய் விளங்கி நிற்பாய்; அல்லாத வேறு மாதரை விழைவின் வீணக்காமியாய் இழிந்து விளிந்து படுவாய் என்க.

அன்பு, காதல், காமம் என்பன பெண் போகங்களின் பாகங்களாய் மேவியுள்ளன. கலவி யின்பம் ஒன்றையே கருதி யிராமல் பலவகைப் பண்புகளும் படிந்து நிலை உயர்ந்துள்ளது அன்பு என வந்தது. தலை சிறந்த குலமக்களிடம் இது குலாவி மிளிர்கிறது. மக்கட் பேறு கருதி மருவி அதனைப் பெற்ற பின் பொறி நுகர்வை ஒருவி உரிமை கூர்ந்து உயர்ந்த பரிசுத்த நிலையில் வாழ்ந்துவரும் சதிபதிகளிடம் நேர்ந்து நிலவும் இது ஆன்ம நேயமாய்ப் பான்மை சுரந்து மேன்மை நிறைந்துள்ளது.

நெறிமுறையே மணந்த மனைவியோடு விழைந்து நுகர்ந்து வரும் உள்ளக் கனிவு காதல் என வந்தது. இது விழுமிய நிலையில் உயரும் பொழுது உழுவலன்பாய் ஒளிபுரிகின்றது.

காமம் என்பது இழிந்த இச்சையில் அழுந்தி உழல்வது.

உத்தமம் மத்திமம் அதமம் என இம்மூன்றும் முறையே கருதப்படும். நிலைமைகள் நினைந்து சிந்திக்க வுரியன.

அன்பன் காதலன் என்னும் அளவில் இன்பபோகங்களை நுகர்ந்து வருபவன் பண்பும் பயனும் படிந்து நன்கு மதிக்கப் படுகின்றான். நெறிமுறை யுடையது நீதியாய் நின்றது.

புனிதமான இந்தப் படிகளைக் கடந்து நசை மீதூர்ந்து பொறிவெறியனாய்த் திரியின் அவன் கழிகாமியாய் இழிவுறு கின்றான். மையல் மயக்கம் வெய்ய துயரமாய் விரிகிறது.

நல்ல அறிவுபடைத்த மனிதன் வரம்புமீறிப் போய்ப் பொல்லாத இச்சையால் புலைபுரிவது அவலக் கவலையாயுள்ளது. அற நெறிபிறழாமல் ஒழுகி வருவதே ஒழுக்கம் என வந்தது. இந்த ஒழுக்கத்தை உயிரினும் ஓம்பவேண்டும் என்று நாயனார் உரிமையோடு போதித்துள்ளார். இவ்வாறு போதித்திருந்தும் அதனைப் பேணி வருபவர் அரியராயிருப்பது அதிசயமாயுள்ளது. உரிய மனைவி வீட்டிலிருந்தும் மதிகேடனாய் ஒருவன் அயல் மனைவியை விழைவது அதிபாதகமாகின்றது.

பல்லார் அறியப் பறைஅறைந்து நாட்கேட்டுக்
கல்யாணம் செய்து கடிபுக்க---மெல்லியற்
காதல் மனையாளும் இல்லாளா என்ஒருவன்
ஏதில் மனையாளை நோக்கு. (நாலடியார், 86)

தன்னுடைய மனைவி தகுதியாய் வீட்டில் இருக்கப் பிற னுடைய மனைவியை விரும்பிப் போகின்றானே அந்த மனிதனது மடத்தனம்தான் என்னே! என்று பண்டைப் புலவர் ஒருவர் இங்ஙனம் பரிந்து வருந்தியிருக்கிறார்.

திருவினும் நல்லாள் மனைக்கிழத்தி ஏனும்
பிறன்மனைக்கே பீடழிந்து நிற்பர்---நறுவிய
வாயின வேனும் உமிழ்ந்து கடுத்தின்னும்
தீய விலங்கிற் சிலர். (நீதிநெறிவிளக்கம், 80)

தன்மனைவி இலட்சுமிபோல் இருந்தாலும் அவளை விட்டு அயலான் மனைவியை விழைந்து இழிந்து போவது ஈன மிருகத்தின் இழி செயல் எனக் குமரகுருபரர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

மனிதன் மதிகெட்டு இழிந்தபொழுது மாடு ஆடு பன்றி என்று இகழப்படுகின்றான். நெறியோடு நிலையில் நிற்கும்வரையுமே தலைமைத் தன்மை நிலைத்து நிற்கிறது. நிலை குலைந்தால் தலையிலிருந்து உதிர்ந்த மயிர்போல் அவன் இழிந்து கழிகிறான்.

"சூட்டுமுகம் திருத்தி வேட்டுநறு நீரின்
மயிரும் சிறகும் செயிரறக் கழீஇக்
கோல்நெய் பூசித் தூய்மையுள் நிறீஇப்
பாலும் சோறும் வாலிதின் ஊட்டினும்
குப்பை கிளைப்புஅருக் கோழி போல்வர்
மக்கள் என்று மதியோர் உரைத்ததைக்
கண்ணில் கண்டேன் என்றுகைந் நெரித்து
ஒண்ணுதல் மாதர் உருகெழு சினத்தள்
தம்மால் வந்த தாங்கரும் வெந்நோய்
தம்மை நோவ தல்லது பிறரை
என்னது நோவல் ஏத முடைத்து" (பெருங்கதை)

தன்னுடைய கணவன் வேறுஒருத்தியை விரும்பி மாறுபாடு புரிந்தான் என்று தெரிந்தபோது பதுமாபதி என்னும் தலைவி இப்படிப் புலந்து வருந்திப் புலம்பி யிருக்கிறாள்.

நல்ல நீராட்டிப் பாலும் சோறும் ஊட்டி இனிது பேணி வரினும் குப்பையைக் கிளைக்கப் போகும் கோழிபோல மக்கள் சிலர் ஈன நிலைகளில் இயல்பாகவே இழிந்துள்ளனர் எனக் கோங்குவேளிர் என்னும் புலவர் திலகர் ஒரு மங்கை வாயிலாக இங்ஙனம் உள்ளம் பரிந்து உரைத்துள்ளது ஈங்கு ஊன்றி நோக்கி உணரவுரியது.

கப்பி கடவதாக் காலைத்தன் வாய்ப்பெயினும்
குப்பை கிளைப்போவாக் கோழிபோல்---மிக்க
கனம்பொதிந்த நூல்விரித்துக் காட்டினும் கீழ்தன்
மனம்புரிந்த வாறே மிகும். (நாலடியார், 341)

நல்ல அறிவுகளை எவ்வளவு போதித்தாலும் தன் மனம் போனபடி இழிவழிகளில் செல்வானே அன்றி உள்ளம் திருந்தி

உயர்ந்து நில்லான் எனக் கீழ்மகனது ஈன நிலையை இது உணர்த்தியுள்ளது. நெறி அழிய நிலை இழிந்தது.

மனிதன் இழிபழக்கங்களில் இழிந்தபொழுது விலங்கு பறவைகளினும் கீழாக இகழ்ந்து பேசநேர்ந்தான். பிழையான வழிகளில் பழகிய பின்பு அவற்றின் பழி நிலைகளை உணர, முடியாமையால் அவன் களி மிகுத்துத் திரிகின்றான்.

இவ் வகையான இளி களிப்பில் வளர்ந்து பலர் கிளர்ந்து நிற்கின்றார். சிறுமைகளைப் பெருமைகளா எண்ணிச் செருக்கி வருவது இழி கூட்டத்தின் இயல்பாயுள்ளது.

"கூத்தியாள் இல்லாதவன் கோமாளி"

என இப்படி ஒரு இழி மொழி பழமொழியாய் இந்த நாட்டில் எழுந்துள்ளது. காமக் களிப்பில் கடையராய் மூழ்கியுள்ளவரது வாயிலிருந்து இது வந்திருக்கிறது.

வேறு விழைவின் விளி காமி.

என்றது மாறு முகம் பாராதே என மதியூட்டி நின்றது.

உரிய மனைவியோடு பிரியமாய் உவந்து வாழ்; வேறே பாராதே; பார்த்தால் பழியும் பகையும் பாவமும் துயரும் வழி வழியே தொடர்ந்து படர்ந்து அடர்ந்து வருத்தும் என்க.

காதல் கடந்து கழிகாமி ஆயினால்
நோதல் தொடர்ந்து வரும்.

ஆதலை அறிந்து நோதலை ஒழிந்து வாழுக.

---

645. மணம்படிந்த காதல் மதிப்பா யமர்ந்து
குணம்படிந் தின்பம் கொடுக்கும்—மணம்படியா
வெங்காமம் உன்னை வெறிபுலையன் ஆக்கியே
மங்காமல் செய்யும் மறு. (ரு)

இ-ள்.

மணம் புரிந்த மனைவியிடம் மருவியகாதல் மதிப்பாய்க் குணம்படிந்து இன்பம் கொடுக்கும்; மணம்படியாத கொடிய காமம் உன்னை வெறிபுலையனாக்கி நெடிய பழியை விளைத்து நீசப் படுத்தும்; அந்த நீசம் படியாமல் நெறியே வாழுக என்பதாம்.

இன்பநுகர்ச்சியில் சீவர்கள் இயல்பாகவே ஆவல் மிகவு டையவர். அந்த நுகர்வு பொறிவெறியாய் நீண்டு நெறிகேடுகள் நேராமல் நியமங்கள் நேர்ந்திருக்கின்றன. மனிதன் விவேக முடையவன் ஆதலால் மோக மயக்கங்களை யோக முயக்கங்க ளாச் செய்து கொண்டான். இல்லறம் என்னும் புனிதநாமத் தால் அந்த மனிதவாழ்வை இனிது நடத்த நேர்ந்தான்.

கலியாணம் செய்து கொண்ட மனைவியோடு மருவிப் போகம் நுகர்ந்து வருவது வாழ்வின் தருமமாய் வாய்ந்து வந் துள்ளது. அன்பு நலம் கனிந்த அந்தத் துணைவியிடம் இன்பநலம் நுகர்வதிலும் நியமங்கள் அமைந்திருக்கின்றன. பிள்ளைப் பேறு கருதி இருவரும் உள்ளம் உவந்து கலந்து அப்பேற்றை அடை ந்து கொள்ளும் பொருட்டு மணந்து கொண்டமையால் நெறி முறை வழுவாமல் விதி நியமங்களோடு ஒழுகிவரும் கடமை விழுமிய உரிமையாய் அமைந்தது.

மங்கையர்க்கு மாதந்தோறும் பூப்பு உண்டாகிறது. உதி ரம் சிறிது வெளி வருதலால் தீட்டு என் நேர்ந்தது. வீட்டுக்கு விலக்கம் என அத்தீட்டு நிலையை இந்நாட்டவர் இங்ஙனம் குறி த்து வந்திருக்கின்றனர். தீண்டாத நிலையில் மூன்று நாளும் தனி யே அவள் ஒதுங்கி யிருக்கிறாள். நான்காவது நாள் நீராடியபின் வீட்டு வேலைக்கு உரியவள் ஆகின்றாள். தீண்டல், தீட்டு, வீட்டு க்கு விலக்கம் என்னும் குறிப்பு மொழிகளால் பூப்பின் நிலை புலனாய் நின்றது. பூத்தாள் புறம் காத்தாள் என்பர்.

மனைக்கு விலக்காய் இருக்கும் பொழுது மனைவியின் முகத்தைக் கணவன் பார்க்கலாகாது. அவளும் முகம் காட்டா மல் ஒதுங்கி யிருப்பது இயல்பு.

"ஆன்ற கற்பினர் பூப்பின் அகன்றுறை
மூன்று நாளும் முகமலர் காட்டலர்;
தோன்ற யாதும் சொலார்புனல் தோய்ந்தபின்
சான்ற காதலர் தம்முகம் நோக்குவார். (1)

புனிதமாநதிப் பூம்புனல் ஆடுநாள்
இனிய காதலர் வேற்றிடம் எய்திடின்
அனைய கேள்வரை அன்பின் மனக்கொடு
பனிவிசும்பில் பரிதியை நோக்குவார்." (காசிகாண்டம்)

பூப்புற்றவர் காப்புற்றுள்ள முறைமையை இவை காட்டி யுள்ளன. இக் காட்சிகள் கருதியுணர வுரியன.

பூத்தல், பூப்பு என இதற்குப் பெயரிட்டிருப்பது பிள்ளைக் கனி வருதற்கு ஏதுவாயிருத்தல் கருதி. கருப்பை மலர்ந்து மக வாகிய கனி இனிது விளைந்து வரும் குறிப்பை இது விநயமாய் விளக்கியுள்ளது. கனி வர வந்தது தனி அமர நேர்ந்தது.

இவ்வாறு பூத்து நீராடியதிலிருந்து பன்னிரண்டு நாள் வரையும் கருவாய்க்கும் காலம் ஆதலால் அது மருவுதற்குரிய பருவமாம். ச, சா, அ, ய, கஉ, கச, கசா, ஆகிய தினங்களில் சேர்ந்தால் ஆண் குழந்தையாம். ரு, எ, கூ, கக, கங, கரு ஆகிய இந்த நாள்களில் கூடினல் பெண் குழந்தையாம். விலக்கு நாள் களை ஒழித்து விதித்த தினங்களிலும் நல்ல ஓரையில் உள்ளம் தூய்மையாய்க் கலந்தால் உயர்ந்த குலமகன் பிறந்தருளுவான்.

பூத்துநீராடு நாள்முதல் நூலோர் புகன்றநாள் புணர்வது விதியாம்;
வாய்த்தநற் கருப்பம் எய்திய ஞான்றும் புரந்தரன் மகளிருக் களித்த
ஏற்றரும் வரத்தால் புணர்தலாம் இறந்தோர்க் கிருங்கடன் கழிப்பிய [ஞான்றும்
நீத்தநற் பகலும் பருவம் ஓரைந்தும் புணர்ந்திடில் நிரயம் எய்துவரால்.

விதித்த நாட்களினும் தம்மனை அலது பிறர்நலம் விழைந்திட லாகா;
மதுக்குழல் மகளிர் பூத்தநாள் கழிப்பின் மற்ற ஈராறு நாட்களினும்
உதித்திடும் புதல்வன் இரட்டையாம் நாளின் ஒற்றைநாள் இவைகளில் [மணப்பின்
புதுத்தளி ரழகு கவற்றுமா மேனிப் புதல்வியை இனிதினில் பெறுவார்.

மூலமும் மகமும் முயங்குதல் ஆகா; மொய்கதிர்த் திங்களங் கடவுள் [ம்;
சாலநன் குறுநாள் புருடனுள் மணப்பின் தகைமைசால் நன்மகவுயிர்க்கு
வேல்புரை தடங்கட் கன்னியைப் பொருள்கொண்டு அளித்தவன் மலப் [புழு விழுங்கி
ஓலொடும் வெருவ மறலிதன் தூதர் உரப்ப வெந்நரகிடை உழப்பான்.
(காசிகாண்டம்)

காமநுகர்வு எவ்வாறன நெறி நியமங்களையுடையது என் பது இவற்றல் ஓரளவு உணர்ந்து கொள்ளலாம். நல்ல மக்களை உலகிற்கு நல்கும் உயர்ந்த குறிக்கோளை யுடையது ஆதலால் ஆண்பெண் சேர்க்கை விதிமுறைகளாய் மாண்பமைந்துவந்தது.

பிறந்த நாளில் அட்டமியில் பேசும் ஆறும் பக்கத்தில்
சிறந்த பதினன்காம் திதியில்பருவம்தன்னில் துவாதசியில்

மறந்தும்மாதர்முகிழ்முலையில்தழுவலாகாதுஎனவகுத்தார்
அறங்கூர்தரும நூல்வகுத்த மனுவைமுதலாம் அறிவினரே.
(கூர்மபுராணம்)

மனைவியோடு மருவக் கூடாத தினங்களை இது விளக்கியுள்ளது.

இவ்வாறு விதிநியமங்களைத் தழுவி ஒழுகிவருபவர் விழுமிய நீரராய் மேலான நிலைகளை அடைகின்றனர். கட்டுப்பாடும், வரம்பும், ஒழுங்கும் மனிதனை மாண்புறுத்தி வருகின்றன.

உரிமையான ஒழுங்குகள் குறைந்த பொழுது மனிதன் சிறுமை அடைய நேர்கின்றான். நேரவே அங்கே அல்லல்கள் பெருகி அழிதுயர்கள் சேர்கின்றன. நல்ல அறிவு வாய்ந்திருந் தும் நெறிமுறைகளில் நில்லாமல் பொறி வெறியனாய்ப் பொல் லாத வழிகளில் செல்லின் இழிமிருகமாய் மனிதன் எள்ளப் படுகின்றான். நேமங்கள் குன்றிய அளவில் சேமங்கள் குன்றின.

வெங்காமம் உன்னை வெறிபுலையன் ஆக்கும்.

என்றது எல்லைமீறிய காமத்தின் இழிநிலையும் அழிதுயரும் தெரிய வந்தது. உரியமனைவியிடம் முறைமையோடு மருவிவரு வது இனியகாதலாய் இசை பெற்றுள்ளது; இம்முறை கடந்து அயலே ஓடின் அது கொடிய காமமாய் வசையுற்று நெடிய துயரங்களை விளைத்து விடுகின்றது.

தன்னுடைய சொந்த மனைவி வீட்டிலிருந்தும் பிறனுடைய மனைவியை ஒருவன் விழைந்து செல்வது எவ்வளவு நிந்தை! எத் துணை மடமை! உய்த்துணர வேண்டும். தன் மனையாளை அய லான் இச்சித்து நோக்கினால் எந்த மனிதனும் உள்ளம் கொதிக் கின்றான்; இந்த அனுபவம் இருந்தும் ஒரு சிறிதும் உணராமல் ஊனமாய் ஈனம்புரியப் போவது இழிபழிக்கும் அழிதுயர்க்கும் போன படியாம். கேடு தெரியாமல் கூடி அழிகின்றார்.

நல்ல ஒழுக்கங்களைப் பழகி நெறிமுறையே வாழாமல் பொறிவெறிகளில் புலையாடியுழல்வது இந்நாளில் யாண்டும் நிலை யாய் நீண்டு நிலவுகின்றது. காமக்களிப்பிலேயே கண்ணும் கருத்துமாய் ஓடி மனிதஇனம் மண்ணாய் மடிந்து வருகிறது.

பேசும் படக்காட்சி பேய்க்காட்சி யாய்ப்பெருகி
நீசமடக் காட்சிகளாய் நீண்டுளவே---நாசம்

படிந்து வருவதைப் பார்த்துக் களித்து
மடிந்து படுதல் மடம்.

இதனை ஈண்டு நினைந்து சிந்திக்க வேண்டும்.

காமவெறிகளை விரித்துக் காட்டித் தங்கள் சேமலாபங்களை விளைத்து நீட்டிப் பலவகையிலும் பலர் இந்நாட்டை நிலைகுலைத்து வருகின்றனர். சீரழிவு ஓரளவு தெரிந்தாலும் பேரிழவிலேயே பெரு மையலாய் மக்கள் பெருகி உழலுகின்றனர். சினிமாவில் மனித இனம் மாவாய் வருகின்றது. உண்மை உணர்வு தெளிந்து உய்தி பெற ஆண்டவன் தான் அருள் புரிய வேண்டும்.

---

646. காமம் கடிந்த அளவே கதிநிலையின்
சேமம் படிந்து திகழுமால்—நேமம்
படியாத வாழ்வு பழிதுயர மாகி
விடியா தழிந்து விடும். (சு)

இ-ள்.

உள்ளத்தில் காமஇச்சை ஒழிந்த அளவே உயிர் சேமம் அடைந்து சிறந்து விளங்கும்; நல்ல நெறி நியமம் தோயாத வாழ்வு பொல்லாத பழிதுயரமாயிழிந்து அழிந்து போம் என்க.

உயிர்க்கு இனிய நிலையமாய் அமைந்துள்ள உடலை யாவரும் உரிமையோடு பேணி வருகின்றனர். இந்த உடம்பைப் பெற்ற பயன் உயிர் துயர் நீங்கி உயர்ந்த கதியை அடைந்து கொள்வதேயாம். சீலம் தவம் விரதம் முதலிய நெறி நியமங்களோடு பழகி வரும் அளவே விழுமிய மேன்மைகள் மருவி வருகின்றன. புலன்களை அடக்கி இனிய நீர்மையோடு நியமமாய் வாழ்ந்து வருபவர் அரியபல நன்மைகளை அடைந்துகொள்ளுகின்றனர். நெறி நியமமான அந்த வாழ்வை இழந்தவர் உயர்ந்த பேறுகளை அடைய முடியாமல் இழிந்து நிற்கின்றனர்.

அருந்தல் பொருந்தல்களாகிய தேக போகங்களையே விழைந்து நுகர்ந்து பல காலமும் பழகி வந்திருத்தலால் அந்த வாசனை வயமாய் உழந்து சுழன்று சீவர்கள் ஊசலாடி வருகின்றனர். பாச பந்தங்கள் பழிவழிகளில் செலுத்தி அழிதுயர்களைச் செய்கின்றன. வெய்ய மையல்களாய் அவை விரிந்துள்ளன.

விடய இச்சைகள் கொடிய துன்பங்களையே விளைத்து வருதலால் அவற்றை நஞ்சுகள் என அஞ்சி நெஞ்சை நெறியே செலுத்தி உயர்ந்த குறிக் கோளுடன் மேலோர் ஒழுகி வருகின்றனர். அதனால் அரிய கதிகளை அடைந்து கொள்ளுகின்றனர்.

சிறிது வழுவினும் பழி துயரங்கள் படியும் ஆதலால் ஒழுக்கத்தை உயிரினும் இனிமையாக உரிமையாடு அவர் பேணி உயர்கின்றனர். நெறிமுறைகள் நிலைத்துவரும் அளவு பெருமைகள் தழைத்து வருகின்றன. ஒரு முறை தவறினால் பல காலமும் அவலமடைய நேரும் ஆதலால் நெறி பிறழாமல் நெஞ்சைக் கவலையோடு காத்து அஞ்சு புலன்களையும் அஞ்சி என்றும் விழிப்புடன் அவர் மேலேறிப் போகின்றார்.

அயல் எங்கும் தீ மண்டி எரிகிறது; அதன் மேலே ஒரு சிறிய பாலம் அமைந்துள்ளது; அதன் நடுவே நடந்து செல்பவர் எவ்வளவு எச்சரிக்கையாய்ச் செல்வாரோ அவ்வளவு விழிப்போடு வெவ்விய உலக மையல்களைக் கடந்து செல்லுகின்ற உத்தமரே திவ்விய மகிமைகளை அடைந்து கொள்ளுகின்றனர்.

"ஏறுமயிர்ப்பாலம் உணர்வு இந்தவிடயங்கள் நெருப்
பாறுஎனவும் நன்றாய் அறிந்தேன் பராபரமே."

இந்திரிய போகங்கள் நெருப்பாறு; மெய்யறிவு மயிர்ப்பாலம்; அந்த மெல்லிய பாலத்தின் வழியே வழுவாமல் நடந்து கடந்தவர் பேரின்ப நிலையை அடைந்து கொள்கின்றனர்; வழுவினவர் அழி துயரங்களில் வீழ்ந்து அவலமாய் அழிந்துபோகின்றனர். அவ்வாறு நழுவி விழாமல் விழுமிய வழியே சென்று முத்தித்தலத்தை அடையும்படி செய்தருள் என இறைவனை நோக்கித் தாயுமானவர் இங்ஙனம் உருகி வேண்டியிருக்கின்றார்.

நெருப்பாற்றை மயிர்ப்பாலத்தால் கடந்ததுபோல்

என்னும் பழமொழியால் உலக மையல்களைக் கடந்து முடிவு காண்பது எவ்வளவு அருமை என்பது எளிதே தெளிவாம்.

"தனியனேன் பெரும்பிறவிப் பௌவப் தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றுஒன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னும் காலால்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு

இனியென்னே உய்யுமாறு என்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை
முனைவனே முதலந்தம் இல்லா மல்லற்
கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்கனேற்கே.”

(திருவாசகம்)

பிறவியாகிய பெருங்கடலில் வீழ்ந்து மங்கையர் மோகமாகிய கடும் புயலால் மோதுண்டு காமம் ஆகிய சுறவின் வாயில் அகப்பட்டு இனி உய்தியில்லை என்று தவித்துக் கிடந்த என்னைக் கருணையினால் எடுத்துக் கரை சேர்த்தாய்! புண்ணிய மூர்த்தியே! என்று கண்ணுதற் கடவுளை எண்ணி மாணிக்கவாசகர் இவ்வாறு கண்ணீர் சொரிந்து கரைந்து பாடியிருக்கிறார். கடலில் வாழுகிற பிராணிகளுள் சுறாமீன் மிகவும் கொடியது. தன் பால் சிக்கியவரைக் கொன்று தீர்ப்பது. அது போல் பிறவிக் கடலில் காமம் மிகவும் அஞ்சத்தக்கது என்பது ஈண்டு நெஞ்சறிய வந்தது.

காமத்தைச் சுறவு என்று குறித்தது தன் வாயில் அகப்பட்டவர் மீள முடியாமல் மாளுதல் கருதி. உள்ளத்தில் காமத்தை வென்றவர் உலகத்தை யெல்லாம் ஒருங்கே வென்றவராவர்.

அதனைக் கடந்து உய்வது அரிய செயல்; தெய்வத் திருவருளினாலேதான் அதனை வென்று மேலே போக முடியும் என்பதை மேலோருடைய அனுபவங்கள் நன்கு விளக்கியுள்ளன.

“சீறிஎதிர் ஏறிவரு சமனொடும் போரினைச்
செய்தவனை வெற்றி பெறுவன்;
சிம்மமேல் கொண்டெனது சிந்தையின் படி அதைச்
செல்ல வசமாக்கி விடுவன்;
வீறுபெறு குலகிரிகள் எட்டையும் செண்டென
வினோதமா விட் டாடுவன்;
வேலையை அகட்டினில் அடக்கிவட அனலையும்
மென்மூச்சினால் அவிப்பன்;
வேறுபல வும்புரிவன் என்னும்அதி வல்லவரும்
மின்னார்கள் மோக வலையில்
வீக்குண்டு போக்கின்றி நிலைகுலைந் தழிவரேல்
விமல நின் அரு ளன்றியே

தேறலின் சொல்மாதர் காமவெங் கனலினைச்
சிந்தையில் அவிக்க வலரோ?
செந்திநகர் அன்பரது சிந்தைமறை அந்தமுறை
சிந்தைமகிழ் கந்த மணியே!"

இதனைச் சிந்தனை செய்து தெளிக.

காமத்தை வெல்வது எவ்வளவு கடினம்! அதனை வென்றவர் எத்துணைப் பெரியர்! என்பதை இதனால் உய்த்துணர்ந்து கொள்கிறோம். அதிசய அற்புதங்களைச் செய்ய வல்லவரும் காமத்தின் வசத்தராய் இழிந்து படுவர் என்றதனால் அதன் வெய்யமையலும் வேக மோகமும் வியந்து சிந்திக்க வந்தன.

பெண்பால் இன்பத்தைப் பிறவிகள் தோறும் பெரு நசையாய் நுகர்ந்து வந்துள்ளமையால் அந்தச் சென்ம வாசனை எவரையும் தன் வசப்படுத்தித் தாழ்த்தி வீழ்த்தி வருகின்றது.

"மண்ணாசை தன்னில் பொருளாசையின் மாய வாழ்க்கைப்
பெண்ணாசை நீங்கல் எளிதோ பெரியோர் தமக்கும்."
(கந்தபுராணம்)

அரிய பெரியோர்க்கும் காமத்தைக் கடப்பது பெரிதும் அரிதாம் என இது குறித்துள்ளது. இவ்வாறான காமத் தீமையைக் கடந் தவரே அதிசய வீரர்; அற்புத வெற்றியாளர்; அவரே சேமமாய்ப் பேரின்பத்தை அடைகின்றனர்.

---

647. சீலம் செறிந்த தெளிவினரே ஆனாலும்
கோல மகளிர் குழாம்புகின்—சாலவே
உள்ளம் குழைவர் உருகாதோ வெண்ணெய்தீ
உள்ள இடம்சார்ந் துறின். (எ)

இ-ள்

உயர்ந்த ஒழுக்கம் நிறைந்து உள்ளம் தெளிந்தவரே எனினும் அழகிய மங்கையர் குழுவில் கூடிப் பழகின் வழுவி இழிவர்; தீ அருகே வெண்ணெய் சேரின் இயல்பாகவே உருகிப் போதல் போல் அவர் அருகிப் போவர் என்க.

இது, பெண்களோடு நெருங்கிப் பழகுவது பிழை என்கின்றது.

தேக போகங்களுள் பெண்போகம் பெரிதும் மனிதனை

மயக்கியுள்ளது. அந்த மயக்கத்துள் மயங்கி உயங்கி எவ்வழி யும் தியங்கி உலகம் யாண்டும் இயங்கி வருகிறது.

"தையலார் மையல் நோயால் தன்மதி இழந்து வையம்
உய்யலாம் வழிஒன் றின்றி உழல்கின்றது ஒழிவில்காலம்
மெய்யறி வமுதம் மாந்தி மேவிய மையல் மாய்ந்து
பொய்யெலாம் தெளிந்த போதே புனித பேரின்பம் எய்தும்."

என்னும் இது இங்கே கூர்ந்து சிந்திக்கத்தக்கது.

உண்மையான உணர்வு உதயமான பொழுதுதான் புன்மை யான இழிவுகள் நீங்கி மனிதன் மேலான நிலையை அடைய நேர்கின்றான். உத்தம கதி சித்த சுத்தியால் வருகின்றது.

உயர்ந்த மேன்மைகள் யாவும் சிறந்த பான்மைகளால் விளைந்து வருகின்றன. நெறிமுறையான கட்டுப்பாடுகள் மனித வாழ்வைப் புனித நிலையில் உயர்த்தி யருள்கின்றன. பயிரை வேலியால் காப்பதுபோல் சீல வேலியால் உயிரை மேலோர் பேணி வருகின்றனர். காப்பின் அளவு கதி விளைகின்றது.

தரும நீர்மைகள் தோய்ந்த மேலான ஒழுக்கத்திற்கு சீலம் என்று பெயர். பண்பு படிந்து பான்மை சுரந்து இவ்வாறு மேன்மையில் உயர்ந்திருந்தாலும் தருண மங்கையர்களோடு பழக நேரின் உள்ளம் தளர்ந்து எள்ளலுற நேரும்.

பெண்களைக் கண்டபொழுது ஆண்களுக்கும், ஆண்களைக் கண்டபோது பெண்களுக்கும் இயல்பாகவே மகிழ்ச்சியும் காதலும் மருவி எழுகின்றன. இருபாலாரும் ஒருவரை ஒருவர் உவந்து விழி நோக்கிலேயே களி பூத்து வருவது இயற்கையின் விசித்திரமாய் ஒளி பூத்து வருகின்றது.

பெண் மயில் அருகே நின்றால் ஆண்மயில் களிமிகுத்து ஆடுகின்றது. பெண்கள் கண்கள் காண ஆண்கள் தங்கள் பெருமைகளைப் பிலுக்கிக் காட்டி வெளியே மினுக்கி வருவது உலகக் காட்சிகளில் யாண்டும் பெருகி வருகிறது.

"பெண் மயக்கு பெரிய மயக்கு"

என்பது பழமொழி. தையலார் மையலில் இவ்வையம் மறுகி யிழிந்துள்ள நிலைமையை இம்முதுமொழி மதிதெளிய விளக்கியுள்ளது. மாய மயக்கிகள் என அவர் மருவி யுள்ளனர்.

"உண்மயக்கு அனைவர்க்கும் மும்மை உண்டதில்
திண்மயக்கு ஒன்றுண்டு தெரியக் கேட்டிரால்
மண்மயக்கு இரணிய மயக்கு நீங்கினும்
பெண்மயக்கு அரிததில் பிழைத்து நீங்கலே."
(திருக்கழுக்குன்றப்புராணம்)

மண் பொன் பெண் என்னும் மூன்றுவகை மயக்கங்கள் மனிதசமுதாயத்தைப் பற்றி நிற்கின்றன. முன்உள்ள மண் பொன் ஆசைகள் நீங்கி உய்யினும் பெண்ணின் மையலை நீங்கி உய்வது பெரிதும் அரிதாம் என இது குறித்துள்ளது.

கருணைப் பிரகாசர் என்பவர் சிவப்பிரகாச சுவாமிகளுடைய தம்பி. பெரியவர் துறவு நிலையை மருவியிருந்தமையால் இளையவருடைய மன நிலையை அறியவிரும்பி அண்ணுமலை ரெட்டியார் என்னும் நண்பர் அண்ணவைப் போல் துறவினை மேற்கொள்ளாமல் "தாங்கள் மணம் புரிந்து கொள்ள வேண்டும்" என்று உரிமையுடன் வேண்டினர். அவ்வேண்டுகோளுக்கு அவர் விநயமாய்ப் பதில் உரைத்தார். நல்லகவிஞர் ஆதலால் கவியிலேயே பதில் கூறியது உவகை சுரந்து வந்தது. அயலே வருவது காண்க.

"நாணரி என்பதை நாரி என்றுரைத்திடும் நசையால்
வேணு வானது வளைந்துபோய்ப் புகுந்தது வென்றால்
காண லாவதோர் உருவமெய்ந் நாரியைக் கண்டால்
பூணுவார் மயல் காளையர் என்பதும் புதிதோ?"
(கருணைப்பிரகாசர்)

வில்லின் நாணுக்கு நாரி என்று ஒரு பெயர். நாரி என்பது பெண்ணுக்கு இயல்பான பெயர் ஆதலால் அந்தப் பேர்மேல் உள்ள பேராசையால் மூங்கிலும் தலை வணங்கி வளைந்து நிற்கிறது; ஆகவே மங்கையர்பால் மையல் பூண்டு மயங்கியிருப்பது மனிதர்க்கு இயல்பேயாம் எனக் குறித்துத் தம் உள்ளக் கருத்தை இங்ஙனம் அவர் உரைத்திருக்கிறார்.

காமக் களிப்பில் மனித இனம் மருண்டு கிடப்பது அனுபவ விநோதமா யுள்ளது. சிந்தனை செய்யுந்தோறும் அதிசய விந்தையாய் விரிந்து அரிவையர் நிலையை விளக்கி நிற்கிறது.

"பைந்தொடியார் ஆசைநோய் கெம்பீர
மனிதரையும் பதுமம் தன்னை

மூர்திரவிக் கதிர்போல மிளிர்விக்கும்
கனலிடியின் முனைக்கூர் வாளும்
வெந்தவிருப்புப் பொறியும் எனக்கொடிய
மனவேட்கை மேரு ஒத்த
சுந்தரஞானியர் தீரர் சூரரை எல்லாம்
இமைப்பில் துரும்பு செய்யும்.'' (வாசிட்டம்)

இந்தப் பாசுரத்தில் அமைந்துள்ள கருத்துகளையும் குறிப்புகளையும் கூர்ந்து ஓர்ந்து கொள்ள வேண்டும்.

சூரியன் எதிரே தாமரை தானாகவே விரிவதுபோல் நாரியர் எதிரே நரர்களுடைய உள்ளங்கள் உருகி நிற்கின்றன. அரிய பெரிய ஞானிகளையும் காம ஆசை துரும்பு செய்யும் என்றதனால் அதனது வேகமும் விறலும் அறியலாகும்.

பெண் மையல் இவ்வாறு மண் மையலாய் மருவியுள்ளமையால் அந்தப் பொல்லாத மாய மயக்கத்திலிருந்து விலகி உய்பவரே மேலான நிலையினை அடைய நேர்கின்றனர். அவரோடு நெருங்கிப் பழகின் எவரையும் ஒழுக்கத்தைக் கெடுத்து அது இழுக்கத்தை விளைத்து விடும்.

வெண்ணெய் தீ உறின் உருகாதோ?

என்றது பெண்ணோடு நெருங்கிப் பழகும் ஆணின் நிலை தெரிய வந்தது. விரத ஒழுக்கங்களால் உள்ளம் திடமாய் எவ்வளவு உறுதியுடையனாயிருந்தாலும் மங்கையர் குழுவில் உறவாடிப் பழகிவரின் அவன் நெறியுடையனாய் நிலைத்து நிற்க முடியாது; நிலை குலைந்து வழுவி இழிவான் என்பதை உவமை நன்கு உணர்த்தி நின்றது. பேசிப் பழகுவது பிழையாய் முடிகின்றது.

பகர்ச்சி மடவார் பயிலநோன் பாற்றல்
திகழ்ச்சி தருநெஞ்சத் திட்பம்---நெகிழ்ச்சி
பெறும்பூரிக் கின்றமுலைப் பேதாய்! பலகால்
எறும்பூரக் கற்குழியு மே. (நன்னெறி, 23)

தவத்தால் உரம்பெற்றுச் சிறந்த நெஞ்சும் மகளிரோடு நெருங்கிப் பழக நேரின் நெகிழ்ந்து இழிந்து போம் என இது குறித்துள்ளது. குறிப்பு மொழி கூர்ந்து சிந்திக்க வுரியது.

விசுவாமித்திரர் பெருந்தவமுடையவர். உலக போகங்களை யெல்லாம் அறவே துறந்து நெடுங்காலம் கடுந்தவம் புரிந்து வந்த அவர் ஒருநாள் திலோத்தமையைக் கண்டார்; உள்ளம் உருகினர். அரிய தவ நிலைகள் யாவும் மறந்து அவளோடு மருவிக் காம போகத்தில் மூழ்கிக் கிடந்தார்; பின்பு தேறி உய்ந்தாலும் நேர்ந்த பிழையை நினைந்து நெஞ்சு உளைந்து நின்றார். காமத்தாலும் கோபத்தாலும் பலமுறையும் அவர் தவத்தை இழந்து தவித்திருக்கிறார். அந்தத் தவிப்பை அவருடைய வாய்மொழிகள் பல வழிகளிலும் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளன.

தான் செயகின்ற வேள்வியை அரக்கர் வந்து கெடுத்துப் போகின்றார்; அந்த இடையூறுகளை நீக்கித் தன் யாகத்தைப் பாதுகாத்தருள் என்று தசரத மன்னனிடம் அவர் வந்து வேண்டி நின்றார். வேண்டுகோளில் அவரது நிலை அறிய வந்தன.

"தவம் செய்வோர்கள் வெருவரச் சென்று அடைகாம
வெகுளி என நிருதர் இடை விலக்காவண்ணம்
செருமுகத்துக் காத்தி!"

என்று இப்படி வார்த்தையாடி வேண்டியிருக்கிறார். காமத்தாலும் வெகுளியாலும் அவர் நிலை குலைந்து நொந்திருத்தலை இந்த அனுபவமான உவமானங்கள் உலகறியச் செய்துள்ளன.

மகா தவசியாகிய கோசிகரையும் நிலைகுலைத்துள்ளமையால் காமம் எவ்வளவு கொடியது! அதனை எவ்வாறு மனிதன் அஞ்சித் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும் என்னும் உறுதி நிலைகளை இங்கே ஊன்றி உணர்ந்து கொள்கிறோம்.

---

648. ஓதிப் பலமுன் உதயற் குணர்த்தியும்
மாதுமணி மேகலைமேல் மையலாய்—கோதுமிகக்
கொண்டு மடிந்தான் கொடுங்காமம் மண்டினல்
கண்டறிவார் யாரே கதி. (அ)

இ—ள்

உதய குமாரனுக்கு எவ்வளவோ நீதிகளைப் போதித்தும் மணிமேகலை மேல் மையலாய் மூண்டு புகுந்து அவன் மாண்டு மடிந்தான்; கொடிய காமம் மண்டினல் அறிவோடு நின்று யாரும் கதி காண முடியாது என்பதாம்.

தீய இச்சைகள் மாய மயக்கங்களாய் மனிதரை மாய்த்து வருகின்றன. காமதாபம் நெஞ்சில் மீறிய பொழுது அறிவு அழிந்து போகிறது; போகவே வெறி கொண்ட பேயராய் மனிதர் நெறியழிந்து நிலை குலைந்து அலைய நேர்கின்றனர்.

கள் உண்ட வெறியினும் காம வெறி மிகவும் கொடியது. அந்தக் குடிவெறி மதியைக் கெடுத்து மண்ணில் கிடத்தும்; இந்தக் கொடு வெறி உயிரைச் சூறையாடித் துயரில் வீழ்த்தும். தன்னை உண்ட பொழுதுதான் அது உள்ளத்தை மயக்கும்; பெண்ணைக் கண்டபொழுதும், காணாமல் கருதியபோதும் இது உள்ளத்தை உருக்கி உயிரைத் தகிக்கும்.

கண்டதோர் நறவமே காமமே என
எண்டரு தீப்பொருள் இருமைத்து என்பரால்
உண்டுழி அழிக்கும்ஒன்று உணர்வை உள்ளமேல்
கொண்டுழி உயிரையும் கொல்லும் ஒன்றரோ. (1)

உள்ளினும் சுட்டிடும் உணரும் கேள்வியில்
கொள்ளினும் சுட்டிடும் குறுகி மற்றதைத்
தள்ளினும் சுட்டிடும் தன்மை ஈதினால்
கள்ளினும் கொடியது காமத் தீயதே. (கந்தபுராணம்)

காமத்தின் தீமையை இவை காட்டியுள்ளன. கள்ளினும் கொடியது எனக் காரணங்களை விளக்கி உணர்த்தியிருக்கும் உண்மையை நுண்மையாக ஊன்றி உணர்ந்து கொள்ள வேண்டும்.

காம தாபம் நெஞ்சில் புகுந்தால் காற்றில் அகப்பட்ட பஞ்சுபோல மனிதன் நிலை குலைந்து படாதபாடுகள் படுகிறான். கருதிய மங்கையை மருவி மகிழ அவாவி வெறிகொண்டு திரிகிறான். நோதல் பல உழந்து சாதலையும் நேர்கின்றான். எவ்வளவு உணர்வு நலங்களைப் போதித்தாலும் உள்ளம் தெளியாமல் காம மயக்கத்தில் மாண்டு மடிந்தவர் பலர். சிறந்த வீரர்களையும் உயர்ந்த மதிமான்களையும் காமம் எளிதே விழுங்கி வருதலால் அதன் அதிசய ஆற்றல் அளவிடலரியதாய்த் துதிகொண்டுள்ளது.

உதயன் மையலாய் மடிந்தான்.

காமதாபத்தால் மக்கள் படும் பரிதாப நிலைக்கு உரிய ஓர் சான்றாய் ஈண்டு இது உணர வந்தது. உதயகுமரன் என்பவன் சோழ மன்னனுடைய மகன். நல்ல அழகன். ஒரு நாள் மணி

மேகலையைக் கண்டான்; காதல் மீக்கொண்டான். பேரழகுடைய அப் பருவமங்கை உலக வாழ்வை வெறுத்துத் துறவு நிலையில் உள்ளம் பதிந்து நின்றுள் ஆதலால் அரசகுமாரனுடைய இச்சைக்கு இசையாமல் அறிவு நலங்கள்கூறி இதமாய் ஒதுங்கி யிருந்தாள். இவன் விடாமல் தொடர்ந்து அவளை விழைந்து வந்தான். துறவிகள் வாசம் செய்கிற அழகிய சோலையுள் தனியே ஒரு ஆச்சிரமத்தில் அவள் தங்கி யிருந்தாள்; அங்கே இவன் சென்றுன். வெளியே எங்கும் எளிதில் செல்லாத இராசகுமாரன் காம வெறியால் எதையும் கருதாமல் ஒளிவாய் எவ்வழியும் கடந்து அன்று விரைந்து போனுன்.

"சிறையும் உண்டோ செழும்புனல் மிக்குழீஇ
நிறையும் உண்டோ காமம் காழ்கொளின்
செவ்வியள் ஆயின்என் செவ்வியள் ஆகென
வவ்விய நெஞ்சமொடு அகல்வோன்" (மணிமேகலை

உள்ளத்தே காமவெறி கொண்ட உதயன் மணிமேகலையை நாடிச்சென்ற நிலையைச் சாத்தனுர் இங்ஙனம் வார்த்துக் காட்டியிருக்கிறுர். வெள்ளம் கரையை உடைத்து வெளியே விரைந்து போனதுபோல் இவன் நிறை கடந்து சென்றுன் என்றதனல் நிலைமை நீர்மைகளைக் கூர்மையாக உணர்ந்து கொள்ளுகிறேம். மாலையில்போய் அச் சோலையுள் புகுந்தான். மணிமேகலையை அணுகி மயலோடு நின்றுன். மன்னன் மகனைக் கண்டதும் அவள் மறுகி இரங்கி மதிநலம் உரைத்தாள். இழிந்த இச்சையை ஒழித்துவிடுக; ஊன உடலின் நசையால் ஈன வசையே விளையும்; இளமையும் எழிலும் விரைவில் மாறும். அழகி என்று மயங்குவது அவலமேயாம். பெண்மயக்கு என்பது கண் மயக்கே.

"பூவினும் சாந்தினும் புலால் மறைத்து யாத்துத்
தூசினும் மணியினும் தொல்லோர் வகுத்த
வஞ்சம் தெரியாய் மன்னவன் மகனே!" (மணிமேகலை)

என இவனது நெஞ்சம் தெளிய அவள் நீதிகள் புகன்று அயலகன்றுள். இவன் மயலோடு மீண்டான். மீண்டவன் இரவு கண் உறக்கமின்றிக் கடுந்துயருழந்தான். நடுச் சாமத்தில் எழுந்தான். அந்த அழகியை எப்படியாவது தழுவி மகிழவேண்டும் என்று களி மீதூர்ந்து விரைந்து வந்தான். இடையே அங்கு

மறைந்திருந்த காஞ்சனன் என்னும் விஞ்சையன் தனது மனைவியை நாடி வருகிற சோரன் என்று மாறாக எண்ணி வெகுண்டு பாய்ந்து இவனை வெட்டி வீழ்த்தினான். பரிதாபமாய் மாண்ட இவனது முடிவு நாடெங்கும் நெடிய கவலையாய் நீண்டது. காம தாபம் பழிகேடுகளை விளைத்து அழி துயர் செய்யும் என்பதை உலகம் காண இவன் உணர்த்தி நின்றான்.

காமம் மண்டினால் கதி கண்டார் யாரே?

அறிவைப் பாழாக்கிக் காம வெறி அதோ கதியில் ஆழ்த்தும் ஆதலால் உயர் கதிகள் யாதும் காணமுடியாமல் மனிதன் பேதையாய் இழிந்து பெருந்துயரமாய் அழிந்து போகிறான். காம தாபம் உள்ளத்தைப் பற்றிக் கொள்ளுதலால் உயிர் கொடிய வேதனைகளை அடைகின்றது.

அம்பும் அழலும் அவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறம்சுடும்---வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலால் காமம்
அவற்றினும் அஞ்சப் படும். (1)

ஊருள் எழுந்த உருகெழு செந்தீக்கு
நீருட் குளித்தும் உயலாகும்---நீருட்
குளிப்பினும் காமம் சுடுமே குன்றேறி
ஒளிப்பினும் காமம் சுடும். (நாலடியார்)

காமத் தீ உள்ளே மண்டி எழுந்தால் அந்த மனிதன் எந்த வகையிலும் உய்யமுடியாமல் எவ்வழியும் அவலமாய்த் தவிப்பான் என்பதை இவை சுவையாய் உணர்த்தியுள்ளன.

தேமிடை நாவல் வேலிச் செழுமணற் குவாலும் குன்றும்
பூமிடை தடமும் காவும் புக்கவர்க்கு அரணம் ஆகா;
தாமுடை மனமும் கண்ணும் நிறைவும் தம்பால ஆகா;
காமுடை மனத்தி னார்கட்கு யாருளர் களைகண் ஆவார்?
[சூளாமணி]

எண்ணம தலாமை பண்ணும்; இற்பிறப் பிடிய நூறும்;
மண்ணிய புகழை மாய்க்கும்; வரும்பழி வளர்க்கும்; மானத்
திண்மையை உடைக்கும்; ஆண்மைதிருவொடு சிதைக்கும்சிந்தை
கண்ணொடு கலக்கும் மற்றிக் கடைப்படு காமம் என்றான்.
[யசோதரகாவியம்]

சான்ருேர் உவப்பத் தனிநின்று பழிப்ப காணூர்;
ஆன்ருங் கமைந்த குரவர்மொழி கோட லீயார்;
வான்தாங்கி நின்ற புகழ்மாசு படுப்பர் காமன்
தான்ருங்கி விட்ட கணைமெய்ப்படு மாயினக்கால்.

[வளையாபதி]

காமம் கதுவிய பொழுது யாதொரு நிலையுமின்றி அவல மாய்ப் பழி துயரங்களிலிழிந்து மனிதன் பதைத்து உழலுவான் என்பதை இவற்ருல் உணர்ந்து கொள்ளுகிருேம். வைய மைய லாயுள்ள வெய்ய காமம் கடிந்து உய்யவேண்டும்.

---

649. மிகப்பகையை வென்றுயர்ந்த வேல்வீரர் எல்லாம்
அகப்பகையாம் காமம்வீழ்ந் தாழ்ந்தார்—அகப்பகையை
வென்ருன் ஒருவனே வீராதி வீரனென
நின்ருன் உயர்ந்து நிலத்து. (சு)

இ—ள்

புறப் பகைகளை வென்ற பெரிய போர் வீரர்களும அகப் பகையாகிய காமத்தில் சிக்கிக் கடையராய் அழிந்தார்; கொடிய இந்தக் காமத்தை வென்றவனே அதிசய வெற்றியுடைய வீராதி வீரனாய் உலகம் துதிசெய்து புகழ உயர்ந்து விளங்குவான் என்க.

தேக போகங்களை நச்சி உழலுவது சீவர்களுடைய இயல் பாய் அமைந்துள்ளது. அவற்றுள் காம இச்சை எவ்வழியும் வெவ்விய நிலையில் விரிந்து நிற்கிறது. உருவெடுத்த உயிரினங்கள் எல்லாம் காமச் சுவையில் ஆழ்ந்து களித்து வருவதைக் கண் கூடாய்ப் பார்த்து வருகிருேம். மிருகம் பறவை முதலிய எந்தப் பிராணிகளும் இந்த மயக்கில் இழிந்து திரிகின்றன. சின்ன ஊர்க்குருவிகளும் இன்ன வகையில் என்ன பாடுகள் படுகின் றன! பெண்பாலும் ஆண்பாலும் காமபோகத்தில் கண்பாட ழிந்து மண்பால் உழந்து வருவதைக் கருதியுணருந்தோறும் வியப்பும் நகைப்பும் விளைந்து வருகின்றன. பேரின்ப நிலையை அறவே மறந்து பாரின்பங்களில் ஓரின்பமே பேரின்பமாகப் பேணி மயங்கி யாவரும் யாண்டும் ஓவாமல் உழந்து காமமே ஏமமாய்க் களித்துக் கலித்துக் கதியின்றி உழலுகின்றனர்.

தேவரும் இந்தச் சுவையில் சிந்தை பறிபோய்த் தெருமந்து திரிகின்றனர். இந்திரனும் சந்திரனும் இதில் இழிந்து பழியடைந் துள்ளனர். எவரையும் விடாமல் காமம் கைப்பற்றி நிற்றலால் அதனைக்கடந்துசெல்வது அதிசயமுத்தியாய்த் துதிசெய்யவந்தது.

“ஒத்தேறும் உருவமில்லாப் பிரமம் ஒன்று
மே ஒழிய உருவம் உள்ளார்
எத்தேவ ராயினும்ஓர் பூங்கணையால்
தம் போதம் எல்லாம் நீங்கி
மத்தேறி உடைதயிர்போல் மனம்சுழன்று
செயல் மறந்து மடவாராசைப்
பித்தேறி இதமுரைத்தப் பேதையர்க்கும்
பேதையராய்ப் பின்செல் வாரால். (1)

அலைஏறும் வாரிதிசூழ் அம்புவியில்
என்னை வெல்வார் ஆரே? செந்தீ
உலைஏறு மெழுகெனமுத் தேவரும் பூங்
கணைக்கு ஆற்ருது உருகி வெள்ளி
மலைஏறினன் ஒருவன் கடல்ஏறி
னன் ஒருவன் மறைந்து விண்ணின்
தலைஏறினன் ஒருவன் ஆயினும் போய்
இன்னமங்குத் தவிர்ந்தார் கொல்லோ? (2)

வேதாவும் முகம் வெளுத்து விண்டுவும் மார்
பகம் சிவந்து விடைவல்லோனும்
பாதாதி கேசாந்தம் பாதியுடல்
கறுத்துவச்ர பாணி வேந்தும்
போதாமல் முகத்திருகண் புறத்தும் ஓர்
ஆயிரங்கண் புகுதப் பெற்றது
ஏதால்? என்கணை துரக்கில் ஈடுபடார்
எவர்? எவரே இலக்காகாரே? (3)

வேதமுத லாகிய எண்ணெண் கலையும்
வெண்கலைமான் வியந்து கேட்க
ஓதியுணர்ந்தும் பிறருக் குரைத்து முயர்
பெரியோர்க்கும் உள விவேகம்

காதளவும் அடர்ந்துகுழை கடந்து குமிழ்
மறிந்து பொருங் கயலைச் சீறும்
பேதையர்கட் கணைபாயும் அவ்வளவே
அல்லாது பின்னும் உண்டோ? (4)

செங்குமுத வாயதரச் சேயிழையார்
நேயம் எவர் திறம்ப லாவார்?
அங்கவர்தம் பார்வையினல் ஆர்க்குமனம்
கரைந்துருகாது? அதுவுமன்றி
இங்கெனது பேர்ஞாலத்து எவ்வளவுண்டு
அவ்வளவும் எவரே மாயக்
கங்குல்விடிந் திருள்கழித்துக் கண்ணும் விழித்
துணர்விதெனக் காண வல்லார்?" (5)

(மெய்ஞ்ஞான விளக்கம்)

மோகன் என்னும் மன்னன் எதிரே நின்று காமன் இன்ன வாறு கூறியிருக்கிறான். "அருவமான அந்த ஒரு பரம்பொருளைத் தவிர உருவமுடைய எவரையும் நான் அடக்கியுள்ளேன். என்னுடைய ஒரு பூங்கணையால் அகில வுலகங்களும் மயலுழந்து கிடக்கின்றன. எனது சேனை ஆகிய பெண்கள் கண்களால் நோக்கிய அளவிலேயே ஆடவர் எவரும் பாடழிந்து பரிசு குலைந்து சூறுவளியில் அகப்பட்ட இலவம் பஞ்சு போல் நெஞ்சு சுழன்று நிலை தடுமாறி உழலுகின்றனர். தையலார் மையலில் வையம் மட்டுமன்று வானமும் நொய்யதாயிழிந்துள்ளது. தேவ தேவரும் என் வசமாய் அடங்கியிருக்கின்றனர். தன் தேகத்தில் ஒரு பாகத்தையே பெண்ணுக்குக் கொடுத்துச் சிவன் நாளும் கண்டு களித்து வருகிறான். தையல் பாகன், மாதொரு பங்கன், பெண்மை பாதியன் என்னும் பெயர்களால் இவ் வுண்மையை நன்கு உணர்ந்து கொள்ளலாம். மங்கையைப் பாகத்தில் அரன் வைத்திருத்தல் போல் அரி ஆகத்தில் வைத்துள்ளான். திருமகளிடம் பெருமால் கொண்டுள்ளமையால் திருமால் என்று அவனுக்கு ஒரு பெயரும் வந்தது. தேவ தேவருமே இவ்வாறு பெண் ஆவலில் பெருகியிருத்தலால் மண்ணில் வாழும் மானிடர் மையல் நோயால் மறுகியுழல்வதை உரை செய்ய வேண்டுமோ? அரிய பல கலைகளையும் பயின்று தெளிந்து பெரிய மேதைகளான சகல

கலா வல்லவர்களும் அறிவு முழுவதும் பறிபோய் அரிவையர் ஆசையில் பேதைகளாய் இழிந்துள்ளனர். நான் இருக்கும் வரையும் அறிவு தெளிந்து நெறியே ஒழுகி எவனும் உயர்கதியைக் காண முடியாது" எனத் தனது வீரப் பிரதாபத்தை விரித்துக் காமன் இப்படிப் பேசியிருக்கிறன். பாசுரங்களில் பதிந்துள்ள பொருள்களைக் கூர்ந்து ஓர்ந்து உணர்ந்து கொள்ள வேண்டும். பெண்மையிடம் ஆண்மை பெரு மோகமாய் மயங்கி உயங்கி யுள்ள உண்மையை எண்மையாக இனிது விளக்கியிருக்கிறன்.

"மத்து ஏறி உடைதயிர் போல் மனம் சுழன்று" என்றது காமப் பித்து ஏறிய பொழுது மனிதர் படும் இழி நிலையை விழி தெரிய விளக்கியது. மாயவெறி யாவரையும் பேயராக்கியுளது.

பல்லாயிரம் பகைவர்களை ஏக காலத்தில் வெல்ல வல்ல வீரரும் காமத்தின் எதிரே எளிதே தாழ்ந்து வறிதே வீழ்ந்துள் ளனர். இராவணன் அதிசய வீரன். அமரர் குலத்தையும் அசுரர் குழுவையும் ஒருங்கே வென்று மூவகை உலகங்களையும் ஏக போகமாய் ஆண்டு வந்தவன். ஒரு நாள் சீதையைக் கண்டான். காம நோய் கொண்டான். உருகி மறுகித் தனது பெருமிதங்க ளெல்லாம் ஒருங்கே இழந்து அடியோடு அழிந்தான்.

உண்ணுதே உயிர்உண்ணு ஒருநஞ்சும்
 சனகிஎனும் பெருநஞ்சு உன்னைக்
கண்ணாலே நோக்கவே போக்கியதே
 உயிர் நீயும் களப்பட்டாயே
எண்ணுதேன் எண்ணியசொல் இன்றினித்தான்
 எண்ணுதியோ? எண்ணில் ஆற்றல்
அண்ணுவோ! அண்ணுவோ! அசுரர்கள்தம்
 பிரளயமே அமரர் கூற்றே! (1)

போர்மகளைக் கலைமகளைப் புகழ்மகளைத்
 தழுவியகை பொறுமை கூரச்
சீர்மகளைத் திருமகளைத் தேவர்க்கும்
 தெரிவரிய தெய்வக் கற்பின்
பேர்மகளைத் தழுவுவான் உயிர் கொடுத்துப்
 பழிகொண்ட பித்தா பின்னைப்
பார்மகளைத் தழுவினையே திசையானைப்
 பணையிறுத்த பணைத்த மார்பால். (இராமாயணம்)

இராவணன் இராமனேடு போராடி ரணகளத்தில் இறந்து பட்டபொழுது விபீடணன் இப்படிப் புலம்பி அழுதிருக்கிறான்.

உரைகளில் மருவியுள்ள உணர்ச்சிகளையும் பொருள் நயங்களையும் ஊன்றி உணர்ந்து கொள்ள வேண்டும். பாடல்களை இசையோடு பாடி உணரின் அரிய பல சுவைகளை நுகரலாகும். ஈசன் கயிலையைப் பெயர்த்து எடுத்துஅமரர் முதல் யாவரையும்அடக்கி யாண்டும் வென்றி வீரனாய் ஆண்டு வந்தவன் காம ஆசையால் யாவும் பாழாய்க் குலத்தோடு நாசமாய்ப் போயிருக்கிறான்.

இதனால் அதன் மாய மயக்கும் தீய திறனும் தெரியலாகும்.

வென்றான் ஒருவனே வீராதி வீரன்.

அகப் பகையாகிய காமத்தை வென்றவனே அற்புத வீரன் ஆகின்றான். அரிய பல வீரர்களையும் எளிதே வென்று வெளியே விடாமல் மென்று தின்றுவரும் காமத்தை முழுதும் வென்றவன் என்றும் நித்திய முத்தனாய் நிலவி நிற்கின்றான்.

"நெறி நின்று பொறிகள் ஐந்தும் வென்றவன்" என அனுமான் இப்படி வீர விருது பெற்று விளங்குகின்றான். காமனை வென்று நித்திய பிரமச்சாரியாய் நிலவியுள்ள இவனை இராமனும் வியந்து போற்றி யுள்ளான். பொல்லாத காம இச்சையை அடக்கினவனிடம் எல்லா மேன்மைகளும் ஒருங்கே வந்து சேருகின்றன. அதிசயமான அற்புத ஆற்றல் அவன்பால் என்றும் ஒளி வீசி நிற்கின்றது. இந்திரியத்தை அடக்கினவனை இந்திராதி தேவர்களும் திசை நோக்கித் தொழுகின்றார். ஞான தீரன் என வானும் வையமும் அவனை வாழ்த்தி வருகின்றன.

"மாரனை வென்று வீரன் ஆகிக்
குற்றம் மூன்றும் முற்ற அறுக்கும்" (மணிமேகலை)

நற்றவன் எனப் புத்தரை இவ்வாறு முத்தர்கள் போற்றி யுள்ளனர். காமனை வெல்வது அரிய செயல் ஆதலால் அது பெரிய வெற்றியாய்ப் பேச நேர்ந்தது. அரியதைச் செய்தவர் பெரிய மகிமைகளை உரிமையாகப் பெற்று என்றும் உலக சோதிகளாய் ஒளி புரிந்து உலாவி வருகின்றனர்.

காமம் கடிந்த அளவு சேமம் படிந்து வருகிறது.

650. உள்ளத்தே காமம் ஒழியின் உயரின்ப
வெள்ளத்தே மேவி விளங்குவாய்—உள்ளத்துள்
காமப் புலேகள் கவிந்திருக்கும் அவ்வளவும்
ஈமப் புகைகள் எழும். (ய)

இ-ள்.

அகத்தே காம இச்சை ஒழியின் அளவிடலரிய மகிமைகளோடு உயர் பேரின்பங்களை நீ அடைந்து விளங்குவாய்; உள்ளத்தில் காமப் புலேகள் கதுவி யிருந்தால் பிறவித் துன்பங்கள் பெருகி யாண்டும் ஈமப் புகைகளைக் காண்பாய் என்க.

பிறந்து வளர்ந்து முதிர்ந்து இறந்து போவதே சீவர்களுடைய இயல்பாயுள்ளது. தோன்றி மறைந்து போகின்ற இந்த மாய வாழ்வு ஓயாமல் சுழன்று வருகிறது. பிறவியில் துயரங்களே பெருகி யிருக்கின்றன. கருவாய்த் தோன்றியதிலிருந்து பின்பு உருவொழிந்து போகும் வரையும் அல்லல்களே அடர்ந்து நிற்றலால் பிறவி பெருந் தொல்லை என நேர்ந்தது. எவ்வழியும் யாண்டும் துன்பங்களே தொடர்ந் துள்ளமையால் பிறவி நீங்கி உய்வதே பேரின்பமாயது. பிறப்புக்கு வித்து ஆசை ஆதலால் அந்த அவா அறவே அழிந்தபோதுதான் பிறவி ஒழிந்துபோகிறது. பிறவிக்கு மூலகாரணமான அது இருக்கும் வரையும் பிறப்பும் இறப்பும் விடாமல் பெருகி வருகின்றன.

அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து. (குறள், 361)

ஆசையே பிறவிக்கு வித்து; அதனை ஒழித்து உய்ய வேண்டும் எனத் தேவர் இங்ஙனம் உணர்த்தி யிருக்கிறார்.

பிறவியை வேரறுக்க வேண்டின் அவாவைத் தூரறுக்க வேண்டும். அவா ஒழிந்தவர் அதிசய மகான்கள் ஆகின்றார். நீச ஆசை நீங்கினவர் ஈசனை எதிரே காண்கின்றார்.

"கருமுதல் தொடங்கிப் பெருநாள் எல்லாம்
காமம் வெகுளி கழிபெரும் பொய்எனும்
தூய்மையில் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை
அரிதின் இகழ்ந்து போக்கிப் பொருதிறன்
மையிருள் நிறத்து மதனுடை அடுசினத்து
ஐவகைக் கடாவும் யாப்பவிழ்த் தகற்றி

அன்புகொடு மெழுகி அருள்விளக்கு ஏற்றித்
துன்ப இருளைத் துரந்து முன்புற
மெய்எனும் விதானம் விரித்து நொய்ய
கீழ்மையில் தொடர்ந்து கிடந்தஎன் சிந்தைப்
பாழுறை உனக்குப் பள்ளியறை ஆக்கிச்
சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவிசு
எந்தைநீ இருக்க விட்டனன் இந்த
நெடுநில வளாகமும் அடுகதிர் வானமும்
அடையப் பரந்த ஆதி வெள்ளத்து
நுரைஎனச் சிதறி இருசுடர் மிதப்ப
வரைபறித் தியங்கு மாருதம் கடுப்ப
மாலும் பிரமனும் முதலிய வானவர்
காலம் இதுவெனக் கலங்கா நின்றுழி
மற்றவர் உய்யப் பற்றிய புணையாய்
மிகநனி மிதந்த புகலி நாயக!
அருள்நனி சுரக்கும் பிரளய விடங்கநின்
செல்வச் சிலம்பு மெல்லென மிழற்ற
அமையாக் காட்சி இமையக்
கொழுந்தையும் உடனே கொண்டிங்கு
எழுந்தருளத் தகும் எம்பெரு மானே." (பட்டணத்தார்)

காமம் வெகுளி முதலிய தீய அழுக்குகளை நீக்கி என் உள்ளத்தைத் தூய பூந்தவிசு ஆக உனக்கு அமைத்துள்ளேன்; எம்பெருமானே! எழுந்தருளியிரு எனப் பரமனை நோக்கிப் பட்டினத்து அடிகள் இவ்வாறு உருகி வேண்டியிருக்கிறார். உரைகளை ஊன்றி உணர்ந்து உறுதி நலங்களை ஓர்ந்து கொள்ளுக.

"வாய்மைஎனும் ஒருதெய்வ மணிவிளக்கு என் இதய
மனையகத்து ஏற்றி நசையாம்
வாதம்அணுகாமல் உயர் மாதவம் எனும்கிருதம்
வற்றுமலே நிறைத்துத்
தீமை அஞ்ஞானமாம் வல்லிருள் அகற்றிஅருள்
சேராத காமாதிகள்
திடுக்கிட்டு நெஞ்சம் துடித்தோட நின்னருட்
செவ்வேல் எடுத்து மாட்டி
தூய்மைபொறை சாந்தம்அருள் அன்பறிவு சீலமாம்
சுகுண அரியணையில் உனது

தொல்லைமறை முடிவினுறை செல்வமல ரடிகண்டு
தொண்டனேன் மகிழ்வது என்றோ?
சேய்மையாய் அண்மையாய் உயிரினுக்கு உயிரதாய்த்
திகழ்கின்ற ஞான ஒளியே!
செந்திநகர் அன்பரது சிந்தைமறை அந்தமுறை
சிந்தைமகிழ் கந்த மணியே.''

காமம் முதலிய தீமைகளை நீக்கி உள்ளத்தைத் தூய்மை செய்த பொழுதுதான் தெய்வத் திருவருள் எய்தி உய்ய முடியும் என இது உணர்த்தி யுள்ளது. உருவகங்களுடைய பொருள் நயங்களைக் கருதி யுணர்வது பெரிதும் நன்மையாம்.

உள்ளம் காமம் ஒழியின் இன்ப வெள்ளம் பொழியும்.

என்றது துன்ப வெள்ளம் ஆகிய அத் தீமை ஒழிந்த பொழுது எவ்வழியும் இன்ப வெள்ளம் பெருகி எழும் என்பது தெளிய வந்தது. காமம் தீராது நின்றால் தீரா இடும்பைகள் ஆறாய் அடர்ந்து ஆடலுடன் தொடர்ந்து வரும் என்க.

காமப் புலைகள் இருக்கும் அளவும்
ஈமப் புகைகள் எழும்.

நெஞ்சில் காமம் இருக்கும் வரையும் எந்த மனிதனுக்கும் பிறவித் துயரம் நீங்காது. பிறந்து இறந்து உயிரினங்கள் ஓயாமல் சுழன்றே வரும். இறந்துபட்ட போதெல்லாம் சுட்டு எரித்த புகை வானை முட்டி யாண்டும் நீண்டு நிற்கும் ஆதலால் ஈமப் புகைகள் எழும் என அந் நிலைமையை விழி தெரிய இது விளக்கி நின்றது. ஈமம் = சுடுகாடு. காமம் எவ்வழியும் தீமையாய்த் தீங்கே விளைக்கும். அந்த மாய வெறியை மருவாமல் தூயனாய் ஒழுகி வரின் அந்த வாழ்வு அந்தமில் இன்பத்தை அடைந்து விளங்கும்.

என்றும் குன்றாத ஆனந்த நிலையை நேர்ந்தவர் காமத்தைக் கடுமையா அஞ்சிச் சேமத்தை நாடித் துறந்து செல்கின்றனர். பெண் இன்பம் ஒளிந்த அளவு பேரின்பம் விளைந்து வருகிறது. மங்கையர் மயல் மாதவர்க்குக் கடுந்திகிலை விளைத்து வருதலால் அதன் நெடுந்திறலை விளக்கி அடுந்துயரைத் துலக்கி நின்றது.

"முத்தனைய மூரலும் பவளவாய் இன்சொலும்
முகத்திலகு பசுமஞ்சளும்
மூர்ச்சிக்க விரகசன் னதமேற்ற இருகும்ப
முலையின்மணி மாலைநால
வைத்தெமை மயக்கிஇரு கண்வலையை வீசியே
மாயா விலாச மோக
வாரிதியில் ஆழ்த்திடும் பாழான சிற்றிடை
மடந்தையர்கள் சிற்றின்பமோ
புத்தமிர்த போகம் புசித்துவிழி இமையாத
பொன்னாட்டும் வந்தது என்றால்
போராட்ட மல்லவோ பேரின்ப முத்திஇப்
பூமியில் இருந்து காண
எத்தனை விகாதம்வரும் என்றுசுகர் சென்றநெறி
இவ்வுலகம் அறியாததோ?
இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிராகி
எங்கும்நிறை கின்ற பொருளே." (தாயுமானவர்)

மடந்தையர் சிற்றின்பம் சுவர்க்கத்தையும் கவர்ந்திருத்தலால் அதனைக் கடந்து பேரின்பத்தை அடைவது பெரிய போராட்டமாகவே பெருகி நிற்கிறது. உலக மையலில் இருந்து கொண்டு அதனை அடைய முடியாதென்று கருதியே சுகமுனிவர் விரைந்து துறந்து போய்த் துறவு வழியை விழிதெரிய ஒளி செய்து வைத்தார் எனத் தாயுமானவர் இவ்வாறு தெளிவாக உரைத்திருக்கிறார்.

மருவிய மையல் நீங்கி வையம் உய்ய வேண்டும்.

## இவ் அதிகாரத்தின் தொகைப் பொருள்.

காமம் மிகவும் தீமை யுடையது.
மாய மயக்கமாய் மறுகச் செய்வது.
சிற்றின்ப ஆசை சிறுமைப் படுத்தும்.
நெறிமுறை திறம்பின் நெடுந்துயர் ஆகும்.
மணம் படிந்தது குணம் படிந்துவரும்.
இழி நசை பழிதுயர் தரும்.
பெண்களோடு பழகின் பிழையே விழையும்.
கழிபடர் காமம் அழி கேடாகும்.
அதனை வென்றவன் அதிசய வீரன்.
உள்ளத்தில் காமம் ஒழியின் உயர்பேரின்பமாம்.

௲௫௱௬-வது காமம் முற்றிற்று.

# அறுபத்து ஆறும் அதிகாரம்

## கரவு

அஃதாவது உள்ளம் கள்ளமா யுழலுதல். இந்த நெஞ்சக் கரவு மனிதனை இழிநிலையில் தாழ்த்தும் ஆதலால் இதனைக் கடிந்து ஒழுகுவது உயர்ந்த நன்மையாம். காமம் போல் களவும் தீமை யுடையது என்பது தெரிய அதன்பின் இது வைக்கப்பட்டது.

651. நெஞ்சம் கரவாய் நெடிது பழகிவரின்
வஞ்சன் எனவே வசைவளரும்—தஞ்சமென
யாரும் அவனை அணுகார் அவமதிப்பே
சேரும் பெரிதாய்ச் செறிந்து. (க)

இ-ள்.

ஒருவன் நெஞ்சம் கரவாய்ப் பழகிவரின் வஞ்சகன் என்னும் பழிவரும்; அவனை எவரும் மதியார்; எவ்வழியும் அவமதிப்பாய் இழிந்து தளர்ந்து அவன் கழிந்து தொலைவான் என்க.

ஒருவனுடைய உயர்வுக்கும் தாழ்வுக்கும் அவன் உள்ளமே காரணமாயுள்ளது. உள்ளுதல் நினைத்தல் எண்ணுதல் சிந்தித்தல் என்னும் அந்தரங்க வினைகளால் மனிதனுடைய அறிவு நிலைகள் தெரிய வருகின்றன. சிந்தனைகளை உயர்ந்த குறிக்கோள்களில் செலுத்தி வரும்பொழுது அந்த மனிதன் சிறந்த மேலோனாய் விளங்கி நிற்கிறான். அரிய உன்னத நிலைகளை யெல்லாம் நல்ல உள்ளம் எளிதே அடைந்து கொள்கிறது. எவ்வழியும் விழுமிய நீர்மையோடு தழுவிவரின் அதுஎழுமையும் இன்பம் சுரந்துவரும்.

அற்புத சித்திகளையுடைய அத்தகைய உத்தம உள்ளத்தைக் கள்ளம் கபடு முதலிய இழிவுகளால் பழுது படுத்திவரின் அந்த மனித வாழ்வு பழிபடர்ந்து படர்கள் தொடர்ந்து பாழ்படுகின்றது. மனம் பழுதாக மனித இனம் பாழாகின்றது.

வஞ்சகம் சூது கபடு முதலிய புன்மைகளால் நெஞ்சம் புலையுறுகின்றது. உறவே தலைமையான நிலைமைகள் குன்றித் தாழ்ந்து படுகின்றது. கரவு என்னும் சொல் களவு பொய் வஞ்சகங்களைக் குறித்து வருதலால் அதனையுடையவரது இழிவு தெரியலாம். சூது படியத் தீதுகள் படிகின்றன.

நேர்மை நல்ல நீர்மையாய்ச் சீர்மை தருகின்றது.

கரவு பொல்லாத புன்மையாய்ப் புலைபுரிகின்றது.

உயர்ந்தோர் மேலோர் என ஒளிபுரிந்துள்ளவர் எவரும் சிறந்த தன்மைகளி னாலேயே செழித்து ஓங்கி யிருக்கின்றனர்.

உள்ளத்தில் கரவுடையவர் இழிந்தவராய்க் கழிந்தே ஒழிந்துள்ளனர். வஞ்சகன், கபடன், குடிலன் என உலகில் பழி படிந்து உள்ளவர் யார்? உள்ளத்தில் கரவு படிந்தவரே அந்த எள்ளல் இழிவுகளை எதிரடைந்திருக்கின்றனர்.

"கரவடர் சோரர் புரையோர் கட்டோர்
கரவர் பட்டிகர் திருடர் கள்வர்." (பிங்கலந்தை)

கள்வரைக் குறித்துப் பிங்கலமுனிவர் இங்ஙனம் உரைத்திருக்கிறார். உற்ற பெயர்கள் உண்மைகளை உணர்த்தியுள்ளன.

கரவுடையார் உலகில் எவ்வாறு இழிவடைந்து உழல்கின்றார் என்பது இதனால் உணரலாகும். நெஞ்சம் கரவாய்ப் பழகி வரின் அந்த மனிதன் அறிவு ஆண்மைகளில் உயர முடியாமல் அவலமாய் இழிந்தே நிற்கின்றான்.

கரவு மனிதனை அறவும் சிறியவனாக்கி விடுகின்றது.

கபட சிந்தனைகளால் அரிய பலகாரியங்களைச் சாதிப்பது போல் தெரியவந்தாலும் இறுதியில் அவன் சிறுமையே அடைகின்றான். பழிவழி எவ்வழியும் இழிவே தருகிறது.

நெஞ்சில் நேர்மையுடையவர் யாண்டும் அஞ்சாமல் சிறந்த வீரர்களாய் நிலவி நிற்கின்றார். கரவுடையவர் எவ்வழியும் அஞ்சி இழிந்த பேடிகளாய் ஒதுங்கி உழல்கின்றார்.

கள்ளமனம் துள்ளும்; கரவுள்ளம் துடிக்கும்.

என்பது பழமொழி. உள்ளத்தில் கரவுடையவர் உறுதியாளராய் நிற்கமுடியாது; யாண்டும் ஈனமாய் ஈனமடைந்தே நிற்பர் என்பதை இம்முதுமொழி மதிதெளிய உணர்த்தியுள்ளது. உள்ளே களவு படியவே வெளியே மனிதன் இளிவுபடுகின்றான்.

தன்னுடைய வஞ்சம் தன்னையே அஞ்சச் செய்தலால் கபடன் நெஞ்சம் துணிந்து எதையும் நேர் நின்று செய்ய மாட்

டான். கரவாய் ஒளிந்திருந்தே இழிந்த காரியங்களை விழைந்து புரிவான். வஞ்சமுடையவன் அஞ்சி மறைகிருன்.

நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு--நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர்; கரவார்
கரவிலா நெஞ்சத் தவர். [மூதுரை,25]

உள்ளத்தில் கரவுடையவரது இழிநிலைமையை ஔவையார் இவ்வாறு காட்டியிருக்கிருர். நஞ்சையுடைய பாம்பு அஞ்சி மறைந்து உறைதல் போல் நெஞ்சில் வஞ்சமுடையவர் கள்ளமாய்க் கரந்தேயிருப்பர் என்றதனுல் அவரது எள்ளல் இழிவுகள் எதிரே தெரிய வந்தன. உள்ளம் இழிய உயர்வுகள் ஒழிகின்றன.

வஞ்சனையுடைய நெஞ்சம் நஞ்சு தோய்ந்தது போல் நாசத்துக்கே ஏதுவாகின்றது. அந்த நீசத்தை ஒழித்து ஒழுக வேண்டும். சிறிய புன்மைகள் நீங்கிய அளவே பெரிய மனிதன் ஆகின்ருன். அவை நீங்கவில்லையாஞல் நவைகளே ஓங்கி நாசம் செய்கின்றன.

வஞ்சன் எனவே வசை வளரும்.

நெஞ்சில் கரவுடையவன் இவ்வாறு நீசப் பேரால் நிந்தனையுறுகிருன். செவ்வியன் செம்மையாளன் நேர்மையுடையவன் என்னும் மேன்மைகளை வஞ்சகன் இழந்து விடுகின்ருன். அவனுடைய வாழ்வும் சூழ்வும் எவ்வழியும் வசைகளாகவே வளர்ந்து வருகின்றன. வரவே பாழாய் அழிந்து போகின்ருன். பழியான வஞ்சகங்களைப் பழகி இழி துயரங்களை அடைந்து ஈனமாய்ப் பாழ்படாதே; நேர்மையாய் ஒழுகிச் சீர்மை பெறுக.

---

652. நேர்மை யழிந்து நெறியிழந்து நீர்மையொடு
சீர்மை ஒழிந்து சிறுமையாய்—ஓர்மைகுன்றி
வஞ்சகனென் றெவ்வழியும் வையத்தார் வைதுவர
நஞ்சகமாய் வாழ்தல் நவை. (௨)

இ-ள்.

நெஞ்சில் வஞ்சகம் புகின் நேர்மை அழியும்; நெறி ஒழியும்; நீர்மை குன்றும்; சீர்மை பொன்றும்; பான்மை பாழாம்;

எவ்வழியும் சிறுமையாய் இழிவுகளேபெருகும்; உலகமும் இகழும்; இவ்வாறு பழியடைந்து வாழ்வது கொடிய இழிவாம்.

இது, உள்ளம் இழியாமல் உயர்ந்து வாழுக என்கின்றது.

கோணல் கோட்டம் என்னும் மொழிகள் வழுவான இழிநிலைகளை உணர்த்தி வருகின்றன. மனக் கோட்டமே மனித இனத்தின் கேட்டுக்கு மூலகாரணமாயுள்ளது. மனம் கோணிய பொழுது அந்த மனித வாழ்வு எவ்வழியும் கோணலாய் இழிந்தே போகின்றது. கோட்டமுடையது வாட்டம் அடைகிறது என்னும் பழமொழியால் அதன் அழிவுநிலை தெளிவாய் நின்றது.

அறிவு எவ்வளவு கூர்மையுடையதாயினும் உள்ளம் கோட்டமுடையதாயின் அது உயர்ந்த உண்மைகளை உணரமுடியாது. மாசுபடிந்த கண்போல் தேசுபடியாமல் அது தியங்கி நிற்கிறது. கூரிய அறிவு கோணலோடு கூடிய பொழுது வீரியமிழந்து வெறுமையுறுகிறது. வக்கிரபுத்தி என்று அது இழிக்கப்படுகிறது.

சிலரிடம் கூர்மையான அறிவு இருக்கிறது; இருந்தும் நேர்மை இல்லாமையால் சீர்மை குன்றிச் சிறுமையுற்று நிற்கின்றார். தமது வஞ்சகத்தால் உலக நிலையில் ஏதோ சில வசதிகளை அடைந்து கொள்ளலாமாயினும் ஆன்மநிலையில் முடிவாக அவர் அவலமே காண்கின்றார். வஞ்சமினுக்கு வசையாய் முடிகிறது.

உயர்ந்த பதவியில் ஏறியிருந்தாலும் உள்ளம் கரவுடையவன் இழிந்தவனாகவே கருதப்படுகிறான். பேதை உலகில் அவன் பெருமையாய்க் காணப்படினும் மேதைகள் எதிரே மிகவும் சிறுமையாய் மெலிந்து நிற்கிறான். களவு இளிவையே காணுகிறது.

கரவுடையவன் சிறியனாய் இழிந்து சீரழிகின்றான். அஃது இல்லாதவன் பெரியனாயுயர்ந்து பெருநலங்கள் பெறுகின்றான்.

நேர்மை, செம்மை என்னும் மொழிகள் அதிக மேன்மையுடையன. "செம்மையின்ஆணி" எனப் பரதனை இராமன் மனம் உவந்து புகழ்ந்திருக்கிறான். நெஞ்சில் நேர்மையான செம்மையுடையவர் எவ்வளவு சீர்மையுடன் சிறப்படைந்துள்ளனர் என்பதை இதனால் உணர்ந்து கொள்கிறோம். சீர்திருந்திய செம்மை பார் திருந்தச் செய்கிறது. உள்ளம் செம்மையாய்ப் பண்பட்ட பொழுதுஅந்த நன்மையாளர் உலகில் ஒளி மிகுந்து திகழ்கின்றார்.